# செகரட்டரி



யத்தன்னபூடி சுலோசனா ராணி

தமிழில் கௌரி கிருபானந்தன்

## பதிப்புரை

'நாவல் ராணி' என்று தெலுங்கு உலகில் பிரபலமாக விளங்கும் எழுத்தாளர் யத்தன்னபூடி சுலோசனாராணி அவர்களின் இந்த நாவல் - ஆரம்பம் முதல் தெளிந்த நீரோடை போலவே ஓடினாலும், கடைசி 20 அல்லது 30 பக்கங்களைப் படிக்கும்போது - இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஒரு தொடரின் இறுதி ஆட்டம் ஆடுவது போன்ற ஒரே பரபரப்பு, வாஞ்சை, சோகம் என்று பலவித பாவங்களை, எண்ணங்களை படிப்பவர் மனத்திலே கொண்டுவந்து விடுகிறது. அதை முடிக்கும் முன்பு எதிரே யாராவது வந்து விட்டால் கோபம் வந்து விடுகிறது. அந்த அளவுக்கு நம்மை இழுத்துச் செல்கிறது.

எஸ்.வி.வி., தேவன், லக்ஷ்மி, அநுத்தமா - போன்ற நம்மூர் எழுத்தாளர்கள் பல கதா பாத்திரங்களை ஒரு கதையில் அறிமுகப்படுத்தி, அதை அழகாக - ஒரு கதாபாத்திரத்தையும்

விடாமல் – கதையைக் கொண்டுவந்து முடித்து விடுவார்கள். ஆனால், இந்தக் கதையில் பல கதாபாத்திரங்கள் அம்போவென்று போய் விட்டது. உதாரணமாக சுமித்ரா, பிரகாஷ், இன்னும் சில. இப்படி சில பலவீனங்கள் இந்த நாவலில் இருந்தாலும், ராஜசேகர், ஜெயந்தி, சுமதி போன்ற கனமான கதாபாத்திரங்களைக் கையாண்டு, நம் முழு கவனத்தையும் புத்தகத்தை விட்டு நகராமல் எழுதிய விதம், ஆசிரியரின் திறம். இதை நாம் கண்டிப்பாக பாராட்ட வேண்டும். (அதனால்தான் 'நாவல் ராணி' என்று அழைக்கப்படுகிறார் போலும்!)

– பதிப்பகத்தார்



[library stamp]

# 1

''பாட்டி! எனக்கு வேலை கிடைத்துவிட்டது.'' ஒருக்களித்து வைத்திருந்த கதவுகளை வேகமாக தள்ளிக் கொண்டே ஜெயந்தி உள்ளே வந்தாள்.

''எங்கே கிடைத்தது? என்ன வேலை? சித்தே நில்லு திடீரென்று இப்படி மேலே வந்து விழுந்தால் என் உடம்பு தாங்காது. அம்மாடீ...''

திடீரென்று நுழைந்து சூறாவளி காற்றாய் தன்னைக் கட்டிப்பிடித்துக் கொண்ட பேத்தியின் வேகத்திற்கு இணையாக நிற்க முடியாமல் ஜானகி அப்படியே தரையில் உட்கார்ந்து விட்டாள்.

''செகரெட்ரி. ரொம்ப நல்ல வேலை.'' மகிழ்ச்சியின் மிகுதியால் கண்கள் ஒளிவீச பெருமையாக சொன்னாள் ஜெயந்தி.

''செகரெட்ரி என்றால்?'' வாத்தியார், குமாஸ்தா இது போன்ற வேலைகள்தான் ஜானகிக்குத் தெரியும்.

''செகரெட்ரி என்றால் செயலாளர் என்று அர்த்தம். வனிதா விஹார் இந்த ஊரிலேயே பெரிய நிறுவனம். இந்த ஊரில் மட்டுமே இல்லை. தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய நிறுவனம். அது மட்டுமே இல்லை. அங்கே இருப்பவர்கள் எல்லோரும் பெண்கள்தான்'' ஜெயந்தி முறுவலுடன் சொன்னாள்.

''ஆண் பெண் பாகுபாடு பார்ப்பதாக இருந்தால் வேலைக்கு போக வேண்டிய அவசியமே இல்லை. சம்பளம் எவ்வளவு தருவார்களாம்?''

''ஆயிரம் ரூபாய்.'' ஜெயந்தியின் கண்களில் பெருமை மின்னலை போல் பளிச்சிட்டது. பாட்டியின் கழுத்தைச் சுற்றிலும்

கைகளை கோர்த்துக் கொண்டு மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

''பாட்டி! இனி நம் கஷ்டங்கள் தீர்ந்தாற்போல்தான். நீ தினமும் செய்த பூஜைகள் வீண் போகவில்லை. கடவுள் நம் பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டு அருள் புரிந்திருக்கிறார். நாளையிலிருந்து நானும் இரண்டு வேளையும் சுவாமிக்கு பக்தி சிரத்தையுடன் நமஸ்காரம் செய்யப் போகிறேன்'' என்றாள்.

''பெண் பிள்ளையின் உழைப்பில் வாழ்க்கையை நடத்த வேண்டிய துர்பாக்கியத்திற்கு...''

பாட்டியை மேற்கொண்டு பேசவிடாமல் கையை நீட்டி வாயை பொத்தினாள் ஜெயந்தி. ''நான் சந்தோஷமாக இருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா பாட்டி. நீ எப்போதுமே இப்படித் தான். நான் இன்னிக்கு சாப்பிடப் போவதில்லை'' வலிய வரவழைத்துக் கொண்ட கோபத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''இல்லை கண்ணம்மா. ஏதோ தெரியாமல் சொல்லி விட்டேன். உன் விருப்பத்தை என்னிக்காவது நான் மறுத்திருக் கிறேனா? காலையில் எப்போதோ ஒரு வாய் சாப்பிட்டதுடன் சரி. பாரு முகம் எப்படி வாடி விட்டதோ. போய் சீக்கிரமாக குளித்து விட்டு வா. சாப்பாடு பரிமாறுகிறேன்.''

ஒரு கையால் பேத்தியின் கன்னத்தை வருடி விட்டுக் கொண்டே மற்றொரு கையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் ஜானகி. தினமும் பூஜைகள் செய்து கடவுளை கும்பிடுவது உண்மைதான். ஆனால் அது ஜெயந்திக்கு வேலை கிடைக்க வேண்டும் என்பதற்காக இல்லை. நல்ல வரன் கிடைத்து ஜெயந்தி சீக்கிரமாக புகுந்த வீட்டுக்குப் போக வேண்டும். இந்த உலக பந்தங்களிலிருந்து தனக்கு விடுதலை அளிக்க வேண்டும் என்று ஜானகி தினமும் க_வுளை பிராத்தனை செய்து வந்தாள். ஆனால் கடவுள் அவளுடை_ய வேண்டுகோளை காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை.



''வேலை அதிகமாக இருக்குமோ?'' ஜெயந்தியின் முன் நெற்றியில் விழுந்த கேசக்குழல்களை ஒதுக்கிக் கொண்டே பாட்டி கேட்டாள்.

''இருக்குமாயிருக்கும். வேலைக்குத் தகுந்த சம்பளம்தான் தருகிறார்களே.''

''வனிதா விஹார் என்றால்?'' ஜானகி கேட்டாள்.

''பெண்களுக்காக அமைக்கப்பட்ட நிறுவனம். இங்கே ஓய்வு நேரத்தில் பெண்கள் வந்து தையல் கற்றுக் கொள்வார்கள். ஹிந்தி வகுப்புகள் நடத்துவார்கள். ஆதரவற்ற பெண்களுக்கு இடமளித்து கூடை பின்னுவது, காய்கறி பயிரிடுவது போன்ற வேலைகளில் ஈடுபடுத்தி அவர்களுக்கு என்று ஒரு வருமானத்தை ஏற்படுத்தி தருவார்கள். இந்த நிறுவனம்தான் தமிழ்நாட்டிலேயே மிகப் பெரியது. இதனுடைய கிளைகள் நாடுமுழுவதும் இருக்கு. அமைச்சரின் மனைவி இதற்கு பிரசிடெண்டாக இருக்கிறாள். பெரிய பெரிய இடத்தைச் சேர்ந்த பெண்கள் இந்த நிறுவனத்தில் மெம்பர்களாக இருக்கிறார்கள். வேலை, சம்பளம் ஒரு பக்கம் இருக்கட்டும். பெரிய மனிதர்களுடன் நமக்கு அறிமுகம் ஏற்படும். அதுவே ஒரு அதிர்ஷ்டம்தானே.''

வேக வேகமாக சொல்லிக் கொண்டிருந்த ஜெயந்தியின் கண்கள் முன்னால் அமைச்சரின் மனைவியுடன் தனக்கு அறிமுகம் ஆகிவிட்டது போலவும், அது மேலும் நெருக்கமாக மாறி அந்த அம்மாள் தன்னுடைய கணவரிடம் ஜெயந்தியை காண்பித்து ''இவள்தான் எங்களுடைய செகரெட்ரி'' என்று அறிமுகப் படுத்தியதும், தான் வெட்கப்பட்டுக் கொண்டே அவருக்கு வணக்கம் தெரிவித்தது போலவும்.... இப்படி பல காட்சிகள் திரைப்படம்போல் தோன்றி மறைந்தன. பெரிய மனிதர்களுடன் அறிமுகம் கிடைத்து தானும் ஒரு நாள் அவர்களுக்குள் ஒருத்தியாக நடமாடும் காலம் வராதா?

''அதோ போகிறாளே, அந்தப் பெண்தான் ஜெயந்தி'' என்று மற்றவர்களால் தான் அடையாளம் காணப்படும் நாள் வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

''போய் சீக்கிரமாக குளித்துவிட்டு வா.'' அடுப்பில் வைத்திருந்த குழம்பின் நினைவு வந்ததும் ஜானகி ஜெயந்தியை மடியிலிருந்து எழுப்பினாள்.

வெந்நீரில் குளித்து விட்டு உடைகளை மாற்றிக் கொண்டு வந்த ஜெயந்தி பெயருக்கு சாப்பிட்டு விட்டு கட்டில் மீது படுத்தாள். ரொம்ப நேரம் வரையில் அவளுக்கு உறக்கம் வரவில்லை. இந்த உலகம் எவ்வளவு அழகாக இருக்கு? கண்ணில் தென்படும் ஒவ்வொரு பொருளும் ஏதோ புது அழகுடன் ஜொலிப்பதுபோல் ஜெயந்திக்கு தோன்றியது. ஜன்னல் வழியாக உள்ளே வந்து விழுந்து கொண்டிருந்த நிலவின் ஒளிகூட தன்னை குசலம் விசாரிப்பது போல் உணர்ந்தாள். எவ்வளவுதான் அமைதியாக இருக்க வேண்டும் என்று நினைத்தாலும் அவள் மனதில் பலவிதமான எண்ணங்கள் அலைமோதிக் கொண்டிருந்தன. காலையில் நேர்முகத் தேர்வுக்காக தான் வனிதா விஹாருக்கு போயிருந்த போது அங்கே நடந்த ஒவ்வொரு விஷயமும் அவளுக்கு நினைவில் இருந்தது.

★ ★ ★

**வா**சல் கேட்டின் மீது வனிதா விஹார் என்று பெரிதாக எழுதப்பட்டிருந்தது. கேட்டைத் தாண்டியதும் பசுமையான புல்வெளி. நடைபாதையின் இரு மருங்கிலும் பூச்செடிகள்.

வராண்டாவை அடுத்து உள்ளே போனதும் பெரிய ஹால். ஹால் முழுவதும் வரிசையாக போடப்பட்டிருந்த நாற்காலிகள். நாற்காலிகளுக்கு அந்தப் பக்கமாக பெரிய மேடை. மேடையை மறைப்பது போல் தொங்கிக் கொண்டிருந்த வெல்வெட் திரைச்சீலை.

வராண்டாவை ஒட்டினாற்போல் படிகள் இருந்தன. அந்தப் படிகள் ஏறி மேலே போனால் சின்ன காரிடார். அதையடுத்து மீட்டிங் ஹால். லைப்ரரி, பிரசிடெண்ட் செகரெட்ரியின் அறைகள் இருந்தன. மீட்டிங் ஹால் சற்று பெரிதாக இருந்தது. இருபது பேர்



அமர்ந்து கொள்வதற்கு ஏற்றவாறு நாற்காலிகளும், நடுவில் பெரிய மேஜையும் இருந்தன. வனிதா விஹாரில் அடிக்கடி ஏதாவது நிகழ்ச்சிகள் நடந்து கொண்டுதான் இருக்கும். அவற்றுக்கான ஏற்பாடுகளை செய்வதை பற்றி மீட்டிங் நடத்தி முடிவு செய்வார்கள். செகரெட்ரியின் அறை சற்று சிறியதாக இருந்தது. மேஜை, நாற்காலி, டைப் மிஷின், போன், பைல்களை வைக்க அலமாரி இருந்தன. யாராவது வந்தால் உட்கார்ந்து கொள்வதற்கு வசதியாக இரண்டு நாற்காலிகள் இருந்தன. மேஜைக்கு பக்கத்தில் டேபிள் ஃபேன் இருந்தது.

அந்த சின்ன அறை நினைவுக்கு வந்ததும் ஜெயந்திக்கு சுவர்க்கத்தில் இருப்பதுபோல் தோன்றியது. அன்று மதியம் வைஸ் பிரசிடெண்ட் சுமித்ரா ஜெயந்தியை அந்த அறைக்கு அழைத்துப் போனாள். ''இதுதான் உன்னுடைய அறை. காலை பத்து மணி முதல் மாலை ஐந்து மணி வரையிலும் இங்கே இருந்தாக வேண்டும். வரும் போன்கால்களுக்கு பதில் சொல்லணும். ஏதாவது முக்கியமாக இருந்தால் குறித்துக் கொண்டு வீட்டுக்கு போன் செய்து எனக்கு தெரிவிக்க வேண்டும்.

''தேவைப்பட்டால் மெம்பர்களின் வீடுகளுக்கு போய் அவர்களிடம் கையெழுத்து வாங்க வேண்டியிருக்கும். டைப் தெரியும் என்று சொன்னாய் இல்லையா?'' சுமித்ரா கேட்டாள்.

''தெரியும். ஆனால் சர்டிஃபிகேட் இல்லை'' ஜெயந்தி தயங்கிக்கொண்டே சொன்னாள்.

''சர்டிஃபிகேட் இல்லாவிட்டால் என்ன? எங்களுக்கு வேண்டியது வேலைதானே தவிர சர்டிஃபிகேட் இல்லை. நீ நாளைக்கே வந்து வேலையில் சேர்ந்து விடு.'' அறையை விட்டு வெளியே வந்தாள் சுமித்ரா.

ஜெயந்தி மற்றொரு முறை அந்த அறையைக் கவனமாக பார்த்து விட்டு ஆழமாக மூச்சு விட்டுக் கொண்டாள். அந்த அறை அவளுக்கு ரொம்ப பிடித்திருந்தது.

மறுநாள் தான் செய்யப்போகும் வேலைகளை நினைத்துக் கொண்டே அன்று இரவு ஜெயந்தி தூங்கிவிட்டாள்.

எந்த வனிதா விஹாரில் வேலை கிடைத்தது தன்னுடைய அதிர்ஷ்டம் என்று ஜெயந்தி பெருமைப்பட்டுக் கொள்கிறாளோ, அந்த நிறுவனத்திற்கு அமைச்சரின் மனைவி பிரசிடெண்ட் என்பது பெயரளவுக்குத்தான். எல்லா விஷயங்களையும் சுமித்ரா தான் பார்த்துக் கொள்வாள். காஷியர் ஆக கமலா இருந்தாலும் தொழில் ரீதியாக மருத்துவர் ஆக இருப்பதால் ஒரு நிமிடம்கூட ஓய்வு இருக்காது. அப்படியே இருந்தாலும் மற்ற ஜோலிகள் நிறைய. அதனால் வனிதா விஹாரையே தன்னுடைய உலகமாக நினைத்துக் கொண்டு, எல்லா வேலைகளையும் செய்து முடிக்கும் நபர் ஒருவர் வேண்டும். அதற்காகத்தான் நாளேட்டில் விளம்பரம் கொடுத்தார்கள். அந்த வேலையில் இருக்கும் சாதக பாதகங்களை தெரிந்திருந்த யாரும் அதற்கு முயற்சி செய்யவில்லை. அதைப் பற்றி எதுவும் தெரியாமல் அப்ளை செய்த சிலரின் தகுதிகளை பரிசீலித்தபோது பத்து பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப் பட்டார்கள். அவர்களில் ஜெயந்தி மட்டுமேதான் கடைசியில் தேர்வு செய்யப்பட்டாள்.

தனித்தன்மையை எடுத்துக்காட்டும் அலட்டல் இல்லாத பேச்சு, அறையின் உள்ளே காலடி எடுத்து வைக்கும் போதே எல்லோருடைய பார்வையையும் ஈர்த்து விடும் அப்பாவித்தனம் கலந்த அழகு, எளிமையான சுபாவம், அந்த வேலையில் சேருவதற்கு அவள் காட்டிய ஆர்வம்... எல்லாமாக சேர்ந்து வனிதா விஹார் கமிட்டி மெம்பர்கள் ஜெயந்தியை ஏகமனதாக செகரெட்ரியாக தேர்ந்தெடுக்க காரணமாக இருந்தன.

பாட்டியைத் தவிர வேறு உலகம் அறிந்திராத ஜெயந்தி புத்தகங்களில் தான் படித்து அறிந்து கொண்டது போல் உலகம் இருக்கும் என்று நம்பிவிட்டாள். எல்லோரும் நல்லவர்களாகத் தான் இருப்பார்கள் என்ற பிரமையில் இருந்த ஜெயந்தி தனக்குக் கிடைத்த வேலையைப் பற்றி உயர்வாக நினைத்ததில், வானத்தில் இருக்கும் நிலாவே தன் கையில் சிக்கிவிட்டதுபோல் எண்ணியதில் வியப்பு எதுவும் இல்லை.



# 2

காலை வேளையில் நேரம் கழித்து விழித்துக் கொள்ளும் பழக்கமுடைய ஜெயந்தி அன்று ஒரு பக்கம் விடியும் போதே எழுந்து கொண்டு விட்டாள். ஒன்பது மணிக்கெல்லாம் குளித்து முடிந்து, சாப்பிட்டுவிட்டு தனக்கு பிடித்தமான புடவையை அணிந்து கொண்டாள். படபடக்கும் இதயத்துடன், கனவுலகில் நடப்பவள் போல் வனிதா விஹாருக்கு வந்தாள். அவள் போய்ச் சேரும் போது அங்கே யாரும் இல்லை. வாட்ச்மேன் மட்டும் இருந்தான். பூட்டைத் திறந்து ஜெயந்தியை உள்ளே அழைத்துப் போய் உட்கார வைத்தான். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கழித்து வைஸ் பிரசிடெண்ட் சுமித்ரா வந்தாள். அவள் தனியாக வரவில்லை. கூடவே நான்கு பேர் வந்தார்கள். வரும்போதே வராண்டாவில் தூணுக்கு அருகில் நின்றிருந்த ஜெயந்தியைப் பார்த்து 'வந்து விட்டாயா' என்று கேட்பதுபோல் பார்த்துவிட்டு புன்னகையுடன் தலையை அசைத்துக் கொண்டே வந்தவர்களுடன் உள்ளே போய்விட்டாள். தானும் அவர்களுடன் உள்ளே போக வேண்டுமோ என்று ஜெயந்தி நினைத்தாலும் தன்னை உள்ளே வரச்சொல்லி அழைக்கவில்லையே என்று தயங்கிக் கொண்டு வெளியிலேயே நின்று விட்டாள்.

உள்ளே மீட்டிங் ஹாலில் அமர்ந்துகொண்டு அவர்கள் எல்லோரும் ரொம்ப நேரம் பேசிக்கொண்டு இருந்தார்கள். உரத்த குரலில் சிரிப்பதும், தாழ்ந்த குரலில் கிசுகிசுப்பதுமாக இருந்தார்கள்.

வெளியில் தனியாக, தூணில் சாய்ந்து கொண்டு ரொம்ப நேரமாக நின்றிருந்த ஜெயந்திக்கு கால்கள் வலிக்கத் தொடங்கின. எரிச்சலும் ஏற்பட்டது. ஆனால் முதல் நாளே எரிச்சல் கொள்வதோ, ஏமாற்றமாக உணருவதோ கூடாது என்று மனதை சமாதனப் படுத்திக் கொண்டாள்.

மறுநாள் தான் செய்யப்போகும் வேலைகளை நினைத்துக் கொண்டே அன்று இரவு ஜெயந்தி தூங்கிவிட்டாள்.

எந்த வனிதா விஹாரில் வேலை கிடைத்தது தன்னுடைய அதிர்ஷ்டம் என்று ஜெயந்தி பெருமைப்பட்டுக் கொள்கிறாளோ, அந்த நிறுவனத்திற்கு அமைச்சரின் மனைவி பிரசிடெண்ட் என்பது பெயரளவுக்குத்தான். எல்லா விஷயங்களையும் சுமித்ரா தான் பார்த்துக் கொள்வாள். காஷியர் ஆக கமலா இருந்தாலும் தொழில் ரீதியாக மருத்துவர் ஆக இருப்பதால் ஒரு நிமிடம்கூட ஓய்வு இருக்காது. அப்படியே இருந்தாலும் மற்ற ஜோலிகள் நிறைய. அதனால் வனிதா விஹாரையே தன்னுடைய உலகமாக நினைத்துக் கொண்டு, எல்லா வேலைகளையும் செய்து முடிக்கும் நபர் ஒருவர் வேண்டும். அதற்காகத்தான் நாளேட்டில் விளம்பரம் கொடுத்தார்கள். அந்த வேலையில் இருக்கும் சாதக பாதகங்களை தெரிந்திருந்த யாரும் அதற்கு முயற்சி செய்யவில்லை. அதைப் பற்றி எதுவும் தெரியாமல் அப்ளை செய்த சிலரின் தகுதிகளை பரிசீலித்தபோது பத்து பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப் பட்டார்கள். அவர்களில் ஜெயந்தி மட்டுமேதான் கடைசியில் தேர்வு செய்யப்பட்டாள்.

தனித்தன்மையை எடுத்துக்காட்டும் அலட்டல் இல்லாத பேச்சு. அறையின் உள்ளே காலடி எடுத்து வைக்கும் போதே எல்லோருடைய பார்வையையும் ஈர்த்து விடும் அப்பாவித்தனம் கலந்த அழகு. எளிமையான சுபாவம், அந்த வேலையில் சேருவதற்கு அவள் காட்டிய ஆர்வம்... எல்லாமாக சேர்ந்து வனிதா விஹார் கமிட்டி மெம்பர்கள் ஜெயந்தியை ஏகமனதாக செகரெட்ரியாக தேர்ந்தெடுக்க காரணமாக இருந்தன.

பாட்டியைத் தவிர வேறு உலகம் அறிந்திராத ஜெயந்தி புத்தகங்களில் தான் படித்து அறிந்து கொண்டது போல் உலகம் இருக்கும் என்று நம்பிவிட்டாள். எல்லோரும் நல்லவர்களாகத் தான் இருப்பார்கள் என்ற பிரமையில் இருந்த ஜெயந்தி தனக்குக் கிடைத்த வேலையைப் பற்றி உயர்வாக நினைத்ததில், வானத்தில் இருக்கும் நிலாவே தன் கையில் சிக்கிவிட்டதுபோல் எண்ணியதில் வியப்பு எதுவும் இல்லை.



# 2

காலை வேளையில் நேரம் கழித்து விழித்துக் கொள்ளும் பழக்கமுடைய ஜெயந்தி அன்று ஒரு பக்கம் விடியும் போதே எழுந்து கொண்டு விட்டாள். ஒன்பது மணிக்கெல்லாம் குளித்து முடித்து, சாப்பிட்டுவிட்டு தனக்கு பிடித்தமான புடவையை அணிந்து கொண்டாள். படபடக்கும் இதயத்துடன், கனவுலகில் நடப்பவள் போல் வனிதா விஹாருக்கு வந்தாள். அவள் போய்ச் சேரும் போது அங்கே யாரும் இல்லை. வாட்ச்மேன் மட்டும் இருந்தான். பூட்டைத் திறந்து ஜெயந்தியை உள்ளே அழைத்துப் போய் உட்கார வைத்தான். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கழித்து வைஸ் பிரசிடெண்ட் சுமித்ரா வந்தாள். அவள் தனியாக வரவில்லை. கூடவே நான்கு பேர் வந்தார்கள். வரும்போதே வராண்டாவில் தூணுக்கு அருகில் நின்றிருந்த ஜெயந்தியைப் பார்த்து 'வந்து விட்டாயா' என்று கேட்பதுபோல் பார்த்துவிட்டு புன்னகையுடன் தலையை அசைத்துக் கொண்டே வந்தவர்களுடன் உள்ளே போய்விட்டாள். தானும் அவர்களுடன் உள்ளே போக வேண்டுமோ என்று ஜெயந்தி நினைத்தாலும் தன்னை உள்ளே வரச்சொல்லி அழைக்கவில்லையே என்று தயங்கிக் கொண்டு வெளியிலேயே நின்று விட்டாள்.

உள்ளே மீட்டிங் ஹாலில் அமர்ந்துகொண்டு அவர்கள் எல்லோரும் ரொம்ப நேரம் பேசிக்கொண்டு இருந்தார்கள். உரத்த குரலில் சிரிப்பதும், தாழ்ந்த குரலில் கிசுகிசுப்பதுமாக இருந்தார்கள்.

வெளியில் தனியாக, தூணில் சாய்ந்து கொண்டு ரொம்ப நேரமாக நின்றிருந்த ஜெயந்திக்கு கால்கள் வலிக்கத் தொடங்கின. எரிச்சலும் ஏற்பட்டது. ஆனால் முதல் நாளே எரிச்சல் கொள்வதோ, ஏமாற்றமாக உணருவதோ கூடாது என்று மனதை சமாதனப் படுத்திக் கொண்டாள்.

ஏறத்தாழ ஒன்றரை மணிநேரம் கழித்து வந்தவர்கள் போய் விட்டார்கள். அவர்களை வழியனுப்ப வெளியில் வந்த சுமித்ரா ஜெயந்தியின் அருகில் வந்தாள். "நீயும் உள்ளே வந்து உட்கார்ந்து இருக்கலாமே. சரி போகட்டும். உள்ளே வா" என்று ஜெயந்தியை உள்ளே அழைத்துச் சென்று அவள் செய்ய வேண்டிய வேலைகளை மற்றொரு முறை மொழிந்தாள்.

அவள் சொன்னதிலிருந்து ஜெயந்திக்கு புரிந்தது என்னவென்றால் காலை பத்து முதல் மாலை ஐந்து மணி என்று இல்லாமல் தேவைப்பட்டால் முன்னாடி வருவதும், பின்னால் தங்க வேண்டியும் இருக்கும். ஒவ்வொரு மாதம் நடக்கப் போகும் நிகழ்ச்சிகளைப் பற்றி கமிட்டியில் முடிவு செய்து அதற்கான கடிதத்தை செகரெட்டரிக்கு அனுப்பி வைப்பார்கள். அதன் சம்பந்தப்பட்ட வேலைகளை செய்து முடிப்பதோடு தேவைப் பட்டால் மெம்பர்களின் வீட்டுக்கு போய் கையெழுத்து வாங்குவது போன்ற வேலைகளை செய்ய வேண்டியிருக்கும்.

சுமித்ரா வரிசையாக செய்ய வேண்டிய வேலைகளை சொல்லி முடித்தபோது "இத்தனை வேலையா?" என்று ஜெயந்தி மிரண்டு போகவில்லை. மாறாக சந்தோஷம்தான் ஏற்பட்டது.

அன்று வேலையில் சேருவதாக ஒப்புதல் கடிதம் கொடுத்து விட்டு மாலையில் நடக்கப் போகும் கூட்டத்திற்காக ஏற்பாடு செய்யச் சொன்னாள். அந்த மாதக் கடைசியில் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடையை அனுப்புவதற்காக எந்த நிகழ்ச்சியை நடத்துவது என்று முடிவு செய்ய கமிட்டி கூட்டம் நடத்தப் போகிறது. மெம்பர்களின் முகவரி, போன் நம்பர்களை சரிபார்த்து பட்டியலை தயாரிக்கச் சொல்லி விட்டு சுமித்ரா கிளம்பிப் போனாள்.

பார்த்துக் கொண்டிருந்த போதே மதியம் ஆகிவிட்டது. ஒவ்வொருவராக வரத் தொடங்கினார்கள். ஆளுக்கு ஒரு தினுசாக இருந்தார்கள். நடை, உடை பாவனைகளில் மாறுபட்டிருந்தார்கள்.

கூட்டம் தொடங்குவதற்கு முன்பு சுமித்ரா ஜெயந்தியை எல்லோருக்கும் தனித்தனியாக அறிமுகப் படுத்தினாள். ஜெயந்தி



எல்லோருடைய பெயர்களையும் கவனமாக கேட்டுக் கொண்டு பணிவுடன் வணக்கம் தெரிவித்தாள். ஆனால் அவர்கள் யாரும் ஜெயந்தியை பொருட்படுத்தியதாக தெரியவில்லை. சுமித்ரா அறிமுகப்படுத்தும்போது முழுவதுமாக கேட்டுக் கொள்ளாமல் பெயருக்கு தலையை அசைத்துவிட்டு "அப்படியா!" "ஓஹோ!" "நல்லது... நல்லது" என்று பட்டும் படாமல் சொல்லிவிட்டு மறுபடியும் தங்களுடைய பேச்சில் ஆழ்ந்து விட்டார்கள். ஏமாற்றம் அடையக்கூடாது என்று முன்னாடியே முடிவு செய்து கொண்டிருந்த ஜெயந்தி என்றாவது ஒருநாள் அவர்களே தன்னை ஏறெடுத்து பார்க்கும்படி செய்ய வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

அறிமுகப்படலம் முடிந்த பிறகு சுமித்ரா நாற்காலியில் அமர்ந்துகொண்டே "ராஜசேகரையும் வரச்சொல்லி போன் செய்திருந்தேன். ஏன் வரவில்லை என்று தெரியவில்லை" என்றாள்.

"வரேன் என்று சொன்னால் கட்டாயம் வந்து விடுவான்." உச்சந்தலையில் கொண்டை போட்டுக் கொண்டிருந்த, ரேகா என்று அறிமுகப்படுத்தப்பட்ட பெண்மணி சொன்னாள். ஏறத்தாழ முப்பது வயது இருக்கக்கூடும். ஆனால் கல்லூரி பெண்களை போல் அலங்காரம் செய்து கொண்டிருந்தாள்.

"ஏதோ மீட்டிங் இருக்கிறதாம். முடிந்தால் வருவதாக சொன்னான். இல்லாவிட்டால் இந்த மீட்டிங் முடிந்த பிறகு நோட்ஸை காபி எடுத்து அனுப்பி வைக்கச் சொன்னான்."

"அப்போ மீட்டிங் முடியவில்லையோ என்னவோ" என்றாள் ரேகா.

பெண்களுக்கு மட்டுமே சம்பந்தப்பட்ட இந்த வனிதா விஹாரில் அந்த ராஜசேகருக்கு என்ன சம்பந்தம் இருக்க முடியுமோ ஜெயந்திக்கு புரியவில்லை. மெம்பர்களின் லிஸ்டில் அவனுடைய பெயர் இருக்கவில்லை.

''இந்த வருஷம் அவனுக்கு டெக்ஸ்டைல் மில்லில் ஆறு லட்சம் லாபம் வந்ததாமே?'' யாரோ ரேகாவிடம் கேட்டார்கள்.

''ஆறு இல்லை பதினாறு'' ரேகா திருத்தினாள்.

''எவ்வளவு வந்து என்ன பிரயோஜனம்? ஊரில் இருக்கிறவங்க அனுபவிக்கத்தானே. மனைவியா? குடுத்தனமா?'' மூக்குக் கண்ணாடி அணிந்து கொண்டு குள்ளமாக இருந்த மிஸெஸ் வர்மா சொன்னாள்.

''குடித்தனம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அரசமாளிகை போன்ற வீடு இருக்கு.'' புருவத்தை சுருக்கி தன் கோபத்தை வெளிப்படுத்திக் கொண்டே ரேகா சொன்னாள்.

''அந்த வீடு இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றுதான். மனைவி குழந்தைகள் இல்லாத வீட்டை விட சுடுகாடு மேல்.'' பழிப்பது போல் முகத்தை சுளித்துவிட்டு அலட்சியமாக சொன்னாள் மிஸஸ் வர்மா.

இந்த முறை ரேகாவுடன் மற்றவர்களின் முகங்களும் கோபத்தால் சிவந்து விட்டன. சமுதாயத்தில் செல்வாக்கும், மதிப்பும் மிகுந்த ஒரு நபரைப் பற்றி மிஸெஸ் வர்மா அப்படி எடுத்தெறிவது போல் பேசியது யாருக்குமே பிடிக்கவில்லை. ராஜசேகர் தனிமனிதனாக எப்படிப்பட்டவனாக இருந்தாலும் மிகுந்த பணக்காரனான அவனுடன் எல்லோருக்கும் ஏதாவது வேலை இருந்து கொண்டே இருக்கும். எல்லாவற்றையும்விட முக்கியமாக அவன் இந்த வனிதா விஹாருக்கு மறைமுகமாக நிறைய உதவி செய்து வருகிறான். அதோடு இந்த நிறுவனத்திற்கு முதுகெலும்பாக அவன் இருப்பதால்தான் வனிதா விஹார் நல்ல பெயர் பெற்று இருப்பதுடன் அதன் புகழ் நாடுமுழுவதும் பரவிக் கொண்டிருக்கிறது.

கோபமாக ரேகா பதில் சொல்லும் முன் உரையாடல் திசை திரும்புவதை உணர்ந்த சுமித்ரா குரலை உயர்த்தி ''அசல் விஷயத்திற்கு வருவோம். நிதியை சேகரிக்க என்ன செய்யப் போகிறோம்? நாடகம் ஏதாவது ஏற்பாடு செய்யலாம் என்றால் நல்ல நாடகம் போடுபவர்கள் யார் இருக்கிறார்கள்? கதா சொன்னது போல் நடிகை யாரையாவது அழைத்து டான்ஸ் பிரோகிராம் ஏற்பாடு செய்யலாமா?'' என்று கேட்டாள்.



பிறகு எல்லோரும் அதைப்பற்றி வாத விவாதம் செய்வதில் ஆழ்ந்து விட்டார்கள்.

சுமித்ராவுக்கு பக்கத்தில் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த ஜெயந்திக்கு இதெல்லாம் பார்க்கும்போது ரொம்ப வேடிக்கையாக இருந்தது. அந்த ரேகாவுக்கும் மிஸெஸ் வர்மாவுக்கும் எந்த காரணத்தினாலேயோ கொஞ்சம்கூட ஒத்துப்போகவில்லை என்று புரிந்தது. மிஸெஸ் வர்மா வார்த்தைகளால் ரேகாவை கிழிக்க முயன்றால், ரேகா மிஸெஸ் வர்மாவை பார்வையால் பஸ்மமாக்கிக் கொண்டிருந்தாள். பார்ப்பதற்கு மட்டும் இருவரும் நன்றாக படித்த, பண்பு நிறைந்தவர்கள் போல் தென்பட்டார்கள். வசதி படைத்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்து நான்கு பேருடன் பழகத் தெரிந்த இவர்களுக்கு நடுவில் இந்த ரகளை ஏன்? மனதில் இருக்கும் வெறுப்பை மறைத்துக் கொள்ளத் தெரியாத பலவீனமா... இல்லை எதற்காக மறைக்க வேண்டும் என்ற ஆணவமா? எது வேண்டுமானாலும் இருக்கலாம்.

சுமித்ரா சொன்னதுபோல் நாட்டிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்ய முடிவு செய்தார்கள். போர் நிதிக்கு அனுப்பியது போக வனிதா விஹாருக்கு கொஞ்சமாவது ஆதாயம் இருக்க வேண்டுமென்று எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள். டிக்கெட் விலையை முடிவு செய்வதிலும் கருத்து வேற்றுமைகள் வந்தன. பிறகு அதையும் முடிவு செய்தார்கள்.

மீட்டிங் முடியும் நேரத்தில் சுமித்ரா சொன்னதன் பேரில் ஜெயந்தி கீழே சென்று வாட்ச்மேனை அனுப்பி எல்லோருக்கும் டீயை வரவழைத்தாள். தானே சுயமாக ஒவ்வொருவருக்கும் எடுத்துக் கொடுத்தாள். மீட்டிங் முடிந்த பிறகு ஒவ்வொருவரும் சுமித்ராவிடம் சென்று விடைபெற்றுக் கொண்டிருந்தார்கள் சுமித்ராவும் அக்கறையுடன் அவர்களுடைய குசலம் விசாரித்து

விட்டு நடுநடுவில் தன்னுடைய வீட்டுப் பிரச்சனைகளையும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

முதலில் ரேகாராணி போய்விட்டாள். சற்று நேரம் கழித்து சுமித்ராவிடம் பொதுவாக பேசிவிட்டு மிஸெஸ் வர்மா விடை பெற்றுக் கொண்டு வெளியில் சென்றாள். சுமித்ரா தொலைவில் நின்றிருந்த ஜெயந்தியை அழைத்து மேஜை மீது வைத்திருந்த பேப்பர்களை எடுத்துக் கொடுத்தாள்.

''இதை டைப் செய்து எல்லோருக்கும் ஒரு காபி...'' என்று சொல்லிக் கொண்டிருந்த போதே வெளியிலிருந்து ''வாயை மூடு'' என்று ரேகாவின் குரல் உச்சஸ்தாயில் கேட்டது. அதைத் தொடர்ந்து ''ஷட்டப்!'' என்று மிஸெஸ் வர்மாவின் குரலும் கேட்டது. ஜெயந்தியுடன் சுமித்ராவும் திடுக்கிட்டாள். ஒரு நிமிடம் அவள் நெற்றி சுருங்கியது.

கையிலிருந்த பேப்பர்களை ஜெயந்தியின் மீது வீசிவிட்டு ''தலையெழுத்து! இந்த நிறுவனத்திற்கு வைஸ் பிரசிடெண்டாக இருப்பதைவிட ஆடுமாடு மேய்க்கப் போவது நல்லது'' என்று முணுமுணுத்துக் கொண்டு, தன் பாரித்த உடலை அசைத்துக் கொண்டே வெளியில் சென்றாள். தன் மீது பட்டு கீழே விழப்போன பேப்பர்களை பத்திரமாக பிடித்துக்கொண்டு ஜெயந்தியும் அந்த அம்மாளின் பின்னாலேயே சென்றாள்.

''பாருங்க சுமித்ரா! காலையும் மிதித்துவிட்டு எப்படி வாய்க்கு வந்தபடி பேசுகிறாளோ?'' ரேகாவின் கண்கள் நெருப்பை உமிழ்ந்து கொண்டிருந்தன.

''அதான் பார்க்கவில்லை என்று சொன்னேனே.'' மிஸெஸ் வர்மா எரிந்து விழுவதுபோல் சொன்னாள்.

''கண் என்ன குருடா? அதான் கண்ணாடி போட்டிருக்கிறாயே?'' எரிச்சலை கண்களிலும், குரலிலும் காட்டினாள் ரேகா.

''அவள் சொன்னதை கேட்டீங்களா?'' என்று சொல்லிக் கொண்டே சுமித்ராவின் பக்கம் திரும்பினாள் மிஸெஸ் வர்மா.



''நான் கவனிக்காமல் அவளுடைய காலை மிதித்து விட்டது உண்மைதான். ஒரு நிமிடம் அவள் பொறுத்திருந்தால் நானே மன்னிப்பு கேட்டிருப்பேன். ஆனால் இவ்வளவு பேசிய பிறகு இனி மன்னிப்பு கேட்பது அனாவசியம்.'' படபடவென்று சொல்லிவிட்டு வேகமாக படியிறங்கி போய்விட்டாள்.

''பார்த்தீங்களா எவ்வளவு திமிராக பேசுகிறாளோ.'' மிஸெஸ் வர்மா போன திசையை பார்த்துக் கொண்டே ரேகா பற்களை நறநறத்தாள்.

''பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். வரவர அவளுடைய போக்கு சரியாகத்தான் இல்லை.'' மூக்குக் கண்ணாடியை சரி செய்து கொண்டே சுமித்ரா சொன்னாள்.

''எல்லாம் தெரிந்த பிறகும் எதற்காக நீங்க வெறுமே பார்த்துக்கிட்டு இருக்கீங்களோ எனக்குப் புரியவில்லை. அவளுடைய மெம்பர்ஷிப்பை ஏன் கான்சல் செய்யக்கூடாது?''

''எப்படி செய்ய முடியும்? அமைச்சருக்கு நெருங்கிய உறவாச்சே?'' இயலாமையுடன் சொன்னாள் சுமித்ரா.

''இருந்தால் மட்டும்? சற்று முன் ராஜசேகரைப் பற்றி அவள் பேசியதை கவனித்தீங்களா?''

''ஆமாம். அவனைப் பற்றி அப்படிப் பேச அவளுக்கு எவ்வளவு தைரியம்?''

''தைரியமாவது? வாய்க்கொழுப்பு... ஊர்க்காரங்க அனுபவிக்கிறார்களாம். அதைப்பற்றி இவள் கவலைப்படுவானேன்? அது அவனுடைய விருப்பம். அவனை இந்த நிறுவனத்திலிருந்து நீக்குவதற்கு உங்களால் முடியவில்லை என்றால் சொல்லுங்கள். ராஜசேகரிடம் ஒரு வார்த்தைச் சொன்னால் போதும் நிமிடத்தில் காரியம் முடிந்துவிடும்.''

மூக்குக்கண்ணாடியை எடுத்து புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டிருந்த சுமித்ரா பதட்டமடைந்து ''ரேகா! இப்போ உடனே எதுவும் செய்ய வேண்டாம். ரொம்ப

ரகளையாகி விடும். சமயம் வரும்போது நானே பார்த்துக் கொள்கிறேன். யாரும் நம்மை குற்றம் சொல்வதற்கு இடம் தரக்கூடாது'' என்றாள்.

''சரி உங்க விருப்பம். நான் போய்வருகிறேன்.'' ரேகா போய்விட்டாள்.

ரேகாவுடன் சுமித்ராவின் முகத்திலிருந்த அமைதியும் போய்விட்டது. ''ஒருவருக்கொருவர் சளைச்சவங்க இல்லை. ஒருத்தி பேய் என்றால் இன்னொருத்தி பிசாசு.'' தனக்குள் முணுமுணுத்துக் கொண்டே பின்னால் திரும்பினாள். திரும்பியவள் தன் பின்னாலேயே பொம்மையை போல் நின்றிருந்த ஜெயந்தியைப் பார்த்து திகைத்துப் போய் உடனே கோபமாக ''சொன்ன வேலையை செய்யாமல் இங்கே வந்து வேடிக்கை பார்க்கிறாயா? உள்ளே போய் டைப் செய்யற வேலையை பாரு'' என்றாள்.

ஜெயந்தி பேப்பர்களை எடுத்துக் கொண்டு தன்னுடைய அறைக்குச் சென்று விட்டாள். டைப் செய்து கொண்டிருந்த போது சுமித்ரா மறுபடியும் உள்ளே வந்தாள்.

''நான் கிளம்புகிறேன். டைப் செய்தவற்றை என் மேஜை மீது வைத்துவிடு. நாளை காலையில் வந்ததும் கையெழுத்து போடுகிறேன். வேலை முடிந்ததும் நீ கிளம்பிப் போகலாம்'' என்று ஆணைகளை பிறப்பித்து விட்டு வாசல் வரை சென்றாள். போகப் போனவள் திடீரென்று திரும்பி ஜெயந்தி அருகில் வந்தாள். ''இதோ பாரு வயதில் பெரியவள் என்பதால் சொல்கிறேன். நீ இங்கே வேலை செய்ய வேண்டுமென்றால் இங்கே நடப்பவை எதையும் கண்டுகொள்ளக்கூடாது. உன் வேலை என்னவோ அதை மட்டும் பாரு. இங்கே இப்படி நடந்தது அப்படி நடந்தது என்று யாரிடமும் வாய்தவறிக்கூட சொல்லக்கூடாது. இங்கே நடந்த எதுவும் இந்த நான்கு சுவர்களைத் தாண்டி வெளியே போகக்கூடாது. புரிந்ததா? நன்றாக நினைவில் வைத்துக் கொள்'' படபடவென்று சொல்லிவிட்டு போய்விட்டாள்.



டைப் ரைட்டரில் தாள்களை பொருத்திக் கொண்டிருந்த ஜெயந்தி திகைத்துப் போனவளாய் அப்படியே உட்கார்ந்து விட்டாள். ''ரொம்ப நன்றாக இருக்கிறது. நான் ஏதோ தவறு செய்தது போல் இந்த வார்னிங் எதற்கு?'' என்று நினைத்துக் கொண்டாள். ராஜசேகர் என்று அழைக்கப்படும் அந்த நபர் யார்? அவனுக்கும் ரேகாவுக்கும் என்ன உறவு? அவனைக் கண்டால் மிஸெஸ் வர்மாவுக்கு இவ்வளவு பிடிக்காமல் போவானேன்? ரேகாவுக்கும் மிஸெஸ் வர்மாவுக்கும் நடுவில் என்னதான் பிரச்னை?

எவ்வளவுதான் வேண்டாமென்று நினைத்தாலும் ஜெயந்தியால் அந்த நிகழ்ச்சியை மனதிலிருந்து அழித்துவிட முடியவில்லை. வனிதா விஹார் செகரெட்ரியாக ஜெயந்தியின் வாழ்க்கையில் முதல்நாள் அந்த விதமாக கழிந்து விட்டது.

## 3

ஜெயந்திக்கு தன்னுடைய திறமையை, சுறுசுறுப்பை நிரூபித்துக் கொள்ள ஒரு வாய்ப்பு அளிப்பது போல் போர் நிதிக்கு வசூல் செய்யும் வேலை அந்த மாதத்திலேயே வந்தது. ஊண் உறக்கமின்றி வெய்யில் மழையைக்கூட பொருட்படுத்தாமல் கமிட்டியில் சொன்னதுபோல் சுமித்ராவின் அறிவுரைகளை ஏற்று ஜெயந்தி விடுவீடாக சென்று டிக்கெட்டுகளை விற்றாள்.

புது செகரெட்ரியின் முகராசியோ என்னவோ எப்போதும் விற்பனை ஆகாத அளவுக்கு அதிகமாக டிக்கெட்டுகள் விற்பனை ஆயின. நினைத்ததைவிட இருமடங்கு பணம் வசூல் ஆகிவிட்டது. பணத்தை எண்ணிப் பார்த்த சுமித்ராவின் முகம் மலர்ந்து விட்டது. ''சபாஷ்! உன்னைப் போன்று நான்கு பேர் எனக்குக் கிடைத்தால் போதும். இந்த வனிதா விஹாரின் புகழை உலகம் முழுவதும் பரவச் செய்து விடுவேன்'' என்று வாய் நிறைய பாராட்டினாள்.

அந்த சின்ன பாராட்டிற்கே ஜெயந்தியின் மனம் கார் முகிலைக் கண்ட மயிலாக நாட்டியமாடியது. காலையிலிருந்து சாப்பிடாததோ, சுமித்ரா ஒரு வாய் காபிகூட கொடுக்காததோ, வெயில் மழை பாராமல், வீட்டில் தங்காமல் ஊர் சுற்றியதற்கு பாட்டி கடிந்து கொண்டதோ... எதுவும் ஜெயந்திக்கு உறைக்க வில்லை. சந்தோஷத்தால் மனம் திக்குமுக்காடுவதுபோல் இருந்தது. உலகத்தில் இருக்கும் ஒவ்வொரு பொருளும் .... செடி, கொடி... பஸ்.. டாக்ஸி எல்லாமே தன் வெற்றியை பாராட்டுவது போல் தோன்றியது. இது இன்னியுடன் முடிந்து போய்விடப் போகிறதா என்ன? நாட்டிய நிகழ்ச்சி நடைபெறும் நாளன்றுதான் தான் பட்ட கஷ்டத்திற்கு முழுபலன் கிடைக்கப் போகிறது. அன்றுதான் ஜெயந்தியை எல்லோருக்கும் தெரியப்போகிறது. அதுவரைக்கும் இப்படி சாதாரணமாக இருந்துவிட வேண்டியது தான். அன்று தன்னுடைய தனித்தன்மையை எல்லோரும் உணருவார்கள். தன்னையும் அறியாமல் ஜெயந்தியிடமிருந்து பெருமூச்சு ஒன்று வெளியேறியது. ஹூம்! வாய்ப்புதான் கிடைக்க வேண்டுமே தவிர தன்னைப் போன்றவர்கள் மலையை புரட்டி விடமாட்டார்களா?

மனம் முழுவதும் மகிழ்ச்சி நிறைந்திருந்தது. ஒளிவீசும் கண்களுடன், சோர்ந்துவிட்ட முகத்துடன் அலைகள் மீது மிதப்பது போல் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள் ஜெயந்தி. கதவைத் தட்டியதும் ஜானகி திறந்தாள். ஜெயந்தியை பார்த்ததும் கோபமாக "என்ன வேலையோ என்னவோ? காலையில் விடிந்ததுமே கிளம்பிப் போனவள் விளக்கு வைக்கும் நேரத்தில் வீடுதிரும்புகிறாய். வேளைக்கு சாப்பாடு தூக்கம் இல்லாமல் நீ செய்யும் அந்த கலெக்டர் வேலை என்னவென்று சொல்லு. நானும் கேட்டுக் கொள்கிறேன்" வாசற்படியின் குறுக்கே நின்று கொண்டே கேட்டாள்.

"முதலில் உள்ளே வரவிடேன் பாட்டி" கெஞ்சுவது போல் சொன்னாள் ஜெயந்தி.

ஜானகி வழியை விட்டாள்.



"காலையிலிருந்து உனக்காக பார்த்துப் பார்த்து என் கண்ணே பூத்துப் போச்சு தெரியுமா?"

"பாட்டி.. ப்ளீஸ்." பாதியிலேயே இடைமறித்தாள் ஜெயந்தி. பாட்டியின் இருதோளிலும் கைகளை பதித்து கண்களுக்குள் ஊடுருவுவது போல் பார்த்தாள். "மை டியர் பாட்டி! இன்னிக்கு நான் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன். தயவு செய்து எதுவும் சொல்லாதே" வேண்டுகோள் விடுத்தாள்.

"ஏதாவது சொல்வதற்குமுன் என் வாய்க்கு பூட்டு போட்டு விடுவாய். எதிர்வீட்டு வனஜாவைப் பாரு..."

"போ பாட்டி. ஆட்டு மந்தையை போல் பள்ளிக் குழந்தைகளை மேய்க்கும் அந்த டீச்சரம்மாவும் உன் பேத்தியும் ஒன்றா?" என்றவள் கைகளை எடுத்துவிட்டு "பசிக்கிறது பாட்டி. இரண்டு நிமிடங்களில் குளித்து விட்டு வருகிறேன். சாப்பாடு போடு" என்றாள்.

என்றும் இல்லாதவிதமாக ஏதோ சினிமா பாட்டை முணுமுணுத்துக் கொண்டே குளித்து விட்டு வந்த பேத்தியை பார்க்கும் போது ஜானகிக்கு ரொம்ப வித்தியாசமாக இருந்தது. ஜெயந்தி சாப்பிட்டதும் உறங்கச் சென்று விட்டாள்.

சின்னக் குழந்தையை போல் ஒருக்களித்துக்கொண்டு படுத்திருந்த ஜெயந்தியின் தலையணையை சரிசெய்து விட்டு பக்கத்தில் படுத்துக் கொண்டாள் ஜானகி. அவள் மனம் ஒரு நிலையில் இருக்க மறுத்தது.

"கடவுளே! வயதுக்கு வந்த பெண் வேலைக்கு போவது, இப்படி அலைவது இதெல்லாம் எதற்கு? நல்லவிதமாக வாழ எங்களுக்கு வேறு ஏதாவது வழியைக் காட்டு."

ஜானகி தன்னுடைய அறுபது வருட வாழ்க்கையில் உலகில் நல்லதைவிட கெட்டதைத்தான் அதிகமாக பார்த்திருக்கிறாள். நியாயத்தைவிட அநியாயத்தைதான் உணர்ந்திருக்கிறாள். ஜெயந்தி உலகம் தெரியாத அப்பாவிப் பெண். கூடிய சீக்கிரம் அவளுக்குத்

திருமணம் ஆக வேண்டும் என்று கடவுளை வேண்டிக் கொண்டாள் ஜானகி.

ஜெயந்தி ரொம்ப எதிர்பார்ப்புடன் காத்திருந்த அந்த நாள் வந்துவிட்டது. காலை ஒன்பது மணிக்கே சாப்பிட்டுவிட்டதாக பெயர்பண்ணி விட்டு தன்னிடமிருந்த ஒரே ஒரு நல்ல புடவையை உடுத்திக் கொண்டாள். வெளிர் ரோஜா வண்ணத்தில் ஜார்ஜெட் புடவை. அதற்கு மேட்ச் ஆக ரோஸ் நிற கிரேப் பிளவுஸ் அணிந்து கொண்டாள். மணி பத்து அடிப்பதற்குள் வனிதா விஹாருக்கு சென்று விட்டாள்.

அன்று ஜெயந்தி செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருந்தன. எந்த ஒரு சின்ன விஷயத்திற்கும் எல்லோரும் ''ஜெயந்தி! ஜெயந்தி!'' என்று அழைத்துக் கொண்டிருந்தார்கள்.

யார் எந்த வேலையைச் சொன்னாலும் ஜெயந்தி மறுக்காமல் செய்தாள். யார் மனதையும் நோகடிக்காமல் பம்பரமாக சுழன்று வேலைகளை செய்து முடித்தாள். அவளுடைய அகராதியில் சலிப்பு என்ற வார்த்தைக்கே இடமில்லாதது போல் சுறுசுறுப்பாக செயல்பட்டாள்.

மாலையாகி விட்டது. வனிதா விஹாருக்கு முன்னால் வரிசையாக அமைக்கப்பட்ட வண்ண விளக்குகள் ஒளிவீசத் தொடங்கின. பார்த்துக் கொண்டிருந்த போதே மக்கள் கும்பல் கும்பலாக வரத் தொடங்கினார்கள். ஹால் முழுவதும் நிரம்பி விட்டது. சுமித்ரா சொன்னது போல் ஜெயந்தி எக்ஸ்ட்ராவாக வரவழைக்கப் பட்டிருந்த நாற்காலிகளை வரிசையாக போடச் செய்து வந்தவர்களை உட்காரவைத்துக் கொண்டிருந்தாள்.

இத்தனை பிசியாக இருந்தபோதும் ஜெயந்தி ஒரு விஷயத்தை கவனிக்கத் தவறவில்லை. பணம் கொடுத்து டிக்கெட் வாங்கியவர்கள் குறைவாக வந்திருந்தார்கள். ஆனால் மரியாதைக்காக கொடுத்த இலவச டிக்கெட்டுகளுக்கு நிறைய பேர் வந்திருந்தார்கள்.



ஜெயந்தியை முதல் வகுப்பு நுழைவுவாயிலின் அருகில் நிற்கச் சொன்னாள் சுமித்ரா.

பெரிய மனிதர்கள் எல்லோரும் வருவார்கள். அவர்களை வரவேற்று உட்காருவதற்கு இடத்தைக் காண்பிக்க வேண்டும்.

உள்ளே இடம் போறாததால் மேலும் நாற்காலிகளை தருவித்துக் கொண்டிருந்த ஜெயந்தி ''அமைச்சர் வந்து விட்டார்'' என்ற குரலைக் கேட்டு கையிலிருந்த நாற்காலியை கீழே வைத்துவிட்டு சட்டென்று வெளியில் ஓடி வந்தாள். கூட்டத்தினூடே வழியை ஏற்படுத்திக்கொண்டு அவள் வருவதற்குள் அமைச்சர் மேடை பக்கம் சென்று விட்டார். ஏதோ வேலையாய் அந்தப்பக்கம் வந்த சுமித்ரா வாசற்படி அருகில் வெறுமே நின்றுவிட்ட ஜெயந்தியை பார்த்து ''என்ன? இங்கேயே நின்று விட்டாய்? மக்கள் அங்கே உட்கார இடமில்லாமல் நின்று கொண்டு இருக்கிறார்கள். நாற்காலிகளை போட ஏற்பாடு செய்யச் சொல்லியிருந்தேனே?'' என்று கடிந்து கொண்டாள்.

திடீரென்று கேட்க நேர்ந்த இந்த கடினச் சொற்களுக்கு ஜெயந்தியின் மனம் குன்றிவிட்டது. கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது. அதற்குள் அந்தப் பக்கமாக வந்த மிஸெஸ் கருணாகரன் ''அடடா! அங்கே எல்லோரும் நிற்கிறாங்களே என்று சொல்லிக் கொண்டே ஓடிப்போய் நாற்காலிகளை போடச் செய்து உட்கார வைத்தாள். அவள் மட்டுமே இல்லை. மற்ற மெம்பர்களும் வனிதா விஹார் நிறுவனத்தின் பாரம் முழுவதையும் தாங்களே சுமப்பது போல் பரபரவென்று வேலை செய்து கொண்டிருந் தார்கள்.

முதல் வகுப்பு நுழைவாயிலிடம் வாலண்டியராக நிற்பதைத் தவிர வேறு என்ன செய்வது என்று ஜெயந்திக்குப் புரியவில்லை.

நிகழ்ச்சி தொடங்குவதற்கு சற்று முன் கையகல ஜரிகை கரையிட்ட பட்டுப்புடவையை உடுத்திக்கொண்டு, தகதகவென்று ஜொலிக்கும் கல் நகைகளை அணிந்து கொண்டு அமைச்சரின் மனைவி பிரசிடெண்ட ஹோதாவை பறைச்சாற்றுவது போல்

மிடுக்காக நடந்து போய் மேடை மீது ஏறினாள். பிறகு நிறுவனத்தின் ரிப்போர்ட்டை மூச்சு இரைக்க, நடுநடுவில் வியர்வையைத் துடைத்துக் கொண்டு, தடுமாறிக் கொண்டே படித்து முடித்தாள். தப்பும் தவறுமாக அந்த ரிப்போர்ட்டை ஆங்கிலத்தில் வாசிப்பதைவிட அழகாக தமிழிலேயே வாசித்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று ஜெயந்திக்கு தோன்றியது. அது போகட்டும் தான் ஒருத்தி இருப்பதையே எல்லோரும் மறந்து போய்விட்டார்களா என்ன?

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய அமைச்சர் சொற்பொழிவு ஆற்றினார். மேடையில் நடுமையத்தில் அமர்ந்திருந்த தன் மனைவியை பெருமையுடன் பார்த்துக் கொண்டே, வனிதா விஹார் நிறுவனம் செய்து வரும் சமூகத் தொண்டை பாராட்டினார். மற்ற நிறுவனங்களும் இதுபோல் செயல்பட்டால் நாடு விரைவில் முன்னேற்றம் அடையும் என்று முழக்கமிட்டார். நாடு நெருக்கடியில் இருக்கும் இந்த சூழ்நிலையில் பெண்களும் முன் வந்து நாட்டை காப்பாற்ற வேண்டும் என்று அறிவுரை வழங்கினார். ஏறத்தாழ ஒரு மணி நேரம் நிகழ்த்தப்பட்ட அந்த சொற்பொழிவில் வனிதா விஹார் நிறுவனத்திற்காக பாடுபடும் அங்கத்தினர்களின் பெயர்களை தனித்தனியாக குறிப்பிட்டார். கடைசியாக ஊழியர்களின் பெயர்களையும் படித்தார். அந்த பட்டியலில் தன் பெயர் இருந்ததோ இல்லையோ ஜெயந்தியால் கவனிக்க முடியவில்லை.

ரொம்ப நேரமாக நின்று கொண்டு இருந்ததால் சோர்வாக உணர்ந்த ஜெயந்தி ஸ்பேர் ஆக வைத்திருந்த நாற்காலிகளிலிருந்து ஒன்றை எடுத்து வந்து நுழைவாயிலுக்கு பக்கத்தில் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள். நாட்டிய நிகழ்ச்சி தொடங்கிவிட்டது. முதல் வரிசையில் சோபாவில் அமைச்சருக்கு வலது பக்கம் ரேகாவும், இடது பக்கம் மிஸெஸ் வர்மாவும் அமர்ந்திருந்தார்கள்.

நிகழ்ச்சி தொடங்கியதும் மற்ற யோசனைகளையெல்லாம் மறந்துவிட்டு ஜெயந்தி நாட்டியம் பார்ப்பதில் ஆழ்ந்து போய்



விட்டாள். ரொம்ப நேரம் கழித்து தனக்குப் பின்னால் யாரோ நின்று கொண்டிருப்பது போல் தோன்றவே திடுக்கிட்டு பின்னால் திரும்பிப் பார்த்தாள். சிவப்பாக, உயரமாக, ஆஜானுபாகுவான தோற்றத்துடன் ஒருவன் நின்றிருந்தான். கருகருவென்று அடர்த்தியான கிராப், வெண்மை நிற ஆடைகளுடன் கம்பீரமாக நின்று கொண்டு கண் இமைக்காமல் நாட்டியத்தை பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜெயந்தி திரும்பிப்பார்த்த அதே நேரத்தில் அவனும் ஜெயந்தின் பக்கம் பார்த்தான்.

ஜெயந்தி சட்டென்று எழுந்து நின்று ''உள்ளே போய் உட்காருங்கள்'' என்றாள். அவன் யார் என்று தெரியாவிட்டாலும் மதிப்பு தரவேண்டிய நபர்போல் தென்பட்டான். ஜெயந்திக்கு வெகு அண்மையில் நின்றிருந்த அவன் இடத்தை விட்டு அசையாமலேயே ''பரவாயில்லை. நீங்க உட்கார்ந்து கொள்ளுங் கள். நிகழ்ச்சி முடியப் போகிறது'' என்றான். கண்ணிமைக்காமல் அவன் ஜெயந்தியை பார்த்த பார்வையில் ஒரு வினாடி வியப்பு தோன்றி மறைந்தது. ஜெயந்தி மறுபடியும் உட்கார்ந்து கொண்டாள். இருவரும் நிகழ்ச்சியை பார்ப்பதில் ஆழ்ந்து போய் விட்டார்கள்.

நிகழ்ச்சி முடியப் போகும் நேரம் திடீரென்று எங்கிருந்தோ சுமித்ரா வேகமாக வந்து கொண்டே ''அடடா! நீங்க இங்கேயே நிற்கறீங்களே? ஏன் உள்ளே வரவில்லை? உங்களுக்காக அமைச்சர் பக்கத்தில் ஒதுக்கி இருந்த இடம் அப்படியே காலியாக இருக்கு. என்ன ஜெயந்தி? அவர் நின்று கொண்டிருக்கும்போது நீ உட்கார்ந்து இருக்கிறாயே?'' என்று அதட்டினாள். விஷயம் புரியாமல் ஜெயந்தி சட்டென்று எழுந்து நின்று இருவரையும் மாறி மாறி பார்த்தாள்.

''நோ... நோ... அவங்களை ஒன்றும் சொல்லாதீங்க. நான்தான் உள்ளே போக மறுத்துவிட்டு இங்கேயே நின்று விட்டேன். நான் வந்ததும் இப்பொழுதுதான்'' பேண்ட் ஜேபியில் இருகைகளையும் நுழைத்துக் கொண்டே சொன்னான்.

அப்படியா. இந்தப் பெண் எங்களுடைய செகரெட்ரி. புதிதாக சேர்ந்திருக்கிறாள் இல்லையா, அதான் தெரியவில்லை'' என்று ஜெயந்தியை அறிமுகப்படுத்தினாள். ஜெயந்தி இரு கரங்களையும் கூப்பி வணக்கம் தெரிவித்தாள். அவன் பதில் வணக்கம் சொல்லவில்லை. அவளுடைய வணக்கத்தை ஏற்றுக் கொள்வது போல் லேசாக தலையை அசைத்துவிட்டு ''ஆமாம். யாரையோ அப்பாயிண்ட் செய்ததாக கேள்விப் பட்டேன். பெயர்?'' ஜெயந்தியின் கண்களில் நேராக பார்த்துக் கொண்டே கேட்டான். அவன் கண்களில் மறுபடியும் அதே வியப்பு!

''ஜெயந்தி.'' ஜெயந்தியுடன், சுமித்ராவும் சேர்ந்து சொன்னாள். சுமித்ரா அவனை தனக்கு அறிமுகப்படுத்தி வைப்பாள் என்று ஜெயந்தி எதிர்பார்த்தாள். அதற்கு அவசியம் இல்லாதது போல் சுமித்ரா அங்கிருந்து போய்விட்டாள். மக்கள் கும்பல் கும்பலாக வெளியேறத் தொடங்கினார்கள். அவர்களுக்கு வழியை விடுவதற்காக வாசலுக்கு பக்கத்தில் ஒதுங்கி நின்ற ஜெயந்தி தொலைவில் நடந்து போய்க் கொண்டிருந்த சுமித்ராவையும், அவனையும் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் நிற்கும் போது மட்டுமே இல்லை, நடக்கும்போதும், பின்னாலிருந்து பார்த்தாலும் மிடுக்காக கம்பீரமாக தென்பட்டான்.

வெளியில் வந்த அமைச்சர் காரில் ஏறி அமர்ந்து கொண்டதும், காரைச் சுற்றிலும் எல்லோரும் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களுக்கு நடுவில் அவன் உயரமாக இருந்ததாலோ என்னவோ தனியாக தென்பட்டான். எல்லோரும் சேர்ந்து ரொம்ப ஆடம்பரமாக அமைச்சருக்கு விடை கொடுத்தார்கள். அமைச்சரின் கார் கிளம்பிவிட்டு.

ஜெயந்தி ஆழ் மனதிலிருந்து அடக்க நினைத்தாலும் பெருமூச்சொன்று வெளியேறியது. அமைச்சர் வந்தார். கிளம்பியும் போய்விட்டார். தன்னை யாரும் அவருக்கு அறிமுகப்படுத்தி வைக்கவில்லை.

பார்த்துக் கொண்டிருந்த போதே மக்கள் கும்பல் குறைந்து விட்டது. ஹால் காலியாகிவிட்டது. திடீரென்று எல்லோருக்கும்



மறுபடியும் ஜெயந்தியின் நினைவு வந்து விட்டது போலும். ''ஜெயந்தி! ஜெயந்தி!'' என்று அழைத்துக் கொண்டிருந்தார்கள். ஜெயந்தி காதுகளில் அந்த அழைப்பு விழுந்தாலும் நின்ற இடத்திலிருந்து ஓரடிக்கூட அசையாமல் அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

# 4

ஒரு பக்கம் ரேகாவும் இன்னொரு பக்கம் அவனும் நடந்து வர ஜெயந்தியின் பக்கம் பார்த்த சுமித்ரா நின்று ''ஜெயந்தி! நீ இன்னும் அரைமணி நேரம் இங்கேயே இருந்து ஆட்களை விட்டு எல்லாவற்றையும் எடுத்து வைத்த பிறகு வீட்டுக்குப் போ. நானும் இருந்திருப்பேன். ஆனால் சின்ன மகனுக்கு ஜுரம். நான் வரவில்லை என்றால் வேலை நடக்காது என்பதால் வந்தேன்'' என்றவள் ரேகாவின் பக்கம் திரும்பி ''போவோமா?'' என்றாள்.

ரேகா கருப்பு கரையிட்ட வெண்பட்டுப் புடவை அணிந்திருந்தாள். லோநெக் ஜாக்கெட். கழுத்தில் முத்துச்சரம். கையில் காஷ்மீர் ஷால். புது மாதிரியான கொண்டையில் ஒரு பக்கம் ரோஜா சொருகியிருந்தாள். ஆள் கொஞ்சம்கூட களைத்துப் போகவில்லை. அப்பொழுதுதான் தயாராகிவிட்டு வந்தார்போல் தென்பட்டாள். ஜெயந்திக்கு ஒரு நிமிடம் அவள் மீது பொறாமை ஏற்பட்டது. தான் ரேகாவாகவும், ரேகா ஜெயந்தியாகவும் ஏன் இருக்கக்கூடாது? அமைச்சரின் பக்கத்தில் எவ்வளவு மிடுக்காக அமர்ந்திருந்தாள்?

''நீங்களும் வாங்க.'' எங்கேயோ கவனம் இருப்பது போல் நின்றுவிட்ட அவனைப் பார்த்து ரேகா சொன்னாள்.

''நானா? நானும் உடன் இருந்துவிட்டு இதையெல்லாம் சரி செய்துவிட்டு வருகிறேன். எனக்கு தூக்கம் வரவில்லை'' என்றான். அவன் கண்கள் ஜெயந்தியின் மீது படிந்திருந்தாலும் பார்வை மட்டும் எங்கேயோ நிலைத்திருப்பது போல் இருந்தது

"உண்மையாகச் சொல்றீங்களா? ரொம்ப ரொம்ப தாங்க்ஸ்." மனதில் ஏற்பட்ட சந்தோஷம் சுமித்ராவின் முகத்தில் வெளிப்படையாக தெரிந்தது. ஆனால் ரேகாவின் முகம் சுருங்கிவிட்டது.

"அப்போ நீ இங்கே இருப்பானேன். கிளம்பு, வீட்டில் இறக்கி விடுகிறேன்." ரேகா ஜெயந்தியிடம் சொன்னாள்.

"நோ... நோ... அவளும் இருக்கட்டும். நான் சும்மா துணையாக இருப்பேன். அவ்வளவுதான்" என்றான். அப்படி அவன் சொன்னது ஏனோ ரேகாவுக்கு பிடிக்கவில்லை. ரேகாவுக்கு பிடிக்கவில்லை என்பதை உணர்ந்தாலும் அவன் அதைப் பொருட்படுத்தியதாக தெரியவில்லை. சுமித்ராவுடன் சென்று கொண்டிருந்த ரேகா பின்னால் திரும்பி ஜெயந்தியின் பக்கம் வக்கிரமான பார்வை ஒன்றை வீசிவிட்டுப் போனாள். ஏனோ தெரியவில்லை அந்தப் பார்வை ஜெயந்தியின் இதயத்தை தாக்கி கத்தியால் குத்தியது போல் வேதனை ஏற்பட்டது.

எல்லோரும் போய்விட்டார்கள். வெளியில் இருந்த விளக்குகளை எடுத்துவிட்டார்கள். உள்ளேயும் ஒவ்வொரு விளக்காக அணைத்துக் கொண்டிருந்தார்கள். அதிகப்படியாக போட்டிருந்த நாற்காலிகளை அகற்றிக் கொண்டிருந்தார்கள்.

"நீங்க உட்காருங்க. நான் எல்லாவற்றையும் பார்த்து விட்டு வருகிறேன்." அவன் ஜெயந்தியின் பக்கம் பார்க்காமலேயே சொல்லி விட்டு போய்விட்டான். ஹாலில் தனியாக நின்றுவிட்ட ஜெயந்தி என்ன செய்வது என்று புரியாமல் பக்கத்தில் இருந்த நாற்காலியில் சரிந்துவிட்டாள். காலையில் எப்போதோ ஒரு வாய் சாப்பிட்டது. அதுகூட அவசர அவசரமாக அள்ளிப் போட்டுக் கொண்டதுதான். பகல் முழுவதும் சுற்றிக் கொண்டிருந்ததால் தெரியவில்லை. ஆனால் இப்பொழுது ரொம்ப சோர்வாக இருந்தது. நடுவில் காபியாவது குடிப்போம் என்றால் அதற்கும் நேரம் கிடைக்கவில்லை.

காலையிலிருந்து இடைவிடாமல் வேலை செய்ததில் களைத்துப் போன ஜெயந்தி நாற்காலியில் பின்னால் சாய்ந்து



கொண்டதும் தூக்க மயக்கம் கண்களை சுழற்றிக் கொண்டு வந்தது. விழிப்பும், தூக்கமும் இல்லாத நிலை.. எதுவும் தெளிவாக இருக்கவில்லை. இந்த நாளை பற்றி எத்தனை விதமாக யோசித்தாள்? எத்தனை எதிர்பார்த்தாள்? எதுவுமே நடக்கவில்லை. எல்லோரும் கும்பல் கும்பலாக போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு தொலைவில் தான் மட்டும் தனியாக நின்று கொண்டிருக்கிறாள். தன்னை யாருமே கவனிக்கவில்லை. தனக்கு என்று ஒரு அடையாளமே இல்லை.

ஜெயந்திக்கு வருத்தமாக இருந்தது. தனக்கு யாருமே இல்லை. பாட்டியைத் தவிர, இந்த உலகில் தன்னைப் பற்றி யார் கவலைப்படப் போகிறார்கள்? தான் இருக்கும் இடத்தில் எவ்வளவு தனிமை! தன்னைச் சூழ்ந்து கொண்டிருக்கும் இந்த பயங்கரமான தனிமையை உடைத்துக் கொண்டு யாராவது 'ஜெயந்தி!' என்று அருகில் வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

எவ்வளவு பைத்தியக்காரியாக யோசிக்கிறாள்? யார் வருவார்கள்? தன்னை யார் விரும்புவார்கள்? இல்லை... இல்லை. யாரோ தன்னை நெருங்கி வருகிறார்கள். தெளிவற்று இருந்த உருவம் ஒன்று அவளை நெருங்கி முறுவலுடன் "நீ எனக்கு வேண்டும்" என்று சொல்வது போல் தோன்றியது.

இப்பொழுது எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது? யாருடையதோ கை ஒன்று நீண்டு வந்து அவள் கையைப் பற்றிக் கொண்டது. அந்த தொடுகை மனதிற்கு தைரியமளிப்பது போல இதமாக இருந்தது. அந்த கையைப் பற்றிக் கொண்டு அப்படியே எங்கேயாவது கண்காணாத இடத்திற்கு போய்விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்? தன் கையிலிருந்து நழுவப் போன அந்த கையை மேலும் பலமாக மார்போடு அழுத்திக்கொண்டாள். இதுவரையில் அனுபவித்திராத உணர்வு... இனிய நறுமணம்... புரியாத மகிழ்ச்சி... எல்லாமாக சேர்ந்து ஜெயந்தியை திக்கு முக்காட செய்தன.

ஜெயந்தி திடுக்கிட்டு விழித்துக்கொண்டாள். எதிரே அவன். அவனுடைய கை தன் இருகரங்களிலும் சிறைப்பட்டிருந்தது. ஜெயந்திக்கு ஒரு நிமிடம் தான் எங்கே இருக்கிறோம் என்றோ, என்ன நடக்கிறது என்றோ புரியவில்லை. திகைத்துப் போனவளாய் முறுவல் தவழும் அவன் முகத்தையும், தன் கைகளில் சிக்குண்ட அவன் கரத்தையும் மாறி மாறி பார்த்தாள்.

''நல்ல ஆள்தான் போங்க. கொஞ்சம் உட்காருங்க என்று சொல்லிவிட்டுப் போனால் நிம்மதியாக தூக்கம் போட்டீங்களா. போகட்டும் எழுப்புவோம் என்று அருகில் வந்தால் கையை வேறு பிடித்துக் கொண்டு விட்டீங்க.''

முறுவலுடன் அவன் சொன்ன வார்த்தைகள் ஜெயந்தியை இவ்வுலகிற்குக் கொண்டு வந்தன. சட்டென்று அவன் கையை விட்டுவிட்டு எழுந்து கொள்ளப்போனாள். ஆனால் இந்த முறை அவன் விடவில்லை. கையைப் பிடித்து மெதுவாக அவளை எழுப்பிக் கொண்டே, ''ரொம்ப களைத்துப் போய்விட்டீங்க போலிருக்கு. அப்படித்தானே!'' என்றான்.

வெட்கம் சூழ்ந்துகொள்ள குனிந்த தலை நிமிராமலேயே ஆமாம் என்பது போல் தலையை அசைத்தாள்.

ஹாலில் முன்போல் விளக்குகள் ஒளி வீசிக் கொண்டிருக்கவில்லை. நடுவில் மட்டும் ஒரே ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மஞ்சள் நிற வெல்வெட் கர்டென் வழக்கம் போல் மேடையை மறைத்துக் கொண்டிருந்தது.

''வாங்க போகலாம்'' என்று அவன் சொன்னதும் ஜெயந்தி நகர்ந்தாள். இருவரும் வெளியே வந்தார்கள். சற்று தொலைவில் நிலா வெளிச்சத்தில் கருப்பு நிறத்தில் நீளமான கார் ஒன்று நின்றிருந்தது. அதைப் பார்த்ததும் ஜெயந்தி திடுக்கிட்டாற்போல் நின்று விட்டாள். 'வீட்டுக்கு எப்படி போவது?' என்று நினைத்தவள் தன்னையும் அறியாமல் அந்த வார்த்தைகளை வெளியில் சொல்லி விட்டாள் போலும். முன்னால் வேகமாக படியிறங்கிக் கொண்டிருந்தவன் திடீரென்று நின்று பின்னால் திரும்பி ''என்ன?'' என்றான்.



அவனுக்கு பின்னால் ஏறத்தாழ அதே வேகத்தில் படி இறங்கிக் கொண்டிருந்த ஜெயந்தி திடீரென்று அவன் நின்றதும் அவன்மீது விழப்போனாள். எப்படியோ சமாளித்துக் கொண்டு நின்று விட்டாள்.

''என்ன?'' மறுபடியும் கேட்டான்.

''நான் வீட்டுக்கு போவது எப்படி?''

''நடந்து போங்க. பஸ் இப்போ இருக்காது. ரிக்ஷாவும் கிடைக்காது.'' அவன் நடந்து கொண்டே சொன்னான்.

ஜெயந்திக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. அறிமுகமில்லாதவளுடன் பரிகாசமாக பேசுவது பண்பாளனுக்கு உகந்தச் செயல் இல்லை.

''வாங்க. இன்னும் கொஞ்சம் நேரம் போனால் நீங்க நடந்துகொண்டே தூங்குவீங்க போலிருக்கு.'' கார் கதவைத் திறந்து பிடித்துக் கொண்டே சொன்னான்.

ஜெயந்திக்கு சிரிப்பு வந்தது. கோபமும் அதிகரித்தது. முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாமல் வந்து காரில் அமர்ந்து கொண்டாள். அவன் அந்தப் பக்கமாக சுற்றிவந்து டிரைவிங் சீட்டில் உட்கார்ந்து காரை ஸ்டார்ட் செய்து கொண்டே 'வழியைச் சொல்லும் பொறுப்பு உங்களுடையது'' என்றான்.

கேட்டைத் தாண்டி வெளியே வந்ததும் ஜெயந்தி சொன்ன திசையில் காரைத் திருப்பினான். ஏறத்தாழ நள்ளிரவு ஆகிவிட்டதால் சாலைகள் ஆளரவமற்று இருந்தன. நிலா வெளிச்சத்தில் நள்ளிரவு வேளையில் நிசப்தமான சூழ்நிலை! ஜெயந்திக்கு இன்னும் தூக்கக் கலக்கம் போகவில்லை. விலை உயர்ந்த கார்... மெத்தென்ற இருக்கை... வெளியிலிருந்து வேகமாக வீசும் குளிர்ந்த காற்று.

''உங்கள் வீட்டில் யார் யார் இருக்காங்க?'' அவனே உரையாடலை தொடங்கினான்.

''பாட்டியும்... நானும்'' ஒரு நிமிடம் கழித்து பதில் சொன்னாள்.

"வேறு யாரும் இல்லையா?" வியப்புடன் கேட்டான்.

"ஊஹூம்."

"அம்மா அப்பா?"

"என் சின்ன வயதிலேயே போய்விட்டார்கள்." வெளியி நிலா வெளிச்சத்தை பார்த்துக்கொண்டே சொன்னாள். இருவரு கும் நடுவில் மௌனம் சூழ்ந்து கொண்டது. அவன் பெருமூச் விடும் சத்தம் கேட்டு ஜெயந்தி தலையைத் திருப்பிப் பார்த்தாள்.

சாலை மீது பார்வையை பதித்து டிரைவ் செய்து கொண் ருந்தவன் ஜெயந்தி பக்கம் திரும்பாமலேயே "நீங்க என்னைவி அதிர்ஷ்டசாலி" என்று சொன்னான்.

"எந்த விஷயத்தில்?" நிலா வெளிச்சம் மரங்களின் நிழல் களுடன் கண்ணாமூச்சி ஆடுவதை பார்த்துக்கொண்டே கேட்டா ஜெயந்தி.

"உங்களுக்கு பாட்டியாவது இருக்கிறாள். எனக்கு யாருமே இல்லை."

ஜெயந்தி மௌனமாகிவிட்டாள். அவன் யாரோ தனக்கு இதுவரையில் தெரியாது. கேட்டு தெரிந்து கொள்ள துணிச்சல் இருக்கவில்லை. ஆனால் அவனுடைய பேச்சு, நடவடிக்கை எல்லாமே ரொம்ப நாளாக பழகி வருவது போல் நட்பு தோரணியில் இருந்தது.

"அது போகட்டும். நீங்க இந்த வேலைக்கு ஏன் வந்தீங்க?" திடீரென்று கேட்டான்.

ஜெயந்தி திடுக்கிட்டாள். "நல்லா இருக்கு எல்லோரும் எதற்காக வேலைக்கு போவார்கள்?" எதிர்க் கேள்வி கேட்டு தப்பித்துக் கொள்ள முயன்றாள்.

"எல்லோரும் எதற்காக வேலைக்கு போவார்கள் என்பது அர்த்தமில்லாத கேள்வி, சிலர் பொழுது போக்குவதற்காக வேலைக்கு போவார்கள். சிலர் வயிற்றுப் பாட்டுக்காக



செய்வார்கள்." அவன் பேச்சில் கத்திமுனையின் கூர்மை வெளிப்பட்டது.

"அவற்றில் ஏதோ ஒன்று காரணமாக இருக்கலாம் இல்லையா?"

"காரணம் எதுவாக இருந்தாலும் நீங்க இந்த வேலையில் ரொம்ப நாட்களுக்கு இருக்க மாட்டீங்க. அதை மட்டும் என்னால் கச்சிதமாக சொல்ல முடியும். வேண்டுமானால் பந்தயம் கட்டவும் தயார்." சவால் விடுவது போல் சொன்னான்.

பெரிய ஜோதிட சிகாமணி! ஜோசியம் சொல்ல வந்து விட்டான். ஜெயந்தியின் தன்மானம் அடியுண்டது. தேவையற்ற பேச்சு என்றும் தோன்றிது. உரையாடலை நீடிக்க விரும்பாதது போல் தலையைத் திருப்பி வெளியில் பார்க்கத் தொடங்கினாள்.

"என்னால் இந்த வேலையை தொடர்ந்து செய்ய முடியாது என்று எப்படிச் சொல்றீங்க?" வெளியில் பார்த்துக் கொண்டிருந்த ஜெயந்தியால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

"சிலரை பார்க்கும்போதே சில விஷயங்கள் புரிந்துவிடும்."

ஜெயந்தி ஏதோ பதில் சொல்ல நினைக்கும் முன் வீடு வந்து விட்டது.

"நிறுத்துங்க... நிறுத்துங்க வீடு வந்துவிட்டது." சடென் பிரேக்குடன் கார் நின்றுவிட்டது.

"தாங்க்ஸ். வருகிறேன்." மேற்கொண்டு பேச்சுக்கு இடம் தராமல் கார் கதவைத் திறந்துகொண்டு இறங்கினாள்.

"எந்த வீடு? அருகில்தானா?"

"அதோ... பச்சை கதவு தெரிகிறதே... அதுதான் வருகிறேன்."

"ஆல்ரைட். குட்நைட்" என்றவன் ஜெயந்தி சரியாகக் கதவை சாத்தவில்லை என்பதை உணர்ந்து முன்னால் குனிந்து கையை நீட்டினான்.

''இத்தனைக்கும் நானும் கேட்கவில்லை. நீங்களும் சொல்ல வில்லை. உங்க பெயர்?'' பதுமையை போல் நின்றிருந்த ஜெயந்தி அவனைப் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

''என் பெயரா?'' கதவைச் சாத்தப் போனவன் நின்று விட்டான். ''ஆமாம். உண்மைதான், சுமித்ரா என்னை உங்களுக்கு அறிமுகப்படுத்தவில்லை இல்லையா? உங்களுக்கும் என்னைப் பற்றி தெரிந்து கொள்ளணும் என்ற ஆர்வம் இருக்கும். என் பெயர் ராஜசேகர்.'' கார் கதவை இழுத்துச் சாத்திக்கொண்டே சொன்னான்.

''ராஜசேகரா!! ஜெயந்தியின் கை தன்னறியாமலேயே மார்பின் மீது பதிந்தது. கண்கள் அகலமாக விரிந்தன.

''என்ன அப்படி பார்க்கறீங்க? என் பெயர் உங்களுக்கு பிடிக்க வில்லையா? தெரிந்தவர்கள் சேகர் என்றும், நெருங்கிய வர்கள் ராஜா என்றும் அழைப்பார்கள். வருகிறேன். குட்நைட்.'' கார் போய்விட்டது.

''மைகாட்! இவன்தான் ராஜசேகரா? மூச்சு விடவும் மறந்தவள் போல் ஜெயந்தி அப்படியே நின்று விட்டாள்.

## 5

''உன்னை மிஸெஸ் கருணாகரன் ஒருமுறை வீட்டுக்கு வரச்சொல்லி சொல்லியிருந்தாள். போனியா?'' டைப் செய்த காகிதங்களை சரிபார்த்துக் கொண்டே சுமித்ரா கேட்டாள்.

''இல்லை. போகவில்லை'' பதிலளித்தாள் ஜெயந்தி. எது தன்னுடைய வேலையோ தன்னுடைய வேலை இல்லையோ ஜெயந்தி உணர்ந்திருந்தாள். தன்னுடைய ட்யூடி அல்லாத விஷயங் களுக்கு நான் போக வேண்டிய தேவை இல்லை. தான் இந்த நிறுவனத்திற்கு மட்டும்தான் செகரெட்ரி. அதில் இருக்கும்



அங்கத்தினர்கள் எல்லோருக்கும் செகரெட்ரி இல்லை. ஏதோ ஒரு சாக்கு சொல்லி வீட்டுக்கு வரச்சொல்லி சொந்த வேலைகளை தலையில் கட்டுவது இவர்களுடைய வழக்கம் போலும். மறுத் தால் வேலைக்கே வேட்டு வைக்கக்கூடிய திறமைப் படைத்தவர்கள். திமிர் பிடித்தவள் என்று தன்னைப் பற்றி எதிர்மறையாக பிரசாரம் செய்தாலும் வியப்படைய தேவை யில்லை. அவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும் தங்களு டைய அதிகாரத்தை, ஹோதாவை வெளிப்படுத்திக் கொண்டே இருப்பார்கள். காலால் இட்ட காரியத்தை தலையால் செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். இதைப் புரிந்து கொண்ட பிறகு ஜெயந்திக்கு ரொம்ப வெறுப்பாக இருந்தது.

''இன்னிக்காவது போய்விட்டு வா. எப்படியும் அவளிடம் கையெழுத்து வாங்கிக் கொள்ளணும் இல்லையா.'' அந்த மாத நிகழ்ச்சியின் காபியை கொடுத்துவிட்டு சுமித்ரா போய்விட்டாள்.

ஜெயந்தி நாற்காலியில் சரிந்து விட்டாள். போவதற்கு விருப்பம் இல்லை. போகாமல் தவிர்க்கவும் முடியாது. போக மாட்டேன் என்று மறுத்துச் செல்லும் தைரியமும் இல்லை. வீட்டுக்குப் போனால் எப்படி நடத்துவார்களோ நினைவுக்கு வந்தால் வெறுப்பாக இருந்தது. சுமித்ரா சொன்ன பிறகு போகாமல் இருக்க முடியாது. இந்த நிலை மேலும் நீடித்தால் தான் இங்கே ரொம்ப நாளைக்கு வேலை பார்க்க முடியாது. ராஜசேகர் சொன்ன ஜோதிடம் விரைவில் பலித்துவிடும் போல் தோன்றியது.

ராஜசேகரின் நினைவு வந்ததும் ஜெயந்திக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது. தன்னால் இந்த வேலையில் தொடர்ந்து இருக்க முடியாது என்று சொன்னான் இல்லையா. அந்த வார்த்தையை பொய்யாக்க வேண்டும். மறுபடியும் எப்போதாவது சந்திக்க நேர்ந்தால் ''பார்த்தீங்களா! உங்கள் ஜோதிடம் பொய்த்துவிட்டது. நான் இன்னும் வனிதா விஹாரில் செகரெட்ரியாக இருக்கிறேன்'' என்பது போல் அவனை நிமிர்ந்து பார்க்க வேண்டும்.

அன்றைய தினத்திற்கு பிறகு ராஜசேகர் மறுபடியும் கண்ணில் படவே இல்லை. அன்று இரவு அவனுக்கும் தனக்கும் இடையில் நிகழ்ந்த உரையாடல் கொஞ்சம்தான் என்றாலும் அவன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும், பளபளவென்று மின்னிக் கொண்டிருந்த கருப்பு நிற கார், தனக்கு பின்னால் நின்றிருந்த அவனுடைய உயரமான உருவம்... நாற்காலியின் பின்னால் சாய்ந்து உறங்கிக் கொண்டிருந்த தன்னை அவன் எழுப்ப முயன்ற போது தான் அவனுடைய கையைப் பற்றிக் கொண்டது... அந்தத் தொடுகை... எல்லாமே நினைவில் பசுமையாக இருந்தன. ராஜசேகரின் நினைவு வந்தாலே இனம் தெரியாத உணர்வு மனதில் சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

அன்று மாலை வேலை முடிந்த பிறகு ஜெயந்தி மிஸெஸ் கருணாகரன் வீட்டுக்குச் சென்றாள். திரு கருணாகரன் வக்கீல் தொழிலில் நல்ல பெயர் பெற்று விட்டிருந்தார். வருமானமும் நிறைய இருந்தது. ஆனால் குழந்தைப் பாக்கியம் கிடைக்க வில்லை. கணவன் மனைவி இருவருக்குமே செலவழிக்க பிடிக்காது என்பதால் சம்பாதித்தது அப்படியே சேர்ந்துவிட்டது.

கேட்டைத் தாண்டி உள்ளே போனது முதல் ஐஸ்வரியத்தை பறைச்சாற்றும் விதமாக வீடும் தோட்டமும் அமைந்திருக்கும். ஜெயந்தி போன போது மிஸெஸ் கருணாகரன் வீட்டிலேயே இருந்தாள். ஜெயந்தியை வராண்டாவில் இருந்த நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு வேலைக்காரன் உள்ளே சென்றான். ஐந்து நிமிடங்கள் கழித்து திரும்பி வந்தான். அம்மா குளித்துக் கொண்டு இருப்பதாகவும், பத்து நிமிடங்கள் காத்திருக்கச் சொல்லிச் சொன்னதாகவும் தெரிவித்து விட்டுச் சென்றான். ஒரு காகிதத்தின் மீது கையெழுத்து வாங்குவதற்காக இத்தனை நேரம் காத்திருக்க வேண்டிய நிலைமை. இந்த நிறுவனத்தின் செகரெட்ரியாக இருப்பதால் பெரிய மனிதர்களுடன் அறிமுகம் ஏற்படுவது இருக்கட்டும்? மனிதர்கள் எந்த அளவுக்கு அகம்பாவம் கொண்டிருப்பார்களோ, எதிராளியை எந்த அளவுக்கு தாழ்வாக மதிப்பார்களோ ஜெயந்திக்கு புரியத் தொடங்கியது. வாசல் வராண்டாவில் அமர்ந்திருந்த ஜெயந்திக்கும் தனக்கும் இது போன்ற பெரிய பங்களா, வேலைக்காரர்களை ஏன் இருக்கக் கூடாது என்று தோன்றியது. அப்பொழுது தான் நிச்சயமாக இது போல் நடந்து கொள்ள மாட்டாள். பண்பு என்பது பிறவியிலேயே அமைந்திருக்க வேண்டும்.



உலகில் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் இருப் பானேன்? கடவுள் ஏன் எல்லோரையும் ஒரே மாதிரி படைக்க வில்லை? தன்னுடைய எண்ணங்களைக் கண்டு ஜெயந்திக்கு வெட்கமாக இருந்தது. இது போல் யோசிப்பது மனநலனுக்கு கேடு விளைவிக்கும் என்பதை உணர்ந்து மனதை திசை திருப்ப தொட்டிகளில் இருந்த பூச்செடிகளை பார்த்துக் கொண்டு இருந்தாள். அதற்குள் வேலைக்காரன் வந்து உள்ளே வரச்சொல்லி வழிக்காட்டி விட்டுச் சென்றான். மிஸெஸ் கருணாகரன் வீடு ஜெயந்திக்கு தெரியாதது இல்லை. இதற்கு முன் நான்கைந்து முறை வந்திருக்கிறாள். ஆனால் ஒவ்வொரு தடவையும் வேலைக் காரன் வழிகாட்டுவான். ஆங்கிலத்தில் சரியாக ஒரு வாக்கியம்கூட பேசத் தெரியாத மிஸெஸ் கருணாகரனுக்கு ஆடம்பரங்கள் மீது ஏன் இந்த மோகம்?

ஜெயந்தி உள்ளே சென்றபோது மிஸெஸ் கருணாகரன் காபி குடித்துக் கொண்டு இருந்தாள். பக்கத்து சோபாவில் அவளுடைய அண்ணன் மகள் பரிமளா உட்கார்ந்திருந்தாள். அவள் மடியில் ஆங்கில நாவல் ஒன்று கிடந்தது. இடது கையால் பக்கத்தில் இருந்த பொமரேனியன் நாய்க்குட்டியை தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஜெயந்தி உள்ளே வந்ததும் கண்ணை மறைத்துக் கொண்டிருந்த தலைமுடியை ஒதுக்கிவிட்டு தலையை உயர்த்தி ஜெயந்தியைப் பார்த்தாள். அடுத்த வினாடி மறுபடியும் புத்தகம் படிப்பதில் ஆழ்ந்து போய்விட்டாள். அந்தப் பார்வையில் தான் எவ்வளவு அலட்சியம்!

''நேற்று வரச்சொல்லி போன் செய்தேனே? ஏன் வரவில்லை?'' ஜெயந்தி கொடுத்த காகிதத்தின் மீது கையெழுத்து போட்டுக் கொண்டே மிஸெஸ் கருணாகரன் கேட்டாள்

''நேரம் கிடைக்கவில்லை.''

''நேரம் கிடைக்கவில்லை என்றால் எப்படி? உங்களை போன்றவர்களுக்கே ஒழியவில்லை என்றால்...'' பாதியிலேயே நிறுத்திவிட்டு சிரித்தாள். அது சிரிப்பு இல்லை, ஏளனம்.

அவள் கையெழுத்து போட்டுக் கொடுத்த பிறகு ஜெயந்தி அதை பத்திரமாக பேக்கில் வைத்துக் கொண்டாள். மரியாதை காகக்கூட அவள் ஜெயந்தியை உட்காரச் சொல்லவில்லை.

அவள் முன்னால் உட்காரும் தகுதி தனக்கு இல்லையா என்ன? இந்த சின்ன கையெழுத்திற்காக இத்தனை மணி நேரம் வியர்த்தமாக காத்திருக்க வேண்டுமா? தனக்கு வேறு வேலையே இல்லையா என்ன?

வெளியில் வரும்போது ஜெயந்தியின் முகம் அவமானத் தினால் கன்றி விட்டிருந்தது. இந்த வேலைக்கு வந்தது முதல் ஒவ்வொரு நிமிடமும் தாழ்வானவள் என்று சுட்டிக் காட்டுவது போல் தன்னை நடத்துகிறார்கள். மற்ற வேலைகளில் இந்த தொல்லை இருக்காது. தொலைவில் வெளிச்சம் மின்னியதை பார்த்து விட்டு நட்சத்திரமாக இருக்கும் என்று நினைத்து ஓடி வந்தாள். ஆனால் அருகில் வந்த பிறகு தெரிந்தது. அது வானத்து நட்சத்திரம் இல்லை. வெறும் மின்விளக்குதான்.

காலையில் பத்து மணிக்கு சாப்பிட்டது. நடுவில் காபிகூட அருந்தவில்லை. இந்த மாதம் பிரதமர் நிதிக்கு நன் கொடையை சேகரிக்க வேண்டுமாம். ஆரம்பத்தில் இருந்த உற்சாகம் வரவர குறைந்து விட்டது. ஜெயந்தியின் உடலும் மனமும் தளர்ந்து விட்டன.

ஒன்றரை மணி நேரம் கால்கடுக்க காத்திருந்த பிறகுதான் ஜெயந்திக்கு வீட்டுக்கு போகும் பஸ் வந்தது.



# 6

அன்று ஜெயந்தி வேலையை மளமளவென்று முடித்துக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பினாள். நேற்று இரவு பாட்டிக்கு மறுபடியும் நெஞ்சு வலி வந்தது. காலையிலும் சோர்வாக அப்படியே படுத்துக் கொண்டிருந்தாள்.

பைல்களை உள்ளே வைத்து பூட்டிவிட்டு அவசரமாக வீட்டுக்குக் கிளம்பும் போது மிஸெஸ் வர்மாவின் நினைவு வந்தது. அவளிடம் இன்னும் கையெழுத்து வாங்கவில்லை. சாதாரணமாக அவளே வனிதா விஹாருக்கு வருவாள். இந்த முறை அவசர வேலையாக வெளியூருக்கு போகப் போகிறாளாம். வீட்டுக்கு வந்து கையெழுத்து வாங்கிக் கொள்ளச் சொல்லி போன் செய்தாள். இதுபோல் வீடுகளுக்குப் போகவேண்டும் என்று நினைத்தாலே ஜெயந்தியின் மனம் தளர்ந்துவிடும். வேறு வழியில்லை. தேவைப்பட்டால் நிறுவனத்திற்காக மெம்பர்களின் வீடுகளுக்கு போவதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என்று வேலையில் சேரும் போதே ஒப்புக்கொண்டு இருக்கிறாள். தலையெழுத்தை நொந்து கொண்டே ஜெயந்தி மிஸெஸ் வர்மாவின் வீட்டுக்குக் கிளம்பினாள்.

எல்லோரைக் காட்டிலும் திமிர்பிடித்தவள் போல் தென்பட் டாலும் மிஸெஸ் வர்மா கொஞ்சம் தேவலை. சாதாரணமாக வீட்டுக்கு வரச்சொல்லி சொல்ல மாட்டாள். அப்படியே வரச் சொன்னாலும் மரியாதையாக வரவேற்று உட்காரவைத்து வேலையை முடித்துக் கொடுத்துவிட்டு அனுப்புவாள். எந்த நேரமாக இருந்தாலும் சரி காபியோ, டிபனோ தராமல் அனுப்பமாட்டாள்.

மிஸெஸ் வர்மாவின் வீடும் ஆடம்பரமாக கட்டப்பட்டது இல்லை. வீட்டு வசதி வாரியத்தில் தவணை முறையில் கடன் செலுத்தும் விதமாக அலாட் செய்யப்பட்ட வீடு சின்னதாக

இருந்தாலும் சகல வசதிகளும் கொண்டிருந்தது. கணவன் ஏதோ கம்பெனியில் மேனேஜர் ஆக வேலை பார்க்கிறான். இவ்வளவு சாதாரணமாக இருக்கும் மிஸெஸ் வர்மாவுக்கு ரேகா போன்ற வர்களை முகத்திற்கு நேராக விமரிசனம் செய்யும் துணிச்சல் எப்படி வந்தது? ஒரு வேளை அமைச்சருக்கு உறவாக இருப்பதால் அந்த தைரியம் வந்திருக்குமோ.

ஜெயந்தி போனபோது மிஸெஸ் வர்மா வீட்டில் இருக்க வில்லை. முன்னறையில் எதிர்பட்ட மிஸ்டர் வர்மா மலர்ந்த முகத்துடன், அளவுக்கு மீறிய மரியாதை கலந்த குரலுடன் ''வாங்க... வாங்க'' என்று வரவேற்றான்.

மிஸ்டர் வர்மாவை ஜெயந்தி எற்கனவே இரண்டு மூன்று தடவை பார்த்திருக்கிறாள். எதிராளிக்கு மரியாதை கொடுத்து ரொம்ப பண்பாக பேசுவான். வயது நாற்பது தாண்டியிருக்கும். தலைமுடி கொட்டிப்போய் வழுக்கை வந்து விட்டது.

''மிஸெஸ் வர்மாவை பார்க்கணும்.'' ஜெயந்தி சொன்னாள்.

''இப்போ வந்து விடுவாள். கடைத்தெருவுக்கு போயிருக் கிறாள்.''

''வெளி ஊருக்கு போவதாக சொன்னாங்க.''

''இல்லை. பிரோகிராம் கான்சல் ஆகிவிட்டது. ஊருக்குப் போகப் போவதில்லை.''

''அப்படியானால் நான் நாளை வருகிறேன்.'' ஜெயந்தி எழுந்து கொள்ளப் போனாள்.

''நோ... நோ... காபி குடித்து விட்டுப் போகலாம். அதற்குள் அவளும் வந்து விடுவாள்.''

ஜெயந்தி மறுபடியும் நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். மிஸ்டர் வர்மா உள்ளே போய் காபிக்கு சொல்லிவிட்டு வந்தான்.

''சமீபத்தில் நான் டில்லிக்கு போன போது ஓவியம் ஒன்று வாங்கி வந்தேன். பார்க்கறீங்களா? உங்களுக்கு ஓவியம் என்றால் பிடிக்கும் தானே?'' வர்மா கேட்டான்.



என்ன சொல்வது என்று தெரியாமல் ஜெயந்தி தலையை அசைத்தாள்.

''உள்ளே வாங்க. உள்ளே சுவற்றில் மாட்டியிருக்கிறோம்.''

விருப்பம் இல்லாவிட்டாலும், மறுப்புச் சொன்னால் மரியாதைக்குறைவாக இருக்கும் என்று நினைத்து உள்ளே போனாள். படுக்கை அறையில் சுவற்றில் மாட்டப்பட்டு இருந்தது அந்த ஓவியம். அஸ்தமிக்கும் சூரியன்..... நதியில் படகு போவது போன்ற ஓவியம். உண்மையிலேயே ரொம்ப அழகாக இருந்தது.

''ராமூ! காபி இங்கே கொண்டு வா.'' ஜெயந்திக்கு பின்னால் நின்றிருந்த வர்மா வேலைக்காரனுக்கு குரல் கொடுத்தான்.

''உட்காருங்க. காபி சாப்பிடலாம்.''

''இங்கேயா?'' ஜெயந்தி பார்வையை சுழற்றிக் கொண்டே சொன்னாள். மிஸெஸ் வர்மா வீட்டில் இல்லை. வர்மா நல்லவனாகவே இருக்கலாம். ஆனாலும் இப்படி படுக்கை அறையில் உட்கார்ந்து கொண்டு காபி அருந்துவது ஜெயந்திக்கு ஏனோ பிடிக்கவில்லை.

''உட்காருங்கள்.'' கட்டிலுக்கு பக்கத்தில் இருந்த நாற் காலியை நகர்த்திக்கொண்டே சொன்னான்.

''தாங்க்ஸ்.'' ஜெயந்தி உட்கார்ந்து கொள்ளாமலேயே வர்மா நீட்டிய கோப்பையை பெற்றுக் கொண்டாள்.

வர்மா ஒரு நிமிடம் கழித்து திடீரென்று ஏதோ யோசனை வந்தாற்போல் ''ராமூ!'' என்று குரல் கொடுத்தான். சற்று முன் காபி கொடுத்து விட்டுப் போன வேலைக்காரன் மறுபடியும் வந்தான்.

''போய் இரண்டு பான் வாங்கிக் கொண்டு வா.'' சட்டைப் பையிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தான்.

''வேண்டாம்... வேண்டாம்.'' காபி அருந்திக் கொண்டிருந்த ஜெயந்தி மறுப்பது போல் சொன்னாள்.

''பரவாயில்லை, எப்படியும் எனக்கு சிகரெட் வேண்டும். போ ராமு! ஒரு சிகரெட் பாக்கெட்டும் வாங்கிக்கிட்டு வா.''

ராமு தலை நிமிர்ந்து கூட பார்க்காமல் பணத்தை வாங்கிக் கொண்டு போய்விட்டான். வீடு முழுவதும் நிசப்தமாக இருந்தது வர்மா, ராமு போனதும் பின்னாலேயே ஹாலுக்குச் சென்று மறுபடியும் உள்ளே வந்தான்.

'நான் கிளம்புகிறேன். மறுபடியும் நாளை வருகிறேன்.'' ஜெயந்தி கிளம்ப முயன்றாள்.

'இருங்க... இருங்க... அவசரமாக போக வேண்டுமா என்ன? இந்த பேக்கை எங்கே வாங்கினீங்க?'' ஜெயந்தியின் அருகில் வந்து கையிலிருந்த பேக்கை எடுத்துக் கொண்டே கேட்டான்.

ஜெயந்தி திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். அவன் பேக்கை பார்க்கவில்லை. ஒரு மாதிரி சிரித்துக் கொண்டே ஜெயந்தியை பார்த்துக் கொண்டிருந்தான். பயத்தினால் ஜெயந்தியின் உடல் வெடவெடவென்று நடுங்கியது. இதயத்தை யாரோ அழுத்துவது போல் இருந்தது.

''அவ்வளவு பதட்டப்படுவானேன்? பயமாக இருக்கா?'' வர்மாவின் கைகள் பேக்கை எடுத்து பக்கத்தில் இருந்த நாற்காலியின் மீது போட்டுவிட்டு ஜெயந்தியின் தோள்கள் மீது படிந்தன. ஒரு நிமிடம் ஜெயந்தியின் உடலில் இருந்த இரத்தம் உறைந்து விட்டதுபோல் இருந்தது. வாயடைத்துப் போனவளாய் அப்படியே நின்றிருந்தாள்.

''உன் மனதில் என்ன இருக்கிறதோ அப்படியே உன் கண்களில் தெரிகிறது. அந்த கண்கள் என்றால் எனக்கு ரொம்ப பிடிக்கும்.'' அவன் கைகள் ஜெயந்தியின் தோள்களை மேலும் பலமாக அழுத்தின. ''கோவைப் பழம் போன்ற உன் இதழ்களை...'' என்று சொல்லிக் கொண்டே முன்னால் குனிந்தான். அவ்வளவுதான்! கன்னத்தில் பளாரென்று அறைவிழுந்தது.

ஜெயந்தியின் கண்கள் தீயை உமிழ்ந்துகொண்டிருந்தன. எதிர்பாராமல் கிடைத்த இந்த மறுப்புக்கு வர்மா திகைத்து



விட்டான். உடனே சமாளித்துக் கொண்டு இன்னொரு கன்னத்தைக் காட்டிக் கொண்டே ''எங்கே... இந்த கன்னத்திலும்'' என்றான்.

''ச்சீ... விடு என்னை.'' விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

''சும்மா எப்படி விடுவது? இவ்வளவு நல்ல வாய்ப்பு எனக்கு மறுபடியும் எப்போ கிடைக்குமோ.'' ஜெயந்தியை மேலும் அருகில் இழுத்துக் கொள்ளப்போனான்.

''விடு என்னை, இல்லாவிட்டால் சத்தம்போட்டு ஊரைக் கூட்டுவேன்.'' ஜெயந்தி திமிறிக் கொண்டே சொன்னாள்.

''உன்னால் முடிந்தால் சத்தம் போட்டு ஊரைக் கூட்டு. எனக்கு ஆட்சேபனை இல்லை. ராமு இப்போதைக்கு வர மாட்டான். வாசற்கதவை தாழிட்டு விட்டுதான் வந்தேன்.'' வர்மாவின் கைகள் மேலும் வலுவடைந்தன.

''விடு என்னை!'' தன்னை விடுவித்துக்கொள்ள முயன்ற ஜெயந்தி திடீரென்று குனிந்து பலத்தை முழுவதையும் பயன் படுத்தி வர்மாவின் கையைக் கடித்தாள்.

''அம்மா!'' வர்மா ஜெயந்தியை விட்டு விட்டு கையை பார்த்துக் கொண்டான்.

''மரியாதையாய் கதவைத்திற.'' எந்த நிமிடமும் நினைவு தப்பி விடுமோ என்ற நிலையில் இருந்தாள் ஜெயந்தி. எப்படியோ சக்தியை திரட்டிக் கொண்டு சமாளிக்க முயன்றாள்.

''உன்னைப் போன்றவர்களை வசப்படுத்திக் கொள்வது எனக்கு ரொம்ப பிடித்த விஷயம்.'' ஜெயந்தியை நோக்கி அடி எடுத்து வைத்துக் கொண்டே சொன்னான்.

ஜெயந்தி சட்டென்று நகர்ந்து கட்டிலுக்கு அந்தப் பக்கம் போனாள். அதற்குள் யாரோ வாசற்கதவைத் தட்டினார்கள். வேலைக்காரன் ராமு வந்திருப்பானாய் இருக்கும். ஜெயந்தி கண்களை மூடி மனதிலேயே பிரார்த்தனை செய்து கொண்டாள். ''கடவுளே! என்னைக் காப்பாற்று.''

"ராஸ்கெல்! சீக்கிரமாக வரத் தேவையில்லை என்று சொல்லியிருந்தேனே. இருந்தாலும் உன்னைவிட மாட்டேன். ஒரு முறையாவது..." ஜெயந்தின் பக்கம் அடி எடுத்து வைத்து மேலும் நெருங்கினான். ஜெயந்திக்கு தப்பித்துக் கொள்ளும் வழி தெரியவில்லை. முதுகிற்கு பின்னால் சுவர் இடித்தது. சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டாள். பலத்தை முழுவதுமாக திரட்டிக் கொண்ட ஜெயந்தி வர்மாவிடமிருந்து தப்பித்துக்கொண்டு வாசற் கதவை எப்படி திறப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

"ராமூ! ராமூ!" வெளியிலிருந்து மிஸெஸ் வர்மாவின் குரல் எரிச்சலுடன் கேட்டது. தொடர்ந்து கதவை படபடவென்று தட்டும் ஓசை.

இருவரும் திடுக்கிட்டார்கள். ஜெயந்தி கண் இமைக்காமல் வர்மாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

வர்மா என்ன நினைத்துக் கொண்டானோ என்னவோ, ஜெயந்தியை ஒரு முறை பார்த்துவிட்டு கதவைத் திறப்பதற்காக வெளியே போகப் போனான். வாசல் வரை சென்றவன் நின்று பின்னால் திரும்பி "என் பார்வையில் பட்ட எந்தப் பெண்ணும் இதுவரையில் தப்பித்துக் கொண்டு போனதில்லை. நீயும் இதற்கு விதிவிலக்கு அல்ல. எதுவும் நடக்காதது போல் அமைதியாக வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொள்."மிரட்டுவது போல் சொல்லிவிட்டு போனான்.

இதற்குள் கதவு மேலும் பலமாக தட்டப்பட்டது. ஜெயந்தி தள்ளாடிக் கொண்டே வந்து நாற்காலியில் சரிந்தாள்.

'நல்ல வேளை! மிஸெஸ் வர்மா கடவுளைபோல் வந்து காப்பாற்றினாள். இல்லாவிட்டால் இன்று தன்னுடைய நிலைமை என்னவாகியிருக்குமோ!' ஜெயந்தியின் உள்ளம் நடுங்கியது.

"நீங்க உள்ளேதான் இருக்கீங்களா? பதில் குரல்கூட கொடுக்காமல் என்ன செய்துகிட்டு இருந்தீங்க? ராமூ எங்கே போனான்?" மிஸெஸ் வர்மா உள்ளே வந்து கொண்டே கேட்டாள்.



காலடிச் சத்தம் கேட்டதும் ஜெயந்தி எழுந்து நின்று கொண்டாள்.

"நீயா!" இரண்டு கைகளில் பாக்கெட்டுகளுடன் வந்த மிஸெஸ் வர்மா வாசற்படியிலேயே நின்று விட்டாள்.

மிஸெஸ் வர்மா தனியாக வரவில்லை. மிஸெஸ் கருணாகரனும் வந்திருந்தாள். இருவரும் கண்கள் அகல விரிய விநோதப் பிராணியை பார்ப்பதுபோல் ஜெயந்தியை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"நான்... நான்..." ஜெயந்தி ஏதோ சொல்ல முயற்சி செய்தாள். ஆனால் வாயிலிருந்து வார்த்தை வர மறுத்தது.

மிஸெஸ் கருணாகரன், மிஸெஸ் வர்மா ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"நான்... நான் கையெழுத்து வாங்க வந்தேன். இங்கே... எதுவும் நடக்கவில்லை. நீங்க தவறாக புரிஞ்சுகிட்டு இருக்கீங்க." திடீரென்று ஜெயந்தி நாற்காலியில் சரிந்து இரண்டு கைகளிலும் முகத்தை புதைத்துக் கொண்டு விசும்பி விசும்பி அழத் தொடங்கினாள்.

"ராமூ! ராமூ!" மிஸெஸ் வர்மா உரத்தக்குரலில் கோபமாக கத்தினாள்.

"ராமூ இல்லை. சிகரெட் வாங்க போயிருக்கிறான். நீ கதவைத் தாழ் போட்டுக் கொள். எனக்கு வேலை இருக்கிறது. நான் போய் வருகிறேன்." வர்மாவின் குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து செருப்பு அணிந்து கொண்டு வெளியேறிய சத்தமும் கேட்டது.

எப்படியோ சக்தியை திரட்டிக்கொண்டு அழுகையை கட்டுப்படுத்திக் கொண்டாள் ஜெயந்தி.

சற்று நேரம் கழித்து மிஸெஸ் வர்மா உள்ளே வந்தாள். இந்த முறை மிஸெஸ் கருணாகரன் உடன் வரவில்லை.

ஜெயந்தி பேக்கிலிருந்து பேப்பர்களை எடுத்து மிஸெஸ் வர்மாவிடம் நீட்டினாள். சிவந்து விட்ட கண்களுடன் ''என் தவறு எதுவும்..... அவர்தான்...'' என்று ஏதோ சொல்லப் போனாள்.

''நீ என்னிடம் எதுவும் சொல்ல தேவையில்லை. நாளைக்கு கமிட்டியில் பார்த்துக் கொள்கிறேன்.'' கையெழுத்து போட்டு விட்டு பேப்பர்களை திருப்பி தந்து விட்டாள்.

''அப்படி என்றால்?''

''நாளைக்கு உனக்கே புரியும்.'' மிஸெஸ் வர்மாவின் குரலில் சீற்றம் வெளிப்பட்டது.

அந்த வீட்டிலிருந்து எப்படி வெளியேறினாளோ பஸ்ஸை பிடித்து எப்படி வீட்டுக்கு வந்தாளோ அவளுக்கே தெரியவில்லை. வீட்டுக்கு வந்ததும் கட்டிலில் சரிந்தாள். கடவுளே! இன்று விடிந்ததும் யார் முகத்தில் விழித்தேன்? செய்யாத தவறுக்கு தண்டனையா? நல்ல வேளை! மயிரிழையில் ஆபத்திலிருந்து தப்பித்துக் கொண்டு விட்டாள்.

ஜெயந்திக்கு திடீரென்று நினைவு வந்தது. பாட்டிக்காக சாத்துக்குடி பழம் வாங்கி வரவேண்டும் என்று எண்ணியிருந்தாள். இந்த ரகளையில் அறவே மறந்து போய் விட்டாள். ச்சீ.. ச்சீ... என்ன மனிதர்கள்? ஒரு பெண் வீட்டை விட்டு வெளியே வந்தால் இத்தனை பிரச்சனைகளா? நாளைக்கு யாருக்கும் எந்த வாய்ப்பும் தராமல் வேலையை ராஜிநாமா செய்து விட்டால்? ஊஹும். அப்படிச் செய்தால் ஏதோ நடந்திருக்கும் என்று அவர்கள் நினைப்பதை உறுதிப்படுத்துவது போல் ஆகிவிடும். நடந்தது என்னவென்று மிஸெஸ் வர்மாவிடம் தைரியமாக சொல்ல வேண்டும். தான் சொல்வதை காது கொடுத்து கேட்டுக் கொள்வாளா? கேட்டாலும் சரி... கேட்காவிட்டாலும் சரி. விளக்கம் தருவது தன்னுடைய கடமை.

''என் பார்வையில் பட்ட எந்தப் பெண்ணும் இதுவரையில் தப்பித்துக் கொண்டு போனதில்லை.'' வர்மாவின் குரல் இன்னும் காதில் ஒலிப்பது போல் இருந்தது.



ஜெயந்தியின் முதுகெலும்பில் நடுக்கம் பரவியது. அந்தக் கயவனின் பார்வையில் விழுந்த பின் இனி தான் தனியாக வெளியில் போய் வருவது நல்லது இல்லை. வனிதா விஹார் செகரெட்ரியாக தான் ஜெயித்தது என்ன? இப்போ நடந்தது என்ன?

ஜெயந்தி அன்று இரவு தூங்கவே இல்லை.

# 7

மறுநாள் ஜெயந்தி வேலைக்கு போகவில்லை. தன்னுடைய உடல் நிலைமை சரியாக இல்லை என்றும் இரண்டு நாட்கள் விடுமுறை வேண்டுமென்றும் ஜெயந்தி வனிதா விஹாருக்கு தகவல் அனுப்பினாள். எந்த சாமி வரம் கொடுத்ததோ தெரிய வில்லை. சுமித்ரா உடனே சம்மதம் தெரிவித்து விட்டாள். இரண்டு நாட்கள் கழித்து ஜெயந்தி வனிதா விஹாருக்கு வந்தாள். அவள் பயந்தாற்போல் யாரும் எதுவும் சொல்லவில்லை. மிஸெஸ் வர்மா நான்கு நாட்கள் கழித்து வந்தாள். அவளைப் பார்த்ததும் ஜெயந்தி நடுங்கி விட்டாள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. மிஸெஸ் வர்மா ஜெயந்தியிடம் முன் போல் சகஜமாக பேசவில்லை அவ்வளவுதான்.

ஒரு வாரம் கழிந்துவிட்டது. ஜெயந்தி வழக்கம்போல் தன் வேலையை பார்த்துக்கொள்ள ஆரம்பித்தாள். ஒரு நாள் மதியம் அந்த மாதத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய விவரங்களை டைப் செய்து கொண்டிருந்தாள். அப்பொழுது போன் ஒலித்தது. டைப் செய்வதை நிறுத்திவிட்டு ஜெயந்தி போனை எடுத்து ''ஹலோ'' என்றாள்.

''ஹலோ! யார் பேசுறீங்க?'' மறுமுனையில் ஆண்குரல் கேட்டது.

''வனிதா விஹார் செகரெட்ரி ஜெயந்தி பேசுகிறேன்.''

'ஜெயந்தி! நீதானா? நான்தான் வர்மா. உன்னுட பேசவேண்டும் என்று நான்கு நாட்களாக முயற்சி செய்கிறேன்.'

ஜெயந்தி ரிசீவரை வைத்துவிடலாம் என்று நினைத்தாள்.

''ஹலோ ஜெயந்தி! என்னை மன்னித்துவிடு. அவசரப்பட் விட்டேன். என் மனைவி அங்கே வந்து எந்த ரகளையு செய்யவில்லை இல்லையா? செய்யக்கூடாது என்று வார்னி கொடுத்திருக்கிறேன்.''

மிஸெஸ் வர்மா மௌனமாக இருந்ததற்கு காரண இதுதானா?

''இப்போ என் மனைவி ஒன்றும் சொல்லமாட்டாள் அப்போதே சொல்லியிருப்பேன். ஆனால் பக்கத்தில் மிஸெ கருணாகரனும் இருந்ததால் என்னால் எதுவும் சொல் முடியவில்லை. அதான் வெளியே போய்விட்டேன். என் மனை உன்னை வீட்டுக்கு அழைப்பாள். என் மீது கோபம் எதுவு வைத்துக் கொள்ளாமல் வீட்டுக்கு வா. சரிதானா.''

கோபத்தில் ஜெயந்தி பற்களை கடித்தாள்.

''போகட்டும் எங்க வீட்டுக்கு வருவதில் உனக் ஆட்சேபனை இருந்தால் நானே வெளியில் எங்கேயாவது...''

ஜெயந்தி ரிசீவரை படீரென்று வைத்துவிட்டாள். எவ்வள தைரியம்? நாற்பது வயது தாண்டிய பிறகு நாய்குண என்பார்கள். அது உண்மைதானோ. முதலில் எவ்வளவு பண்ப பேசினான்? ச்சீ.. ச்சீ.. நினைக்கும்போதே ஜெயந்திக்கு வெறு பாக இருந்தது. உலகில் எல்லா ஆண்களுமே இப்படித்தா இருப்பார்களா?

ஜெயந்தி டைப் செய்வதை நிறுத்திவிட்டு கன்னத்தி கையை பதித்து யோசித்துக் கொண்டிருந்தாள். மிகவு கண்டிப்பாக இருக்கும் மிஸெஸ் வர்மா இந்த விஷயத்தி கணவனிடம் எப்படி அடங்கிப்போனாள் என்று ஜெயந்திக் புரியவில்லை.



[stamp] ...ரா, செ...

யோசித்துக் கொண்டே பதுமையை போல உட்கார்ந் திருந்தாள் ஜெயந்தி.

''என்ன செய்துகிட்டு இருக்கிறாய்?'' என்று கேட்டுக் கொண்டே சுமித்ரா உள்ளே வந்தாள்.

சுமித்ராவைப் பார்த்ததும் திடுக்கிட்ட ஜெயந்தி மறுபடியும் வேகமாக டைப் செய்யத் தொடங்கினாள். அந்த அம்மாள் மேஜை அருகில் பேப்பர்களை புரட்டிப் பார்த்துக்கொண்டே ''ஜெயந்தி! உன்னிடம் கொஞ்சம் பேசவேண்டும். அந்த சத்தத்தை கொஞ்சம் நிறுத்து'' என்றாள்.

ஜெயந்தி பதட்டமாக உணர்ந்தாள். கைகளில் வியர்வை படிந்தது. டைப் செய்வதை நிறுத்தினாளே தவிர பேப்பரை விட்டு பார்வையை எடுக்கவில்லை. நிமிர்ந்து பார்க்கும் துணிச்சல் இருக்கவில்லை. சுமித்ராவின் வாயிலிருந்து வெளியேறப் போகும் வார்த்தைகளுக்காக காத்திருந்தாள்.

''இதோ பார் ஜெயந்தி! மூன்று நாட்களுக்கு முன்பு என் சித்தி மகன் பிரபாகரை உனக்கு அறிமுகப்படுத்தி வைத்தேன். நினைவு இருக்கு இல்லையா.''

ஜெயந்திக்கு போன மூச்சு திரும்பி வந்தது. மூன்று நாட்களுக்கு முன் கருப்பாக, உயரமாக, ஹிப்பி போன்ற தலைமுடியுடன் இருந்த ஒரு நபரை சுமித்ரா தன்னுடைய ஒன்றுவிட்ட தம்பி என்று அறிமுகப்படுத்தி வைத்தாள். சின்னக் குழந்தைகள் அவனை இருட்டில் பார்த்தால் பயந்து அலறுவது நிச்சயம். அப்படிப்பட்ட தோற்றம்.

இப்போ அவனைப்பற்றிப் பேச வேண்டிய அவசியம் என்னவென்று ஜெயந்தி யோசித்துக் கொண்டிருந்தபோதே சுமித்ரா மேலும் சொன்னாள்.

''அவனுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. உன்னைப் பார்த்ததும் அவனுக்கு பிடித்துப் போய்விட்டதாம். சென்ட்ரல் கவர்ன்மெண்டில் வேலை பார்க்கிறான். நல்ல சம்பளம்.''

ஜெயந்தி டைப்ரைட்டரை, பேப்பர்களை எல்லாவற்றையும் மறந்து விட்டு கண்கள் அகல விரிய சுமித்ரா பக்கம் திரும்பி கேட்டுக் கொண்டிருந்தாள்.

''வரதட்சணை எதுவும் வேண்டாம் என்று சொல்லி விட்டான்.''

ஜெயந்திக்கு மூளை கலங்கிவிட்டது போல் இருந்தது.

''ஒருமுறை உங்க பாட்டியிடம் என்னையும், அவனையும் அழைத்துக்கிட்டு போனாய் என்றால் மற்ற விஷயங்களையும் பேசிவிட்டு, முஹூர்த்தத்தையும் முடிவு செய்து விடலாம்.'' மேஜை மீது இருந்த பேப்பர்களை அடுக்கிக்கொண்டே சுமித்ரா சொன்னாள்.

ரொம்ப நேரம் வரையில் ஜெயந்திக்கு வாயிலிருந்து வார்த்தை வெளிவரவில்லை. வனிதா விஹார் செகரெட்ரியாக இருந்தால் இது போன்ற பிரச்னைகளையும் எதிர்கொள்ள வேண்டுமா என்ன?

''ரொம்ப நல்ல இடம். அசல் அவனுக்கு எந்தப் பெண்ணையும் லேசில் பிடிக்காது. உன்னைப் பிடித்திருக்கிறது என்று அவன் சொன்னபோதே நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி என்று நினைத்தேன்.''

''ஆனால்...... ஆனால்...'' ஜெயந்தி தயங்கினாள்.

''ஆனால் என்ன?''

''எனக்கு இப்போ உடனே கல்யாணம் செய்து கொள்ளும் எண்ணம் இல்லை.''

''அது உங்க பாட்டி முடிவு செய்ய வேண்டிய விஷயம்.''

''இது நாள் வரையில் எனக்கும் எங்க பாட்டிக்கும் ஒரே அபிப்பிராயம்தான்.''

''சரி. உன் விருப்பம். நன்றாக யோசித்துப் பார்த்துக் கொள். எதுவும் தானாக தேடி வந்தால் அதனுடைய மதிப்பு தெரியாது.



இந்த விஷயத்தில் நீ உன் பாட்டியிடம் கேட்டுச் சொன்னால் நன்றாக இருக்கும்.''

''பாட்டியும் நான் சொல்வதைத்தான்...''

''சரி. நான் வருகிறேன். வேலை இருக்கிறது.'' பாதியிலேயே இடைமறிப்பது போல் சொல்லி விட்டு சுமித்ரா அந்த அறையை விட்டு வெளியேறினாள்.

ஜெயந்திக்கு அழுவதா இல்லை சிரிப்பதா என்று தெரியவில்லை.

மேலும் இரண்டு நாட்கள் கழிந்தன. அன்று ஜெயந்திக்கு வேலை நிறைய இருந்தது. டைப் செய்ய வேண்டியது, பதில் எழுத வேண்டியவை நிறைய இருந்தன.

ஜெயந்தி குனிந்த தலை நிமிராமல் வேலை செய்து கொண்டிருந்தாள். மாலையாகி விட்டது. இன்று காலையிலேயே பாட்டிக்கு உடல்நிலை சரியாக இல்லை. டாக்டரிடம் காட்டிய போது, முழு ஓய்வு தேவை என்று சொன்னார். டானிக், பழம் எல்லாம் சாப்பிட வேண்டுமாம். சமீப காலமாய் பாட்டிக்கு அடிக்கடி நெஞ்சுவலி வந்து கொண்டிருந்தது. இன்று சீக்கிரமாக வந்து விடுவதாகவும், வீட்டு வேலை எதுவும் செய்ய வேண்டாம் என்றும், கட்டிலை விட்டு எழுந்து கொள்ளக்கூடாது என்றும் பாட்டியை எச்சரித்து விட்டு வந்திருந்தாள். அதான் சீக்கிரமாக வேலையை முடித்துக் கொண்டு வீட்டுக்குக் கிளம்ப முற்பட்டாள்.

அந்த நேரத்தில் சுமித்ரா அரைக்குள் வந்தாள். இரண்டு நாட்களுக்கு முன்பு பிரபாகரை வேண்டாமென்று சொன்னதி லிருந்து சுமித்ரா ஜெயந்தியிடம் சுமுகமாக பேசவில்லை. எதற்கெடுத்தாலும் எரிந்து விழுந்து கொண்டிருந்தாள்.

''ஜெயந்தி! மிஸெஸ் வர்மா போன் செய்தாள். உன்னை மாலையில் வீட்டுக்கு வரச்சொன்னாள். போய் வா'' என்றாள்.

குனிந்து பேப்பர்களை அடுக்கிக் கொண்டிருந்த ஜெயந்தி நிமிர்ந்தாள். ''நானா?'' என்றாள்.

'பின்னே? என்னைப் போகச் சொல்கிறாயா?''

''நான் போகமாட்டேன்.'' பதில் சொன்னாள் ஜெயந்தி.

''அப்படி என்றால் என்ன அர்த்தம்?''

'எந்த அர்த்தமும் இல்லை. இனிமேல் நான் இதுபோல் யார் வீட்டுக்கும் போக மாட்டேன்.''

''என்ன? புதிதாக சொல்கிறாயே? வேலையில் சேரும் போதே சொல்லியிருந்தேன். நேற்று வரையில் போனவளுக்கு இன்னிக்கு என்ன வந்தது?'' வாசற்படி வரையில் சென்ற சுமித்ரா பின்வால் திரும்பிப் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

''அதில் பல பிரச்னைகள் இருக்கு.'' சுமித்ராவுடன் சண்டை போடுவதில் ஜெயந்திக்குக் கொஞ்சம்கூட விருப்பம் இல்லை.

''பிரச்னையா! என்ன பிரச்னை?'' ஜெயந்தியை தலை முதல் கால் வரையில் பரிசீலித்துக் கொண்டே கேட்டாள்.

ஜெயந்தி பதில் சொல்லவில்லை.

''நாம் ஒழுங்காக இருந்தால் எந்த பிரச்னையும் வராது. அதைப் பற்றி எனக்கென்ன? நீ போய்த்தான் ஆக வேண்டும்.''

''போகா விட்டால்?'' கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டே கேட்டாள்.

''வேலை போய்விடும்.''

ஜெயந்தி கற்சிலையாக அசைவற்று அப்படியே நின்று விட்டாள்.

''இப்பொழுதே சொல்கிறேன். நன்றாக கேட்டுக்கொள். உன் நடத்தை சரியாக இல்லை என்று தெரிந்தும் கண்டும் காணாதது போல் இருக்கிறோம். அதை சலுகையாக எடுத்துக் கொண்டு இஷ்டம் வந்தாற்போல் ஆடலாம்னு நினைக்காதே. உனக்கு விருப்பம் இல்லை என்றால் வேலையை விட்டு போய்க்கொள். அவ்வளவுதானே தவிர இங்கே இருந்து கொண்டு, எங்களிடம் கையை நீட்டி சம்பளமும் வாங்கிக் கொண்டு எங்களையே எதிர்த்துப் பேசினால் சும்மா இருக்க மாட்டோம்.''



''கொஞ்சம் இருங்க. இப்போதே ராஜிநாமா கடிதம் எழுதித் தருகிறேன்.'' திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவள் போல் ஜெயந்தி சொன்னாள்.

''தாராளமாக கொடு. நாளை இந்நேரத்திற்கு உன் இடத்தில் இன்னொருத்தரை போடவில்லை என் பெயர் சுமித்ரா இல்லை. சாப்பாட்டுக்கு வழியில்லாமல் வேலை செய்ய வந்தவளுக்கு.....''

''ப்ளீஸ்! நீங்க அனாவசியமாக பேசவேண்டாம். நான் ராஜிநாமா கடிதம் தந்து விடுகிறேன்.'' சுமித்ராவின் பேச்சை இடைமறித்து விட்டு, ஜெயந்தி பேப்பரை எடுத்துக் கொண்டு வேகமாக எழுதத் தொடங்கினாள்.

## 8

வனிதா விஹார் என்று எழுதப்பட்டிருந்த கேட்டைத்தாண்டி சூறாவளி காற்றாய் வெளியேறினாள் ஜெயந்தி. சற்று தொலைவில் இருந்த பஸ் ஸ்டாண்டை நோக்கி வேக வேகமாக நடக்கத் தொடங்கினாள். கவனமாக பார்த்தால் அவள் உடல் ஏதோ ஆவேசத்தினால் நடுங்குவது புரியும். முகம் சிவந்து கன்றி இருந்தது. விழிகளில் சுழன்ற நீரை கட்டுப்படுத்த முயற்சிப்பது போல் கீழ் உதட்டை பற்களால் அழுத்திக் கொண்டிருந்தாள்.

''பாழாய் போன பஸ். நமக்கு தேவை என்ற போதுதான் வராது.'' சுற்று வட்டாரத்தில் ரிக்ஷாகூட கண்ணில் படவில்லை. மனதில் எழும்பிய எரிச்சலை அடக்கிக் கொண்டே பஸ் ஸ்டாபில் நின்றிருந்தாள்.

''அவசரப்பட்டுவிட்டாய். நல்ல வேலையை யாராவது கைநழுவ விடுவார்களா?'' உள்மனம் முணுமுணுக்கத் தொடங்கியது.

''அவசரப்பட்டு விட்டேனா? அதுவும் ஒரு வேலையா? ஒவ்வொரு நிமிடமும் தன்மானத்தை அடக்கிக் கொண்டு,

அவர்கள் செய்யும் ஏளனங்களை பொறுத்துக் கொண்டு இத்தனை நாள் பொறுமையாக அந்த வேலையை செய்தது பெரிய விஷயம்.'' பஸ் வரும் திசையை பார்த்துக் கொண்டிருந்த ஜெயந்தி உள்மனதை கடிந்து கொண்டாள்.

''ஆனால் உன் தன்மானம் சாப்பாடு போடாது. அதை மறந்து விட்டாயா?''

''சாப்பாடு போடாவிட்டால் பரவாயில்லை. பட்டினி கிடக்கிறேன்.''

''உன்னால் பட்டினி கிடக்கமுடியும். ஆனால் பாட்டி விஷயம் அப்படி இல்லையே. ஏற்கனவே நெஞ்சுவலிக்காரி. உனக்கு இந்த வேலை கிடைத்த பிறகுதான் கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறாள்.'' உள்மனம் எச்சரித்தது.

உண்மைதான். பாட்டிக்கு என்ன பதில் சொல்வது? இயலாமை ஜெயந்தியை வாட்டியது. உடனே கோபமும் வந்தது. பாட்டியிடம் உடனே சொல்ல வேண்டிய அவசியம் என்ன? வேறு வேலை கிடைத்த பிறகு நிதானமாக தெரிவித்தால் போதும்.

உடனே வேறு வேலை கிடைப்பது என்றால் நடக்கிற காரியமா?

பர்ஸில் இருந்த பத்து ரூபாய் நோட்டும், சில்லரையும் ஜெயந்தியின் கண்முன்னால் தோன்றின. உடனே விழிகளில் நீர் சுழன்றது. தனக்கென்ன தெரியும்? வனிதா விஹாருக்கு செகரெட்ரியாக இருந்தால் பெரிய மனிதர்களுடன் அறிமுகம் ஏற்படும். தானும் ஒரு நல்ல நிலையை அடைய முடியும் என்று நினைத்தாள். அங்கே இருப்பவர்கள் பொறாமை பிடித்தவர்கள் என்றும், பணம் பதவி இருந்தால் தவிர எதிராளியை மதிக்க மாட்டார்கள் என்று தெரிந்து கொள்ளாமல் போய்விட்டாள்.

முட்டாள்கள்! வடிகட்டின முட்டாள்கள்!

எதிராளியும் தம்மை போல்தான் என்று நினைக்க மாட்டார்கள். தன் விஷயம் இருக்கட்டும். அவர்களுக்குள்ளேயே



எத்தனை சண்டை சச்சரவு? முதுகிற்கு பின்னால் எத்தனை ஏச்சு பேச்சுக்கள்? கூசாமல் பொய் சொல்வதோடு தன்னையும் அதில் இழுத்துக் கொண்டார்கள். அதைக்கூட தான் பொருட்படுத்த வில்லை. ஆனால் வர்மா வீட்டில் நடந்த நிகழ்ச்சியை நினைத் தால் உடல்மீது கம்பளிப் பூச்சி ஊர்வது போல் அருவருப்பாக இருந்தது. பண்பாக இருப்பது போல் முகத்திரையைப் போட்டுக் கொள்ளும் அரக்கர்கள்!

யோசனையில் ஆழ்ந்து போய் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்த ஜெயந்தி தன் பக்கத்தில் கருப்பு நிற கார் வந்து நின்றதையோ அதிலிருந்து வெள்ளை உடைகள் அணிந்திருந்தவன் ''ஹலோ!'' என்று சொன்னதையோ கவனிக்கவில்லை.

''ஹலோ! உங்களைத்தான். நின்று கொண்டே தூங்கறீங்களா என்ன?''

ஜெயந்தி பார்வையை திருப்பினாள். எதிரே காரில் டிரைவிங் சீட்டில் ராஜசேகர்! ஜெயந்தி சட்டென்று கண்களில் தூசி விழுந்தது போல் கண்களை அழுத்தித் துடைத்துக் கொண்டாள். ஆனால் வெள்ளம்போல் பொங்கிய கண்ணீர் துடைக்கத் துடைக்க மேலும் பெருகிக் கொண்டிருந்தது. ராஜசேகர் பார்வையிலிருந்து இது தப்பவில்லை.

''பஸ்ஸுக்காக வெயிட் பண்றீங்களா? வாங்க. டிராப் செய்கிறேன்.'' குனிந்து கார் கதவைத் திறந்து கொண்டே சொன்னான்.

''தாங்க்ஸ். தேவையில்லை.''

இந்த உலகில் முக்கியமாக இந்த சமயத்தில் ஜெயந்தி கனவில்கூட சந்திக்க விரும்பாத நபர் ராஜசேகர். அவன் சொன்ன ஜோதிடம் நினைவுக்கு வந்ததும் சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''வீட்டில் இறக்கிவிட்ட பிறகு தாங்க்ஸ் சொன்னால் போதும். வாங்க.''

வனிதா விஹாரில் எல்லோருக்கும் இருக்கும் திமிர்தான் இவனுக்கும் இருக்கிறது. தாங்கள் சொன்னதை எதிராளி ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

''வாங்க. டிராப் செய்கிறேன்.'' அவனுடைய கண்கள் ஜெயந்தியை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தன.

''நோ. தாங்க்ஸ்.'' கம்மிவிட்ட குரலில் சொன்னாள்.

''உங்களுக்கு மூட் சரியாக இல்லை போலிருக்கே.'' முறுவலித்துக் கொண்டே கேட்டான்.

ஜெயந்திக்கு உடல் பற்றி எரிவது போல் இருந்தது. தன்னுடைய மூட் எப்படி என்று கண்டு பிடிக்க எங்கிருந்தோ வந்து விட்டான். போகட்டும். காரில் போனால்தான் என்ன? பத்தே நிமிடங்களில் வீட்டுக்கு போய்ச் சேர்ந்து விடலாம்.

ஜெயந்தி வந்து காரில் உட்கார்ந்து கொண்டாள்.

''உங்களுக்கு கார் கதவைச் சாத்தி பழக்கம் இல்லை என்று நினைக்கிறேன். கொஞ்சம் பலமாக சாத்தணும்.'' ராஜசேகர் ஜெயந்தியின் பக்கம் லேசாக குனிந்து, கையை நீட்டி கதவை பலமாக சாத்தினான். அன்று நடந்தது அவனுக்கும் நினைவில் இருக்கு போலும்.

''ஏதாவது விசேஷங்கள் உண்டா?'' டிரைவ் செய்து கொண்டே கேட்டான்.

''உங்களுக்குத் தெரியாதது என்ன இருக்கும்?'' இன்று இல்லா விட்டாலும் நாளைக்காவது அவனுக்கு தான் ராஜிநாமா செய்த விஷயம் தெரியத்தான் போகிறது.

''உங்களை அன்றைக்கு வீட்டில் இறக்கிவிட்ட மறுநாளே நான் பெங்களூருக்கு சென்று விட்டேன். அங்கே டெக்ஸ்டைல் மில் ஒன்று தொடங்கப் போகிறோம். நடுநடுவில் வந்து இரண்டு மூன்று நாட்கள் இருந்தேன் என்றாலும், இங்கே நியூஸ் எதுவும் எனக்குத் தெரியாது.'' நிதானமாக பின்னால் சாய்ந்து கொண்டு ஒரு கையால் டிரைவ் செய்துகொண்டே ''உங்களைப் பார்த்தால் ஏதோ விசேஷம் இருக்கு என்று தோன்றுகிறது'' என்றான்.



ஜெயந்தி சரேலென்று தலையைத் திருப்பி அவன் பக்கம் பார்த்தாள். அவன் இந்தப் பக்கம் திரும்பவில்லை.

''உங்க வேலை எப்படி இருக்கு?''

''நீங்க சொன்ன ஜோதிடம் பலித்து விட்டது.''

''அப்படி என்றால்?'' தலையைத் திருப்பி அவளைப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

''நான் வேலையை ராஜிநாமா செய்துவிட்டேன்.'' விழிநீரை வலுக்கட்டாயமாக அடக்கிக்கொண்டே சொன்னாள்.

''எப்போ?'' சடன் பிரேக்குடன் கார் நின்று விட்டது. ராஜசேகர் ஜெயந்தி பக்கம் திரும்பினான்.

''ப்ளீஸ்! என்னை சீக்கிரமாக வீட்டில் இறக்கி விடுங்க. பாட்டிக்கு வேறு உடம்பு சரியாக இல்லை.'' அவன் பார்வையை தவிர்ப்பதற்காக முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

''ஐந்து நிமிடங்களில் இறக்கி விடுகிறேன். முதலில் நான் கேட்டதற்கு பதில் சொல்லுங்க. எப்போ ராஜிநாமா கொடுத்தீங்க?''

''இன்றுதான்... இப்பொழுதுதான்.'' பற்களை அழுத்திக் கொண்டு எப்படியோ பதில் சொல்லி விட்டாள். ஒரு பக்கம் தனக்கு அழுகை பொங்கி கொண்டு வருகிறது. அவனானால் தன்னை வீட்டில் இறக்கி விடாமல் காரை நிறுத்தி விட்டு நிதானமாக கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறான்.

''காரணம்?''

தலையைத் திருப்பி ஒரு வினாடி அவனைப் பார்த்த ஜெயந்தி சட்டென்று ஹேண்டிலை திருப்பி கதவைத் திறந்து கொண்டே ''தாங்க்ஸ். நான் நடந்து போய்க் கொள்கிறேன்'' என்றாள்.

''டைகாட்!'' ராஜசேகரின் கை சட்டென்று நீண்டு அவள் கைமீது பதிந்து ஹேண்டிலை திறக்க விடாமல் செய்தது.

வினாடிக்கும் குறைவான நேரம் இருவரின் கண்களும் சந்தித்து கொண்டன. ஜெயந்தியின் முகம் சிவந்து விட்டது. விழிகள் சுழன்ற நீர் எந்த நிமிடமும் கன்னத்தில் வழியக்கூடும். ரா சேகரின் கை அவனையும் அறியாமல் ஒரு வினாடி ஜெயந்தியின் கைமீது பலமாக பதிந்தது. உடனே கையை எடுத்து விட்டு கார ஸ்டார்ட் செய்தான். ஆனால் கார் ரொம்ப நிதானமாக போய் கொண்டிருந்தது. மாலை வேளை அஸ்தமிக்கும் சூரியனின் கிரணங்கள் இயற்கையை செஞ்சிவப்பு வண்ணத்தில் மூழ்கடி கிருந்தன.

நிதானமாக டிரைவ் செய்து கொண்டிருந்த ராஜசேக ஜெயந்தியின் பக்கம் பார்க்காமலேயே ''ஓ.கே. காரணத்தை சொல்ல உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் கேட் மாட்டேன். ஆனால் ராஜிநாமா கடிதத்தை யாரிடம் கொடு தீங்க?'' என்று கேட்டான்.

''சுமித்ராவிடம்.''

''சரி நாளை காலையில் அவளே சுயமாக வந்து கெஞ்சி உங்களை அழைத்துப் போவாள்.''

''தாங்க்ஸ். ஒரு முறை வேண்டாமென்று மறுத்துவிட்டு வந்த பிறகு மறுபடியும் அங்கே காலடி வைப்பது என்பது இந்த ஜென்மத்தில் நடக்காத காரியம்.'' ராஜசேகருக்கு இருந்த செல்வாக்கு அவளுக்குத் தெரியாதது இல்லை. ஆனால் அந்த தயாதர்மம் தனக்குத் தேவையில்லை.

''பின்னே என்ன செய்வதாக உத்தேசம்? வேறு வேலை கிடைக்கும் வரையிலாவது செய்யலாமே?''

''வேறு வேலை கிடைக்கும் வரையில் இதை செய்ய வேண்டும் என்று சட்டம் எதுவும் இல்லையே?''

ராஜசேகர் பதில் சொல்லவில்லை. சற்று நேரம் கழித்து மறுபடியும் அவளே சொன்னாள். ''உங்களால் முடிந்தால் வேறு எங்கேயாவது, எத்தனை சிறியதாக இருந்தாலும் சரி, தன்மானத் திற்கு இழுக்கு வராத வேலை ஏதாவது இருந்தால் சொல்லுங்க.''



''நான் காரை இங்கே நிறுத்தப் போகிறேன். தயவு செய்து தடை எதுவும் சொல்லாதீங்க.'' ராஜசேகர் காரை சாலையோரமாக நிறுத்திக் கொண்டே சொன்னான். இந்த முறை ஜெயந்தி ஆட்சேபனை எதுவும் சொல்லவில்லை. சாலை விளக்குகள் எரியத் தொடங்கின. அதன் வெளிச்சம் மரத்தின் கிளையினூடே ஊடுருவி ராஜசேகர் ஜெயந்திக்கு நடுவில் கோடாய் விழுந்து கொண்டிருந்தது. ஜெயந்தி பார்வையை அதன்மீது பதித்து மௌனமாகி இருந்தாள்.

''திடீரென்று வேலை எங்கே கிடைக்கும்?'' என்றாள்.

''தாமதம் ஆனாலும் பரவாயில்லை. நிச்சயமாக கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தால் போதும்.''

ராஜசேகர் மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தான். ஜெயந்திக்கு பர்ஸில் இருந்த பத்து ரூபாய் நோட்டும் சில்லரை யும் நினைவுக்கு வந்தது. தன்னால் என்னதான் செய்யமுடியும்? அப்படியும் பொறுமையை கடைபிடித்து வந்தாள். தான் காட்டிய பொறுமையை அவர்கள் இயலாமையாக எடுத்துக் கொண்டு விட்டார்கள்.

''போகட்டும் என்னிடம் செகரெட்ரியாக இருக்கலாமே?'' திடீரென்று சொன்னான் அவன்.

''பரிகாசம் செய்ய இது நேரம் இல்லை.'' ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது ஜெயந்திக்கு.

''அவ்வளவு முட்டாள் இல்லை நான். என் செகரெட்ரி ஊருக்கு போய் இருபது நாட்களுக்கு மேல் ஆகிறது. அவனுடைய தாய்க்கு உடல்நிலை சரியாக இல்லையாம். ஒரு மாதம் வரையில் வரமுடியாது என்று எழுதியிருக்கிறான். ஒரு வேளை நடுவில் அவன் வந்தாலும் உங்களுக்கு இன்னொரு வேலையை ஏற்பாடு செய்ய என்னால் முடியும்.''

ஜெயந்தி மௌனமாக இருந்து விட்டாள்.

''நாளைக்கு நானே நீங்க ரிஸைன் செய்த காரணத்தை தெரிந்து கொள்கிறேன். காரணம் சரியானதாக இருந்தால் என்னிடம் செகரெட்ரியாக நீங்க சேர்ந்து கொள்ளலாம்.''

ஜெயந்தி பேசவில்லை. நடப்பது கனவா இல்லை நினை என்று புரியாத நிலை.

''என்ன? உங்களுக்கு விருப்பம்தானா?''

''நான் செய்ய வேண்டிய வேலைகள் என்னென் இருக்கும்?''

ராஜசேகர் லேசாக முறுவலித்தான். ''வந்து பார்த்தா உங்களுக்கே புரியும். உண்மையாகவே உங்களை என்னுடை செகரெட்ரியாக எடுத்துக் கொள்ளப் போகிறேன்'' என்றான்.

''ஆனால் எல்லோரும்...'' பாதியிலேயே நிறுத்தி விட்டாள் அம்மாடியோவ்! வனிதா விஹாரில் இருப்பவர்களுக்கு இந் விஷயம் தெரிந்தால் தன்னை உயிரோடு விட்டு வைப்பார்களா?

''அந்த விஷயத்தை என்னிடம் விட்டு விடுங்கள்.''

பகை தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு அவ மனதில் மேலோங்கியது. ராஜசேகரை அவர்கள் எவ்வள மதிப்பார்களோ அவளுக்குத் தெரியும். அவனுக்கு இருக்கு பெ புகழைப் பற்றியும் அவள் அறிவாள்.

''ஆனா ஒரு நிபந்தனை. நீங்க எனக்கு ஒரு வாக்கு கொடுக்கணும்.'' ஜெயந்தி சொன்னாள்.

''என்ன?''

''எனக்கு எப்போ வேறு வேலை கிடைக்கிறதோ உடனே போக என்னை அனுமதிக்கணும்.''

ஜெயந்தியை ஒரு முறை பரிசீலிப்பது போல் பார்த் ராஜசேகர் காரை ஸ்டார்ட் செய்து கொண்டே ''சரி'' என்றான்.

ஜெயந்தி நிம்மதியாக மூச்சை விட்டுக் கொண்டாள் இன்னொரு வேலை கிடைக்கும் வரையில் பாட்டிக்கு தெரியாம சமாளித்து விடலாம் என்ற நினைப்புதான் மேலோங்கி இருந்தது.

ஐந்து நிமிடங்களில் வீடு வந்து விட்டது. ஜெயந்தி கார விட்டு இறங்கினாள்.



''போய் வருகிறேன். நாளை காலையில் கார் அனுப்பு கிறேன்.'' காரை ஸ்டார்ட் செய்யப் போன ராஜசேகர் சற்று குனிந்து பதுமையாக நின்றிருந்த ஜெயந்தியைப் பார்த்துக் கொண்டே ''என் ஜோதிடம் பலித்துவிட்டதற்கு என்னை சபிக்க மாட்டாய் இல்லையா?'' என்றான் அடுத்த நிமிடம் கார் கிளம்பிவிட்டது.

ஜெயந்தி சிலையாக நின்றுவிட்டாள். இது கனவா இல்லை நினைவா என்ற பிரமையில் ஆழ்த்துவது போல் அவன் நடந்து கொள்வது இது இரண்டாவது முறை.

## 9

அன்று இரவு படுத்துக் கொண்டாளே தவிர ஜெயந்தி கண்களை கொஞ்சம்கூட மூடவே இல்லை. என்ன நடக்கிறது? வாழ்க்கை தன்னை எந்தப் பக்கம் இழுத்துக் கொண்டு போகிறது? சுமித்ராவிடம் ராஜிநாமா கடிதத்தைக் கொடுத்தபிறகு மனம் நிலைகுலைந்து போனது உண்மைதான். ஆனால் முன் பின் தெரியாத ராஜசேகரிடம் தான் செகரெட்ரியாக இருப்பதாவது? இது உண்மைதானா? மூளை இருந்துதான் இந்த காரியத்தைச் செய்யப் போகிறாளா? எந்த விஷயத்திலும் யாரும் குற்றம் சொல்லாதபடி தான் கவனமாக நடந்து கொண்ட போதே அவர்கள் அப்படி வாய்க்கு வந்தபடி பேசினார்களே. இப்பொழுது ராஜசேகருக்கு செகரெட்ரியாக தான் இருந்தால் வேறு வினையே வேண்டாம். வேட்டை நாய்களை போல் தன்னை துரத்துவது நிச்சயம். ஜெயந்திக்கு பயத்தைவிட அவர்கள் என்ன செய்வார் களோ. பார்க்க வேண்டுமென்ற ஆர்வம் அதிகரித்தது.

அவர்களைப் பற்றி தான் கவலைப்படுவானேன்? இது போன்ற பிரச்னைகள் வரும் என்று ராஜசேகருக்குத் தெரியாதா? தெரியாமலேயே தன்னை செகரெட்ரியாக இருக்கச் சொல்வானா?

காரணம் என்னவென்று தெரியாதே தவிர வனிதா விஹாரில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் ராஜசேகரிடம் தனிப்பட்ட ஆர்வம் இருந்தது. அவன் சொல்லுக்கு மதிப்பும், மரியாதையும் இருந்தன. அவர்கள் அந்த அளவுக்கு மதிக்கும் நபரிடம் தான் ஒரு நாள் என்ன ஒரு நிமிடம்கூட செகரெட்ரியாக இருப்பதை அவர்கள் விரும்பமாட்டார்கள் என்பதை ஜெயந்தி உணர்ந்துதான் இருந்தாள். தெரிந்தபிறகும் வேண்டுமென்றே ராஜசேகருக்கு செகரெட்ரியாக செல்கிறாள். ஒரு பக்கம் அவர்கள் தன்னை அடக்கிவிட வேண்டுமென்று முயற்சி செய்தால் கடவுள் தனக்கு வேறொரு பக்கத்திலிருந்து மேலும் வலிமையுடன் அவர்களை எதிர்த்து நிற்கும் வாய்ப்பை தருகிறார். அவர்கள் வேலையிலிருந்து நீக்கிவிட்டாலும் தன்னால் சிறப்பாக வாழமுடியும் என்பதை அவர்களுக்கு நிரூபித்துக் காட்டவேண்டும்.

ஒரு மாதம் எப்படியாவது ராஜசேகரிடம் செகரெட்ரியாக காலம் தள்ளி விட்டால் போதும். அதற்குப் பிறகு அவன் மூலமாகவே வேறு வேலையை தேடிக் கொள்ளலாம். தனக்கு வேலை போய்விட்டதையோ, ராஜசேகரிடம் வேலைக்கு சேர்ந்ததையோ பாட்டியிடம் சொல்ல வேண்டிய அவசியம்கூட இருக்காது. கழுத்திலிருந்த சங்கிலியை விரலால் நெருடிக் கொண்டே யோசனையில் ஆழ்ந்த ஜெயந்தி தலையைத் திருப்பி பக்கத்தில் படுத்திருந்த பாட்டியைப் பார்த்தாள். ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போல் பாட்டியின் மூச்சு சீராக வந்து கொண்டிருந்தது.

ஜெயந்தி இதயத்திலிருந்து பெருமூச்சு ஒன்று வெளியேறியது. தான் இந்த வேலையில் சேர்ந்தது முதல் ஒரு விதமாக பாட்டி நிம்மதியாக இருந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும். மனிதனுக்கு அஷ்ட ஐஸ்வரியங்கள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. குறைந்தபட்சம் வேளைக்கு உணவு கிடைக்கவில்லை என்றால் எப்படி? அந்த நிலைமை ரொம்பவும் பயங்கரமானது. வெளி உலகில் தான் எவ்வளவு வேண்டுமானாலும் கஷ்டப்படத் தயாராக இருக்கிறாள். எந்தப் பிரச்னை வந்தாலும் தன்னால்



தைரியமாக எதிர்கொள்ள முடியும். ஆனால் வீட்டில் பாட்டிக்குக் கிடைக்கும் இந்த நிம்மதியை இழக்க தன் உடலில் உயிர் இருக்கும் வரையில் சம்மதிக்க மாட்டாள். வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் கணவனை இழந்து, மகனை, மருமகளை பறிகொடுத்து பொருளாதார ரீதியாக குடும்பம் நலிந்து எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்து விட்டாள். குறைந்த பட்சம் இந்த வயதான காலத்திலாவது கொஞ்சம் நிம்மதியாக வாழவேண்டும். வாழ்ந்துதான் ஆகவேண்டும்.

தனிப்பட்ட மனிதனாக ராஜசேகர் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். அதைப்பற்றி தனக்கு கவலை இல்லை. பார்ப்பதற்கு பண்பும், குணமும் நிறைந்தவனாக தென்படுகிறான். அது போதும். யோசனையில் மூழ்கியிருந்த ஜெயந்திக்கு பக்கத்து வீட்டில் கடியாரம் மூன்று மணி அடித்தது கேட்டது. திடுக்கிட்டு கண்களை வலுக்கட்டாயமாக மூடிக் கொண்டு தூங்க முயற்சி செய்தாள்.

மறுநாள் காலையில் எழுந்து கொண்டாளே தவிர மனம் ஒரு நிலையில் இருக்க மறுத்தது. இரவு செய்து கொண்ட முடிவு விடியும்போதே காணாமல் போய்விட்டது போல் தோன்றியது. இரவு முழுவதும் விழித்துக் கொண்டிருந்ததால் காலையில் எழுந்து கொள்ளும்போதே தாமதமாகி விட்டது. வீட்டு வேலைகளை அவசரமாக செய்து முடித்துவிட்டு புடவையை மாற்றிக் கொள்ளப் போனாள்.

நேற்று நடந்தது கனவு இல்லை உண்மைதான் என்று உறுதிப்படுத்துவது போல் ராஜசேகரின் கார் வந்து வீட்டின் முன் நின்றது. முன் அறையில் படுத்திருந்த ஜானகி கட்டிலை விட்டு இறங்காமலேயே வாசல் பக்கம் எட்டிப் பார்த்துவிட்டு "ஜெயந்தி! கார் வந்திருக்குமா" என்றாள். ஏதேனும் விழாவோ, பார்ட்டிக்களோ நடக்கும் போது வனிதா விஹார் நிறுவனத்தினர் ராஜசேகரின் காரை பயன்படுத்திக் கொள்வது வழக்கம்தான். எங்கேயாவது தொலைவுக்கு போக வேண்டி வந்தாலோ, அவசர வேலை இருந்தாலோ ஜெயந்திக்காக வீட்டுக்கு கார் வருவதும்

உண்டு. அது போன்ற சமயங்களில் ஜெயந்தி ராஜசேகரின் காரில் ஒரிருமுறை பயணம் செய்திருக்கிறாள்.

''திரும்பி வருவதற்கு ரொம்ப நேரமாகுமா?''

வீட்டுக்கு கார் வந்திருக்கு என்றால் ஜெயந்திக்கு வேலை அதிகமாக இருக்கும் என்றும், வீட்டுக்கு வருவதற்கு தாமதம் ஆகும் என்றும் ஜானகிக்குத் தெரியும். இன்றும் அப்படித்தான் இருக்குமோ என்று நினைத்துக் கொண்டு கேட்டாள்.

''இல்லை பாட்டி. சீக்கிரமாகவே வந்துவிடுவேன்.'' புடவை கொசுவங்களை சரிசெய்து கொண்டே ஜெயந்தி சொன்னாள். ''பக்கத்து வீட்டு சியாமளா மாமியிடம் சொல்லியிருக்கிறேன். வீட்டு வேலை முடிந்த பிறகு இங்கே வந்து உனக்குத் துணையாக இருப்பாள். பேச்சு சுவாரசியத்தில் மருந்து மாத்திரை சாப்பிட மறந்து விடாதே. நினைவாக போட்டுக்கொள்.''

சரி என்பது போல் ஜானகி தலையை அசைத்தாள்.

கார் பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு ராஜசேகரின் வீட்டை அடைந்தது. ஜெயந்தி வனிதா விஹாரில் செகரெட்ரியாக சேர்ந்ததுமே ராஜசேகர் பெங்களூருக்கு சென்று விட்டான். நடுவில் அவன் ஊரில் இருந்த ஒரிரு சமயங்களிலும் அவனிடம் ஏதாவது கையெழுத்தை வாங்க வேண்டி இருந்தால் சுமித்ராவோ, ரேகாவோ அந்த பொறுப்பை வலுவில் எடுத்துக்கொண்டு விடுவார்கள்.

அதனால் ஜெயந்திக்கு இதுநாள் வரையில் ராஜசேகரின் வீட்டுக்குப் போக வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

## 10

**கார்** மெயின் கேட்டைத் தாண்டி விசாலமாக இருந்த தோட்டத்தை கடந்து போர்டிகோவில் வந்து நின்றது. வீட்டிற்கு



முன்னால் இருந்த தோட்டத்தில் நடைபாதைக்கு இருபுறமும் விதவிதமான ரோஜாச் செடிகள் இருந்தன. பல வண்ணங்களில் அழகாக மலர்ந்திருந்த ரோஜாப்பூக்கள் மெலிதாக வீசிக் கொண்டிருந்த காற்றுக்கு ஏற்றாற்போல் ஒய்யாரமாக அசைந்து கொண்டிருந்தன. காரை விட்டு இறங்கியதும் கண்ணுக்கு இனிமையாக தென்பட்ட இந்தச் சூழ்நிலை இறுக்கமாக இருந்த ஜெயந்தியின் மனதை கொஞ்சம் ஆசுவாசப்படுத்தியது.

ஜெயந்தி வராண்டாவைத் தாண்டி உள்ளே காலடி எடுத்து வைத்தாள். ஹால் நடுவில் விலை உயர்ந்த சோபாசெட், டீ பாய் இருந்தது. நான்கு மூலையிலும் உயரமான ஸ்டாண்டுகள், அவற்றின் மீது பெரிய பிளவர் வேஸ்கள் இருந்தன. அவற்றில் இருப்பது செயற்கையான பூக்கள் இல்லை என்றும், அன்று மலர்ந்த பூக்கள் என்றும் பார்த்ததுமே புரிந்து விட்டது. சாதாரணமாக பணக்காரர்களின் வீடுகளில் இருக்கக்கூடிய தரைவிரிப்பு அங்கே காணப்படவில்லை. வெள்ளையும் கருப்பும் கலந்த சலவை கற்கள் டைமண்ட் வடிவத்தில் தரையில் பதிக்கப்பட்டு பளபளவென்று மின்னிக்கொண்டிருந்தன.

ராஜசேகர் மிகுந்த செல்வம் படைத்தவன் என்று கேள்விப்பட்டிருந்த ஜெயந்தி அவன் வீடு இந்திரபவனமாக இருக்கும் என்று ஊகித்திருந்தாள். அவள் நினைத்தது போல் இல்லா விட்டாலும் ஆடம்பரமில்லாத அலங்காரங்களுடன் வீடு ரொம்ப நேர்த்தியாக, சகல வசதிகளுடன் இருந்தது.

ஹாலை பரிசீலித்துக் கொண்டு ஒரு விநாடி நின்றுவிட்ட ஜெயந்திக்கு வழிகாட்டுவது போல் ''இப்படி வாங்க'' என்றான் டிரைவர். ஜெயந்தி அவனை பின்பற்றினாள். ஹாலைத் தாண்டி உள்ளே போனதும் காரிடார் இருந்தது. இடது பக்கம் வரிசையாக அறைகள் இருந்தன. அவற்றில் செகரெட்ரி என்று போர்ட் இருந்த இரண்டாவது அறையை சுட்டிக்காட்டி ''அந்த அறைதான் அய்யா உள்ளே இருக்கிறார்'' என்று சொல்லிவிட்டு மறுபேச்சுக்கு வாய்ப்பு தராமல் அங்கிருந்து போய்விட்டான். வீட்டில் எங்கும் எந்த சத்தமும் கேட்கவில்லை.

அந்த நிசப்தம், தனிமையை பார்த்ததும் மிஸெஸ் வர்மா வீட்டில் நடந்தது நினைவுக்கு வந்து ஒரு நிமிடம் ஜெயந்தியின் உடல் நடுங்கியது. 'தவறு செய்து விட்டோமோ. இதுபோல் வந்திருக்கக்கூடாதோ?' என்று தோன்றியது.

திரைச்சீலையை விலக்கிக் கொண்டு உள்ளே காலடி எடுத்து வைத்தாள். விசாலமான அறை. அறையில் ஒரு பக்கமாக மேஜை, அதன் எதிரே நாற்காலிகள் இருந்தன. மேஜைமீது காகிதங்கள் குவியலாக இருந்தன. மேஜைக்கு பக்கத்திலேயே இருந்த அலமாரியில் பைல்கள் வரிசையாக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. ஜன்னலுக்கு பக்கத்தில் இருந்த ஈசிச்சேரில் குறுக்கே பலகையை போட்டுக் கொண்டு ராஜசேகர் ஏதோ சீரியஸாக எழுதிக் கொண்டிருந்தான். ஜன்னல் வழியாக வீசிக் கொண்டிருந்த காற்றுக்கு அலை அலையாக அவனுடைய கிராப் அசைந்ததோடு கழுத்தில் கட்டியிருந்த நீலநிற டை கூட அசைந்து கொண்டிருந்தது. இந்த உலகத்தையே மறந்து விட்டாற் போல் எழுதிக் கொண்டிருந்த ராஜசேகர் ஜெயந்தியை கவனிக்கவில்லை. குனிந்த தலை நிமிராமல் எழுதிக் கொண்டிருந்த அவனிடம் தன்னுடைய வருகையை எப்படி தெரியப்படுத்துவது என்று அவளுக்குத் தெரியவில்லை. அப்படியே நின்று விட்டாள்.

வேகமாக எழுதிக் கொண்டிருந்தவன் எதற்காகவோ ஒரு வினாடி நிறுத்தி பார்வையை உயர்த்தினான்.

''அட! வந்து விட்டீங்களா? உள்ளே வாங்க'' என்றான்.

ஜெயந்தி உள்ளே வந்தாள். அவன் தன் கையிலிருந்த பேனாவால் மேஜையை சுட்டிக் காட்டி ''அதோ பாருங்க. குவியலாக இருக்கும் அந்த காகிதங்களிலிருந்து கடிதங்களை ரசீதுகளை தனித்தனியாக பிரித்து வையுங்கள்'' என்று மறுபடியும் எழுதுவதில் மூழ்கிவிட்டான்.

ஜெயந்தி மேஜையின் முன்னால் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். ஏறத்தாழ அரை மணி நேரம் கழிந்த பிறகு எழுத்து வேலையை முடித்துக் கொண்ட ராஜசேகர் பேனாவை யும், பேப்பர்களையும் பக்கத்தில் இருந்த ஸ்டூல் மீது வைத்தான்.



எழுந்து நின்றவன் சுவற்றில் இருந்த பட்டனை ஒருமுறை அழுத்திவிட்டு ஜெயந்தியின் அருகில் வந்தான்.

''பார்த்தீங்களா எத்தனை கடிதங்களோ? அவற்றில் பெரும் பாலானவற்றுக்கு நீங்களே பதில் எழுதிவிடலாம். நான் கையெழுத்து போட்டு விடுகிறேன். சில கடிதங்களை மட்டும் டைப் செய்ய வேண்டியிருக்கும். உங்களுக்கு டைப்பிங் தெரியும் என்று நினைக்கிறேன்.''

ஜெயந்தியின் முகம் சிவந்து விட்டது. சுமித்ராகூட முதல்நாள் இதே கேள்வியைக் கேட்டாள். அன்று தான் இருந்த நிலைக்கும் இன்று தான் இருக்கும் நிலைக்கும் எத்தனை வித்தியாசம்?

ராஜசேகர் அவள் பக்கம் திரும்பாமலேயே பேண்ட் ஜேபியில் கைகளை நுழைத்துக் கொண்டு ''அதோ! எனக்கு வரும் பத்திரிகைகளின் லிஸ்ட். அவற்றில் எந்தெந்த பத்திரிகைகளுக்கு சந்தா அனுப்ப வேண்டுமோ பட்டியலை தயார் செய்து விடுங்க. மனியார்டர் அனுப்பிவிடலாம்.''

அதற்குள் யாரோ அறைக்கு வந்ததை கவனித்து ஜெயந்தி அந்தப் பக்கம் திரும்பினாள்.

ராஜசேகர் பின்னால் திரும்பிப் பார்க்காமலேயே ''நாயர்! காபி, டிபன் இரண்டுபேருக்கு அனுப்பு'' என்றான். நாயர் போய்விட்டான். ராஜசேகர் வாட்சைப் பார்த்துக்கொண்டே மறுபடியும் தன்னுடைய இடத்திற்கு சென்றான். ''பத்தரை ஆகிறது. பதினோரு மணிக்கு கம்பெனி மீட்டிங் இருக்கு. நான் போய்விட்டு ஒரு மணிக்கு வந்து விடுகிறேன்'' என்றான். தான் எழுதி வைத்த காகிதங்களை மற்றொரு முறை சரிபார்த்துக் கொண்டான்.

நாயர் வந்து காபி டிபனை ஸ்டூல் மீது வைத்துவிட்டு இரண்டு நாற்காலிகளை அருகில் நகர்த்திவிட்டுச் சென்றான்.

''வாங்க டிபன் சாப்பிடலாம்.'' ராஜசேகர் அழைத்தான். ஜெயந்தி ஒரு வினாடி தயங்கினாள். டிபன் தட்டை கையில்

எடுத்துக் கொண்டவன் ஏதோ யோசித்துக் கொண்டே தனக்காக காத்திருப்பதை உணர்ந்து உடனே எழுந்து வந்தாள். அவன் செய்யும் ஒவ்வொரு வேலையிலும் ஒருவிதமான சுறுசுறுப்பு, ஒரு நிமிடம்கூட வியர்த்தமாக்காத வேகம் தென்பட்டுக் கொண்டிருந்தது.

அவசர அவசரமாக டிபன் சாப்பிட்டு முடித்த ராஜசேகர் காபியை கோப்பையில் ஊற்றிக் கொண்டு மற்றொரு கோப்பையிலும் ஊற்றிவிட்டு ஜெயந்தியின் பக்கம் நகர்த்தினான்.

''நீங்க அவசரப்படாமல் நிதானமாக சாப்பிடுங்க. எனக்கு வெளியில் வேலை இருப்பதால் அவசரமாக சாப்பிடுகிறேன்'' என்றான் முறுவலுடன்.

'தாங்க்ஸ்'' என்றாள் ஜெயந்தி கோப்பையை எடுத்துக் கொண்டே. அவனுடன் இருக்கும்போது அடிக்கடி இந்த வார்த்தையை பயன்படுத்த வேண்டி வருகிறது. தான் அந்த வார்த்தையைச் சொன்ன போதெல்லாம் அவன் இதழ்களில் வித்தியாசமான முறுவல் ஒன்று மலரும். அந்த முறுவலைப் பார்க்கும்போது அவள் மனதில் இன்னதென்று புரியாத உணர்வு ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

அவன் செய்ய வேண்டிய வேலைகளை சொல்லிவிட்டு அவன் போய் விட்டான். போகும் முன் சற்று நின்று ''உங்களுக்கு ஏதாவது தேவையாக இருந்தால் அந்த பெல்லை அழுத்துங்கள். நாயராவது, வாசுவாவது வருவார்கள்'' என்று சொல்லிவிட்டு போனான்.

அறை வாசலில் தான் வந்து நின்றபோது அவன் பார்த்தது முதல் ஓடத்தொடங்கிய காலமானது அவன் போனதும் மறுபடியும் நின்று விட்டாற்போல் இருந்தது. மறுபடியும் யோசனைகள் அவளை சூழ்ந்து கொண்டன.

ஜெயந்திக்கு ஏனோ இன்று தான் பார்க்கும் ராஜசேகர் முற்றிலும் மாறுப்பட்ட மனிதனாக தோன்றினான். வெளியில் தென்படும் ராஜசேகருக்கும் இன்று தான் பார்க்கும் இந்த நபருக்கும் இவ்வளவு வித்தியாசம் ஏன்? வெளியில் பார்க்கும்



போது ரொம்ப உல்லாசமாக, ஜாலியாக இருப்பவன் போல் தென்பட்டான். இன்று வீட்டில் பார்க்கும்போது கம்பீரமாக, கடமையே கண்ணாக இருப்பவன் போல் தென்பட்டான்.

எது எப்படி இருந்தாலும் இதுபோன்ற யோசனைகள் தனக்கு அனாவசியம். வனிதா விஹாரில் செகரெட்ரியாக இருந்த போது ஓடியாடி செய்தாற்போல் இங்கே செய்ய வேண்டியதில்லை. தான் இங்கே வேலை பார்க்க வந்திருக்கிறாள். அவ்வளவுதான். ராஜசேகர் எப்படி இருந்தால் தனக்கென்ன வந்தது? வெளியில் ஒரு மாதிரி வீட்டில் ஒரு மாதிரி இருந்தாலும் சரி, மணிக்கு ஒரு விதமாக இருந்தாலும் சரி. தனக்கு அதில் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. இந்த வேலை தற்காலிகமானது. வேறு வேலை கிடைக்கும் வரையில்தான் என்ற விஷயம் நினைவுக்கு வந்ததும் ஜெயந்திக்கு மேற்கொண்டு யோசிக்கத் தோன்றவில்லை.

கடிதங்களை பார்ப்பதிலும், பத்திரிகைகளை புரட்டுவதிலும் நேரம் போனதே தெரியவில்லை. நடுவில் நாயர் வந்து கோப்பைகளை, டிபன் தட்டுகளை எடுத்துச் சென்றான். வந்தவன் ஜெயந்தியின் பக்கம் நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை.

## 11

ராஜசேகர் வீட்டுக்கு திரும்பி வந்தான். வரும்போதே ''ரொம்ப நேரமாகிவிட்டது இல்லையா?'' என்று சொல்லிக் கொண்டே கோட்டை கழட்டி பக்கத்தில் இருந்த நாற்காலியின் மீது போட்டான். டையை அவிழ்த்து கோட்டின் மீது வீசிவிட்டு நாற்காலியில் அமர்ந்து பின்னால் சாய்ந்து கொண்டான்.

கண்கள் மீது கைகளை வைத்துக் கொண்டு ''அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்டவன் ''கொஞ்சம் அந்த பெல்லை அழுத்துங்கள்'' என்றான். ஜெயந்தி எழுந்து போய் பெல்லை

அழுத்தினாள். ராஜசேகர் முகத்தில் காலையில் தென்பட்ட உற்சாகம் இப்பொழுது இருக்கவில்லை. களைத்துப் போனாற் போல் முகம் வாடியிருந்தது. தலைமுடி கலைந்திருந்தது. அதற்குள் நாயர் வந்தான். வரும்போதே கையில் பாத்ரூம் ஸ்லிப்பர்ஸுடன் வந்தான். அவற்றை ராஜசேகர் காலடியில் வைத்து விட்டு கால்களில் அணிந்திருந்த ஷூவையும், சாக்ஸையும் கழட்டினான்.

''குளிக்க வெந்நீர் போட்டாச்சா?''

''ஊம்.''

'சாப்பாடு?''

''தயாராக இருக்கு.''

ஜெயந்தி மேஜை அருகில் நின்று கொண்டு கண்கள் விரிய பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இப்போதே வந்துவிடுகிறேன்.'' செருப்பை மாட்டிக் கொண்ட ராஜசேகர் ஜெயந்தியின் பக்கம் பார்க்காமலேயே அறையை விட்டு வெளியேறினான். அவன் பின்னாலேயே நாயர் நாற்காலியின் மீது இருந்த கோட்டையும், டையையும் எடுத்துக் கொண்டு, மற்றொரு கையில் ஷூக்களையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான்.

கிட்டத்தட்ட பதினைந்து நிமிடங்கள் கழித்து நாயர் திரும்பி வந்தான். ''அய்யா உட்கார்ந்து இருக்காங்க. வரச் சொன்னாங்க'' என்றான்.

''எங்கே?'' பத்திரிகையை புரட்டிக் கொண்டிருந்த ஜெயந்தி நெற்றியை சுளித்துக் கொண்டே கேட்டாள்.

''சாப்பிடுவதற்கு.'' பின்னால் திரும்பிப் பார்க்காமல் சொல்லிவிட்டு போய்விட்டான்.

ஜெயந்திக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. தான் சாப்பிடவில்லை என்ப; ! உண்மைதான். ஆனால் முன்பின் அறியாதவர்கள் வீட்டில் ، ாப்பிட்டு தனக்கு பழக்கம் இல்லையே? ஜெயந்திக்கு சங்கடமாக ழிருந்தது.



மேலும் ஐந்து நிமிடங்கள் கழிந்த பிறகு பதினெட்டு வயது மதிக்கத்தக்க பையன் ஒருவன் திரைச்சீலையை விலக்கி விட்டு தலையை மட்டும் உள்ளே நீட்டி ''அய்யா வரச்சொன்னாங்க'' என்றான். வேறு வழியில்லாமல் பத்திரிகையை பக்கத்தில் வைத்து விட்டு ஜெயந்தி எழுந்து கொண்டாள்.

உள்ளே வீடு மேலும் பெரிதாக இருந்தது. தனியாக இருக்கும் ராஜசேகருக்கு இவ்வளவு பெரிய வீடு எதற்கு? ஒரு பகுதியை வாடகைக்கு விடலாம் இல்லையா. வீட்டில் கொஞ்சம் சந்தடியாவது இருக்கும். தன் எண்ணங்களைக் கண்டு ஜெயந்திக்கு சிரிப்பு வந்தது. வீட்டை வாடகைக்குவிட வேண்டிய தலையெழுத்து அவனுக்கு என்ன வந்தது?

அவற்றில் ஆங்காங்கே ஆயில் பெயிண்டிங்குகள் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. பெரிய பெரிய வாசல்களுக்கு இருபுறமும் பூத்தொட்டிகள் தவிர வேறு எந்தப் பொருளும் இருக்கவில்லை. வீடு ஆடம்பரமற்று இருந்தாலும் வீட்டு யஜமானரின் ரசனையை பறைச்சாற்றுவது போல் இருந்தது.

ஜெயந்தி போனபோது ராஜசேகர் உணவு மேஜையின் முன்னால் நாற்காலியில் பின்னால் சாய்ந்து ஏதோ யோசித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். ஜெயந்தியைப் பார்த்ததும் சரியாக உட்கார்ந்து கொண்டே ''சீக்கிரமாக வாங்க. ரொம்ப பசிக்கிறது. மறுபடியும் நான் வெளியில் போகணும்'' என்றான் முறுவலுடன். சிரிக்கும்போது முதல் பார்த்த ராஜசேகர் போலவே இருந்தான்.

''வாசு! சின்னம்மாவுக்கு டவலை கொடுத்து பாத்ரூமை காட்டு'' என்றான்.

சற்றுமுன் வந்த பையன் ஜெயந்திக்கு பாத்ரூமை காண்பித்தான். குளியல் அறையும் விலை உயர்ந்த சலவை கறகளுடன் தூய்மையாக இருந்தது. வாஷ்பேசின் மேலே அமைக்கப் பட்டிருந்த கண்ணாடியில் தென்பட்ட தன்னுடைய முகம் வித்தியாசமாக இருப்பதுபோல் தோன்றியது ஜெயந்திக்கு.

சாப்பிடும்போது அவன் அதிகமாக பேசவில்லை.

''சுமித்ராவை பார்த்திங்களா?'' ஜெயந்தி கேட்டாள்.

''இல்லை. என்ன கேட்பது என்று புரியவில்லை போகட்டும் விடுங்க. நீங்க அங்கே வேலையை விட்ட பிற அவங்களுடைய அபிப்பிராயத்துடன் நமக்கென்ன வேலை என்றான்.

ஜெயந்தி பதில் சொல்லவில்லை. அவனும் உரையாட நீடிக்கவில்லை. ஏதோ யோசனையில் ஆழ்ந்து விட்டவ மற்றொருமுறை தொந்தரவு செய்வதில் ஜெயந்திக்கு விருப்ப இல்லை. சாப்பாடு முடியும் தருணத்தில் அவன் சொன்ன ''இன்னும் ஒரு மணி நேரம் கழித்து நான் வெளியில் போ போகிறேன். மாலையில் வரமாட்டேன். உங்களால் முடி வரையில் வேலையை முடித்துவிட்டு வீட்டுக்கு போகலாம் டிரைவர் வாசலில் இருப்பான். நீங்க எப்பொ சொல்றீங்கள அப்பொ வீட்டில் கொண்டு போய் விடுவான்.'' கிளம் முற்பட்டவன் மறுபடியும் நின்று ''நீங்க காலையில் சீக்கிரம வந்தால் எனக்கு வசதியாக இருக்கும். மறுபடியும் நீங்க நான் மணிக்குள் வீட்டுக்கு போய்விடலாம்'' என்றான்.

சரி என்பது போல் ஜெயந்தி தலையை அசைத்தாள்.

வாசு நீட்டிய பாக்குத்தூளை வாயில் போட்டுக் கொண் ''உங்க பாட்டிக்கு இப்பொ எப்படி இருக்கு?'' என்று கேட்டா

''இன்னிக்குக் கொஞ்சம் தேவலை.''

''என்ன உடம்பு?''

''நெஞ்சு படபடப்பு. சில சமயம் நெஞ்சு வலியும் வரும்.''

''டாக்டரிடம் காட்டவில்லையா?''

''காண்பித்தோம்.'' ஜெயந்தி பார்வையை தாழ்த்தி கொண்டாள். டாக்டரிடம் காட்டியது உண்மைதான். ஆனா அவர் எழுதிக் கொடுத்த மருந்துகளை வாங்கவில்லை.

பேசிக் கொண்டிருந்தபோதே திடீரென்று பார்வை திருப்பிக் கொண்ட ஜெயந்தியை கேள்விக்குறியுடன் நோக்கினா



ஜெயந்தி எதையும் கவனிக்காமல் அந்த இடத்தை விட்டு வெளியேறினாள்.

கிட்டத்தட்ட அரைமணி நேரம் கழித்து வாசலில் கார் கிளம்பும் சத்தம் கேட்டது. ராஜசேகர் கிளம்பிவிட்டான் என்பதை ஜெயந்தி உணர்ந்து கொண்டாள்.

# 12

மறுநாள் ஜெயந்தி போனபோது ராஜசேகர் இல்லை. அப்பொழுதுதான் வெளியில் போனான் என்றும் வருவதற்கு நேரமாகும் என்று சொல்லிவிட்டுப் போனதாக வாசு தெரிவித் தான். ஜெயந்தி உள்ளேபோய் தன்னுடைய இருக்கையில் அமர்ந்து கொள்ளப் போன போது மேஜை மீது பேப்பர் வெயிட்க்கு அடியில் சிறிய காகிதம் ஒன்று படபடத்துக் கொண்டிருந்ததை கவனித்தாள். எடுத்துப் பார்த்தாள்.

''வேலையாக வெளியில் போகிறேன். சாப்பிட வர முடியாது என்று நினைக்கிறேன். நேற்று நீங்க எடுத்து வைத்த கடிதங்களுக்கு பதில் எழுதி வைத்திருக்கிறேன். டைப் செய்து வைத்தால் வந்து கையெழுத்து போடுகிறேன். ஒரு மணிக்கு சாப்பிட்டு விடவும். நாயரிடம் சொல்லியிருக்கிறேன்.

ராஜசேகர்.

கையெழுத்தை பொறுத்து ஒரு நபரின் தனித்தன்மையை முடிவு செய்ய முடியும் என்று எங்கேயோ படித்திருக்கிறாள். அவசரத்தில் எழுதினாலும் ராஜசேகரின் கையெழுத்து சீராக அழகாக இருந்தது. அப்படி என்றால் ஸ்திரமான புத்திக் கொண்டவன் என்று எடுத்துக் கொள்ளலாமா?

அன்று மூன்று மணிக்கெல்லாம் வேலையை முடித்துக் கொண்டு வீட்டுக்கு போய்விட்டாள்

மறுநாளும் ஜெயந்தி போனபோது ராஜசேகர் வீட்ட இல்லை. ஆனால் ஒரு மணிக்கெல்லாம் வந்து விட்டான். உண முடிந்த பிறகு இருவரும் உட்கார்ந்து கொண்டார்கள். ஜெயந் அன்று வந்த தபால்களை பிரிக்கத் தொடங்கினாள். ராஜசே ஏதோ எழுதிக் கொண்டிருந்தான்.

ஜெயந்தி தபால்களை பிரித்த பிறகு தான் எழுதி பேப்பர்களை கொடுத்துவிட்டு ''இவற்றை டைப் செய்து விட நீங்க வீட்டுக்கு போகலாம்'' என்றான். பிறகு அன்று தபாலி வந்த பத்திரிகைகளை எடுத்துக் கொண்டு உள்ளே போ விட்டான்.

ஜெயந்தி டைப் செய்யத் தொடங்கினாள். ராஜசேகருக் ஆங்கிலத்தில் நல்ல புலமை இருந்தது. டெக்ஸ்டைல் மில்லி சில திட்டங்களை பற்றியும், கிளைகளின் நிர்வாகத்தில் செய் வேண்டிய சில மாற்றங்களை பற்றியும் எழுதியிருந்தான்.

மணி நான்கு ஆகும்போது ''இன்னும் இருக்கிங்களா'' என்று கேட்டுக் கொண்டே ராஜசேகர் உள்ளே வந்தான்.

''இதோ முடியப்போகிறது'' கடைசிப் பக்கத்தை டை செய்து கொண்டே ஜெயந்தி சொன்னாள்.

நாயர் காபி, டிபன் கொண்டு வந்தான். இருவரும் சேர்ந் சாப்பிட்டார்கள். பிறகு ஜெயந்தி வீட்டுக்குக் கிளம்பினா ராஜசேகர் கிளப்புக்கு சென்றுவிட்டான். பயந்து கொண் தயக்கத்துடன் ராஜசேகரிடம் செகரெட்ரியாக சேர்ந்த ஜெயந்திக் நாட்கள் போனதே தெரியவில்லை.

ஏறத்தாழ தினமும் ஒரே மாதிரி நிகழ்ச்சிநிரல். காலையி போவது. வேலை முடிந்ததும் வீட்டுக்கு திரும்புவது. தா ராஜசேகரிடம் செகரெட்ரியாக சேர்ந்த விவரம் வனிதா விஹாரி இருப்பவர்களுக்கு தெரியுமோ இல்லையோ. ராஜசே மறுபடியும் அந்த பிரஸ்தாபனையை எடுக்கவில்லை. மாதத்தி பாதி நாட்கள் ராஜசேகர் ஊரிலேயே இருக்க மாட்டா சென்னை, பம்பாய், பெங்களூர் என்று ஏதாவது ஊருக்கு போய்

கொண்டே இருப்பான். தான் ஊரில் இல்லாதபோது ஜெயந்தி செய்ய வேண்டிய வேலைகளை சொல்லி விட்டுப் போவான். ரொம்பவும் முக்கியமாக இருந்தால் கடிதம் எழுதுவான். அந்த கடிதங்கள்கூட வழக்கமான வியாபார தோரணையில் இருக்கும். கடைசியில் 'நீங்கள் நலமாக இருப்பீர்கள் என்று நினைக்கிறேன்' என்ற வாக்கியம் தவறாமல் இடம் பெறும். நாட்கள் செல்லச் செல்ல ஜெயந்திக்கு பயம் தெளிந்துவிட்டது. ஒரு விதமான நிம்மதி ஏற்படத் தொடங்கியது.

முதல் முறையாக சம்பளம் கொடுக்க வேண்டிய நாள் வந்தது. நாளை முதல் தேதி என்றால் அதற்கு முதல் நாள் பெங்களூருக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான். போகும் முன் ஜெயந்தி செய்ய வேண்டிய வேலைகளை விவரமாக சொல்லிவிட்டு சட்டைப்பையிலிருந்து கவரை எடுத்தான்.

''இது உங்களுடைய சம்பளம். நாளைக்கு நான் ஊரில் இருக்க மாட்டேன் இல்லையா'' என்றான்.

எவ்வளவு என்று ஜெயந்தி கேட்கவில்லை. அவனும் சொல்லவில்லை. வீட்டுக்கு வந்த பிறகு கவரை பிரித்து பார்த்த போது ஐயாயிரம் இருந்தது. ஜெயந்தியின் கண்கள் வியப்பினால் விரிந்தன. வனிதா விஹாரில் இரண்டாயிரம் கொடுப்பதாக கையெழுத்து வாங்கிக் கொண்டு ஆயிரம் ரூபாய்தான் தந்து கொண்டிருந்தார்கள். அதுவும் முதல் தேதி அன்று தரமாட்டார்கள். பத்து தேதி ஆக்கி விடுவார்கள். அதுவும் ஜெயந்தி இரண்டு மூன்று முறை நினைவுபடுத்திய பிறகு.

மறுநாள் கூடை நிறைய பழங்களும் டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்துகளையும் வாங்கிக் கொண்டு வந்த பேத்தியை பார்த்து ஜானகி கோபித்துக் கொண்டாள். ''பத்தோ பதினைந்தோ மிச்சம் இருந்தால் சேர்த்து வைக்காமல் இப்படி வீணாக செலவு செய்வார்களா?''

''பாட்டி! இது அனாவசியமான செலவு ஒன்றும் இல்லை. இந்த பழச்சாறு குடி. மாத்திரை, டானிக்கை வேளை தவறாமல்

"சாப்பிடு. இதெல்லாம் முன்னாடியே செய்திருக்க வேண்டியது" என்றாள் ஜெயந்தி.

அன்று இரவு உறங்கச் செல்லும் முன் மனதிலேயே கடவுளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருந்த ஜெயந்தியின் கண்கள் முன்னால் ராஜசேகரின் முகம் நிழலாடியது.

## 13

ராஜசேகருக்கு வரும் தபால்களில் ஜெயந்தியின் பார்வையை ஈர்ப்பது அழைப்பிதழ்கள் மட்டுமே. ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் மூன்று நான்காவது வரும். பாட்டுக் கச்சேரிகள், இலக்கியக் கூட்டங்கள், டீ பார்ட்டிகள், நாட்டிய நிகழ்ச்சிகள், கிரிக்கெட் மேட்ச்கள்... இப்படி பல வகைகள். ராஜசேகர் அவற்றை பார்த்து விட்டு பக்கத்தில் போட்டு விடுவான். அப்படிப் போட்ட அழைப்பிதழ்களில் ஜெயந்தி தனக்கு தேவையானவற்றை... முக்கியமாக நாட்டிய நிகழ்ச்சிகள், நாடகங்கள் போன்றவற்றை தனியாக எடுத்து வைத்துக் கொண்டு வீட்டுக்கு எடுத்துச் செல்வாள். அந்த நிகழ்ச்சிகளுக்கு அவளும் சுமதியும் சேர்ந்து போவார்கள்.

"உங்க புது ஆபீசர் ரொம்ப செல்வாக்கு படைத்தவர் போலிருக்கே?" சுமதி சொன்னாள்.

"அவரை ஆபீசர் என்று சொல்லாதே."

"ஏன்?"

"ஆபீசர்களிடம் இருக்கும் அகம்பாவம், திமிர் அவரிடம் இல்லை."

"அப்படியா? அப்பொ அவரை எப்படி விளிப்பதாம்?" கிண்டலாக சிரித்தாள் சுமதி.

"எனக்குத் தெரியாது."



"போகட்டும் என்னுடைய நன்றியை அவரிடம் தெரிவித்து விடு."

"நல்ல ஆள்தான் போ. அசல் நான் இதுபோல் நிகழ்ச்சிகளுக்கு போவது அவருக்குத் தெரியவே தெரியாது."

"ஏன்? தெரிந்தால் ஒப்புக்கொள்ள மாட்டாரா?"

"அப்படி ஒன்றுமில்லை. எதுவும் சொல்லமாட்டார் என்றுதான் நினைக்கிறேன்."

"அவருக்கு எவ்வளவு வயது இருக்கும்?" திடீரென்று சுமதி கேட்டாள்.

"என்னவோ எனக்குத் தெரியாது. எதற்காக கேட்கிறாய்?"

"அவரைப் பற்றி பேச்சு வந்த போதெல்லாம் உன் முகத்தில் ஒரு விதமான ஒளி வீசுகிறது. அதான் கேட்டேன்."

"ச்சீ... ச்சீ... என்ன பேச்சு பேசுகிறாய்?" ஜெயந்தியின் முகம் கன்றிவிட்டது.

சுமதி கலகலவென்று நகைத்தாள்.

## 14

ராஜசேகர் பத்துநாளாய் ஊரில் இல்லை. பம்பாய்க்கு சென்றிருந்தான். ஜெயந்தி வழக்கம்போல் ராஜசேகரின் வீட்டிற்குச் சென்று தன்னுடைய அறையில் அமர்ந்துகொண்டாள். அன்று வந்த தபால்களை பிரிக்கும்போது அவளுடைய பெயருக்கு தனியாக கவர் ஒன்று வந்திருந்தது. ஏதாவது முக்கியமான வேலை இருந்தால் ராஜசேகர் ஜெயந்திக்கு கடிதம் எழுதுவது வழக்கம் தான். ஜெயந்தி கவரை பிரித்து பார்த்தாள்.

ஜெயந்தி

நாளை மறுநாளோ அதற்கும் அடுத்த நாளோ உன்னுடைய பிறந்த நாள் என்றும், அன்று விடுமுறை வேண்டுமென்று நீ

கேட்டதாக நினைவு. இங்கே வந்த பிறகு நண்பர்களுட கடைத்தெருவுக்கு போனபோது புடவை ஒன்று கண்ணில்பட்ட பார்த்ததுமே எனக்குப் பிடித்துவிட்டது. உனக்கு நன்றா இருக்கும் என்று தோன்றியதால் அந்தப் புடவையை ஏர்பார்ச மூலமாக உனக்கு அனுப்பி இருக்கிறேன். அதனுடைய ரசீ இந்தக் கடிதத்துடன் வைத்திருக்கிறேன். ஏர்லைன்ஸ் ஆபீசுக் போய் அந்த பார்சலை பெற்றுக்கொள். நண்பர்களுக்கு நெருங்கியவர்களுக்கு பரிசு கொடுப்பது என்னுடைய வழக்கம் வித்தியாசமாக எடுத்துக் கொள்ள வேண்டாம். வேண்டா யோசனைகளை விட்டு விட்டு பிறந்த நாளன்று இந்த புடவையை உடுத்திக்கொண்டு சந்தோஷமாக இருக்கவும்.

இப்படிக்கு

ராஜசேகர்

ஜெயந்தி தன் கண்களை தானே நம்ப முடியாமல் ஒ தடவைக்கு நான்கு தடவை கடிதத்தை படித்தாள். படிக்கு போதே அவள் முகம் கன்றிவிட்டது. பரிசளிப்பது அவனுக் வழக்கமாக இருக்கலாம். ஆனால் அப்படி பெற்றுக் கொள்வ தனக்கு பழக்கம் இல்லையே? இந்த விஷயத்தை அவனிட எப்படி சொல்வது? பேசாமல் இந்த விஷயத்தை அப்படியே விட்டு விட்டால்! அந்த பார்சல் அங்கேயே தங்கி விடும் அப்படித்தான் செய்ய வேண்டும் என்று முடிவு செய்த கொண்டாள்.

ஆனால் அதை செயல்படுத்தும் துணிச்சல் அவளுக்கு இருக்கவில்லை. அவன் அங்கே பம்பாயில் மூச்சுவிடாத வேலை களுக்கு நடுவில் இருந்துகொண்டு தன்னுடைய பிறந்தநாளை நினைவில் வைத்துக் கொண்டு பரிசு அனுப்பியிருக்கிறான் அதைப் புறக்கணிப்பது சரியென்று படவில்லை.

மறுநாள் ஏர்லைன்ஸ் அலுவலகத்திற்கு சென்று பார்சலை வாங்கிக்கொண்டு வந்தாள். வீட்டுக்கு வந்ததும் ராஜசேகருக்கு அந்த அளவுக்கு பிடித்த புடவை எப்படி இருக்குமோ என்ற



ஆர்வத்துடன் உடனே பிரித்துப் பார்த்தாள்.. வெளிர் ரோஜா வண்ணத்தில் அங்காங்கே ஜரிகைப் பூக்கள். தலைப்பில் அழகான டிசைன். கைப்பிடிக்குள் அடங்கி விடுவதுபோல் மெத்தென்று இருந்த அந்தப் புடவையை கட்டிக் கொள்ள மறுநாள் வரையில் காத்திருக்க முடியாமல் ஜெயந்தியின் மனம் தவித்தது.

புடவையை பிரிக்கும்போது மடிப்புகளிலிருந்த அட்டை ஒன்று நழுவி ஜெயந்தியின் காலடியில் விழுந்தது. குனிந்து அதை எடுத்துப் பார்த்தாள். பிறந்த நாள் வாழ்த்து மடல்! அழகான எரி... படகில் பின்னால் சாய்ந்து கொண்டு எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கும் இளம் பெண்.. அவளுக்கு எதிரே அழகும் பலமும் வாய்ந்த இளைஞன் ஒருவன் துடுப்பு போட்டுக் கொண்டே அந்தப் பெண்ணையே பார்ப்பது போன்ற சித்திரம்.

ஜெயந்திக்கு ஏனோ புடவையைவிட அந்த சித்திரம் ரொம்பப் பிடித்துவிட்டது. வாழ்த்து மடல் திருப்பிப் பார்த்தாள் ''பிறந்தநாள் வாழ்த்துக்கள்... ராஜா'' என்று இருந்தது. ஜெயந்தியின் கன்னங்கள் செம்மையேறின. நெருங்கியவர்கள் ராஜா என்றும், தெரிந்தவர்கள் சேகர் என்றும் தன்னை விளிப்பார்கள் என்று எப்போதோ ஒருமுறை அவன் சொன்னதாக நினைவு. அப்படி என்றால் தான் நெருங்கியவளா?

பிறந்தநாள் அன்று வழக்கத்தைவிட சீக்கிரமாக எழுந்து கொண்ட ஜெயந்தி பாட்டி சொன்னதுபோல் தலைக்குக் குளித்து விட்டு புதுப் புடவையை உடுத்திக் கொண்டாள். விளக்கேற்றி விட்டு பாட்டியின் கால்களில் விழுந்து வணங்கினாள் எழுந்து கொள்ளும்போது தலையில் ஈரம் படர்ந்ததை உணர்ந்து பதட்டத்துடன் ''பாட்டி!'' என்று அழைத்தாள்.

விழிகளில் நீர் சுழல பேத்தியை மார்போடு அணைத்துக் கொண்ட ஜானகி 'சீக்கிரமாக உனக்குக் கல்யாணம் ஆக வேண்டும். குழந்தை குட்டியுடன் நீ ....' அதற்கு மேல் ஜானகிக்கு குரல் எழும்பவில்லை.

ஜெயந்தியால் பதில் பேச முடியவில்லை.

ஜெயந்தி அன்று மாலை ஐந்து மணிக்கெல்லாம் சுமதியின் வீட்டுக்குச் சென்றாள். சுமதிக்கும், ஜெயந்திக்கும் இடையே வயதில் பத்து வருடங்களுக்கு மேல் வித்தியாசமிருந்தது. சில சமயம் நட்புக்கும், வயதிற்கும் சம்பந்தம் இருக்க தேவையில்லை என்று தோன்றும். சுமதியின் வீட்டினர் சில நாட்கள் ஜெயந்தியின் வீட்டுக்கு பக்கத்து வீட்டில் குடியிருந்து விட்டுப் போனார்கள். அடுத்தடுத்து வீடுகளில் இருந்தபோது ஏற்பட்ட அறிமுகம் சுமதி வீட்டினரை தொலைவாக சென்ற பிறகு நட்பாக ஸ்திரப்பட்டு விட்டது. பாட்டிக்கு பிறகு இந்த உலகில் சொந்தம் யாராவது இருப்பதாக ஜெயந்தி நினைக்கிறாள் என்றால் அது சுமதி ஒருத்திதான்.

மிகச் சாதாரணமான குடும்பத்தில் பிறந்த சுமதி பத்தாவதுடன் படிப்பை முடித்துக் கொண்டு திருமணம் ஆனதும் மாமியார் வீட்டுக்கு வந்துவிட்டாள். கணவனின் குறைவான வருமானத்தில் சிக்கனமாக குடும்பம் நடத்தி வருகிறாள். இரண்டு குழந்தைகள். இந்தப் பொறுப்பு போறாது என்பது போல் நன்றாக நடமாடிக் கொண்டிருந்த அவளுடைய மாமியார் பக்கவாதம் வந்து படுக்கையில் விழுந்துவிட்டாள். வாழ்க்கையில் எந்த விதமான சந்தோஷங்கள் இல்லாவிட்டாலும், குடும்பத்தில் ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக பிரச்னைகள் தோன்றிக் கொண்டே இருந்தாலும் சுமதியின் முகத்தில் முறுவல் மறையாது. ''நமக்கு என்ன கொடுக்க வேண்டுமோ கடவுளுக்குத் தெரியும். தகுதிக்கு மீறிய வாழ்க்கை அமைய வேண்டும் என்று கடவுளிடம் வேண்டுவது முட்டாள்தனம் என்பாள் சுமதி.

வாழ்க்கைப் பற்றி சுமதி சொல்லும் அறிவுரைகள் ஜெயந்திக்குப் பிடிக்கும். எல்லாம் தெரிந்தவள் இதுபோல் சாதாரணமாக இருந்து விட்டாளே என்று சில சமயம் தோன்றும்.

ஜெயந்தியிடம் பேசுவது மனதிற்கு தெம்பு அளிப்பதாகவும், கஷ்டங்களை எதிர்கொள்ளும் சக்தி கிடைத்தாற்போல் உணருவதாக சுமதி அடிக்கடி சொல்வாள். ''ஜெயந்தி! பாலைவனமாகி இருக்கும் என் வாழ்க்கையில் சோலையை போல் உன் நட்பு கிடைத்திருக்கிறது'' என்பாள்.



''ச்சி... ச்சி... அப்படிச் சொல்லாதே. நானும் உன்னைப் போன்று சாதாரணமானவள்தான்.'' ஜெயந்தி சொல்வாள். தன்னால் இயன்றவரையில், வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் தனக்குக் கிடைக்கும் சந்தோஷங்களை சுமதியுடன் பகிர்ந்து கொள்வாள். சுமதியை சினிமாவுக்கு அழைத்துப் போவதும் அதற்காகத்தான்.

# 15

நான்கு நாட்களுக்கு முன்பே தன்னுடைய பிறந்தநாளன்று மாலையில் வீட்டுக்கு வருவதாகவும், இருவரும் சேர்ந்து சினிமாவுக்குப் போகலாம் என்றும் ஜெயந்தி சுமதியிடம் சொல்லியிருந்தாள். சுமதியும் சம்மதம் தெரிவித்திருந்தாள். அன்று சீக்கிரமாக வீட்டு வேலைகளை முடித்துக்கொள்வதாகவும், கணவனை சீக்கிரமாக வீட்டுக்கு வரச்சொல்லி குழந்தைகளை பார்த்துக் கொள்ளச் சொல்லப் போவதாகவும், கட்டாயம் வருவதாகவும் சுமதி ஜெயந்திக்கு வாக்குக் கொடுத்தாள்.

முன்பே பேசி வைத்துக் கொண்டது போல் சரியாக மாலை ஐந்து மணிக்கு புதுப்புடவையை அணிந்துகொண்டு, தலையில் மல்லிகைச் சரத்துடன் விளக்குச் சுடராய் ஜொலிக்கும் முகத்துடன் ஜெயந்தி சுமதியின் வீட்டுக்குச் சென்றாள்.

ஜெயந்தி போனபோது சுமதி வியர்வை வடியும் முகத்துடன், கலைந்த தலையுடன் சமையல் அறையில் பரபரவென்று வேலை செய்து கொண்டிருந்தாள். வீடு முழுவதும் உறவினர்களின் வருகையால் சந்தடியாக இருந்தது.

அந்த கும்பலை பார்த்ததும் ஜெயந்தியின் உற்சாகம் வடிந்துவிட்டது. ஜெயந்தியைப் பார்த்ததும் சுமதி கையில் இருந்த வேலையை நிறுத்திவிட்டு அருகில் வந்தாள். ''சாரி ஜெயந்தி! என்னால் வர முடியாது போலிருக்கு. மதியம் மூன்று மணி

ரயிலில் என் சின்ன மாமியாரும், அவளுடைய குடும்பத்தினரும் வந்திருக்கிறார்கள். அவர்களுக்காக சமையல் செய்து கொண்டு இருக்கிறேன்.'' சுமதியின் குரல் பலவீனமாக ஒலித்தது.

ஜெயந்திக்கு வருத்தமாகவும், வேதனையாகவும் இருந்தது. சுமதியை இரக்கத்துடன் பார்ப்பதைவிட அவளால் வேறு என்ன செய்யமுடியும்?

சுமதியின் சின்ன மாமியாரும், மற்றவர்களும் ஜெயந்தியை சூழ்ந்துகொண்டு மூச்சுவிடாமல் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

''இந்தப் புடவை என்ன விலை? இவ்வளவு மலிவாக உனக்கு எப்படி கிடைத்தது? பணம் தருகிறோம். எங்களுக்கும் இதேபோல் இரண்டு புடவைகளை வாங்கித் தாயேன்.'' இதுபோல் விடாமல் கேள்வி கேட்டு ஜெயந்தியை திணறடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஜெயந்தி எதோ பதில் சொல்லி சமாளிக்க முயன்றாள். பிறகு சுமதி கொடுத்த காபியைக் குடித்து, விட்டால்போதும் என்று அவசர அவசரமாக அந்த இடத்தை விட்டு வெளியேறினாள்.

ஜெயந்திக்கு உற்சாகம் பாதியாக வடிந்துவிட்டது. ஆனால் உடனே வீட்டுக்குப் போக வேண்டும் என்று தோன்றவில்லை. இன்றைய தினத்தை சுமதியுடன் சேர்ந்து எவ்வளவு உற்சாகமாக கொண்டாட நினைத்தாள். ஏதாவது சினிமா பார்த்து விட்டு அங்கிருந்தே ஹோட்டலில் இரவு சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு வீட்டுக்கு திரும்ப வேண்டும் என்று திட்டம் போட்டிருந்தார்கள்.

தனியாக நடந்து போய்க் கொண்டிருந்த ஜெயந்திக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. கடைசியில் தனியாகவே சினிமா போவது என்று முடிவு செய்தாள். வீட்டுக்கு போகும் வழியி லேயே ஒரு தியேட்டர் இருந்தது. பழைய ஆங்கிலப் படம் ஓடிக் கொண்டிருந்தது. நேரமாகி விட்டாலும் பரவாயில்லை. டிக்கெட்டு கிடைக்கும் இந்த தியேட்டரில் ஜெயந்தி பலமுறை மார்னிங்



ஷோக்களை பாத்திருக்கிறாள். மார்னிங் ஷோவுக்கு போவதில் சலுகை என்னவென்றால் பாதி டிக்கெட் விலையில் பால்கனிக்கு போகலாம்.

ஜெயந்தி போய்ச் சேரும்போது சினிமா தொடங்கிவிட்டது. மார்னிங் ஷோ இல்லை என்பதால் ஜெயந்தி வழக்கமாக உட்காரும் இருக்கையில் உட்காரவேண்டும் என்றால் முழுவிலை கொடுத்து டிக்கெட் வாங்க வேண்டும். பிறந்தநாள் என்றால் கொஞ்சம் ஸ்பெஷல் ஆக இருக்கவேண்டாமா? ஜெயந்தி முழுவிலை கொடுத்து பால்கனி டிக்கெட் வாங்கிக் கொண்டாள்.

சினிமா தொடங்கி விட்டதால் உள்ளே இருட்டாக இருந்தது. ஜெயந்தி தடுமாறிக் கொண்டே தான் வழக்கமாக உட்காரும் சீட்டை நோக்கிச் சென்றாள். சினிமா வந்து ரொம்ப நாட்களாகி விட்டதால் கூட்டம் அதிகமாக இல்லை. தட்டு தடுமாறி அருகில் போனபோது அவள் வழக்கமாக உட்காரும் நாற்காலியில் யாரோ உட்கார்ந்திருப்பது புரிந்தது. விலை அதிகம் ஆனாலும் செலவழித்துக் கொண்டு வந்தது அந்த சீட்டுக்காகதானே. இன்னிக்கு ஏனோ எல்லா விஷயங்களிலும் தனக்கு ஏமாற்றம் தான். வேறு வழியில்லாமல் அந்த நாற்காலிக்கு முன்னால் முதல் வரிசையில் இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

அவளைப் பொறுத்தவரையில் பிறந்தநாள் என்பது வருடப் பிறப்புக்கு சமம். அன்று நல்ல விதமாக கழிந்தால் ஆண்டு முழுவதும் நல்ல விதமாக இருக்கும் என்று நம்புவாள். அதன்படி இன்று தன்னுடைய சின்னச் சின்ன விருப்பங்கள்கூட நிறை வேறாமல் போனதால் வருடம் முழுவதும் ஏமாற்றமாக கழியும் போலும் என்று நொந்து கொண்டாள். சினிமாவில்கூட அவள் மனம் சரியாக பதியவில்லை. இடைவெளி வந்ததும் விளக்குகள் எரிந்தன். தன்னுடைய இருக்கையில் அமர்ந்து கொண்டு அவளையும் அறியாமல் தனக்கு ஏமாற்றம் ஏற்பட காரணமாக இருந்த அந்த நபர் யாராய் இருக்கும் என்று உள்ளூர கருவிக் கொண்டே ஜெயந்தி பின்னால் திரும்பிப் பார்த்தாள். அவனும் இந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தான்.

"நீங்களா?" வியப்பும், திகைப்பும் கலந்த குரலில் னாள் ஜெயந்தி.

"ஜெயந்தி!" ஆச்சரியமடைந்தவன் போல் பார்த்தான் ராஜசேகர்.

"அப்போ என்னுடைய சீட்டில் உட்கார்ந்து கொண்டது நீங்கதானா?" எதிர்பார்க்காத விதமாக ராஜசேகரை அங்கே பார்த்த ஜெயந்தி திகைப்பு மேலிட மனதில் இருந்ததை அப்படியே வெளியில் சொல்லி விட்டாள்.

"என்ன சொல்கிறாய்?" புரியாதவன்போல் கேட்டான் ராஜசேகர்.

ஜெயந்தி விஷயத்தைச் சொன்னாள். அவன் இதழ்களில் முறுவல் மலர்ந்தது எல்லாம் கேட்டுக் கொண்ட பிறகு. "போகட்டும். சினிமா இன்னும் முடியவில்லையே?" என்று சொல்லிக்கொண்டே எழுந்து பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

"தாங்க்ஸ்" ராஜசேகர் காலி செய்த நாற்காலியில் ஜெயந்தி அமர்ந்துகொண்டாள்.

"நீ மட்டும் தனியாக வந்திருக்கிறாயே?" ராஜசேகர் கேட்டான்.

துணைக்கு சுமதி வருவதாக இருந்ததையும், கடைசியில் அவளால் வரமுடியாமல் போனதையும் ஜெயந்தி விலாவாரியாக சொல்லத் தொடங்கினாள்.

ஜெயந்தி சொல்வதை அவன் காது கொடுத்து கேட்பது போல் தோன்றினாலும் கண்கள் மட்டும் புதுப்புடவையில் பதுமையைப்போல் இருந்த ஜெயந்தியை தலை முதல் கால் வரையில் கவனமாக பரிசீலித்துக் கொண்டிருந்தன. சுமதியைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்த ஜெயந்தி நடுவில் எதற்காகவோ நிறுத்தியபோது ராஜசேகர் தான் சொல்வதை கேட்கவில்லை என்றும் அவன் பார்வை தான் அணிந்து கொண்டிருந்த



புடவையின் மீது இருப்பதையும் உணர்ந்தாள். அந்தப் புடவை அவன் அனுப்பியதுதான் என்று நினைவுக்கு வந்ததும் வெட்கத்தால் அவள் முகம் கன்றி சிவந்துவிட்டது. கடவுளே காலையில் தான் இந்தப் புடவையை அணிந்து கொள்ளும்போதே இப்படி அவனைச் சந்திக்க வேண்டிவரும் என்று கனவில்கூட நினைக்கவில்லை.

"ஜெயந்தி! இந்தப் புடவையில் எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா? உண்மையாக சொல்கிறேன். நான் நினைத்ததைவிட இந்தப் புடவை உனக்கு ரொம்ப எடுப்பாக இருக்கிறது. அன்று என் நண்பர்களுடன் கடைக்குப் போனபோது கடைக்காரன் இந்தப் புடவையை எடுத்துப் போட்டதும் உன் நினைவுதான் வந்தது."

அதற்குள் இடைவெளி முடிந்ததற்கு அறிகுறியாய் விளக்குகள் அணைந்துவிட்டன.

'கடவுள்தான் தன்னைக் காப்பாற்றினார்' ஜெயந்தி நினைத்துக் கொண்டாள். இல்லாவிட்டால் தன் முகத்தில் தோன்றிய உணர்ச்சிகளை அவன் மிகச் சுலபமாக கண்டு பிடித்திருப்பான்.

"ஊரிலிருந்து எப்போ வந்தீங்க?" பேச்சை மாற்றுவதற்காக ஜெயந்தி கேட்டாள்.

"மதியம் மூன்று மணிக்கு."

"அந்த நேரத்தில் பிளயிட் இல்லையே?"

"பிளயிட்டில் வரவில்லை. நண்பனுடன் காரில் வந்தேன். வந்த பிறகு ரொம்ப போர் ஆக இருந்தது. கிளப்புக்கும் போக பிடிக்கவில்லை. உங்கள் வீட்டுக்கு வந்து உன்னைச் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவிப்போம் என்று நினைத்து கிளம்பினேன். பாதி வழியில் மனதை மாற்றிக்கொண்டு திரும்பிவிட்டேன். வீட்டுக்கு போகவும் மனமில்லை. அதான் இங்கே வந்தேன். வந்து உட்கார்ந்தேனே தவிர உன்னைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். நான் அனுப்பிய

புடவை அணிந்து கொண்டாயோ இல்லையோ? உனக்கு புடவையின் கலர் பிடித்ததோ இல்லையோ என்று பலவிதமாக யோசித்துக் கொண்டிருந்தேன்.'' தாழ்ந்த குரலில் ராஜசேகர் சொல்லிக் கொண்டிருந்தான்.

ராஜசேகர் பேசிய தோரணை ஜெயந்திக்கு ரொம்ப புதுமையாக இருந்தது. எதற்காகவோ தேடித் தேடி கிடைக்காமல் ஏமாற்றமடைந்த சமயத்தில் திடீரென்று கிடைத்தால் எப்படி இருக்குமோ அவன் குரல் அந்த மகிழ்ச்சி வெளிப்படையாக தெரிந்தது. ஜெயந்தி பதுமையை போல் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

# 16

சினிமா முடிந்ததும் ராஜசேகரும் ஜெயந்தியும் வெளியில் வந்தார்கள். படி இறங்கிக் கொண்டிருந்தபோது எதிரே சுவற்றில் பதித்திருந்த கண்ணாடியில் இருவரின் தோற்றமும் அருகருகில் தென்பட்டதை கவனித்து தங்களையும் அறியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

கீழே இறங்கி வந்த பிறகு ராஜசேகர் ஜெயந்தியின் தோளில் லேசாக தட்டிவிட்டு ''இங்கேயே இரு. நான் போய் காரை எடுத்துக் கிட்டு வருகிறேன்'' என்றான், ஒரு அடி முன்னால் வைத்தானோ இல்லையோ ''ஹாய் சேகர்!'' என்ற குரல் கேட்டது பின்னால் திரும்பிப் பார்த்தான்.

''சேகர்! ஊரிலிருந்து எப்போ வந்தாய்?'' அருகில் வந்த ரேகா உற்சாகம் பொங்கும் குரலில் கேட்டாள்.

வெங்காயச் சருகு போன்று வெள்ளை நிறப்புடவையில், வெள்ளை நிறத்திலேயே லோ கட் கையில்லாத ரவிக்கையுடன், தலையில் சூடிய மல்லிகைச்சரம் ஒரு பக்கமாக சரிய, முறுவலுடன் ரேகா நின்றிருந்தாள். எதிர்பாராதவிதமாக ராஜசேகரை



பார்த்ததில் ஏற்பட்ட சந்தோஷம் அவள் கண்களில் வெளிப் படையாக தெரிந்தது.

ஜெயந்தி மூச்சை அடக்கிக் கொண்டு நின்றிருந்தாள்.

''ஊரிலிருந்து எப்போ வந்தாய்?'' ரேகா மறுபடியும் கேட்டாள்.

''இன்றுதான். சினிமா தொடங்கப் போகிறது உள்ளே போ ரேகா.'' காரை நோக்கி நகரப் போனான் ராஜசேகர்.

''ஈவினிங் ஷோவுக்கு வந்திருந்தாயா?'' திடீரென்று ரேகாவின் பார்வை ஜெயந்தியின்மீது விழுந்தது. ஜெயந்திக்கு உள்ளங்கைகளில் வியர்த்துக் கொட்டியது.

''இருவரும் சேர்ந்துதான் வந்தீங்களா?'' ரேகா நேராக ஜெயந்தியிடம் கேட்டாள்.

என்ன பதில் சொல்வது என்று புரியாமல் ஜெயந்தி ராஜசேகர் பக்கம் பார்த்தாள்.

''இல்லை.'' ஜெயந்தியின் சார்பில் தானே பதில் சொன் னான்: பிறகு ஜெயந்தியின் பக்கம் திரும்பி ''நேரமாகிக் கொண்டி ருக்கிறது. வா ஜெயந்தி'' என்று சொல்லி விட்டு காரை நோக்கிச் சென்றான். முன்னால் போய்க் கொண்டிருந்த ஜெயந்தி நடுவில் ஒருதடவை பின்னால் திரும்பிப் பார்த்தாள். ரேகா கண்கள் அகல விரிய, புருவம் முடிச்சேற சிலையாக அதே இடத்தில் நின்று இந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கேட்டைத் தாண்டும்போது ஜெயந்தி சொன்னாள். ''இருவரும் சேர்ந்து வந்திருக்கிறோம் என்று நினைக்கிறாள் போலிருக்கு.''

''நினைத்துக் கொள்ளட்டுமே.'' அவன் குரலில் சலிப்பு தென்பட்டது. ஜெயந்தி மௌனமாக இருந்துவிட்டாள். சற்று நேரம் கழித்து அவனே சொன்னான். ''இன்று உனக்கு பிறந்தநாள். உனக்கு பார்ட்டி தர விரும்புகிறேன். உனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் ஏதாவது ஹோட்டலுக்கு போவோம்.''

ஜெயந்தி உடனே பதில் சொல்லவில்லை. அவள் முகத்தில் தெரிந்த தயக்கத்தை, சங்கடத்தை அவன் கவனிக்கவில்லை.

''ரொம்ப நேரமாகி விடுமோ என்னவோ'' என்றாள்.

''ஆகாது. அதற்கு நான் கியாரண்டி.'' ராஜசேகர் காரை ஹோட்டல் பக்கம் திருப்பினான்.

நகரத்திலேயே மிக உயர்ந்த ஹோட்டல்களில் அதுவும் ஒன்று. தொலைவிலிருந்து பார்க்கும்போது கட்டிடத்தின் புதுமை கண்களை ஈர்க்கும். பசுமையான புல்வெளிக்கு நடுவில் அழகான நீரூற்று. வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட நான்கு மாடிகள் கொண்ட கட்டடம். பார்கிங் ஏரியாவில் விலை உயர்ந்த கார்கள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

ஜெயந்தி இந்த ஹோட்டலை தொலைவிலிருந்து பார்த்திருக்கிறாள். மற்றவர்கள் சொல்லி கேள்விப்பட்டிருந்தாளே தவிர எப்போதும் உள்ளே போனதில்லை.

ராஜசேகரின் கார் ஹாரன் சத்தம் கேட்டதும் மூன்று நான்கு வேலையாட்கள் ஓடி வந்தார்கள். ஏதோ வேலையாக வெளியில் வந்த மேனேஜர் ராஜசேகரின் காரைப் பார்த்ததும் ஓடோடி வந்து குனிந்து பவ்யமாக கார் கதவைத் திறந்து விட்டார்.

''ரூஃப் கார்டென் ப்ரியாக இருக்கா?'' ராஜசேகர் கேட்டான்.

''இருக்கு சார்.'' மேனேஜர் சொன்னார்.

மாடிக்கு வந்த பிறகு ஜெயந்தியிடம் கேட்டான் ''என்ன சாப்பிடலாம்? உனக்கு எது பிடிக்கும்?''

''எனக்குத் தெரியாது.'' தெளிவற்ற குரலில் சொன்னாள் ஜெயந்தி.

மெனு கார்டை பார்த்து வேண்டியதை ஆர்டர் செய்த ராஜசேகர் அங்கேயே சற்று தள்ளி நின்றிருந்த மேனேஜரை பார்த்து ''நான் அரை மணிநேரம் இருந்துவிட்டு கிளம்புகிறேன். யூ கேன் கோ ஆன்'' என்றான்.



''ஓ.கே, சார்.'' மேனேஜர் மற்றொருமுறை வணக்கம் தெரிவித்து விட்டு அங்கிருந்து போய்விட்டார்.

ரூஃப் கார்டென் விசாலமாக, கொடிகளுடன் நடுநடுவில் அலங்கார விளக்குகளுடன் அழகாக இருந்தது. ஜெயந்தி பேரபெட்வால் அருகில் போய் நின்று கொண்டாள்.

அங்கிருந்து கீழே பார்த்தால் கார்கள் பொம்மை கொலுவில் இருப்பது போல் தென்பட்டன. வண்ண வண்ண விளக்குகளால் நகரம் ஜெகஜ்ஜோதியாக காட்சியளித்தது. ஜெயந்திக்கு ஒரு நிமிடம் தான் இந்த பூவுலகில் இல்லாதது போல் தோன்றிது. மூன்று மணி நேரத்திற்கு முன் சலிப்பும், ஏமாற்றமும் ஆக தென்பட்ட உலகம் இப்பொழுது இவ்வளவு ரம்மியமாக காட்சியளிப்பானேன்? ராஜசேகரின் கையில் மந்திரக்கோல் ஏதாவது இருக்கிறதோ! நினைக்கும் போதே ஜெயந்திக்கு சிரிப்பு வந்தது.

''என்ன? உனக்குள் நீயே சிரித்துக் கொள்கிறாயே?''

இந்த உலகத்தையே மறந்துவிட்டாற்போல் நின்றிருந்த ஜெயந்தி திடுக்கிட்டு பின்னால் திரும்பினாள். பின்னால் வெகு அருகில் நின்றிருந்த ராஜசேகர் ஜெயந்தியை கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்களில் ஒரு விதமான ஒளி தென்பட்டது. அவன் பார்வை ஜெயந்தியின் ஒவ்வொரு அங்கத்தையும் சங்கோசமின்றி பரிசீலித்துக் கொண்டிருந்தது. இருவரின் விழிகளும் ஒரு விநாடி சந்தித்துக் கொண்டன. ஜெயந்தி பதட்டமடைந்தவளாய் பார்வையை தாழ்த்திக் கொண்டு ''ஒன்றுமில்லை'' என்று சொல்லிவிட்டு திரும்பி வந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

ஜெயந்தியின் பின்னால் அவன் வரவில்லை. ரொம்ப நேரம் அங்கேயே நின்றுவிட்டான். ஜெயந்தியின் பக்கம் முதுகை காட்டிக் கொண்டு பேண்ட ஜேபியில் கைகளை நுழைத்து ஏதோ யோசிப்பது போல் கீழே பார்த்தவாறு நின்றிருந்தான். திடீரென்று அவன் மௌனமாக, கம்பீரமாக மாறிவிட்ட காரணம் என்னவென்று ஜெயந்திக்குப் புரியவில்லை.

கண்ணுக்கும், மனதிற்கும் ரம்மியமாக இருந்த அ
சூழ்நிலையில் இன்னும் கொஞ்ச நேரம் இருக்க வேண்டுமெ
ஜெயந்திக்கு தோன்றியது. ஆனால் நேரமாகிவிட்டது சீக்கிர
கிளம்ப வேண்டும் என்று ராஜசேகர் அவசரப்படுத்தின
வரும்போது வேண்டுமென்றே படிவழியாக அழைத்து வந்தவ
கிளம்பும்போது தாமதத்தை பொறுக்க முடியாதவன்போ
லிஃப்டில் போகலாம் என்றான். ஜெயந்தி மௌனம
இருந்துவிட்டாள்.

வீட்டின் அருகில் வந்த பிறகு காரை விட்டு இறங்
கொண்டே ''தாங்க்ஸ்'' என்றாள் ஜெயந்தி.

''எதற்கு?''

ஜெயந்திக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை
பதுமையை போல் அவனைப் பார்த்துக் கொண்டே நின்
விட்டாள்.

காரை ஸ்டார்ட் செய்யப் போனவன் திடீரென்று ''ஒ
விஷயம் சொல்ல மறந்துவிட்டேன். நீ என்னைவிட வயதி
ரொம்ப சின்னவள். மரியாதைக்காக பன்மையில் விளித்தாலு
சில சமயம் மறந்துபோய் ஒருமையில் அழைத்து விடுகிறே
தவறாக எடுத்துக் கொள்ள மாட்டாய் இல்லையா?'' என்றான்.

''அதனால் என்ன? பரவாயில்லை. நான் தவறாக நினைத்து
கொள்ளவில்லை'' என்றாள்.

''வருகிறேன். குட்நைட்.''

ஜெயந்தி பார்த்துக் கொண்டிருந்தபோதே கார் போ
விட்டது. வீட்டுக்கு வந்து படுத்துக்கொண்ட ஜெயந்திக்
எல்லாம் நன்றாக இருப்பதுபோல் தோன்றினாலும் மனதில் ஏதே
ஒரு மூலையில் லேசாக அதிருப்தியாக உணர்ந்தாள். சினி
ஹாலில் அவ்வளவு நெருக்கமாக, இனிமையாக பேசிய ராஜசே
திடீரென்று மாறிய காரணம் என்ன? முக்கியமாக ஹோட்டலு
போன பிறகு தன் பக்கம் முதுகைக் காட்டி நின்று கொண்டு தா
ஒருத்தி அங்கே இருப்பதையே மறந்து விட்டாற் போ



அவ்வளவு மௌனமாக இருந்தது ஏன்? திடீரென்று ஜெயந்திக்கு நினைவு வந்தது. ரேகாவைப் பார்த்த பிறகுதான் அவனிடம் அந்த மாறுதல் வந்தது என்று.

# 17

அன்று ஜெயந்தி போகும் போதே தாமதமாகி விட்டது. எழுத வேண்டிய கடிதங்கள் நிறையவே இருந்தன. முதல் நாள் வந்த தபால் முழுவதுமாக பிரித்துப் பார்க்கவில்லை. டைப் செய்யச் சொல்லி ராஜசேகர் கொடுத்திருந்த வேலையும் பாக்கி இருந்தது. வேக வேகமாக வந்த ஜெயந்தி திரைச்சீலையை விலக்கிக் கொண்டு உள்ளே நுழையப் போனவள் திகைப்புடன் அப்படியே நின்று விட்டாள். அவள் கை விரல்கள் திரைச்சீலையை பலமாக பற்றிக்கொண்டன.

அறையில் அவன் வழக்கமாக உட்கார்ந்து கொள்ளும் நாற்காலியில் சிவப்பாக, ஒல்லியாக இருந்த இளைஞன் ஒருவன் அமர்ந்து கொண்டு பேப்பர்களை பார்த்துக் கொண்டிருந்தான். ஜெயந்திக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அவன் யாரென்று தெரியவில்லை. இதற்கு முன் பார்த்ததும் இல்லை. அதற்குள் அவனே நிமிர்ந்து பார்த்துவிட்டு ''ஹலோ!'' என்றான். ஒரு நிமிடம் ஜெயந்தியை உற்று நோக்கி விட்டு ''உள்ளே வாங்க'' என்றான். ஜெயந்தி மேலும் வியப்படைந்து கண்கள் அகல விரிய பார்த்துக் கொண்டிருந்தாள்.

திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தவன்போல் ''ஓ! நீங்க வனிதா விஹார் நிறுவனத்தின் செகரெட்டரிதானே. உள்ளே வாங்க'' என்று உரிமையுடன் அழைத்தான். ஜெயந்தி மெள்ளமாக உள்ளே வந்தாள்.

''என்ன வேலையாக வந்தீங்க? நன்கொடைக்காகவா?'' ஜெயந்தியை பார்த்துக் கொண்டே ஏளனமாக கேட்டான். ஜெயந்தி

கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாளே தவிர பதி
எதுவும் சொல்லவில்லை.

அந்த பார்வைக்கு அவன் சங்கடமாக நாற்காலியி
நெளிந்தான். "இப்படி கேட்கிறேன் என்று உங்களுக்கு என்
கோபம் வருகிறதோ என்னவோ. அதைப் பற்றி எனக்
கவலையில்லை. ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டும் என்றா
நீங்க வந்த நேரம் சரியில்லை. திருவாளர் ராஜசேகரின் செகரெட்
சிவராமன் இந்த அறையில் இருக்கும் வரையில் நீங்
அவரிடமிருந்து ஒரு ரூபாய்கூட எடுத்துக் கொண்
போகமுடியாது."

"நான்... நான்..." ஜெயந்தி ஏதோ சொல்லப் போனாள்.

"மன்னிக்கணும். தனிப்பட்ட முறையில் உங்களை எதுவு
சொல்லவில்லை என்பதை நீங்க புரிந்துகொள்ள வேண்டு
வேண்டுமானால் நேராக வனிதா விஹார் நிறுவனத்தி
வைஸ்பிரசிடெண்ட் சுமித்ராவிடம்போய் சிவராமன் அவமான
படுத்துவதுபோல் பேசினான் என்று சொல்லுங்கள். அது மட்டுமே
இல்லை. வனிதா விஹார் என்றாலும், அதில் இருப்பவர்க
நன்கொடையை வசூல் செய்து செலவு செய்யும் விஷயத்திலு
எங்கள் யாருக்கும் நல்ல அபிப்பிராயமும் கிடையாது என்பதை
யும் சொல்லுங்கள்."

"நான்... நான் இப்போ அவர்களிடம் செகரெட்ரியா
இல்லை." பாதியில் அவனை இடைமறிப்பது போல் உரத்
குரலில் சொன்னாள் ஜெயந்தி.

"உண்மையாகவா? அப்போ என்னை மன்னித்துவிடுங்கள்
என்னுடைய வாழ்த்துக்களையும் ஏற்றுக் கொள்ளுங்கள். ஆமாம்
எதற்காக வேலையை விட்டீங்க? நீங்களே விட்டீங்களா இல்லை
அவர்களே போகச் சொல்லி விட்டார்களா?" சற்று குனிந்
ஆர்வத்துடன் கேட்டான்.

"நான்தான் விட்டுவிட்டேன்." ஜெயந்திக்கு கொஞ்சம்
துணிச்சல் வந்துவிட்டது. விடுமுறையில் சென்ற செகரெட்
இவன்தானா!



"குட். உங்களுடைய துணிச்சலை பாராட்ட வேண்டியது
தான். அது போகட்டும். வனிதா விஹார் செகரெட்ரியாக இல்லாத
பட்சத்தில் இங்கே எதற்காக வந்தீங்க?" கேள்விக்குறியுடன்
புருவங்களை உயர்த்தியவன், உடனே ஏதோ புரிந்தாற்போல்
பிரசன்னமாக பார்த்துக்கொண்டே "புரிந்து விட்டது. ஏதாவது
வேலையை பார்த்து தரச்சொல்லிகேட்க வந்திருக்கீங்க. அப்படித்
தானே?"

தன்னுடைய பேச்சை காதில் வாங்கிக் கொள்ளாமல், தன்
முகத்தில் தோன்றும் உணர்ச்சிகளை கவனிக்காமல் பேசிக்
கொண்டே போவதைப் பார்க்கும்போது ஜெயந்திக்கு சிரிப்பும்,
கோபமும் இரண்டும் ஏற்பட்டன. கேள்வி கேட்டவன் பதில்
சொல்லும் வரையில் காத்திருந்தால்தானே!

ஜெயந்தி வாய் திறந்து ஏதோ சொல்ல முற்படும் முன்
அவனே மேலும் சொன்னான்.

"எந்த வேலைக்காக முயற்சி செய்யப் போறீங்க? எதுவாக
இருந்தாலும் அவர் கட்டாயம் உதவி செய்வார். அதற்காக
முன்னாடியே வாக்குக் கொடுத்துவிட மாட்டார். 'ஆகட்டும்,
பார்க்கலாம்' என்றுதான் சொல்வார். அவர் அப்படி சொன்னார்
என்றாலே காரியம் முடிந்து விடும் என்றுதான் அர்த்தம். அது
போகட்டும் தெரியாமல்தான் கேட்கிறேன். வனிதா விஹாரில்
செகரெட்ரியாக வேலை பார்த்த உங்களுக்கு வேறு வேலை
உடனே கிடைப்பது அவ்வளவு சுலபம் இல்லை என்று
நினைக்கிறேன். அவர்கள் உங்களை நிம்மதியாக இருக்கவிட
மாட்டார்கள்."

ஜெயந்தியால் இனிமேலும் பொறுமையாக இருக்க
முடியவில்லை.

"நீங்க விடுமுறையில் சென்று இருந்ததால் தற்காலிகமாக
அந்த வேலையில் நான் சேர்ந்திருக்கிறேன்."

"வ்வாட்! நீங்க... நீங்க..." சோவென்று பெய்து கொண்டி
ருந்த மழை திடீரென்று நின்று விட்டாற்போல் அவன் பேச்சு
தடைப்பட்டது.

''ஆமாம். தற்சமயம் டெம்பரரியாக.... அதாவது நீங் திரும்பி வரும் வரையில் அவரிடம் செகரெட்ரியாக வேலை பார்க்கிறேன்.'' சொன்ன விஷயத்தை உறுதிப்படுத்துவதுபோ மற்றொரு முறை சொன்னாள் ஜெயந்தி.

''வாட்! வாழ்க்கையில் எப்போதும் பெண் இனத்தை... அ பூச்சியமாக இருந்தாலும் சரி இந்த வீட்டில் நுழைவதற் அனுமதி தராத ராஜசேகர்!'' வியப்பின் மிகுதியில் மனதி நினைத்ததை வெளியில் சொல்லிக் கொண்டிருந்தவன் உடனே சமாளித்துக் கொண்டு ''சாரி... ரியல்லி வெரி வெரி சாரி. வாங் உங்க சீட்டில் வந்து உட்காருங்க.'' என்று சொல்லிக் கொண்டே நாற்காலியை விட்டு எழுந்து கொண்டான். அவன் முகத்தி வியப்பு இன்னும் மறையவில்லை.

அதைக் கவனித்த ஜெயந்தி அவனைத் தடுத்துவிட்டாள் 'இல்லை... இல்லை. நீங்கள் வரும் வரையில்தான் எனக்கு வேலை. இப்பொ நீங்க வந்து விட்டீங்க இல்லையா. அந்த சீட் உங்களுடையதுதான்.'' எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டே சொன்னாள்.

உண்மையும் அதுதானே. சிவராமன் திரும்பிவரும் வரையில் தானே தன்னை வேலையில் இருக்கச் சொன்னான். இதற்கிடை யில் வேறு வேலையை தேடிக் கொள்ளமுடியும் என்று நினைத்தாள். வேலை கிடைக்கவே இல்லை. சிவராமன் வந்து விட்டான். அவன் வரும் நாள் நெருங்கிக் கொண்டிருப்பதா ராஜசேகரும் சொல்லவில்லை. இப்பொ தான் என்ன செய்வது இங்கே வேலைக்கு சேர்ந்த பிறகு தான் முனைந்து வேறு வேலையை தேடவே இல்லையே? இதயத்தை யாரோ அழுத்துவது போல் இருந்தது ஜெயந்திக்கு.

''நான் திரும்பி வந்தது உண்மைதான். ஆனால் இந்த வேலையை தொடரப் போவதில்லை. இன்னும் சொல்லப் போனால் ராஜிநாமா கொடுத்துவிட்டு போவதற்காகத்தான் வந்தேன்'' என்றான்.



''அப்படி என்றால்?''

''மூன்று மாதங்களுக்கு முன் நான் முயற்சி செய்த வேலை இப்பொ கிடைத்துவிட்டது. செண்ட்ரல் கவர்னமெண்ட் ஜாப். ஆபீசர் போஸ்ட். ராஜசேகர்தான் என்னை அந்த வேலைக்கு அப்ளிகேஷன் போடச் செய்தார். எனக்காக முயற்சியும் செய்தார். பிரமோஷனுக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அந்த வேலை எனக்குக் கிடைத்தது என்றால் அவருடைய கருணைதான். உலகில் எத்தனைபேர் என்னைப்போல் எம்.ஏ. ஃபஸ்ட் கிளாஸில் பாஸ் செய்தவங்க இருக்காங்க...!

ஜெயந்திக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. அப்பொ சிவராமன் வேறு வேலையில் சேரப்போகிறானா!

'வெளிப்படையாக சொன்னால் அவரை துதிபாடுவதுபோல் இருக்கும். தெரியாமல்தான் கேட்கிறேன். நமக்கு நல்லது செய்த வங்களைப் பற்றிச் சொல்லாமல் கெடுதல் செய்தவங்களைப் பற்றிப் பேசுவோமா?'' சிவராமனின் பேச்சு மறுபடியும் சூடு பிடித்தது. ''என் வாழ்க்கையில் இதுபோன்ற பரோபகாரியை எங்கேயும் பார்த்ததில்லை. கருணைவள்ளல். எனக்கு இந்த செகரெட்ரி வேலையை விட்டுவிட்டு போக வேண்டும் என்றால் வருத்தமாக இருக்கு. நான் சேரப்போகும் புது வேலையில் எனக்கு மதிப்பு, மரியாதை கிடைக்கலாம். ஆனால் அவருடைய செகரெட்ரியாக இருந்தால் உலகத்தை பார்க்கும் வாய்ப்பு அதிகம்.'' சற்று நிறுத்தி விட்டு மீண்டும் சொன்னான். ''வேறொரு விதத்தில் பார்த்தால் இங்கிருந்து போவது எனக்கு மகிழ்ச்சி யாகவும் இருக்கு.''

''ஏன் அப்படி?'' ஜெயந்தியால் அந்தக் கேள்வியை கேட்காமல் இருக்க முடியவில்லை.

''பாட்டியுடன் எனக்கு எப்போதும் தகராறுதான். விஜய வாடாவுக்கு அருகில் ஒரு குக்கிராமம் எங்களுடையது. அங்கே சின்ன வீடும், ஒரு ஏக்கர் நிலமும் இருக்கு. அந்தக் கிராமத்தில் இருக்கணும் என்றால் ரொம்ப கஷ்டம். பொழுதே போகாது.

எப்படியோ கஷ்டப்பட்டு படிப்பை முடித்துவிட்டு ராஜசேகர் சாரிடம் செகரெட்ரியாக சேர்ந்து விட்டேன். எங்க பாட்டி சும்மாவே இருக்க மாட்டாள். பண்டிகை, பிறந்தநாள், திவசம் திங்கள் என்று ஏதாவது சாக்கு வைத்துக் கொண்டு ஊருக்கு வரச்சொல்லி கடிதம் எழுதுவாள். கடிதம் என் கையில் கிடைத்தால் கிழித்துப் போட்டு விடுவேன். கடிதமே கிடைக்க வில்லை என்று புளுகிவிடுவேன். இரண்டு மூன்று முறை இப்படி ஆனதும் பாட்டி கண்டு பிடித்துவிட்டாள். என்னை ஊருக்கு வரவழைக்க வேறு விதமாக திட்டம் போட்டாள். தனக்கு உடல்நிலை சரியாக இல்லை என்றும், படுத்தப் படுக்கையாக இருப்பதாகவும், பேரனை ஊருக்கு அனுப்பச் சொல்லி நேராக அவருக்கே ஒரு தபால் கார்டை எழுதிப் போட்டுவிடுவாள். அந்தக் கடிதம் வருவதுதான் தாமதம். உடனே ஊருக்குக் கிளம்பு என்று சார் அவசரப்படுத்துவார். போக வர டிக்கெட்டுக்கு பணம் கொடுத்து, குண்டுக்கட்டாக என்னை தூக்கிக் கொண்டு போய் ரயிலில் ஏற்றிவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பார்.''

''அப்படி என்றால் உங்கள் பாட்டியின் உடல் நிலை?'' பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டே ஜெயந்தி கேட்டாள்.

''நல்லா கேட்டீங்க. எங்க பாட்டியை ஒரு தடவை நேரில் பார்த்தீங்கன்னா இந்த ஜென்மத்தில் என்ன இன்னும் பத்து ஜென்மம் எடுத்தாலும் உடம்புக்கு ஒன்றும் வராது என்பதை புரிந்துகொள்வீங்க. அவ்வளவு தெம்பாக, திடமாக இருப்பாள்.''

''அப்பொ என்ன செய்வீங்க?''

''என்ன செய்வேனா? அக்கம் பக்கத்து கிராமங்களில் சுற்றி அலைந்து ஒரு டாக்டரை தேடி கண்டுபிடித்து எங்க பாட்டியிடம் அவர் டாக்டர் என்று தெரியாதபடி வீட்டுக்கு அழைத்து வருவேன். நோயும் இல்லை என்றும், நலமாக இருக்கிறாள் என்றும் சர்டிபிகேட் தருவார். அதை எடுத்து வந்து ராஜசேகர் சாரிடம் கொடுப்பேன். இந்த முறை டாக்டர் கிடைப்பதில் தாமதம் ஆகிவிட்டது. ஒவ்வொரு முறையும் சர்டிபிகேட் கொடு



என்று கேட்டால் அங்கே இருக்கும் டாக்டர்கள் என்னை பைத்தியக்காரனை போல் பார்க்கிறார்கள். நல்ல வேளை. அவரே என்னை வரச்சொல்லி கடிதம் போட்டு விட்டார்.''

கடைசியாக சிவராமன் சொன்னதை கேட்ட பிறகு ஜெயந்தியின் மனம் வேறுவிதமாக யோசிக்கத் தொடங்கியது. அப்படியானால் சிவராமன் வரப்போவது ராஜசேகருக்கு முன்னா டியே தெரியும். சிவராமனுக்கு பெரிய வேலை கிடைக்கப் போவதை தன்னிடம் ஏன் சொல்லவில்லை? அப்படிச் சொன்னால் தான் எப்போதும் இங்கேயே இருந்து விடுவோம் என்று பயப்படுகிறானோ?

ஜெயந்தி, சிவராமன் பேச்சில் கவனம் செலுத்த முயன்றாள்.

''நீங்க ரொம்ப அதிர்ஷ்டசாலி. எப்படி என்று கேட்கிறீங் களா? ஒரு ரூபாய்கூட செலவழிக்காமல் ஊரில் நடக்கும் நல்ல நல்ல நிகழ்ச்சிகளை முதல் வரிசையில் கால்மேல் கால்போட்டு உட்கார்ந்து கொண்டு நிம்மதியாக பார்க்கலாம், ஒன்றா இரண்டா! கிரிக்கெட் மேட்ச், டான்ஸ், டிராமா...எல்லாவற்றையும் இலவசமாக பார்த்து விடலாம். அவருக்கு எல்லா கிளப்புகளிலும் மெம்பர்ஷிப் இருக்கிறது. என்னைக் கேட்டால் இந்த உலகிலேயே அவருடைய செகரெட்ரியாக இருப்பதைவிட அதிர்ஷ்டம் வேறு எதுவும் இல்லை என்பேன்.''

மூச்சுவிடாமல் சொல்லிக்கொண்டு இருந்தவன் வெளியி லிருந்து ''சிவராமன்! யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறாய்?'' என்ற குரல் கேட்டதும் சுவிச்சை அழுத்தியது போல் பேச்சை நிறுத்திவிட்டான். ஜெயந்தி திடுக்கிட்டு வாசல் பக்கம் பார்த்தாள். வெளியில் நாயரிடம் ஏதோ சொல்லி விட்டு உள்ளே வந்த ராஜசேகர் ''யாரை அதிர்ஷ்டசாலி என்கிறாய்?'' என்றான். ஜெயந்தியை பார்த்து விட்டு ''அட! நீங்க வந்து விட்டீங்களா?'' என்று முறுவலித்தான்.

சிவராமன் பதில் எதுவும் சொல்லவில்லை. எழுந்து நின்று ராஜசேகரின் வாயிலிருந்து வரப்போகும் வார்த்தைகளுக்காக காத்திருந்தான்.

"அமைச்சரிடம் கொடுக்க வேண்டிய திராட்டை தோட்டத்தன்தா வேஜுகன் இங்கே இல்லையா?" ராஜசேகர் அலமாரியில் இருந்த பைல்களில் தேடப்போனான்.

"இதோ எடுத்துத் தருகிறேன்." சிவராமன் அருகில் சென்று தேடி எடுத்துக் கொடுத்தான். ராஜசேகர் அந்த பைலை புரட்டிக் கொண்டே ஜன்னல் அருகில் நின்று விட்டான். அது வரையில் மூச்சுவிடாமல் பேசிக் கொண்டிருந்த சிவராமன் இப்போ வாயடைத்துப் போனவனாக மௌனமாக இருப்பதை பார்க்கும் போது ஜெயந்திக்கு வியப்பாக இருந்தது. தனியாக தன்னுடன் இருக்கும்போது இருக்கும் ராஜசேகருக்கும், வேறு யாராவது இருந்தால் அவர்கள் முன்னால் இருக்கும் ராஜசேகருக்கும் எவ்வளவு வித்தியாசம்!

பைலை பார்த்து முடித்துவிட்ட ராஜசேகர் அதை சிவராமனிடம் கொடுத்தான். "அனந்தாசாரியிடம் நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அவரைப்போய் பாரு. எவ்வளவு சீக்கிரமாக அவரைச் சந்திக்கிறாயோ அவ்வளவு நல்லது. காரை எடுத்துக் கொண்டு போ. அவர் வீட்டில் இல்லை என்றால் கொஞ்ச நேரம் காத்திருந்தாவது அவரைப் பார்த்துவிட்டு வா" என்றான்.

"வெல் சார்." தாழ்ந்த குரலில் சொன்னான் சிவராமன். ராஜசேகர் வெளியே போகப் போனவன் நின்று ஜெயந்தி பக்கம் பார்த்துக்கொண்டே "அந்த பேப்பர்களை டைப் செய்து விட்டீர்களா? இன்று மாலையில் எனக்கு தேவைப்படும்" என்று சொல்லிவிட்டுப் போனான். சிவராமனும் அவனுக்கு பின்னாலேயே சென்று விட்டான்.

ஜெயந்திக்கு நேற்று சினிமா ஹாலில் பார்த்த ராஜசேகரும் இப்போ தான் பார்த்துக் கொண்டிருக்கும் ராஜசேகரும் ஒன்றுதானா என்ற சந்தேகம் வந்தது.

டைப் செய்து முடித்துவிட்டு அன்று வந்த தபால்களை பார்த்துக் கொண்டிருந்தாள். ராஜசேகர் உள்ளே வந்து "உங்கள்



வேலை முடிந்து விட்டது என்றால் கிளப்புக்கு போகும்போது உங்களை வீட்டில் டிராப் செய்து விட்டுப் போகிறேன். கார் இல்லை. சிவராமன் எடுத்துக் கொண்டு போயிருக்கிறான்" என்றான்.

அவன் உடைகளை மாற்றிக்கொண்டு வருவதற்குள் ஜெயந்தி வேலையை முடித்துவிட்டு தயாராக இருந்தாள்.

வீட்டுக்கு போகும்போது "சிவராமன் என்ன சொன்னான்?" என்று உரையாடலை தொடங்கினான் ராஜசேகர்.

"உங்களுக்கு செகரெட்ரியாக இருப்பது பெரிய அதிர்ஷ்டமாம். இதில் இருக்கும் வசதிகள் வேறு எங்கேயும் இருக்காதாம்" என்று சொன்னாள்.

ராஜசேகர் சிரித்து விட்டு பேசாமல் இருந்தான். சிரிக்கும் போது அவன் அழகாக, நெருக்கமானவனாக இருப்பதை ஜெயந்தி உணர்ந்தாள்.

"வேடிக்கை என்ன தெரியுமா? உனக்கு வேறு வேலை கிடைக்கும் வரையில் சிவராமன் விடுமுறையிலிருந்து வரக் கூடாது என்று தோன்றியது. ஆனால் இப்பொழுது சிவராமன் அளவுக்கு நல்ல செகரெட்ரி கிடைக்கும் வரையில் உன்னை போக விடக்கூடாது என்று தோன்றுகிறது. போகவும்விட மாட்டேன்" என்றான் திடமான குரலில்.

தலையைத் திருப்பி அவனைப் பார்க்க வேண்டும் என்ற விருப்பத்தை வலுக்கட்டாயமாக அடக்கிக் கொண்டாள். சற்றுமுன் சிவராமன் வந்துவிட்ட பிறகு தான் என்ன செய்வது என்று பயந்து போன மனம்தான் இப்பொழுது இன்னொரு செகரெட்ரி கிடைக்கும் வரையில் தன்னை போகவிட மாட்டேன் என்று ராஜசேகர் சொன்னதைக் கேட்டு பதட்டமடைகிறது.

"என்னிடம் செகரெட்ரியாக இருந்ததில் என்ன லாபம் கண்டு விட்டானாம்?" ராஜசேகர் கேட்டான்.

"ஊரில் நடக்கும் நிகழ்ச்சிகளை பைசா செலவில்லாமல் முதல் வரிசையில் உட்கார்ந்து கொண்டு பார்க்கலாமாம்."

ராஜசேகர் சிரித்து விட்டான். "ஆமாம். உண்மைதான். அந்த வேலையை நீகூட ஏன் செய்யக்கூடாது?'' என்றான்.

'ஏற்கனவே செய்து கொண்டுதான் இருக்கிறேன். உங்களுக்கு வரும் அழைப்பிதழ்களை பயன்படுத்தி சுமதியும், நானும் நல்ல நல்ல நிகழ்ச்சிகளுக்கு போய்க் கொண்டுதான் இருக்கிறோம்' என்று சொல்லிவிட வேண்டுமென்று ஜெயந்திக்குத் தோன்றியது. ஆனால் சொல்ல முடியாமல் குரல் வளையத்தில் ஏதோ தடுப்பது போல் இருந்தது.

'இப்போ வீட்டுக்குப் போன பிறகு என்ன செய்வாய்?'' ராஜசேகர் கேட்டான்.

"நானா?'' ஏதோ யோசனையில் இருந்தவள் அதே நினைப்பில் ''வீட்டுக்குப் போனதும் குளித்து உடைகளை மாற்றிக் கொண்டு பாட்டி கொடுக்கும் காபியை குடிப்பேன். பிறகு கட்டில் மீது படுத்துக் கொண்டு எதைப்பற்றியாவது யோசித்துக் கொண்டிருப்பேன்'' என்றாள்.

''என்ன யோசிப்பாய்?''

''மனதிற்கு எது தோன்றினால் அது.'' ஜெயந்திக்கு திடீரென்று நினைவுக்கு வந்தது. அவன் மறுபடியும் முன்போல் நெருக்கமாக பேசுகிறான் என்று.

வீடு அருகில் வந்து விட்டது. காரை விட்டு இறங்கும் முன் ஜெயந்தி திடீரென்று கேட்டாள். ''கிளப்புக்கு போன பிறகு நீங்க என்ன செய்வீங்க?'' கேட்ட பிறகுதான் புரிந்தது எவ்வளவு அர்த்தமற்ற கேள்வி அது என்று. பார்வை தானா தரையில் பதிந்தது.

''போனதும் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு ஏதாவது புத்தகத்தை கையில் எடுத்துக்கொண்டு படிப்பதுபோல் பாவனை செய்து கொண்டே உன்னைப் பற்றி யோசிப்பேன்.''

ஜெயந்தி சட்டென்று கண்களை உயர்த்திப் பார்த்தாள். இந்த முறை ராஜசேகரின் இதழ்களில் மட்டும் இல்லை. கண்களிலும் சிரிப்பு தென்பட்டது.



ஜெயந்தி சட்டென்று கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கிவிட்டாள். ஏனோ தெரியவில்லை. அவனுடைய சிரிப்பு அவள் மனதைத் தொட்டு கிளுகிளுப்பை ஏற்படுத்தியது போல் இருந்தது. அவளையும் அறியாமல் முகம் சிவந்து விட்டது. பின்னால் திரும்பிப் பார்க்கும் துணிச்சல் இருக்கவில்லை. வேகமாக நாலடி தன்னுடைய வீட்டை நோக்கி வைத்தாள் அவனுடைய கார் ஸ்டார்ட் ஆன சத்தம் கேட்டு மெதுவாக திரும்பிப் பார்த்தாள். அதற்குள் கார் கிளம்பிவிட்டது.

# 18

ரவீந்திர பாரதியில் நாட்டிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து ஒரு வாரமாக நடந்து கொண்டிருந்தன. வெவ்வேறு மாநிலங்களி லிருந்து பிரபல நடனகலைஞர்கள் அந்த விழாவில் பங்கு பெற வந்திருந்தார்கள். இது போன்ற வாய்ப்பு எப்போதோதான் கிடைக்கும். ராஜசேகர் ஒதுக்கித் தள்ளிய அழைப்பிதழை பத்திரமாக எடுத்து வைத்துக் கொண்ட ஜெயந்தி சுமதியுடன் அந்த நிகழ்ச்சியை பார்க்கக் கிளம்பினாள். முதல் இரண்டு நாட்கள் சுமதி, ஜெயந்தி போவதாகவும், அடுத்த இரண்டு நாட்கள் சுமதியின் கணவர் தன்னுடைய நண்பருடன் போவதாகவும். கடைசி இரண்டு நாட்கள் மறுபடியும் ஜெயந்தி, சுமதி போவதாக முடிவு செய்தார்கள்.

முதல் நாள் கமலாலட்சுமண் நாட்டிய நிகழ்ச்சி. தாமதமாக போனால் கடைசி வரிசையில் உட்கார வேண்டியிருக்குமோ என்று நினைத்துக் கொண்டு ஜெயந்தியும், சுமதியும் நான்கு மணிக்கே கிளம்பிவிட்டார்கள். இரண்டு பஸ்கள் மாறி ரவீந்திர பாரதியை போய்ச் சேரும்போது நிகழ்ச்சி தொடங்க பத்து நிமிடங்கள்தான் இருந்தன.

''எத்தனை கார்கள் பார்த்தாயா?''

வரிசையாக நிறுத்தப்பட்ட கார்களை பார்த்துக்கொண்டே சுமதி சொன்னாள்.

''கார்களை விடு. மனிதர்களை பாரு, எத்தனை விதமான மனிதர்கள்!'' என்றாள் ஜெயந்தி.

''என்னவோப்பா. இது போன்ற இடங்களுக்கு வந்தால் நாம் ரொம்ப தாழ்ந்தவர்கள் போல் தோன்றும்.'' சுமதி பெருமூச்சு விட்டாள்.

''உண்மைதான் சுமதி! எனக்கும் அப்படித்தான் தோன்றும். இது போன்ற இடங்களுக்கு வருவதானால் பத்துபேர் அடையாளம் கண்டு கொள்ளும் விதமாக நம்மிடம் ஏதாவது சிறப்பு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நன்றாக இருக்கும்.''

''ஹலோ மிஸ் ஜெயந்தி!''

பின்னாலிருந்து யாரோ பெயர் சொல்லி அழைத்ததும் ஜெயந்தி சட்டென்று பின்னால் திரும்பினாள். சுமதியும் திரும்பிப் பார்த்தாள். எதிரே மிடுக்காக உடையை அணிந்துகொண்டு, புதிதாக கிடைத்த வேலையின் ஹோதாவில் கம்பீரமாக நின்றிருந்த சிவராமன் ''வணக்கம்'' என்று கைகளை கூப்பினான்.

''ஓ... நீங்களா!'' ஒரு நிமிடம் தடுமாறிய ஜெயந்தி பக்கத்தில் இருந்த சுமதியை காண்பித்துவிட்டு ''என்னுடைய சிநேகிதி சுமதி. சுமதி! இவர் மிஸ்டர் சிவராமன். எனக்கு முன்னாடி திருராஜசேகரிடம் செகரெட்ரியாக இருந்தவர்.''

சுமதியும், சிவராமனும் பரஸ்பரம் வணக்கம் தெரிவித்துக் கொண்டார்கள்.

''நானும் என்னுடைய நண்பனை அறிமுகப்படுத்தி வைக்கிறேன். இவன் பெயர் பிரகாஷ். முன்னாள் அமைச்சரின் மச்சினன். ''பக்கத்தில் நின்றிருந்த நபரை அறிமுகப்படுத்தினான். மாநிறத்தில், கொஞ்சம் குள்ளமாக, அதற்கேற்ற பெருமனுடன் இருந்தான்.

அவன் பார்வை ஜெட நதியின் மீதே நிலைத்து விட்டிருந்தது.

சுமதியும், ஜெயந்தியு ) வணக்கம் தெரிவித்தார்கள்.



''நான் வெறும் பிரகாஷ்தான். முன்னாள் அமைச்சர் ஒருவர் எனக்கு ஒன்றுவிட்ட அக்காவின் கணவர். அந்த உறவை நான் மறந்து போனாலும் சிவராமன் இன்னும் மறக்கவில்லை'' என்றான் நகைத்துக் கொண்டே.

''நேரமாகிவிட்டது போலிருக்கு. உள்ளே போகலாம் வாங்க.'' சிவராமன் சொன்னான்.

எல்லோரும் உள்ளே போனார்கள். ஜெயந்திக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த சிவராமன் ஒரு நிமிடம்கூட சும்மா இருக்கவில்லை. உள்ளே வந்து கொண்டு இருந்தவர்களில் அவனுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் எழுந்து குசலம் விசாரித்துக் கொண்டிருந்தான்.

''சிவராமன்! நீ ஒரு நிமிடம் கொஞ்சம் சும்மா இரேன். வந்தவர்கள் தானாக வந்து உன்னிடம் பேசுகிறார்களா என்று பார்ப்போம்.'' பிரகாஷ் நண்பனை கிண்டல் செய்தான்.

ஜெயந்தியும், சுமதியும் சிரித்துவிட்டார்கள்.

''முந்திரிக்கொட்டை மாதிரி பேசுகிறேன் என்கிறாயா? பாழாய்போன வேலையில் சேர்ந்தபிறகு பேசுவதையே மறந்துவிட்டேன். அப்படியும் சும்மா இருக்க முடியாமல் கீழே இருக்கும் குமாஸ்தாக்களை அழைத்து ஏதாவது தவறை சுட்டிக் காட்டி லெக்சர் கொடுப்பேன். சில பேர் வாயே திறக்காமல் உம்மணா மூஞ்சியாக எப்படி இருப்பார்களோ கடவுளுக்குத்தான் வெளிச்சம்.''

''உன்னைப்போல் விடாமல் பேசிக் கொண்டிருப்பவர்கள் இருக்கும்போது சிலர் மௌன சாமிராக இருந்தால் என்ன தவறு?'' பிரகாஷ் சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டான்.

''ஆல் ரைட்! சற்று நேரம் வாயை மூடிக் கொள்கிறேன். அதோ கர்டெனை எடுக்கிறார்கள்.'' சிவராமன் சொன்னான்.

நிகழ்ச்சி தொடங்கிவிட்டது. ஜெயந்திக்கு இதுபோன்ற நாட்டிய நிகழ்ச்சிகள் என்றால் ரொம்ப பிடிக்கும். வெளி உலகை மறந்து அதிலேயே ஒன்றி விடுவாள்.

நிகழ்ச்சி முடிந்தபிறகு நான்கு பேரும் வெளியே வந் கொண்டிருந்தார்கள். மக்கள் கூட்டத்தில் எப்படியோ வழி ஏற்படுத்திக் கொண்டு வெளியே வரும்போது திடீரென் சிவராமன் வேகமாக இரண்டு அடிகள் முன்னால் வைத் நிதானமாக நடந்து வந்து கொண்டிருந்த நடுவயதுதாண் வழுக்கைத்தலை நபரின் கையைப் பிடித்துக் கொண்டு "வணக் டாக்டர்" என்றான். அவரும், அவருக்கு பக்கத்திலேயே சிவ பாக, சற்று பூசிய உடல்வாகுடன் இருந்த மாதுவும் நின் விட்டார்கள்.

"சிவராமன்! நீயா." பின்னாலிருந்து வரும் மக்களுக்கு வ விடுவதற்காக சற்று ஒதுங்கிக் கொண்டே சொன்னார். சிவராமனை அன்புடன் தட்டிக் கொடுத்துவிட்டு "எப்படி இருக்கிறாய்? பெ வேலை கிடைச்சிருக்கு என்று கேள்விப்பட்டேன்" என்றார்.

"ஆமாம் வேலையில் சேர்ந்து கொஞ்ச நாள்தான் ஆகிறது நேரில் வந்து உங்களிடம் சொல்லவேண்டும் என்று நினைத்து கொண்டிருந்தேன். ஒழியவே இல்லை." பணிவு கலந்த குரலி சொன்னான் சிவராமன்.

ஜெயந்தி, சுமதி, பிரகாஷ் மூவரும் அருகில் வந் நின்றார்கள்.

"இவர்கள் என்னுடைய நண்பர்கள், அறிமுகப்படுத்த டுமா?" என்றவன் பிரகாஷ் பக்கம் திரும்பி "பிரகாஷ்! இவர்தா டாக்டர் சுப்ரமணியம்" என்றான்.

"பெயர் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் நேரில் இ பொழுதுதான் சந்திக்கிறேன்." பிரகாஷ் சொன்னான்.

"இந்தப் பெண் ஜெயந்தி. நம் ராஜசேகர் சாரிடம் செகரெட் யாக வேலை பார்க்கிறாள். அவங்க ஜெயந்தியின் சினேகி சுமதி."

"யாரு? ராஜசேகரின் செகரெட்ரியா?" டாக்டர் நம் முடியாதவர் போல் கேட்டார். அவருடைய கண்கள் ஒரு நிமிட



மூக்குக் கண்ணாடி வழியாக ஜெயந்தியை கூர்மையாக கவனித்தன.

"ஆமாம். அவள் வந்து சேர்ந்த பிறகுதான் நான் புது வேலையை ஏற்றுக் கொண்டேன்."

ஜெயந்தியை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த டாக்டரின் கண்கள் சுருங்கி மறுபடியும் விரிந்தன. அருகில் இருந்த மனைவியின் தோளில் லேசாக தட்டிக் கொண்டே "கமலா! இந்தப் பெண்ணிடம் கீதாவின் சாயல் இருப்பது போல் எனக்குத் தோன்றுகிறது. சரியாக பார்த்தாயா?" என்றார்.

"சாயல் இல்லைங்க. அப்படியே நம் மகள் கீதாவே தான்." கமலா சட்டென்று ஜெயந்தியின் தோளைப் பற்றி அருகில் இழுத்துக் கொண்டாள். "உன் பெயர் என்னம்மா?" என்று கேட்டாள். அந்த அம்மாளின் விழிகளில் நீர் தளும்பிக் கொண்டிருந்தது.

எதிர்பாராமல் நடந்துவிட்ட இந்த நிகழ்ச்சிக்கு மற்ற மூவரும் வியப்பும், திகைப்பும் மேலிட பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு வினாடி திகைத்துப் போன ஜெயந்தி அந்த அம்மாளின் அணைப்பில் கட்டுண்டவளாய் அப்படியே இருந்து விட்டாள். பிறகு தெளிவற்ற குரலில் "ஜெயந்தி" என்று சொன்னாள்.

"ராஜசேகரிடம் செகரெட்ரியாக இருக்கிறாளா? ஒரு நாளாவது அவன் எங்களிடம் சொல்லவே இல்லையே?" என்றார் டாக்டர்.

"எல்லோரும் போய் விட்டார்கள். நாமும் கிளம்புவோமா?" சுற்றிலும் பார்த்துக் கொண்டே சொன்னான் சிவராமன்.

எல்லோரும் வெளியே வந்தார்கள். டாக்டரின் மனைவி ஜெயந்தியின் கையை விடாமல் பற்றிக்கொண்டே வெளியில் வந்தாள்.

"நீங்க எல்லோரும் எப்படி போவீங்க?" சிவராமன் கேட்டான்.

''என்னுடைய காரில் டிராப் செய்தால் போச்சு. கொஞ் அட்ஜெஸ்ட் செய்து கொண்டு உட்கார்ந்து கொள்ளும்படி இருக்கும்'' என்றான் பிரகாஷ்.

''பரவாயில்லை. அட்ஜெஸ்ட் செய்து கொள்வோம்'' என் டாக்டர்.

எல்லோரும் பிரகாஷின் காரில் ஏறிக்கொண்டார்க முதலில் டாக்டரையும், அவருடைய மனைவியையும் இற விட்டார்கள். அவர்கள் இறங்கும் முன் ஜெயந்தியை, சுமதி தங்கள் வீட்டுக்கு வரச்சொல்லி அழைத்தார்கள். டாக்ட மனைவி கமலாவுக்கு ஜெயந்தியை விட்டுப் பிரிய மன வரவில்லை.

அவர்களை இறக்கி விட்டு வரும்போது ''வேடிக்கைய இருக்கு'' என்றாள் சுமதி.

''அவர்களுக்கு ஒரே ஒரு மகள். கீதா என்று பெயர். இர வருடங்களுக்கு முன் இதய நோயால் இறந்து விட்டாள். அ அதிர்ச்சியிலிருந்து அவர்கள் இன்னும் மீளவில்லை. அந் பெண் ஜெயந்தியை போல் இருப்பாள் போலும். எனக் தெரியாது.'' முன் சீட்டில் அமர்ந்திருந்த சிவராமன் சொன்னா

''வளர்த்துக் கொள்வார்களோ என்னவோ. கேட்டுப் பார் நல்ல வசதி படைத்தவர்களாக தென்படுகிறார்கள்.'' டிரை செய்து கொண்டிருந்த பிரகாஷ் சிரித்துக் கொண்டே சொன்ன சிவராமனும் நகைத்தான்.

ஜெயந்திக்கு ஏனோ அந்த அம்மாளின் அன்பும், ஆதர மட்டுமே போதும் என்று தோன்றியது.

சுமதியின் வீடு வந்து விட்டது. சுமதியுடன் ஜெயந்தி இறங்கிக் கொண்டாள்.

''ஏன்? உங்க வீட்டிலேயே டிராப் செய்கிறோம் மறுபடி எப்படி உங்க வீட்டிற்கு போவீங்க?'' சிவராமன் கேட்டான்.

''பரவாயில்லை. இன்று இரவு நான் சுமதியின் விருந்தா சாப்பாடு முடிந்த பிறகு கணவன் மனைவி இருவருமாக சேர்



என்னை வீட்டில் கொண்டுபோய் விடுவார்கள்.'' விடைபெறுவது போல் கைகளை கூப்பிக் கொண்டே சொன்னாள் ஜெயந்தி.

''மறுபடியும் சந்திப்போம். மறந்து விடாதீங்க.'' பிரகாஷ் காரை ஸ்டார்ட் செய்து கொண்டே சொன்னான்.

''அவர்களிடம் ஏன் பொய்யைச் சொன்னாய்?'' சுமதி வாசற்படி ஏறிக்கொண்டே கேட்டாள்.

''ஏனோ அவர்களுடன் போவது எனக்குப் பிடிக்கவில்லை. அதற்காக பயப்படுகிறேன் என்று அர்த்தமில்லை. அவர்கள் ராஜசேகர்போல் தெருமுனையிலேயே இறக்கி விடுவார்கள் என்று தோன்றவில்லை. அதோடு அப்படி கேட்பதும் சரி என்று எனக்கு படவில்லை. அதனால்தான் அப்படிச் சொன்னேன்.''

பிறகு சுமதியும் அவளுடைய கணவனுமாக சேர்ந்து ஜெயந்தியை வீடு வரையில் கொண்டு விட்டு போனார்கள்.

# 19

நாட்டிய நிகழ்ச்சிக்கு போய் விட்டு வந்த ஒரு வாரம் கழித்து.... ஒரு நாள் காலையில் ஜெயந்தி டைப் செய்த பேப்பர்களை சரி பார்த்துக் கொண்டிருந்த ராஜசேகர் ''டாக்டர் சுப்ரமணியம், அவருடைய மனைவியை சந்தித்தாயா?'' என்று கேட்டான்.

''எந்த டாக்டர்?'' தலையை உயர்த்திக் கொண்டே புரியாதவள்போல் கேட்டாள்.

''அன்றைக்கு ரவீந்திர பாரதியில் சிவராமன் அறிமுகப்படுத்தி வைத்தானே.''

''ஓ... ஆமாம்.'' ஜெயந்திக்கு நினைவு வந்து விட்டது. அன்று அந்த அம்மாள் அவ்வளவு சொன்னபிறகும் ஜெயந்தி அவங்க வீட்டுக்கு மறுபடியும் போகவில்லை.

ராஜசேகர் எதுவும் கேட்கவில்லை. பேப்பர்க
சரிபார்த்துக் கொண்டிருந்தான்.

சற்று நேரம் கழித்து ''எதற்காக கேட்டீங்க?'' என்றாள்.

ஒன்றுமில்லை. நேற்று அவங்க வீட்டுக்கு போயிருந்தே உன்னைப் பற்றிப் பேச்சு வந்தது. நீ அவர்களுடைய மக கீதாவைப்போல் இருக்கிறாய் என்று முதல் முறை உன்னை பார்த்த போதே நினைத்துக் கொண்டேன். நீ என்னுடை செகரெட்ரியாக சேர்ந்த பிறகு ஓரிருமுறை அவர்களிடம் சொல் நினைத்தாலும் மகளை இழந்த வேதனையிலிருந்து அவர் கொஞ்சம் கொஞ்சமாக மீண்டுவரும் இந்த சமயத்தி நினைவுப்படுத்தி பழைய காயத்தை மறுபடியும் கிளரவேண்டா என்று பேசாமல் இருந்துவிட்டேன்.''

''அவர்களை வனிதா விஹாரில் ஒரு தடவைகூட பார்த்த இல்லையே?''

''பார்க்கும் வாய்ப்பு இல்லை. அவர்கள் பழங்காலத் மனிதர்கள். உனக்கு எப்போதாவது நேரம் கிடைத்தால் அவர்க வீட்டுக்கு போய் வா. ரொம்ப நல்ல மனிதர்கள். பாசம், நேச நிறைந்தவர்கள்.''

ஜெயந்தி மௌனமாக கேட்டுக் கொண்டு இருந்தாள் இவர்கள் இருக்கட்டும். வனிதா விஹாரில் இருப்பவர்களுக் தன்னைப் பற்றி தெரியுமா? தெரிந்தும் சும்மா இருக்கிறார்களா அவர்கள் தன் மீது குறிபார்த்து வீசப்போகும் சொல் அம்புகளை பற்றி எத்தனை விதமாக ஊகித்திருந்தாள்? ஆனால் எதுவு நடக்கவில்லை.

அன்று சினிமா தியேட்டரில் பார்த்த பிறகும் ரேகா ஏ சும்மா இருக்கிறாள்? ஜெயந்தி வாயைத் திறந்து அவர்களை பற்றி கேட்க நினைக்கும்போது ராஜசேகர் பேப்பர்களை எடுத்து கொண்டு அந்த அறையை விட்டு வெளியேறினான். ஜெயந்தியி கேள்வி குரல் வளையத்திலேயே தங்கி விட்டது. ராஜசேகருட அவ்வளவு பழக்கம் இருப்பவர்கள் வீட்டுக்கு ஏன் வரவி



லையோ ஜெயந்திக்குப் புரியவில்லை. தான் வந்து இத்தனை நாட்கள் ஆகிவிட்டன. ஒருத்தர்கூட வீட்டுக்கு வந்ததாக தெரிய வில்லை. காரணம் என்னவாக இருக்கும்? வெளியில் அவ்வளவு சகஜமாக பழகும் ராஜசேகர் தனிக்கட்டை. அவன் வீட்டுக்கு வந்தால் யார் தடுக்கப் போகிறார்கள்?

கம்பெனியைச் சேர்ந்தவர்களும் அதிகமாக வீட்டுக்கு வரமாட்டார்கள். அப்படியே வந்தாலும் ராஜசேகர் அவர்களை ஹாலில் உட்காரவைத்து பேசி விட்டு அனுப்பிவிடுவான். வீடு எப்போதும் நிசப்தத்தில் ஆழ்ந்து கிடக்கும். அந்த நிசப்தமான சூழ்நிலையில் ராஜசேகர் வீட்டில் இருக்கிறானா இல்லையா என்றுகூடத் தெரியாது. தான் அனாவசியமான விஷயங்களைப் பற்றி யோசித்துக் கொண்டு இருப்பதை உணர்ந்த ஜெயந்தி மறுபடியும் டைப் செய்வதில் ஆழ்ந்து போனாள்.

# 20

அன்று ஜெயந்தி போய்ச் சேரும்போது கொஞ்சம் தாமத மாகி விட்டது. கம்பெனி மீட்டிங் நடந்து கொண்டிருந்ததால் ஜெயந்திக்காக வந்துபோகும் காரும் ஆபீசிலேயே தங்கிவிட்டது.

''இந்த நான்கு நாட்கள் நீங்க கொஞ்சம் அட்ஜெஸ்ட் செய்து கொள்ள வேண்டியிருக்கும்.'' ராஜசேகர் சொன்னான்.

''பரவாயில்லை'' என்றாள் ஜெயந்தி.

ஜெயந்தி உள்ளே வரும்போதே ராஜசேகர் பரபரப்புடன் அறைக்குள் வந்தான். ''அதோ... அந்த பேப்பர்களை பாருங்க. இரவு முழுவதும் உட்கார்ந்து எழுதிவிட்டேன். மேட்டர் கொஞ் சம் அதிகம்தான். மற்ற வேலை எதுவும் செய்ய வேண்டாம். மாலைக்குள் இவற்றை டைப் செய்து ரெடியாக வைத்து விடுங்க'' என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

ஜெயந்தி பேப்பர்களை எடுத்துப் பார்த்தாள். நிறையவே இருந்தன. கவனமாக டைப் செய்தால் தவிர மாலைக்குள் முடிக்க முடியாது. இன்று காலை எழுந்தது முதல் ஜெயந்திக்கு ஏனோ எரிச்சலாக இருந்தது. வேலை கிடைக்கும் வரையில் கிடைக்கணுமே என்று கவலையாக இருந்தது. கிடைத்த பிறகு எந்த மாறுதலும் இல்லாத வாழ்க்கையைக் கண்டு சோர்வாக உணரத் தொடங்கினாள். ஒவ்வொரு நாளும் புதிதாக ஏதாவது நடக்க வேண்டும் என்றால் எப்படி? உலகில் எந்த மனிதனுக்கும் ஏதோ ஒரு இடத்தில் வாழ்க்கை சலனமற்றுப் போய்விடும்.

"ஆஸ்கர் வைல்ட்" சொன்னது போல் உலகில் இரண்டே இரண்டு வேதனைகள்தான் இருக்கின்றன. ஒன்று நினைத்தது நடக்காமல் போவது. மற்றொன்று நினைத்தது நடந்து முடிந்து விடுவது.

கவனம் சிதறிய நிலையில் டைப் செய்து முடித்த ஜெயந்தி, பேப்பரை எடுத்து விட்டு மறுபடியும் வெள்ளைத்தாளை டைப் மிஷினில் பொருத்தும் முன் முதலில் டைப் செய்ததை பார்வையிட்டாள். நிறைய இடங்களில் அச்சுப்பிழை இருந்தது. சில இடங்களில் வார்த்தைகளுக்கு நடுவில் இடைவெளி விடவில்லை.

ஜெயந்தி அந்த காகிதத்தைக் கிழித்துப் போட்டு விட்டு மறுபடியும் ஆரம்பத்திலிருந்து டைப் செய்யத் தொடங்கினாள். மனிதனின் மனம் குரங்கு போன்றது. எத்தனை முயன்றாலும் கட்டுக்கு அடங்காமல் எங்கெங்கோ தாவிக் கொண்டே இருக்கும். தற்போது ஜெயந்தியின் நிலைமையும் அப்படித்தான் இருந்தது.

மாலையாகும்போது ராஜசேகர் சொன்ன வேலையில் பாதிகூட முடியவில்லை. அப்படியும் வழக்கத்தைவிட இரண்டு மணிநேரம்கூட வேலை செய்திருக்கிறாள். எப்போதும் இல்லாத விதமாக இன்று அதிலும் ராஜசேகர் மாலைக்குள் அந்த வேலையை முடித்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்ட இந்த நாளில்தான் இவ்வளவு தவறுகள் வரவேண்டுமா? தன்னால்



ஏன் சரியாக டைப் செய்ய முடியவில்லை ஜெயந்திக்குப் புரியவில்லை.

ஒரு பக்கம் இருட்ட ஆரம்பித்து விட்டது. இரண்டு பஸ்கள் மாறி நான்கு பர்லாங்குகள் நடந்தால் தவிர வீட்டுக்குப் போய் சேர முடியாது. இரு கன்னங்களிலும் கைகளை பதித்து கவலையுடன் தான் டைப் செய்த பேப்பர்களை, எஞ்சியிருந்த மேட்டரை பார்த்துக் கொண்டிருந்தாள். இப்போ என்ன செய்வது? இருந்த வேலையை முடிக்கலாம் என்றால் ரொம்ப நேரமாகி விடும். நேரமாவது இருக்கட்டும். தன்னால் இன்று சரியாக வேலை பார்க்க முடியாது. வலுக்கட்டாயமாக செய்ய நினைத்தாலும் இப்போ இருக்கும் மனநிலையில் நேர்த்தியாக செய்ய முடியாது. என்ன செய்வது என்று ஜெயந்தி யோசித்துக் கொண்டு இருந்தபோது "ஹலோ! இன்னும் இருக்கீங்களா?" என்ற குரலைக் கேட்டு திடுக்கிட்டு தலையை உயர்த்தினாள்.

"வீட்டுக்குப் போகவில்லையா?" வாட்சைப் பார்த்துக் கொண்டே சிவராமன் உள்ளே வந்தான்.

"நீங்களா!" சரியாக உட்கார்ந்து கொண்டே சொன்னாள் ஜெயந்தி.

"ஆபீஸிலிருந்து வீட்டுக்கு போகும்போது ஒருமுறை சாரை பார்த்துவிட்டு போகலாம் என்று வந்தேன். அலுவலக விஷயமாக அவரிடம் கொஞ்சம் பேசவேண்டும்" என்று சொல்லிக் கொண்டே ஜெயந்திக்கு எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

"அவர் வீட்டில் இல்லை. இப்போதைக்கு வரமாட்டார் என்று நினைக்கிறேன்." மேஜை மீது இருந்த காகிதங்களை அடுக்கிக் கொண்டே சொன்னாள் ஜெயந்தி.

"வழக்கமாக இந்த நேரத்தில் வீட்டில் இருப்பாரே?"

"ஆமாம். ஆனால் ஆபீஸில் நான்கு நாட்களாக ஏதோ மீட்டிங்க்ஸ் நடந்துகிட்டு இருக்கு." ஜெயந்தி சொன்னாள்.

"அப்படியா. அப்போ நான்கைந்து நாட்கள் கழித்து அவரிடம் பேசுவது நல்லது. ஓ.கே வருகிறேன்" என்று வாசல்

வரையில் சென்றவன் திடீரென்று எதோ நினைவுக்கு வந்தாற் போல் பின்னால் திரும்பினான். "மைதிலை. நீங்க வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டு இருக்கீங்க போலிருக்கு. உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் என் காரில் லிஃப்ட் தருகிறேன். ஆபீஸில் எனக்கு நேற்றுதான் கார் கொடுத்திருக்கிறார்கள். முதல் லிஃப்ட் உங்களுக்குக் கொடுக்கும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைக்கட்டுமே?"

பேப்பர்களை அடுக்கிக் கொண்டிருந்த ஜெயந்தி சட்டென்று தலையை உயர்த்தி ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். நன்றாக இருட்டி விட்டது. தான் எப்படியும் வீட்டுக்குக் கிளம்புவதாக முடிவு செய்து விட்டாள். சிவராமனுடன் போனால்தான் என்ன?

"என்ன சொல்றீங்க?" சிவராமன் வாசற்படியில் நின்று கொண்டு பதிலுக்காக காத்திருந்தான்.

"வருகிறேன். ஒரு நிமிடம் இருங்கள்." அவசர அவசரமாக பேப்பர்களை எடுத்து வைத்துக் கொண்டே சொன்னாள்.

"ஒரு நிமிடம் என்ன? ஒரு மணி நேரம்கூட காத்திருக்க தயார். எனக்கு அவசரமான வேலை எதுவும் இல்லை." மறுபடியும் உள்ளே வந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

இருவரும் வெளியே வந்தார்கள். காரில் போகும்போது சிவராமன் ஆபீஸில் நடந்த விஷயங்களை வாய் மூடாமல் சொல்லிக் கொண்டிருந்தான். நகைச்சுவை கலந்து அவன் சொன்னதைக் கேட்கும்போது ஜெயந்தியால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

"நீங்க சிரிக்கும்போது ரொம்ப அழகாக இருக்கீங்க. மற்றொரு முறை சிரியுங்களேன்." சிவராமன் சொன்னான். ஜெயந்தி சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டாள்.

தெரு முனையிலேயே காரை நிறுத்தச் சொன்ன ஜெயந்தியை கேள்விக் குறியுடன் நோக்கினான்.



"சாரி. இன்னொரு தடவை வீட்டுக்கு அழைக்கிறேன்." குரல் ஒரு மாதிரியாகி விட்டது ஜெயந்திக்கு.

"பரவாயில்லை. அடுத்தமுறை நீங்க அழைக்கா விட்டாலும் வீட்டுக்கு வந்து எல்லோரையும் அறிமுகப் படுத்திக் கொள்கிறேன். மறந்து விடாதீங்க" என்று சொல்லி விட்டு சிவராமன் போய்விட்டான்.

வீட்டை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்த ஜெயந்திக்கு களைப்பு நீங்கி, உற்சாகமாக இருப்பதுபோல தோன்றியது. சிவராமனின் வாக் ஜாலத்தில் எப்படிப்பட்ட மனிதனும் தன்னை மறந்து சிரித்து விடுவானாய் இருக்கும்.

ஜெயந்தி வீட்டுக்கு வந்த பிறகும் சிவராமன் சொன்ன ஜோக்குகளை நினைத்து நினைத்து சிரித்துக் கொண்டிருந்தாள்.

"என்ன? உனக்குள் நீயே சிரித்துக் கொண்டு இருக்கிறாயே? உனக்காக சுமதி வந்து விட்டு போனாள்." ஜானகி பேத்தியிடம் சொன்னாள்.

"அப்படியா!" ஜெயந்தி இன்னும் சிரித்துக் கொண்டே இருந்தாள்.

## 21

மறுநாள் ஜெயந்தி வழக்கத்தைவிட ஒரு மணி நேரம் முன்னதாகவே வந்தாள். நேற்று ராஜசேகர் கொடுத்த வேலையை முடிக்காமல் தான் போய்விட்டது நினைவுக்கு வந்தபோது என்னவோபோல் இருந்தது. தான் வேலையில் சேர்ந்த பிறகு இன்று வரையில் ராஜசேகர் தன்னிடம் கோபித்துக் கொண்டதோ, எரிச்சல் அடைந்ததோ இல்லை. அதற்கு வாய்ப்பும் தான் அளிக்கவில்லை. இன்று கட்டாயம் தன்னை கோபித்துக் கொள்ளப் போகிறான் என்று நினைத்துக் கொண்டே அறைக்குள் அடியெடுத்து வைத்தாள். திரைச்சீலையை விலக்கியவள் உள்ளே தென்பட்ட காட்சியைப் பார்த்து கல்லாகச் சமைந்து விட்டாள்.

அறையில் ராஜசேகர் அவன் வழக்கமாக உட்காரும் நாற்காலியில் அமர்ந்து கொண்டு டைப் செய்து கொண்டிருந்தான். ஒருபக்கம் வெள்ளைத் தாள்களும், அவன் எழுதிய பேப்பர்களும் இருந்தன. மறுபக்கம் டைப் செய்த காகிதங்கள் இருந்தன. ரொம்ப நேரமாக டைப் செய்து கொண்டிருப்பதுபோல் தலைமுடி கலைந்து; முகம் களைப்புடன் காணப்பட்டது.

சிலையாய் வாசற் படியில் நின்றிருந்த ஜெயந்தியை பார்த்தவன் ''வாங்க'' என்றான் சாதாரணமான குரலில். அவன் கண்கள் தூக்கக் கலக்கத்துடன் இருந்தன.

ஓரடி முன்னால் வைத்து அறைக்குள் நுழைவதைவிட இரண்டடி பின்னால் வைத்து அந்த இடத்தை விட்டு வெளியேறுவது உசிதம் என்று ஜெயந்திக்குத் தோன்றியது.

''நீங்க டைப் செய்து வைத்த மேட்டரிலும் அங்காங்கே சில தவறுகள் இருந்தன. அதான் முதலிலிருந்தே செய்கிறேன். அப்படி உட்காருங்க. வேலை முடியப் போகிறது'' என்றான்.

மளமளவென்று வேகமாக டைப் செய்து கொண்டிருந்த அவனைப் பார்க்கும்போது ஜெயந்திக்கு மூளையே கலங்கி விட்டது போல் இருந்தது. ராஜசேகருக்கு டைப்பிங் தெரிந்திருக்கும் என்று அவள் கனவில்கூட நினைத்துப் பார்த்தில்லை.

ஜெயந்தி பார்த்துக் கொண்டிருந்தபோதே அவன் வேலையை முடித்துவிட்டான். நடுவில் அவனை எழுந்து கொள்ளச் சொல்லி எஞ்சியிருக்கும் வேலையை தான் முடித்து விடுவதாக சொல்ல நினைத்தாலும் ஜெயந்தியால் ஏனோ சொல்ல முடியவில்லை.

ராஜசேகர் வேலை முடிந்த பிறகு பேப்பர்களை அடுக்கி வைத்துக் கொண்டு வெளியேறப் போனான். போகும் முன் வாட்சைப் பார்த்துக் கொண்டே ''எனக்கு நேரமாகி விட்டது. நான் கிளம்புகிறேன். இன்று உங்களுக்கு வேலை அதிகமாக இல்லை என்றால் வீட்டுக்கு சீக்கிரமாக போய்விடலாம். நான் போனதும் உங்களுக்காக காரை அனுப்பி வைக்கிறேன்'' என்று சொல்லி விட்டு போய்விட்டான்.



ஜெயந்தி அப்படியே உட்கார்ந்து விட்டாள். பத்து நிமிடங்களுக்கு பிறகு நாயர் டிபன், காபி கொண்டு வந்தான். நிலம் இரண்டாக பிளந்து தன்னை விழுங்கி விட்டால் நன்றாக இருக்கும் என்று ஜெயந்திக்குத் தோன்றியது. தான் இங்கே வருவது வேலை செய்வதற்காகவா இல்லை டிபன் காபி சாப்பிடுவதற்காகவா?

''நாயர்! இரவு அய்யா எத்தனை மணிக்கு வந்தார்?'' நாயரிடமிருந்து விஷயம் தெரிந்து கொள்வதற்காக டிபன் தட்டை கையில் வாங்கிக் கொண்டாள்.

''11.30 மணி தாண்டிவிட்டது.''

''இந்த அறையில் எத்தனை மணிவரையில் இருந்தார்?''

''இரண்டு மணி வரையில்.''

''அது உனக்கெப்படி தெரியும்?''

''இரவு ஒரு மணிக்கு டீ போட்டு தரச்சொன்னார். கொடுத்தேன்.''

ஜெயந்தி காபி கோப்பையை கையில் எடுத்துக்கொள்ளும் போது நாயரே சொன்னான். ''வந்ததும் உங்களைப் பற்றிக் கேட்டார்.''

''என்ன வென்று?''

''எப்போ போனீங்க என்று.''

''என்ன சொன்னாய்?''

''ஆறு மணிக்கு சிவராமன் வந்ததும் இருவரும் சேர்ந்து போய் விட்டீர்கள் என்று சொன்னேன்.''

நாயர் தட்டையும், கோப்பையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான். ஜெயந்தியின் முகம் சிவந்து விட்டது. 'சீ.. ச்சீ.. ராஜசேகர் தன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வான்?''

# 22

ஜெயந்தி அன்று வந்த தபாலை பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். ராஜசேகர் ஊருக்குச் சென்று ஒரு வாரத்திற்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் நான்கைந்து நாட்கள் வரையில் வரப் போவதில்லை என்று முதல் நாள் வந்த கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தான். இன்று வந்த தபாலும் குறைவாகவே இருந்தது. அதில் ஓரிரு கடிதங்களைத் தவிர மற்ற கடிதங்களுக்கு ராஜசேகர்தான் பதில் எழுதவேண்டும். அடுத்த அரை மணியில் வேலையை முடித்துவிட்ட ஜெயந்தி அன்றைய தபாலில் வந்த வெளிநாட்டு பத்திரிகையை புரட்டத் தொடங்கினாள். இத்தனை வேலைகளுக்கு நடுவில் ராஜசேகருக்கு இந்தப் பத்திரிகைகளை படிக்க நேரம் எங்கிருந்து கிடைக்குமோ ஜெயந்திக்கு புரியாத புதிராக இருந்தது.

கையில் இருந்த பத்திரிகையை புரட்டி முடித்தப் பிறகு பக்கத்தில் இருந்த மேஜை மீது போட்டு விட்டு ஜன்னல் அருகில்போய் நின்றாள். ராஜசேகரின் வீட்டுக்கு நான்கு பக்கமும் விசாலமாக இடம் இருந்தது. இந்த ஜன்னல் வழியாக பார்க்கும் போது மல்லிகைக் கொடியும், மா சபோட்டா போன்ற பழ மரங்கள் தென்பட்டன.

ஜெயந்திக்கு தன்னுடைய வாழ்க்கை வியர்த்தமாக கழிவது போல் தோன்றியது. தன்னுடைய எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது? இதோபோல் ஏதோ ஒரு இடத்தில் வேலை பார்த்துக் கொண்டிருப்பாள். நாட்கள்... மாதங்கள்... வருடங்கள் அப்படியே கழிந்துவிடும். எவனோ ஒருவனை திருமணம் செய்து கொள்வாள். குழந்தைகள் பிறப்பார்கள். அதற்குப் பிறகு எதைப் பற்றியும் யோசிக்க நேரம் இருக்காது. அவ்வளவுதான்! வயதாகிவிடும். தலை நரைத்து கிழவியாகிவிடுவாள். குழந்தைகளைப் பற்றிப் புலம்பிக் கொண்டு எப்படியோ பொழுதைத் தள்ளிவிட்டால் போதும் என்ற நிலைக்கு வந்துவிடுவாள். வாழ்க்கை என்றால் இதுதானா?



மனிதனாக பிறந்தவனுக்கு குழந்தைப் பருவம் சந்தோஷமாக, சகல வசதிகள் நிறைந்ததாக இல்லாவிட்டாலும் இளமை பருவத்திலாவது சில இனிய நிகழ்ச்சிகள், உணர்வுகள் ஏற்பட வேண்டும். வயதான பிறகு அவற்றை நினைவுப்படுத்திக் கொண்டால் பௌர்ணமி நிலவின் குளிர்ச்சியை உணரவேண்டும். வாழ்க்கையின் கடைசிப் பகுதிக்கு வந்து விட்டோமே என்று வருத்தப்படாமல் நிறைவான வாழ்க்கையை அனுபவித்த திருப்தியை உணரவேண்டும். அதுபோன்ற அதிர்ஷ்டம் தனக்குக் கிடைக்குமா?

ஜன்னல் வழியாக தென்பட்ட இயற்கையின் பசுமை மனதை குளிர வைப்பதுபோல் இருந்தது. ராஜசேகர் இந்த அறைக்கு வந்தால் அடிக்கடி ஜன்னல் அருகில்போய் நிற்பது இந்த குளிர்ச்சியை நாடித்தானோ என்று தோன்றியது.

ராஜசேகரின் நினைவு வந்ததும் எண்ணங்கள் வேறுபக்கம் திசை திரும்பின. இந்த வேலையில் சேரும்போது இது தற்காலிகம்தான் என்றும் வேறு வேலை தேடிக் கொள்ளும் வரையில்தான் என்று நினைத்திருந்தாள். அந்த விஷயத்தை எப்படி மறந்துபோனாள்?

என்ன காரணம் என்று தெரியவில்லை. ஜெயந்தி எதிர்பார்த்ததுபோல் வனிதா விஹார் நிறுவனத்தினர் அவள் மீது போர் முழக்கம் செய்யவில்லை. ஒருக்கால் இந்த வேலை தற்காலிகம்தான் என்றும் விரைவில் வேறு வேலையை தேடிக் கொண்டு போய்விடுவாள் என்று ராஜசேகர் அவர்களை சமாதானப்படுத்தியிருப்பானோ என்னவோ. அதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான். தானே வேறு வேலையை தேடிக் கொண்டு இங்கிருந்துபோய் விட்டால் மரியாதையாக இருக்கும்.

வந்த புதிதில் ராஜசேகர் ஓரிரு இடங்களுக்கு ஜெயந்தியை அப்ளிகேஷன் போடச் செய்தான். தற்போது வேலை காலியாக இல்லையென்று பதில்கள் வந்தன.

இரண்டு நாட்களுக்கு முன்பு சுமதியிடம் பேசிக் கொண்டிருந்த போது பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் டீச்சர்

போஸ்ட் ஒன்று காலியாக இருப்பதாகவும், அதன் பிரின்ஸிபால் தங்களுடைய குடும்ப நண்பர் என்றும் சொன்னாள். ஜெயந்திக்கு ஏனோ தொடக்கத்திலிருந்தே டீச்சர் வேலை என்றால் விருப்பம் இல்லை.

'எனக்கு வேறு செகரெட்டரி கிடைக்கும் வரையில் நீங்க போகக்கூடாது. போகவும்விட மாட்டேன்.' ராஜசேகர் சொன்னது நினைவுக்கு வந்தது. அதன் அர்த்தம் என்ன?

''ஹலோ!''

ஜன்னல் கதவில் தலையை சாய்த்துக் கொண்டு ஏதோ யோசித்துக் கொண்டிருந்த ஜெயந்தி திடுக்கிட்டு பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

எதிரே சிவராமன்! தனியாக வரவில்லை. அவனுக்குப் பின்னால் நிறைய பேர் இருந்தார்கள்.

''உள்ளே வாங்க எல்லோரும்.'' சிவராமன் பின்னால் திரும்பி அழைத்தான். பதினெட்டு இருபது வயதிற்குள் இருக்கும் பெண்கள் ஐந்தாறு பேர் உள்ளே வந்தார்கள். பின்னால் நின்றிருந்த இளைஞர்கள் யாரும் உள்ளே வரவில்லை.

''எல்லோருமாக சேர்ந்து பிக்னிக் போகலாம் என்று கிளம்பினோம். உங்களுக்கு வேலை முடிந்து விட்டது என்றால், ஆட்சேபனை இல்லை என்றால் எங்களுடன் வரலாம் இல்லையா. இந்த வழியாக போய்க் கொண்டிருந்தபோது சார் ஊரில் இல்லை என்று நினைவுவந்தது. நீங்க ஃப்ரியாக இருந்தால் உங்களையும் அழைத்துப் போகலாமே என்றுதான் வந்தோம். நீங்க வந்தால் எல்லோருக்கும் சந்தோஷமாக இருக்கும். வருக வருக என்று சிரம்கூப்பி உங்களை வரவேற்கத் தயாராக இருக்கிறோம்.''

''சிரம் கூப்பி இல்லை. கரம் கூப்பி.'' யாரோ சரிப் படுத்தினார்கள்.

''தமிழ் கொஞ்சம் தகராறு. அடியேனை மன்னித்து கருணை புரிய வேண்டும் தாயே!'' சிவராமன் நாடக பாணியில்



சொன்னதும் எல்லோரும் நகைத்தார்கள். ஜெயந்தியும் சிரித்து விட்டாள்.

''உங்களுக்கு இன்று விடுமுறை எப்படி கிடைத்தது?'' அவர்களுடன் போவதா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டே ஜெயந்தி கேட்டாள்.

''முதலில் இவர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன்.'' உயரத்திற்கு ஏற்ற பெருமனுடன் இருந்த இளம் பெண்ணை காண்பித்துக் கொண்டே ''இவள் பெயர் நீரஜா. என் நண்பன் கோபாலனின் தங்கை. பம்பாயிலிருந்து இந்த ஊருக்கு வந்து நான்கு நாட்களாகிறது. நாளை மறுநாள் ஊருக்குப் போய் விடுவாள். அவளுக்காக இந்த பிக்னிக் பிரோகிராம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.''

''ஆனால் அவர் ஊரில் இல்லையே.'' ஜெயந்திக்கு அவர்களுடன் போகவேண்டும் என்று இருந்தது. ஆனால் ஏதோ தயக்கம் அவளை பின்னால் இழுக்க முயன்றது.

''அது தெரிந்ததுதானே இவ்வளவு தைரியமாக உள்ளே வந்தோம். வீட்டில் சொல்லவில்லையே என்ற பயம்கூட உங்களுக்கு வேண்டாம். மாலை ஐந்துமணி... மிஞ்சிப் போனால் ஆறுமணிக்கெல்லாம் வீட்டுக்குப் போய்விடலாம்.'' சிவராமன் ஜெயந்திக்கு உறுதிமொழியளிப்பது போல் சொன்னான்.

''தேவை என்றால் லீவ் லெட்டர் எழுதி மேஜை மீது வைத்துவிடுங்கள்.'' பின்னால் நின்றிருந்த பிரகாஷ் சொன்னான்.

''அதுவும் சரிதான்.'' சிவராமன் பேனாவை எடுத்துக் கொடுக்கப் போனான்.

''லெட்டர் எழுத தேவையில்லை. வேலையும் முடிந்துவிட்டது.''

ஜெயந்தியின் கண்முன்னால் பழைய நிகழ்ச்சி நிழலாடியது. அன்று ஒரு நாள் தான் டைப் செய்யாமல் சிவராமனுடன் கிளம்பிப்போனது... மறுநாள் அந்த வேலையை ராஜசேகர் செய்து முடித்தது நினைவுக்கு வந்தது.

இன்றைய நிலைமை வேறு. ராஜசேகர் ஊரிலேயே இல்லை. அதோடு வேலை எதுவும் பாக்கியில்லை. வேலைக்கு சேர்ந்த பிறகு பிறந்தநாள் அன்று மட்டும்தான் விடுமுறை எடுத்துக் கொண்டிருந்தாள்.

''எதற்கு தயங்கறீங்க? எல்லோரும் ஜாலியாக போய்வரலாம் வாங்க.'' நீரஜா உரிமையுடன் வற்புறுத்தினாள்.

ஜெயந்தி பேப்பர்களை உள்ளே வைத்து விட்டு அவர்களுடன் கிளம்பினாள். வெளியே இரண்டு கார்கள் இருந்தன. பழக் கூடைகள், வாட்டர் கேன்கள் பிளாஸ்குகள், டிரான்ஸிஸ்டர், கேமரா என்று பொருட்கள் டிக்கியிலும், பின் சீட்டிலும் நிரம்பியிருந்தன. பின்னால் இருந்த காரில் முன் சீட்டில் பரிமளா நாய்குட்டியுடன் அமர்ந்திருந்தாள். ஜெயந்தி திகைப்புடன் நின்று விட்டாள்.

''நீங்க பிரகாஷ் காரில் வர்றீங்களா இல்லை என்னுடைய காரில் வர்றீங்களா?'' படி இறங்கிக்கொண்டே சிவராமன் கேட்டான்.

''உங்களுடைய கார் எது?'' ஜெயந்தி கேட்டாள்.

சிவராமன் பரிமளா உட்கார்ந்திருந்த காரை காண்பித்தான். அது சிவராமனுக்கு ஆபீசில் கொடுத்த கார் இல்லை. பரிமளாவுடையதோ இல்லை வேறு யாருடையதோ.

பரிமளா ஜெயந்தியின் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. மடியில் இருந்த நாய்குட்டியைத் தடவிக் கொண்டு எங்கேயோ பார்த்துக் கொண்டு இருந்தாள்.

''நான் அந்த காரில் உட்கார்ந்து கொள்கிறேன்.'' ஜெயந்தி பிரகாஷின் காரை நோக்கி நடந்தாள்.

''நானும் அந்த காரிலேயே வருகிறேன்.'' நீரஜா ஜெயந்தியை பின்பற்றினாள்.

பிக்னிக் ஸ்பாட்க்கு பக்கத்திலேயே கெஸ்ட் ஹவுஸில் அறையை முன்னாடியே ரிசர்வ் செய்திருந்தார்கள். எல்லோரும்



கலகலவென்று பேசிக் கொண்டு ஜாலியாக இருந்தார்கள். ஜெயந்தி கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். யாருமே எல்லை மீறி நடந்து கொள்ளவில்லை. நடுவில் காபி டிபன் சாப்பிட்டார்கள். வந்தவர்களில் பாடத் தெரிந்தவர்கள் சினிமா பாடல்களை பாடினார்கள். எல்லோரும் வற்புறுத்தி கேட்டுக் கொண்ட பிறகு ஒரு இளைஞனும் ஒரு பெண்ணும் சில டூயட்டுகளை பாடினார்கள். சந்தோஷமான பாடலை பாடியபோது மற்றவர்கள் எல்லோரும் தாளம் போட்டு, விசில் அடித்து கூரை பியந்து போகும் அளவுக்கு ரகளை செய்தார்கள். வேதனையை வெளிப்படுத்தும் பாடலை பாடியபோது விக்கி விக்கி அழுவது போல் நடித்துக் கொண்டே வராத கண்ணீரை கைக்குட்டையால் ஒற்றினார்கள்.

ஒரு பக்கம் டிரான்ஸிஸ்டரில் பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தது.

''வெய்யில் போய்விடும். போட்டோ எடுத்துக் கொள்ளணும்.'' யாரோ சொன்னார்கள்.

''ஆமாம். அந்த விஷயத்தையே மறந்து போய்விட்டோம்.''

ஆளுக்கொரு கேமராவை எடுத்துக் கொண்டார்கள்.

''பரிமளா! இந்த மரத்தின் கீழே நில்லு. நாய்குட்டியுடன் உன்னை போட்டோ எடுக்கிறேன்.'' சிவராமன் கேமரா வழியாக பார்த்துக் கொண்டே சொன்னான். வந்தது முதல் பரிமளா யாருடனும் அதிகமாக பேசவில்லை. ஜெயந்தியுடன் பட்டும் படாமல் பேசியதுடன் சரி.

சிவராமன் கழுத்தில் கேமராவுடனும், பரிமளா கையில் நாய்குட்டியுடன் தொலைவாக சென்றுவிட்டார்கள்.

''எல்லோரையும் ஒரு க்ரூப் போட்டோ எடுக்கிறேன். சேர்ந்து நில்லுங்க.'' பிரகாஷ் கேமராவில் ஆங்கிளை பார்த்துக் கொண்டே சொன்னான்.

எல்லோரும் சேர்ந்தாற்போல் நின்று கொண்டார்கள்.

எனக்கு வேண்டாம்.'' ஜெயந்தி தொலைவாக போய் உட்கார்ந்து கொண்டாள்.

''ஏன் அப்படி?'' பிரகாஷ் ஏமாற்றத்துடன் கேட்டான்.

''எனக்கு விருப்பம் இல்லை. மன்னித்துக் கொள்ளுங்கள். தரையில் இருந்த புல்லை கையால் பிடுங்கிக் கொண்டு திடமான குரலில் சொன்னாள்.

அதற்கு பிறகு ஜெயந்தியை யாரும் வற்புறுத்தவில்லை. அந்த அளவுக்கு நெருக்கம் அங்கே யாருக்கும் இல்லாததால் பேசாமல் இருந்து விட்டார்கள்.

''போகட்டும் உங்களை தனியாக ஒரு ஸ்னாப் எடுக்கிறேன். அதற்காவது சம்மதம் தருவீங்களா?'' பிரகாஷ் கேட்டான்.

''வேண்டாம்.'' சுருக்கமாக சொன்னாள் ஜெயந்தி.

மற்ற எல்லோரும் பலவிதமாக போட்டோ எடுத்துக் கொண்டார்கள்.

ஜெயந்திக்கு தெரியாமலேயே பிரகாஷ் அவளை தனியாக ஒரு போட்டோ எடுத்ததை அங்கே யாரும் கவனிக்கவில்லை.

தொலைவில் சூரியன் அஸ்தமித்துக் கொண்டு இருந்தான். வெளிச்சமும் குறைந்துவிட்டது.

''அட! இருட்டி விட்டதே'' என்றாள் ஜெயந்தி.

''ஆமாம். கிளம்ப வேண்டியதுதான். சிவராமன், பரிமளா அப்போ போனவங்க. இன்னும் காணுமே?'' ஜெயந்திக்கு சற்று தள்ளி உட்கார்ந்து கொண்டே சொன்னான் பிரகாஷ்.

''அதோ வந்து கொண்டு இருக்கிறார்கள்.'' நீரஜா சுட்டிக் காட்டினாள்.

தொலைவில் இருவரும் நெருக்கமாக நடந்து வந்து கொண்டிருந்தார்கள். இந்த முறை கேமரா பரிமளாவின் கையில் இருந்தது. சிவராமன் நாய்குட்டியை தூக்கிக் கொண்டு இருந்தான். ஜெயந்தி அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.



எல்லோரும் கிளம்புவதற்கு ஏழுமணியாகி விட்டது. காரை ஸ்டார்ட் செய்யும்போது பெண்கள் எல்லோரும் முதலில் தங்களை இறக்கிவிடச் சொல்லி டிமாண்ட் செய்தார்கள். நகர எல்லைக்குள் நுழையும்போது சிவராமனின் கார் வேறு திசையில் பிரிந்து விட்டது.

''ரொம்ப நேரமாகி விட்டது ப்ளீஸ்! என்னை முதலில் இறக்கி விடுங்க. தாமதமாக போனால் அத்தை சூடு போட்டு விடுவாள்.'' சுந்தரி என்ற பெண் கெஞ்சத் தொடங்கினாள். எல்லோருடைய முகவரியை கேட்டுக் கொண்டு யாரை முதலில் இறக்கி விடுவது என்று பிரகாஷ் பட்டியலை தயாரித்தான். அந்த வரிசையின்படி ஜெயந்தியின் முறை கடைசியில் வந்தது.

''ரொம்ப நேரம் ஆகிவிடும் போலிருக்கே.'' ஜெயந்தி கவலைப்பட்டாள்.

''எவ்வளவு நேரம் ஆனாலும் உங்களுக்கு பரவாயில்லை. வீட்டுக்கு போனதும் சாப்பாடு ரெடியாக இருக்கும். இன்னிக்கு நான் பட்டினிதான். வழக்கமாக நான் சாப்பிடும் மெஸ்ஸில் இந்நேரம் ஏறக்கட்டியிருப்பார்கள்'' என்றான் பிரகாஷ்.

ஒவ்வொருவரையும் அவரவர்கள் வீட்டில் இறக்கி விட்டு ஜெயந்தியின் வீட்டை நோக்கி கார் திரும்பும்போது மணி பதினொன்றாகி விட்டது. நடுவில் பெட்ரோல் தீர்ந்துவிட்டது என்று பெட்ரோல் பங்க் பக்கம் காரை செலுத்தினான். பங்கில் யாருமே இருக்கவில்லை. பிரகாஷ் இறங்கி உள்ளே போய் குரல் கொடுத்ததும் பையன் ஒருவன் தூக்கக்கலக்கத்துடன் ஓடிவந்து அவசர அவசரமாக பெட்ரோலை நிரப்பினான். நேரம் கடந்துகொண்டே இருந்தது. ஜெயந்திக்கு தூக்கக் கலக்கமாக, சோர்வாக இருந்தது.

''முன் சீட்டுக்கு வர்றீங்களா?'' பிரகாஷ் கேட்டான்.

''பரவாயில்லை. இங்கே வசதியாகத்தான் இருக்கு.'' ஜெயந்தி சொன்னாள்.

பிரகாஷ் பதில் எதுவும் பேசவில்லை. சற்று நேரம் கழித்து மீண்டும் பிரகாஷ் கேட்டான், "நீங்க ஏன் போட்டோ எடுத்துக் கொள்ளவில்லை?"

சொன்னேனே விருப்பம் இல்லை என்று."

காரணம்?"

"முன் பின் தெரியாதவர்களுடன் போட்டோ எடுத்துக் கொள்வது எனக்குப் பிடிக்காது. பத்து பேருடன் சேர்ந்து ஜாலியாக பொழுதை போக்கலாம் என்று பிக்னிக்கிற்கு வந்தேன். அது வேறு விஷயம்."

"சிவராமனை உங்களுக்கு எவ்வளவு நாளாக தெரியும் சொல்லுங்க."

"சிவராமன் விஷயம் வேறு. சிலரைப் பார்த்தால் சில விஷயங்கள் புரிந்துவிடும்." வினாடிவினா நிகழ்ச்சியில் கேட்பது போல் விடாமல் கேள்வி கேட்கிறானே. இனி எந்த கேள்வி கேட்டாலும் பதில் சொல்லக்கூடாது என்று ஜெயந்தி முடிவு செய்து கொண்டாள்.

"ஓஹோ! உங்களுக்கு மனவியல் சாஸ்திரம் தெரியும் என்று சொல்லுங்க." பிரகாஷ் சிரித்துக் கொண்டே சொன்னான்.

ஜெயந்தி மௌனமாக இருந்தாள்.

"போகட்டும். ஆண்களை விடுங்க. பெண்களுடன் சேர்ந்து போட்டோ எடுத்துக் கொள்ளலாம் இல்லையா. அதற்கும்...." பிரகாஷ் மேலும் ஏதோ சொல்லும் முன் சடென் பிரேக் போட்டதில் கிறீச்சென்று சத்தத்துடன் கார் நின்று விட்டது. எதிரே வந்த ரிக்ஷாக்காரன் காரில் மோதிக் கொண்டு சாலையின் ஓரமாக போய் விழுந்தான். சாலையில் போக்கு வரத்து நின்று விட்டது. தொலைவில் இருந்த டிராஃபிக் கானிஸ்டேபிள் விசில் ஊதிக் கொண்டே ஓடி வந்தான். எல்லாம் கண் மூடி திறப்பதற்குள் நடந்து முடிந்து விட்டது.



தரையில் விழுந்துக் கிடந்த ரிக்ஷாக்காரனுக்கு யாரோ சோடா வாங்கிக் கொடுத்தார்கள். பிரகாஷ் காரை விட்டு இறங்கினான்.

அதற்குள் கானிஸ்டேபிள் காரின் நம்பரையும், ரிக்ஷாவின் நம்பரையும் நோட்புத்தகத்தில் குறித்துக் கொண்டிருந்தான்.

"என்னுடைய தவறு எதுவும் இல்லை. ராங் சைட் காட்டி விட்டு அவனாக வந்து இடித்தான்" என்றான் பிரகாஷ்.

"தவறு யாருடையது என்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. வண்டியின் நம்பரை குறித்துக் கொள்கிறேன்." நிதான மான குரலில் சொன்னான் கானிஸ்டேபிள். அவனிடமிருந்து குப்பென்று சாராய நெடி அடித்தது. பிரகாஷுக்குக் கோபம் வந்தாலும் எதுவும் செய்ய முடியாத நிலைமை.

அதற்குள் போலீஸ்காரர் அங்கே வந்து சேர்ந்தார். பிரகாஷைப் பார்த்ததும் "அட! ஆக்ஸிடெண்ட் செய்தது நீங்க தானா? அக்கா புருஷனுக்கு அமைச்சர் பதவி போனாலும், மச்சானுக்கு இன்னும் பதவி மயக்கம் போகவில்லை போலும்." ஏளனமாகச் சொன்னார்.

அவரைப் பார்த்ததும் பிரகாஷ் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"வாங்க. ஸ்டேஷனுக்குப் போவோம்."

"தாராளமாக நம்பரை நோட்செய்து கொள் ஸ்டேஷனுக் செல்லாம் வரமாட்டேன்." பிரகாஷ் பிடிவாதமாக சொன்னான்.

"ஸ்டேஷனுக்கு வந்து ரிப்போர்ட் கொடுத்துவிட்டுப் போவது உனக்கு நல்லது. அப்படிச் செய்யாத பட்சத்தில் பின் விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும். அதற்கு வேண்டிய துணிச்சல் உனக்கு இருந்தால் நாங்க ஏன் கவலைப்பட வேண்டும்? அந்தப் பெண் யாரு? என்ன பெயர்?" போலீஸ்காரர் நக்கலாக கேட்டார்.

''ஸ்டேஷனுக்கு வருகிறேன். நீங்க போங்க.'' கார் கதவை படீரென்று சாத்தினான் பிரகாஷ்.

''என்ன ஆச்சு? நாம் வீட்டுக்கு போகலாமா?'' ஜெயந்தி பதட்டத்துடன் கேட்டாள்.

''வீட்டுக்குத்தானே. போய் விடலாம். ஒரு அரை மணி முன்ன பின்ன ஆகும். அவ்வளவுதான். கவலைப்படாதீங்க. எங்க அத்தான் அமைச்சராக இருந்த காலத்தில் இதோபோல் ஏதோ ஆக்ஸிடெண்ட் நடந்தது. அப்பொ இந்த கானிஸ்டேபிள் கேஸ்போட்டு இழுத்தடித்தான். வேலையே போய் விடும் அளவுக்கு நிலைமை மோசமாகி விட்டது. அந்த பகையை மனதில் வைத்துக் கொண்டு இப்பொ சாதிக்க நினைக்கிறான். நம்முடைய நேரம் சரியாக இல்லை. இல்லாவிட்டால் இவனுடைய ட்யூடி இருக்கும் இடத்தில்தான் இதுபோல் நடக்க வேண்டுமா?'' பிரகாஷ் கோபத்தில் பற்களைக் கடித்தான்.

# 23

கார் அருகில் இருந்த காவல் நிலையத்தை அடைந்தது. இருவரும் இறங்கி உள்ளே போனார்கள். பிரகாஷ் சப் இன்ஸ்பெக்டரிடம் நடந்ததை விவரமாக சொன்னான். அவன் சொல்லச் சொல்ல ரைட்டர் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தான். எல்லாம் சொல்லி முடித்த பிறகு கடைசியாக பிரகாஷ் சொன்னான். ''நீங்க கேஸ் பதிவு செய்து கொள்வதாக இருந்தால் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் இந்தப் பெண் யார் என்று தெரிந்தால் நீங்களே பின் வாங்குவது நிச்சயம்.''

''அப்படி என்றால்?'' குறிப்பு எழுதிக் கொண்டிருந்தவன் கேட்டான்.

ஜெயந்தியும் பதட்டத்துடன் பிரகாஷ் பக்கம் பார்த்தாள்.

''அதாவது.... ஜெயந்தி என்று இப்பொ எழுதினீங்களே.. இந்தப் பெண் திரு ராஜசேகரின் செகரெட்ரி.''



''இல்லை.. இல்லை.'' ஜெயந்தி கையை நீட்டி தடுப்பது போல் சொன்னாள்.

''சொல்ல விடு ஜெயந்தி. எதற்காக பயப்படணும்?'' என்றவன் சப்இன்ஸ்பெக்டர் பக்கம் திரும்பி ''இந்தப் பெண் செகன்திராபாத்லிருந்து வரும்போது பஸ் கிடைக்காததால் லிஃப்ட் கொடுத்தேன். இதற்கு மேல் உங்கள் விருப்பம்.'' அலட்சியமாக சொல்லிக் கொண்டே சிகரெட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டான்.

காவல் அதிகாரிகள் குழப்பத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''நான் சொன்னது பொய்யாக இருக்கக்கூடும் என்று நினைத்தால் நீங்களே அவர் வீட்டுக்கு போன் செய்து விசாரித்துக் கொள்ளுங்கள்.''

''வேண்டாம்... வேண்டாம். நான்.. நான்...'' ஜெயந்தியால் மேற்கொண்டு பேசமுடியவில்லை.

காவல் அதிகாரிகளின் கண்களில் சந்தேகம் வெளிப்படையாக தெரிந்தது. குறிப்பு எழுதிக் கொண்டிருந்த ரைட்டர் போனை அருகில் இழுத்துக் கொண்டு டயல் செய்யத் தொடங்கினான்.

''ஜெயந்தி! போன் செய்யட்டும். நம்மீது கேஸ் போட்டவனுக்கு ராஜசேகர் மூலமாகத்தான் வேலை கிடைத்தது.'' பிரகாஷ் ஜெயந்தியின் அருகில் வந்து தாழ்ந்த குரலில் சொன்னான்.

ஜெயந்தியின் மனம் நிலை தடுமாறியது. நல்ல வேளை! ராஜசேகர் ஊரில் இல்லை. இல்லாவிட்டால் இந்தச் சூழ் நிலையில்...''

''ஹலோ!''

''....''

''யாரு? மிஸ்டர் ராஜசேகர் தானே? நான்தான் சப்இன்ஸ் பெக்டர் சத்யம் பேசுகிறேன். சாரி டு டிஸ்டர்ப் யூ.''

ஜெயந்தி சரேலென்று தலையை உயர்த்தினாள்.

"இங்கே ஒரு ஆக்ஸிடெண்ட் கேஸ் வந்திருக்கு சா ஆக்ஸிடெண்ட் செய்தவரின் காரில் பிரகாஷ் என்பவனு ஜெயந்தி என்ன இளம் பெண்ணும் இருக்கிறாள். உங்களுடை செகரெட்ரி என்று சொல்கிறாள்."

"நான் சொல்ல வில்லை. இல்லவே இல்லை. பதட்டத்துடன் சொன்னாள் ஜெயந்தி.

"என்ன? அவளையே பேச சொல்லட்டுமா? இதோ ஒ நிமிடம்." உள்ளங்கையால் ரிசீவரை மூடிவிட்டு "நீங்க பேசுங்க என்றார் இன்ஸ்பெக்டர்.

"வேண்டாம். நான் பேசமாட்டேன்." திடமான குரலி சொன்னாள். திடீரென்று ஜெயந்திக்கு தான் எங்கே எந் நிலையில் இருக்கிறோம் என்று மறந்து விட்டது. நினை தப்பிவிட்டாற்போல் உணர்ந்தாள்.

"பேசுங்க" என்றார் காவல் அதிகாரி.

"ஊஹூம்! நான் பேசமாட்டேன்." மறுப்பதுபோ தலையை குறுக்காக அசைத்தாள். தனக்கு ஏன் இன்னும் அழுை வரவில்லையோ ஜெயந்திக்கு வியப்பாக இருந்தது.

"பேசு ஜெயந்தி! எதற்காக பயப்படுகிறாய்? இதுபோ பிக்னிக் போய் வருகிறோம், நேரமாகி விட்டது என்று சொல் இந்த விபத்து நடந்ததில் தவறு நம்முடையது இல்லை என்று சொல்லு."

"நான் சொல்ல மாட்டேன். உங்களுக்குத் தெரியாது." வேகமாக தலையை அசைத்தாள்.

"சற்று முன் செகன்திராபாத்லிருந்து வரும்போது லிஃப் கொடுத்ததாக சொன்னாய். இப்போ பேச்சை மாற்றுகிறாயே" காவல் அதிகாரி கோபமாக கேட்டார்.



பிரகாஷ் அவருடைய பேச்சை பொருட்படுத்தவில்லை. வாசல் வரையில் சென்று கையில் இருந்த சிகரெட்டை வெளியில் வீசிவிட்டு மறுபடியும் ஜெயந்தியின் அருகில் வந்தான்.

"இப்படி நீ பயந்தால் பிரயோஜனம் இருக்காது ஜெயந்தி" என்றான்.

ஜெயந்தி பேசவில்லை. அவள் விழிகளில் நீர் சுழன்றது. சப் இன்ஸ்பெக்டர் மறுபடியும் போனில் பேசத் தொடங்கினார்.

"ஹலோ! அந்தப் பெண் பேச மறுக்கிறாள். அவனானால் பேசச் சொல்லி வற்புறுத்துகிறான். என்ன? அந்தப் பெண் எப்படி இருக்கிறாள் என்று வர்ணிக்கணுமா?" என்றவர் மோவாயைத் தடவிக்கொண்டே ஜெயந்தி பக்கம் பார்த்தார். "ஒரு வேலை செய்கிறேன். எப்படியும் உங்க தூக்கத்தை கெடுத்து விட்டோம். நீங்க அனுமதி கொடுத்தால் இவர்களை உங்களிடம் அழைத்து வருகிறோம். இன்னும் கால்மணி நேரத்தில் உங்கள் வீட்டில் இருப்போம்" என்று சொல்லி விட்டு போனை வைத்து விட்டார்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஜெயந்தியின் கண்கள் அதிர்ச்சியால் விரிந்தன. இந்த நேரத்தில்.... அதிலும் இந்த சூழ்நிலையிலா ராஜசேகர் வீட்டுக்கு போவது?

ஜெயந்தி யோசித்துக் கொண்டு இருந்தபோதே போலீஸ் ஜீப் ராஜசேகரின் வீட்டின் முன்னால் வந்து நின்றது.

ராஜசேகர் ஹாலில் சோபாவில் அமர்ந்திருந்தான். முன்னால் சென்ற இன்ஸ்பெக்டர் சத்யம் ராஜசேகருக்கு வணக்கம் தெரிவித்தார். அவருக்கு பின்னால் வெளிறிப்போன முகம், கலைந்த தலைமுடியுடன் தூக்கத்தில் நடப்பது போல் நடந்து வந்து கொண்டிருந்த ஜெயந்தியை பார்த்ததும் ராஜசேகர் திகைத்துப் போனான்.

சட்டென்று எழுந்துகொண்டு ஓரடி முன்னால் வைத்து "ஜெயந்தி!" என்றான்.

ஜெயந்தியின் பார்வை தரையில் பதிந்து விட்டது

காவல் அதிகாரி விவரங்களை தெரிவித்தார்.

''போனில் பேச மறுத்ததால் எனக்கு சந்தேகம் வந்தது.'' ராஜசேகரின் குரல் வித்தியாசமாக ஒலித்தது. அதற்குப் பிறகு அவன் ஜெயந்தியின் பக்கம் திரும்பவில்லை.

பிரகாஷ் முன்னால் வந்து சிவராமனின் நண்பன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். நடந்ததை எல்லாம் விவரமாகச் சொன்னான்.

அவன் யாரென்று ராஜசேகருக்குத் தெரியவில்லை. இதற்கு முன் எங்கேயும் பார்த்ததாக நினைவும் இல்லை.

சாரி சார்! உங்களுக்கு சிரமத்தை கொடுத்து விட்டோம். கையை குலுக்கி விடைபெற்றுக் கொண்டார் சப் இன்ஸ்பெக்டர்.

''பரவாயில்லை.'' வந்தவர்களை வழியனுப்புவதற்காக ராஜசேகர் வாசல்வரை சென்றான்.

வாசற்படி இறங்கும்போது சப் இன்ஸ்பெக்டர் பின்னால் திரும்பினார். ''அப்போ... இந்தப் பெண்ணை வீட்டுக்கு...'' பாதியிலேயே நிறுத்திவிட்டார்.

''அவளை நானே வீட்டில் டிராப் செய்கிறேன். வீட்டுப் பெரியவங்களிடம் நடந்ததைப் பற்றி ஒரு வார்த்தைச் சொன்னால் கவலைப்பட மாட்டார்கள் இல்லையா.'' ராஜசேகர் சொன்னான்.

பிரகாஷ் அவர்களுடன் கிளம்பிப் போய்விட்டான்.

எல்லோரும் போன பிறகு ராஜசேகர் காரை கேரெஜ்லிருந்து வெளியே எடுத்து வந்தான். பின் சீட்டில் ஏறுவதற்காக அந்தப் பக்கம் போகப் போன ஜெயந்தி, ராஜசேகர் முன் பக்கத்து டோரை அவளுக்காக திறந்து விட்டதால் வேறு வழியின்றி முன் சீட்டில் அமர்ந்து கொண்டாள்.

அவன் எதுவும் பேசவில்லை. ஜெயந்தியும் மௌனமாக இருந்தாள்.

வீடு நெருங்கிக் கொண்டிருந்தபோது திடீரென்று ராஜசேகர் திடீரென்று கேட்டான்.



''பிரகாஷை உனக்கு எத்தனை நாளாக தெரியும்?''

அவன் குரல் சாதாரணமாக இருப்பது போல் தோன்றினாலும், கேட்ட தோரணை ஜெயந்திக்கு வித்தியாசமாக இருந்தது. பதில் சொல்வதற்கு குரல் ஒத்துழைக்கவில்லை.

பதிலுக்காக சிறிது நேரம் காத்திருந்த ராஜசேகர் ஜெயந்தி மௌனமாக இருந்ததை கவனித்து ''சொல்ல விருப்பம் இல்லை என்றால் சொல்ல வேண்டியதில்லை'' என்றான்.

''சிவராமன் அறிமுகப் படுத்திவைத்தான்.'' எப்படியோ சொல்லி விட்டாள் ஜெயந்தி.

''சிவராமனை உனக்கு எத்தனை நாளாக தெரியும்?''

ஜெயந்திக்கு ஏனோ கோபம் வந்தது. அப்படி பார்க்கப் போனால் ராஜசேகரை மட்டும் ரொம்ப நாளாக தெரியுமா என்ன?

''சிவராமனுடனோ, பிரகாஷிடனோ உனக்கு அறிமுகம் இருப்பதை நான் மறுக்கவில்லை ஜெயந்தி. மனிதப் பிறவி எடுத்தப் பிறகு நண்பர்கள், நெருங்கியவர்கள் இல்லாமல் வாழ முடியாது. ஆனால் இன்று நீ எத்தனை பெரிய ஆபத்திலிருந்து மயிரிழையில் தப்பிவிட்டாய் தெரியுமா? உடல் நலம் சரியாக இல்லாததால் நான் ஊரிலிருந்து முன்னாடியே திரும்பி வந்திருக்காவிட்டால் நிலைமை என்னவாகியிருக்கும் தெரியுமா? நீ பதட்டம் அடைந்ததைப் பார்த்ததும் காவல் அதிகாரிகளுக்கு மேலும் சந்தேகம் வந்து விட்டது. காரணம் எதுவாக இருந்தாலும் காவல் நிலையத்தில் பெயர் பதிவு செய்யப்பட்டால் அது எவ்வளவு மோசமான விளைவுகளுக்கு வழிவகுக்குமோ உனக்குத் தெரியாது. முக்கியமாக இளம் பெண்கள் இந்த விஷயத்தில் ரொம்பவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.''

ஜெயந்தி தலையைக் குனிந்தபடி கை நகங்களை ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

''நேரம் கழித்து வந்தால் பாட்டி ஒன்றும் சொல்ல மாட்டாளா?''

''ரொம்ப கவலைப்பட்டிருப்பாள். நான் போனதும் நன்றாக டோஸ் விடுவாள்.''

''நான் வேண்டுமானால் உள்ளே வந்து பாட்டியிடம் சொல்லட்டுமா?'' காரை நிறுத்திக் கொண்டே கேட்டான்.

''தாங்க்ஸ் தேவையில்லை.''

''நாளை கொஞ்சம் சீக்கிரமாக வரவேண்டியிருக்கும். வேலை இருக்கு'' என்றான்.

ஜெயந்தி அதற்கு பதில் எதுவும் அளிக்கவில்லை. குறைந்தபட்சம் வருகிறேன் என்றுகூடச் சொல்லாமல் வீட்டை நோக்கி வேகமாக நடந்தாள்.

வீட்டுக் கதவுகள் வெறுமே சாத்தியிருந்தன. உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பாட்டி இன்னும் தூங்க வில்லை போலும். ஜெயந்தி வாசற்படி ஏறிய பிறகு ராஜசேகர் காரை ஸ்டார்ட் செய்தான்.

''எங்கே போயிருந்தாய்? சமீபகாலமாய் நேரத்தோடு வீட்டுக்கு வருகிறாயே என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தால் மறுபடியும் ஆரம்பித்து விட்டாயா?''

''இல்லை பாட்டி. நானும் சுமதியும் செகண்ட் ஷோ சினிமாவுக்கு போயிருந்தோம்.'' மனதிற்கு பிடிக்காவிட்டாலும் பொய் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை.

''என்ன? என்ன நேராக பார்த்துச் சொல்லு. சுமதியுடன் நீ சினிமாவுக்கு போனாயா?''

''ஆமாம்.''

ஜானகி திகைத்துப் போனவளாய் அருகில் வந்தாள். ''ஜெயந்தி! பொய் சொல்வதை எப்பொழுதிலிருந்து கற்றுக் கொண்டாய்? சுமதி ஏதோ வேலையாய் இந்தப் பக்கமாக வந்தாளாம். நம் வீட்டுக்கும் வந்திருந்தாள். உனக்காக பத்து மணி வரையிலும் காத்திருந்து விட்டு போனாள்.''

ஜெயந்தி திடுக்கிட்டாள். என்ன பதில் சொல்ல முடியும்? சொன்ன பொய் சரியாக பொருந்தவில்லை.



''ஜெயந்தி! ஏதாவது தவறு செய்திருந்தால் அதை வெளிப்படையாக சொல்லும் துணிச்சல் இல்லாதபோதுதான் பொய் சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். உண்மையைச் சொல்லு. நீ எங்கே போயிருந்தாய்?'' பேத்தியை கூர்ந்து பார்த்துக் கொண்டே கேட்டாள்.

''பாட்டீ!'' ஜெயந்தி சட்டென்று பாட்டியை அணைத்துக் கொண்டாள். ''பாட்டி! உன்னிடம் ஒரு நாளும் பொய் சொன்னதில்லை. சொல்ல வேண்டிய தேவையும் இல்லை'' என்றவள் பிக்னிக் போய் விட்டு வந்த விவரம் சொன்னாள். ஆக்ஸிடெண்ட் பற்றிச் சொன்னால் பாட்டி கவலைப்படுவாளோ என்று கார் ரிப்பேராகி விட்டது என்று சொன்னாள்.

ஜானகி ஒன்றும் சொல்லவில்லை. பேத்தியின் தலையை வருடிவிட்டாள். ''ஜெயந்தி! நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த நம்மை போன்றவர்களுக்கு பெண்களை வேலைக்கு அனுப்புவது சரிப்பட்டு வராது. கூடிய சீக்கிரம் உனக்கு ஒரு கல்யாணம் ஆனால்தான் எனக்கு நிம்மதியாக இருக்கும் குழந்தே'' என்றாள்.

ஜெயந்தி மெதுவாக பாட்டியின் அணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டு உடைகளை மாற்றுவதற்கு உள்ளே போனாள்.

''சொல்ல மறந்து விட்டேன். நாளைக்கு உன்னை பெண் பார்க்க அடுத்த வீட்டு மாமியின் அக்கா மகன் வருகிறானாம். உன்னை அவனுக்கு கட்டாயம் பிடிக்கும் என்று மாமி சொன்னாள்.''

''பாட்டி! பசிக்கிறது.''

''இதோ தட்டு போடுகிறேன். அந்த பையனுக்கு சொத்து எதுவும் இல்லையாம். பர்மனெண்ட் வேலையாம்.'' ஜானகி சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஜெயந்தி வேகமாக சாப்பிட்டு விட்டு உறங்கச் சென்றாள்.

★ ★ ★

மறுநாள் காலையில் ராஜசேகர் வீட்டுக்குப் போகக்கூடாது என்று முடிவு செய்த ஜெயந்தி நிதானமாக வீட்டு வேலைகளை செய்து கொண்டிருந்தாள்.

"ஜெயந்தி! இன்னிக்கு வேலைக்கு போகாவிட்டாலும் பாவாயில்லையா?" ஜானகி கேட்டாள்.

"எதற்காக கேட்கிறாய் பாட்டி?"

"உன்னை பெண்பார்க்க பையன் வரப்போவதாக சொன்னேனே. அவன் இன்று இரவே ரயிலில் திரும்பிப் போகணுமாம். வேண்டுமானால் ஒரு லீவ்லெட்டர் எழுதி சுமித்ராவுக்கு அனுப்பிவிடு."

ஜெயந்தி சட்டென்று பார்வையைத் திருப்பிக் கொண்டாள். 'பாவம் பாட்டி. இன்னும் வனிதா விஹாரிலேயே நான் வேலை பார்த்து வருவதாக நினைத்துக் கொண்டு இருக்கிறாள்.' பெருமூச் சொன்று அவளையும் அறியாமல் வெளியேறியது. ராஜசேகர் தனியன் என்றும், அவனிடம் தான் செகரெட்ரியாக வேலை பார்த்து வருவதாகவும் தெரிந்தால் பாட்டி தன்னை வீட்டை விட்டு வெளியேறவிட மாட்டாள். அது நிச்சயம்.

பெண் பார்க்கும் படலத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஜெயந்தி வழக்கத்தைவிட முன்னதாகவே கிளம்பிவிட்டாள்.

# 24

அன்று ஒரு மணிக்கு சாப்பிட வந்தபோது ராஜசேகர் "மாலையில் வீட்டுக்குப் போகும்போது உன்னை கமலா மாமி தங்களுடைய வீட்டுக்கு வரச்சொன்னாள். அவர்கள் வீட்டுக்குப் போனால் நேரமாகி விடும் என்று நினைத்தால் சற்று முன்னதாகவே கிளம்பிவிடு" என்றான்.

ஜெயந்தி நிமிர்ந்து பார்த்தாள். அவன் முகம் எப்போதும் போல் இருந்தது. முதல் நாள் நடந்த நிகழ்ச்சியின் வெறுப்போ, எரிச்சலோ தென்படவில்லை.



முதல் நாள் நடந்ததை தான் விலாவாக சொல்லியிருக்க வேண்டும் என்று நினைத்த ஜெயந்தி ஏதோ சொல்லப் போனாள். அதை கவனித்த ராஜசேகர் தடுத்து விட்டான். "நேற்று நடந்ததை நான் மறந்து விட்டேன். நீங்களும் மறந்து விடுங்க. எல்லோருடைய வாழ்க்கையிலும் விரும்பத் தகாத நிகழ்ச்சி ஏதாவது நடந்து கொண்டுதான் இருக்கும். ஆனால் அது எதிராளியின் வாழ்க்கையுடன் முடிச்சுப் போடப்படும் போதுதான் சங்கடமாக இருக்கும். நீங்க என்னிடம் செகரெட்ரியாக இருப்பது பெரும் பாலானவர்களுக்குத் தெரியாது" என்றான்.

அவன் மறுபடியும் வெளியில் போகும் போது "கமலா மாமியின் வீட்டுக்கு போக மறந்து போகாதே" என்று நினைவுப் படுத்தி விட்டுச் சென்றான்.

ஜெயந்தி மாலையாகும் போது ராஜசேகரின் காரிலேயே கமலா மாமியின் வீட்டுக்குச் சென்றாள்.

"வாம்மா.. வா.. வா. கமலா! உன்னுடைய மகள் வந்திருக்கிறாள்." முன் அறையில் பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த சுப்ரமணியம் உள் பக்கம் திரும்பி குரல் கொடுத்தார்.

கைவேலையை அப்படியே போட்டுவிட்டு கமலா மாமி விரைந்து வந்தாள். "வந்து விட்டாயா. வருவாயோ மாட்டாயோ என்று தவித்துக் கொண்டிருந்தேன்."

இரண்டு கைகளையும் நீட்டி ஜெயந்தியை அணைத்துக் கொண்டாள்.

விஷயம் என்னவென்றால் மறுநாள் அவர்களுடைய மகள் சீதாவின் பிறந்தநாளாம். சுமதி, ஜெயந்தி இருவரும் சாப்பிட கட்டாயம் வரணுமாம். இப்போ ஜெயந்தியுடன் கிளம்பி வந்து சுமதியை, பாட்டியை நேரில் அழைக்கப் போவதாகவும் சொன்னாள்.

"வேண்டாம்.. வேண்டாம். இந்தச் சின்ன விஷயத்திற்கு நீங்க சிரமப்படுவானேன்? நாளைக்கு நானும் சுமதியும் கட்டாயம்

வருகிறோம். பாட்டிக்கு ரத்த அழுத்தம் ஜாஸ்தி. அடிக்கடி நெஞ்சு படபடப்பும் வரும். வெளியில் எங்கேயும் வரமாட்டாள். இன்னொரு நாள் உங்களை வீட்டுக்கு அழைத்துப் போகிறேன்.'' ஜெயந்தி சொன்னாள். அந்த அம்மாள் வீட்டுக்கு வந்தால் வேறு வினையே வேண்டாம். பாட்டிக்கு தான் வனிதா விஹார் வேலையை விட்டு விட்டு ராஜசேகரிடம் செக்ரெட்ரியாக இருப்பது தெரிந்துவிடும்.

மறுநாள் சுமதி, ஜெயந்தியுடன் ராஜசேகரும் சாப்பிட வந்தான். ஆனால் ரொம் நேரம் இருக்கவில்லை. அரை மணி நேரம் இருந்துவிட்டு கிளம்பிப் போய்விட்டான். போகும் முன் சட்டைப் பையிலிருந்து ஒரு இன்விடேஷன் எடுத்து கமலா மாமியிடம் தந்தான். ''மாலை ஐந்து மணிக்கு கார் அனுப்பு கிறேன். ரவீந்திர பாரதியில் பாலே டான்ஸ் இருக்கு. நாலுபேரும் போய் விட்டு வாங்க'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அவன் கிளம்பிப் போனபிறகு மாமி தங்களுடைய குடும்பத்திற்கும், ராஜசேகரின் குடும்பத்திற்கும் எவ்வளவு நெருக்கமான பந்தம் இருந்ததோ சொல்லத் தொடங்கினாள். சின்ன வயது முதல் ராஜசேகரும் சீதாவும் சேர்ந்து விளை யாடியதை, இருவருக்கும் இடையே நட்பு வளர்ந்ததை கதைபோல் சொன்னாள். வெளிப்படையாக தெரியாவிட்டாலும் சீதா இறந்துபோன பிறகு ராஜசேகர் நிலை தடுமாறிவிட்டான் என்றும், அவன் மனதில் வெறுமை குடி புகுந்து விட்டது என்றும் சொன்னாள். முன்போல் கலகலப்பாக இல்லை என்று கமலா சொல்லிக் கொண்டு இருந்தபோது சுமதியும், ஜெயந்தியும் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மாலை ஐந்து மணிக்கு ராஜசேகரின் கார் வந்ததும் எல்லோரும் ரவீந்திர பாரதிக்குக் கிளம்பினார்கள். அவர்கள் போய்ச் சேர்ந்த ரொம்ப நேரம் கழித்து ராஜசேகர் வந்தான். கூடவே ஐந்தாறு பேர் இருந்தார்கள்.

நிகழ்ச்சி முடிந்து எல்லோரும் வெளியே வரும் போது ராஜசேகர் அவர்களை நோக்கி வந்தான். அருகில் வந்தவன் ஒரு



நிமிடம் நின்று ''ஜெயந்தி! நீ நாளை காலையில் வரவேண்டாம். மாலை ஆறுமணிக்கு வா. ஹோட்டல் கோகுல் விஹாரில் இவர்களுக்கு பார்ட்டி இருக்கு'' என்று சொல்லி விட்டு மறு பேச்சுக்கு வாய்ப்பு தராமல் வேகமாக சென்றுவிட்டான்.

''அவருடைய காரை நமக்காக கொடுத்து விட்டார். பின்னே வீட்டுக்கு எப்படி போவார்?'' சுமதி கேட்டாள்.

'காருக்கென்ன வந்தது? யாராவது டிராப் செய்து விடு வார்கள்.'' கமலா மாமி சொன்னாள்.

''உங்களை இறக்கி விட்ட பிறகு காரை கிளப்புக்கு எடுத்துக் கிட்டு வரச்சொன்னாங்க'' என்றான் டிரைவர்.

# 25

மறு நாள் ராஜசேகர் சொன்னது போல் மாலை ஆறுமணிக்கு போனாள். அவள் போய்ச் சேரும்போது ஹாலில் ராஜசேகருடன் கமலா மாமியும், சுப்ரமணியமும் இருந்தார்கள். ஜெயந்தியைப் பார்த்ததும் இருவரின் முகத்தில் மகிழ்ச்சி வெளிப்படையாக தெரிந்தது. ''வாம்மா... வா'' என்று அன்புடன் வரவேற்றார்கள்.

நடு சோபாவில் அமர்ந்து கொண்டு அதுவரையில் பேசிப் பேசி களைத்துப் போனாற்போல் சரிந்து உட்கார்ந்திருந்த ராஜசேகர் ஜெயந்தியை ஒரு நிமிடம் கண் இமைக்காமல் பார்த்தான். உடனே நெற்றி முடிச்சேற ''உனக்கு அந்தப் புடவை யைத் தவிர வேறு புடவை இல்லை போலிருக்கே?'' என்றான். அவன் குரலில் எரிச்சல் கலந்திருந்தது.

டாக்டர் தம்பதியரை பார்த்ததும் மலர்ந்த முகத்துடன் கமலா மாமியை நோக்கி ஓரடி வைத்த ஜெயந்தி ராஜசேகர் சொன்னதைக் கேட்டு திகைத்துப் போனவளாய் நின்றுவிட்டாள். அவன் சொன்னதன் பொருள் விளங்காதவள் போல் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நேற்றுதான் இந்தப் புடவையை உடுத்திக் கொண்டு வந்தாள். இன்றும் அதே புடவை. புடவைகள் இல்லாவிட்டால் நீதாவின் புடவைகள் பீரோ நிறைய இருக்கு உடுத்திக் கொள்ளலாம் இல்லையா.'' கமலா மாமியை பார்த்துக் கொண்டே சொன்னான்.

வினாடி நேரம் ஜெயந்தியின் முகம் சிவந்து விட்டது. விழிகளிலிருந்து வெளியேறப்போன கண்ணீரை தடுக்க முயன்றாள். உடனே அந்த இடத்திலிருந்து வெளியேறி எங்கேயாவது ஓடிப்போய் விடவேண்டும் என்று தோன்றிது.

தன்னுடைய ஏழ்மையை இவ்வளவு நேராக மற்றவர்களின் முன்னிலையில் சுட்டிக் காட்டுவான் என்று கனவில்கூட நினைக்கவில்லை. ஜெயந்திக்கு அந்த நிமிடம் தன்னிரக்கமும், ராஜசேகரிடம் அளவு கடந்த வெறுப்பும் தோன்றின. டாக்டர் தம்பதியரும் திகைப்பு அடைந்து விட்டார்கள். ஹால் முழுவதும் நிசப்தம் பரவியது.

டாக்டர் சுப்ரமணியம் வலிய வரவழைத்துக் கொண்ட சிரிப்புடன் ''சேகர்! எப்பொழுதிலிருந்து நீ பெண்களின் உடைகளைப் பற்றி நினைவு வைத்துக் கொள்ள ஆரம்பித்தாய்? நம்பவே முடியவில்லை. இதுபோன்ற வார்த்தைகள் உன் வாயிலிருந்து கேட்பது இதுதான் முதல் தடவை. ரொம்ப ஆச்சரியமாக இருக்கு'' என்றவர் ஜெயந்தி பக்கம் திருப்பி அன்பு ததும்பும் குரலில் ''வாம்மா... வா'' என்றார்.

ராஜசேகர் ஜெயந்தியை ஒருமுறை பார்த்துவிட்டு தலையைத் திருப்பிக் கொண்டான்.

எதிர்பாராத விதமாக நேர்ந்துவிட்ட அவமானத்தால் தலைகுனிவாக உணர்ந்தாள் ஜெயந்தி. உடல் நிலை சரியாக இல்லை என்றும் வீட்டுக்கு திரும்பிப் போய் விடுவதாக சொல்ல நினைத்தாலும் குரல் ஒத்துழைக்கவில்லை. எப்படியோ நடந்து வந்து கமலா மாமியின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.



''எங்கே பின்னால் திரும்பு. உனக்காக கதம்பமாலை தொடுத்து எடுத்து வந்தேன்.'' டீபாய் மீது வாழை இலையில் சுற்றியிருந்த பூச்சரத்தை எடுத்துக் கொண்டே கமலாமாமி சொன்னாள். மல்லி, கனகாம்பரம், மரிக்கொழுந்து மூன்றுமே கலந்து தொடுத்திருந்தாள். அதனுடைய அழகை, வாசத்தை ரசிக்கும் மனநிலையில் இல்லாத ஜெயந்தி இயந்திரகதியில் பூச்சரத்தை பெற்றுக் கொண்டாள்.

அதற்குள் நாயர் எல்லோருக்கும் டீ கொண்டு வந்ததால் பேச்சு மாறிவிட்டது. சுப்ரமணியம் தன்னுடைய கலகலப்பான பேச்சால் சூழ்நிலையின் இறுக்கத்தை முற்றிலுமாக மாற்றி விட்டார். டீ குடித்த பிறகு எல்லோரும் வெளியில் வந்து காரில் உட்கார்ந்து கொண்டார்கள். ராஜசேகர் காரை ஸ்டார்ட் செய்யப் போன போது பின் சீட்டில் ஜெயந்தியுடன் அமர்ந்திருந்த கமலா மாமி ''சேகர்! காரை பின்னால் திருப்பு. எங்க வீட்டுக்கு போகணும்'' என்றாள்.

''எதுக்கு?'' முன் இருக்கையில் உட்கார்ந்திருந்த சுப்ரமணியம் பின்னால் திரும்பி கேட்டார்.

''வேலை இருக்கு'' சுருக்கமாக சொன்னாள் கமலா மாமி.

''நேரம் அதிகமாக இல்லை என்று நினைக்கிறேன்.'' ராஜசேகர் வாட்சைப் பார்த்துக் கொண்டே காரை டாக்டர் வீட்டுப் பக்கம் திருப்பினான்.

கமலாவுக்கு பக்கத்தில் வெளிறிப் போன முகத்துடன் அமர்ந்து கொண்டு ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்த ஜெயந்தியின் காதுகளில் இந்த உரையாடல் விழவே இல்லை.

கார் வீட்டின் முன் வந்து நின்றது. கமலா இறங்கிக் கொண்டாள். ''கால் மணி நேரம் ஆகும். நீங்க உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டாலும் சரி. இல்லையா காரிலேயே உட்கார்ந்து கொண்டாலும் சரி.'' என்று சொல்லி விட்டு ''வா ஜெயந்தி!'' என்றாள். ஜெயந்தியின் கையைப் பிடித்துக் கொண்டு தன்னுடன் உள்ளே அழைத்துச் சென்றாள்.

மாடி அறைக்கு ஜெயந்தியை அழைத்துச் சென்ற கமலா பீரோவை திறந்து கொண்டே "நீ புடவையை மாற்றிக் கொள் ஜெயந்தி! இந்தப் புடவைகளில் உனக்கு எது பிடித்திருக்கிறதோ பாரு" என்றாள்.

"நானா! இப்பொழுதா?" வியப்பு மேலிட கண்களை விரித்துக் கொண்டே கேட்டாள்.

"ஆமாம். உன்னைத்தான் சொல்கிறேன். நீ வரும்முன் உன்னைப் பற்றிதான் பேசிக்கொண்டு இருந்தோம். சேகர் ஒரு நிமிடம் தாமதித்து இருந்தால் நானே அந்த வார்த்தையைச் சொல்லியிருப்பேன். நான் சொல்லியிருந்தால் உன் மனதிற்கு அவ்வளவு கஷ்டமாக இருந்திருக்காதோ என்னவோ. சேகர் சொன்னது இருக்கட்டும். நீயே பாரு. புடவை எவ்வளவு கசங்கலாக இருக்கிறதோ."

ஜெயந்தியின் முகம் கன்றி விட்டது. கசங்கி இருந்த இடத்தில் விரலால் நீவிக் கொண்டே "லாண்ட்ரிக்கு போட்ட புடவைகள் இன்னும் வரவில்லை. அதான்... இந்த முறை ஜெயந்தியால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. "இருந்தாலும் என் உடையைப் பற்றி விமரிசிக்கும் அதிகாரம் அவருக்கு இல்லை." கம்மிவிட்ட குரலில் புடவைத் தலைப்பால் விழிநீரை ஒற்றிக்கொண்டே சொன்னாள்.

"உன்னை அவன் வேறு உத்சேத்துடன் சொல்லவில்லை ஜெயந்தி! நீ அவனை தவறாக எண்ணுவது சரியில்லை. உன்னையும் எங்களுக்குள் ஒருத்தியாக நினைக்கிறான். அந்த உரிமையுடன்தான் அப்படிச் சொல்லிவிட்டான்."

"எல்லை மீறிய அந்த உரிமையை நான் வெறுக்கிறேன்." தெளிவான குரலில் சொன்னாள் ஜெயந்தி.

ஒரு நிமிடம் ஜெயந்தியை கண் இமைக்காமல் பார்த்த கமலா யோசனையிலிருந்து மீண்டவள் போல் "போகட்டும். அந்த விஷயத்தை மறந்து விடுவோம். எனக்காக ஏதாவது புடவையை எடுத்துக் கொள். அதோ! அந்த வெண்மை நிற



ஷிபான் புடவை கீதாவுக்கு ரொம்ப பிடிக்கும். நேற்றே உன்னிடம் இதைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் இறந்து போனவளுடைய புடவைகளைக் கொடுத்தால் நீ என்ன நினைத்துக் கொள்வாயோ என்று..." நடுவிலேயே நிறுத்தி விட்டாள்.

"ஒன்றும் நினைத்துக் கொள்ள மாட்டேன். உங்களுடைய விருப்பம் அதுவாக இருந்தால் இன்னொருநாள் தீர்த்து வைக்கிறேன். ஆனால் இப்போ என்னால் முடியாது. எனக்குக் கொஞ்சம் உடல் நிலை சரியாக இல்லை. வீட்டுக்குப் போய் விடுகிறேன். நீங்களே அவரிடம் சொல்லி விடுங்கள்." ஜெயந்தி சொன்னாள்.

"ஜெயந்தி! ப்ளீஸ்... எனக்காக." மற்றொரு முறை கேட்டாள் கமலா.

"மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்க தவறாக நினைக்க வேண்டாம்." திடமான குரலில் சொன்னாள் ஜெயந்தி.

"கமலா! கால் மணி நேரம் என்றாய். அரைமணி ஆகிவிட்டது. இன்னும் அந்த வேலை முடியவில்லையா?" கீழே இருந்த டாக்டரின் குரல் கேட்டது.

"இதோ! வந்துவிட்டேன். ஜெயந்தி! நான் சொன்னதை...."

"ப்ளீஸ். உங்களை என்னுடைய தாய்க்கும் மேலாக மதிக்கிறேன். உங்கள் விருப்பத்தை மறுப்பது எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. தயவு செய்து என்னை புரிந்து கொள்ளுங்கள்." ஜெயந்தி சட்டென்று எழுந்து வாசலை நோக்கி நடந்தாள்.

கமலா வேறு வழியில்லாமல் கையில் இருந்த புடவைகளை மறுபடியும் பீரோவில் போட்டு விட்டு ஜெயந்தியின் பின்னாலேயே வெளியே வந்தாள்.

"என்ன ஆச்சு? ஏன் புடவையை மாற்றிக் கொள்ளவில்லை?" ஹாலில் பேப்பரை புரட்டிக் கொண்டிருந்த டாக்டர் ஜெயந்தியைப் பார்த்து விட்டு மனைவியிடம் கேட்டார்.

ஜன்னல் வழியால் வெளியே பார்த்துக் கொண்டிருந்த ராஜசேகர் திரும்பிப் பார்த்தான். ஜெயந்தியின் முகம் கன்றி சிவந்திருந்தது. உள்ளே நிறைய நேரம் அழுதாற்போல் கண்கள் சிவந்து கலங்கினாற்போல் தென்பட்டன.

''புடவை மாற்றிக் கொள்ளணுமா? யாரைச் சொல்றீங்க என்னையா?'' வலிய வரவழைத்துக் கொண்ட கோபத்துடன் கேட்டாள் கமலா.

''உன்னை சொல்லவில்லை'' அவருடைய பார்வை ஜெயந்தியின் மீது படிந்தது.

''வாங்க நேரமாகி விட்டது.'' கமலா பேச்சை மாற்றினாள்.

எல்லோரும் காரை நோக்கி நடந்தார்கள்.

# 26

கார் ஹோட்டலை அடைந்தது. ஹாரன் சத்தம் கேட்டதும் மேனேஜர் ஓடிவந்தார். சுப்ரமணியம், கமலா, ஜெயந்தி இறங்கிக் கொண்டதும் ராஜசேகர் காரை பார்க் செய்துவிட்டு வந்தான். மூவரும் மாடியில் ரூஃப் கார்டென் இருந்த இடத்திற்குச் சென்றார்கள். ஜெயந்தி இதற்கு முன் பார்த்ததைவிட ரொம்ப அழகாக அந்த இடம் காட்சி அளித்தது. எங்கும் விளக்குத் தோரணங்கள். வரிசையாக இருந்த மேஜைகள் மீது வெள்ளை விரிப்புகள் போடப்பட்டிருந்தன. நடு நடுவில் ப்ளவர்வேஸ்களில் அன்று மலர்ந்த பூக்கள் நேர்த்தியாக வைக்கப் பட்டிருந்தன. வெள்ளை உடைகள் அணிந்திருந்த பேரர்கள் மேஜை நாற்காலிகளை ஒழுங்குப் படுத்திக் கொண்டிருந்தார்கள்.

உள்ளே வந்த ஜெயந்தி டாக்டர் தம்பதிகளுடன் ஒரு மூலையில் அமர்ந்து சுற்றிலும் பார்வையைச் சுழற்றினாள். சூழ்நிலையே ஒரு விதமாக ஒழுங்கு முறையுடன் ரம்மியமாக காட்சியளித்தது.



பத்து நிமிடங்கள் கழித்து ராஜசேகர் மாடிக்கு வந்தான். எல்லா ஏற்பாடுகளையும் மற்றொரு முறை சுயமாக பார்வையிட்டான்.

விருந்தாளிகள் ஒவ்வொருவராக வரத் தொடங்கியதும் ராஜசேகர் வாசலை நோக்கிச் சென்றான். வாசற்படி அருகில் நின்றிருந்த அவனைப் பார்க்கும்போது எல்லோரையும்விட உயரமாக, மிடுக்கான தோற்றத்துடன் தென்பட்டான். அவனிடம் ஏதோ தனித்தன்மை இருப்பதை பார்த்த உடனேயே உணர்ந்து கொள்ள முடிந்தது.

''ஜெயந்தி!'' திடீரென்று ராஜசேகர் பின்னால் திரும்பி அழைத்தான்.

கமலாவின் பக்கத்தில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஜெயந்தி திடுக்கிட்டாள். ''ஜெயந்தி!'' மற்றொரு முறை அழைத்தான்.

ராஜசேகரின் குரல் காதில் விழுந்த பிறகும் ஜெயந்தி எழுந்து கொள்ளவில்லை. குறைந்த பட்சம் தலையைத் திருப்பிக் கூடப் பார்க்கவில்லை.

''உன்னைத்தான் அழைக்கிறான்.'' டாக்டர் சொன்னார்.

''உன்னைத்தான் இங்கே வா.'' இந்த முறை அவன் குரலில் எரிச்சல் கலந்திருந்தது.

''போம்மா.'' கமலா ஜெயந்தியின் தோளில் தட்டினாள்.

ஜெயந்தி நடந்து போகும்போது பின்னாலிருந்து ''கமலா! அந்த நடைகூட அப்படியே சீதாவை போலவே இருக்கு இல்லையா'' என்று டாக்டர் சொன்னதும், உடனே ''ஆமாம். அப்படியே சீதாவே தான்'' என்று கமலா சொன்னதும் காதில் விழுந்தது.

''ஜெயந்தி! இந்த மேஜை மீது இருக்கும், பூங்கொத்துகளை எல்லோருக்கும் கொடு'' என்றான்.

யாசலுக்கு பக்கத்தில் மேஜைமீது மலர் கொத்துக குவியலாக இருந்தன. பலவேறு பூக்களை இணைத்து அழக தயாரிக்கப்பட்டிருந்த பூங்கொத்துகள் நறுமணத்தை பரப் கொண்டிருந்தன.

பார்வையை தாழ்த்திக் கொண்டு சிலையாக நின்றிருந் ஜெயந்தியின் அருகில் வந்த ராஜசேகர் ''வெறுமே பொம்மையா நின்றால் போறாது. கொஞ்சம் முறுவலுடன் விருந்தாளிகளை வரவேற்று வணக்கம் சொல்ல வேண்டும்'' என்றான். ஜெயந்தி சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். அவன் கண்களில், இதழ்களி லேசாக முறுவல் மலர்ந்திருப்பதைக் கண்டாள். திடீரென் அவன் குரல் நெகிழ்வுடன் ஒலித்தது. ''சாரி ஜெயந்தி! சற்றுமு என் வார்த்தைகள் உன் மனதை காயப்படுத்தியிருந்தா மன்னித்துவிடு.''

ஜெயந்தி உடனே சுற்றிலும் பார்வையை சுழற்றினாள். நல் வேளை! சுற்றுவட்டாரத்தில் யாரும் இருக்கவில்லை.

''ஹலோ! குட் ஈவினிங்.'' ராஜசேகர் யாரையோ வரவேற் தற்காக ஓரடி முன் வைத்தான்.

வந்தவர்களை ஜெயந்திக்கும் தெரியும். ஜஸ்டிஸ் பார்த் சாரதியும், அவருடைய மனைவியும்.

''யாரும் இன்னும் வரவில்லை போலிருக்கே.'' ஜெயந் நீட்டிய மலர்கொத்தை பெற்றுக் கொண்டே கேட்டார்.

''நேரம் ஆகிவிட்டது. வந்து விடுவார்கள்.'' ராஜசே வாட்சைப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

குள்ளமாய், பெருமனாக இருந்தார் பார்த்தசாரதி. அவ ருடைய வழுக்கை தலை பளபளவென்று மின்னிக் கொண்டிரு ந்தது. அவர் போன திசையை பார்த்துக் கொண்டிருந்த ஜெயந்தி, ராஜசேகர் மறுபடியும் ''ஜெயந்தி!'' என்று அழைத்ததும் திரும்பிப் பார்த்தாள்.

ஏதோ சொல்லப் போனவன் சட்டென்று நின்று ''அதோ! சிவராமன் வருகிறான்'' என்றான்.



ஜெயந்தியின் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது. அன்று விபத்து நடந்த பிறகு சிவராமனை இப்பொழுதுதான் பார்க்கிறாள்.

''சாரி சார்! நீங்க போனில் சொன்னதுபோல் முன்னாடியே வருவதாக இருந்தேன். உத்தியோகம் என்ற பெயரில் நீங்க என்னைக் கொண்டுபோய் ஜெயிலில் தள்ளிவிட்டீங்க. பாழாய்ப் போன வேலை. எதற்கும் சுதந்திரம் கிடையாது.'' வந்ததும் வராததுமாக சிவராமன் விளக்கம் தந்தான்.

''பரவாயில்லை. சில நாட்கள் கஷ்டப்பட்டு உழைத்தா யானால் சீக்கிரமாக முன்னுக்கு வந்து விடுவாய்.'' சிவராமனின் தோளில் தட்டிக் கொண்டே சொன்னான் ராஜசேகர்.

அதற்குள் அமைச்சர் வரவும் ''வாங்க... வாங்க'' என்று வரவேற்றான். அமைச்சர் ராஜசேகருடன் கையை குலுக்கிக் கொண்டே ''என்னப்பா ராஜசேகர்! அந்த திராட்சை தோட்டம் ஸ்கீம் என்ன ஆச்சு? மறந்துவிட்டாயா?'' என்றார்.

''மறந்து போகவே இல்லை. பிரபோசல்ஸ் தயார் செய்து கொண்டிருக்கிறேன். இரண்டு மூன்று நாட்களில் அனுப்பி வைக்கிறேன்'' என்றான்.

''அனுப்பாதே. நீயே சுயமாக கொண்டு வா. மறுபடியும் ஏதாவது சந்தேகம் வந்தால் உடனே பேசி தீர்த்துக் கொள்ள வசதியாக இருக்கும். சீக்கிரமாக முடியும் விதமாக பாரு. நான் இதில் ஆர்வமாக இருப்பதை பார்த்து வேண்டுமென்றே தாமதப் படுத்துகிறாய் போலிருக்கே.'' கலாட்டா செய்தார் அமைச்சர்.

''ச்ச... ச்ச... அப்படி எதுவும் இல்லை.'' ராஜசேகர் நகைத்துவிட்டான்.

''இதோ பாரு ராஜசேகர்! ஐந்து வருடங்கள் போவதற்குள் எல்லா மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யக் கூடிய அளவுக்கு திராட்சை உற்பத்தியை பெருக்க வேண்டும். திராட்சை என்றாலே மக்களுக்கு நம் ஊரின் பெயர் தான் நினைவுக்கு வரவேண்டும்.''

அமைச்சர் இரண்டடி முன் வைத்து ஜெயந்தி நீட்டிய பூங்கொத்தை பெற்றுக் கொண்டவர் அப்படியே நின்றுவிட்டார்.

"இந்தப் பெண் யாரு?" என்று கேட்டார்.

"ஜெயந்தி என்னுடைய செகரெட்ரி." ரொம்ப சாதாரணமான குரலில் சொன்னான் ராஜசேகர்.

"உன்னுடைய செகரெட்ரியா?"

அமைச்சரின் கண்களில் வியப்பு வெளிப்படையாகத் தெரிந்தது. அதை மறைக்கும் முயற்சி எதுவும் செய்யாமலேயே "இதற்கு முன்னால் எங்கேயோ பார்த்ததாக நினைவு" என்றார் ஜெயந்தியை கூர்மையாக பார்த்துக் கொண்டே.

"ஆமாம். வனிதா விஹாரில் செகரெட்ரியாக இருந்தாள்." அவருடைய சந்தேகத்தை தீர்த்து வைப்பது போல் ராஜசேகர் சொன்னான். ஜெயந்தியின் இதயத்துடிப்பு அதிகரித்தது.

"ஆமாம், ஆமாம். அதுபோன்ற இடத்தில்தான் எப்போதோ பார்த்திருக்கிறேன்." சொல்லிவிட்டு நகர்ந்தார். நேராக சுப்ரமணியத்திடம் சென்று முதுகில் ஓங்கி ஒரு அடி வைத்து விட்டு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பேசத் தொடங்கினார்.

"கொஞ்சம்கூட அகம்பாவம் இல்லாத மனிதர். சின்ன வயதில் எப்போதோ ஒன்றாக படித்திருக்கிறார்கள். அந்த நட்பை இன்னும் மறக்கவில்லை பார்."

பின்னாலிருந்து பேச்சு குரல் கேட்டதும் ஜெயந்தி திரும்பினாள். பக்கத்தில் இருந்த சிவராமன் ஜெயந்தி திரும்பிப் பார்த்ததும் நாக்கைக் கடித்துக் கொண்டான். "சாரி மனதில் தோன்றியதை அப்படியே வெளியில் சொல்லி விடுவது என்னுடைய பழக்கம். எவ்வளவு முயற்சி செய்தாலும் இந்த பழக்கத்தை போக்கிக் கொள்ள முடியவில்லை. எப்படி இருக்கீங்க?" என்று கேட்டான்.

"நீங்க அன்று... அன்று என்ன நடந்தது என்று..." தெளிவற்ற குரலில் சொன்னாள் ஜெயந்தி. ஜெயந்தி சொல்லப் போவதை



யூகித்துவிட்ட சிவராமன் "ஆமாம். கேள்விப்பட்டேன். பிரகாஷ் அன்று இரவே வந்து சொன்னான். வெரி வெரி சாரி. மறுநாள் நானே திரு ராஜசேகருக்கு போன் செய்து மன்னிப்பு கேட்டுக் கொண்டேன். நான் வற்புறுத்தியதால் தான் நீங்க வந்தீங்க என்றும் சொன்னேன்."

"அவர் ஒன்றும் சொல்ல வில்லையா?"

"ஒன்றும் சொல்லவில்லை. இனிமேல் பெண்களை பிக்னிக்கிற்கு அழைத்துப் போனால் மறுபடியும் அவர்கள் ஒழுங்காக வீட்டுக்கு போய்ச் சேர்ந்தார்களா என்று கவனிக்கச் சொல்லி வார்னிங் கொடுத்தார். அவ்வளவுதான். அவர் சொன்னதும் சரிதானே."

அமைச்சரையும், அவருடன் வந்தவர்களையும் உபசரித்து விட்டு இந்தப் பக்கமாக ராஜசேகர் வருவதை கவனித்த சிவராமன் சட்டென்று பேச்சை நிறுத்திவிட்டு பணிவுடன் நின்று கொண்டான்.

அதற்குள் ரஷியக்குழுவினர் வந்துவிட்டார்கள். ராஜசேகர் எல்லோருக்கும் ஜெயந்தியை சிவராமனை அறிமுகப்படுத்தி வைத்தான்.

"ஹலோ" "ஹௌடூயூடு" "வெல்கம்" போன்ற வார்த்தைகளை பரஸ்பரம் சொன்னார்கள். ஜெயந்தி கைகளை குவித்து எல்லோருக்கும் வணக்கம் தெரிவித்தாள். அழகுச் சிலையாய், விளக்குச் சுடராய் நின்றிருந்த ஜெயந்தியை எல்லோரும் மற்றொரு முறை பரிசிலனையாக பார்த்தார்கள்.

எல்லோரையும் அழைத்துக் கொண்டு ராஜசேகர் சென்று விட்டான். சிவராமனும், ஜெயந்தியும் வாசல் அருகிலேயே நின்றுவிட்டார்கள். உடலின் ஒவ்வொரு அணுவிலும் உற்சாகம் நிரம்பிவிட்டாற்போல் ஜெயந்தி உணர்ந்தாள். இதுபோன்ற சின்னச் சின்ன வாய்ப்புகளைத்தான் அவள் வனிதா விஹாரின் எதிர்பார்த்தாள். பத்து பேருக்கு நடுவில் தனக்கு என்று சின்ன அடையாளம் கிடைக்கும்போது இந்த மனம்தான் எவ்வளவு

துள்ளுகிறது? இன்னதென்று தெரியாத மகிழ்ச்சி மனதில் நிரம்பி விட்டாற்போல் உணர்ந்தாள்.

எண்ணங்கள் அலைபோல் கொந்தளிக்க வேறு எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்த ஜெயந்தி "அதோ! வனிதா விஹார் நிறுவனத்தினர் வந்து கொண்டு இருக்கிறார்கள்'' என்று சிவராமன் சொன்னதும் திடுக்கிட்டு திரும்பினாள். சுமித்ரா, மிஸெஸ் கருணாகரன் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு பின்னால் ரேகா, பரிமளா நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

கையில் இருந்த பொக்கேயை அப்படியே போட்டு விட்டு கமலா மாமி பக்கத்தில்போய் உட்கார்ந்து விடலாமா என்று நினைத்தாள் ஜெயந்தி காற்று நன்றாக வீசிக் கொண்டிருந்தாலும் மூச்சு திணறுவதுபோல் உணர்ந்தாள்.

"ஹலோ... வாங்க... வாங்க. வணக்கம். சௌக்கியம்தானே.'' சிவராமன் எல்லோரையும் குசலம் விசாரித்தான்.

"இதோ பார் சிவராமன். இரண்டு நாட்களுக்கு முன்பு ராஜசேகரின் கையெழுத்திற்காக நோட்ஸ் ஒன்று அனுப்பி யிருந்தேன். அதைக் கொஞ்சம்... நடுவிலேயே நிறுத்திவிட்ட சுமித்ரா ஜெயந்தியை கேள்விக்குறியுடன் பார்த்தாள். தலைகுனிந்து எதையோ தேடுவதுபோல் மலர்கொத்துகளை அளைந்து கொண்டி ருந்த ஜெயந்திக்கு சுமித்ரா தன்னையே பார்ப்பது புரிந்தது. கண்ணால் பார்க்காவிட்டாலும் அவள் முகத்தில் தோன்றிய உணர்வுகளையும் புரிந்து கொள்ள முடிந்தது.

"என்ன? ஜெயந்தியா! இங்கேயா!'' மிஸெஸ் கருணாகரனும் திகைத்துப் போனாள். அதற்குள் ரேகாவும், பரிமளாவும் அங்கே வந்து சேர்ந்தார்கள்.

"மேடம்! நான் இப்பொ அவரிடம் செகரெட்ரியாக இல்லை. அந்த வேலையை விட்டு ரொம்ப நாளாகிவிட்டது'' என்றான் சிவராமன். குனிந்த தலை நிமிராமல் ஜெயந்தி நிற்பது, அவர்களு டைய பார்வையில் தென்பட்ட பொருளையும் சிவராமன் உணராமல் இல்லை.



"அப்படியா, எனக்குத் தெரியாதே. எப்போ வேலையை விட்டாய்? எதற்காக விட்டாய்?'' சிவராமனையும், ஜெயந்தியையும் மாறி மாறி பார்த்துக் கொண்டே கேட்டாள் சுமித்ரா.

"வேறு நல்ல வேலை கிடைத்துவிட்டது. அங்கே சம்பள மும் அதிகம். ராஜசேகர் சார்தான் என்னை அந்த வேலைக்கு அப்ளை செய்யச் சொன்னார்.''

"அப்படியானால் அவருக்கு செகரெட்ரியாக யாருமே இல்லையா?''

"இதோ. என் பக்கத்தில் நிற்கிறாளே. இவள்தான் அவரிடம் செகரெட்ரியாக இருக்கிறாள். உங்களுக்கு தெரியவே தெரியாதா? ஆச்சரியமாக இருக்கே? நீங்க அனுப்பும் பேப்பர்கள் எல்லாம் மிஸ் ஜெயந்தி பார்த்த பிறகுதான் அவரிடம் போகும்.'' அதற்குள் யாரோ தொலைவிலிருந்து அழைத்ததும் "இதோ வந்து விட்டேன்'' என்று சொல்லிவிட்டு போய்விட்டான் சிவராமன்.

எல்லோரும் ஒரு நிமிடம் நிசப்தமாக இருந்துவிட்டார்கள். ஜெயந்தியை குத்தி கிழிப்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"அன்று அவ்வளவு எடுத்தெறிந்து பேசிவிட்டு வேலையை ராஜிநாமா செய்தது இதற்காகத்தானா?'' சுமித்ரா சொன்னாள்.

"அது போகட்டும். வனிதா விஹாரில் செகரெட்ரியாக இருந்து விட்டு ராஜிநாமா செய்தவளை ராஜசேகர் எப்படி வேலைக்கு எடுத்துக் கொண்டான்?'' மிஸெஸ் கருணாகரன் கேட்டாள்.

"இந்த விஷயம் நமக்குத் தெரியாமல் போனது ஆச்சரியம் தான். ராஜசேகரும் சொல்லவில்லை. காரணம் என்னவாக இருக்கும். உனக்குத் தெரியுமா ரேகா?'' சுமித்ரா ரேகா பக்கம் திரும்பிக் கொண்டே கேட்டாள்.

"எனக்கென்ன தெரியும்? நான் பம்பாயிலிருந்து நேற்று தானே வந்தேன். இருந்தாலும் இவள் அவனிடம் என்ன

சொன்னாளோ யாருக்கு தெரியும்?'' ரேகா ஜெயந்தியை ஏற இறங்க பார்த்துக் கொண்டே சொன்னாள். அவள் நெற்றிப்புருவம் முடிச்சேறி இருந்தது.

அவர்கள் எதையும் ரகசியமாக பேசவில்லை. ஜெயந்தியின் எதிரிலேயே, அவள் காதில் விழும் விதமாக பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஏதோ பெரிய தவறு செய்து விட்டு கையும் களவுமாக பிடிபட்டு விட்டது போல் தலையைக் குனிந்து கொள்வதை தவிர ஜெயந்தியால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

''இது எத்தனை நாட்களுக்கு நீடிக்குமோ அதையும் பார்க்கத்தானே போகிறோம்.''

''எவ்வளவு துணிச்சல்? நம்மிடம் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை.''

எல்லோரும் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்கள். வெளிறிப் போன முகத்துடன் அவர்கள் போன திசையை பார்த்துக் கொண்டிருந்த ஜெயந்திக்கு ராஜசேகர் அவர்களை சந்தித்தது... குசலம் விசாரித்து விட்டு இருக்கைகளை காண்பித்து உபசரித்து... ஏதோ சொல்லிவிட்டு உரிமையுடன் பரிமளாவின் தோளில் தட்டியது கண்ணில் பட்டது.

இவர்களுக்கு விஷயமே தெரியாதாமே. எப்படி தெரியாமல் இருக்கும்? அன்று பிக்னிக் போகும்போது தான் ராஜசேகர் வீட்டிலிருந்து வந்ததை பரிமளா பார்த்துக் கொண்டுதானே இருந்தாள். அதுதான் போகட்டும். பரிமளா பேச்சே வராதவள் போல் வாயைத் திறக்காமல் இருப்பானேன்? சிவராமனிடமாவது ஒரு வார்த்தை பேசியிருக்கலாமே.

''ஜெயந்தி!''

கண் இமைக்காமல் அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்த ஜெயந்தி யாரோ அழைத்ததும் திரும்பினாள். திரும்பியவள் திடுக்கிட்டாள். எதிரே பல்லை இளித்துக் கொண்டு வர்மா நின்றிருந்தான். அவன் கண்களில் வியப்பும், மகிழ்ச்சியும் வெளிப்படையாக தென்பட்டன. ஜெயந்திக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது.



''இன்னிக்கு யார் முகத்தில் விழித்தேனோ தெரியவில்லை அதிர்ஷ்டம்தான். உன்னை இங்கே பார்ப்பேன் என்று நினைக்கவில்லை.'' வர்மா குரலை தாழ்த்திக் கொண்டு மேலும் ஓரடி முன்னால் வைத்து நெருங்கி வந்தான்.

ஜெயந்தி பார்வையைச் சுழற்றி சிவராமனுக்காக தேடினாள். கும்பலில் அவன் எங்கே இருக்கிறான் என்று தெரியவில்லை.

''ஜெயந்தி! உனக்காக எங்க ஆபிஸில் டைபிஸ்ட் போஸ்ட் ஒன்று காலியாக வைத்திருக்கிறேன். சம்பளம் நிறைய. வேலையும் குறைவு. நீ அங்கே ராஜிநாமா செய்து விட்டாய் என்று தெரிந்து உன்னுடைய முகவரிக்காக எத்தனையோ முயற்சி செய்தேன்.''

முப்பத்தி இரண்டு பற்களையும் காட்டிக் கொண்டிருந்த வர்மாவின் கன்னத்தில் இழுத்து ஒரு அறை கொடுக்க வேண்டும் என்ற அளவுக்கு ஆத்திரம் வந்தது ஜெயந்திக்கு.

''சொல்லு என்ன சொல்கிறாய்?''

''தாங்க்ஸ். உங்களுடைய தயா தாட்சிண்யத்தை உங்களிடமே வைத்துக் கொள்ளுங்கள். நான் இப்போ திரு ராஜசேகரிடம் செகரெட்ரியாக இருக்கிறேன்.'' ராஜசேகரின் செகரெட்ரியாக இருப்பதன் பெருமையை முதல் முறையாக முழுமையாக உணர்ந்துபோல் சொன்னாள் ஜெயந்தி.

வர்மா நம்பாதது போல் பார்த்தான். ''உண்மையாகவா?'' என்றான்.

''கொஞ்சம் கண்களைத் திறந்து இங்கே நான் எதற்காக நிற்கிறேனோ பார்த்தால் உங்களுக்கே புரியும்.''

வர்மா சட்டென்று பின்வாங்கினான். உண்மைதான். ஜெயந்தி விருந்தாளிகளை வரவேற்கும் இடத்தில் கையில் மலர் கொத்துடன் நின்றிருந்தான்.

வர்மாவின் இதழ்களில் விகாரமான இளிப்பு ஒன்று நெளிந்தது. ஏளனமான குரலில் "ஓஹோ! நீ ஏதோ கஷ்டப்பட்டு முன்னுக்கு வரும் இனத்தைச் சேர்ந்தவள் என்று நினைத்தேன். பெரிய திட்டத்துடன் செயல்பட்டு வருகிறாய். ராஜசேகர் தங்க முட்டையிடும் வாத்து என்ற பிரமையில் இருக்கிறாயோ என்னவோ அவனைச் சுற்றி பல விஷவளையங்கள் இருக்கு. ஜாக்கிரதை."

ஜெயந்தி குரலை உயர்த்தி கோபமாக ஏதோ பதில் சொல்லப் போனாள். அதற்குள் சிவராமன் எங்கிருந்தோ வந்து களத்தில் குதித்து எந்த ரகளையும் நடக்காமல் காப்பாற்றினான்.

"ஹலோ மிஸ்டர் வர்மா. வாங்க வாங்க, மனைவியை அழைத்துக் கிட்டு வரலையா. வீட்டில் எல்லோரும் சௌக்கியம் தானே" குசலம் விசாரித்தான்.

வர்மா பழைய வர்மாவாக மாறிவிட்டான். சிவராமனுக்கு பதில் வணக்கம் தெரிவித்து விட்டு ஜெயந்தி கொடுக்காமலேயே மேஜை மீது இருந்த மலர் கொத்தை எடுத்துக் கொண்டு வேகமாக அந்த இடத்தை விட்டு போய் விட்டான். போகும்முன் ஜெயந்தியை நோக்கி கொடூரமான பார்வை ஒன்றை வீசிவிட்டு போனான்.

அதற்குப் பிறகு யார் யார் வந்தார்களோ ஜெயந்தியின் மனதில் எதுவும் பதியவில்லை.

ரொம்ப நேரம்கழித்து சிவராமன் "எல்லோரும் வந்து விட்டார்கள். நாமும் போய் உட்கார்ந்து கொள்வோமா?" என்று கேட்டான்.

"வாங்க உட்காருவோம்." உள்ளங்கைகளில் படிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே சொன்னாள் ஜெயந்தி. அவள் குரலில் சோர்வு கலந்திருந்தது.



# 27

சிவராமனும் ஜெயந்தியும் நடந்து போகும்போது ராஜசேகர் பரிமளாவையும், ரேகாவையும் விருந்தாளிகளுக்கு அறிமுகப் படுத்தும் காட்சி தென்பட்டது. எல்லா இருக்கைகளும் நிரம்பி யிருந்தன. டாக்டர் சுப்ரமணியத்தின் பக்கத்து இருக்கையில் யாரோ உட்கார்ந்து இருந்தார்கள்.

கடைசியில் மூலையில் போட்டிருந்த மேஜையிடம் ஒரே ஒரு நாற்காலி காலியாக இருந்தது. சிவராமன் எங்கிருந்தோ ஒரு நாற்காலியை கொண்டு வந்து ஜெயந்தியின் எதிரே அமர்ந்து கொண்டான்.

எதிரே ஸ்டேஜ் மீது வாத்தியக்குழு ஒன்று இனிமையாக மேலைநாட்டு இசையை இசைத்துக் கொண்டிருந்தது. ரேகா, பரிமளா, ராஜசேகர் மூவரும் ஸ்டேஜுக்கு அருகில் ஒன்றாக அமர்ந்து இருந்தார்கள்.

பரிமளா வந்த பிறகு ராஜசேகர் தன்னை அழைக்க வில்லை. குறைந்த பட்சம் தான் எங்கே இருக்கிறாள் என்றுகூட கவனிக்கவில்லை. ஜெயந்தியின் பார்வையிலிருந்து இந்த விஷயம் தப்பவில்லை.

"ரேகாவின் கணவர் என்ன செய்கிறார்?" பார்ட்டியின் நடுவில் ஜெயந்தி கேட்டாள். அவள் பார்வை தொலைவில் அமர்ந்திருந்த ரேகாவின் மீது நிலைத்திருந்தது.

"நாள் முழுவதும் சீட்டாடிக்கொண்டு இருப்பார். பாட்டில் பாட்டிலாக குடித்துக் கொண்டு இருப்பார். மனைவிக்காக விதவித மான புடவைகளை, நகைகளை வாங்கிக் குவித்துக் கொண்டு இருப்பார்."

"அப்படி என்றால்?" வியப்புடன் கேட்டாள் ஜெயந்தி.

"சில விஷயங்களை சொன்னால் கேட்டுக் கொள்ளணும். அவ்வளவுதான். எதிர்க் கேள்வி கேட்கக்கூடாது."

''எனக்குப் புரியவில்லை.''

''உங்களுக்குப் புரியாது என்றும் எனக்குத் தெரியும். உங்கள் முகம் மட்டுமே இல்லை. மனதளவிலும் நீங்க இன்னும் குழந்தையாகவே இருக்கீங்க.''

ஜெயந்தி சீரியஸாக பார்த்தாள்.

''ரேகாவின் கணவர் என்ன செய்கிறார் என்று உங்களுக்குத் தெரியவேண்டும். அவ்வளவுதானே. ஒன்றும் செய்ய மாட்டார். பாட்டன், முப்பாட்டன் சேர்த்துவைத்த சொத்து இருக்கிறது. இன்னும் இரண்டு தலைமுறைக்கு வரும். அதை செலவு செய்வது தான் இவருடைய தொழில்.

''அவர் வரவில்லையே ஏன்? எப்போதும் அவள் தனியாகத் தானே வருகிறாள்.''

''வரமாட்டார். அவ்வளவுதான்.''

''ஏன்? இது போன்ற பார்ட்டிக்கள் என்றால் பிடிக்காத மனிதரா?''

''மறுபடியும் கேள்வி மேல் கேள்வியாக கேட்கறீங்க. ரேகாவுடன் சேர்ந்து வந்தால் தான் எவ்வளவு சுமாராக இருக்கிறோமோ, இருவருக்கும் இடையில் வயது வித்தியாசம் எவ்வளவு இருக்கிறதோ பளிச்சென்று தெரியும். அதை அவர் அனுபவ பூர்வமாக உணர்ந்து இருக்கிறார்.'' இருவரையும் சேர்ந்து பார்ப்பவர்களுக்கு ரேகாவிடம் இரக்கமும், அவர் மீது வெறுப்பும் ஏற்படும். அவளுக்கு இத்தனை ரசிகர்கள் இருப்பதற்குக் காரணமும் அதுதான்.''

ஜெயந்தி மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தாள்.

''பாவம். இவளைத் திருமணம் செய்து கொண்டபிறகு பரம்பரை பரம்பரையாக செய்து கொண்டிருந்த வட்டி வியாபாரத்தை கைவிட்டு விட்டு குடி பழக்கத்திற்கு ஆளாகி விட்டார்.''



''பின்னே இவரைப் போய் ரேகா எப்படி திருமணம் செய்து கொண்டாள்?''

''வேறென்ன? பணம்தான் காரணம். இந்த உலகில் பணம் இருந்தால்போதும் எதையும் விலை கொடுத்து வாங்கி விடலாம்.''

''நீங்க சொல்வதும் சரிதான் என்றாலும் அவளுடைய நிலைமை எப்படி இருந்ததோ என்னவோ. எந்தப் பெண்ணும் தனக்குக் கணவனாக வரப்போகிறவனிடம் அழகு, பணம், இளமை, திறமை இவை நான்கும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பாள்.''

''நீங்க தவறாக நினைத்துக் கிட்டு இருக்கீங்க. இந்த நான்கும் இருக்கும் பையன் கிடைக்கமாட்டான் என்று இந்தக் காலத்து பெண்களுக்கு நன்றாகவே தெரியும். இந்த நான்கில் ஏதாவது ஒன்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். அதில் ரேகா பணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தாள்.''

''ரேகா போன்றவர்கள்...'' ஜெயந்தி முடிக்கவே இல்லை. சிவராமன் இடைமறித்தான்.

''ஆமாம். ரேகா போன்றவர்கள் பணத்திற்காக திருமணம் செய்து கொள்வார்கள். காதலுக்காக நட்பை ஏற்படுத்திக் கொள்வார்கள். நான் எதை வேண்டுமானாலும் சகித்துக் கொள்வேன். ஆனால் பணத்திற்காக ஆசைப்படும் பெண்ணின் நிழலைக்கூட சகித்துக் கொள்ளமாட்டேன்.''

''அந்த பலவீனத்திற்கு ஆண் பெண் என்று வேறுபாடு கிடையாது.'' ஜெயந்தி சொன்னாள்.

''ஒப்புக் கொள்கிறேன். நீங்க பலே ஆள்தான் போங்க. என் வாயை கிளறி எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ள பார்க்கிறீங்க.''

''அந்தப் பணத்தால் ரேகா சந்தோஷமாக இருக்கிறாளா?''

"அப்படிச் சொல்ல முடியாது. என்னைக் கேட்டால் இத்தனை பணம் இருந்தும் நரக வாழ்க்கையை அனுபவித்து வருகிறாள் என்று சொல்வேன்."

"அப்படி என்றால்?"

"கேள்வி மேல் கேள்வியாக கேட்கிறீங்களே. இருந்தாலும் அவளுக்கு என்ன குறைச்சல்? சமுதாயத்தில் பெயரும், புகழும் இருக்கிறவர்கள் எல்லோரும் அவளுக்கு வேண்டியவர்கள். அதிலும் செல்வாக்கும், வசதியும் நிறைந்தவன் அவளுக்கு மிகவும் நெருங்கியவன்."

"எனக்குப் புரியவில்லை."

"சில நாட்கள் போனால் உங்களுக்கே புரியும். திரு ராஜசேகர் அவளுக்கு வேண்டியவர். அதைவிட அதிர்ஷ்டம் வேறு என்ன வேண்டும்?"

"நன்றாக இருக்கு நீங்க சொல்வது. அவருடைய நட்பு இருந்தால் மட்டும்போதுமா? இவளுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சி எப்படி கிடைக்கும்?"

சிவராமன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான். "நீங்க ரொம்ப சின்னக் குழந்தையை போல் பேசுறீங்க. உங்களுக்கு புரிய வேண்டும் என்றால் மேலும் விளக்கமாக சொல்ல வேண்டும். அதில் எனக்கு விருப்பம் இல்லை. அதோடு இந்த இடத்தில் அதுபோன்ற விஷயங்களை பேசுவது சரியில்லை."

"ஆமாம். ஆமாம். நாம் இங்கே உட்கார்ந்து கொண்டு இப்படிப் பேசுவது சரியில்லை." ஒப்புக் கொள்வதுபோல் ஜெயந்தி சுற்றிலும் பார்த்தாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. இங்கே இருப்பவர்களில் பாதிபேர் இதுபோன்ற வம்பு பேச்சுதான் பேசிக் கொண்டிருப்பார்கள்." சிவராமன் சொன்னான்.



இருவருமே ஒரு நிமிடம் மௌனமாக இருந்து விட்டார்கள்.

"பரிமளா நம்மை பார்த்தும் பார்க்காதது போல் ஏன் ஒதுங்கியிருக்கிறாள்?" பேச்சை மாற்றுவதற்காக கேட்டாள் ஜெயந்தி.

எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்த சிவராமனின் பார்வை ஒரு நிமிடம் ஜெயந்தியின் முகத்தில் படிந்து மறுபடியும் கையிலிருந்த தட்டின் மீது நிலைத்தது.

"மிஸெஸ் கருணாகரன் ஸ்டேடஸ் பார்ப்பவள். பரிமளா நம்மை போன்றவர்களுடன் பழகுவதை விரும்பமாட்டாள்.

"பரிமளா சின்னக் குழந்தை இல்லையே. அந்த அம்மாளுக்கு எடுத்துச் சொல்லலாம் இல்லையா."

"ஆமாம். நீங்க சொல்வதும் உண்மைதான் வாங்க. விருந்தாளிகள் கிளம்புகிறார்கள்.

எல்லோரும் எழுந்து கொள்வதை பார்த்து சிவராமன் ஜெயந்தியும் எழுந்து கொண்டார்கள்.

அமைச்சரை, ரஷியக்குழுவினரை வழியனுப்ப ராஜசேகர், பரிமளா, ரேகா வாசல்வரை சென்றார்கள். ஜெயந்தி சிவராமனுடனே இருந்தாள். அவன் அருகில் இருந்தால் கொஞ்சம் தெம்பாக இருப்பதுபோல் தோன்றியது. தொலைவில் டாக்டர் தம்பதிகளுடன் யாரோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

"ஹலோ சிவராமன்! எத்தனை நாளாச்சு உன்னைப் பார்த்து." குள்ளமாக, கண்ணாடி அணிந்திருந்த நபர் எங்கிருந்தோ வந்து சிவராமனின் கையைப் பிடித்துக் கொண்டான்.

"ஹலோ பிரசாத்! பூனாவிலிருந்து எப்போ வந்தாய்?" சிவராமன் குரலில் அன்பும், ஆதங்கமும் வெளிப்பட்டன.

"வந்து இரண்டு நாளாச்சு. உன்னைத்தான் பிடிக்கவே முடியவில்லையே. கடிதம் எழுதுவதையும் நிறுத்தி விட்டாய். கல்யாணம் செய்து கொண்டேன் என்று ஒரு வரி எழுதிப்

போட்டிருந்தால் நேராக உன் வீட்டிற்கு வந்திருப்பேன் இல்லையா.'' பக்கத்தில் இருந்த ஜெயந்தியை பார்த்துக் கொண்டே சொன்னான்.

''என்ன சொல்கிறாய் நீ?'' சிவராமன் பதட்டமடைந்து விட்டான். ஜெயந்தி கண்கள் அகலவிரிய வந்தவனை பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்குள் யாரோ ''பிரசாத்!'' என்று குரல் கொடுத்தார்கள்.'' இதோ வந்து விட்டேன்'' என்று பதில் குரல் கொடுத்த பிரசாத் சிவராமன் பக்கம் திரும்பி ''நாளைக்கு ஆபீசுக்கு வருகிறேன். அதே இடம்தானே'' என்றான். பிறகு ஜெயந்தியை பார்த்து ''உங்க வீட்டுக்கு வரப்போகிறேன். விருந்துவைக்க மறந்து விடாதீங்க'' என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு வேகமாக போய்விட்டான்.

''என்ன பேசுகிறோம் யாரிடம் பேசுகிறோம் என்று தெரிந்து கொள்ளாமல் உளறிவிட்டு போய்விட்டான். அவசரக் குடுக்கை.'' சிவராமன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

ஜெயந்தியின் முகம் கன்றி விட்டது.

''ஜெயந்தி! நாங்க கிளம்புகிறோம்.'' சுப்ரமணியமும், கமலாவும் அருகில் வந்தார்கள். ''இவருடைய பிரண்ட் எங்களை காரில் டிராப் செய்வதாக சொன்னார். நீ எப்படி போகப் போகிறாய்?'' கமலா கேட்டாள்.

''நம்முடன் வரச் சொல்லலாம் என்றால் காரில் இடமில்லை'' என்றார் டாக்டர்.

''சற்று நேரம் இருந்தாயானால் சேகரின் காரில் போய் விடலாம்'' என்றாள் கமலா.

ஜெயந்தியின் விழிகள் ராஜசேகருக்காக தேடின. அப்பொழுது தான் மாடிக்கு வந்த ராஜசேகர் சுமித்ரா, மிஸெஸ் கருணாகரன் உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். பக்கத்திலேயே பரிமளாவும் இருந்தாள். ராஜசேகர் ஏதோ பேசிக்கொண்டே பரிமளாவின் தோளில் தட்டினான். பரிமளா



பதிலுக்கு ஏதோ சொல்லியிருக்க வேண்டும். ராஜசேகர் அவளுடைய காதைப் பிடித்து திருகினான். அவளுடைய கையைப் பற்றிக் கொண்டு நேராக மிஸெஸ் கருணாகரனிடம் அழைத்துச் சென்று கலகலவென்று நகைத்துக் கொண்டே ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். எல்லோரும் சிரித்துக் கொண்டிருந்தார்கள். ஜெயந்திக்கு ஏனோ அவர்கள் எல்லோரும் சந்தோஷமாக, ஜாலியாக இருப்பது போலவும், தான் மட்டும் தனியாய் ஒரு மூலையில் இருப்பது போலவும் தோன்றியது.

''உங்க பிரண்ட் காரில் இடமில்லை என்றால் நான் ரிக்ஷாவில் போய்க் கொள்கிறேன் பரவாயில்லை'' என்றாள் ஜெயந்தி.

''இத்தனை நேரம்கழித்து தனியாக போவதாவது?'' டாக்டர் பதட்டமாகச் சொன்னார்.

''உங்க நண்பரிடம் நாம் வரப்போவதில்லை என்று சொல்லிவிட்டு வாங்க. எல்லாம் முடிந்த பிறகு சேகரின் காரிலேயே போய்விடுவோம். ஆனால் தாமதம் ஆகுமோ என்னவோ.''

''உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் என்னுடைய காரில் டிராப் செய்கிறேன்.'' சிவராமன் சொன்னான்.

''அப்படியே செய்வோம்'' என்றாள் கமலா. ''நீங்க போய் உங்க நண்பரிடம் சொல்லிவிட்டு வாங்க. ஜெயந்தி! நீயும் போய் சேகரிடம் சொல்லிவிட்டு வா. கிளம்புவோம்.''

''பரவாயில்லை. அவர் பிஸியாக இருக்கிறார். தொந்தரவு செய்வானேன்?'' ஜெயந்தி சொன்னாள்.

சிவராமன் போய் ராஜசேகரிடம் சொல்லிவிட்டு வந்தான். சிவராமனை பார்த்த பிறகும் ராஜசேகருக்கு ஜெயந்தியின் நினைவு வரவில்லை.

நாலு பேரும் கீழே வந்தார்கள்.

# 28

காரில் போய்க் கொண்டிருந்த போது சுப்ரமணியம் கேட்டார். "கமலா! பரிமளாவைத் திருமணம் செய்து கொள்வதாக ராஜா சொன்னானா?"

"முன்னே அந்தப் பேச்சு இருந்தது. மறுபடியும் என்ன நடந்தது என்ன தெரியவில்லை. எதுவாக இருந்தாலும் சீக்கிரமாக கல்யாணம் செய்து கொள்வது நல்லது. ஏற்கனவே தாமதமாகி விட்டது."

"பரிமளாவைக் கொடுப்பதாக இருப்பவர்கள் ரேகாவுடன் அவ்வளவு நட்புடன் எப்படி பழகுகிறார்கள்?" டாக்டர் சொன்னார்.

"ரொம்ப நன்றாக இருக்கு நீங்க சொல்வது. சேகர் அவர்களுக்கு அறிமுகம் ஆனதே ரேகா மூலமாகதானே?"

"இருந்தால் மட்டும்?"

"இந்தத் திருமண பிரஸ்தாபனை கொண்டு வந்ததே ரேகாதான்."

ஜெயந்தியும், சிவராமனும் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

முதலில் டாக்டர் தம்பதியர் இறங்கிக் கொண்டார்கள். ஜெயந்தியை இறக்கிவிட்டு சிவராமன் உடனே கிளம்பிவிட்டான். நடுவில் ஒரு வார்த்தைகூட ஜெயந்தியிடம் பேசவில்லை. அவன் திடீரென்று இப்படி மௌனமாகிவிட்ட காரணம் என்னவென்று ஜெயந்திக்கு புரியவில்லை. ஒருக்கால் எதிர்பாராதவிதமாக அந்த நண்பன் சொன்ன வார்த்தையால் இருக்குமோ. அதை நினைக்கும் போது ஜெயந்திக்கு சிரிப்பு வந்தது. அந்த பிரசாத் நாளைக்கு சிவராமன் வீட்டுக்கு உண்மையிலேயே சாப்பிடப் போனால் எப்படி இருக்கும்?



உடைகளை மாற்றிக் கொண்டு படுக்கப் போகும் முன் புடவையை மடித்து வைக்கும்போது ராஜசேகர் சொன்னது நினைவுக்கு வந்தது. வெறுப்பாக உணர்ந்தாள். ச்சீ.. ச்சீ.. தனக்கு மூளை எங்கே போயிற்று? ராஜசேகர் புடவையை பரிசாக அனுப்பினால் அதைப் பெற்றுக் கொண்டது முட்டாள் தனம் இல்லாமல் வேறு என்ன?

சுமித்ராவுக்கும், மற்றவர்களுக்கும் தான் ராஜசேகரிடம் செகரெட்டரியாக இருப்பது தெரியாதாமே? அது எப்படி சாத்தியம்? அவர்களுடைய பேச்சும், பார்வையும் நினைவுக்கு வந்தால் ஜெயந்திக்கு உடல் மீது கம்பளி பூச்சி ஊறுவது போல் இருந்தது.

வர்மா சொன்னது இன்னும் காதில் எதிரொலித்துக் கொண்டிருந்தது. ராஜசேகரைச் சுற்றி விஷவளையங்கள் இருந்தால் தனக்கென்ன?

பரிமளாவை ராஜசேகருக்குக் கொடுக்கப் போகிறார்களாம். அதற்கு ரேகா சப்போர்ட் செய்கிறாளாம். அதைப் பற்றி தான் கவலைப்படுவானேன்? எதைப் பற்றியும் நினைக்காமல் தான் உண்டு தன் வேலை உண்டு என்று தன்னால் இருக்க முடியாதா. இனிமேல் இதுபோன்ற பார்ட்டிகளுக்கு வரமாட்டேன் என்று கச்சிதமாக சொல்லி விடவேண்டும்.

மறுநாள் ஜெயந்தி போனபோது ராஜசேகர் எங்கேயோ போவதற்காக தயராக இருந்தான். முதல்நாள் இரவு ரொம்ப நேரம் விழித்திருந்தாலும் அவன் முகத்தில் கொஞ்சம்கூட களைப்பு தென்படவில்லை. ஜெயந்தியின் வருகை அவனைக் கொஞ்சம்கூட டிஸ்டர்ப் செய்யவில்லை. ஏதோ எழுதிக் கொண்டிருந்தவன் பத்துநிமிடங்கள் கழித்து பெல்லை அழுத்தினான். நாயர் காபி, டிபனை கொண்டு வருவதற்குள் எழுத்து வேலையை முடித்து விட்டு பேப்பர்களை மேஜை மீது வைத்துவிட்டு எழுந்து கொண்டான்.

"நேற்று இரவு எப்படி போனீங்க?"

அவன் பன்மையில் விளித்தான் என்றால் ஏதோ கோபத்தில் இருக்கிறான் என்று அர்த்தம்.

''சிவராமனுடன் காரில் போனேன்.''

''போகும் முன் சொல்லிவிட்டு போவது மரியாதை என்று தெரியாதா?''

''நீங்க பிஸியாக இருந்தீங்க.''

''ஓஹோ.'' நாயர் கொண்டு வந்த காபியை குடித்துக் கொண்டே சொன்னான்.

ஜெயந்தி பேசவில்லை. இருவருக்கும் இடையே மௌனம் நிலவியது. ஒரே அறையில் இருந்தாலும் ரொம்ப தொலைவில் இருப்பது போன்ற உணர்வு.

''காபி எடுத்துக் கொள்ளுங்கள்.''

''வேண்டாம்.'' இனிமேல் இந்த காபி, டிபன்கூட மறுத்துவிடவேண்டும்.

ராஜசேகர் வற்புறுத்தவில்லை. போகும்முன் ''வேலை அதிகமாக இல்லை. உங்களுக்கு விருப்பமான போது வீட்டுக்கு போய்விடலாம்'' என்று சொல்லிவிட்டு போய் விட்டான். ஏனோ அவன் முகத்தில் கோபம் வெளிப்படையாக தெரிந்தது.

ஒருமுறை 'நீங்க' ஒருமறை 'நீ' என்று அழைப்பானேன்? நேற்று டாக்டர் தம்பதியர் முன்னிலையில் புடவை விஷயத்தில் செய்த அவமானத்திற்கும், பார்ட்டி நடந்தபோது தான் ஒருத்தி இருப்பதையே மறந்து போனதற்கு தான் அவனிடம் விளக்கம் கேட்டிருக்க வேண்டும். தன்னையே குற்றம் சொல்வதாவது? அவனுடைய ஒவ்வொரு பேச்சிலும் அலட்சியம் வெளிப்பட்டது. தான் வேறு வேலை தேடும் முயற்சி எதுவும் செய்யாததால் இவனிடமே இருந்துவிடப் போகிறோம் என்ற இளக்காரமா? இந்தப் பிரச்னை எதுவும் பாட்டியின் காதில் விழாமல் வேறு வேலை தேடிக் கொண்டு போய் விடலாம் என்றுதான் நினைத்தாள். ஆனால் எதுவும் கூடி வந்தால்தானே.

மறுநாள் காலையில் ஜெயந்தி ராஜசேகர் வீட்டுக்கு கிளம்பும் போது ''ஜெயந்தி! எங்கிருந்தோ உனக்கு தபால் வந்திருக்கு பாரு'' என்று சொல்லிக் கொண்டே ஜானகி தபால் கவரை நீட்டினாள்.



யாரிடமிருந்து வந்திருக்கும் என்று யோசித்துக் கொண்டே ஜெயந்தி தபாலை பிரித்துப் பார்த்தாள். வனிதா விஹாரில் சேரும்முன் எப்போதோ பெண்கள் பள்ளியில் டீச்சர் போஸ்ட் காலியாக இருப்பது தெரிந்து அப்ளிகேஷனை அனுப்பியிருந்தாள். அதற்கு இப்பொ நேர்முக தேர்வுக்கு வரச்சொல்லி கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். ஜெயந்திக்கு அழுவதா இல்லை சிரிப்பதா என்று தெரியவில்லை. முதலில் அந்த கடிதத்தை அப்படியே மேஜை மீது போட்டுவிடலாமா என்று தோன்றியது. அடுத்த நிமிடம் 'நேற்றுதான் வேறு வேலை தேடிக் கொள்ளணும் என்று முடிவு செய்தாய். ராஜசேகரிடம் வேலையை தொடர விருப்பம் இல்லாத பட்சத்தில் இந்த வேலைக்கு ஏன் முயற்சி செய்யக்கூடாது?' என்று மனசாட்சி கேட்டது.

ஜெயந்தி தனக்கு உடல் நலம் சரியில்லை என்று சொல்லி காரை திருப்பி அனுப்பிவிட்டு நேராக சுமதியின் வீட்டுக்குச் சென்றாள். ஜெயந்தியின் அதிர்ஷ்டமோ துரதிர்ஷ்டமோ என்றும் இல்லாத விதமாக சுமதி சாவகாசமாக உட்கார்ந்துகொண்டு எதையோ தைத்துக் கொண்டிருந்தாள்.

ஜெயந்தியைப் பார்த்ததும் மலர்ந்த முகத்துடன் வரவேற்றாள்.

''வா... வா... இன்னிக்கு ஆபீஸ் இல்லையா இந்த வெயிலில் வந்திருக்கிறாயே?'' என்றாள்.

''ஒரு விஷயத்தில் உன்னுடைய அட்வைஸ் தேவை அதான் வந்தேன்.'' சுமதியின் பக்கத்தில் அமர்ந்துகொண்டே சொன்னாள் ஜெயந்தி.

''ஏன்? உன் மூளையில் ஸ்டாக் தீர்ந்து போச்சா?'' சிரித்துக் கொண்டே கேட்டாள்.

''உண்மையிலேயே சீரியஸாக கேட்கிறேன்.''

''நானும் சீரியஸாக இருக்கிறேன் சொல்லு'' என்றாள் சுமதி

ஜெயந்தி தனக்கு வந்த தபாலை சுமதியிடம் நீட்டிக் கொண்டே நேர்முக தேர்வுக்கு அழைப்பு வந்த விவரத்தைச் சொன்னாள்.

"டீச்சர் வேலைக்கா?" புரியாதவள் போல் கேட்டாள்.

ஆமாம். நான் இந்த இன்டர்வ்யூக்கு போகனும்னு முடிவு செய்திருக்கிறேன். உனக்கு அந்த ஹெட்மிஸ்ட்ரெஸை தெரியும் என்று சொன்னாய் இல்லையா. நீயும் என்னுடன் வந்து எனக்காக ஒருவார்த்தை சொல்ல வேண்டும்" என்றாள் ஜெயந்தி.

வெயிலில் வந்ததால் சிவந்து கன்றி விட்டிருந்த ஜெயந்தியை பார்க்கும்போது அவள் உண்மையாகத்தான் சொல்கிறாள் என்றும் ஜோக் செய்யவில்லை என்றும் சுமதிக்கு தோன்றியது.

"இப்பொ நீ செய்து வரும் வேலைக்கு என்ன வந்தது?"

"வேறு வேலையை பார்த்துக் கொள்ளும் வரையில்தான் இந்த வேலை என்று சொல்லியிருந்தேனே. மறந்து விட்டாயா?"

"மறக்கவில்லை." தைத்துக் கொண்டிருந்த பிளவுஸை பக்கத்தில் வைத்தாள். "ஆனால் அந்த வேலைக்கு யாரும் வரவில்லையே?" என்றாள்.

"நான் இருக்கும் வரையில் யாரும் வரமாட்டார்கள்."

"ஏன்? என்ன ஆச்சு? அவன் ஏதாவது சொன்னானா?"

ஜெயந்தி பார்வையைத் திருப்பிக் கொண்டாள். "எதுக்காக சொல்லப் போகிறான்? எனக்குத்தான் விருப்பம் இல்லை."

ஜெயந்தியை ஒரு நிமிடம் கூர்ந்து பார்த்த சுமதி "இதுபோல் மனதிற்கு பிடிக்கவில்லை என்று வேலையை விடுவது சரியில்லை. வனிதா விஹார் நிறுவனத்தில் அவர்களுடைய பேச்சு, அங்கிருந்த சூழ்நிலை உனக்குப் பிடிக்கவில்லை என்பதால் அந்த வேலையை விட்டாய். அது நியாயம். ஆனால்..."

"இவனும் அவர்களில் ஒருவன் என்பதை மறந்து விடாதே."



"அதைத்தான் நானும் கேட்கிறேன். அவன் உன்னிடம் தவறாக நடக்க முயற்சி செய்தானா? பார்த்தால் அப்படிப் பட்டவனாக தெரியவில்லையே?"

"அம்மா! தாயே! உனக்கும் உன் கேள்விகளுக்கும் ஒரு நமஸ்காரம். நீ என்னுடன் வந்து ஹெட்மிஸ்ட்ரிஸிடம் பேசுகிறாயா இல்லையா. அதைச் சொல்லு முதலில்."

"நீ காரணம் சொன்னால் தவிர வரமாட்டேன்." சுமதியும் பிடிவாதமாக சொன்னாள்.

"சரி. அப்பொ நான் கிளம்புகிறேன்." ஜெயந்தி சட்டென்று எழுந்து கிளம்ப முற்பட்டாள்.

சுமதி பதட்டமடைந்து ஜெயந்தியின் கையைப் பற்றிக் கொண்டாள். "அதற்குள் கோபம் வந்து விட்டதா? போகட்டும். காரணம் கேட்க மாட்டேன். போவோம் வா."

இருவரும் பள்ளிக்கு போய்ச் சேரும்போது ஹெட்மிஸ்ட்ரெஸ் ஓய்வாக அமர்ந்திருந்தாள். சுமதி ஜெயந்தியை அந்த அம்மாளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். இதற்குமுன் அந்த வேலையில் இருந்த டீச்சர் வேறு நல்ல வேலை கிடைத்ததால் போய் விட்டதாகவும், டீச்சர் டிரைனிங் பெற்று வேறு ஒரு நபர் கிடைக்கும் வரையில் ஜெயந்தி அந்த வேலையில் இருக்கலாம் என்றும் அந்த அம்மாள் தெரிவித்தாள். இதற்கு இடையில் ஜெயந்தி டீச்சர் டிரைனிங் முடித்துவிட்டால், பர்மனென்ட் செய்யவும் வாய்ப்பு இருக்கு என்றும் சொன்னாள். தேர்வுகள் நெருங்கிக் கொண்டு இருப்பதால் ஜெயந்தியை அடுத்த நாளே வந்து சேரச்சொல்லி அந்த அம்மாள் வேண்டுகோள் விடுத்தாள். ஜெயந்தியும் சம்மதம் தெரிவித்துவிட்டு எழுந்து கொண்டாள்.

இருவரும் வெளியே வந்தார்கள். காரிடார் வழியாக நடந்து வந்து கொண்டிருந்தபோது வலதுப் பக்கமாக இருந்த வகுப்பு அறை ஒன்றில் டீச்சர் வரவில்லை போலும். மாணவிகள் ஹோவென்று பெரிதாக சத்தம் போட்டு பேசிக் கொண்டும், சினிமா பாட்டு பாடிக் கொண்டும் இருந்தார்கள். ஒரே இரைச்சலாக இருந்தது.

"அம்மாடியோவ்! இந்த வானரங்களை எப்படி சமாளிக்கப் போகிறாய்?" என்றாள் சுமதி.

"சமாளிக்க கற்றுக் கொள்கிறேன். ஒரு காலத்தில் நாமும் அப்படிச் செய்தவர்கள்தானே." ஜெயந்தி சொன்னாள்.

நாளையிலிருந்து தன்னுடைய வாழ்க்கை இந்தப் பள்ளியில் கழியப் போகிறது போலும். இந்த வேலையில் சேர்ந்த பிறகு பாட்டியிடம் சொல்லி விடலாம். ராஜசேகரிடம் தான் செகரெட்ரியாக இருந்த விஷயம் பாட்டிக்கு தெரியவேண்டிய அவசியம் இல்லை.

# 29

சுமதியை வீட்டில் இறக்கி விட்டு வீட்டுக்கு வரும்போது மதியம் ஆகிவிட்டது. ஒரு மணி நேரம் ஓய்வு எடுத்துக் கொண்ட பிறகு ஜெயந்தி மறுபடியும் வெளியே கிளம்புவதற்காக புடவையை மாற்றிக் கொண்டாள்.

"உடம்பு சரியில்லை என்று சொன்னவள் இந்த வெயில் நேரத்தில் மறுபடியும் எங்கே புறப்படுகிறாய்?" பேத்தி அருகில் வந்தாள் ஜானகி.

"வெளியில் கொஞ்சம் வேலையிருக்கு பாட்டி. சீக்கிரமாகவே வந்துவிடுகிறேன்." தலையை பின்னிக்கொண்டே சொன்னாள் ஜெயந்தி. அவளுக்கு காலையிலிருந்தே வயிற்றில் வலதுப் பக்கம் வலியாக இருந்தது. ஆனால் இன்றே ராஜசேகரிடம் ராஜிநாமா கடிதத்தை கொடுத்துவிட்டால், நாளை காலையில் டீச்சர் வேலையில் சேர்ந்து கொள்ளலாம். ராஜிநாமா கடிதத்துடன் அந்தப் புடவையையும் கொடுத்து விடுவது நல்லது. அந்தப் புடவை விஷயம் நினைவுக்கு வந்ததும் ஜெயந்தியின் முகம் சிவந்து விட்டது. ச்சீ... ச்சீ... தனக்குக் கொஞ்சம்கூட மூளையில்லை. யாரோ புடவையைக் கொடுத்தால் வாங்கிக்



கொள்வதாவது? வாங்கிக் கொண்டதால்தானே அவன் அன்றைக்கு தன்னுடைய உடையைப்பற்றி அப்படிச் சொன்னான். போகட்டும் தவறு நடந்துவிட்டது. அதை திருத்திக் கொள்ளும் விதமாக அந்தப் புடவையையும், ராஜிநாமா கடிதத்தையும் கொடுத்துவிட்டு நன்றியைத் தெரிவித்து விட்டு வந்துவிட்டால் வேலை முடிந்தது. தன்னைப் போன்றவர்களுக்கு டீச்சர் வேலைதான் லாயக்கு.

புடவையை அட்டைப் பெட்டியில் வைத்துக் கொண்டு இரண்டு பஸ்கள் மாறி ஆறாகப் பெருகிய வியர்வையை ஒற்றிக் கொண்டே ஜெயந்தி ராஜசேகரின் வீட்டை அடைந்தாள். கேட்டைத் தாண்டி உள்ளே நுழையும்போது போர்டிகோவில் நீலநிற கார் நின்றுக் கொண்டு இருந்ததை கவனித்தாள். ராஜசேகரை சந்திக்க யாரோ வந்திருப்பார்கள் போலும். ஒருக்கால் ராஜசேகரிடம் பேசும் வாய்ப்பு கிடைக்கா விட்டால் என்ன செய்வது? யோசித்துக் கொண்டே உள்ளே காலடி எடுத்து வைத்தாள். ஹாலில் யாரும் தென்படவில்லை. வீடு முழுவதும் நிசப்தமாக இருந்தது. ஹாலைத் தாண்டி உள்ளே போனாள். எங்கேயும் ஆள் நடமாட்டமோ, பேச்சுக்குரலோ இருப்பதாக தெரியவில்லை. வந்தவர்கள் ராஜசேகருக்கு ரொம்ப நெருங்கியவர்களாக இருக்க வேண்டும். உள்ளே அறையில் பேசிக் கொண்டு இருப்பார்கள் போலும். தான் வந்திருப்பதை அவனுக்கு எப்படி தெரியப்படுத்துவது? யோசித்துக் கொண்டே நெற்றியில் படிந்த வியர்வையை கைக்குட்டையால் ஒற்றிக் கொண்டே வெறுமே சாத்தியிருந்த கதவை லேசாக தள்ளினாள். கதவைத் தள்ளியவள் கற்சிலையாக அப்படியே நின்று விட்டாள். அறையின் நடுவில் ஈசிச்சேரில் பின்னால் சாய்ந்த வாக்கில் ராஜசேகர் அமர்ந்திருந்தான். பக்கத்திலேயே ஸ்டூல் மீது உட்கார்ந்திருந்த ரேகா அவன் மார்பில் சாய்ந்திருந்தாள். அவள் இருகைகளும் மாலையாக ராஜசேகரின் கழுத்தைச் சுற்றியிருந்தன. எதிர்பாராத விதமாக கண்ணில்பட்ட இந்த காட்சியை எப்படி எடுத்துக் கொள்வது என்று ஜெயந்திக்குத் தெரியவில்லை. கண் இமைக்கவும் மறந்து போனவளாய் அப்படியே நின்று விட்டாள்.

வாசற்பக்கம் முதுகைக் காட்டிக் கொண்டு அவன் மார்பில் சாய்ந்திருந்த ரேகா ஜெயந்தியை கவனிக்கவில்லை. ஏதோ நினைவில் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்த ராஜசேகர் கதவு லேசாக திறந்து கொண்ட ஓசையைக் கேட்டு திடுக்கிட்டு கதவு பக்கம் பார்த்தான். வினாடிக்குக் குறைவான நேரம் அவன் கண்கள் ஜெயந்தியின் கண்களுடன் சந்தித்தன.

திடீரென்று சுயநினைவு பெற்ற ஜெயந்தி சரேலென்று திரும்பி அந்த இடத்தை விட்டு வேகமாக வெளியேறினாள். ஓட்டமும் நடையுமாக ஹாலைத் தாண்டி வராண்டாவுக்கு வந்தவள் சட்டென்று நின்று விட்டாள். தான் எதற்காக வெட்கப் பட வேண்டும்? தான் வந்ததை அவன் பார்த்துவிட்டான். அவன் வெளியே வரும் வரையில் காத்திருந்து கொடுத்து விட்டு கிளம்பு வதுதான் சரி. இப்போ அவசரப்பட்டு கிளம்பிப் போனால் மறுபடியும் வரவேண்டியிருக்கும். வாசுவோ, நாயரோ கண்ணில் பட்டால் அவர்களிடமாவது கொடுத்து விட்டு போய் விடலாம். காத்திருப்பதா இல்லை கிளம்பிப் போவதா என்று தயங்கிக் கொண்டே தூணில் சாய்ந்துகொண்டு நின்றிருந்தாள்.

கசப்பாக ஏதோ விழுங்கிவிட்டது போல் ஜெயந்தி அருவருப்பாக உணர்ந்தாள். எவ்வளவு வெட்கம் கெட்டவர்கள்? கதவை உள்ளே தாழ் போட்டுக் கொண்டிருந்தால் எந்த பிரச்னை யும் இருந்திருக்காது இல்லையா. கதவு வெறுமே சாத்தியவர் களுக்கு தாழ்பாள் போடும் அளவுக்கு பொறுமை இருக்க வில்லையோ இல்லை அவசியமில்லை என்று நினைத்து விட்டார் களோ. அவ்வளவு பொறுமையே இருந்திருந்தால் நேராக ராஜ சேகரின் படுக்கை அறைக்கே சென்றிருப்பார்களோ என்னவோ. திருமணம் ஆன ரேகா... பெரிய மனிதன் என்று சமுதாயத்தில் பெயர் பெற்ற ராஜசேகர்.... இவர்கள் இப்படி நடந்து கொள்வது.....

அவர்களைப் பற்றி தான் யோசிப்பானேன? யார் எப்படி போனால் தனக்கென்ன வந்தது? தான் காத்திருப்பதா வேண் டாமா. அவன் வெளியில் வருவானோ மாட்டானோ.



"ஜெயந்தி!"

பின்னாலிருந்து குரல் கேட்டதும் சரேலென்று திரும்பினாள். எதிரே ராஜசேகர் நின்றிருந்தான். அவன் பார்வை ஸ்திரமாக இருந்தது. அதில் கூச்சமோ, கலக்கமோ கொஞ்சம்கூட தென்பட வில்லை. ஒரு வினாடி இருவரின் பார்வையும் சந்தித்துக் கொண்டன.

"உடல் நலம் சரியில்லை என்று சொல்லி காரை திருப்பி அனுப்பியவள் இப்போ எதற்காக வந்தாய்?"

அவன் குரல்கூட ரொம்ப இயல்பாக இருந்தது. தடு மாற்றமோ, தயக்கமோ இருக்கவில்லை.

"இவற்றை கொடுப்பதற்கு." கையிலிருந்தவற்றை காண்பித் தாள். எவ்வளவு வெட்கம்கெட்ட மனிதன்? சற்றுமுன் நடந்தது எதுவும் நினைவில் இல்லாததுபோல் எவ்வளவு சாதாரணமாக பேசுகிறான்? அவனைப் பார்க்கும்போது தான் ஏதோ குற்றம் புரிந்து விட்டதுபோல் ஜெயந்தி தலையைக் குனிந்து கொண்டாள்.

"என்னது?" புருவம் முடிச்சேற கேட்டான்.

"அட்டைப் பெட்டியிலிருப்பது புடவை, கவரில் இருப்பது என்னுடைய ராஜிநாமா கடிதம்."

ஒரு நிமிடம் கையில் இருந்த பொருட்களையும், அவளை யும் மாறி மாறி பார்த்தான். "ராஜிநாமா கடிதமா? எதற்கு?"

"எனக்கு வேறு வேலை கிடைத்துவிட்டது." ஜெயந்திக்கு உள்ளூர துக்கம் பொங்கி வந்தது. அவன் இங்கே வரும்முன் ராஜசேகரிடம் தனக்கு வேறு வேலை கிடைத்த விஷயம் சொல்லி விட்டு சௌஜன்யமாக விடைபெற்றுக் கொள்ளவேண்டும் என்று நினைத்திருந்தாள். ஆனால் நிலைமை தலைகீழாகிவிட்டது. பார்த்துக் கொண்டிருந்த போதே ராஜசேகரின் கண்கள் சிவந்து விட்டன. கோபத்தை கட்டுப்படுத்துவதுபோல் இதழ்கள் இறுகின.

"வேலை எங்கே கிடைத்தது? சிவராமனிடம் ஸ்டெனோ வாகவா இல்லை பிரகாஷிடம் செகரெட்ரியாகவா?"

'ஜெயந்தியின் முகம் சிவந்து விட்டது. மூச்சை அடக்கி கொண்டு அவனையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

ஒரு நிமிடம் ஜெயந்தியை கண் இமைக்காமல் பார்த் ராஜசேகர் அருகில் வந்து அவள் கையை பலமாக பற்றி கொண்டு அப்படியே தரதரவென்று உள்ளே அழைத்துச் சென்று நாற்காலியில் வலுக்கட்டாயமாக உட்காரவைத்தான். "ஒரு நிமிஷம் இரு. இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டு வெளியில் போய் விட்டான். ராஜசேகர் கையைப் பற்றியிருந்த இடத்தில் வலியை உணர்ந்த ஜெயந்தி மணிக்கட்டை நீவி கொண்டே கையில் இருந்த பொருட்களை மேஜை மீது வீசிவிட்டு எழுந்துகொண்டாள்.

எவ்வளவு துணிச்சல்? எவ்வளவு அகம்பாவம்? முட்டாள் களுக்கு அசுரபலம் இருக்கும் போலும். ஜெயந்தியின் இதழ்கள் கோபத்தால், ரோஷத்தால் நடுங்கிக் கொண்டிருந்தன.

ஏறத்தாழ கால் மணி நேரம் கழித்து வெளியில் கார் கிளம்பிய சத்தம் கேட்டது. ரேகா கிளம்பி விட்டாள் போலும் ஜெயந்தி மூச்சை அடக்கிக் கொண்டு ராஜசேகரின் வருகைக்காக காத்திருந்தாள்.

மேலும் ஐந்து நிமிடங்கள் கழிந்த பிறகு ராஜசேகர் உள்ளே வந்தான். வந்தவன் உடனே ஜெயந்தியிடம் வரவில்லை. நேராக ஜன்னல் அருகில் சென்று வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

அத்தனை கோபத்திலும், வெறுப்பிலும் செதுக்கிய சிலை போன்ற அவனுடைய உயரமான தோற்றத்தை, கம்பீரமாக நின்றிருந்த தோரணையை ரசனையுடன் பார்க்கத் தோன்றியதை எண்ணி தன்னைத் தானே கடிந்து கொண்டாள் ஜெயந்தி. இப்படிப்பட்டவர்களுக்கு கடவுள் அழகையும் கொடுத்து விட்டால் வேறு வினையே வேண்டாம். அதையே ஆயுதமாக பயன்படுத்தி இளம்பெண்களை சுலபமாக வசப்படுத்திக் கொண்டு விடுவார்கள்.

திடீரென்று பின்னால் திரும்பிய ராஜசேகர் ஜெயந்தி பார்வையை திருப்பிக் கொள்ளும் அவகாசம் தராமல் நேராக



அவள் கண்களுக்குள் பார்த்துக் கொண்டே "இப்போ சொல்லு" என்றான்.

'சொல்வதற்கு எதுவும் இல்லை. என்னுடைய ராஜிநாமா கடிதம். இந்தப் புடவையை நீங்க எடுத்துக் கொண்டால் நான் கிளம்புகிறேன்."

"ஒரு முறை உடுத்திக் கொண்ட புடவையைத் திருப்பித் தருவது மரியாதை என்று நினைக்கிறாயா?"

"எது மரியாதையோ எது மரியாதை இல்லையோ பாடம் கற்றுக் கொள்ள நான் இங்கே வரவில்லை. முதலில் நீங்க அனுப்பிய புடவையை எடுத்துக் கொண்டதே என்னுடைய முட்டாள்தனம். தெரிந்தோ தெரியாமலோ செய்த தவறுக்கு பலனையும் அனுபவித்து விட்டேன்."

"இரண்டு நாட்களுக்கு முன் நான் சொன்ன வார்த்தையை பிடித்துக் கொண்டு இன்று ராஜிநாமா கடிதம் கொடுக்க வந்திருக்கிறாய். அப்படித்தானே. அதற்காக அன்றைக்கே உன்னிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டேனே?"

"அதெல்லாம் இப்போ எதுக்கு? அவசர சமயத்தில் வேலை தந்து உதவி செய்தீங்க. அந்த நன்றி எனக்கு எப்போதும் இருக்கும்."

"உண்மையிலேயே நீ அப்படி மனப்பூர்வமாக நினைத்திருந்தால் இப்போ தேவை இல்லாமல் ராஜிநாமா செய்ய மாட்டாய். இப்போ திடீரென்று எனக்கு வேறு ஆள் எப்படி கிடைப்பான்? சிவராமன் போன்ற ஆள் கிடைக்கும் வரையில் நீ இருந்தாக வேண்டும் என்று ஆரம்பத்திலேயே சொன்னேனே?"

"நான் இருக்கும் வரையில் வேறு நபர் உங்களுக்குக் கிடைக்க மாட்டான்."

"அப்படி என்றால்! உன்னுடைய எண்ணம்தான் என்ன?" ராஜசேகர் தொலைவில் நின்றுகொண்டே இரட்டிப்பதுபோல் கேட்டான்.

"ஒன்றுமில்லை. நான் ரிசைன் செய்கிறேன். அவ்வளவுதான்."

ராஜசேகர் ஒவ்வொரு அடியாக வைத்து அவளை நோக்கி வந்தான். "காரணம்?"

"தனிப்பட்ட முறையில் எந்த காரணமும் இல்லை. எனக்கு வேறு வேலை கிடைத்துவிட்டது. அவ்வளவுதான்."

"அதான் எங்கே யாரிடம் என்று கேட்கிறேன்."

"சொல்ல மாட்டேன். உங்களுக்கு அனாவசியம்." பற்களை கடித்துக் கொண்டே சொன்னாள் ஜெயந்தி.

ராஜசேகரின் கை திடீரென்று ஜெயந்தியின் கையைப் பற்றிக் கொண்டது.

"எவ்வளவு தைரியம் உனக்கு? என்னிடமிருந்து அவ்வளவு சுலபமாக தப்பித்துக் கொண்டு போய்விட முடியும் என்று நினைத்தாயா?"

"எனக்கு வேறு வேலை கிடைத்ததும் போய் விடலாம் என்று வாக்குக் கொடுத்திருக்கீங்க." ராஜசேகரின் கைப்பிடியிலிருந்து தன் கையை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்தாள் ஜெயந்தி. ஆனால் சாத்தியப்படவில்லை அவன் பிடி மேலும் இறுகியது.

"கொடுத்த வாக்கை இப்பொ மறந்து விட்டேன் என்று சொன்னால்?"

ஜெயந்தியின் விழிகளில் நீர் சுழன்றது. சரேலென்று தலையை உயர்த்தினாள். ரோஷம் பளபளக்கும் விழிகளுடன் "உங்களுடைய திட்டம் எனக்குப் புரிந்து விட்டது. நீங்க மற்றவர்களை போல் இல்லை என்று நினைத்தேன். என்னையும், என்னுடைய நிலைமையும் புரிந்துகொண்டு இருப்பீங்க என்று எதிர்பார்த்தேன். உங்களுடன் எனக்கு இருக்கும் அறிமுகம் குறைவுதான் என்றாலும் நீங்க காட்டும் உரிமையை நல்லதனமாக எடுத்துக் கொண்டேன். ஆனால் இப்பொ புரிகிறது நீங்க அவர்களைவிட மோசமானவர் என்று. மனதில் எந்த எண்ணமும் இல்லை என்றால் என்னை ஏன் போகவிடாமல் தடுக்கறீங்க? பசுந் தோலை போர்த்திய புலியை அடையாளம் கண்டு பிடிப்பது ரொம்ப கஷ்டம்."



"ஜெயந்தி!" ராஜசேகர் சட்டென்று அவள் கையை விட்டு விட்டான்.

"எனக்கு இப்பொ எல்லாமே புரிகிறது. மனதில் பட்டதை வெளியில் சொல்ல எனக்கென்ன பயம்? நீங்க கொடுக்கும் அன்பளிப்புகளை, சலுகைகளை பார்த்து அடிமையாகிவிடுவேன் என்று நினைத்தீங்க. உங்களுடைய பணத்தைக் கண்டு மயங்குவேன் என்றும், விட்டில் பூச்சியாக உங்களைச் சுற்றிச் சுற்றி வருவேன் என்றும் எதிர்பார்த்தீங்க."

"அப்புறம்?" இரட்டிப்பதுபோல் கேட்டான்.

"வனிதா விஹாரில் உங்களைப் பற்றி பலவிதமாக பேசுவதை கேட்டபோதும் நான் நம்பவில்லை. உங்களிடம் அந்த சாயலே தென்படவில்லை. ஆனால் நீங்க... நீங்க..." ஆவேசத்தினால் மூச்சு இறைக்க ஒரு நிமிடம் நிறுத்தினாள். அவன் ஏதோ சொல்ல வந்தான். அதற்கு வாய்ப்பு தராமல் மறுபடியும் தொடர்ந்தாள்.

அவன் பார்வையில் தென்பட்ட தீவிரத்திற்கு அந்த அறையில் இருந்த காற்றும், வெளிச்சம்கூட நடுங்கிவிட்டன.

ஜெயந்தியின் கையை விடாமல் தீவிரமாக பார்த்துக் கொண்டே "இன்னிக்கு உனக்கு என்ன ஆகிவிட்டது?" என்றான்.

"உங்களுடைய உண்மை சொரூபம் தெரிந்து விட்டது" என்றாள். அவன் பார்வையின் தீவிரத்திற்கு கொஞ்சம்கூட பயப்படாதவளாய்.

"அதாவது நானும் மற்றவர்களை போல்தான் என்கிறாய். அப்படித்தானே."

"அதைவிட மோசம் என்பேன். அவர்களாவது பார்வையில், பேச்சில் குணத்தை காட்டி விடுவார்கள். அப்படிப்பட்டவர்களை

எளிதாக கண்டு பிடித்து விடலாம். எச்சரிக்கையாக இருக்கவும் முடியும். ஆனால் உங்களைப் போன்றவர்களை அடையாளம் கண்டு பிடிப்பது கஷ்டம். உங்களுடைய கெட்ட எண்ணத்தை புரிந்து கொள்வதற்குள்...''

''உன் வாயை மூடவைக்கணும்னா...'' ராஜசேகர் அவளை சட்டென்று அருகில் இழுத்துக் கொண்டான்.

''ச்சீ... ச்சீ...'' ஜெயந்தியின் கை காற்றில் எழும்பி ராஜசேகரின் கன்னத்தை பலமாக தாக்க முயன்றது. ஆனால் அதற்குமுன்பே அவன் கை ஜெயந்தியின் கையைப் பிடித்து தன்னுடன் இணைத்துக் கொண்டது. இன்னொருகை இரும்புப் பிடியாக மாறி தோளைச்சுற்றி பதிந்து அவளை சிறை படுத்தியது.

''ச்சி... ச்சி... விடு என்னை.'' ஜெயந்தி தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள். அவள் வார்த்தைகள் இன்னும் முடியக்கூட இல்லை. அவன் இதழ்கள் அவள் இதழ்கள் மீது அழுத்தமாக பதிந்தன.

முதலில் அவள் பேச்சை நிறுத்துவதற்காக அங்கே சென்ற ராஜசேகரின் இதழ்கள், எதிர்பாராமல் அமிருதம் கிடைத்து விட்டதுபோல் ரொம்ப நேரம் அந்த இனிமையை சுவைத்துக் கொண்டிருந்தன.

எதிர்பாராமல் நடந்துவிட்ட இந்த நிகழ்ச்சியினால் ஜெயந்திக்கு மூளை கலங்கிவிட்டாற்போல் இருந்தது. மின் அதிர்ச்சி தாக்கியதுபோல் மனம் செயல் இழந்து விட்டது. கைகால்கள் துவண்டன. கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

திடீரென்று தன் கைகளில் துவண்டுவிட்ட ஜெயந்தியைப் பார்த்து பதட்டமடைந்த ராஜசேகர் ''ஜெயந்தி! ஜெயந்தி!'' என்று அழைத்தான்.

''உட்கார்ந்து கொள்கிறேன்.'' எப்படியோ சமாளித்துக் கொண்டு சொன்னாள்.

அவன் இதழ்கள் மற்றொருமுறை ஜெயந்தியின் இதழ்கள் மீது மென்மையாக பதிந்து விடுவித்தன.



''இப்படிவா.'' ஜெயந்தியை மெதுவாக நடத்தி அழைத்து வந்து நாற்காலியில் உட்காரவைத்தான். ''தண்ணீர் குடிக்கிறாயா?'' என்று கேட்டான்.

வேண்டாம் என்பது போல் தலையை அசைத்தாள்.

''உனக்குத் தெரியாத விஷயங்களைப் பற்றி நீயாகவே ஏதேதோ யூகித்துக் கொண்டு எதிராளியை அவமதிப்பது நல்லது இல்லை ஜெயந்தி. எத்தனையோ நாளாக காப்பாற்றிக் கொண்டு வந்த என்னுடைய கட்டுப்பாட்டை இன்று குலைத்து விட்டாய்.'' அவனுடைய குரல் மென்மையாக ஒலித்தது. சட்டைப் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து அவள் நெற்றியில் படிந்த வியர்வைத் துளிகளை ஒற்றிக் கொண்டே சொன்னான்.

''இந்த அறையில் நான் எத்தனாவது பெண்?'' ஜெயந்தி திடீரென்று இருகைகளிலும் முகத்தை புதைத்துக் கொண்டு அழத் தொடங்கினாள்.

''ஜெயந்தி!'' ஒரு நிமிடம் திகைத்துப் போனான். உடனே தேறிக் கொண்டு ஜெயந்தியின் கூந்தலை வருடி விட்டுக் கொண்டே, ''சில நாட்கள் போனால் உனக்கே புரியும். இப்போ நான் எது சொன்னாலும் உன் காதுகளுக்கு பொய்யாகத்தான் தோன்றும். கொஞ்சம் இரு. நாயரை டாபி கொண்டு வரச் சொல்கிறேன்'' என்று சொன்னான்.

''வேண்டாம். வேண்டாம். நான் கிளம்புகிறேன்.''

''சரி. நான் காரை வெளியில் எடுக்கிறேன்.'' ராஜசேகர் அறையை விட்டு வெளியேறினான்.

## 30

ஜெயந்தி ஒருவாறு தன்னை சமாளித்துக் கொண்டு வெளியே வரும்போது ராஜசேகர் காரை போர்ட்டிகோவில் கொண்டு வந்து நிறுத்தினார். வெளியே நன்றாக இருட்டிவிட்டது. தெருவிளக்குகள் எரியத் தொடங்கின.

''பாக்கெட் எங்கே?'' வெறும் கையுடன் வந்த ஜெயந்தியை பார்த்துக் கொண்டே கேட்டான்.

''உள்ளே இருக்கு'' ஜெயந்தி காரில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

ராஜசேகர் கார் ஹாரனை பலமாக அடித்தான்.

உள்ளே இருந்து வாசு, நாயர் இருவரும் ஓடி வந்தார்கள்.

''உள்ளே சின்னம்மா ஏதோ பாக்கெட் மறந்து விட்டு வந்து விட்டாளாம். எடுத்துக்கிட்டு வா வாசு.''

சேகரின் வார்த்தை இன்னும் முடியக்கூட இல்லை. உள்ளே ஓடிய வாசு அடுத்த நிமிடம் அட்டைப் பெட்டியை அதன் மீது இருந்த கவரை எடுத்து வந்து பணிவாக நீட்டினான். ஜெயந்தி எதையும் பொருட்படுத்தாதவள் போல் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தாள். ராஜசேகர் அவற்றை வாங்கிக் கொண்டு காரில் வைத்தான்.

கார் கேட்டைத் தாண்டி வெளியே வந்த பிறகு ''அட்டைப் பெட்டியும், கவரும் மறுபடியும் உங்களுடனே திரும்பி வரும்'' என்றாள் ஜெயந்தி.

''என்னுடன் சண்டை போட்டதன் விளைவை இப்பொழுது தானே அனுபவித்தாய். அதற்குள் மறந்து போனால் மறுபடியும் நினைவுப் படுத்த எனக்கு ஆட்சேபணை இல்லை.''

ஜெயந்தி மௌனமாக இருந்து விட்டாள்.

சற்று நேரம் கழித்து ராஜசேகர் சொன்னான். ''அழகான நிகழ்ச்சிகளை அருவருப்பாக மாற்றுவதற்கு பெண்களால்தான் முடியும். கடவுள் மீது ஆணையாக சொல்கிறேன். உன் பிறந்த நாளுக்காக புடவையை பரிசாக அனுப்பும்போது என் மனதில் எந்த எண்ணமும் இல்லை. புடவை அழகாக இருந்தது. நீ உடுத்திக் கொண்டால் பொருத்தமாக இருக்கும் என்று தோன்றியது அவ்வளவுதான்.''



ஜெயந்தி பதில் பேசவில்லை.

''போகட்டும். உனக்கு அந்தப் புடவையைத் திருப்பித் தந்துதான் ஆகணும் என்றால் அதன் விலையை கொடுத்து விடு'' என்றான்.

''என்ன விலை என்ன என்று எனக்கெப்படி தெரியும்?''

''அட்ரெஸ் தருகிறேன். பம்பாய்க்கு போய் புடவைக் கடையில் அந்தப் புடவையைக் காட்டி விலையை தெரிந்து கொள். பம்பாய் போய் வருவதற்கு பிளேன் சார்ஜும் தருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. நீ என்னிடம் வேலை பார்த்து அந்த கடனை தீர்க்கணும்.''

அவன் குரலில் தென்பட்ட பரிகாசத்தை உணர்ந்த ஜெயந்தி சட்டென்று பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

இருவருக்கும் நடுவில் நிசப்தம் நிலவியது.

ராஜசேகர் ஜெயந்தியின் கையை தன் கையில் எடுத்துக் கொண்டான்.

''சாரி ஜெயந்தி. இன்று நடந்ததை... அதாவது சற்று முன் நீ வந்தபோது பார்த்ததை ஒரு கெட்ட கனவாக நினைத்து மறந்துவிடு. கடவுள் கருணை புரிந்தால் ஒரு நாள் கட்டாயம் நானே உனக்கு எல்லாவற்றையும் விளக்கமாக சொல்கிறேன்.''

அவன் கையில் சிறைப்பட்டிருந்த தன் கையை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்று பலமாக தோன்றினாலும் ஜெயந்தி பேசாமல் இருந்தாள். விடுவித்துக் கொள்ள முயற்சி செய்தால் மேலும் பிடி இறுகும்.

''இன்று என்னுடைய நடத்தை கொஞ்சம் எல்லை மீறிவிட்டது உண்மைதான். தற்போது நான் எந்த விதமான பிரச்னைகளில் மாட்டிக் கொண்டு இருக்கிறேனோ உனக்குத் தெரியாது. ஏற்கனவே எரிச்சலில் மனம் தடுமாறி இருந்த சமயம் நீ வேறு உன் வேண்டாத பேச்சுகளால் என்னைத் தூண்டி விட்டாய். உன் மனதை காயப்படுத்தியிருந்தால் என்னை

மன்னித்துவிடு. ஏன் மௌனமாக இருக்கிறாய்? ஏதாவது பேசு ஜெயந்தி!''

''என்ன பேசட்டும்?'' ஜெயந்தியின் குரல் பலவீனமாக ஒலித்தது. அந்த ஒரு நிமிடத்தில் எதிர்பாராமல் ராஜசேகர் செய்த அந்த செயல் உடலில் இருந்த சக்தி முழுவதையும் உறிஞ்சு விட்டாற்போல் தோன்றியது.

''நடந்ததையெல்லாம் மறந்துவிட்டு சமாதானத்திற்கு வந்து விட்டாற்போல்தானே'' என்றான்.

ஜெயந்தி பதில் சொல்லவில்லை.

சற்று நேரம் கழித்து மீண்டும் அவனே சொன்னான். ''வனிதா விஹாரில் இருப்பவர்களுக்கு நான் உன்னை செகரெட்ரியாக எடுத்துக் கொண்டது தெரியாது. நானும் ஊரில் இருக்கவில்லை. நடு நடுவில் வந்தபோதும் அவர்களை விழாக்களில் பத்து பேருக்கு நடுவில் சந்தித்ததால் இந்த விஷயத்தை யாருக்கு எப்படிச் சொல்வது என்று தெரியாமல் குழம்பி இருந்தேன். அதனால்தான் அன்று பார்ட்டீ நடந்த போது உன்னை ரிசெப்ஷன் அருகில் நிற்கச் சொன்னேன்.''

''அவர்கள் ஏதாவது சொன்னார்களா?''

''ஒன்றும் சொல்லவில்லை. சொல்லும் துணிச்சலும் இருக்கவில்லை. நீ ரொம்ப கெட்டிக்காரியாம். நன்றாக பேசுவாயாம். அதை மட்டும் சொன்னார்கள்.''

''அந்த வேலையை ஏன் விட்டேன் என்று நீங்க அவர்களிடம் கேட்கவில்லையா?''

''ஊஹூம். நானும் கேட்கவில்லை. அவர்களும் சொல்லவில்லை.''

ஜெயந்தி முன்னால் குனிந்து உட்கார்ந்து கொண்டாள்.

''நீ இப்பொ திடீரென்று வேலையை விட்டால் நான் அவர்களுடைய பேச்சுக்கு மதிப்புக் கொடுத்து உன்னை



வேலையிலிருந்து நீக்கிவிட்டதாக நினைத்துக் கொள்வார்கள். இப்பொ சொல்லு. என்னுடன் காயா பழமா? பழம்தானே? ஏன் இப்படி குனிந்து உட்கார்ந்திருக்கிறாய்? சரியாக உட்கார்ந்து கொள்.'' ராஜசேகர் ஜெயந்தியின் தோளைப்பற்றி எழுப்ப முயன்றான்.

''வேண்டாம். வேண்டாம். இப்படி உட்கார்ந்தால் வலி தெரியவில்லை.''

''வலியா? எங்கே?'' சட்டென்று காரை ஸ்லோ செய்து கொண்டே கேட்டான்.

''காலையிலிருந்து வயிற்றின் வலதுப்பக்கம் ஒரே வலி. இப்பொ அதிகமாக இருக்கு.''

''மருந்து, மாத்திரை ஏதாவது சாப்பிட்டாயா?''

''உடம்பு சூடாக இருக்குமென்று பாட்டி வெந்நீரில் நெய்விட்டுக் கொடுத்தாள். குடித்தேன். நேற்று இரவு ஒத்தடமும் கொடுத்தாள். இப்பொ போனதும் மறுபடியும் ஒத்தடம் கொடுத்து பார்க்கணும்.''

அதற்குள் வீடு நெருங்கிவிட்டது.

''சண்டை முடிந்து சமாதானமாகிவிட்டாற் போல்தானே'' என்று சொல்லிக் கொண்டே ராஜசேகர் ராஜிநாமா கடிதத்தை கிழித்துப் போட்டான். புடவை இருந்த அட்டைப் பெட்டியை அவள் பக்கம் நீட்டினான். அதைப் பார்க்காதது போல் இறங்கப் போனாள். சட்டென்று கையைப் பற்றி நிறுத்தினான்.

''நீ இதை பெற்றுக் கொள்ளாவிட்டால் நானே உங்க பாட்டியிடம் வந்து நடந்ததை எல்லாம் சொல்லி விடுவேன். ஒருமுறை கட்டிக் கொண்ட புடவையைத் திருப்பி தருவது மரியாதைதானா. நீங்களே சொல்லுங்கள் என்று நியாயம் கேட்பேன்.''

ஜெயந்தி ஒரு நிமிடம் ராஜசேகரின் கண்களில் ஊடுருவுவது போல் பார்த்து விட்டு அட்டைப் பெட்டியை பிடுங்கிக்

கொல்வதுபோல் வேகமாக எடுத்துக் கொண்டாள். அதே வேகத்தில் தன்னுடைய வீட்டை நோக்கி நடந்தாள். போகும்முன் வருகிறேன் என்று சொல்லிக் கொள்ளவும் இல்லை. வீட்டை நோக்கி வேகமாக நடந்து போய்க் கொண்டிருந்தவள் நடுவில் நின்று குனிந்து வயிற்றைப் பிடித்துக் கொண்டு நடந்தாள்.

"என்ன வலியாக இருக்கும்?'' புருவம் முடிச்சேற ராஜசேகர் ஒரு நிமிடம் யோசித்தான். இறங்கி உள்ளே போய் விசாரிக்க நினைத்தாலும், மறுபடியும் ஏனோ அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு காரை கிளப்பினான்.

வீட்டிற்குள் காலடி வைத்ததுமே ஜெயந்தி கட்டில் மீது சரிந்தாள். ரொம்ப சோர்வாக இருந்தது. ராஜசேகர் வீட்டில் நடந்தது நினைவுக்கு வந்தது. காரில் வரும்போது அவன் சொன்னது காதில் எதிரொலித்தது. நடுநடுவில் வயிற்றில் வலி சொக்கி போட்டு இழுத்துக் கொண்டிருந்தது.

"என்ன ஆச்சு ஜெயந்தி? ஏன் படுத்துக் கொண்டு இருக்கிறாய்?'' ஜானகி பேத்தி அருகில் வந்தாள்.

"ஒன்றுமில்லை பாட்டி. வயிற்றுவலி இன்னும் போகவில்லை.''

"மறுபடியும் ஒத்தடம் கொடுக்கட்டுமா? சூடாக பால் கொண்டு வருகிறேன். சாப்பிடு.''

"வேண்டாம் பாட்டி. எனக்கு, எதுவும் குடிக்கணும் போல் இல்லை.'' மேலும் முடங்கி படுத்துக் கொண்டாள்.

"முகம் வாடிக் கிடக்கே. உடம்பு சுடறதா?'' ஜானகி பேத்தியின் நெற்றியை தொட்டுப் பார்த்தாள். "உடம்பு அனலாக கொதிக்குதே.''

"ஒன்றுமில்லை பாட்டி. வெயிலில் அலைந்தேன் இல்லையா. அதான் தூங்கினால் சரியாகிவிடும்.'' சுவற்றுப் பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாள் ஜெயந்தி.



எள்ளிக்கும் இல்லாதவிதமாக பாட்டியின் பேச்சு ஜெயந்திக்கு சலிப்பை தந்தது.

"ஒன்றுமில்லை என்று நீ சொல்லி விட்டால் சரியாகி விடுமா? என்ன வேலையோ என்ன அலைச்சலோ?'' ஜானகி சூடாக பால் கொண்டு வந்து வலுக்கட்டாயமாக குடிக்கச் செய்தாள். ஜெயந்தி வலியால் துடித்ததையும் பொருட்படுத்தாமல் ஒத்தடம் கொடுத்தாள்.

அன்று இரவு ஜெயந்திக்கு வலி குறையவே இல்லை. அவர்கள் நினைத்தது போல் அது உடல் சூட்டினால் ஏற்பட்ட வலி இல்லை. திடீரென்று குளிர் ஜுரம் வந்தாற்போல் உடம்பு நடுங்கத் தொடங்கியது. மறுநாள் காலையில் கட்டிலை விட்டு எழுந்து கொள்ளவே முடியவில்லை. வலியின் தீவிரமும் அதிகரித்தது.

"ஜெயந்தி! கார் வந்திருக்கு'' ஜானகி சொன்னாள்.

"உடம்பு சரியாக இல்லை. வரமாட்டான் என்று சொல்லு பாட்டி.'' சுருண்டு படுத்துக் கொண்டாள்.

வலியின் தீவிரத்திலும் ஜெயந்தி யோசித்துக் கொண்டிருந்தாள். தனக்கு ஏதாவது ஆகிவிட்டால் பாட்டியை யார் பார்த்துக் கொள்வார்கள்? தான் இறந்து போவதைப் பற்றிகூட ஜெயந்தி பயப்படவில்லை. தனக்குப் பிறகு பாட்டியின் நிலைமை என்னவாகும்? ஜெயந்திக்கு துக்கம் பொங்கியது.

"ஜெயந்தி! ஏம்மா அழறே?'' அழுகை சத்தம் கேட்டு அருகில் வந்த ஜானகி பேத்தியின் தலையை மடியில் வைத்துக் கொண்டாள்.

"என்னால் இந்த வேலையைச் செய்ய முடியாது பாட்டி. என்னால் முடியவில்லை. வேலைக்கு போகவில்லை என்றால் நம்மால் எப்படி வாழ முடியும்?''

"வேலைக்கு போக பிடிக்கவில்லை என்றால் விட்டு விடு. அதற்காக அழுவானேன்?'' ஜானகி பேத்தியின் தலையை ஆதரவுடன் வருடிவிட்டாள்.

"இல்லை பாட்டி. இந்த வலியை என்னால் தாங்க முடிய வில்லை. எனக்கு ஏதாவது ஆகிவிட்டால்..." ஜெயந்தி விசும்பி விசும்பி அழத் தொடங்கினாள். அப்படியே தூங்கி விட்டாள்.

# 31

கண் முன்னால் ஒரே இருட்டு. தான் எங்கே இருக்கிறோம் என்று ஜெயந்திக்குப் புரியவில்லை. குளிர் ஜுரத்தினால் உடல் முழுவதும் தூக்கி தூக்கி போட்டுக் கொண்டிருந்தது.

எல்லாமே கனவுதானோ. எங்கும் இருட்டு. சூரிய வெளிச்சமே இருக்கவில்லை. காற்றில் மிதப்பது போல் தட்டு தடுமாறி நடந்துபோய்க் கொண்டிருந்தாள். யாருடையதோ கை நீண்டு வந்து அவளைப் பிடித்துக் கொண்டது. ஜெயந்தி வீலென்று கத்தினாள்.

"ஜெயந்தி! பயப்படாதே. நான்தான்." பழக்கப்பட்ட ஆண் குரல் கேட்டது.

"பாட்டி! பாட்டி எங்கே? கடவுளே! பாட்டியை காண வில்லை." ஜெயந்தி அழுதுகொண்டிருந்தாள்.

"நான் இருக்கேன் இல்லையா? இருவருமாக சேர்ந்து பாட்டியைத் தேடுவோம் கவலைப்படாதே." தைரியம் சொன் னான்.

"நீங்க யாரு?"

"அடையாளம் தெரியவில்லையா?"

"நீங்க... நீங்க..." ஜெயந்தி நிலை தடுமாறி கீழே விழப்போனாள். அதற்குள் அவன் அவளை தோளில் தூக்கிக் கொண்டு நடக்கத் தொடங்கினான்.

"இனி வெளிச்சமே வராதா?"

"யார் சொன்னார்கள்?



"யாரோ பேசிக் கொண்டு இருந்தார்கள்."

"அதை நீ நம்பி விட்டாய். அப்படித்தானே" அவன் சிரித்தான். அந்தச் சிரிப்பு அவனை அடையாளம் காட்டியது. ராஜசேகர்தான்.

"அதோ! அந்த மலையைத் தாண்டிய பிறகு வெளிச்சம் தெரியும்."

"என்னை தூக்கிக் கொண்டு நடப்பது உங்களுக்கு சிரமமாக இல்லையா?"

"மலரைவிட மென்மையாக இருக்கும் உன்னை தூக்கிச் செல்வது கஷ்டமா என்ன?"

ஜெயந்திக்கு என்னவோ போல் இருந்தது. "உங்களை எத்தனை முறை கடிந்து கொண்டு இருக்கிறேன்? அப்படியும் இந்த இருட்டில் எனக்கு உதவி செய்ய வந்திருக்கீங்க. உங்களுக்கு என் மீது கோபமே இல்லையா?"

"உன் மீது எனக்கு ஒரு நாளும் கோபம் வராது."

ஜெயந்தி பதில் சொல்லவில்லை. பதில் சொல்லவும் தெம்பு இல்லாததுபோல் சோர்வாக உணர்ந்தாள்.

அவன் கொஞ்சம்கூட அலுக்காமல், சோர்ந்து போகாமல் ஜெயந்தியை தோளில் சுமந்தவாறு நடந்து போய்க் கொண்டிருந்தான்.

"அதோ வெளிச்சம்." ஜெயந்தி திடீரென்று கத்தினாள்.

அந்த வெளிச்சத்தை அடைய நாம் இன்னும் நிறைய தூரம் நடக்க வேண்டும்."

"அப்படியா. பாட்டி எங்கே? பாட்டியை நீங்க தேடவே இல்லையே" என்றாள்.

"கவலைப்படாதே. தேடுவோம்." என்றான்.

"எனக்கு தூக்கம் வருகிறது."

"நிம்மதியாக தூங்கு."

''தூங்கினால் பாரமாக இருப்பேனோ.''

''உன்னை சுமப்பது எனக்கு கஷ்டமே இல்லை என்று சொன்னேனே.'' தலையை வருடி விட்டுக் கொண்டே சொன்னான்.

திடீரென்று எங்கிருந்தோ குளிர்ந்த காற்று வீசத் தொடங்கியது. ஜெயந்தி ஆழமாக மூச்சு எடுத்துக் கொண்டாள். உடலில் புதிய சக்தி புகுந்து கொண்டாற்போல் உற்சாகமாக இருந்தது.

எங்கும் வெளிச்சம். ராஜசேகர் எங்கே? தன்னை தோளில் சுமந்து சென்றானே. எல்லாமே கனவுதானோ. தான் இப்போ எங்கே எங்கே இருக்கிறாள்? சுவர்க்கத்திலா! அங்கேதான் இப்படி குளிர்ந்த காற்று வீசுமோ.

ஜெயந்தி மெதுவாக கண்களைத் திறந்து பார்க்கும்போது பக்கத்திலேயே உட்கார்ந்திருந்த ஜானகி ''எப்படிம்மா இருக்கு?'' என்று கேட்டாள்.

''பாட்டீ!'' ஜெயந்தி பாட்டியின் கையைப் பற்றிக் கொள்வதற்காக காற்றில் தேடினாள். ''அப்பாடா! அதெல்லாம் கனவுதான். எவ்வளவு பயந்து விட்டாள்?''

''ஜெயந்தி!'' யாருடைய கையோ ஜெயந்தியின் கையை பலமாக பற்றிக் கொண்டது. அந்த கை பாட்டியுடையது இல்லை. வேறு யாருடையதோ.

''ஜெயந்தி!''

இந்த முறை அந்த குரலை அடையாளம் தெரிந்தது. ராஜசேகரின் குரலேதான். அவனுடைய நினைவுகள் தன்னை ஏன் இப்படி துரத்துகின்றன? ஊஹூம். தனக்கு இன்னும் கனவு கலையவே இல்லை. எங்கே இருக்கிறானோ என்ன செய்கிறானோ அதுவும் புரியவில்லை.

''விழிப்பு வந்து விட்டதா?''

''உஹூம். எத்தனை முயன்றாலும் விழிப்பு வரவில்லை.'' பலவீனமான குரலில் சொன்னாள்.



''போகட்டும் தூங்கு.''

''எனக்கு இனி விழிப்பே வராது? நான் எங்கே இருக்கிறேன்? உயிரோடு இருக்கிறேனா இல்லை செத்துப்போய் விட்டேனா?'' ஜெயந்தி அழத் தொடங்கினாள்.

''அழாதே ஜெயந்தி. தூங்க முயற்சிசெய். ''யாரோ அவளுடைய தலையை கோதி விட்டார்கள்.

''நீங்க... நீங்க'' ஜெயந்தியால் கண்களைத் திறக்க முடியவில்லை.

''என்னை தெரிகிறதா? என் குரலை அடையாளம் கண்டு கொண்டாயா?

''ராஜசேகர்தானே.'' தெளிவற்ற குரலில் சொன்னாள்.

''ஆமாம். ராஜாதான்.'' அவன் குரலில் நிம்மதி வெளிப்பட்டது.

''தூக்கம் கண்களை அழுத்துகிறது. இது தூக்கம்தானே. மறுபடியும் விழிப்பு வருமா?''

ராஜசேகரின் கையைப் பிடித்துக்கொண்டே கேட்டாள். இமைகளை திறக்க முடியாதபடி தூக்கம் அழுத்தியது.

''கட்டாயம் விழிப்பு வரும். இப்போ அமைதியாக தூங்கு.'' ஜெயந்தியின் நெற்றியில் மென்மையாக முத்தம் பதித்தான்.

ஜெயந்தி உறக்கத்தில் ஆழ்ந்து விட்டாள்.

★ ★ ★

ஜெயந்திக்கு மறுபடியும் விழிப்பு வந்தபோது ஜானகி பக்கத்திலேயே இருந்தாள்.

கண்களைத் திறந்து ''பாட்டீ... பாட்டீ'' என்று அழைத்தாள்.

''எப்படி இருக்கு ஜெயந்தி!'' ஜானகி கேட்டாள்.

''அப்பாடா நன்றாக விழிப்பு வந்து விட்டது. என் பக்கத்தில் இருப்பது நீதானே?''

''ஆமாம் நானேதான்''

ஜானகியின் குரல் தெளிவாக கேட்டதும் ஜெயந்திக்கு தைரியம் வந்தது.

''பாழாய்போன கனவு எத்தனை முறை முயற்சி செய்தாலும் விழித்துக் கொள்ள முடியவில்லை. நான் இப்படி படுத்துக் கொண்டு எத்தனை மணி நேரம் ஆகிறது பாட்டீ? இரண்டு மணி நேரமாவது இருக்கும் இல்லையா.''

''இரண்டு மணி நேரம்தானா? பைத்தியக்காரி?''

''பின்னே? இரண்டு நாட்களா? இருக்கும் இருக்கும். அதான் ரொம்ப நேரம் தூங்கி விட்டாற்போல் தோன்றுகிறது.''

''இரண்டு நாட்கள் இல்லை கண்ணம்மா. இரண்டு வாரங்கள்.''

''இரண்டு வாரமா?'' ஜெயந்தி திடுக்கிட்டாள்.

''ஆமாம் கண்ணு. இது உனக்கு மறுபிறவி என்று வைத்துக் கொள். அந்த பாழாய்போன வயிற்று வலி வந்தது இல்லையா அதற்கு ஒத்தடமெல்லாம் கொடுத்திருக்கக் கூடாதாம். நல்லபடியாக பிழைத்து எழுந்து கொள்ளணும் என்று வேண்டாத தெய்வம் இல்லை.'' ஜானகி புடவைத் தலைப்பால் கண்களை ஒற்றிக் கொண்டாள்.

''பாட்டீ! நான் இப்போ எங்கே இருக்கிறேன் ஆஸ்பத்திரியிலா?''

ஜானகி பதில் சொல்லவில்லை.

ஜெயந்தி பாட்டியின் கையைப் பற்றிக் கொண்டாள். ''பாட்டீ! இந்த பதினைந்து நாட்களும் நீ ரொம்ப கஷ்டப்பட்டு இருப்பாய் இல்லையா'' என்றாள்.

''இல்லை ஜெயந்தி நான் கொஞ்சம்கூட கஷ்டப்படவில்லை சாட்சாத் பெருமாளே நம் வீட்டுக்கு வந்து உதவி செய்தாற்போல இருந்தது.''



''பின்னே நீ செய்த பூஜைகள் வியர்த்தமாகி விடுமா என்ன?''

இளைத்து துரும்பாகி விட்ட ஜெயந்தியின் இதழ்களில் முறுவலை பார்த்ததும் ஜானகிக்கு தைரியம் வந்தது.

அன்று மாலையில் கமலாவும், டாக்டர் சுப்ரமணியமும் வந்தார்கள். உள்ளே வரும்போதே ''எப்படி இருக்கிறாய் ஜெயந்தி?'' என்று கேட்டுக் கொண்டே கமலா அருகில் வந்தாள்.

நன்றாகத்தான் இருக்கிறேன். நீங்க என்னை சீதா என்று அழைப்பதை விட்டு விட்டீங்களா என்ன?'' ஜெயந்தி முறுவலித்துக் கொண்டே கேட்டாள்.

''வேண்டாம்மா. வேண்டவே வேண்டாம். உன்னை இனி சீதா என்று ஒருநாளும் அழைக்க மாட்டேன். ஜெயந்தி என்றுதான் அழைப்பேன். ஒரு முறை பட்டது போதும். எவ்வளவு கவலைப்பட்டு விட்டோம் தெரியுமா?'' கமலா ஆதரவுடன் ஜெயந்தியின் தலையை வருடி விட்டாள்.

''என்னம்மா ஜெயந்தி? எங்கள் எல்லோரையும் பயமுறுத்தி விட்டாயே?'' பக்கத்தில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டே சுப்ரமணியம் சொன்னார்.

அவரைப் பார்த்ததும் முக்காடை சரி செய்து கொண்ட ஜானகி ''நீங்க மட்டும் தைரியம் சொல்லவில்லை என்றால் அன்னிக்கே என் இதயம் நின்று விட்டிருக்கும்'' பணிவு கலந்த குரலில் சொன்னாள்.

ஜெயந்திக்குப் புரிந்துவிட்டது. பெருமாள்போல் வந்து உதவி செய்தது டாக்டர்தான்போலும்.

''அதோ சுமதி வந்துவிட்டாள்.'' கமலா சொன்னாள்.

ஜெயந்தி எழுந்து கொள்ளப் போனாள்.

''வேண்டாம் எழுந்து கொள்ளாதே. கட்டு நகர்ந்து விடும்.'' கமலா தடுத்தாள்.

''கட்டா? எனக்கா! எங்கே?'' வயிற்றின் மீது கையை வைத்தாள் ஜெயந்தி. உண்மைதான். வலதுப்பக்கம் அடிவயிற்றில் பெரிதாக கட்டு போடப்பட்டிருந்தது.

''இவ்வளவு பெரிய கட்டு ஏன்? எனக்கு என்னவாகி விட்டது?''

''உனக்கு அபெண்டிசைடிஸ் ஆபரேஷன் செய்தார்கள். அதோடு ப்ளு ஜுரமும் சேர்ந்து கொண்டு விட்டது. எவ்வளவு பயந்து விட்டோம் தெரியுமா?'' கமலா சொன்னாள்.

''எப்படி இருக்கிறாய்?'' சுமதி ஜெயந்தியின் தலை மாட்டில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''சுமதி!'' ஜெயந்தி சுமதியின் கையைப் பற்றிக் கொண்டாள். இந்த உலகில் தனக்கு நெருங்கியவர்கள் இத்தனைபேர் இருக்கிறார்களா? தன்னுடைய நலனைப் பற்றி எவ்வளவு கவலைப் படுகிறார்கள்? ஜெயந்தியின் மனம் முழுவதும் மகிழ்ச்சி பரவியது.

''ராஜசேகர் எங்கே?'' சுப்ரமணியம் கேட்டார். ஜெயந்தி திடுக்கிட்டாள்.

''இத்தனை நேரம் இங்கேதான் இருந்தான். இப்பொழுது தான் வெளியே போனான்.'' ஜானகி பதில் சொன்னாள்.

தன்னை பார்ப்பதற்காக ராஜசேகரும் வந்திருந்தானா. கனவிலும் தனக்கு துணையாக அவன் இருந்தது நினைவுக்கு வந்தபோது ஜெயந்திக்கு இன்னதென்று புரியாத உணர்வு ஏற்பட்டது.

அதற்குள் டாக்டர் உள்ளே வந்ததும் பேச்சு திசை திரும்பிவிட்டது.

# 32

**ஊ**சி போட்டதாலோ என்னவோ ஜெயந்தி ஆழமாக உறங்கிவிட்டாள். எத்தனை நேரம் உறங்கினாளோ அவளுக்கே



தெரியவில்லை. விழிப்பு வந்தபோது கண்களைத் திறந்து பார்த்தாள். எங்கும் இருட்டாக இருந்தது. எங்கே இருக்கிறோம் என்று புரியாமல் ஒரு நிமிடம் குழப்பம் அடைந்தாள். டாக்டர் தம்பதியர், சுமதி தன்னைப் பார்க்க வந்தது, தன்னுடன் பேசியது எல்லாமே உண்மைதானா இல்லை கனவா?

''பாட்டீ!'' பலவீனகுரலில் அழைத்தாள். பதில் வரவில்லை.

''பாட்டீ!'' குரலை உயர்த்தி மறுபடியும் அழைத்தாள். பதில் குரல் வரவில்லை. ஆனால் அறையின் மூலையில் இருந்த நீலநிற விடிவிளக்கு எரிந்தது.

திடீரென்று வந்த வெளிச்சம் கண்களை கூச வைத்தது. ''அம்மா!'' கையால் கண்களை மறைத்துக் கொண்டாள்.

''என்ன வேண்டும்?''

அந்தக் குரலைக் கேட்டதும் திடுக்கிட்டவளாய் கையை அகற்றினாள். சோர்வாக இருந்த கண்களுக்கு மெள்ள மெள்ளமாக எதிரே இருந்த உருவம் புலப்பட்டது.

''என்ன வேண்டும்?'' ராஜசேகர் மறுபடியும் கேட்டான். பேச்சும், மூச்சும் மறந்து விட்டாற்போல் ஜெயந்தி கண் இமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். இருவரின் கண்களும் சந்தித்துக் கொண்டன. அவள் கண்களில் ஏதோ சந்தேகம். அவன் பார்வையில் நிம்மதி கலந்த மகிழ்ச்சி.

''வியர்த்துக் கொட்டுகிறதா. ஃபேனை ஸ்பீடாக வைக்கட்டுமா?'' மென்மையான குரலில் கேட்டான்.

''தாகமாக இருக்கு.'' நாக்கு உலர்ந்து விட்டது போல் இருந்தது ஜெயந்திக்கு. பாட்டியை எதிர்பார்த்த கண்களுக்கு ராஜசேகர் தென்பட்டதும் மேலும் தடுமாற்றமாக உணர்ந்தாள்.

அவன் தம்ளரில் தண்ணீர் கொண்டு வந்தான். ஜெயந்தி எழுந்து உட்காரப் போனாள்.

"இரு எழுந்து கொள்ளாதே" என்று தடுத்து விட்டு தலை மாட்டில் உட்கார்ந்து கொண்டான். வலது கையால் ஜெயந்தியின் தோளைப் பற்றி அணைத்தாற்போல் மெதுவாக எழுப்பி உட்கார வைத்து இடது கையால் தண்ணீரை குடிக்கச் செய்தான். அவனைப் பார்த்துக் கொண்டே தண்ணீரைக் குடித்தாள்.

"என்ன அப்படி பார்க்கிறாய்?"

"நீங்க... ... நீங்க."

"நான் யாரென்று அடையாளம் தெரியவில்லையா?"

"தண்ணீர் இனிப்பாக இருந்ததே?" அவன் பார்வையிலிருந்து தன் பார்வையை விலக்கிக் கொண்டே கேட்டான்.

"க்ளுகோஸ் போட்டுக் கொடுத்தேன். சொல்லு. நான் யாரென்று தெரியவில்லையா?"

"தெரிகிறது. ஆனால் நீங்க... இங்கே..." ஜெயந்தியால் வார்த்தையை முடிக்க முடியவில்லை. அவனும் வேறு எதுவும் கேட்கவில்லை. மெதுவாக அவளை படுக்க வைத்து விட்டு எழுந்து போய் தம்ளரை மேஜை மீது வைத்தான். ஜெயந்தி கண்கள் அகல விரிய அவனுடைய ஒவ்வொரு செயலையும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

மறுபடியும் வந்தவன் அவள் கட்டிலுக்கு அருகில் ஈசிச் சேரை நகர்த்திக் கொண்டு அதில் அமர்ந்து கொண்டான்.

"இனி தூங்கு."

"பாட்டீ எங்கே?"

"அடுத்த அறையில் தூங்குகிறாள். அவங்களுக்கு மறுபடியும் நெஞ்சுவலி வந்து விட்டது."

ஜெயந்தி மௌனம் வகித்தாள்.

"பாட்டீயை அழைக்கட்டுமா?"

வேண்டாம் என்பதுபோல் தலையை குறுக்காக அசைத்து விட்டு கண்களை மூடிக் கொண்டாள். எதையும் யோசிக்கும்



நிலையில் மனம் இருக்கவில்லை. தான் எங்கே இருக்கிறாள்? இந்த அறையை பார்த்தால் ஆஸ்பத்திரி போல் தெரியவில்லை. தன் அருகில் ராஜசேகர் இருப்பானேன்? பாட்டீ எப்படி இதற்கு சம்மதித்தாள்? இது ராஜசேகரின் வீடாக இருக்குமோ? மற்றவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்? எல்லாமே கேள்விகள்தான் பதில்தான் தெரியவில்லை.

கண்களை மூடி படுத்திருந்த ஜெயந்திக்கு ரொம்ப நேரம் கழித்து ராஜசேகர் கையை நீட்டி தன்னுடைய நெற்றியை தொட்டு ஜுரம் இருக்கிறதா என்று பரிசீலித்ததும் பிறகு முன் நெற்றியில் படிந்திருந்த குழல்கற்றைகளை ஒதுக்கி விட்டதை உணர முடிந்தது. அத்தனை சோர்விலும் ஜெயந்தியின் மனம் பயத்தினால் வெட்கத்தினால் தடுமாறியது. இந்த அதிகாரம், உரிமை இவனுக்கு எப்படி வந்தது? யாருமே பக்கத்தில் இல்லை என்ற துணிச்சலா? ஆனால் அந்த ஸ்பரிசத்தில் எவ்வளவு அன்பு வெளிப்பட்டது? ஜெயந்திக்கு ஏனோ அந்த கையைப் பற்றிக் கொண்டு அப்படியே தூங்க வேண்டும்போல் இருந்தது. அவளையும் அறியாமல் இமைகள் மூடிக்கொண்டன. உறக்கத்தில் ஆழும் முன் ஒருமுறை கண்களைத் திறந்து பார்த்தாள். அறை முழுவதும் நீல வண்ணத்தில் வெளிச்சம் பரவியிருந்தது. ராஜசேகர் இரண்டு கைகளையும் தலைக்கு மேலே கோர்த்துக் கொண்டு மேற்கூறையை பார்த்தவாறு எதையோ யோசித்துக் கொண்டு இருந்தான்.

# 33

அதற்குப் பிறகு பாட்டீயின் மூலம் அசல் விஷயம் தெரிந்தது. அன்று வயிற்று வலி அதிகமாக இருந்ததால் வேலைக்கு வரப்போவதில்லை என்று காரை திருப்பி அனுப்பி விட்டாள். வலி தாங்க முடியாமல் ஆரற்றிக் கொண்டிருந்தாள். ஜானகிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பக்கத்து வீட்டு மாமி வந்து பார்த்து விட்டு "நினைவுகூட சரியாக

இல்லை. உடனே டாக்டரிடம் காட்டினால் நல்லது'' என்றாள். அதைக் கேட்டதும் ஜானகி மேலும் பதட்டமடைந்து விட்டாள். அந்தத் தெருவில் இருக்கும் டாக்டரும் வெளியூருக்கு போயிருந்தார். ஹாஸ்பிடலுக்கு எப்படி அழைத்துப் போவது? ஜானகி உள்ளுக்கும் வாசலுக்கும் நடையாய் நடந்தாள்.

அதற்குள் வாசலில் நீளமான கருப்பு நிற கார் ஒன்று வந்து நின்றது.

'மறுபடியும் கார் வந்திருக்கு போலிருக்கே. இதில் பேத்தியை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனால் என்ன?' யோசித்துக் கொண்டே வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்தாள்.

காரிலிருந்து உயரமாக, வெண்மை நிற உடை அணிந்து கம்பீரமாக இருந்த நபர் இறங்கி நேராக ஜானகியிடம் வந்து வணக்கம் தெரிவித்தான்.

''யார் தம்பி நீங்க? உங்களுக்கு யார் வேண்டும்?'' தவறுதலாக இந்த வீட்டுக்கு வந்து விட்டானோ என்று வியப்படைந்தவளாய் கேட்டாள்.

வந்தவன் தன்னுடைய பெயர் ராஜசேகர் என்றும் ஜெயந்திக்கு உடல் நலம் சரியில்லை என்று தெரிந்து பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்ததாக தெரிவித்தான்.

'நீ யாரு? ஜெயந்திக்கும் உனக்கும் எப்படி அறிமுகம்? அவளுக்கு உடல் நிலை சரியில்லை என்று உனக்கெப்படி தெரியும்?' இதுபோன்ற கேள்விகளை கேட்க வேண்டும் என்று ஜானகிக்கு தோன்றவில்லை. அந்த சமயத்தில் வேறு எந்த நினைவும் வரவில்லை.

கண்களில் நீர் தளும்ப உள்ளே கட்டில் மீது சுருண்டு படுத்திருந்த ஜெயந்தியின் வயிற்றை லேசாக அழுத்தினாள். அவள் தொடுகைக்கு லேசாக விழிப்பு வந்த ஜெயந்தி பெரும் முயற்சி செய்து கண்களைத் திறந்தாள். ''என்னை உடனே டாக்டரிடம் அழைத்துப் போங்க. இந்த வலியால் உயிரே போய்விடும் போலிருக்கு'' என்றாள்.



ஜானகி விழி நீரை அடக்கிக் கொண்டே ராஜசேகர் பக்கம் பார்த்தாள்.

''உடனே ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகணும்'' என்றவன் ஜானகியின் சம்மதத்திற்காக காத்திருக்காமல் ஜெயந்தியை மெதுவாக தூக்கி தோளில் சாய்த்துக் கொண்டு ''நீங்க வீட்டை பூட்டிக் கொண்டு வாங்க'' என்று வெளியில் நடந்தான்.

அக்கம் பக்கத்தில் எல்லோரும் வியப்புடன் அவனையும் காரையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஜானகி அவன் சொன்னதுபோல் அவசர அவசரமாக வீட்டை பூட்டிக்கொண்டு கிளம்பினாள். ஜானகியை பின் சீட்டில் உட்காரச் செய்து ஜெயந்தியை கவனமாக பிடித்துக் கொள்ளச் சொன்னான்.

பத்து நிமிடங்களில் கார் ஆஸ்பத்திரியை அடைந்தது. அவன் இறங்கிக் கொண்டு வெளியில் தென்பட்ட நர்ஸிடம் ஆங்கிலத்தில் ஏதோ சொன்னான். நர்ஸ் உள்ளே ஓடினாள். அடுத்த நிமிடம் ஸ்ட்ரெச்சருடன் வந்த வார்ட் பாய்கள் ஜெயந்தியை கவனமாக அதில் படுக்க வைத்து உள்ளே அழைத்துப் போனார்கள்.

உள்ளே டாக்டர் ஒருவர் ஜெயந்தியை பரிசீலித்துவிட்டு பக்கத்தில் இருந்த நர்ஸிடம் ஏதோ சொன்னதும் உடனே ஜெயந்தியை அப்படியே வேறு அறைக்கு அழைத்துச் சென்று விட்டார்கள். டாக்டர் ராஜசேகரிடம் வந்து ஆங்கிலத்தில் பேசிவிட்டுச் சென்றார்.

அங்கேயே நின்றிருந்த ஜானகிக்கு அவர்கள் பேசியதில் ஒரு வார்த்தைகூட புரியாததால் மேலும் பதட்டமடைந்தாள். டாக்டர் சென்ற பிறகு ராஜசேகர் ஜானகியின் அருகில் வந்தான். ''ஆபரேஷன் செய்யணுமாம். அதற்காக அழைத்துப் போயிருக்கிறார்கள்'' என்றான்.

''ஆபரேஷனா!!'' ஜானகி திகைத்துப் போய்விட்டாள்.

''ஆமாம். ஏற்கனவே தாமதமாகிவிட்டதாம். டாக்டர் சொன்னார். கவலைப்படாதீங்க. இதில் பயப்படவேண்டியது எதுவும்

இல்லை.'' நெற்றியில் அரும்பியிருந்த வியர்வையை கைக்குட்டையால் ஒற்றிக் கொண்டே சொன்னான்.

ஜானகி அங்கேயே இருந்த பெஞ்ச்மீது சரிந்து விட்டாள். அவள் இதயம் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. ஜெயந்தி மறுபடியும் எழுந்து நடமாடுவாளா? பாட்டீ என்று தன்னை அழைப்பாளா? இதுவரையில் வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்து விட்டாள். ஜெயந்திக்காகவே உயிரை கையில் பிடித்துக் கொண்டு வாழ்ந்து வருகிறாள். விதி தன்னை மற்றொரு முறை ஏமாற்ற கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கிறதா? மனதில் இருந்த சக்தியெல்லாம் திரட்டிக் கொண்டு கடவுளை வேண்டிக் கொண்டாள்.

ராஜசேகர் அதே அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடைபயின்று கொண்டிருந்தான்.

யார் இவன்? ஜெயந்தி ஒரு நாளும் பேச்சுவாக்கில்கூட இவனைப் பற்றி தன்னிடம் சொன்னது இல்லையே? இவனுடைய நடவடிக்கை, எடுத்துக் கொள்ளும் உரிமையை பார்த்தால் ஜெயந்திக்கு நன்றாக அறிமுகம் இருப்பதுபோல் தோன்றுகிறது. யாராக இருந்தால் என்ன? சமயத்திற்கு கடவுள் போல் வந்து உதவி செய்தான். இவனை மனதில் வைத்துக் கொண்டுதான் ஜெயந்தி வருகிற வரன்களை எல்லாம் தட்டிக் கழிக்கிறாளோ. அப்படியே இருந்தாலும் இதில் மறைக்க வேண்டியது எதுவும் இல்லையே. எண்ணங்கள் அலைகள்போல் கொந்தளிக்க ஜானகி நிலைகுலைந்து போனாள். நெஞ்சு வலிப்பது போல் தோன்றியது. கையால் மார்பை அழுத்திக் கொண்டாள்.

''என்ன ஆச்சு? நெஞ்சு வலிக்கிறதா? காபி ஏதாவது குடிக்கறீங்களா? அனாவசியமாக கவலைப்படாதீங்க.'' ராஜசேகர் அருகில் வந்து கொண்டே சொன்னான்.

''இல்லை. பரவாயில்லை.'' என்றாள். தனக்கு நெஞ்சுவலி வரும் என்று இவனுக்கு எப்படி தெரியும்?



வேண்டாம் என்று மறுத்த போதும் கேட்காமல் காபி வரவழைத்து கொடுத்தான். ஆயாவை அழைத்து தலையணை ஒன்று கொண்டு வரச்செய்தான். பெஞ்ச் மீது படுத்துக் கொள்ளச் சொல்லி வற்புறுத்தினான். ஜானகி பெஞ்ச் மீது படுத்துக் கொண்டாள். நேரம் போய்க் கொண்டிருந்தது. அறையில் நடை பயின்று கொண்டிருந்த ராஜசேகரை பார்க்கும்போது ஜானகிக்கு எங்கேயோ பார்த்த முகமாக தோன்றியது. எடுப்பான நாசி... செதுக்கி வைத்த சிலை போன்ற உருவம். தனக்கு தெரிந்த நபரின் ஜாடை இவனிடம் இருப்பதுபோல் ஜானகிக்குதோன்றியது. ஆனால் அதெப்படி இருக்க முடியும்? ஜெயந்தியின் உடல் நலனைப் பற்றிய கவலையில் இருந்த ஜானகிக்கு ராஜசேகரிடம் தனக்குத் தெரிந்த நபரின் ஜாடை தெரிந்தாலும், அந்த நபர் யாரென்று நினைவுக்கு வரவில்லை.

ஆபரேஷன் நல்ல படியாக முடிந்துவிட்டது. ராஜசேகர் முதலில் ஜெயந்தியை பார்த்துவிட்டு வந்தான். பிறகு ஜானகியும் போய் பார்த்தாள். வெளிறிப் போன முகத்துடன், கழுத்து வரையில் வெள்ளை போர்வையுடன் இருந்த பேத்தியை பார்க்கும் போது ஜானகியால் அழுகையை அடக்க முடியவில்லை.

''ஆபத்து நீங்கி விட்டது. பயப்படாதீங்க.'' ராஜசேகர் தைரியம் சொன்னான்.

''இன்னும் ஒரு மணி நேரம் தாமதமாக அழைத்து வந்திருந்தால்...'' டாக்டர் வார்த்தையை பாதியிலேயே நிறுத்தி விட்டார்.

ஜெயந்தியின் அறையை விட்டு வெளியே வரும்போது, ''நீங்க செய்த இந்த உதவியை இந்த ஜென்மத்தில் மறக்க மாட்டேன் தம்பி'' என்றாள் ஜானகி கண்களை ஒற்றிக்கொண்டே.

''அதனால் என்னங்க? ஆபத்து நீங்கி விட்டது. அதுதான் முக்கியம்.'' சாதாரணமான குரலில் சொன்னான்.

அன்று இரவு டாக்டர் சுப்ரமணியமும், அவர் மனைவி கமலாவும் வந்து பார்த்தார்கள். ஜானகியை வற்புறுத்தி தங்கள்

வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். மறுநா செய்தி தெரிந்ததும் சுமதி ஆஸ்பத்திரிக்கு ஓடி வந்தாள்.

ஜெயந்தியை பார்த்து விட்டு வீட்டுக்குக் கிளம்பும் முன் ஜானகி சுமதியிடம் கேட்டாள்.

"சுமதி! இந்த ராஜசேகர் ஜெயந்திக்கு எப்படி அறிமுகம்? உனக்குத் தெரியுமா?"

சுமதி எதுவும் சொல்லாமல் பார்வையை திருப்பிக் கொண்டாள்.

"சமயத்திற்கு கடவுள் போல் வந்து உதவி செய்தான். அவன் நடந்து கொள்வதை பார்த்தால் ரொம்ப நாளாக அறிமுகம் இருப்பதுபோல் தோன்றுகிறது. அதைப்பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?" என்றாள்.

சுமதி தரையில் பார்வையை பதித்தாள்.

"அப்பொ உனக்கு எதுவும் தெரியாதுன்னு சொல்லு."

"ஜெயந்தி ஓரிருமுறை சொல்லியிருக்கிறாள்."

"என்ன சொன்னாள்?"

சுமதி பதில் சொல்லும் முன் கமலா உள்ளே வந்தாள். வந்தது முதல் தன் மகள் கீதாவுக்கும் ஜெயந்திக்கும் ஜாடை எவ்வளவு இருக்கோ, ஜெயந்தியை பார்த்த பிறகுதான் தனக்கும் தன் கணவருக்கும் வாழ்க்கையின் மீது மறுபடியும் பற்றுதல் வந்ததைப் பற்றியும் சொல்லத் தொடங்கினாள். அவர்களிருவரும் பேசிக் கொண்டிருந்த போதே சுமதி கிளம்பிப் போய்விட்டாள்.

நான்கு நாட்கள் கழிந்து விட்டன. ஜெயந்திக்கு நடு நடுவில் நினைவு வந்தாலும் ஜுரம் முழுவதுமாக குணமாகவில்லை.

ஜுரத்தைப் பற்றி பயப்பட வேண்டாம் என்றும், மருந்து மாத்திரை தொடர்ந்து சாப்பிடால் சரியாகிவிடும் என்றும், வீட்டுக்கு அழைத்துப் போகலாம் என்றும் டாக்டர் சொல்லி விட்டார்.



"எங்க வீட்டுக்கு அழைத்துப் போகிறோம்." கமலா சொன்னாள்.

"வேண்டாம். நான் அழைத்துப் போகிறேன்." என்றான் ராஜசேகர்.

அதற்கு யாருமே மறுப்பு சொல்லவில்லை. ஜானகியும் எதுவும் சொல்லவில்லை. இந்த நேரத்தில் யாரோ ஒருவரின் உதவியும், துணையும் அவசியம் அது யாராக இருந்தால் என்ன?

★ ★ ★

தலையணையில் சாய்ந்த படி பாட்டி சொன்னதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள் ஜெயந்தி. "சாதாரணமாக ஜுரம் குறையாமல் எந்த ஆஸ்பத்திரியிலும் டிஸ்சார்ஜ் செய்ய மாட்டார்களே?" என்றாள்.

"அது தனியார் ஆஸ்பத்திரி. அதிலும் அந்த டாக்டர் ஸ்பெஷலிஸ்டாம்." ஜானகி சொன்னாள்.

"ஸ்பெஷலிஸ்டா! அப்பொ நிறைய செலவு ஆகியிருக்குமே."

"செலவு பற்றி இப்பொ நினைப்பானேன்?"

"பாட்டீ! இந்த செலவு எல்லாம்...."

"நான் என்ன செய்யட்டும்? வேறு நிலைமையாக இருந்தால் என் உடம்பில் உயிர் இருக்கும் வரையில் இன்னொருத்தரை செலவு செய்ய விட்டிருப்பேனா?" ஜானகியின் குரல் கம்மி விட்டது.

"ஆனாலும்... வந்து..."

"அப்படியே இருந்தாலும் அவன் ஒண்ணும் நமக்கு வேற்று மனிதன் இல்லை."

"அப்படின்னால்?"

"ரொம்ப வேண்டியவன்தான்." ஜானகி சொன்னாள்.

ஜெயந்தி பார்வையைத் திருப்பிக் கொண்டாள். இந்த பெரியவர்களுடன் வந்த பிரச்னையே இதுதான். சுற்றி வளைத்து ஏதோ ஒரு உறவு முறையை கண்டு பிடித்து, அதை கொண்டாடு வார்கள். தன்னை பொறுத்தவரையில் இந்த உலகில் இருப்பது இரண்டே ஜாதிதான். பணம் படைத்தவர்கள். பணம் இல்லாத வர்கள். இதை பாட்டிக்கு எப்படி புரிய வைப்பது?

''பெருமாள் போல் வந்து உதவி செய்தான். அவன் மட்டும் இல்லை என்றால்...'' ஜானகியின் குரலில் நடுக்கம் வெளிப்படை யாக தெரிந்தது.

'பாட்டி! அவனுக்கு நான் எப்படி அறிமுகம் என்று ஏதாவது சொன்னாளா?' ஜெயந்தி கேட்க நினைக்கும்போதே சிவராமனும், பிரகாஷும் அந்த அறைக்குள் நுழைந்தார்கள். அந்தப் பேச்சு அத்துடன் நின்று விட்டது.

பிரகாஷ் பிளாஸ்டிக் கூடைநிறைய பழங்களை கொண்டு வந்தான். சிவராமன் கையில் அழகான 'பொகே' இருந்தது. அவர்களைப் பார்த்ததும் ஜானகி முக்காடை சரி செய்து கொண்டே அந்த அறையை விட்டு வெளியேறினாள்.

''எப்படி இருக்கீங்க?'' ஜெயந்தியின் கட்டிலுக்கு அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டே சிவராமன் கேட்டான். பிரகாஷ் முறுவலுடன் குசலம் விசாரித்துவிட்டு மற்றொரு நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

''பரவாயில்லை. இப்பொ கொஞ்சம் தேவலை'' என்றாள் ஜெயந்தி.

''இந்த பூங்கொத்தை எடுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்காக ஸ்பெஷலாக ஆர்டர் கொடுத்தேன்.'' சிவராமன் 'பொகே'வை நீட்டினான்.

''இந்த பழங்களை எல்லாம் சாப்பிட்டு சீக்கிரமாக நலம் அடைய வேண்டும் என்று விரும்புகிறோம்.'' பிரகாஷ் பழக் கூடையை மேஜை மீது ை வத்தான்.



''தாங்க்ஸ்'' என்றாள் ஜெயந்தி.

''இது ரொம்ப அநியாயம். அழகான 'பொகே'யை கொண்டு வந்த எனக்கு தாங்க்ஸ் கிடையாதா?'' சிவராமன் புலம்பினான்.

ஜெயந்தி சிரித்து விட்டாள். பிரகாஷும் நகைத்தான். ராஜசேகர் வீட்டுக்கு வரும் முன்பே இவர்கள் கிளம்பிப் போய் விட்டால் நன்றாக இருக்கும் என்று ஜெயந்திக்கு தோன்றியது. ஆனால் அவர்களுக்கு அந்த எண்ணமே இருப்பதாக தெரிய வில்லை. ஜெயந்தியுடன் பேசுவதுதான் தங்களுடைய வாழ்க்கையின் லட்சியம் என்பதுபோல் சாவகாசமாக உட்கார்ந்து கொண்டு வாய் மூடாமல் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ராஜசேகர் வரவே இல்லை. அவர்கள் ரொம்ப நேரம் இருந்து விட்டு கிளம்பிப் போனார்கள். சிரிக்கச் சிரிக்க அவர்கள் பேசியதை கேட்டபிறகு ஜெயந்தி கொஞ்சம் தெம்பு வந்தாற் போல் இருந்தது. அதிலும் சிவராமனின் பேச்சில் அன்பும், ஒருவிதமான நெருக்கம் இருப்பதை அவளால் உணர முடிந்தது.

# 34

அவர்கள் கிளம்பிப் போன அரைமணி நேரம் கழித்து ராஜசேகர் வீட்டுக்கு வந்தான். ஜெயந்தியின் முகத்தில் மலர்ச்சி இன்னும் மறையும் முன்பே ராஜசேகர் அவள் இருந்த அறைக்குள் வந்தான். இது அவனுடைய படுக்கை அறை. அவனுடைய உடைகள், டிரெஸிங் டேபிள் எல்லாம் இந்த அறையில் இருந்தன. இது ஜெயந்திக்கு ரொம்ப இடைஞ்சலாக இருந்தது.

''மாத்திரை போட்டுக் கொண்டாயா?'' வரும்போதே கேட்டான்.

''இன்னும் இல்லை.'' சுவற்றில் இருந்த கடியாரத்தை பார்த்துக் கொண்டே சொன்னாள்.

''ஏன் போட்டுக் கொள்ளவில்லை?'' டிரெஸிங் டேபிள் அருகில் சென்று தலையை வாரிக்கொண்டே கேட்டான். அப்பொழுதுதான் ஷவர்பாத் எடுத்துக் கொண்டு இருப்பான் போலும், தலைமுடியில் ஈரம் தென்பட்டது.

''மறந்து விட்டேன். பாட்டியும் நினைவு படுத்தவில்லை.''

''பேச்சில் ஆழ்ந்துவிட்டேன் என்று சொல்லேன். மருந்து சாப்பிடுவதை கூட மறந்து போகும் அளவுக்கு பொழுது போச்சு போலும்.''

ஜெயந்தி திடுக்கிட்டாள். சிவராமன், பிரகாஷ் வந்து விட்டு போனது தெரிந்திருக்குமோ? தன்னைப் பார்க்க பிரகாஷ் வந்ததில் ஏற்பட்ட கோபம்தான் அவன் குரலில் வெளிப்பட்டதோ?

ராஜசேகர் மாத்திரையை எடுத்து வந்து கொடுத்தான். ஜெயந்தி மாத்திரையை போட்டுக் கொண்டாள். ராஜசேகரின் பார்வை மலர்கொத்தின் மீது விழுந்தது.

''சிவராமன் கொண்டு வந்தான்.'' அவன் பார்வையை கவனித்து பூங்கொத்தை கையில் எடுத்துக் கொண்டே சொன்னாள். ''குழந்தைகளை, வயதானவர்களை, நோயாளிகளை பார்க்க போகும் போது வெறும் கையுடன் போகக்கூடாதாமே.''

''ஓஹோ! இதையும் சிவராமன்தான் சொன்னானா?''

அவன் குரலில் தென்பட்ட மாறுபாட்டை உணர்ந்த ஜெயந்தி மௌனமாக இருந்தாள்.

ராஜசேகர் அந்த அறையை விட்டு வெளியேறினான். ஜெயந்திக்கு அவனுடைய பேச்சு, நடவடிக்கை எல்லாமே புதுமையாக இருந்தது. முதலில் இந்த அறையை விட்டு வேறு அறைக்கு மாறவேண்டும். பிறகு கூடிய சீக்கிரம் தங்கள் வீட்டுக்கு போய்விடவேண்டும். தன்னை வீட்டுக்கு அழைத்து வந்து ஆதரவு தரும் அளவுக்கு ராஜசேகருக்கு என்ன அக்கறை? ரேகா, மிஸெஸ் கருணாகரன் இவர்கள் எல்லோரும் எங்கே போய் விட்டார்கள்? அவர்களைப் பற்றி நினைவுக்கு வந்ததும் ராஜசேகரிடம் கொஞ்ச நஞ்சம் ஏற்பட்ட நன்றி உணர்ச்சி ஆவியாக மறைந்துவிட்டது.



அன்று தான் பார்த்த காட்சியை வெளியில் சொல்லி விடுவாளோ என்ற பயத்தில் ராஜசேகர் தன்னை அக்கறையாக கவனித்துக் கொள்கிறானோ? இந்தக் காலத்தில் யாரை நம்பமுடிகிறது? பாட்டியை ஏமாற்றுவது ரொம்ப சுலபம். இதில் கட்டாயம் ஏதோ விஷயம் மறைந்திருக்க வேண்டும். இல்லா விட்டால் ரேகா போன்றவர்கள் தான் இங்கே இருப்பது தெரிந்தும் சும்மா இருப்பார்களா? சிவராமன், பிரகாஷுடன் பேசிய பிறகு ஏற்பட்ட தெம்பும், மகிழ்ச்சியும் காணாமல் போய்விட்டன.

சிவராமன் கொடுத்த பூங்கொத்தை இரண்டு கையாலும் பிடித்துக் கொண்டு அப்படியே தூங்கிவிட்டாள்.

ரொம்ப நேரம் கழித்து நல்ல உறக்கத்தில் இருந்த போது யாரோ வலுக்கட்டாயமாக எழுப்பிவிட்டதால் விழிப்பு வந்தது.

''எழுந்துகொள் மாத்திரையை சாப்பிடு.'' ராஜசேகர் சொன்னான்.

''வேண்டாம் தூக்கம் வருகிறது.'' தூக்கக் கலக்கத்துடன் சொன்னாள் ஜெயந்தி.

''ஒரே நிமிடம் கண்களைத் திறந்து பாரு.'' ராஜசேகர் கட்டில் மீது அமர்ந்து கொண்டு வலுக்கட்டாயமாக அவளை எழுப்பி மாத்திரையை வாயில் போட்டான். மாத்திரையின் கசப்புச் சுவை நாக்கில் பட்டதும் ஜெந்திக்கு முழுவதுமாக விழிப்பு வந்து விட்டது. ஜெயந்தி மாத்திரையை விழுங்கிய பிறகு டம்ளரை வாங்கி மேஜை மீது வைத்துவிட்டு ஜெயந்தி பக்கம் திரும்பினான். ''இப்போ நன்றாக விழிப்பு வந்து விட்டதா?'' என்றான்.

''ஊம்.''

''அப்போ நான் சொல்வதை நன்றாக கேட்டுக்கொள். உனக்கு வேண்டும் என்றால் இந்த நகரத்தில் இருக்கும் பூக்களை எல்லாம் வரவழைத்து இந்த அறைமுழுவதும் அலங்கரிக்கிறேன். மலர் படுக்கையை வேண்டுமானாலும் ஏற்பாடு செய்கிறேன். ஆனால் இந்த பொக்கேயை கையில் பிடித்துக்கொண்டு அதுதான்

உன் உயிர் என்பதுபோல் அப்படியே தாங்குவதை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை. உனக்கு பூக்கள் பிடிக்கும் என்றால் என்னிடமே சொல்வதற்கு என்ன?'' என்று சொன்னவன் ஜெயந்தியின் கையில் இருந்த பூங்கொத்தை எடுத்து அறையின் மூலையில் வீசினான்.

ஜெயந்தி கண் இமைக்காமல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நான் சொன்னது காதில் விழுந்ததா? இதை நீ பொறாமை என்று நினைத்துக் கொண்டாலும் சரி.'' மெதுவாக பின்னால் சாய்த்து படுக்கவைத்தான். அவன் முகத்தில் தென்பட்ட பாவம் புரியாவிட்டாலும் ஜெயந்தியின் மனதில் ஏதோ ஒரு மூலையில் மகிழ்ச்சி தோன்றியது. அன்பு கலந்த அதிகாரத்தில் இவ்வளவு இனிமை இருக்கும் போலும்.

ஜெயந்தி கண்களைத் திறந்து பார்த்துக் கொண்டிருந்தபோதே ராஜசேகர் விளக்கை அணைத்து விட்டான்.

''பாட்டீ எங்கே?'' இருட்டில் பார்த்துக் கொண்டே கேட்டாள். நள்ளிரவில் தன்னை எழுப்பி மாத்திரை கொடுக்க வேண்டிய அவசியம் அவனுக்கு என்ன வந்தது? பாட்டிக்கு என்னவாகி விட்டது?

''தூங்கிக்கொண்டு இருக்கிறாள்.'' இருட்டில் அவன் குரல் ஒலித்தது. அதற்குப் பிறகு அவன் எதுவும் பேசவில்லை. ஜெயந்திக்கு ரொம்ப நேரம் உறக்கம் வரவில்லை.

# 35

மறுநாள் காலையில் அவன் உடைகளை மாற்றிக்கொண்டு வெளியில் கிளம்பும் முன் ஜெயந்தி இருந்த அறைக்கு வந்தான். பீரோவைத் திறந்து ஏதோ தஸ்தாவேஜுகளை எடுத்துக் கொண்டிருந்தான்.



''நாங்க வீட்டுக்கு போகிறோம்'' என்றாள் ஜெயந்தி. இரவு ரொம்ப நேரம் தூக்கம் வராமல் யோசித்து யோசித்து இந்த முடிவுக்கு வந்திருந்தாள்.

''எந்த வீட்டுக்கு?''

ஜெயந்தி உடனே பதில் சொல்லவில்லை.

அவன் தஸ்தாவேஜுகளை சரிபார்த்துக்கொண்டு நின்றிருந்தான்.

சற்று நேரம் கழித்து ''எங்க வீட்டுக்கு. ஜுரம்தான் குறைந்து விட்டதே'' என்றாள்.

''அதை சொல்லவேண்டியது நீ இல்லை டாக்டர். அது மட்டுமே இல்லை. உன் சம்மதம் கேட்டு நான் இங்கே அழைத்து வரவில்லை, நீ கேட்டதும் உடனே அனுப்பிவிடுவதற்கு. அனாவசியமாக யோசித்து தலைவலியை வரவழைத்துக் கொண்டுதான் தீருவேன் என்று பிடிவாதம் பிடித்தால் எனக்கு ஆட்சேபனை இல்லை. வருகிறேன், வேலையிருக்கு.'' ஜெயந்தியின் பக்கம் திரும்பிக்கூட பார்க்காமல் வெளியில் சென்றுவிட்டான்.

ஜெயந்திக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது.

''ஜெயா! சாப்பாடு இங்கே எடுத்துக்கிட்டு வரட்டுமா?'' கேட்டுக்கொண்டே ஜானகி உள்ளே வந்தாள்.

''பாட்டீ! இன்னும் எத்தனை நாட்களுக்கு நாம் இந்த வீட்டில் இருக்கணும்?''

''என்ன நடந்தது ஜெயந்தீ? ஏன் இப்படி கேட்கிறாய்?'' எதிர்பாராத இந்த கேள்வியால் வியப்படைந்தாள் ஜானகி.

''பாட்டீ! உண்மையைச் சொல்லு. அவன் உனக்கு என்ன வசிய மந்திரம் போட்டான்? உன் மனதில் என்னதான் நினைத்துக் கொண்டு இருக்கிறாய்?'' ஜெயந்தியின் கண்களில் கோபம் வெளிப்பட்டது.

''ஜெயா! என்ன வார்த்தை சொல்லி விட்டாய்? நமக்கு இந்த அளவுக்கு உதவி செய்தவனை இப்படியா சொல்வது?''

''அதற்காக இங்கேயே டேரா போட்டுவிடுவதா? மற்றவர்க என்ன நினைத்துக் கொள்வார்கள்?''

''எது சரி எது சரியில்லை என்று அவனுக்குத் தெரியாதா?''

''அதைத்தான் நானும் சொல்கிறேன். என்னால் இந் வீட்டில் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது. நீ வேண்டுமானா இங்கேயே இரு- நான் போகிறேன்.''

''நன்றாக இருக்கு நீ சொல்வது. கொஞ்சம் தெம்பு வந் விட்டது போலிருக்கு. அதுதான் இப்படி எள்ளும் கொள்ளு வெடிப்பது போல் பேசுகிறாய். வீட்டுக்கு போனாலும் மற்றவ களின் உதவியை எதிர்பார்த்துதானே ஆகணும். ஜானகி சொ னாள்.

''அதற்காக இங்கேயே இருந்து விடுவதா? பாட்டி! உனக் ஒன்றுமே தெரியாது. நம்ப வீட்டுக்கு போய்விடலாம். எனக் இந்த வீட்டில் இருப்பு கொள்ளவில்லை.'' ஜெயந்தி அழ தொடங்கினாள்.

ஜானகி சட்டென்று அருகில் வந்து பேத்தியை அணைத்து கொண்டாள். ''அழாதே ஜெயா! நீ சொன்னது போலவே செய்வோம். மறுபடியும் ஜுரம் வந்துவிட்டால் கஷ்டம். என் பேச்சை கேளும்மா.'' சமாதானப்படுத்துவது போல் சொன்னாள்.

சற்று நேரம் கழித்து ஜெயந்தி கண்களைத் துடைத்து கொண்டே ''நாம் வீட்டுக்கு போய் விடுவோம். தேவைப்பட்டா நமக்கு உதவி செய்ய சிவராமன் இருக்கிறான்'' என்றாள்.

''யாரு? ஒடிசலா சிவப்பாய் இருக்கானே அவனா? நன்றாக தான் இருக்கு அவன் பத்துநாட்களுக்கு ஒருமுறை உன்னை வந் பார்த்தால் அதிகம்.

''இல்லை பாட்டி. உனக்குத் தெரியாது.அவர்களுக்கு இவரை கண்டால் பயம். அதான் இங்கே அதிகமாக வரமாட்டார்கள்.''

ஜானகியின் கண்களில் சந்தேகம் எட்டிப்பார்த்தது. ''அவ களுக்காக நாம் வீட்டுக்கு போய்விடலாம் என்கிறாயா?''



''ச்சீ...ச்சி...நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை.'' உரையாடல் திசைமாறியதும் ஜெயந்தி தடுமாறினாள்.

''எது எப்படி இருந்தாலும் அவன் செய்த உதவிக்கு வாழ்நாள் முழுவதும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். அவன் மனதை நோகடிப்பதில் எனக்கு விருப்பம் இல்லை. கொஞ்ச நாள் கழித்து நிதானமாக சொல்லி கிளம்பிப் போய்விடலாம். சரிதானே.'' பேத்தியின் தலையை ஆதரவுடன் வருடிக்கொண்டே சொன்னாள் ஜானகி.

மறுநாள் சுமதி வந்தபோது ''இன்னும் இரண்டு மூன்று நாட்களில் வீட்டுக்கு போய்விடுவோம்'' என்றாள் ஜெயந்தி.

''முழுவதுமாக குணம் ஆகாமலேயே?'' சுமதி வியப்புடன் கேட்டாள்.

''ஜுரம்தான் இல்லையே. இன்னும் எத்தனை நாட்களுக்கு இங்கே இருப்பது? எனக்குக் கொஞ்சம்கூட பிடிக்கவில்லை.''

''நீ சொல்வதும் சரிதான். ஆனால் உன் முகத்தில் இன்னும் சோர்வு போகவில்லையே?''

ஜெயந்தியின் வரண்டுபோன இதழ்களில் முறுவல் மலர்ந்தது. ''நன்றாக இருக்கு நீ சொல்வது. நான் மறுபடியும் பழையபடி நடமாடணும் என்றால் ஒரு மாதமாவது பெட் ரெஸ்டில் இருக்க வேண்டும். அத்தனை நாட்கள் இங்கே இருப்பது மரியாதையாக இருக்குமா?''

''ஆனால் இப்போ இருக்கும் சூழ்நிலையில் நீ இந்த இடத்தை விட்டு விட்டு வசதி குறைவாக இருக்கும் இடத்திற்கு போவது நல்லது இல்லை. நீயாக அவன் வீட்டுக்கு வரவில்லையே. ஏன்? அவன் ஏதாவது சொன்னானா?''

''இல்லை இல்லை. எனக்குத்தான் விருப்பம் இல்லை.''

இருவருக்கும் இடையில் மௌனம் நிலவியது.

''சுமதி! கூடிய சீக்கிரம் அந்த டீச்சர் வேலையில் சேர்ந்து விட்டால் நல்லது. இல்லையென்றால் அந்த வேலைக்கு வேறு ஆளைபோட்டுவிட மாட்டார்களா?''

"அதுதான் உன் பயமா? அதைச் சொல்லேன். அந்த இடத்திற்கு வேறு ஆளை எப்போதோ போட்டு விட்டார்கள். உனக்கு ஆபரேஷன் ஆன நாலாவது நாள் அந்த ஹெட்பிஸ்ட் ரெஸ் எங்க வீட்டுக்கு ஆளை அனுப்பியிருந்தாள். நீ எப்போ வேலையில் சேரப் போகிறாய் என்று தெரிந்து கொள்ள. உனக்கு ஆபரேஷன் ஆகியிருப்பதாகவும், ஆஸ்பத்திரியில் இருப்பதாகவும் சொல்லி அனுப்பினேன்."

"அப்போ அந்த இடத்திற்கு வேறு ஆளை போட்டிருப் பார்கள் என்கிறாயா?"

"அதில் சந்தேகம் என்ன? அப்படியே அந்த வேலை காலியாக இருந்தாலும் நீ இப்போ இருக்கும் நிலையில் சேர்ந் திருக்க முடியுமா? நீயே சொல்லு."

ஜெயந்தி பெருமூச்சு விட்டாள்.

"உடம்பு கொஞ்சம் தேறும் வரையில் நீ இங்கேயே இருப்பதுதான் நல்லது. வீட்டுக்கு போனாலும் குடும்பத்தை எப்படி சமாளிப்பது?"

"இந்த வேலையில் சேர்ந்தது முதல் கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து வைத்த பணம் இருக்கு."

"எவ்வளவு இருக்கும்? மிஞ்சிப் போனால் ஆயிரமோ இரண்டாயிரமோ. அதை வைத்துக்கொண்டு என்ன செய்வது? வேண்டாததை யோசித்து மனதை பாழாக்கிக் கொள்ளாதே. உடல் நலம் தேறும் வரையில் இங்கேயே இரு."

"எனக்கு இங்கே இருப்பே கொள்ளவில்லை."

"காரணம்?"

"இதுதான் காரணம் என்று குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை. இந்த வீட்டில் நிம்மதி இல்லை."

"நிம்மதி வீட்டில் இருக்கு. உன் மனதில்தான் இல்லை." சுமதி சொன்னாள்.



ஜெயந்தி பதில் சொல்லவில்லை. ரொம்ப நேரம் யோசித்துக் கொண்டு இருந்தாள். சுமதி போகும்முன் மற்றொருமுறை யோசித்து பார்க்கச் சொல்லி ஜெயந்தியை எச்சரித்துவிட்டுச் சென்றாள்.

யதேச்சையாக சமையல் அறை பக்கம் வந்த ஜெயந்தி அங்கே தென்பட்ட காட்சியை பார்த்து வியப்படைந்துவிட்டாள்.

உணவு மேஜையை எடுத்துவிட்டு அந்த இடத்தில் தரையில் மணை போடப்பட்டு இருந்தது. ராஜசேகர் மணைமீது அமர்ந்து உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஜானகி அவனுக்கு எதிரில் உட்கார்ந்தபடி பரிமாறிக் கொண்டு இருந்தாள்.

ராஜசேகர் எதற்காகவோ விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தான். ஜானகியின் முகத்திலும் மகிழ்ச்சி தெரிந்தது.

"ரொம்ப சிரிக்காதே. புரை ஏறப்போகிறது. அந்த பட்டிக் காட்டில் இது போன்று எத்தனையோ செய்திகள். கேட்க ஆள் இருக்கணுமே தவிர ராமாயணம் போல் தினமும் ஒரு கதையாக சொல்லிக் கொண்டே போகலாம்." தயிரை பரிமாறிக்கொண்டே சொன்னாள்.

"உனக்கு ஓய்வு இருக்கும் போதெல்லாம் எனக்கு அந்த கதைகளை எல்லாம் சொல்லணும். சரிதானே." ராஜசேகர் சொல்லிக் கொண்டு இருந்தான்.

தான் காண்பது கனவா இல்லை நினைவா என்று ஜெயந் திக்கு புரியவில்லை. பாட்டி ராஜசேகரை ஒருமையில் விளித்துக் கொண்டிருந்தாள். வயதில் சிறியவன் என்பதால் அதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் ராஜசேகர் பாட்டியை ஒருமையில் அழைப் பது நம்பமுடியாததாக இருந்தது. இவ்விருவருக்கும் இடையே இவ்வளவு நெருக்கம் எப்படி ஏற்பட்டது? ராஜசேகரின் போக்கை பார்த்தால் பாட்டியிடம் நல்ல பெயரை வாங்கிவிட்டது போல் தெரிகிறது.

ஜெயந்தி உள்ளே வந்தாள். பேத்தியை பார்த்ததுமே ஜானகியின் முகம் கம்பீரமாக மாறியது.

''சுமதி போய்விட்டாளா?'' ராஜசேகர் கேட்டான்.

ஜெயந்தி அவனுடைய கேள்வியை காதில் வாங்காதது போல் ''பாட்டி! நாயர் என்னவானான்?'' என்றாள் சுவற்றில் சாய்ந்து கொண்டே.

''நான்தான் அவனை போகச் சொல்லி அனுப்பிவிட்டேன்.'' ராஜசேகர் சொன்னான்.

''மேற்பார்வை செய்ய யாருமே இல்லாததால் மளிகை சாமான் எவ்வளவு வேஸ்ட் செய்கிறான் தெரியுமா?'' ஜானகி சொன்னாள்.

''அதை எப்போதும் தடுக்க உன்னால் முடியாதே?'' என்றவள் சற்றுப் பொறுத்து ''போகட்டும் நீ இங்கே இருக்கும் சில நாட்களுக்காவது வேஸ்ட் ஆவதை தடுப்பதோடு, அவனுக்குக் கொடுக்கும் சம்பளமும் மிச்சப்படும். நீ இங்கே சாப்பிடும் சாப்பாட்டுக்கும் கடன் தீர்ந்துவிடும்'' என்றாள்.

''என்ன ஜெயா? என்ன வார்த்தை சொல்லிவிட்டாய்'' ஜானகி நொந்துகொண்டாள்.

ராஜசேகரின் முகத்தில் சிரிப்பு மறைந்து கம்பீரம் குடி கொண்டது. ஜெயந்தியை தீட்சண்யமாக பார்த்தவன் ''பாட்டியின் சாப்பாட்டுக் கடன் தீர்ந்துவிடும்வ சரிதான்! ஆனால் உனக்காக இவ்வளவு செலவு செய்திருக்கிறேன். அதை எப்படி வசூல் செய்வது என்றுதான் எனக்குத் தெரியவில்லை'' என்றான்.

''அந்தக் கடன் மேலும் வளராமல் இருக்க வேண்டும் என்றால் எங்களை சீக்கிரமாக வீட்டுக்கு அனுப்பிவிடுவது நல்லது.''

''செலவு செய்ததை வட்டியுடன் வசூல் செய்யாமல் எப்படி போகவிடுவேன்?'' உண்டு முடித்து தட்டில் கையை அலம்பிக் கொண்டான்.

''அப்படி என்றால் ங்களுடைய எண்ணம்?''



''நீதான் மேதாவியாச்சே இத்தனை புரிந்துகொண்ட உன்னால் அதை புரிந்து கொள்ள முடியவில்லையா? விளக்கமாக சொல்கிறேன். கேட்டுக்கொள். சில நாட்களாகவே உன்னுடைய போக்கை கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். முழுவதுமாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்காவது உன்னை நான் புரிந்து கொண்டுதான் இருக்கிறேன். உன்னுடைய அழகைப் பார்த்து அடிமையாகி உன்னை சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும் என்று நான் திட்டம் போடுவதாக எண்ணி வருகிறாய். அப்படித்தானே. நான் நினைத்தால் உன்னைவிட அழகானவர்களை ஆயிரம் பேரை என்னால் வீழ்த்த முடியும். நான் யோசிப்பது பாட்டியைப் பற்றி. அவளுடைய உடல் நிலை சரியில்லை. வேண்டாத யோசனைகளுடன் அவளையும் வருந்தச் செய்ய நான் என்றும் உன்னைப் போல் முட்டாள் இல்லை.''

முகத்தில் அனல்காற்று அடித்தாற்போல் வெளிப்பட்ட இந்தச் சொற்களுக்கு முதலில் ஜெயந்தி திகைத்துப் போய் விட்டாள். உடனே சமாளித்துக் கொண்டு ஏதோ சொல்லப் போனாள். ஆனால் ராஜசேகர் அதற்கு வாய்ப்பு தராமல் ''பாட்டியைப் பற்றி பேச எனக்கும் உரிமை இருக்கிறது. அவள் எனக்கு வேற்று மனுஷி இல்லை'' என்றான்.

''ச்சீ... ச்சீ... இப்படிச் செய்ய வெட்கமாக இல்லை. பாட்டியின் அறியாமையை, அப்பாவித்தனத்தை இந்த விதமாக பயன்படுத்த.''

''ஜெயந்தீ!'' எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஜானகி தடுப்பது போல் சொன்னாள்.

ராஜசேகரின் முகம் கன்றி சிவந்துவிட்டது. உடனே சமாளித்துக் கொண்டு ''போகட்டும் அப்படியே நினைத்துக்கொள்'' என்றான். அறையைவிட்டு வெளியே போகப் போனவன் நின்று ''அதனால் உனக்கு லாபமே தவிர நஷ்டம் ஏற்படாது என்று உறுதிமொழி தருகிறேன். போதுமா'' என்று சொல்லிவிட்டு வெளியேறினான்.

''ஜெயா! அவன் நமக்கு வேண்டியவன்தான் என்று சொன்னேனே.'' ஜானகி அருகில் வந்தாள்.

''நீ சும்மா இரு பாட்டி. இதற்கெல்லாம் உன்னுடைய அப்பாவித்தனம்தான் காரணம். உன்னுடைய சப்போர்ட் இருப்பதால்தான் வாய்க்கு வந்தபடி பேசுகிறான்.'' ஜெயந்தியின் விழிகள் கோபத்தால் சிவந்து விட்டன. ''இப்போதே சொல்லிவிட்டேன். இந்த வீட்டில் இனி ஒரு நிமிடம்கூட இருக்க மாட்டேன். போகிறோம் என்று நீயே அவனிடம் சொல்லிவிடு'' என்றாள்.

''அது இல்லை ஜெயா.''

''இந்த விஷயத்தில் நான் யாருடைய பேச்சையும் கேட்பதாக இல்லை.'' படபடவென்று மொழிந்துவிட்டு அதே வேகத்தில் அறைக்கு வந்து கட்டில் மீது சரிந்தாள்.

''ச்சீ... ச்சீ... உலகில் எந்தப் பெண்ணுக்காவது இதைவிட அவமானம் நேர்ந்திருக்குமா? தான் உலக அழகியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் நிச்சயமாக குரூபியில்லையே? பாட்டி இல்லாமல் தன்னால் எதுவும் செய்ய முடியாது என்று நன்றாக புரிந்துகொண்டு பாட்டியை தன்பக்கம் இழுத்துக் கொண்டு விட்டான். இது திட்டம் போட்டு செய்த காரியம் இல்லாமல் வேறு என்ன? மேலும் அவனுக்கு தன்னிடம் எந்த ஈர்ப்பும் இல்லையாம்! அவன் நினைத்தால் ஆயிரம்பேர் வந்து காலடியில் விழுவார்களாம். எவ்வளவு ஆணவம்! அவன் பார்வையில் ரேகா, பரிமளா போன்றவர்கள்தான் அழகிகள் போலும்.

கட்டில் மீது தலையணையில் சாய்ந்தவாறு யோசித்துக் கொண்டிருந்த ஜெயந்தி அறைக்குள் ராஜசேகர் வந்த சத்தம் கேட்டு திடுக்கிட்டாள்.

''பயப்படாதே. நான் ஒன்றும் உன்னை விழுங்கிவிட மாட்டேன்'' என்றான் பீரோவை திறந்து கொண்டே.

''நான் ஒன்றும் பயப்படவில்லை. யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.''



பீரோவைத் திறந்து பார்த்தான். அந்தப் பார்வையில் குறும்புத்தனம் தென்பட்டது.

''ஓஹோ! அப்போ தூக்கிவாரிப் போடுவானேன்?''

''வேறு நினைவில் இருக்கும் போது எதிர்பாராதவிதமாக சத்தம் ஏதாவது கேட்டால் உடம்பு தானாக தூக்கிப் போடுவது இயல்பு.''

''அப்படியா. இந்த விஷயம் இதுவரையில் எனக்குத் தெரியாது'' என்றான்.

ஜெயந்தி பார்த்துக் கொண்டிருந்த போதே பணத்தை எடுத்து சட்டைப் பையில் வைத்துக்கொண்டு சூட்கேஸை பூட்டினான்.

''ஊருக்கு போகிறேன். வீடு பத்திரம். நாயர்கூட இல்லை.'' சாவிக்கொத்தை ஜெயந்தியின் கட்டில் மீது வீசிக்கொண்டே சொன்னான்.

''நாளை காலையில் நாங்க வீட்டுக்கு போவதாக இருக்கிறோம். உங்க வீட்டின் பொறுப்பை வேறு யாரிடமாவது ஒப்படைப்பது நல்லது.'' அவன் பக்கம் திரும்பாமலேயே சொன்னாள்.

''அப்படி என்றால் சரி.'' சாவிக்கொத்தை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினான்.

திடீரென்று ஜெயந்தியை சோர்வு ஆட்கொண்டது. எந்த ஊருக்கு போகிறான்? திரும்பிவர எத்தனை நாளாகும்? எதுவும் சொல்லவில்லை. நாலைந்து நாட்களில் திரும்பி விடுவான் என்றால் அதுவரையில் இங்கே இருப்பதில் தனக்கு ஆட்சேபனை இல்லை.

உள்ளே வரும் போது மலர்ந்த முகத்துடன் வந்தவன் திரும்பிப் போகும் போது கம்பீரமான முகத்துடன் சென்றதை ஜெயந்தி கவனிக்காமல் இல்லை.

ராஜசேகர் ஊருக்கு போயிருக்கும் இந்த நேரத்தில் வீட்டை விட்டு வெளியேற பாட்டி சம்மதிக்க மாட்டாளோ என்று தோன்றியது.

ஜானகியும் அதைத்தான் சொன்னாள்.

"நான்கு நாட்களில் வந்து விடுவதாக சொல்லி விட்டு போயிருக்கிறான். இத்தனை நாட்கள் இருந்துவிட்டு இப்போ அவசரப்பட்டால் சரியாக இருக்குமா? அதிலும் அவன் நமக்கு இந்த அளவுக்கு உதவி செய்திருக்கும்போது.

"பாட்டி! போதும் இந்தப் பேச்சு. கேட்டுக் கேட்டு காது புளித்துப் போய்விட்டது." கோபமாக சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றாள். அவள் மறுத்த சாவிக் கொத்து ஜானகியின் புடவைத் தலைப்பில் முடிச்சு போடப்பட்டு தொங்கிக் கொண்டிருந்தது.

## 36

ராஜசேகர் ஊருக்குச் சென்று இருபது நாட்களுக்கு மேலாகி விட்டன. ஆளும் வரவில்லை. கடிதமும் எழுதவில்லை.

"உன் பிடிவாதத்தை அடக்கணும்னுதான் இப்படி வராமல் இருந்து விட்டானோ என்னவோ." சுமதி சொன்னாள்.

"உனக்கு மூளையே இல்லை." ஜெயந்தி கடிந்து கொண்டாள்.

ராஜசேகர் பற்றி எந்த செய்தியும் தெரியாததால் ஜானகி கவலைப்படத் தொடங்கினாள். "நான்கு நாட்களில் வந்து விடுவதாக சொல்லிவிட்டு போனான். இருபது நாட்களுக்கு மேல் ஆகிறது. எப்படி இருக்கிறானோ என்னவோ" என்று புலம்பினாள்.

"பாட்டி! இப்படி நாட்கணக்காய் வெளியூரில் தங்குவது அவருக்கு வழக்கம்தான்." ஜெயந்தி எரிச்சலுடன் சொன்னாள்.



மேலுக்கு அப்படிச் சொன்னாளே தவிர அவனுக்கு என்னவாகி இருக்குமோ, குறைந்த பட்சம் கடிதம்கூட போடவில்லையே என்று உள்ளூர கவலையாகத்தான் இருந்தது.

ஒருக்கால் சுமதி சொன்னது உண்மையாக இருக்குமோ. அவன் கிளம்பும் நாளன்று நடந்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. அன்றுதான் பேசிய பேச்சுக்கு தன்மீது கோபம் வந்திருக்குமோ, தனக்கென்ன தெரியும் அவன் ஊருக்கு போகப் போகிறான் என்று. அவன் தன்னை அலட்சியப் படுத்துவது போல் பேசுவானேன்? கொஞ்சம் அன்பாக, அனுசரணையாக பேசியிருந்தால் தானும் நயமாக பேசியிருப்பாள்.

நாட்கள் வேகமாக கழிந்து கொண்டிருந்தன. சிவராமன் அடிக்கடிவந்து போய்க்கொண்டிருந்தான். சில சமயம் பிரகாஷும் கூட வருவான். வரும் போதெல்லாம் பழம், பூ என்று ஏதாவது கொண்டு வருவார்கள். அவர்கள் இருந்தால் நேரம் போவதே தெரியாது. ஜானகிக்கும் சிவராமனின் கலகலப்பான பேச்சு பிடித்துப் போய்விட்டது.

ஜானகியும், கமலாவும் நெருங்கிபழக ஆரம்பித்தார்கள், ஒரு நாள் கமலா வந்தபோது சுமதியும் இருந்தாள். கமலா ஜெயந்தியின் கல்யாண பேச்சை எடுத்தாள்.

"எனக்குத் தெரிந்த பையன் ஒருத்தன் இருக்கிறான். அவன் மட்டும் ஒப்புக் கொண்டால் ஜெயந்தியின் திருமணத்தை எங்கள் கையால் நடத்த வேண்டும் என்று நானும் டாக்டரும் விரும்புகிறோம்" என்றாள்.

"பையன் யாரு? என்ன செய்கிறான்?" ஜானகி ஆர்வத்துடன் கேட்டாள்.

"முதலில் அவனுடைய அபிப்பிராயம் தெரிந்துகொண்ட பிறகு எல்லா விவரங்களையும் சொல்கிறேன்."

"அதை சீக்கிரமாக செய்யுங்களேன். ஜெயந்தியின் திருமணம் முடிந்த விட்டால் இனி நான் எங்கே இருந்தாலும் நிம்மதியாக

இருப்பேன்.'' பேத்தியின் பக்கம் பார்த்துக் கொண்டே சொன்னாள் ஜானகி.

ஜெயந்தி அந்த பேச்சு பிடிக்காதது போல் சட்டென்று எழுந்து கொண்டாள். ''வா சுமதி! இன்றைய தபாலில் புது பத்திரிகைகள் வந்திருக்கு. ஸ்வெட்டர் பின்னுவதில் புதுடிசைன்கள் போட்டிருக்கிறார்கள். உள்ளே வா, காட்டுகிறேன்'' என்றாள்.

'அப்புறமாய் பார்த்துக் கொண்டால் போச்சு.'' சுமதி கமலாவின் பக்கம் திரும்பினாள். ''சொல்லுங்க மாமி, பையன் எப்படி இருப்பான்? ஜெயந்திக்கு இணையாக இருப்பானா?'' என்று கேட்டாள்.

''இருவருக்கும் ஜோடிப் பொருத்தம் ரொம்ப நன்றாக இருக்கும். அவ்வளவு அழகான ஜோடியை உலகில் எங்கேயும் பார்த்திருக்க மாட்டாய்.'' இதழ்களில் முறுவல் மலர அந்த அம்மாள் ஜெயந்தியின் பக்கம் பார்த்தாள்.

''சுமதி! இப்போ நீ வரப்போகிறாயா இல்லை நான் போகட்டுமா?'' ஜெயந்தி குரலை உயர்த்தினாள்.

'கொஞ்சம் இரு. மாமி! சொல்லுங்களேன் பையன் என்ன படித்திருக்கிறான்?''

''பெரிய படிப்பு, பண்பும், குணமும் நிறைந்தவன்.''

''சுமதி!'' ஜெயந்தி மற்றொருமுறை அழைத்தாள்.

சுமதி அந்த அழைப்பை பொருட்படுத்தவில்லை. ''வேலையில் இருக்கிறானா?'' என்று கேட்டாள்.

''வேலை எதுவும் பார்க்கவில்லை, ஆனால் பணத்தை எப்படி சம்பாதிப்பது என்று அவனுக்குத் தெரிந்த அளவுக்கு வேறு யாருக்கும் தெரியாது.''

ஜெயந்தி விடு விடுவென்று வந்து சுமதியின் தோளைப் பற்றி அடுத்த அறைக்கு இழுத்துச் சென்றாள். சுமதி பின்னால் திரும்பி ''அம்புறமாக விவரங்களை கேட்டுக் கொள்கிறேன் மாமி'' என்று முறுவலுடன் சொல்லிவிட்டு போனாள்.



ஹாலை விட்டு வெளியே வந்ததும் ''இப்போ அந்த டிசைன்களை பார்க்கவில்லை என்றால் குடிமூழ்கிப் போய்விடுமா என்ன?'' பொய்க் கோபத்துடன் கேட்டாள் சுமதி.

''அந்த மாமி சொல்வதை கேட்கவில்லை என்றால் உனக்கு தூக்கம் வராது போலிருக்கு.''

''ஆமாம். தூக்கமே வராது. என் உயிர் சினேகிதி நீ. உனக்கு கணவனாக வரப்போகிறவனை முதலில் நான் பார்த்து ஓ.கே. சொல்லணும். அதை மறந்து விடாதே.''

'கனவில்கூட மறக்க மாட்டேன் தாயே. போதுமா?''

''பாவம் கமலா மாமி. ரொம்ப உற்சாகமாக அந்த வரனைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தாள். கேட்க விடாமல் இழுத்துக் கொண்டு வந்து விட்டாயே?''

''ஆமாம். ரொம்ப நல்ல வரன்தான். வேலை எதுவும் இல்லையாம். ஆனால் பணம் மட்டும் சம்பாதிக்க தெரியுமாம். வட்டி வியாபாரியாகத்தான் இருப்பான்.''

''அது போகட்டும். உனக்கு எப்படிப் பட்டவன் வேண்டுமோ நீயே சொல்லு.''

''நான் திருமணம் செய்து கொள்ளப்போவதில்லை.''

''ஏன்? வாழ்நாள் முழுவதும் மிஸ்ஸியம்மாவாகி இருக்கப் போகிறாயா?''

''அப்படி இல்லை. உடனே செய்துகொள்ளப் போவதில்லை.''

''இப்படியே பேசிக் கொண்டிருந்தால் உன் தலைமுடி நரைத்துப் போய், கிழவியாகி விடுவாய். முதிர்கன்னியை திருமணம் செய்துகொள்ள எவனும் முன்வரமாட்டான். இந்தக் காலத்தில் நிறைய பெண்களின் நிலைமை இதுதான்.''

''முன்பின் தெரியாதவனை திருமணம் செய்துகொண்டு கஷ்டப்படுவதைவிட கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பதே

நல்லது. சுமதி! நான் சீரியஸாக சொல்கிறேன். இப்போதைக்கு திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் எனக்கு இல்லை.''

''அப்போ! வாழ்நாள் முழுவதும் ராஜசேகரிடம் செகரெட்ரியாக இருக்க நினைக்கிறாயா?''

''என் உத்தேசம் அது இல்லை. எந்த வேளையில் இந்த வீட்டில் செகரெட்ரியாக காலடி எடுத்து வைத்தேனோ தெரியவில்லை. நான் நினைத்தது எதுவும் நடக்கவில்லை. என் வாழ்க்கை திசை திரும்பி விட்டதுபோல் தோன்றுகிறது.''

''அது நல்ல திருப்பம்தான் என்று நான் நினைக்கிறேன்.'' சுமதி பரிகாசம் செய்வது போல் சிரித்தாள்.

''வாயை மூடு. அவன் ஊரிலிருந்து வந்ததும் நாங்க வீட்டுக்கு போய்விடுவோம். அதற்குப் பிறகு அவனுக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இருக்கப் போவதில்லை.''

''முதலில் அவன் உன்னை வாசற்படியை தாண்ட விட்டால் தானே.''

''சுமதி! செகரெட்ரி வேலைக்கு ராஜிநாமா கொடுத்து விட்டேன் என்பதை மறந்துவிட்டு பேசுகிறாய்.''

''நீ கொடுத்தாய். சரிதான், ஆனால் அவன் ஒப்புக் கொண்டதாக தெரியவில்லையே.''

''ஊரிலிருந்து அவன் வந்ததும் நான் ஒரு நிமிடம் கூட இந்த வீட்டில் இருக்கப் போவதில்லை. பார்த்துக் கொண்டே இரு.''

''ஒருக்கால் இருந்தாயானால்?'' சுமதி இரட்டிப்பதுபோல் கேட்டாள். ''என் பெயரை மாற்றிக்கொள்கிறேன்.''

''அது போகட்டும். புது பத்திரிகையில் டிசைன் ஏதோ வந்திருக்கு என்றாயே. எங்கே காட்டு.''

''பத்திரிகையும் இல்லை கத்திரிக்காயும் இல்லை. வேண்டுமானால் பூக்களை பறித்துக் தருகிறேன்.'' பொய்க் கோபத்துடன் சொன்னாள் ஜெயந்தி.



அன்று இரவு படுத்துக் கொள்ளும்போது ஜானகி பேத்தியின் அருகில் வந்தாள். ''கமலா மாமி சொன்ன வரன் நிச்சயமானால் ரொம்ப அதிர்ஷ்டசாலி ஜெயா'' என்றாள் மலர்ந்த முகத்துடன்.

''என்னுடைய அதிர்ஷ்டத்தைப் பற்றி எனக்குத் தெரியும் பாட்டி. இன்னொருத்தர் சொல்ல வேண்டியது இல்லை.'' சொல்லிவிட்டு சுவற்று பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாள் ஜெயந்தி.

★ ★ ★

மேலும் நான்கு நாட்கள் கழிந்தன. சிவராமன் ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அப்பொழுதுதான் கிளம்பிச் சென்றான். ஜெயந்தி ஹால் சோபாவில் அமர்ந்து பத்திரிகையை புரட்டிக் கொண்டிருந்தாள். ஜானகியும் பக்கத்திலேயே இருந்தாள். வாசலில் கார் வந்து நின்ற சத்தம் கேட்டது. ''யார் வந்திருப்பார்கள்?'' ஜானகி கேட்டாள்.

ஜெயந்தியின் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது. அந்த காரின் சத்தம் யாருடையதோ அவளுக்கு நன்றாகவே தெரியும்.

''ராஜசேகர் வந்து விட்டானா என்ன?'' ஜானகி தனக்குத் தானே கேட்டுக்கொண்டே வாசலை நோக்கிச் சென்றாள். அவள் நினைத்தது சரிதான். ராஜசேகர்தான் வந்திருந்தான்.

''என்ன ஆச்சு? இப்படி இளைத்து விட்டாயே?'' பதட்டத்துடன் கேட்டாள் ஜானகி.

ஜெயந்தி சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். பார்த்தவள் திகைத் துப் போய்விட்டாள்.

உண்மையிலேயே ராஜசேகர் ரொம்ப இளைத்து விட்டிருந்தான். ஷேவ் செய்து கொள்ளாததாலோ என்னவோ முகமும் சோர்வாக இருந்தது.

''நீதானா இல்லை வேறு யாரோவா? அடையாளமே தெரியவில்லையே.'' ஜானகி குரலில் தவிப்பு வெளிப்பட்டது.

அங்கே போனதும் ஜுரம் வந்துவிட்டது. உடம்பு முழுக்கும் ஒரே வலி. சாதாரண ஜுரமாய் இருக்கும் என்று நினைத்து அலட்சியமாக இருந்துவிட்டேன். பிறகுதான் தெரிந்தது ஏதோ வைரல் ஃபீவர் என்று.'' ஆள் இளைத்திருந்தாலும் குரல் மட்டும் கம்பீரமாக இருந்தது.

'அட கடவுளே! ஒரு போனாவது செய்து சொல்லியிருக்கலாம் இல்லையா?'' ஜானகி ஆதங்கத்துடன் கேட்டாள்.

''சொல்லியிருந்தால் மட்டும் என்ன செய்திருப்பீங்க?'' என்றவன் மாடிக்கு போகும்முன் ஜெயந்தியின் அருகில் ஒரு நிமிடம் நின்று ''உன் ஹெல்த் இப்போ எப்படி இருக்கு?'' என்று கேட்டான்.

''நன்றாகத்தான் இருக்கிறேன்.'' தாழ்வான குரலில் சொன்னாள்.

அன்று அவன் கீழே வரவே இல்லை. பிறகு பாட்டி சொன்னாள், வைரஸ் ஃபீவரால் பம்பாயில் நிறைய பேர் பாதிக்கப்பட்டார்களாம் எந்த மருந்துக்கும் கட்டுப்படாததால் டாக்டர்களே என்ன சிகிச்சை தருவது என்று குழம்பிப் போய் விட்டார்களாம். திடமான உடம்பு என்பதால் ராஜசேகரால் இந்த மட்டும் தாக்கு பிடிக்க முடிந்தது.

இந்த நிலைமையில் வீட்டுக்கு போகிறோம் என்று எப்படி கேட்பது? முதலில் பாட்டி இதற்கு சமாளிப்பாளா? ஜெயந்திக்கு அன்று சுமதியிடம் தான் சவால் விட்டது நினைவுக்கு வந்தது. மனிதனுக்கு தன்னுடைய எண்ணங்கள் மீதுதான் எவ்வளவு நம்பிக்கை! நமக்கு மேலே ஒருவன் இருக்கிறான், அவன் ஆட்டுவித்தபடிதான் நாம் செயல்படுகிறோம் என்பதை மறந்து அதைச் செய்துவிடுவேன். இதைச் சாதிப்பேன் என்று இறுமாப்புடன் சவால் விடுகிறான். கடைசியில் விதியின் கையில் பாவையாகி விடுகிறான்.

ராஜசேகர் உடல்நலம் சீக்கிரமாகவே தேறிவிட்டது. ஜானகி அவனை கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டாள். இந்



நான்கைந்து நாட்களில் ஜெயந்தி ஒருநாள்கூட அவனைச் சந்திக்கவில்லை.

ஒருமுறை அவன் குடிக்க தண்ணீர் கேட்டபோது பாட்டிக்கு பதில் தானே கொண்டுபோனாள்.

''நீ எதுக்குக் கொண்டு வந்தாய்?'' கட்டில் மீது எழுந்து உட்கார்ந்து கொண்டே கேட்டான்.

'ஏன்? நான் கொண்டு வரக்கூடாதா?' என்று கேட்க நினைத்தாலும் அவன் குரலில் தென்பட்ட கோபத்தை உணர்ந்து மௌனமாக இருந்து விட்டாள். பிறகு ''பாட்டிக்கு தெஞ்சுவலி, கீழே அறையில் தூங்குகிறாள்'' என்றாள்.

''அப்படியா'' என்றவன் பக்கத்தில்கிடந்த புத்தகத்தை எடுத்து புரட்டிக் கொண்டிருந்தான். ஜெயந்தி டம்ளரை எடுத்துக் கொண்டு வெளியே வந்துவிட்டாள். ஏனோ தெரியவில்லை அவனுடைய குரலில் அலட்சியம் ஸ்பஷ்டமாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

அன்று இரவு சமையல் செய்வோம் என்று முடிவு செய்து காய்கறி நறுக்க உட்கார்ந்தாள். அப்பொழுது நாயர் உள்ளே வந்தான்.

''நீ எதற்காக வந்தாய்?'' ஜெயந்தி கேட்டாள்.

''வரச்சொல்லி அய்யா தகவல் சொல்லி அனுப்பினார். நீங்க போங்க. நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான்.

ஜெயந்தி மௌனமாக வெளியே வந்துவிட்டாள். தான்செய்த சமையலை சாப்பிட வேண்டிவரும் என்று பயந்து விட்டானோ.

# 37

ராஜசேகர் பழையபடி எழுந்து நடமாட ஆரம்பித்து விட்டான். அவனுடைய வேலைகள் எந்த இடைஞ்சலும்

இல்லாமல் நடந்து கொண்டிருந்தன. ஜானகியின் உடல்நலமும் சற்று தேவலை. ஆனால் நாயர்தான் தொடர்ந்து சமையல் வேலையை கவனித்துக் கொண்டிருந்தான்.

ஒருநாள் சுமதி வந்தபோது ''என்ன? இன்னும் இங்கே இருக்கிறாயே? அவன் ஊரிலிருந்து வந்ததும் பத்துநாட்களாகி விட்டது போலிருக்கே?'' முறுவலை மறைத்துக் கொண்டே கேட்டாள்.

''உனக்கு கண் என்ன குருடா? அவன் எந்த நிலைமையில் வந்தானோ தெரியாதா?'' ஜெயந்தி கோபமாக கேட்டாள்.

''இதுக்கு போய் கோபித்துக் கொள்வானேன்? போகட்டும், இப்பொழுதுதான் அவன் பழையபடி ஆகிவிட்டானே?'' என்றாள் சுமதி.

''ஆமாம். இன்னிக்கோ நாளைக்கோ கேட்டுவிடுகிறேன். காலையில் போனால் இரவுதான் திரும்புகிறான். மதியச் சாப்பாட்டையும் நாயர் ஆபீசுக்கு எடுத்துப் போகிறான். எங்கே கேட்பது சொல்லு.''

''உன் மனதில் இருப்பதை கண்டுபிடித்து விட்டான் போலும். அதான் வாய்ப்பு தராமல் தப்பித்துக் கொண்டு வருகிறான்.''

''அப்படி எதுவும் இருக்காது. நீயாக எதையாவது கற்பனை செய்யாதே.'' வெளியில் மறுத்தாலும் ஜெயந்தியின் மனதில் அப்படியும் இருக்குமோ என்று தோன்றியது.

இரண்டு நாட்கள் தொடர்ந்து முயற்சி செய்த பிறகு மூன்றாவது நாள் ஜெயந்திக்கு ராஜசேகருடன் பேசும் வாய்ப்பு கிடைத்தது. என்ன காரணமோ தெரியவில்லை. அவன் வழக்கம் போல் வெளியில்போக அவசரப்படவில்லை. பத்துமணி ஆன பிறகும் மாடியிலேயே இருந்தான். இதுதான் நல்ல வாய்ப்பு என்று ஜெயந்திக்கு தோன்றியது. பாட்டி பூஜை அறையில் இருந்தாள். குறைந்தது ஒருமணி நேரத்திற்கு வரமாட்டாள். நாயர் சமையல்



அறையில் இருந்தான். வாசு ஏதோ வேலையாக கடைத்தெருவுக்கு போயிருந்தான்.

ஒருகால் ராஜசேகருக்கும் தனக்கும் ஏதாவது வாக்குவாதம் ஏற்பட்டால் யார் காதிலேயும் விழாது.

கொல்லையில் மல்லிகைக் கொடி இருந்தது. பூக்களை பறித்து ஊசியால் கோர்த்து சாமிபடத்திற்கு சார்த்துவது ஜெயந்தியின் தினசரி வாழ்க்கையில் ஒரு பகுதியாகிவிட்டது. அன்றும் வழக்கம் போல் பூக்களை தட்டு நிறைய பறித்துக் கொண்டு வந்தவள் ஊசியால் மாலையை கோர்த்துக் கொண்டிருந்தாள்.

பூக்களை வைத்திருந்த தட்டை அப்படியே கையில் எடுத்துக் கொண்டு மாடிக்கு போனாள். அறையில் ராஜசேகர் கண்ணாடியின் முன்னால் நின்று டையை கட்டிக் கொண்டிருந்தான்.

ஜெயந்தி வருவது கண்ணாடி வழியாய் தெரிந்துகொண்டு தான் இருந்தது.

ஜெயந்தி வாசற்படியிலேயே நின்றுவிட்டாள். அவன் பின்னால் திரும்பவும் இல்லை. ஏன் வந்தாய் என்று கேட்கவும் இல்லை. நிதானமாக டையை கட்டிக் கொண்டிருந்தான்.

ஜெயந்திக்கு உடல் பற்றி எரிவதுபோல் இருந்தது. தட்டில் இருந்த ஊசியை எடுத்து அவன் தோளில் குத்த வேண்டும் என்ற அளவுக்கு கோபம் வந்தது. என்ன ஆச்சு இவனுக்கு? இதற்குமுன் தான் அறிந்த ராஜசேகருக்கும் இவனுக்கும் கொஞ்சம்கூட ஒற்றுமை இல்லை. பாட்டி அவனுடைய பேச்சில் மயங்கி விட்டாள். பாட்டியை தனியாக விட்டு தன்னால் எங்கேயும் போகமுடியாது. இங்கேதான் கிடக்கவேண்டும் என்ற அலட்சிய மனப்பான்மையா?

''உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்'' வேறு வழியில்லாமல் தானே உரையாடலை தொடங்கினாள்.

''என்ன விஷயம்?'' அவன் குரல் கம்பீரமாக இருந்தது.

''எங்க வீட்டுக்கு போய்விடுகிறோம்'' என்றாள்.

''பாட்டி ஒப்புக் கொண்டுவிட்டாளா?''

''பாட்டிக்கு ஆட்சேபனை இல்லை.''

''அது உனக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

''அப்போ இனி ஆட்சேபனை யாருக்கு?'' சலனமற்ற குரலில் சொன்னான்.

ஜெயந்தி தீவி'ரமாக பார்த்தாள். 'இன்று மாலையில் போகப் போகிறோம். அதைச் சொல்லத்தான் வந்தேன்.''

''சரி.'' அந்தச் செய்தியை கேட்பதற்காகவே காத்திருந்தது போல் சொன்னான்.

வந்த வேலை இவ்வளவு சீக்கிரமாக முடிந்துவிடும் என்று ஜெயந்தி கனவில்கூட நினைக்கவில்லை. தான் எவ்வளவு முட்டாளாக இருந்திருக்கிறாள்? சுமதியின் பேச்சை சீரியஸாக எடுத்துக் கொண்டு ஏதேதோ யூகித்துக் கொண்டு விட்டாள். போகட்டும் அதற்காகத்தான் இப்போ வருத்தப்படப் போவதில்லை எப்படியோ இந்த இடத்தைவிட்டு போய் விட்டால் நல்லது. ராஜசேகர் அவ்வளவு அலட்சியமாக பேசிருக்காவிட்டால் கொஞ்சம் திருப்தியாக இருந்திருக்கும்.

பின்னால் திரும்பிப் போகப் போனவள் நின்று ''நீங்க செய்த உதவிக்கு நன்றி'' என்றாள்.

''அது உன் மனதில் இருந்தால் போதும். காலையில் எழுந்தது முதல் எத்தனையோ பேருக்கு எத்தனையோ விதமாக உதவி செய்துகொண்டு இருப்பேன். உன்னிடமிருந்து எதையோ எதிர்பார்த்து நான் இதையெல்லாம் செய்தேன் என்று நினைக்காமல் இருந்தால் நானே உனக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

ஜெயந்தி வாயடைத்துப் போனவளாய் ஒருநிமிடம் அப்படியே நின்றுவிட்டாள். பிறகு 'சரி. வருகிறேன்'' என்று



சொல்லிவிட்டு சட்டென்று திரும்பி படியிறங்கிவிட்டாள். அப்படி திரும்பும் முன் விநாடியில் பாதி நேரம் எதிரே நிலைக் கண்ணாடியில் அவன் உருவம் கண்ணில் பட்டது. அந்த முகத்தில், இதழ்களில் புன்முறுவல் தெளிவாக தென்பட்டது.

ஜெயந்திக்கு கோபமும், ரோஷமும் பொங்கிவந்தன. இனி யாரிடமும் எப்போதும் எந்த உதவியும் பெறக்கூடாது. தன் வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த அனுபவங்களை சிவப்பு மசியால் எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். சூழ்நிலைக்கு அடிமையாகி விட்டால் எதிராளியின் மனதில் இதுபோன்ற அகம்பாவம்தான் தலைதூக்கும்.

யார் எப்படி பேசினால் தனக்கென்ன? மாலை வரையில் காத்திருப்பானேன்? இப்போதே கிளம்பிவிட்டால்! பாட்டியிடம் போய் அவன் இப்படி சொன்னான் என்று சொன்னால் நம்புவாளா? இரு. நானே போய் பேசுகிறேன் என்று கிளம்பி விட்டால் என்ன செய்வது? ஊஹூம் செத்தாலும் அதற்கு வாய்ப்பு தரக்கூடாது.

கீழே வந்த ஜெயந்தி நேராக பூஜை அறையை நோக்கி நடந்தாள். பாட்டியின் பூஜை முடியா விட்டாலும் சரி. அழைத்து இந்த விஷயத்தை சொல்ல வேண்டும். பாட்டி வந்த பிறகு இந்த வீட்டில் பல வருடங்களாக பூட்டிக்கிடந்த பூஜை அறையின் கதவுகள் திறந்து கொண்டன. தினமும் சுவாமிக்கு நைவேத்தியம் கிடைத்துக் கொண்டிருந்தது.

''நான்கு நாட்கள் இருந்துவிட்டு போகப் போகிறோம். இந்த வேலையெல்லாம் இழுத்துப் போட்டுக் கொள்வானேன்?'' ஜெயந்தி ஒருமுறை பாட்டியை கடிந்து கொண்டாள்.

''போகட்டும். எத்தனை நாட்கள் இருக்கிறோமோ அத்தனை நாட்கள் சுவாமிக்கு நைவேத்தியம் கிடைக்கும் ராஜசேகருக்கும் இதில் சந்தோஷம் தானே தவிர வருத்தம் இல்லையே?'' ஜானகி சொன்னாள்.

''பாட்டி! பாட்டி!'' பூஜை அறையை நோக்கி வந்து கொண்டே அழைத்தாள் ஜானகி. உள்ளேயிருந்து ஜானகி பதில்குரல் கொடுக்கவில்லை.

''பாட்டி! அறை வாசலில் நின்றுகொண்டு மற்றொரு முறை அழைத்தாள். உள்ளே இருட்டாக இருந்ததால் எதுவும் தெளிவாக தெரியவில்லை.

''பாட்டி!'' அறையின் உள்ளே காலடி எடுத்து வைத்தவள் சட்டென்று நின்று விட்டாள். உள்ளே ஜானகி ஒரு பக்கமாக சாய்ந்து விழுந்துகிடந்தாள்.

''பாட்டி! என்ன ஆச்சு? மறுபடியும் நெஞ்சுவலி வந்து விட்டதா?'' இரண்டே எட்டில் பாட்டியின் அருகில் சென்றாள். ஜானகி அப்போதும் பதில் சொல்லவில்லை. ஜெயந்தி கையில் இருந்த தட்டை கீழே போட்டுவிட்டு பாட்டியின் தோளைப்பற்றி உலுக்கினாள். ''பேசு பாட்டி! டாக்டருக்கு போன் செய்யட்டுமா?'' என்றாள்.

பாட்டி தரையில் கிடந்த விதம், பதில் சொல்லாமல் இருந்தது ஜெயந்திக்கு பயத்தை ஏற்படுத்தியது. குரலை உயர்த்தி ''பாட்டி! பாட்டி!'' என்று அழைத்தாள்.

''என்ன ஆச்சு?'' சமையல் செய்து கொண்டிருந்த நாயர் ஓடி வந்தான்.

''பாட்டி! பதில் சொல்லு பாட்டி.'' உரத்த குரலில் கத்தினாள்.

''என்ன ஆச்சு? பாட்டியம்மாவுக்கு மறுபடியும் நெஞ்சுவலி வந்துவிட்டதா?''

''ஆமாம். எத்தனை முறை அழைத்தாலும் பதிலே சொல்ல மாட்டேங்கிறாள். நீ அழைத்து பாரு'' என்றாள்.

நாயர் அருகில் வந்தான். ''பாட்டியம்மா! பாட்டியம்மா! அழைத்தான். ஜெயந்தி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.



''அய்யா இருக்காங்களா?'' நாயர் கேட்டான்.

''மாடியில் இருக்காங்க.''

''கொஞ்சம் இருங்க. அழைத்துக்கிட்டு வர்றேன்.'' மறு பேச்சுக்கு வாய்ப்பு தராமல் நாயர் மாடியை நோக்கி ஓட்ட மெடுத்தான்.

ஜெயந்திக்கு தன்னை அறியாமலேயே துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. பாட்டியை பலமாக உலுக்கிக் கொண்டே ''பாட்டி! பேசு பாட்டி. ஊம் என்றாவது சொல்லு. பயமாக இருக்கு பாட்டி.'' அழத் தொடங்கினாள்.

ராஜசேகர் ஓட்டமும் நடையுமாக அந்த இடத்திற்கு வந்தான். காலில் ஷூக்களை அணிந்திருந்தான். கோட் இன்னும் அணிந் திருக்கவில்லை. ஷர்ட் இன் செய்திருந்தான்.

''என்ன ஆச்சு?'' ஷூக்களை கழற்றாமல் அப்படியே உள்ளே வந்தான்.

''பாட்டி பதிலே சொல்ல மாட்டேங்கிறாள்.'' ஜெயந்தி அழுதுகொண்டே சொன்னாள்.

''இரு கொஞ்சம் நகர்ந்துகொள்.'' ஜெயந்தியை நகர்த்திவிட்டு முழங்காலிட்டு அமர்ந்துகொண்டான். பாட்டியின் கையைப் பற்றி நாடியை பரிசீலித்தான். அவன் நெற்றி முடிச்சேறியது.

வேதனை கலந்து பார்வையுடன் ஜெயந்தியை ஒரு முறை நோக்கிவிட்டு நாயர் பக்கம் திரும்பினான். ''நாயர்! டாக்டர் மாதவனை அர்ஜெண்டாக வரச்சொன்னேன் என்று போன் செய்'' என்றான். நாயர் வெளியில் ஓட்டமெடுத்தான்.

டாக்டர் வருவதற்குள் நாயரின் உதவியுடன் பாட்டியை தூக்கி வந்து கட்டில் மீது படுக்கவைத்தான்.

''பாட்டிக்கு என்ன ஆச்சு?'' என்றாள் ஜெயந்தி.

ராஜசேகர் ஜெயந்தியின் கையை தன் கையில் எடுத்துக் கொண்டே ''ஒன்றும் ஆகவில்லை. நீ கவலைப்படாதே'' என்றான்.

திடீரென்று நடந்த இந்த நிகழ்ச்சியினால் ஜெயந்திக்கு மூளை கலங்கி விட்டாற்போல் இருந்தது.

டாக்டர் வந்ததுமே பரிசீலித்து விட்டு "இதென்ன? உயிர் பிரிந்து விட்டதென்று இத்தனை தெளிவாக தெரிகிறதே" என்றார் ராஜசேகரை பார்த்துக் கொண்டே. ராஜசேகர் டாக்டர் பக்கம் பார்க்கவில்லை. ஜெயந்தியை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன டாக்டர்? என்ன சொல்றீங்க?" ஜெயந்தி தடுமாறிக் கொண்டே கேட்டாள்.

"உயிர்போய் ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகியிருக்கும்." டாக்டர் சொன்னார்.

"பொய் சொல்றீங்க. அப்படி இருக்க முடியாது." ஜெயந்தி திடீரென்று பாட்டியை நோக்கி ஓடப்போனாள்.

"ஜெயந்தி!" அதற்காகவே காத்திருந்தது போல் ராஜசேகர் ஓரடி முன்னால் வைத்து ஜெயந்தியின் கையை பலமாக பற்றிக் கொண்டான்.

"விடுங்க...என்னை விடுங்க. நீங்க பொய் சொல்றீங்க." ஜெயந்தி கையை விடுத்துக்கொண்டு பாட்டியின் மீது விழுந்து கதறினாள்.

டாக்டர் வெளியில் வந்துகொண்டே "யார் அவங்க? உறவினரா?" என்று கேட்டார்.

"ஆமாம். எங்க அம்மாவின் சித்தி. சில நாட்களுக்கு முன்தான் தெரியும். அழைத்து வந்து வீட்டில் வைத்துக் கொண்டேன்." ராஜசேகர் சொன்னான்.

"நெருங்கிய உறவுதான். என்ன செய்வது? எல்லோரும் ஒரு நாள் போக வேண்டியவர்கள்தானே." ஆறுதல் சொல்லிவிட்டு டாக்டர் கிளம்பினார்.

டாக்டர் சென்ற பிறகு ராஜசேகர் ஒரு நிமிடம் வராண்டாவிலேயே நின்று விட்டான். உள்ளேயிருந்து ஜெயந்தியின் அழுகைக் குரல் இதயத்தை கசக்கிப் பிழிவதுபோல் கேட்டுக் கொண்டிருந்தது. பாட்டி ஜெயந்தியிடம் விஷயத்தைச் சொல்லி விடுவதாக சொன்னபோது தான் ஏன் தடுத்தான்? எந்த துர்தேவதை தன் நாக்கில் குடிபுகுந்து அந்த வார்த்தையைச் சொல்ல வைத்தது? இப்போ சொன்னால் ஜெயந்தி நம்புவாளா? ஏற்கனவே எதிர்பாராமல் நடந்த ஓரிரு நிகழ்ச்சிகளால் ஜெயந்திக்கு தன் மீது நம்பிக்கை போய்விட்டது. உறவின் வழியாக இல்லாமல் தன்னுடைய தனித்தன்மையினால் அவளை நெருங்க வேண்டும் என்று விரும்பினான்.



ராஜசேகர் உள்ளே வந்தான். பாட்டியின் பிணத்தைப் பார்க்கும் போது அவன் விழிகளில் நீர் சுழன்றது. ஜெயந்திக்கு அந்த உடம்பு மட்டும் வரவில்லை என்றால் இந்த உறவு இருப்பதே தெரிந்திருக்காது. இந்த சில நாட்களில் தாயின் அன்பை, தன் மனிதர்கள் என்ற நெருக்கத்தை அனுபவத்தில் உணர்ந்திருந்தான். ஜெயந்திக்கு விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இனி அவளுடைய பொறுப்பு தன்னுடையது தான்.

"நீ இல்லாமல் இந்த உலகில் நான் எப்படி இருப்பேன் பாட்டீ? என்னால் எப்படி வாழ முடியும்?" ஜெயந்தி பாட்டியின் உடல் மீது விழுந்து ஹோவென்று கதறிக் கொண்டிருந்தாள். யாருடையதோ கைவந்து பலமாக அவள் தோளில் படிந்தது மெதுவாக எழுப்பியது. ஜெயந்தி நிமிர்ந்து பார்த்தாள். ராஜசேகர்! அவன் கண்கள் ஆறுதல் சொல்வதுபோல் கருணை நிறைந்திருந்தன.

"ஜெயந்தி!" அவன் குரலில் வேதனை வெளிப்பட்டது.

"பாட்டியை விட்டு விட்டு என்னால் எப்படி இருக்க முடியும்?" இரு கைகளிலும் முகம் புதைத்துக்கொண்டு ஜெயந்தி அழுதாள்.

"நீ தைரியமாக இருக்கணும் ஜெயந்தி!"

ராஜசேகரின் கரங்கள் ஜெயந்தியின் தலையை மார்போடு அழுத்திக் கொண்டன. எப்படி ஆறுதல் சொல்வது என்று அவனுக்

குத் தெரியவில்லை. ஜெயந்தி வாய்விட்டு அழுதுகொண்டிருந்தாள். அவன் உள்ளூர அழுது கொண்டிருந்தான். அதுதான் வித்தியாசம்.

''இது உண்மையில்லைன்னு சொல்லுங்க. வேறொரு டாக்டரை வரவழைத்து காட்டுங்க.'' ஜெயந்தி விசும்பிக் கொண்டே அவன் மார்போடு மேலும் ஒட்டிக் கொண்டாள்.

ஒரு மணி நேரத்திற்கு முன்பு தன்னை அலட்சியம் செய்கிறான் என்று யாருடைய தோளில் ஊசியால் குத்த நினைத்தாளோ அந்த நபரின் வலிமை மிகுந்த கரங்கள் இப்பொழுது தன்னை அணைத்து ஆறுதல் சொல்வதை ஜெயந்தி உணரவில்லை; உணரும் நிலையில் அவள் இருக்கவில்லை.

## 38

பாட்டியின் இறுதிச் சடங்குகள் ராஜசேகரே சுயமாக செய்தான். ஜானகி இறந்துவிட்டாள் என்ற செய்தி எல்லோருக்கும் அதிர்ச்சியாக இருந்தது. முக்கியமாக வனிதா விஹார் நிறுவனத்தினருக்கு பேரிடியாக இருந்தது. பாட்டியின் மறைவால் வேறு துணையில்லாத சூழ்நிலையில் ஜெயந்தி ராஜசேகருக்கு மேலும் நெருங்கியவள் ஆகிவிடுவாளோ என்ற பயம் ஏற்பட்டது.

''இப்போ என்ன செய்வது?'' மிஸெஸ் கருணாகரன் கேட்டாள்.

''நாம் எல்லோரும் போய் ஜெயந்தியை பார்த்து துக்கம் விசாரித்து விட்டு வருவோம். எப்படியாவது அவளை நம் பக்கம் இழுத்துக் கொள்ளவேண்டும்.'' ரேகா அறிவுரை வழங்கினாள்.

மிஸெஸ் கருணாகரன் இதற்கு சம்மதம் தெரிவித்தாள். அவளுக்கு வேண்டியதெல்லாம் பரிமளாவின் திருமணம் ராஜசேகருடன் நடக்க வேண்டும். இரு குடும்பங்களின் சொத்து ஒன்றாக இணைய வேண்டும். எப்படியாவது இந்த திருமணத்தை முடித்துத் தருவதாக ரேகா உறுதிமொழி அளித்திருந்தாள். ஜெயந்தி ராஜசேகரிடம் செகரெட்ரியாக சேர்ந்திருக்கிறாள் என்று தெரிந்ததுமே மிஸெஸ் கருணாகரன் ரேகாவிடம் ஓடிவந்தாள்.



''கவலையே பட வேண்டாம். சேகருக்கு அந்தப் பெண் மீது இரக்கம் தவிர வேறு எண்ணம் எதுவும் இல்லை. வர்மா வீட்டில் அந்தப் பெண்ணிற்கு ஏற்பட்ட அவமானம் அவனுக்குத் தெரிந்து விட்டது. அந்த கோபத்தில் அவளுக்கு ஆதரவு தரவேண்டும் என்ற எண்ணத்தில் வலிய அவனே அழைத்து வேலை போட்டு கொடுத்திருக்கிறான். அதைப் பற்றி நாம் அவனிடம் பேசினாலோ தட்டிக் கேட்டாலோ மேலும் தூண்டிவிடுவது போல் ஆகிவிடும். அந்தப் பெண் அவனிடம் செகரெட்ரியாக சேர்ந்த விஷயம் நமக்குத் தெரியாதது போல் தெரிந்தாலும், தெரிந்தாலும் கண்டு கொள்ளாதது போல் இருப்பதுதான் நல்லது'' என்றாள் ரேகா.

''அன்னிக்கு அந்தப் பெண் மிஸெஸ் வர்மா வீட்டுக்கு போகாமல் இருந்திருந்தால் எந்த பிரச்சினையும் வந்திருக்காது. நிம்மதியாக வனிதா விஹாரில் செகரெட்ரியாக இருந்திருப்பாள்.'' எரிச்சலுடன் சொன்னாள் மிஸெஸ் கருணாகரன்.

''அந்த விவகாரம் இவ்வளவு தூரத்துக்கு போகும் என்று யாருக்கு தெரியும்? ராஜசேகர் இந்த விஷயத்தில் தலையிடுவான் என்று கனவில்கூட நினைக்கவில்லை.'' ரேகா நீட்டி முழக்கினாள்.

''அது போகட்டும். இப்போ நாம் என்ன செய்யணும்?''

''சொன்னேனே, மெள்ள மெள்ளமாக அந்தப் பெண்ணை நம் பக்கம் இழுத்துக் கொண்டு சேகரின் வீட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும். முதலில் நாளை காலையில் போய் பார்த்து விட்டு வருவோம்.''

''சரி. அப்படியே செய்வோம்.''

மிஸெஸ் கருணாகரனுக்கு ரேகாவின் திறமை மீது அபார நம்பிக்கை இருந்தது. அதோடு ஏதாவது கெட்டுப் போய் பரிமளாவின் திருமணத்திற்கு இடைஞ்சல் வந்து விட்டால் என்ன செய்வது என்று பயந்து விட்டாள்.

ரேகா மறுநாள் காலையில் சுமித்ராவுக்கு போன் செய்தாள். எல்லோருமாக சேர்ந்து போய் ஜெயந்தியை ஒரு முறை பார்த்து விட்டு வருவோம். அவளுடைய பாட்டி இறந்து விட்டாள் இல்லையா. துக்கம் விசாரிக்க போகவில்லை என்றால் நன்றாக இருக்காது.'' என்றாள்.

சுமித்ராவுக்கு உள் விஷயமெல்லாம் தெரியாது. ''ஆமாம், ஆமாம். கட்டாயம் போய் பார்த்து விட்டு வருவோம்.'' என்றாள். சமீபத்தில் ராஜசேகர் வனிதா விஹார் நிறுவனத்தின் செயல்பாடுகளில் அக்கறை காட்டுவதை நிறுத்திவிட்டான். ஜெயந்தியை வேலை விட்டு நீக்கியதுதான் இதற்குக் காரணமாக இருக்குமோ என்று அந்த அம்மாள் சந்தேகப் பட்டாள். ராஜசேகருக்கு அந்தப் பெண்ணிடம் ஈடுபாடு இருப்பது தெரிந்திருந்தால் அவளை போகவிட்டிருப்பாளா? போனது போகட்டும். இந்த வழியிலாவது மறுபடியும் நட்பு ஏற்படுத்திக் கொள்வது நல்லது என்று சுமித்ரா முடிவு செய்தாள்.

ஜெயந்தியை பார்த்து விட்டு வரவேண்டும் என்று திட்டம் போட்டிருந்த இந்த மூவரின் மனதில் சுயநலம்தான் மேலோங்கியிருந்தது. ஆனால் அதைக் கொஞ்சம்கூட வெளியில் காட்டிக் கொள்ளாமல் ஏதோ மற்றவர்களுக்காக வருவது போல் செயல் பட்டார்கள்.

நல்லவேளையாக அவர்கள் போனபோது ராஜசேகர் வீட்டில் இருக்கவில்லை. சிவராமனும், சுமதியும் ஜெயந்தியுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். வந்தவர்களை பார்த்ததும் ஜெயந்தியின் கண்கள் அகலமாயின. சுமதி ஜெயந்தியின் பக்கம் பார்த்தாள். சிவராமன் எழுந்து அவர்களை வரவேற்றான்.

எல்லோரும் அமர்ந்து கொண்டார்கள். எங்கும் மௌனம். என்ன பேசுவது, எப்படித் தொடங்குவது என்று யாருக்குமே தெரியவில்லை.

கடைசியில் ரேகா உரையாடலை தொடங்கினாள். ''பாவம், பாட்டியைத் தவிர உனக்கு யாருமே இல்லை போலிருக்கு. ரொம்பவும் வருத்தமாக இருக்கு'' என்றாள். ஜெயந்தியின் பார்வை தரையில் பதிந்தது.



''பாட்டிக்கு ஹார்ட் பிராப்ளம் என்று ஒரு வார்த்தை முன்னாடியே தெரிந்திருந்தால் நல்ல டாக்டரிடம் காட்டியிருக்கலாம். எங்க உறவுக்காரர் ஒருவர் ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட். ரொம்ப ராசியானவர்.'' மிஸெஸ் கருணாகரன் சொன்னாள்.

''இந்த சின்ன வயதில் உனக்கு இந்த துக்கம் வந்திருக்க வேண்டாம். என்ன செய்வது? மனதை திடப்படுத்திக் கொண்டுதான் ஆகவேண்டும்.'' சுமித்ரா ஆறுதல் சொன்னாள்.

''உன் நிலைமையை நினைத்துப் பார்க்கும்போது என் இதயமே வெடித்துவிடும் போலிருக்கு மிஸெஸ் கருணாகரன் வராத கண்ணீரை ஒத்திக்கொண்டாள்.

''எல்லாமே அந்தக் கடவுளின் மாயை. சில சமயம் யோசித்துப் பார்த்தால் இந்த உலகில் யாருக்கு யார் துணை என்ற நினைப்புதான் ஏற்படும் சுமித்ரா வேதாந்தம் பேசினாள்.

''நீ இப்படி தனிமையில் இருப்பது நல்லது இல்லை. அவ்வப்போது எங்க வீடுகளுக்கு வந்து போய்க்கொண்டிரு. வெளியில் வந்து நாலுபேருடன் பேசிப் பழகினால் மனதில் இருக்கும் பாரம் குறையும்'' என்றாள் ரேகா.

ரேகா இவ்வளவு அனுசரணையாக பேசியது ஜெயந்திக்கு வியப்பாக இருந்தது. அவர்கள் ரொம்ப நேரம் உட்கார்ந்து இருந்தார்கள். எல்லோரையும்விட ரேகா அதிகமாக பேசினாள். சிவராமன் நடுநடுவில் பதிலளித்துக் கொண்டிருந்தான். ஜெயந்தி, சுமதி மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

''ரொம்ப நேரமாகி விட்டது'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து கொண்டார்கள். கட்டாயம் வீட்டுக்கு வரச்சொல்லி மற்றொருமுறை சொல்லிவிட்டு கிளம்பிப் போனார்கள்.

வாசல் வரை சென்று அவர்களை வழியனுப்பி விட்டு உள்ளே வந்தான் சிவராமன். ''திடீரென்று இவர்களுக்கு உங்கள் மீது பாசம் வந்துவிட்டது போலிருக்கு'' என்றான் முறுவலுடன்.

''அதுதான் எனக்கும் புரியவில்லை'' என்றாள் ஜெயந்தி.

''அவர்களைப் பார்த்தால் நல்லவர்கள் போல்தான் தென்படு கிறார்கள்.'' சுமதி சொன்னாள்.

''அவர்களை நம்பாதீங்க. மனதில் விஷயத்தை வைத்துக் கொண்டு தேனொழுக பேசுவார்கள். இவர்கள் இப்படி வருவதற்கு பின்னால் ஏதாவது சூழ்ச்சி இல்லாமல் இருக்காது. வெளியில் இவர்கள் ஜெயந்தியைப் பற்றி எந்த அளவுக்குக் கெடுதலாக பிரசாரம் செய்கிறார்களோ எனக்கு நன்றாகத் தெரியும்.'' சிவராமனின் குரலில் கோபம் வெளிப்பட்டது.

''போகட்டும் விடுங்க. அவர்களால் என்னை என்ன செய்து விடமுடியும்?'' ஜெயந்தியின் குரல் விரக்தியாக ஒலித்தது. பாட்டியின் மரணம் அவள் மனதில் வெறுமையை ஏற்படுத்தியது. நிலையற்ற இந்த வாழ்க்கைக்காக இவ்வளவு தவிப்பு என் எதற்கும் ஆசைப்படுவதோ ஏமாற்றம் அடைவதோ கூடாது எல்லாமே மாயை.

சிவராமன் கிளம்பும் முன் சோர்வாக உட்கார்ந்திருந்த ஜெயந்தியைப் பார்த்து. ''நீங்க தைரியமாக இருக்கணும். மனதைத் தளரவிடாதீங்க'' என்றான்.

''நான் தைரியமாகத்தான் இருக்கிறேன்.'' ஜெயந்தியின் இதழ்களில் வரண்டப் புன்னகை மலர்ந்தது.

'வெறுமே வாயால் சொன்னால் மட்டும் போதுமா முகத்தைப் பார்த்தால் நீங்க எந்த அளவுக்கு தைரியமா இருக்கீங்கன்னு எங்களால் கண்டு பிடிக்க முடியாதா?'' என்றவன் சற்று பொறுத்து ''இந்த உலகில் யாருமே சாசுவதம் இல்லை பாட்டி போனது உங்களுக்கு பேரிழப்புதான். ஆனால் அந்த வெறுமையை போக்கிக் கொள்ளும் வழியைத் தேடவேண்டும் குறைந்த பட்சம் அதற்காக முயற்சித்து பாருங்க'' என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

சிவராமன் போனபிறகு அதுவரையில் பதுமையாக உட்கார்ந்திருந்த ஜெயந்தி திடீரென்று விசும்பி விசும்பி அழுத்தொடங்கினாள்.



''என்ன இது ஜெயந்தி? அவர்கள் சொன்னதை அதற்குள் மறந்துவிட்டால் எப்படி?'' சுமதி ஜெயந்தியை சமாதானப்படுத்த முயன்றாள்.

சற்று நேரம் கழித்து ஜெயந்தி ஒருவாறு சமாளித்துக் கொண்டாள். ''வாழ்க்கையே கேள்விக் குறியாகிவிட்டது எனக்கு. யாருக்காக நான் வாழணும் சொல்லு. எங்கே எப்படி இருக்கப் போகிறேன்?'' தெளிவற்ற குரலில் சொன்னாள்.

'யாருக்காக வாழணும் என்பது அர்த்தமில்லாத கேள்வி. எங்கே இருப்பது என்பதைப் பற்றி தற்போது உடனே யோசிக்க வேண்டியதில்லை. என்ன செய்வது என்று சில நாட்கள் கழித்து முடிவு செய்வோம்.'' சுமதி சொன்னாள்.

''இனி மேலும் நான் இங்கே தங்குவது நன்றாக இருக்குமா? நீயே சொல்லு.'' ஜெயந்தி கேட்டாள்.

சுமதியால் உடனே பதில்செல்ல முடியவில்லை. ஜெயந்தி சொல்வது உண்மைதானே. திருமணம் ஆகாத ராஜசேகரின் வீட்டில் ஜெயந்தி தங்கியிருப்பது சரியில்லையே. ஊர் உலகம் என்ன சொல்லும்? ஜெயந்தியின்பால் இரக்கத்தினால் ராஜசேகர் அதையும் பொருட்படுத்தாமல் இருக்கிறானா?

''போகட்டும். நீ கொஞ்சம் தேறிக் கொள்ளும் வரையில் என்னுடன் இருக்கிறாயா?'' சுமதி கேட்டாள்.

ஜெயந்தி பதில் சொல்லவில்லை.

அன்று இரவு ராஜசேகர் வரும்வரையில் சுமதி தங்கியிருந் தாள். ஜானகி இறந்துபோன பிறகு சுமதியின் குடும்பத்திற்கும் ராஜசேகருக்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டுவிட்டது. சுமதியின் கணவனுக்கும் ராஜசேகரிடம் முதல் பார்வையிலேயே நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டது.

வீடு திரும்ப தாமதம் ஆகும் என்று தோன்றினால் ராஜசேகர் சுமதியின் வீட்டுக்கு சொல்லி அனுப்புவான். அவன் வரும் வரையில் சுமதி ஜெயந்திக்கு துணையாக இருப்பாள். ராஜசேகர்

வந்த பிறகு காரில் சுமதியை வீட்டுக்கு அனுப்பிவைப்பான். அப்படி அனுப்பும் போது காரின் பின் சீட்டில் சுமதியின் குழந்தைகளுக்காக பிஸ்கெட் பாக்கெட்கள், பழங்கள் என்று கூடை நிறைய பொருட்கள் நிரம்பியிருக்கும்.

''ஒவ்வொருமுறையும் இதெல்லாம் எதற்கு?'' அவற்றை பெற்றுக் கொள்ள சுமதி சங்கோஜப்பட்டாள்.

''பரவாயில்லை, வீட்டுக்கு போனதும் குழந்தைகள் எதிரே வருவார்கள். அவர்களை விட்டு விட்டு இத்தனை நேரம் இருந்து விட்டீங்க இல்லையா'' என்றான்.

''இந்த நேரத்தில் அவர்கள் தூங்கியிருப்பார்கள். இருந்தாலும் ஜெயந்திக்கு இந்த சமயத்தில் ஆதரவாக இருப்பது என் கடமை. அவள் எனக்கு சிநேகிதி என்பதை மறந்து விட்டீங்க போலிருக்கு.''

''மறக்கவில்லை. ஒருத்தருக்கு உதவி செய்வதில் நமக்கு இடைஞ்சல் இல்லாமல் பார்த்துக் கொள்ளணும் இல்லையா. ஜெயந்திக்கு உங்களைவிட நெருக்கமானவர்கள் யாருமே இல்லை. முடிந்தவரையில் அவளுடன் இருக்க முயற்சி செய்யுங்க. அதனால் உங்களுக்கு எந்த இடைஞ்சலும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது என்னுடைய கடமை என்று நான் நினைக்கிறேன்.'' நயமான குரலில் சொன்னான். பழக் கூடையை காரில் வைக்கச் சொல்லி டிரைவரிடம் சொன்னான். சுமதி பக்கம் திரும்பினான். ''இதோ பாருங்க. என்னுடைய திருப்திக்காக நான் தருவதை நீங்க மறுக்கக்கூடாது. குழந்தைகளிடம் மாமா கொடுத்ததாக சொல்லுங்க'' என்றான்.

கார் கிளம்பிப் போய்விட்டது. ராஜசேகர் உள்ளே வந்தான். ஜெயந்தி அசையாமல் அதே இடத்தில் உட்கார்ந்திருந்தாள்.

''சாப்பிட வா ஜெயந்தி.'' அழைத்தான்.

''வேண்டாம்.''

''ஏன்?''



''எனக்கு பசியே இல்லை.''

''சரி. நானும் சாப்பிடவில்லை.''

''நீங்க ஏன் சாப்பிடாமல் இருக்கணும்?''

''நீ சாப்பிடாமல் நான் மட்டும் எப்படி சாப்பிடுவது?''

ஜெயந்தி நிமிர்ந்து அவனை ஒரு நிமிடம் பார்த்துவிட்டு எழுந்து வந்தாள். இருவரும் சாப்பிட உட்கார்ந்து கொண்டார்கள்.

''இன்னிக்கு சுமித்ரா, ரேகா எல்லோரும் வந்தார்கள்.'' ஜெயந்தி சொன்னாள்.

ராஜசேகரின் நெற்றி சுருங்கியது. ஆனால் முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாமல் ''நெய் போடட்டுமா?'' என்று கேட்டான்.

''வேண்டாம்.''

''கத்தரிக்காய் பிட்ளை போட்டுக்கொள்.''

''வேண்டாம். இருக்கு.''

''தயிர் போடவா?''

ஜெயந்தி மறுப்பதற்குள் தட்டில் தயிரை பரிமாறிவிட்டான்.

அன்று இரவு படுக்கப் போகும்முன் ஜெயந்தி அவன் அருகில் வந்தாள். ''என்னை எங்கேயாவது அனுப்பிவிடுங்கள்'' என்றாள்.

''எங்கே?''

''எந்த இடமாக இருந்தாலும் சரி.''

''இந்த வீட்டைத்தவிர, அப்படித்தானே.''

ஜெயந்தி பதில் சொல்லவில்லை.

''போகட்டும். எந்த இடம் என்று நீயே குறிப்பிட்டுச் சொல்லு'' என்றான்.

''சுமதியின் வீட்டுக்கு.''

"அந்த சின்ன வீட்டுக்கா? அவர்களுக்கே இடம் போறாது. மேலும் நீ போகும் இடத்தில் உன் மனதிற்கு நிம்மதி கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படணும்."

"போகட்டும். ஹாஸ்டலாக இருந்தால்?" யோசித்துவிட்டு சொன்னாள்.

ராஜசேகர் கையில் இருந்த புத்தகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"சில நாட்கள் ஹாஸ்டலில் தங்கிக்கொண்டு வேறு எதாவது வேலையைத் தேடிக் கொள்கிறேன்."

"ஜெயந்தி! இந்த வீட்டில் இருப்பது உனக்கு வெறுப்பாக இருக்கிறதா இல்லை என் மீது..." வார்த்தையை முடிக்காமலேயே நிறுத்திவிட்டான்.

"இல்லை...இல்லை. உங்கள் மீது எனக்கு எப்படி வெறுப்பு ஏற்படும்? மேலும் நீங்க இந்த அளவுக்கு உதவி செய்யும் போது..." ஜெயந்தியின் விழிகளில் நீர் சுழன்றது. சட்டென்று தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

ராஜசேகர் புத்தகத்தை மேஜை மீது வைத்துவிட்டு அருகில் வந்தான். "ஜெயந்தி! இந்த வீட்டில் இருப்பது உனக்குக் கஷ்டமாக இருந்தாலும் கொஞ்சம் முயற்சி செய்து பாரேன். போகப் போக சரியாகிவிடும்."

ஜெயந்தி பேசவில்லை. கட்டிலில் படுத்துக் கொண்டாள். தான் உறங்கிவிட்டது நிச்சயமாக தெரிந்த பிறகுதான் அந்த அறையைவிட்டு வெளியேறுவான். அந்த விஷயம் அவளுக்குத் தெரியும். அது வரையில் எத்தனை நேரம் ஆனாலும் சரி அதே அறையில் ஈசிச்சேரில் அமர்ந்துகொண்டு விடிவிளக்கு வெளிச்சத்தில் எதாவது புத்தகத்தை படித்துக் கொண்டிருப்பான். அதனால் ஜெயந்தி கண்களை மூடிக்கொண்டு தூங்கி விட்டாற்போல் அசையாமல் இருந்தாள். ரொம்ப நேரம் கழித்து ராஜசேகர் எழுந்து அருகில் வந்தான். தலையணையை சரிப்படுத்திவிட்டு போர்வையை போர்த்திவிட்டான். பிறகு விடிவிளக்கை அணைத்துவிட்டு ஓசைப்படுத்தாமல் கதவைச் சாத்திவிட்டு வெளியேறினான்.



அவன் போன பிறகு ஜெயந்தி கண்களைத் திறந்தாள். எத்தனை நாட்கள் இப்படி கழிப்பது? வேறு பெண் துணையே இல்லாமல் இந்த வீட்டில் இத்தனை நாட்கள் களங்கமில்லாமல் இருந்தேன் என்று சொன்னால் இந்த ஊர் உலகம் நம்புமா? அவன் இந்த விஷயத்தை ஏன் யோசிக்க மறுக்கிறான்?

இருண்டுபோன தன் வாழ்க்கையில் எப்படி வெளிச்சம் வரப்போகிறது? இதற்கே இப்படி பயந்துவிட்டால் எஞ்சிய நாட்களை எப்படி கழிக்கப் போகிறோம்?

எப்படியோ தூங்கிவிட்டாள். தூக்கத்தில் கனவு வந்தது. சுற்றிலும் அடர்ந்த காடு. பெரிய மரங்கள். மரத்தின் கிளைகளில் பாம்புகள் தொங்கிக் கொண்டிருந்தன. யாரையோ தேடிக்கொண்டு வந்த ஜெயந்தி காட்டில் வழிதவறிவிட்டாள். என்ன செய்வது என்று புரியவில்லை. பயத்தினால் உடல் வெட வெடவென்று நடுங்கியது. அதற்குள் தொலைவிலிருந்து "ஜெயந்தி!" என்று பாட்டியின் குரல் கேட்டது.

"குரல் வந்த திசையை நோக்கி ஓடினாள். மரங்களில் தொங்கிக் கொண்டிருந்த பாம்புகள் ஜெயந்தியை கொத்தவந்தன. அவற்றுக்கு தன்மீது கோபம் வாருவானேன்?

"ஜெயந்தி!" மற்றொருமுறை குரல் கேட்டல்.

"பாட்டீ!" குரல் வந்த திசையில் ஓடிய ஜெயந்தி சட்டென்று நின்றுவிட்டாள். எதிரே பாட்டிக்கு பதில் சிங்கம் ஒன்று உட்கார்ந்து இருந்தது.

"வந்து விட்டாயா. உனக்காகத்தான் காத்திருக்கிறேன்." பாட்டியின் குரலில் சொன்னது.

"என்னை அழைத்தது, நீதானா?"

"ஆமாம். நானேதான். எனக்கு ரொம்ப பசியாக இருக்கு." சிங்கம் சொன்னது.

ஜெயந்திக்கு பின்னால் நகர்ந்தாள் சிங்கம் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தது.

"நீ...நீ பாட்டி இல்லையா?"

"உன்னை விழுங்கத்தான் பாட்டியின் குரலில் அழைத்தேன். பின்னாடி என்ன இருக்கோ பாரு."

ஜெயந்தி பின்னால் திரும்பிப் பார்த்தாள் பெரிய பள்ளம் தலையைச் சுற்றுவதுபோல் இருந்தது. மறுபடியும் சிங்கத்தை பார்த்தாள்.

"இப்பொ எப்படி தப்பித்துக் கொள்வாயோ பார்க்கிறேன்." சிங்கம் கர்ஜனை செய்துவிட்டு மேலும் நெருங்கியது.

"வேண்டாம். என்னைக் கொன்றுவிடாதே." அழுது கொண்டே இரண்டு கைகளையும் கூப்பினாள்.

"மனிதர்களைக் கண்டால் சிங்கம் இரக்கப்படுமா என்ன?" சிங்கம் ஓரடி முன்னால் வைத்தது.

பயந்துபோன ஜெயந்தி பதட்டமடைந்து பின்னால் நகர்ந்தாள். நகர்ந்த பிறகுதான் நினைவுக்கு வந்தது பின்னால் பள்ளம் இருப்பது. காலுக்கு அடியில் தரை இருக்கவில்லை. உடல் காற்றில் மிதந்தது. கீழே விழுந்துகொண்டிருந்தாள். பயத்தில் வீலென்று கத்தினாள். தரையில் விழும் முன்பே யாரோ இரண்டு கைகளாலேயும் தாங்கிக் கொண்டார்கள். ஜெயந்தி மறுபடியும் கத்தினாள்.

"ஜெயந்தி! ஜெயந்தி!" ராஜசேகர் பதட்டத்துடன் அழைத்துக் கொண்டிருந்தான்.

"விடு...விடு என்னை." கனவா நினைவா தெரியாத நிலையில் ஜெயந்தி திமிறினாள்.

"ஜெயந்தி!" ராஜசேகரின் கைகள் இரும்புப் பிடியாக மாறி ஜெயந்தியை அசையாமல் பிடித்துக் கொண்டன.

ஜெயந்திக்கு விழிப்பு வந்தது.



"ரொம்ப பயந்துவிட்டாய் போலிருக்கு. கெட்டகனவு ஏதாவது வந்ததா?" பதட்டத்துடன் கேட்டான்.

"ஆமாம். பயங்கரமான கனவு." ஜெயந்தியின் இதயம் இன்னும் வேகமாக துடித்துக் கொண்டிருந்தது.

"என்ன கனவு? எவ்வளவு உரத்தக்குரலில் கத்தினாய் தெரியுமா?"

"உங்கள் தூக்கத்தை கெடுத்துவிட்டேனா?"

"இல்லை இல்லை. இன்னும் நான் தூங்கவில்லை. தூங்கப்போகும் சமயம் உன் அலறலைக் கேட்டு ஓடிவந்தேன். நல்ல வேளை கதவு வெறுமே சாத்தியிருந்தது." ஜெயந்தியின் நெற்றியில் படிந்த வியர்வையை டவலால் ஒற்றிக்கொண்டே சொன்னான்.

"ரொம்ப பயமாக இருந்தது. இருட்டை பார்த்தாலே பயமாக இருக்கு."

"என்னிடம் சொல்லவே இல்லையே. இனி விடிவிளக்கை போட்டு வைக்கிறேன்."

ஜெயந்தி பதில் சொல்லவில்லை. அவள் மனம் இன்னும் கனவைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தது.

"என்ன கனவு அது?"

"அடர்ந்த காட்டில் வழிதவறி விட்டேனாம். மரங்களில் பெரிய பெரிய பாம்புகள் தொங்கிக் கொண்டிருந்தன.

"பாம்பு உன்னை கொத்த வந்ததா?"

"ஆமாம். அதற்குள் பாட்டியின் குரல் கேட்டது."

"பாட்டியின் குரலா?"

"ஆமாம். குரலைக் கேட்டு அந்தப் பக்கம் ஓடினேன். ஆனால் அங்கே பாட்டிக்கு பதில் பெரிய சிங்கம் இருந்தது." சொல்லும் போதே ஜெயந்தியின் உடல் பயத்தால் நடுங்கியது.

அந்த நடுக்கத்தை உணர்ந்த ராஜசேகரின் கைகள் அவளை மேலும் நெருக்கமாக அணைத்துக் கொண்டன.

''என்ன ஆச்சு? சிங்கம் உன்னை விழுங்க பார்த்ததா?''

''சிங்கத்தைப் பார்த்து பயந்து நான் பின்னால் நகர்ந்தேன். பின்னால் பெரிய பள்ளம். சிங்கம் என்னை மேலும் நெருங்கியது. என்னையும் அறியாமல் பின்னால் நகர்ந்தேன். பள்ளத்தில் விழுந்து விட்டேன். கீழே விழும்முன் யாரோ என்னை தாங்கிக் கொண்ட ார்கள்.'' வேக வேகமாக சொல்லிக் கொண்டிருந்த ஜெயந்தி மூச்சை எடுத்துக் கொள்வதற்காக நிறுத்தினாள்.

''ரொம்ப வேடிக்கையான கனவு.'' ராஜசேகர் சொன்னான்.

''இன்னொரு வேடிக்கை என்னவென்றால் அந்த கைகள் இப்போ நீங்க பிடித்துக் கொண்டிருப்பது போலவே என்னை தாங்கிக் கொண்டன.''

அதைக் கேட்டதும் ஜெயந்தியின் தோளைச் சுற்றி படிந்திருந்த ராஜசேகரின் கைகள் மேலும் பலமாக இறுகின.

அவன் கைகளுக்கிடையே சிறைப்பட்டிருந்த ஜெயந்தி பாதுகாப்பாக இருப்பதுபோல் உணர்ந்தாள். அவன் இதயத்துடிப்பு தெளிவாக கேட்டுக் கொண்டிருந்தது.

ராஜசேகர் மெதுவாக ஜெயந்தியை விடுவித்து தலையணை மீது படுக்கவைத்தான்.

''ஜெயந்தி! முதல் முதலில் வனிதா விஹாரில் நாம் சந்தித்துக் கொண்டபோது நாற்காலியில் தூங்கிக் கொண்டிருந்தாய். உன்னை எழுப்ப வந்தபோது என்னுடைய கைகளை கெட்டியாக பிடித்துக் கொண்டாயே நினைவு இருக்கா?''

நினைவு இருக்கு என்பது போல் ஜெயந்தி தலையை அசைத்தாள்.

''சொல்லு ஜெயந்தி. என்றும் உனக்கு ஏதோ கனவு வந்தது இல்லையா?''



ஜெயந்தி பதில் சொல்லவில்லை.

''நினைவு இல்லையா?''

இல்லை என்பதுபோல் தலையை அசைத்தாள்.

''எல்லா கனவுகளும் பலிக்கும் என்று சொல்லமுடியாது. இருந்தாலும் சில கனவுகள் எதிர்காலத்தில் நடக்கப் போவதை குறிப்பாக உணர்த்தக்கூடும். ஜெயந்தி! நீ எனக்கு ஒரு சத்தியம் செய்து தரவேண்டும்.''

என்ன என்பதுபோல் பார்த்தாள்.

''எதிர்காலத்தில் உனக்கு வாழ்க்கையில் எப்போதாவது சலிப்போ வெறுப்போ ஏற்பட்டால் அந்த நேரத்தில்கூட நீ என்னுடைய நட்பை மறுக்கக் கூடாது. வாக்குக்கொடு'' ராஜசேகர் கையை நீட்டினான்.

ஒரு நிமிடம் அவன் பக்கம் கவனமாக பார்த்த ஜெயந்தி மெதுவாக தன் கையை அவன் கைமீது பதித்தாள்.

''என்னால் உனக்கு எந்த வேதனையும் ஏற்படாதவாறு கவனமாக இருப்பேன்... ஒருகால் அறிந்தோ அறியாமலோ என்னால் உனக்கு வேதனை ஏற்பட்டால் நேராக வந்து என்னை கேட்டுவிடு, சரிதானே.''

ஜெயந்தி பதில் சொல்லவில்லை. ராஜசேகர் தன் கையில் இருந்த ஜெயந்தியின் மிருதுவான உள்ளங்கையை பரிசீலித்துக் கொண்டே ''சுமதி வீட்டாரை நம் வீட்டுக்கே வரச்சொல்லி அழைக்கட்டுமா?'' என்றான்.

''எல்லோரையுமா?'' வியப்புடன் கேட்டாள்.

''ஆமாம். பாட்டியின் நினைவுகளிலிருந்து உன்னை மீட்க வேண்டும் என்றால் சந்தடியான சூழ்நிலை இருக்க வேண்டும். அதான் அவர்கள் இங்கே வந்து விட்டால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். சுமதியின் கணவன் ரொம்ப நல்லவனாக தென்படுகிறான்.''

ஜெயந்தி ராஜசேகரின் கண்களுக்குள் ஊடுருவுவது போல் பார்த்தாள்.

''நான் சற்றுமுன் தூங்கும் வரையில் இதைப்பற்றிதான் யோசித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் வந்துவிட்டால் உனக்கும் பொழுதுபோகும் எனக்கும் நிம்மதியாக இருக்கும்.''

''ஆனால்...ஆனால்...''

''எனக்கு இடைஞ்சலாக இருக்கும் என்ற சந்தேகமா இல்லை யாராவது ஏதாவது நினைத்துக் கொள்வார்களே என்ற தயக்கமா? எனக்கு வேண்டியது நீ நிம்மதியாக இருக்கணும். நீ மறுபடியும் பழையபடி ஆகவேண்டும். அவ்வளவுதான்.''

அந்த எண்ணத்தை மறுக்க வேண்டும் என்று ஜெயந்திக்கு பலமாக தோன்றியது. ஆனால் எப்படி சொல்வது என்றுதான் புரியவில்லை. அவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் அதை மாற்றுவது ரொம்ப கஷ்டம். அந்த விஷயம் அவளுக்குத் தெரியும் அதான் மௌனமாக இருந்துவிட்டாள்.

ஜெயந்தி உறங்கிய பிறகு ராஜசேகர் எழுந்து வந்து ஈசேரில் அமர்ந்துகொண்டான்.

'இப்படியே எத்தனை நாட்களுக்கு இருப்பது? பேசாமல் ஜெயந்தியைத் திருமணம் செய்துகொண்டு விட்டால் என்ன?' என்று தோன்றியது. உடனே 'வேண்டாம். வேண்டாம்' அது போன்ற முட்டாள் தனமான காரியம் ஒரு நாளும் செய்யாதே. அந்தப் பெண்ணின் மனதில் உன்னைப் பற்றி அது போன்ற எண்ணம் எதுவும் இல்லாதபோது திருமணப் பேச்சை எடுப்பது. சரியில்லை. உதவி செய்தேன் என்ற பெயரில் யோசிப்பதற்கு வாய்ப்புகூட தராமல் தன்னை சிறைப்படுத்தி விட்டாய் என்று எதிர்காலத்தில் ஜெயந்திக்கு உன்னை தவறாக நினைக்க வாய்ப்பு இருக்கு. முதலில் அவள் மனதில் உன்னைப் பற்றி பதிந்திருக்கும் தவறான கருத்துகள் அழிந்து போகட்டும், என்று அவன் மனம் எச்சரித்தது. அதோடு உடல் ரீதியாக ஜெயந்தி மலர்ந்திருந்தாலும் இன்னும் குழந்தைத்தனம் போகவில்லை. சற்றுமுன் அவன்



அவளை அணைத்துக் கொண்டபோது அந்த அணைப்பின் பாது காப்பை உணர்ந்தாளே தவிர பெண்மைக்கே உரிய வெட்கமோ கூச்சமோ இருக்கவில்லை. அதை அவனால் உணரமுடிந்தது.

'முடிந்தால் மென்மையாக அவள் மனதில் ஆழமாக புதைந்திருக்கும் பெண்மையை தட்டி எழுப்ப முயற்சிசெய்.' அவன் மனம் எச்சரித்தது.

# 39

''ஜெயந்தி! என்ன இது? ராஜசேகர் என் கணவரை அழைத்து உங்க குடும்பத்துடன் வந்து எங்க வீட்டில் இருக்க முடியுமா என்று கேட்டானாம். என்ன விஷயம்?''

மறுநாள் சுமதி வந்த உடனேயே கேட்டாள்.

''ராஜசேகருக்கு மூளை கலங்கிவிட்டது.'' கோபமும், எரிச்சலும் கலந்த குரலில் சொன்னாள் ஜெயந்தி.

''அப்படி என்றால்?'' புரியாததுபோல் பார்த்தாள் சுமதி.

''ஒன்றுமில்லை சுமதி. நான் உங்கவீட்டுக்கு போவதாக சொன்னபோது மறுத்தவன் உங்க எல்லோரையும் இங்கே வரச் சொல்லி அழைத்திருக்கிறான். இங்கே நான் தனிமையில் வாடுகிறேனாம். கலகலப்பான சூழ்நிலையில் இருக்க வேண்டு மாம். அதுதான் அவனுடைய எண்ணம்.'' ஜெயந்தி சுமதியின் தோளில் கையைப் பதித்தாள். ''சுமதி! ராஜசேகர் என்னை பழையபடி ஆக்க வேண்டும் என்று ஏதேதோ செய்ய நினைக் கிறான். அவற்றை நீங்க பொருட்படுத்த வேண்டாம். அவனுக்கு உலகம் ஒரு பொருட்டாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் நம்மால் அப்படி இருக்க முடியுமா சொல்லு. எல்லோரும் என்ன நினைத்துக் கொள்வார்கள்? இதெல்லாம் நாம் போட்ட திட்டம் என்று நினைத்துக்கொள்ள மாட்டார்களா?''

''அவன் கேட்டால் மட்டும் நாங்க உடனே வந்துவிடுவோம் என்று நினைத்துவிட்டாயா?'' சுமதியின் குரலில் ரோஷம் கலந்திருந்தது.

''அப்படி இல்லை சுமதி. உன் கணவர் ராஜசேகரின் பேச்சை தட்டமுடியாமல் சம்மதம் சொல்லிவிடுவாரோ என்று பயப்படுகிறேன் அவ்வளவுதான்.''

''அந்த பயம் உனக்கு வேண்டாம். உனக்கு இடமாற்றம் வேண்டும் என்றால் எங்க வீட்டுக்கு அழைத்துப் போகிறோம். எங்களால் முடிந்த வசதிகளை செய்து தருகிறோம். அவ்வளவு தானே தவிர...''

''எனக்கு எங்கேயும் வரவேண்டும் போல் இல்லை சுமதி. இங்கேயும் இருப்பதில் விருப்பம் இல்லை. மெதுவாக அவனை சம்மதிக்க வைத்து ஏதாவது ஹாஸ்டலுக்கு போகவேண்டும் என்று நினைக்கிறேன். கூடிய சீக்கிரம் அப்படி நடக்கத்தான் போகிறது.''

''அது அவ்வளவு சுலபமாக முடியும் என்று நான் நினைக்கவில்லை.'' சுமதி சொன்னாள்.

இரண்டு நாட்கள் கழித்து இருவரும் சேர்ந்து சாப்பிடும் போது ராஜசேகர் கேட்டான். ''நம் வீட்டுக்கு வந்து தங்குவதற்கு சுமதி கொஞ்சம்கூட சம்மதிக்க வில்லையாம். காரணம் என்னவாக இருக்கமுடியும்?''

''எனக்கெப்படி தெரியும்?''

''அதில் உன்னுடைய பிரமேயம் எதுவும் இல்லையா?''

''இருந்தால் மட்டும் தவறென்ன இருக்கு? அதோடு நானே இங்கே இருக்கப் போவதில்லை என்றபோது.''

ராஜசேகர் அவளை நேராக பார்த்தான்.

''நான் ஏதாவது ஹாஸ்டலுக்கு போவதாக முடிவு செய்திருக்கிறேன்.'' ஜெயந்தி தட்டில் பார்வையை பதித்தாள்.

அவன் மௌனமாக இருந்தான்.



''ஸ்ரீனிவாச நகரில் விமென்ஸ் ஹாஸ்டல் இருக்கிறதாம். அதில்...'' ஜெயந்தி வார்த்தையை இன்னும் முடிக்கவில்லை.

''ஜெயந்தி! ஏற்கனவே உன்னிடம் சொல்லியிருக்கிறேன், உன்னை ஹாஸ்டலுக்கு அனுப்புவதில் விருப்பம் இல்லை என்று.''

''காரணம்?''

''நீ அழகாக இருக்கிறாய். அப்பாவியாகவும் இருக்கிறாய். அதுதான் காரணம். போதுமா?''

ஜெயந்தி சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். அவன் முகத்தில் பரிகாசம் தெளிவாக தென்பட்டது.

''உனக்கு விருப்பம் இருந்தாலும் இல்லா விட்டாலும் சில நாட்கள் நீ இந்த வீட்டில் இருப்பதை தவிர்க்க முடியாது. அதை முதலில் நன்றாக புரிந்துகொள்.'' சாப்பிட்டு முடித்தவன் கையை அலம்பிக்கொண்டு போய்விட்டான்.

ஜெயந்தி கண் இமைக்காமல் தட்டையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். தன்மீது அதிகாரம் செலுத்த இவன் யாரு? தன்னால் ஏன் எதிர்த்து பேச முடியவில்லை. கோபமும், துக்கமும் ஆட்கொள்ள ஜெயந்தியின் விழிகளிலிருந்து கண்ணீர் கன்னத்தில் உருண்டோடியது.

ராஜசேகர் போன்றவர்கள் சாதாரணமாக பேசமாட்டார்கள். பேசினால் அதற்கு மறுப்பு சொல்ல முடியாதபடி கல்லில் செதுக்கிய எழுத்துகளால் நிலைத்திருக்கும்.

எத்தனை முயற்சி செய்தாலும் ஜெயந்திக்கு இந்த வீட்டிலிருந்து வெளியேறும் வழிதெரியவில்லை. சுமதியின் கணவனுக்கு ராஜசேகர் தன்னிடம் செகரெட்ரியாக வேலை போட்டுக் கொடுத்தான். சுமதி அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தாள்.

வனிதாவிஹார் நிறுவனத்தினர் காட்டும் அன்புக்கு அளவே இல்லை. ஏதாவது சாக்கு வைத்துக்கொண்டு அடிக்கடி வந்து ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். தங்கள் வீட்டுக்கு

வரச்சொல்லி வற்புறுத்தினார்கள். ஜெயந்தி அவர்கள் வீட்டுக்கு போவதை பெரும்பாலும் தவிர்த்து வந்தாள். அப்படியும் அவர்கள் விடுவதாக இல்லை.

ஒருமுறை சிவராமனிடம் இதைப்பற்றி சொன்னபோது. "அவர்களுக்கு வேண்டியது நீங்க இல்லை. உங்க மூலமாக ராஜசேகர்" என்றான் முறுவலுடன்.

அதைக் கேட்டபிறகு ஜெயந்திக்கு அவர்கள் மீது மேலும் வெறுப்பு ஏற்பட்டது.

★ ★ ★

காலையில் பத்துமணிவாக்கில் கமலாமாமி வீட்டுக்குச் சென்று ஜெயந்தி மாலை நான்கு மணி ஆகும் போது வீட்டுக்கு வந்தாள். வராண்டா படி ஏறும்போது உள்ளேயிருந்து பேச்சுக் குரல் கேட்டது.

"என்ன அரசாங்கமோ? என்ன திட்டங்களோ? நேற்று கட்டிய பாலம் இன்று விள்ளலும், விரிசலுமாய் காட்சியளிக்கிறது. நாடு முன்னேறணும் என்று வெறுமே வாயால் சொல்லி விட்டால் போதுமா?" யாரோ ஆவேசமாக சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தார்கள்.

ராஜசேகரை பார்க்க யாராவது வந்திருப்பார்கள் போலும். ஜெயந்தி புடவைத் தலைப்பை தோளைச் சுற்றி போர்த்திக் கொண்டு வேகமாக உள்ளே போகப் போனாள்.

"ஜெயந்தி! இங்கே வா." ஹாலைத் தாண்டி உள்ளே போகப் போனவளை ராஜசேகர் பின்னாலிருந்து அழைத்தான்.

ஜெயந்தி பின்னால் திரும்பினாள். ஹால் சோபாவில் நடுவயதில் இருக்கும் பெண்கள் ஐந்துபேர், இரண்டு ஆண்களும் அமர்ந்து இருந்தார்கள்.

"வா...ஜெயந்தி!" மற்றொரு முறை அழைத்தவன் "இவள்..." என்று அறிமுகப்படுத்தப் போனான்.



"இதுகூட தெரியாதா? மிஸெஸ் ராஜசேகர்." ஒரு அம்மாள் ஏதோ சாதனை புரிந்துவிட்டதுபோல் சொன்னாள்.

அதைக் கேட்ட ஜெயந்தி திடுக்கிட்டவளாய் அந்த அம்மாளை கோபமாக பார்த்தாள். ராஜசேகர் அந்த அம்மாளின் தவறை சரி படுத்தாமலேயே ஜெயந்தி பக்கம் திரும்பி "இவர்கள் வெள்ள நிவாரண நிதிக்காக நன்கொடை வசூல்செய்ய வந்திருக்கிறார்கள். ஷி ஈஸ் மிஸெஸ் சரஸ்வதிராமன்" என்று குள்ளமாக மாநிறத்தில் இருந்த பெண்மணியை அறிமுகப்படுத்தினான்.

ஜெயந்தி கைகளைகூப்பி வணக்கம் தெரிவித்தாள். அந்த அம்மாள் பதில் வணக்கம் தெரிவித்துவிட்டு "உட்காருங்களேன்" என்றாள். ஹாலில் சோபா, நாற்காலி எல்லா இருக்கைகளும் நிரம்பியிருந்தன. ராஜசேகர் பக்கத்தில் தவிரவேறு எங்கேயும் இடம் இருக்கவில்லை. ராஜசேகர் சற்று நகர்ந்து இடமளித்தான். ஆனால் ஜெயந்தி உட்கார்ந்துகொள்ளவில்லை. அவன் அமர்ந்திருந்த சோபாவுக்கு பக்கத்தில் நின்று கொண்டாள்.

சரஸ்வதிராமன் மற்றவர்களை அறிமுகப்படுத்தினாள்.

"எவ்வளவு கொடுக்கணுமோ சொல்லுங்க" ராஜசேகர் முறுவ லுடன் கேட்டான்.

"நாங்க கேட்டதை நீங்க கொடுத்து விடுவீங்களா என்ன? உங்க ஸ்டேடஸ்க்கு தகுந்தாற்போல் கொடுங்கள் போதும்." சரஸ்வதிராமனுக்கு யாரிடம் எப்படி பேசவேண்டுமோ நன்றாகவே தெரியும்.

"நன்றாக இருக்கு நீங்க சொல்வது. நான் கொடுக்கப்போகும் நன்கொடையை வைத்துக்கொண்டு என்னுடைய ஸ்டேடஸை முடிவு செய்வீங்களா?"

"அப்படி இல்லை. இது போன்ற சமுதாயப் பணிகளுக்கு தாராளமாக கொடுப்பது உங்களுக்கு வழக்கம்தானே."

ராஜசேகர் சட்டைப்பையிலிருந்து பர்ஸை எடுக்கப் போனான்.

''போகட்டும். பர்ஸை உங்க மிஸெஸ்கிட்டே கொடுங்க அவங்க எவ்வளவு கொடுத்தாலும் பெற்றுக் கொள்கிறோம்.'' இன்னொரு அம்மாள் சொன்னாள்.

ஜெயந்தி மறுப்பதுபோல் ஏதோ சொல்ல வாயெடுத்தபோது ராஜசேகர் இடைபுகுந்தான்.

''அவள் பெயர் ஜெயந்தி. அதை விட்டு விட்டு நீங்க சும்மா மிஸெஸ் மிஸெஸ்ன்னு விளித்தால் ஒப்புக்கொள்ள மாட்டாள்.'' இருபொருள் தொனிக்க சொன்னான்.

''சுதந்திரமான எண்ணங்கள் கொண்ட பெண்மணி போலும்.'' சிவப்புப் புடவை அணிந்த அம்மாள் சொன்னாள்.

''போகட்டும். ஜெயந்தி சேகர் என்று அழைக்கலாமா?'' மற்றொரு பெண்மணி கேட்டாள்.

''வேண்டாம். வேண்டாம். அவங்களுக்கு கோபம் வந்தால் நமக்குக் கிடைக்கும் நன்கொடை தொகை குறைந்துவிடும். ஜெயந்தி! உங்களுக்கு தோன்றியதை கொடுங்கள்.'' சரஸ்வதிராமன் இதையெல்லாம் விளையாட்டாக எடுத்துக் கொண்டாள்.

ராஜசேகர் பர்ஸை ஜெயந்தி பக்கம் நீட்டினான். அதைப் பெற்றுக் கொள்ளாமல் அவன் பக்கம் பார்த்தாள்.

''ஊம் கொடு'' என்றான் முறுவலுடன்.

இன்னும் குழந்தை குட்டிஇல்லை போலிருக்கு.'' யாரோ தாழ்வான குரலில் சொன்னது ஜெயந்தி, ராஜசேகரின் காதுகளில் விழுந்தது. ராஜசேகரின் கண்களில் பளிச்சென்று தெரிந்த மின்னல் ஜெயந்தியின் இதயத்தை ஊடுருவிச் சென்று வேகமாக துடிக்கும்படி செய்தது.

ஜெயந்தி சட்டென்று அவன் கையில் இருந்த பர்ஸை பிடுங்கிக் கொள்ளாத குறையாக எடுத்துக் கொண்டாள். பர்ஸை திறந்தாள் அதில் இருந்ததை எவ்வளவு இருக்கு என்றுகூட கவனிக்காமல் அப்படியே சரஸ்வதிராமன் கையில் திணித்தாள்.



''குட். உங்களுடைய தாராளகுணம். எட்டாயிரம் நன்கொடை என்றால் சாதாரண விஷயம் இல்லை.'' சரஸ்வதிராமன் பணத்தை எண்ணி பேக்கில் வைத்துக் கொண்டே சொன்னாள்.

''எட்டாயிரமா!'' ஜெயந்தி திடுக்கிட்டாள். பயந்துகொண்டே ராஜசேகர் பக்கம் பார்த்தாள். ராஜசேகர் அதைக் கவனிக்காதவன் போல் ''என்ன செய்வது? ஸ்டேடஸ்க்கு தகுந்தாற்போல் நன்கொடை இருக்கணும்னு நீங்க முன்னாடியே சொல்லிவிட்டீங்களே'' என்றான்.

அவர்கள் கிளம்பிப்போன பிறகு ஜெயந்தி ராஜசேகரிடம் வந்தாள். ''மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்றாள்.

''மன்னிப்பா! எதற்கு?''

''பர்ஸில் அவ்வளவு பணம் இருக்கும்னு நான் நினைக்கவில்லை.''

''அதுவா!'' என்று சிரித்தான்.

''உனக்குக் கோபம் வரவழைத்ததற்கு எனக்கு இந்த தண்டனைகூட இல்லாவிட்டால் எப்படி?'' என்றான்.

ஜெயந்தியின் கோபம் இருமடங்காகி விட்டது. ''ச்சி...ச்சி... அவர்களுக்கு கொஞ்சம்கூட மூளையே இல்லை. ஒரு ஆணையும் பெண்ணையும் பார்த்தால் கணவன் மனைவி என்று முடிவு கட்டிவிடுவதா?''

''இதில் அவர்களுடைய தவறு எதுவும் இல்லை ஜெயந்தி. நான் தனியன் என்று அவர்களுக்குத் தெரியும். இந்த வீட்டில் என் மனைவியைத்தவிர வேறுஎந்த பெண் இவ்வளவு உரிமையுடன் வீட்டுக்குள் வருவாள்? அதோடு நீ ரொம்பவும் பதிவிசாக தலைப்பை தோளைச் சுற்றி போர்த்தியிருந்தாய். கழுத்தில் இருப்பது சங்கிலியா தாலிச்சரடா என்று பார்க்க வாய்ப்பும் தரவில்லை.''

ஜெயந்திக்கு அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது. உண்மைதான் என்று நினைத்தவள் தோளைச் சுற்றியிருந்த தலைப்பை எடுத்து சரியாக போட்டுக்கொண்டு உள்ளே போனாள்.

# 40

ராஜசேகர் அன்று வழக்கத்தைவிட முன்னாடியே வீட்டுக்கு வந்துவிட்டான். ஜெயந்தி அறையில் உட்கார்ந்து தலைவாரிக் கொண்டிருந்தாள். கையில் பாக்கெட்டுடன் உள்ளே வந்தவன் பாக்கெட்டை ஜெயந்தியின் பக்கத்தில் வைத்துவிட்டு ''சீக்கிரமாக ரெடியாகணும்'' என்றான்.

''எதுக்கு?''

''எதுக்கா? இன்னிக்கு பரிமளாவின் பிறந்தநாள் என்பதை மறந்துவிட்டாயா?'' வியப்புடன் கேட்டான்.

இரண்டு நாட்களுக்குமுன் பரிமளா இரண்டு சிநேகிதிகளை அழைத்துக் கொண்டு வந்திருந்தாள். நாளை மறுநாள் தன்னுடைய பிறந்தநாள் என்றும், கட்டாயம் வரவேண்டும் என்றும் அழைப்பு விடுத்தாள். பரிமளா வந்தபோது ராஜசேகர் வீட்டில் இருந்தான். நாளேட்டை பார்த்துக் கொண்டிருந்தவன் அதை பக்கத்தில் வைத்துவிட்டு ''இன்னும் பிறந்தநாள் கொண்டாடுகிறாயா. சின்னக் குழந்தை என்ற நினைப்போ?'' என்றான்.

''ஆமாம். நான் இன்னும் குழந்தைதான்.'' பெருமையுடன் சொன்னாள் பரிமளா.

''அதாவது நீ இன்னும் பிறக்கவே இல்லை. நாளை மறுநாள்தான் பிறக்கப்போகிறாய்.'' கிண்டல் செய்தான்.

''தாலாட்டு பாடுவதற்கு நீங்க வந்திடுங்க.'' கலகலவென்று நகைத்தாள் பரிமளா.

''அசல் விஷயம் எனக்குத் தெரியும். இந்த சாக்கில் எல்லோரிடமும் பரிசுகள் வாங்கிவிடலாம் இல்லையா.''

''மகாபிரபோ! நீங்க எந்த பரிசும் கொண்டு வரவேண்டாம். அப்படியே கொண்டுவந்தாலும் திருப்பி அனுப்பப்படும். போதுமா. நேரில் வந்து வாழ்த்துக்களை தெரிவித்தால் பெரும் பாக்கியமாக எடுத்துக் கொள்வோம்.''

ராஜசேகர் எழுந்துவந்து பரிமளாவின் தலையில் லேசாக குட்டிவிட்டு ''எத்தனை மணிக்கு வரணும்?'' என்றான்.

''பெண்கள் ஆறுமணியிலிருந்து எட்டுமணி வரையில். ஆண்கள் எட்டுமணி முதல் ஒன்பது வரையில்.

''நேரம் தவறிவந்தால் பெண்கள் ஆண்களாக மாறிவிடுவார்களா?''

''நிச்சயமாக.''

ஜெயந்தி இருவரின் உரையாடலை கேட்டுக்கொண்டிருந்தாள். பரிமளா போகும்முன் கட்டாயம் வரச்சொல்லி மற்றொரு முறை ஜெயந்தியிடம் சொல்லிவிட்டு போனாள்.

இன்று பரிமளாவின் பிறந்தநாள் என்ற விஷயம் ஜெயந்திக்கு நன்றாக நினைவு இருந்தது. ஆனால் விழாவுக்கு போவதில் அவளுக்குக் கொஞ்சம்கூட விருப்பமில்லை. அதுதான் சாவகாசமாக தலைக்குக் குளித்துவிட்டு சிடுக்கு எடுத்துக் கொண்டிருந்தாள்.

''உன்னைத்தான். நீ சீக்கிரமாக ரெடியாகி விட்டாயானால் கிளப்புக்கு போகும்போது உன்னை அங்கே டிராப் செய்துவிட்டு வரும்போது பிக்கப் செய்து கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டு டவலை எடுத்துக்கொண்டு பாத்ரூமை நோக்கி நடந்தான். திடீரென்று திரும்பிப் பார்த்து ''அந்தப் பெட்டியில் என்ன இருக்குன்னு தெரியுமா?'' ஆர்வத்தை தூண்டும் குரலில் கேட்டான்.

''என்ன?''

''திறந்துபாரு. உனக்கே தெரியும்'' என்று சொல்லிவிட்டு பாத்ரூமுக்குள் நுழைந்தான்.

அவன் முகம் அலம்பிகொண்டு வந்த பிறகும் ஜெயந்தி இன்னும் தலையை வாரிக் கொண்டு இருந்தாள்.

''இன்னும் அப்படியே உட்கார்ந்திருக்கியே? ஏன்?''

ஜெயந்தி நிமிர்ந்து பார்த்தாள். "போய்த்தான் ஆகணுமா" என்றாள்.

"ஆமாம் கட்டாயம் போகணும்." ராஜசேகர் பெட்டியி பக்கம் பார்த்தான். வைத்த இடத்திலேயே இருந்தது. திறந் பார்த்த ஜாடை தெரியவில்லை.

ராஜசேகரின் நெற்றி சுருங்கியது. "உனக்காக புடவை வாங் வந்திருக்கிறேன். உன்னிடம் இருக்கும் லக்னோ வர்க் பிளவு அதற்கு மேட்ச் ஆக இருக்கும். அணிந்துகொண்டு வா" என்றான்

"நான் போட்டுக்கொள்ளும் ஆடைகளைகூட நீங்கதா தேர்வு செய்யணுமா?"

"ஆமாம். நீ எழுந்து சீக்கிரமாக டிரெஸ் மாற்றிக் கொண் வா. அனாவசியமாக என்னுடன் வாதம் செய்யாதே. எனக்கு பிடிக்காது." எரிச்சல் கலந்த குரலில் சொன்னான்.

ஜெயந்தி வேகமாக பின்னி முடித்துவிட்டு மௌனமா அட்டைப் பெட்டியை எடுத்துக் கொண்டு போய்விட்டாள்.

ஆகாய வண்ணப் புடவை, ஆங்காங்கே ஜரிகை புட்ட தலைப்பிலும் அழகான வேலைபாடு.

ஜெயந்தி பத்தே நிமிடங்களில் புடவையை மாற்றிக் கொண்டு வந்தாள். அவளைப் பார்த்ததும் ராஜசேகரன் முகம் மலர்ந்து விட்டது. அருகில் வந்து புடவை மடிப்பு விழுந்த இடத்தில் சரிசெய்தான்.

"நான் ஊகித்ததுபோலவே இருக்கிறாய். புடவை உனக்கு பிடித்திருக்கிறதா?" என்று கேட்டான்.

"நேரமாகி விட்டது என்று சொன்னீங்களே?" இதழ்களை இறுக்கிக்கொண்டு கேட்டாள்.

சட்டென்று அவளை அருகில் இழுத்துக்கொண்டு கோவைப் பழமாய் சிவந்திருந்த அந்த இதழ்களில் ஆத்திரம் தீர முத்தமிட வேண்டும் என்று தோன்றியது ராஜசேகருக்கு. கொஞ்சம் சிரித்த முகத்துடன் இருந்தால்தான் என்ன?



"இந்தப் புடவையில் எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா. என் மீதுள்ள கோபம் உன் கண்களை மறைத்துவிட்டது."

"உங்கள் மீது கோபமா? யார் சொன்னார்கள்?"

"யாரோ வந்து சொல்ல வேண்டுமா என்ன" என்றவன் அவள் இரு தோள்களிலும் கைகளை பதித்து "ஜெயந்தி! உன் பிறந்த நாளன்று நான் அனுப்பிய புடவையை அணிந்திருந்த போது இப்படித்தான் இருந்தாயா?" என்று கேட்டான்.

ஜெயந்தி பதில் சொல்லாமல் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

"ஜெயா!" ராஜசேகர் ஏதோ சொல்லப்போனான்.

ஜெயந்தி சட்டென்று இடைமறித்து "தயவு செய்து என்னை அப்படி அழைக்காதீங்க" என்றாள்.

"ஏன்?"

"பாட்டியைத் தவிர என்னை யாரும் அப்படி அழைக்க மாட்டார்கள்." ஜெயந்தியின் குரல் கம்மிவிட்டது.

"பாட்டி எனக்கு அந்த உரிமையை, அதிகாரத்தை வழங்கி விட்டுச்சென்றாள் என்று சொன்னால்?"

"வெறுமே வாயால் சொன்னால் போறாது."

"நிரூபித்துக் காட்டச் சொல்கிறாயா?"

"உங்களால் முடியாது."

"இப்போதே அதற்கான ஆதாரத்தை காட்டுகிறேன். அப்போதாவது ஒப்புக் கொள்கிறாயா?"

ஜெயந்தி ஒரு நிமிடம் அவன் கண்களை பார்த்துவிட்டு மெதுவாக அவன் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள். "உங்களால் நிரூபிக்க முடியாது. ஒருக்கால் அப்படியே காண்பித்தாலும் நான் நம்பமாட்டேன். திறமை மிகுந்த உங்களால் எத்தனை சாட்சியங்களை வேண்டுமானாலும் உருவாக்கமுடியும்."

''ஜெயந்தி!'' அடியுண்டவன் போல் பார்த்தான்.

''நாம் கிளம்புவதற்கு தாமதம் ஆகும் என்றால் எனக்கு வேலை இருக்கிறது. சுமதியின் மகனுக்காக ஸ்வெட்டர் பின்னிக் கொண்டு இருக்கிறேன்.'' ஜெயந்தி சோபாவில் அமர்ந்துகொண்டு ஸ்வெட்டர் பின்ன ஆரம்பித்தாள்.

# 41

ஜெயந்தியை மிஸெஸ் கருணாகரன் வீட்டில் இறக்கிவிட்டு சேகர் கிளப்புக்கு சென்றுவிட்டான். காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த ஜெயந்தியைப் பார்த்து அந்த வீட்டு பட்லர் திகைத்துப் போய்விட்டான். பல மாதங்களுக்கு முன் ஜெயந்தி வனிதா விஹார் வேலையாக சிலமுறை இங்கே வந்ததும், மணிக்கணக்காக வராண்டாவில் காத்திருந்ததும் அவனுக்குத் தெரியும். அவன் வியப்பிலிருந்து மீளும் முன்பே பரிமளா ஓடி வந்து ஜெயந்தியின் கையைப் பற்றிக்கொண்டு ஆதரவுடன் உள்ளே அழைத்துச் சென்றாள்.

''இதென்ன? நீங்க வரவில்லையா?'' காரை திருப்பிக் கொண்டிருந்த ராஜசேகரிடம் கேட்டாள் பரிமளா.

''எனக்கு வேலையிருக்கு. எப்படியும் ஒன்பது மணிக்குள் வந்து விடுகிறேன்.''

''வேலையிருக்கா, இல்லை பெண்களுக்கான நேரம் என்று...''

''போதுமே.'' ராஜசேகர் சிரித்து விட்டான்.

''கட்டாயம் வரணும். சரிதானா.'' பரிமளா கையை அசைத்துக் கொண்டே சொன்னாள்.

உள்ளே வரும்போது ''ஏன்? என்னவோபோல் இருக்கீங்களே?'' என்று கேட்ட பரிமளா பதிலுக்காக காத்திராமல் ''இந்தப் புடவை ரொப நல்லா இருக்கு. இல்லை இல்லை. இந்தப் புடவையில் நீங்க ரொம்ப அழகாக இருக்கீங்க'' என்றாள்.



ஜெயந்திக்கு வியப்பாக இருந்தது. பரிமளா தன்னிடம் இந்த அளவுக்கு பேசுவாள் என்று எதிர்பார்க்கவில்லை. ஜெயந்தியை பார்த்ததும் மிஸெஸ் கருணாகரன் எழுந்து வந்தாள்.

''யாரந்த பெண்?'' யாரோ கேட்டார்கள்.

''பரிமளாவின் சிநேகிதி.'' மிஸெஸ் கருணாகரன் சொன்னாள்.

ஜெயந்தி ஒரு ஓரமாக உட்கார்ந்து கொண்டாள். அங்கே வந்தவர்களில் ரொம்பபேரை ஜெந்தி அறிந்திருக்கவில்லை. ஓரிருவர் மட்டும் ஜெயந்தியை பார்த்ததும் நின்று ''இந்தப் பெண் வனிதாவிஹார் செகரெட்ரிதானே?'' என்று சந்தேகமாக கேட்டார்கள். உடனே மிஸெஸ் கருணாகரன் ''இல்லை இல்லை. அந்த வேலையை விட்டு விட்டு ரொம்ப நாளாகிவிட்டது. பரிமளாவின் சிநேகிதி. இந்த முத்துமாலை ரொம்ப நன்றாக இருக்கு. எங்கே வாங்கினீங்க?'' என்று பேச்சை மாற்றிவிட்டாள்.

ஜெயந்தி வந்த அரைமணி நேரம் கழித்து ரேகா வந்தாள். நேராக ஜெயந்தியிடம் வந்து ''நன்றாக இருக்கிறாயா?'' என்ற குசலம் விசாரித்தாள். பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டாள். உடைகளை அணிவதில் ரேகா எப்போதும் லேடெஸ்ட் ஃபாஷனை பின்பற்றுவாள். அங்கே இருந்தவர்களின் பார்வை ரேகாவின் மீது படிந்தது. அதை உணர்ந்தும் உணராததுபோல் ரேகா ஜெயந்தியுடன் பேசிக்கொண்டிருந்தாள்.

சற்று நேரம் கழித்து பாரித்த உடலை சுமந்துகொண்டு சுமத்திரா வந்து சேர்ந்தாள். தன்னுடைய உடல் பருமனைப் பற்றி மற்றவர்கள் கிண்டல் செய்கிறார்களே என்ற வருத்தம் அவளுக்கு இல்லையோ இல்லை இது போன்ற பேச்சுகள் கேட்டுக் கேட்டு பழக்கப்பட்டு விட்டதோ தெரியாது. வந்ததுமே பரிமளாவிடம் சென்று வாழ்த்துக்களை தெரிவித்துவிட்டு கையோடுகொண்டு பரிசை தந்தாள்.

''எத்தனை நேரம் ஆச்சு வந்து?'' ரேகாவை நோக்கி வந்தாள் சுமித்ரா. இருவரும் பேச்சில் ஆழ்ந்து விட்டார்கள். யதேச்சையாக

சுமித்திராவின் பார்வை ஜெயந்திமேல் விழுந்தது. "யாரு? ஜெயந்தியா! அடையாளமே தெரியவில்லை" என்றாள்.

"நீங்க பார்த்திருப்பீங்கன்னு நினைச்சேன். அடையாளம் தெரியாத அளவுக்கு மாறிவிட்டாள் என்று சொல்றீங்களா?" ரேகா கேட்டாள்.

"ரொம்ப மாற்றம் தெரிகிறது. பெரிய இடத்து பெண்போல் தோற்றமளிக்கிறாள். விலை உயிர்ந்த புடவை வேறு" சுமித்ரா சொன்னாள்.

'அந்தப் பெண் யாரிடம் இருக்கிறாளோ மறந்து விட்டீங்களா?" ரேகா நீட்டி முழக்கினாள்.

"என்ன ஜெயந்தி? ராஜசேகர் நலம்தானே? பார்ப்பதே ரொம்ப அபூர்வமாகி விட்டது." சுமித்ரா கேட்டாள்.

"ஓய்வு கிடைக்க வேண்டாமா?" ஜெயந்தியின் பக்கம் பார்த்துக்கொண்டே நக்கலாக சிரித்தாள் ரேகா.

ஜெயந்திக்கு அவர்களுடைய பேச்சு உடல்மீது பூரான் ஊருவது போல் அருவருப்பாக இருந்தது.

அதற்குள் பரிமளா ஓடிவந்து ஜெயந்தியின் கையைப் பற்றி எழுப்பிக் கொண்டே "என்னுடைய சினேகிதிகளுக்கு அறிமுகப் படுத்தி வைக்கிறேன் வாங்க. யாரென்று தெரிந்துகொள்ள அவர் களும் ஆர்வமாக இருக்கிறார்கள்" என்றாள்.

ஜெயந்தி மௌனமாக எழுந்து பரிமளாவை பின்பற்றினாள்.

"அதிர்ஷ்டசாலிதான்."

"இந்த அதிர்ஷ்டம் எத்தனை நாட்கள் இருக்குமோ அதையும் பார்க்கத்தானே போகிறோம்."

பின்னாலிருந்து இருவரின் பேச்சும் காற்றில் மிதந்து வந்து ஜெயந்தியின் காதுகளில் விழுந்தது.

பரிமளாவின் சிநேகிதிகள் இயல்பாக கலகலவென்று பேசினார்கள். ஜெயந்தி மனதில் எதுவும் பதியவில்லை. ரேகாவும், சுமித்திராவும் பேசிய பேச்சுக்கள் இன்னும் காதில் எதிரொலித்துக்



கொண்டிருந்தன. அவர்களுக்கு தன்மீது இவ்வளவு கோபம் ஏன்? நேராக ராஜசேகரிடமே கேட்டிருக்கலாம் இல்லையா.

வராண்டாவில் நின்று கொண்டிருந்த ஜெயந்திக்கு வேண்டா மென்று நினைத்தாலும் பழைய நாட்கள் நினைவுக்கு வந்தன. வனிதாவிஹார் செகரெட்ரியாக இருந்தபோது ஒரு சின்ன கையெழுத்துக்காக இதே வராண்டாவில் எத்தனை மணிநேரம் காத்துக்கொண்டு நின்றிருந்தாள்? உள்ளே போனாலும் மிஸெஸ் கருணாகரன் எவ்வளவு அலட்சியமாக பேசுவாள்? இதே பரிமளா அன்று தன்னை ஏறெடுத்துக்கூட பார்த்தது இல்லையே. இப்போ தன்னுடைய மதிப்பு உயர்ந்து விட்டதா? 'அவர்களுக்கு வேண்டி யது நீங்க இல்லை. உங்கள் மூலமாய் ராஜசேகர்.' சிவராமன் சொன்னது நினைவுக்கு வந்தது. ஆகமொத்தம் அவர்கள் யாரும் மாறவில்லை. பச்சோந்தியைபோல் நிறத்தை மாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அவ்வளவுதான்.

"இதென்ன? இங்கேயே நின்று விட்டீங்களே?" பின்னா லிருந்து பரிமளாவின் குரல்கேட்டு திடுக்கிட்டு பின்னால் திரும்பினாள். பரிமளாவின் பக்கத்தில் ராஜசேகரும் இருந்தான். இருவரின் பார்வையும் ஒரு வினாடி சந்தித்து உடனே பிரிந்தன.

"வாங்க...வாங்க." மிஸெஸ் கருணாகரன் ராஜசேகரை வரவேற்பது போல் சொன்னாள். ரேகா, சுமித்ரா எழுந்து அருகில் வந்தார்கள்.

"எனக்கு வேலை இருக்கு. உடனே கிளம்ப வேண்டும்" என்றான் ராஜசேகர்.

"அதற்குள்ளேயா?" கண்களை அகல விரித்து புருவத்தை உயர்த்தி வியப்பைக் காட்டினாள் மிஸெஸ் கருணாகரன்.

"நாளை முக்கியமான மீட்டிங் இருக்கு. அதற்கான பைல்களை பார்க்க வேண்டும். ஏற்கனவே நேரமாகிவிட்டது." வாட்சைப் பார்த்துக் கொண்டே சொன்னான். ரேகா ராஜசேகரை கண்ணாலேயே விழுங்கி விடுவதுபோல் பார்த்துக் கொண்டிருந் தாள். ஆனால் ராஜசேகர் அவளைக் கவனிக்கவே இல்லை.

யாருடைய வற்புறுத்தலையும் ராஜசேகர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ''கிளம்பு ஜெயந்தி!'' என்றவன் பரிமளாவின் காதைப் பிடித்து திருகி 'விஷ்யூ ஹேப்பி பர்த்டே மேடம்'' என்றான்.

''பிறந்து ஒருநாள் கூட ஆகாத குழந்தையின் காதைப் பிடித்துத் திருகலாமா? சாமி கண்ணை குத்தும்'' என்றாள் பரிமளா.

''இந்தக் குழந்தை பிறந்ததுமே புடவை கட்டிக்கொண்டு இருக்கே. அதனால் பரவாயில்லை.'' கொண்டு வந்த பரிசை கொடுத்தான்.

''நீங்கதான் பரிசு தரமாட்டேன்னு சொன்னீங்களே.'' தூண்டிவிடுவது போல் கேட்டாள் பரிமளா.

''பரிசுகொண்டு வரக்கூடாது என்று தடைபோட்டது நீதானே.''

''பரிசு கொடுக்கும்போது மறுப்பது நன்றாக இருக்காதே.''

''ஏற்றுக்கொள்வாள் என்று தெரிந்த பிறகு கொண்டுவராமல் இருப்பது நியாயம் இல்லையே.'' ராஜசேகரும் சளைக்கவில்லை.

இருவரின் உரையாடலை கேட்ட பிறகு மிஸெஸ் கருணாகரனின் முகம் மலர்ந்துவிட்டது.

எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு ராஜசேகரும், ஜெயந்தியும் வெளியில் வந்தார்கள். வழியில் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. இருவரும் தங்களுடைய யோசனையில் ஆழ்ந்து விட்டார்கள்.

அன்று இரவு எத்தனை முயற்சி செய்தாலும் ஜெயந்திக்கு உறக்கம் வரவில்லை. மனதில் யாரோ ''இங்கிருந்து போய்விடு'' என்று உரத்த குரலில் அதட்டுவது போல் தோன்றியது.

'எங்கே போகமுடியும்? அவன் போகவிடவும் மாட்டான்.'

'சொல்லாமல் வீட்டைவிட்டு போய்விடு.



'எங்கே போனாலும் கண்டுபிடித்துவிடுவான்.'

'அமைதியற்ற இந்த சூழ்நிலையில் மேலும் இருந்தாயானால் உனக்கு பைத்தியம்தான் பிடித்துவிடும்.'

'நான் என்ன அவனுடைய கடைக்கண் பார்வைக்கு ஏங்குகிறேனா இல்லை அவனை சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும் என்று தவிக்கிறேனா? எனக்கென்ன பயம்? ஊரார் பேச்சை பொருட்படுத்த வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.'

'அப்போ இதுபோன்ற விழாக்களுக்கு போகாமல் ஒதுங்கி இரு.'

''ஜெயந்தி! இன்னும் தூங்கவில்லையா?'' திடீரென்று குரல் விழுந்ததும் திடுக்கிட்டாள். அறையில் வெளிச்சம் இல்லாவிட்டாலும் வெளியிலிருந்து வரும் மங்கலான வெளிச்சத்தில் அறையின் வாசலில் ராஜசேகர் நின்றுகொண்டிருப்பது தென்பட்டது.

''தூங்கிக் கொண்டுதான் இருக்கிறேன்.'' தலையணையில் முகத்தை புதைத்துக் கொண்டே சொன்னாள்.

''வந்தது முதல் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். தூக்கம் வராமல் அப்படியும் இப்படியும் புரண்டுகொண்டே இருக்கிறாய். தலையை வலிக்கிறதா?''

''இல்லை இல்லை. தூங்கிக் கொண்டுதான் இருந்தேன்.''

''தூங்கிறவங்க தூங்குகிறேன் என்று பதில் சொல்வார்களா என்ன?''

''இப்பொழுதுதான் விழிப்பு வந்தது.''

''பொய் சொல்ல வேண்டிய அவசியம் இப்போ என்ன வந்தது?'' அறைக்குள் வந்து விளக்கை போட்டுக்கொண்டே சொன்னான்.

''வேண்டாம். வேண்டாம். விளக்கை அணைத்துடுங்க.''

''ஏன்? என்ன ஆச்சு?''

"வெளிச்சத்தை பார்க்கவே வெறுப்பாக இருக்கு."

"நேற்று வரையில் இருட்டு என்றால் பயம் என்றாயே."

ஜெயந்தி பதில் சொல்லவில்லை. ராஜசேகர் விளக்கை அணைத்து விட்டு அருகில் வந்தான். ஜெயந்தியின் இதயம் பயத்தினால் வேகமாக துடிக்கத் தொடங்கியது. அவன் வந்து கட்டிலில் அமர்ந்து கொண்டால்? வலுக்கட்டாயமாக அணைத்துக் கொண்டால்? அப்படி ஏதாவது நடந்தால் நகத்தால் பிராண்டுவாள். பற்களால் கடிப்பாள். "உன்னைக் கண்டால் எனக்கு வெறுப்பு" என்று கத்துவாள்.

ஜெயந்தி மூச்சை அடக்கிக் கொண்டு காத்திருந்தாள். ஆனால் அவன் அப்படி எதுவும் செய்யவில்லை.

"கர்டென்கூட போடாமல் வைத்திருக்கிறாயே? குளிர்காற்று அடிக்கவில்லையா? ஜன்னல் கதவைச் சாத்தி விடட்டுமா?" என்று கேட்டான். ஜன்னல் கதவைச் சாத்திவிட்டு கட்டில் அருகில் ஒரு நிமிடம் நின்றான். "ஜெயந்தி! என்னை மன்னித்து விடு. இனி ஒரு நாளும் உன்னை அந்த கும்பலில் தனியாக அனுப்ப மாட்டேன். பரிமளாவுடன் கொஞ்ச நேரமாவது சந்தோஷமாக இருப்பாய் என்று நினைத்தேன். ஆனால் நான் வரும்போது தனியாக ஒரு மூலையில் நின்றிருந்த உன்னைப் பார்த்ததுமே எனக்குப் புரிந்துவிட்டது, உன்னால் அவர்களுடன் இணைய முடியாது என்று. போகட்டும் அதுவும் நல்லதுதான்."

எரிமலையாய் கொந்தளித்துக் கொண்டிருந்த மனதின் மீது பனிமழை பொழிந்தாற்போல் இருந்தது ஜெயந்திக்கு.

"உனக்கு ஒரு மாறுதல் வேண்டும் என்றுதான் கட்டாயப் படுத்தி உன்னை அனுப்பி வைத்தேன். மேலும் மன அமைதியை இழந்து திரும்பி வந்திருக்கிறாய். அதையெல்லாம் மறந்துவிட்டு நிம்மதியாக தூங்கு." மென்மையான குரலில் சொன்னான்.

ஏனோ ஜெயந்திக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. அவன் கையைப் பற்றிக் கொண்டு அப்படியே தூங்கிவிட்டாள்.



என்ன என்றுகூட தோன்றியது. ராஜசேகர் கதவை வெறுமே சாத்திவிட்டு வெளியேறினான்.

ரொம்ப நேரம் வரையில் ஜெயந்தி தூங்கவில்லை. அதுவரையில் அவனும் விழித்துக் கொண்டிருந்ததை கதவு இடுக்கு வழியாய் வந்து விழுந்த வெளிச்சம் பறைசாற்றியது.

# 42

ஜெயந்தி ஜன்னல் கம்பியைப் பற்றிக்கொண்டு ஏதோ யோசனையில் நின்றிருந்தாள். கதவைத் திறந்துகொண்டு ராஜசேகர் உள்ளே வந்தான். அவனைப் பார்த்ததும் வெளியேறப் போனாள்.

"ஜெயந்தி! கொஞ்சம் இரு" என்று சட்டைப் பையிலிருந்து டிக்கெட்டுகளை எடுத்தான். "ரவீந்திர பாரதியில் நாட்டிய நாடகம் இருக்கிறது. நீயும், சுமதியும் போய்ப் பாருங்க. சிவராமனும் வருவான். போன் செய்திருக்கிறேன்" என்றான்.

டிக்கெட்டுகள் பெற்றுக்கொண்டு நகரப்போனவள் நின்று "அப்பொ நீங்க?" என்றாள்.

"நானா... வரவில்லை. வரத்தான் வேண்டும் என்று நீ சொன்னால் வருகிறேன்." அவளுடைய பதிலுக்காக ஆர்வத்துடன் காத்திருந்தான்.

"பாவாயில்லை. நேரம் ஆனாலும் துணைக்கு சிவராமன் இருப்பானே."

ராஜசேகரின் முகம் ஒருநிமிடம் இருண்டது. "எனக்குத் தெரியும். அதான் அவனுக்கு போன் செய்தேன்."

ஜெயந்தியின் முகம் சிவந்துவிட்டது. வேறு எதுவும் சொல்லாமல் அங்கிருந்து போய்விட்டாள்.

நிகழ்ச்சிக்கு சுமதியால் வரமுடியவில்லை. ஜெயந்தியும், சிவராமனும் போனார்கள். நினைத்தது போலவே நிகழ்ச்சி முடிய

ரொம்ப நேரமாகி விட்டது. நாட்டிய நிகழ்ச்சி அற்புதமாக இருந்ததோடு நடுநடுவில் சிவராமனின் கலகலப்பான பேச்சும் சேர்ந்து கொண்டதால் ஜெயந்தியின் மனம் முழுவதும் உற்சாகம் நிரம்பிவிட்டது.

வீட்டுக்கு வரும் வழியில் ஜெயந்தி சிவராமனிடம் பேசிக்கொண்டே வந்தாள்.

''இந்த மாலைப் பொழுதை உன்னுடன் கழித்தது மனதிற்கு அமைதியாகவும், திருப்தியாகவும் இருக்கு சிவராமன்'' என்றாள்.

''அது என்னுடைய அதிர்ஷ்டம்'' என்றான்.

வீட்டுக்கு வந்த பிறகு காரைவிட்டு இறங்கிய சிவராமன் படிவரையில் வந்தான்.

''உள்ளே விளக்கு எரியவில்லை. அவர் இன்னும் வீடு திரும்பவில்லை என்று நினைக்கிறேன்'' ஜெயந்தி சொன்னாள்.

''அப்பொ நான் கிளம்புகிறேன்.''

''உனக்கு நன்றியை எப்படி தெரிவித்துக் கொள்வது என்று எனக்குத் தெரியவில்லை.''

சிவராமன் மௌனமாக இருந்தான்.

''எப்போதாவது உன்னிடம் ஏதாவது உதவியைக் கேட்டால் மறுக்க மாட்டாயே?''

''ஊஹூம்.''

''எந்தச் சூழ்நிலையிலும்?''

''எப்போதும் மறுக்க மாட்டேன்.'' திடமான குரலில் சொன்னான்.

''தாங்க்யூ. உன்னைப் போன்ற ஒரு நண்பன் இருப்பதால் ரொம்ப தைரியமாக உணருகிறேன், முக்கியமாக இதுபோன்ற சூழ்நிலையில்.''

''என்னைவிட உயர்ந்தவங்க உங்களுக்கு இருக்கிறார்கள். அதை இன்னும் நீங்க புரிந்து கொள்ளவில்லை.''



ஜெயந்தி பெருமூச்சுவிட்டாள்.

''நேரமாகிவிட்டது வருகிறேன்.''

''ஓ.கே. மெனி மெனி தாங்க்ஸ்.''

''நீங்க அடிக்கடி அந்த வார்த்தையைச் சொல்லி என்னை வேற்று மனிதனாக்காதீங்க. வருகிறேன். குட்நைட்.'' கையை அசைத்துவிட்டு கிளம்பிப் போனான்.

சிவராமன் காரை ரிவர்ஸ் எடுத்து கேட்டைத் தாண்டிப் போகும் வரையில் ஜெயந்தி அங்கேயே நின்றிருந்தாள்.

வெறுமே சாத்தியிருந்த கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்து ஹால் விளக்கை போட்டாள். போட்டவள் திடுக்கிட்டு அப்படியே நின்று விட்டாள். ஸ்விச் மீது இருந்த கையை விலக்கிக்கொள்ள வேண்டும் என்ற நினைப்புக்கூட இருக்க வில்லை. ஹால் நடுவில் இருந்த சோபாவில் ராஜசேகர் பின்னால் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். இருகைகளையும் தலைக்கு பின்னால் மாலையாக கோர்த்து கண்களை மூடியிருந்தான்.

''நீங்க...நீங்க இங்கேதான் இருந்தீங்களா?'' தடுமாறிக் கொண்டே கேட்டாள்.

''இப்பொழுதுதான் வந்தேன். பத்துநிமிடங்கள் ஆகியிருக் கும். எப்படியும் நீ வரும் நேரமாகிவிட்டது. சேர்ந்து சாப்பிடு வோம் என்று இங்கேயே உட்கார்ந்துவிட்டேன்.'' அவன் குரல் தொனித்த விதத்தை பார்க்கும்போது விழித்துக் கொண்டுதான் இருக்கிறான் என்பதை உணரமுடிந்தது.

''உங்களுக்கு எங்களுடைய பேச்சுக்குரல் கேட்க வில்லையா?''

''என் காதில் விழவேண்டும் என்று எண்ணி பேசிய வார்த் தைகள் இல்லையே?'' கண்களைத் திறந்த ஜெயந்தியின் பக்கம் பார்த்துக்கொண்டே கேட்டான். அவன் முகம் ரொம்ப களைப்பாக தென்பட்டது.

''சொல்லு. என் காதில் விழவேண்டும் என்ற எண்ணத்துடன் சொன்னாயா?''

இல்லை என்பது போல் தலையை அசைத்தான்.

''அப்போ என் காதில் எதுவும் விழவில்லை. போதுமா. சீக்கிரமாக உடைகளை மாற்றிக்கொண்டு வா. சாப்பிடுவோம். எனக்கு பசிக்கிறது.'' ஜெயந்தி பக்கம் பார்க்காமலேயே எழுந்து உள்ளே போனான்.

ஜெயந்தி ரொம்ப நேரம் அங்கேயே நின்று விட்டாள்.

★ ★ ★

மேலும் ஒருவாரம் கழிந்தது. ஜெயந்தி தன்னுடைய அறையில் புத்தகத்தை புரட்டிக்கொண்டு இருந்தாள். யாராவது வந்தால் பேசுவது. இல்லையா புத்தகங்களை படிப்பது. வேறு எந்த வேலையும் இல்லை. அப்படியும் சுமதியின் குழந்தை களுக்காக ஸ்வெட்டர் பின்னிக் கொடுத்தாள். கமலா மாமிக்கு ப்ளாஸ்டிக் வயிரில் கூடையை போட்டுக் கொடுத்தாள்.

சுமதி வந்தபோது ''பொழுதே போகவில்லை'' என்று புகார் செய்தாள்.

''நீயாக ஏதாவது வேலையை எடுத்துச் செய். இல்லையா ராஜசேகரிடம் கேட்டால் அவனே ஏதாவது வழியைக் காட்டுவான்.'' அறிவுரை வழங்கினாள்.

ராஜசேகரைக் கேட்டால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் அவன் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்வதுதான் கஷ்டம். அன்று சிவராமனுடன் வெளியேபோய் வந்த பிறகு வாசலில் சிவராமனிடம் தான் பேசியது அவன் காதில் விழுந்திருக்குமோ என்று பயந்தாள். ஆனால் அவன் எதையும் பொருட்படுத்தியதாக தெரியவில்லை. வழக்கம் போல் சாதாரணமாக இருந்தான்.

சுமதி சொன்னது நினைவுக்கு வந்தது. ராஜசேகர் ஓய்வாக இருக்கும் நேரம் இது. எழுந்து அவனுடைய அறைக்குப் போனாள்.



ஜெயந்தி போனபோது ராஜசேகர் சாக்ஸ் அணிந்து கொண்டி ருந்தான்.

''இந்த வீட்டில் எல்லோரும் வேலை செய்கிறார்கள்.'' முன்னுரையைப் போல் சொன்னாள்.

ராஜசேகர் நிமிர்ந்து வியப்புடன் பார்த்தான். ஜெயந்தி பார்வையை தாழ்த்திக் கொண்டாள்.

''நான் ஒருத்திதான் எந்த வேலையும் செய்யாமல் வேளா வேளைக்கு சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறேன். எனக்கே வெட்கமாக இருக்கிறது.''

''நன்றாக இருக்கு நீ சொல்வது. சாப்பிடுவது ஒரு வேலை இல்லை என்று யார் சொன்னார்கள்?'' கம்பீரமான குரலில் சொன்னான்.

''பரிகாசம் வேண்டாம். நீங்க எனக்கு ஏதாவது வேலையை போட்டுக் கொடுக்கணும்.''

''உன்னால் எந்த வேலையைச் செய்ய முடியும்?''

''இதற்குமுன் உங்களிடம் செகரெட்ரியாக இருந்தபோது செய்தேனே.''

''அந்த வேலையை உனக்குக் கொடுத்தால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் சுமதியின் கணவனை வேலையைவிட்டு நீக்க வேண்டியிருக்கும்.''

ஜெயந்தி மௌனமாக இருந்தாள். ராஜசேகர் சுமதியின் கணவருக்கு இந்த வேலையை போட்டுக் கொடுத்தது முதல் அவர்கள் வீட்டில் கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறார்கள். சுமதி வாய்க்குவாய் ராஜசேகர் செய்த உபகாரத்தை சொல்லிக்கொண்டே இருப்பாள். திடீரென்று அவரை வேலையைவிட்டு எடுத்தால் சரியாக இருக்காது. ராஜசேகரும் அதற்கு ஒப்புக்கொள்ள மாட் டான்.

''போகட்டும். வேறு ஏதாவது?''

ராஜசேகர் அறை முழுவதும் பரிசீலித்துக் கொண்டே "உனக்கு எந்த வேலையைத் தருவது? என் கண்ணுக்கு எதுவும் தெரியவில்லையே?" என்றான்.

"எதுவாக இருந்தாலும் சரி."

சாக்ஸ் அணிந்து கொண்டு நிமிர்ந்த ராஜசேகர் "எந்த வேலையாக இருந்தாலும் பரவாயில்லையா? உன் சுயகௌரவம் குறுக்கே வராதா?" என்றான்.

ஜெயந்திக்குக் கோபம் வந்தாலும் கட்டுப்படுத்திக்கொண்டு "ஊஹூம்" என்றாள்.

"அப்படியென்றால் இப்போதைக்கு என் கண்ணில் பட்ட வேலைகளை சொல்கிறேன். தினமும் என் ஷூக்களை பாலிஷ் போடுவது, என் உடைகளை தோய்ப்பது இன்னும்..." என்று சொல்லிக்கொண்டே நிமிர்ந்து பார்த்தான்.

ஜெயந்தி ஏற்கனவே அந்த இடத்தைவிட்டு போய்விட்டிருந்தாள்.

மறுநாள் அவசர வேலையாய் கிளம்பிக் கொண்டிருந்த ராஜசேகர் ஷூக்களை அணிந்து கொள்வதற்காக ரேக்கிலிருந்து எடுக்கப் போனான். அவற்றைப் பார்த்ததும் "வாசு!" என்று கோபமாக கத்தினான்.

வாசு ஓடி வந்தான்.

"சுயநினைவோடுதான் இந்த ஷூக்களை பாலிஷ் போட்டாயா? என் பேண்ட் நாசமானாலும் பரவாயில்லையா?" எரிச்சலுடன் கேட்டான்.

வாசு பயந்துகொண்டே மௌனமாக இருந்தான்.

"வாயில் என்ன கொழுக்கட்டையா? பதில் சொல்லு." அதட்டினான்.

"இன்னிக்கு நான் பாலிஷ் போடலைங்க."

"பின்னே?"



"சின்னம்மாதாங்க. வேண்டாம்னு சொன்னாலும் கேட்கவில்லை."

"சின்னம்மாவா!" இப்போ புரிந்துவிட்டது. நேற்று தான் விளையாட்டாக சொன்னதை சீரியஸாக எடுத்துக் கொண்டு விட்டாள் போலும். ராஜசேகர் முகத்தில் கோபம் மறைந்து விட்டது. இருந்தாலும் குரலில் தீவிரத்தை குறைக்காமல் "சின்னம்மா என் ஷூவுக்கு பாலிஷ் போடுவதாக இருந்தால் நீ இங்கே எதற்காக இருக்கிறாய்? கழுதைகளை மேய்க்கவா?" என்று அதட்டினான். "போ...போய் உடனே வேறு ஷூவை பாலிஷ் போட்டுகொண்டு வா. அர்ஜெண்ட்!" என்று விரட்டினான்.

வாசு ஓடிப்போய் ஐந்தே நிமிடங்களில் ஷூக்களை பாலிஷ் போட்டு எடுத்து வந்து ராஜசேகரின் காலடியில் வைத்தான்.

"சின்னம்மா எங்கே?"

"துணிகளை தோய்க்கிறாங்க." சின்னம்மா ஷூ பாலிஷ் மட்டுமே இல்லை. இன்னும் பல வேலைகளை செய்கிறாள் என்று குற்றம் சாட்டும் தொனியில் சொன்னான்.

"துணிகளை தோய்க்கிறாளா?" திடுக்கிட்டாற்போல் பார்த்தான். "வேலைக்காரன் என்னவானான்?"

"கொல்லைப்புரம் ஏதோ வேலை செய்துகிட்டு இருக்கிறான்."

"போய் நான் வரச் சொன்னேன்னு அழைச்சுகிட்டு வா." ஷூக்களை அணிந்துகொண்டே சொன்னான். வாசு மறுபடியும் ஓடினான்.

அய்யா எதற்காகவோ அழைக்கிறார் என்றதும் கைவேலையை அப்படியே போட்டுவிட்டு ஓடிவந்தான் வேலைக்காரன்.

அவன் வரும்போது ராஜசேகர் நிலைக் கண்ணாடியின் முன் நின்று தலையை வாரிக்கொண்டிருந்தான்.

''அழைத்தீங்களாமே?'' வாசற்படியிலேயே நின்று பணிவாக கேட்டான்.

''இன்னிக்கு தேதி என்ன?'' பின்னால் திரும்பாமலேயே கேட்டான் ராஜசேகர்.

''தேதியா?'' வியப்புடன் பார்த்தான் வேலைக்காரன். தேதியை தெரிந்துகொள்ள அய்யா தன்னை அழைப்பதாவது?

ராஜசேகர் பின்னால் திரும்பினான். ''உன்னைத்தான் கேட்கிறேன். இன்றைக்கு தேதி என்ன?'' இரட்டிப்பது போல் கேட்டான்.

பத்து பாத்திரம் தேய்ப்பவனுக்கு முதல் தேதியைத் தவிர வேறு என்ன தேதி நினைவு இருக்கும்? தலையைச் சொறிந்து கொண்டே நின்றிருந்தான்.

''வாசு! நீ சொல்லு.''

''பத்தாம் தேதி.'' பக்கத்திலேயே இருந்த வாசு பெருமை பொங்கும் குரலில் சொன்னான்.

''இதோ... இந்த மாச சம்பளம் எடுத்துக்கிட்டு உடனே போய்விடு.'' சட்டைப்பையிலிருந்து பணத்தை எடுத்து வீசினான் ராஜசேகர்.

''அய்யா!'' வேலைக்காரன் திகைத்துப்போய் விட்டான்.

''ஆமாம். சின்னம்மா என்னுடைய துணிகளை தோய்ப்பதாக இருந்தால் நீ இங்கே எதற்கு? என் தலைமீது ஏறி உட்கார்ந்து கொள்ளவா? உடனே இங்கிருந்து போய்விடு.'' கோபமாக சொன்னான்.

அய்யாவுக்கு கோபம் வந்த காரணம் புரிந்ததும் வேலைக்காரன் அழுகை பொங்கும் குரலில் ''அய்யா! சின்னம்மா என் கையிலிருந்து துணிகளை பிடுங்கிக்கிட்டு என்னை பாத்ரூமிலிருந்து துரத்தி விட்டாங்க. நீங்களே சொல்லுங்க. நான் என்ன செய்யட்டும்?'' இரண்டு கையாலும் கன்னத்தில் போட்டுக் கொண்டான். அறையின் நடுவில் தரையில் விழுந்துகிடந்த பணத்தை எடுத்து கண்ணில் ஒற்றிக்கொண்டு ராஜசேகரிடம் நீட்டினான்.

''குழந்தை குட்டி இருப்பவன். உங்க தயவில்தான் வாழ்கிறோம். இனி ஒருநாளும் இப்படி நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன். இந்த தடவை மன்னித்து விடுங்கள் அய்யா'' என்றான்.

ராஜசேகர் ஒரு நிமிடம் அவனை தீவிரமாக பார்த்துவிட்டு ''சரி. சரி. போய் வேலையை பாரு. ஒருதடவை கொடுத்த பணத்தை திருப்பி வாங்கும் பழக்கம் எனக்கு இல்லை. அந்தப் பணத்தை எடுத்துக்கிட்டு போய் குழந்தைகளுக்கு புதுடிரெஸ் வாங்கிக்கொடு. இனி இந்த மாதிரி நடக்காமல் பார்த்துக்கொள். சரிதானா'' என்றான்.

மேலும் வியப்படைந்த வேலைக்காரன் வாசுவின் பக்கம் வெற்றிப் பெருமிதத்துடன் பார்த்துவிட்டு பணத்தை எடுத்து இடுப்பில் சொருகிக்கொண்டு போய்விட்டான்.



# 43

அன்றும் அதற்கு அடுத்த நாளும் ராஜசேகருக்கு மூச்சுவிடாத அளவிற்கு வேலைகள் இருந்தன. மதியச் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வரமுடியாத அளவுக்கு பிசியாக இருந்தான்.

மூன்றாவது நாள் மதியம் சாப்பாடு முடிந்த பிறகு ராஜசேகர் தன்னுடைய அறையில் கட்டில் மீது படுத்துக்கொண்டு புத்தகத்தை படித்துக் கொண்டிருந்தான். அந்த சமயத்தில் ஜெயந்தி உள்ளே வந்தாள். ராஜசேகர் அவளை பார்த்தும் பார்க்காததுபோல் தாள்களை புரட்டத் தொடங்கினான்.

''நீங்க கொஞ்சம் வாசுவையும் வேலைக்காரனையும் கண்டிச்சு வைக்கணும்'' என்றாள்.

''கண்டிக்க வேண்டுமா'' புத்தகத்தை பக்கத்தில் நகர்த்தி விட்டு ''என்ன தவறு செய்தாங்க?'' வியப்படைந்துவிட்டது போல் புருவங்களை உயர்த்தி கேட்டான்.

''நேற்றும், இன்னிக்கும் நான் உங்க ஷூவை பாலிஷ்போடப் போனால் லாக் என் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டு ''இங்கே சிழுதை மேய்க்கவா நான் இருக்கிறேன்'' என்று என் கைக்கு ஷூ கிடைக்காமல் செய்கிறான். வேலைக்காரன் என்னை பாத்ரூமுக்குள் நுழையவிடாமல் வாசலுக்கு குறுக்கே நின்றுகொண்டு ''நீங்க துணி தோய்ப்பதாக இருந்தால் நான் எதற்கு? யார் தலைமீது ஏறி உட்கார்ந்து கொள்ளட்டும்?'' என்று வழிமறிக்கிறான்.''

ராஜசேகர் புத்தகத்தால் முகத்தை மறைத்துக் கொண்டான்.

''நீங்க இதை சீரியஸாக எடுத்துக் கொள்ளணும்.''

''என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?''

''அவர்களை சத்தம் போடுங்க.''

''எதற்கு? வாங்கும் சம்பளத்திற்கு நேர்மையாக உழைத்ததற்கா?''

''இல்லையென்றால் வேலையைவிட்டு நீக்கிடுங்க.''

''அவர்களுக்கும் குடும்பம் இருக்கிறது.''

''அப்போ எனக்கு வேறு ஏதாவது வேலையை காட்டுங்க.'' பிடிவாதமாக சொன்னாள்.

''இவ்வளவு பிடிவாதம் ஏன்? வேலை செய்ய நினைப்பது பொழுது போக்கவா இல்லை நன்றிக்கடன் தீர்க்கவா?''

''நீங்க எப்படி நினைத்துக் கொண்டாலும் சரி.''

''நீ செய்யணும் என்று நினைத்தால் யாரும் குறுக்கே வராத வேலைகள் சிலது இருக்கு.''

''சொல்லுங்க.''



''மாட்டேன் என்று சொன்னால்?''

''மறுக்கமாட்டேன். சொல்லுங்க.''

''என் தலைக்கு எண்ணெய் தடவி வாரி விடணும். நான் குளிக்கும் போது முதுகை தேய்த்து விடணும்.''

ஜெயந்தி கண்கள் அகலவிரிய பார்த்துக் கொண்டிருந்தாள்.

''மாலையில் நான் வரும்போது நான் வாங்கி வந்த புடவைகளில் எனக்கு பிடித்த புடவையை உடுத்தி பளிச்சென்று இருக்கணும். கையில் காபியுடன்...'' அவன் வார்த்தைகள் இன்னும் முடியக்கூட இல்லை. தொப் என்று ஏதோ பொருள் மேலே விழுந்ததும் திடுக்கிட்டு அந்த பக்கம் பார்த்தான். மேஜைக்கு பக்கத்தில் நின்றிருந்த ஜெயந்தி ஒவ்வொரு புத்தகமாக எடுத்து பலமாக அவன் மீது வீசிக்கொண்டிருந்தாள்.

அந்த தாக்குதலிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்துகொண்டே ''ஜெயந்தி! போதும் தாயே. நிறுத்து'' என்று உரத்தக் குரலில் கத்தினான். புத்தகங்கள் வீசப்படுவது நின்று விட்டது. ராஜசேகர் நிம்மதியாக மூச்சை விடுக்கொண்டு தலையை நிமிர்த்தி பார்த்தான் அதற்குள் ஜெயந்தி அங்கிருந்து போய்விட்டிருந்தாள்.

அறைக்குள் வந்து கதவைச் சாத்திக்கொண்ட ஜெயந்திக்கு அவன் பேச்சில் இருந்த பரிகாசம், கண்களில் தென்பட்ட குறும்பு, இதழ் ஓரத்தில் முறுவல் எல்லாம் நினைவுக்கு வந்தபோது உடல் பற்றி எரிவதுபோல் இருந்தது.

அவன் எண்ணம்தான் என்ன? கடவுள் தன்னை இந்த நிலைக்கு ஆளாக்குவானேன்? ஜெயந்திக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. இமைகள் கண்ணீரால் நனைத்தன.

பத்து நிமிடங்கள் கழித்து ராஜசேகர் வந்து கதவைத் தட்டினான்.

''ஜெயந்தி!''

ஜெயந்தி பதில் பேசவில்லை.

''உன்னைத்தான். கத்தவைத்திற'' மற்றொருமுறை அழைத்தான்.

நான்கைந்து முறை அழைத்தும் பதில் வராததால் ராஜசேகர் கிளம்பிப் போய்விட்டான்.

★ ★ ★

''ஜெயந்தி! இன்று மாலை எல்லோரும் திராட்சை தோட்டத்திற்கு வருகிறார்கள். நாமும் போகலாம்.''

''சரி.'' சுருக்கமாக சொன்னாள்.

''வருவதில் உனக்கு விருப்பம்தானே.''

''என்னுடைய விருப்பு வெறுப்புகளுக்கு முக்கியத்துவம் இருக்கிறதா என்ன?''

ராஜசேகர் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். ஜெயந்தி கையில் இருந்த புத்தகத்தில் பார்வையை பதித்தாள்.

''போகட்டும். யாரெல்லாம் வருகிறார்களோ கேட்கக் கூடாதா?'' என்றான்.

''தெரிந்துகொள்ளும் ஆர்வம் இல்லை.''

''காரணம்?''

''வருபவர்கள் நிச்சயமாக உங்களுக்கு வேண்டியவர்களாக இருப்பார்கள்.''

''உன் உத்தேசம்தான் என்ன?''

''எதுவும் இல்லை.''

ராஜசேகர் ஒரடி முன்னால் வந்து ''நானாக வந்து உன்னிடம் பேச வருகிறேன் என்பதால்தானே இப்படி அலட்சியப்படுத்துகிறாய்?'' என்றான்.

''ஏன் என்னிடம் பேச வேண்டும்?''



''அதற்காக பிச்சைக்காரனை விரட்டுவதுபோல் அலட்சியப் படுத்துவாயா?''

ஜெயந்தி சரேலென்று தலையை உயர்த்தினாள். ''பிச்சைக்காரி நான்தான். எல்லாவற்றுக்கும் உங்கள் மீது ஆதாரப் பட்டவள்...'' ஜெயந்தி இன்னும் சொல்ல முடிக்கவில்லை. வாசு அறைக்குள் எட்டிப் பார்த்துவிட்டு ''அமைச்சரின் பி.ஏ. உங்களுக்காக வந்திருக்கிறார்'' என்றான் ராஜசேகரிடம்.

''இதோ வருகிறேன். உட்காரச் சொல்லு.''

வாசு போய்விட்டான். வாசல் வரை சென்ற ராஜசேகர் பின்னால் திரும்பி ஜெயந்தி பக்கம் பார்த்தான்.

''மேலும் மேலும் பேசிக்கொண்டே போவதால் தேவையில்லாமல் சண்டைதான் வளரும். நம் இருவருக்கும் இடையே சண்டையை வளர்ப்பதுதான் லட்சியமாக நீ வைத்துக் கொண்டால் நான் மறுக்கமாட்டேன். ஆனால் முன்னாடியே ஒரு உண்மையைச் சொல்லி வைக்கிறேன். என்றைக்காக இருந்தாலும் இந்தப் போராட்டத்தில் தோற்கப்போவது நீதான்'' என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

★ ★ ★

நாலு மணி ஆகும்போது ராஜசேகர் ஜெயந்தியை திராட்சை தோட்டத்திற்கு அழைத்து வந்தான். மற்றவர்கள் யாரென்று தெரியாவிட்டாலும், மூன்று மணிக்கு மதிய உணவின்போது பேச்சு வாக்கில் ராஜசேகர் சொல்லியிருந்தான்.

பல ஏக்கர் பரப்பளவில் கற்தூண்கள் நிறுவப்பட்டு திராட்சை பயிரிடப்பட்டிருந்தது. கண்ணுக்கு எட்டிய வரையில் எங்கும் பசுமையாக இருந்தது. தோட்டத்திற்கு நடுவில் காட்டேஜ் ஒன்று இருந்தது. காரைவிட்டு இறங்கியதும் ராஜசேகர் காட்டேஜ் பக்கம் சுட்டிக் காட்டினான். ''எல்லோரும் அங்கே இருப்பார்கள். நீ போய் அவர்களுடன் பேசிக்கொண்டிரு. நான் மேனேஜரை பார்த்துவிட்டு வருகிறேன்.'' பதிலுக்காக காத்திராமல் வேகமாக தோட்டத்தின் பக்கம்போய் விட்டான்.

கூலி ஆட்கள் திராட்சை கொத்துகளை பறித்து கூடையில் கவனமாக நிரப்பிக் கொண்டிருந்தார்கள். ஜெயந்தி மெதுவாக காட்டேஜ் பக்கம் நடந்தாள். ஓடு வேய்ந்த வராண்டாவுக்கு பக்கத்தில் மல்லிகைக் கொடி படர்ந்திருந்தது. மல்லிகை மொட்டுகள் காற்றில் லேசாக அசைந்து கொண்டிருந்தன. உள்ளேயிருந்து பேச்சுக்குரல் கேட்டது. யாரெல்லாம் இருப்பார்கள்? ரேகா, மிஸெஸ் கருணாகரன் போன்றவர்கள் வந்திருந்தால் தன்பாடு திண்டாட்டம்தான். அவர்கள் முன்னிலையில் பேச்சே வராமல் வாயடைத்துப் போய்விடும். பேச்சு இருக்கட்டும் எப்படி நிற்பது எப்படி உட்காருவது என்று புரியாமல் மூளை குழம்பிப் போய்விடும்.

ஜெயந்தி தயங்கிக்கொண்டே உள்ளே காலடி வைத்தாள்.

உள்ளே ஈசிச்சேரில் டாக்டர் சுப்ரமணியம் அமர்ந்துகொண்டு மூக்குக் கண்ணாடியை கைக்குட்டையால் துடைத்துக் கொண்டிருந்தார். பக்கத்திலேயே அமர்ந்திருந்த கமலா மாமி ஜெயந்தியை பார்த்ததும் ''வாம்மா... வா...வா. சுமதி! உன் சிநேகிதி வந்துவிட்டாள்'' என்று குரல்கொடுத்தாள்.

ஜன்னல் அருகில் நின்றுகொண்டிருந்த சிவராமன் ''இது ரொம்ப அநியாயம். எங்கள் எல்லோரையும் முன்னாடி வரச் சொல்லிவிட்டு நீங்க மட்டும் இவ்வளவு தாமதமாக வரலாமா?'' என்று குற்றம் சாட்டினான்.

சுமதி அருகில் வந்து ஜெயந்தியின் கையைப் பற்றிக்கொண்டு ''உள்ளே வா'' என்று அழைத்தாள்.

உள்ளே வந்த ஜெயந்தி நிம்மதியாக மூச்சுவிட்டுக் கொண்டாள். வந்தவர்கள் எல்லோரும் தனக்கு வேண்டியவர்கள்தான். ராஜசேகர் தன்னிடம் ஏன் முன்னாடியே சொல்லவில்லை. அவன் சொல்வதற்கு தான் வாய்ப்பு அளித்தால்தானே.

அறையிலிருந்து வெளியில்வந்த பரிமளா ஜெயந்தியை ''ஹலோ!'' என்றாள். காரணம் என்னவென்று தெரியவில்லையே தவிர சமீபகாலமாக பரிமளா ஜெயந்தியிடம் சகஜமாக பழகிக்



கொண்டிருந்தாள். ஒருக்கால் வருங்கால மனைவியிடம் ராஜசேகர் ஏதாவது சொல்லியிருப்பானோ!

''ராஜா எங்கே?'' கமலாமாமி கேட்டாள்.

''வந்ததும் மேனேஜரை பார்க்க போய்விட்டார். இப்போ வந்துவிடுவார்.'' என்றாள்.

''வெளியே மல்லிகை மொட்டுக்கள் நிறைய இருக்கு. பறித்துக் கொண்டுவரட்டுமா?'' பரிமளா கேட்டாள்.

''பூக்களை பறிக்க தனியாக பர்மிஷன் வேண்டுமா என்ன? தாராளமாக பறித்துக்கொள்.'' கமலா மாமி சொன்னாள்.

''ஓ.கே. ஆனால் மேலே இருக்கிற பூக்களை பறிக்க யாராவது உதவிசெய்தால் தேவலை. நீங்க வர்றீங்களா?'' சிவராமனிடம் கேட்டாள்.

''தாராளமாக. ஆனால் பூக்களை பறிப்பது ஆண்களின் வேலை இல்லையே என்று நினைக்கிறேன். நீங்க என்ன சொல்றீங்க டாக்டர்.''

''பெண்களுக்கு உதவி செய்வது புருஷலட்சணம்.'' டாக்டர் சொன்னார்.

பரிமளாவும், சிவராமனும் வெளியே சென்றார்கள். ஜெயந்தி சுமதியின் அருகில் அமர்ந்துகொண்டு காட்டேஜ் முழுவதையும் பார்வையை சுழற்றினாள். பெரிய ஹால்... நடுவில் கட்டில். ஒரு ஓரமாக டிரெஸ்ஸிங் டேபிள். ஒரு பக்கம் சோபாவும், குஷன் நாற்காலிகளும் இருந்தன. அட்டாச்ட் பாத்ரூம் இருந்தது.

''உனக்காக கமலா மாமி ஸ்பெஷலாக ஏதோ கொண்டு வந்திருக்கிறாள். என்னவென்று சொல்லு பார்ப்போம்?'' சுமதி கேட்டாள்.

''என்னவாக இருக்கும்?'' ஜெயந்தியின் மனம் முழுவதும் வாசலில் இருந்தது. சிவராமன் எல்லோரிடமும் நன்றாக பழகுவான் என்றாலும் பரிமளாவுடன் இவ்வளவு நெருக்கமாக

இருப்பது சரியென்று படவில்லை, அதிலும் ராஜசேகரின் முன்னி லையில். சிவராமனுக்கு எதுவும் தெரியாது. எல்லோருடன் நட்பாக இருப்பது அவனுடைய சுபாவம். பரிமளாவுக்காவது கொஞ்சம் புத்தியிருக்க வேண்டும்.

''மாமி உனக்காக என்ன கொண்டு வந்தாங்களோ சொல்லு?'' சுமதி மறுபடியும் கேட்டாள்.

''அது சாப்பிடும் பொருள். கேரியரில் கொண்டு வந்திருக் கிறாள்.'' டாக்டர் க்ளூ கொடுத்தார்.

''பார்த்தாயா சுமதி. மகள் யோசித்து கஷ்டப்பட்டுவிடப் போகிறாளே என்று க்ளூ கொடுத்துவிட்டார்.'' கமலா மாமி கணவர்மீது பொய்யாக குற்றம் சாட்டினாள்.

அதற்குள் வாசலில் பேச்சுக் குரல்கேட்டது.

''யார் உன்னை பூக்களை பறிக்கச் சொன்னார்கள்?'' ராஜசேக ரின் குரல்கேட்டது.

''கடவுள்.'' பரிமளா துடுக்காக பதிலளித்தாள்.

''அந்தக் கடவுள்தான் உன் தலையில் குட்டச் சொல்லி என்னிடம் சொன்னார்.''

''வீட்டுக்கு வந்த விருந்தாளியிடம் இப்படி மரியாதைக் குறைவாக நடந்துகொள்வது நியாயம் இல்லை.'' பரிமளா கொஞ்சுவதுபோல் சொன்னாள்.

''அப்படியா! விருந்தாளிகள் எல்லைமீறி நடந்து கொண்டால் என்ன செய்வதாம்? சிவராமன்! என் சார்பில் பரிமளாவுக்கு நீயே தண்டனை வழங்கிவிடு.'' பரிகாசமாய் சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தான் ராஜசேகர். பின்னாலேயே வந்த வேலைக் காரன் திராட்சைப்பழக் கூடையை வைத்துவிட்டுப் போனான்.

''மூன்று மணிக்கே வரச் சொன்னதால் டிபன்கூட சாப்பிடா மல் வந்துவிட்டோம். போய் கையை அலம்பிக்கொண்டு வா. சேர்ந்து சாப்பிடுவோம்.'' கமலா மாமி ராஜசேகரைப் பார்த்துச் சொன்னாள்.



''கிளம்பும் போது யாரோ வந்துவிட்டதால் தாமதமாகி விட்டது. இதோ வந்து விடுகிறேன்.'' ராஜசேகர் பாத்ரூம் பக்கம் போனான்.

''ஜெயந்தி! இந்த டவலை எடுத்துப் போய் ராஜாவிடம் கொடு.'' கமலா கூடையிலிருந்த டவலை எடுத்துக் கொடுத்தாள்.

ஜெயந்திக்கு விருப்பம் இல்லா விட்டாலும் டவலை எடுத்துக் கொண்டு பாத்ரூமை நோக்கி நடந்தாள். ராஜசேகர் சோப் போட்டு முகத்தை அலம்பிக்கொண்டு இருந்தான். ஷர்ட் நனைந்து விடக்கூடாது என்று ஃபுல்கை ஷர்டின் கைகளை மடித்திருந்தான். வலது முழுங்கையில் பெரிய மச்சம் இருந்தது. ஜெயந்தி அந்த மச்சத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். பின்னால் திரும்பிய ராஜசேகர் டவலை கையில் பிடித்தவாறு நின்றிருந்த ஜெயந்தியை கண் இமைக்காமல் பார்த்தான். ஜெயந்தி டவலை கொடுத்து விட்டு திரும்பப் போனாள். ராஜசேகர் கையில் இருந்த தண்ணீரை ஜெயந்தியின் மீது தெளித்தான். எதிர்பாராமல் நீர்துளிகள் வந்து விழுந்ததில் ஜெயந்தி திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள்.

''இப்போ சொல்லு. வந்தவர்கள் எல்லோரும் எனக்கு மட்டும் நெருங்கியவர்களா?'' என்று கேட்டான்.

உடனே பதில் சொல்லப்போன ஜெயந்தி தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு முகத்தில் விழுந்த தண்ணீரை புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள். ராஜசேகர் அருகில் வந்து டவலால் ஜெயந்தியின் முகத்தில் இருந்த நீரை ஒற்றினான்.

''யாராவது பார்த்து விட்டால்?'' தெளிவற்ற குரலில் சொன்னாள்.

''யாரும் பார்க்கவில்லை என்றால் பரவாயில்லையா?'' கண்களில் குறும்புத்தனம் கொப்பளிக்க கேட்டான்.

ஜெயந்தி சட்டென்று அவன் கைகளை விலக்கிவிட்டு அங்கிருந்து போய்விட்டாள்.

கன்றி சிவந்துவிட்டிருந்த முகத்துடன் வெளியில் வந்த ஜெயந்தியை பார்த்த சுமதி "ஏன்? என்னவோ போல் இருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"எப்போதும் போல்தானே இருக்கிறேன்." ஜெயந்தியின் குரல் தடுமாறியது.

சுமதியும், கமலா மாமியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பரிமளா பூக்களை கையில் அள்ளிக்கொண்டு உள்ளே வந்தாள்.

"எல்லோரும் வாங்க. ஏற்கனவே தாமதமாகிவிட்டது." கமலா மாமி தட்டுகளை எடுத்து வைத்தாள்.

# 44

டிபன், காபி சாப்பிட்ட பிறகு எல்லோருமாக சேர்ந்து தோட்டத்தில் உலாவினார்கள். ஆட்கள் வேலையை முடித்து விட்டு திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

நன்றாக இருட்டிவிட்டது. காட்டேஜ் முன்னால் இருந்த புல்வெளியில் எல்லோரும் அமர்ந்து கொண்டார்கள். சிவராமன் திராட்சைப் பழங்களை கொண்டுவந்து எல்லோருக்கும் நடுவில் வைத்தான். ஆளுக்கொன்றாய் எடுத்து சாப்பிட்டுக் கொண்டிருந் தார்கள்.

"ஹைதராபாத் திராட்சை உலக புகழ் பெற்றுவிட்டது." சிவராமன் சொன்னான்.

"அழகான பெண்களுக்கும்." டாக்டர் மேலும் கூட்டினார்.

"ஜெயந்தி! வந்தது முதல் பார்க்கிறேன். நீ ஏன் கலகலப்பாகவே இல்லை?" கமலா மாமி கேட்டாள்.

"என்ன பேசட்டும்?" ஜெயந்தியின் கண்முன்னால் சிவராம னுடன் பிக்னிக் போனது நிழலாடியது.



பௌர்ணமி என்பதால் நிலா வெளிச்சம் எங்கும் பரவியிருந்தது.

"நிலவை பாருங்க. அழகான பெண்ணின் முகம்போல் ஜொலிக்கிறது." சிவராமன் வர்ணித்தான்.

"அந்த ஒப்பீட்டை நானும் பலமுறை கேட்டிருக்கிறேன். முகம் வட்டமாக இருந்தால் நன்றாகவா இருக்கும்?" பரிமளா கிண்டலாக சொன்னாள்.

"சந்திரனின் குளிர்ச்சியை கருத்தில்கொண்டு அப்படிச் சொல்லியிருப்பார்கள்." ராஜசேகர் சொன்னான்.

"பெண்ணின் முகம் வட்டமாக இல்லாமல் எப்படி இருக்கணுமாம்?" சிவராமன் பரிமளாவை பார்த்து கேட்டான்.

"கொஞ்சம் ஓவல் ஷேப்பில் இருந்தால் நன்றாக இருக்கும்."

"அதாவது கோழி முட்டையைபோல் இருக்கணுமாக்கும்."

சிவராமன் சொன்னதும் எல்லோரும் சிரித்தார்கள்.

பரிமளா பொய்கோபத்துடன் கையில் இருந்த மண்கட்டியை சிவராமன் மீது வீசினாள்.

"முடிந்தால் வாயால் பதில் சொல்லணும். மண்கட்டி யெல்லாம் ஆயுதமாக பயன்படுத்தக் கூடாது." மேலே விழுந்த மண்ணை தட்டிக்கொண்டே சிவராமன் சொன்னான்.

சிவராமனும், ராஜசேகரும் அருகருகே அமர்ந்திருந்தார்கள். சிவராமன் ஒல்லியாக சின்ன பையன்போல் தென்பட்டான். வலதுகையை பின்னால் ஊன்றி ஏதோ நினைவில் மூழ்கியிருந்த ராஜசேகர் கம்பீரமாக, முழுஆண்மகனாக காட்சியளித்தான். அவன் அப்படி சாய்ந்தவாக்கில் உட்கார்ந்திருப்பதிலும் ஒருவிதமான மிடுக்கு தென்பட்டது. தன்மனம் அடிக்கடி ராஜசேகரைப் பற்றி யோசிப்பதை உணர்ந்தபோது ஜெயந்தி திடுக்கிட்டாள்.

சற்றுநேரம் கழித்து "இனி கிளம்புவோமா?" டாக்டர் சொன்னார்.

தொலைவில் எங்கேயோ பார்த்துக் கொண்டு ஏதோ நினைவுகளில் மூழ்கியிருந்த ராஜசேகரின் காதில் அந்த வார்த்தைகள் விழுந்தாற்போல் தெரியவில்லை.

''கிளம்புவோம். எனக்கும் வேலை இருக்கு.'' சிவராமன் சொன்னான்.

பரிமளா எழுந்துகொண்டு உடைகளில் படிந்த மண்ணை உதறிக்கொண்டாள்.

''ராஜா! கிளம்புவோமா?'' கமலா மாமி ராஜசேகரை அழைத்தாள்.

அப்பொழுதுதான் இந்த உலகிற்கு மீண்டுவந்தவன்போல் நிமிர்ந்து பார்த்தான். அதற்குள் சுமதியும், அவள் கணவனும் எழுந்து நின்று கொண்டார்கள்.

ராஜசேகரின் பார்வை முழுங்கால் மீது மோவாயை ஊன்றிக்கொண்டு தரையில் கோடு வரைந்துகொண்டிருந்த ஜெயந்தியின் மீது பதிந்தது.

''எனக்கு திராட்சை பழம் வேண்டும் வீட்டுக்கு எடுத்துப் போகணும்.'' பரிமளா கேட்டாள்.

''ஏன்? இங்கே சாப்பிட்டது போவில்லையா?'' சிவராமன் கேலி செய்தான்.

''நான் கேட்டது உங்களை இல்லை.'' பரிமளா பழிப்புக் காட்டினாள்.

''காரில் வைக்கச் சொல்லி மேனேஜரிடம் சொன்னேன். வைத்திருப்பார்.'' ராஜசேகர் சொன்னான்.

எல்லோரும் எழுந்து கொண்ட பிறகும் அவன் எழுந்து கொள்ளவில்லை. அவன் போக்கை பார்த்தால் அந்த எண்ணமே இருப்பதாக தெரியவில்லை.

அதை புரிந்துகொண்ட கமலா ''சிவராமன்! உன் காரில் எங்களுக்கும் இடம் இருக்கும் இல்லையா?'' என்றாள்.



''என்னுடைய கார் புஷ்பக விமானம் போல். எத்தனை பேர் ஏறினாலும் இன்னும் ஒருத்தருக்கு இடம் இருக்கும்.'' சிவராமன் பெருமையாக சொன்னான்.

''வாங்க. கிளம்புவோம்.'' டாக்டர் முன்னால் நடந்தார்.

ஜெயந்தியும் எழுந்துகொள்ளப் போனாள்.

அதற்குள் ராஜசேகரின் கை நீண்டு வந்து ஜெயந்தியை தடுத்துவிட்டது. ''நாம் அப்புறமாக போகலாம்'' என்றான்.

''எதற்காக?'' ஜெயந்தி வியப்புடன் கேட்டாள்

சுமதியும், கமலா மாமியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ஏற்கனவே சிவராமனும், டாக்டர், சுமதியின் கணவர் முன்னால் சென்று விட்டார்கள். கமலா சுமதியின் தோளில் லேசாக தட்டிவிட்டு கிளம்பினாள். அந்தக் குறிப்பை புரிந்து கொண்ட சுமதி ஜெயந்தியிடம் பார்வையாலேயே விடைபெற்றுக் கொண்டு மாமியின் பின்னால் சென்றாள்.

''நானும் அவர்களுடன் போகிறேன்.'' எழுந்துகொள்ளப் போன ஜெயந்தியை ராஜசேகர் தடுத்துவிட்டான்.

''கொஞ்ச நேரம் கழித்து போகலாம் என்று சொன்னேனே.''

''இங்கே இருந்து இப்பொ என்ன செய்யப் போகிறோம்?''

''எதுவும் செய்ய வேண்டாம். கொஞ்ச நேரம் உட்கார்ந்து கொள்வோம். அவ்வளவுதான்.''

''ச்சீ... ச்சீ... அவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்?'' அவன் கையை உதறிக்கொண்டே சொன்னாள்.

''என்ன நினைத்துக் கொள்வார்கள்?'' வியப்புடன் கேட்டான்.

''எதவும் தெரியாத அப்பாவியாக நடிக்காதீங்க.'' எளனமாக சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

ராஜசேகர் இருகைகளையும் ஊன்றி பின்னால் சாய்ந்து கொண்டான்.

''நினைத்துக் கொள்கிறவர்களாக இருந்தால் ஏற்கனவே நினைத்துக் கொண்டு இருப்பார்கள் இத்தனை நாட்கள் சேர்ந்து இருந்த பிறகு நாம் தூய்மையாக இருக்கிறோம் என்று சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள்.'' தொலைவில் எங்கேயோ பார்த்துக் கொண்டே சொன்னான்.

'ஆமாம். எப்படி நம்புவார்கள்? அதிலும் ராஜசேகர் போன்ற நபருடன். அந்த இடத்தில் வேறு யாராவது இருந்தால் கொஞ்சமாவது நம்பியிருப்பார்களோ என்னவோ' என்று சொல்லப் போனவள் கடைசி நிமிடத்தில் கட்டுப்படுத்திக் கொண்டாள். அவனுடைய நடத்தையை சுட்டிக்காட்ட தனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? தான் யார் நடுவில்?

இருவருக்குமிடையே மௌனம் நிலவியது.

''அவர்களுடன் போகவிடாமல் தடுத்துவிட்டேன் என்று கோபமா?'' நயமான குரலில் கேட்டான்.

ஜெயந்தி பதில் சொல்லவில்லை.

''உன்னிடம் சீரியஸாக பேச நினைக்கும் போதெல்லாம் உரையாடல் தொடங்கும் முன்பே உனக்குக் கோபம் ஏற்படும் விதமாக சூழ்நிலை உருவாகி விடுகிறது. உண்மையிலேயே துரதிர்ஷ்டம்தான்.''

''அழகான வார்த்தைகளால் எதிராளியை ஏமாற்றுவது உங்களுக்கு கைவந்த கலைதானே.''

''நான் உன்னை ஏமாற்றினேனா? எந்த விஷயத்தில்?''

''இது வரையில் செய்தது போதும் வீட்டுக்கு போய் விடலாம்.''

''போகத்தான் போகிறோம். ஆனால் கிளம்பும் முன் உன்னிடம் சில விஷயங்கள் சொல்ல வேண்டும். உன்னை இருக்கச் சொன்னதே அதற்காகத்தான்.''



''இப்போ புதிதாக என்னிடம் சொல்வதற்கு என்ன இருக்கிறது? எது சொன்னாலும் நான் கேட்கப் போவதில்லை.'' மறுப்பது போல் தலையை குறுக்காக அசைத்தாள்.

''நீ இதுபோல் எடக்கு மடாக பேசினால் இந்த இரவு வீட்டுக்கு போகவே போவதில்லை தெரியுமா?'' அதட்டுவது போல் சொன்னான்.

ஜெயந்தி வாயடைத்துப்போய் கண்கள் அகல விரிய பார்த்துக் கொண்டிருந்தாள். நிலவின் வெளிச்சத்தில், வெண் பட்டுப் புடவையில் பதுமையாக அமர்ந்திருந்த ஜெயந்தியின் கண்களில் வெளிப்படையாக தென்பட்ட வெறுப்பை, பயத்தை பார்க்கும் போது ராஜசேகரின் இதயம் கரைந்துவிட்டது.

வேடிக்கைக்காக சொன்னேன் என்றும் இந்த இரவு இங்கே தங்கும் எண்ணமே இல்லை என்றும் சொல்லி சமாதானப்படுத்த வேண்டும் என்று தோன்றியது.

ஆனால் ஆண்களுக்கே இயல்பாக இருக்கக்கூடிய அகங்காரம் குறுக்கே நின்றது.

''ஜெயந்தி!'' கையை நீட்டி அவள் கையைப் பற்றிக் கொண்டான்.

ஜெயந்தி பலமாக உதறித்தள்ளினாள்.

''நான் சொல்லிப் போவதை கொஞ்சம் காதுகொடுத்துதான் கேளேன்.'' கோபத்தை அடக்கிக்கொண்டே சொன்னான்.

''மாட்டேன். உங்களை வெறுக்கிறேன்.''

ஜெயந்தி மேலும் ஏதோ சொல்லும் முன் பலமாக அருகில் இழுத்துக் கொண்டான். ஜெயந்தி அவன் மார்பில்போய் விழுந்தாள். உடனே எழுந்துகொள்ளப் போனவளை பலமாக தடுத்து நிறுத்தி விட்டான்.

''ச்சீ... ச்சீ... வெறுக்கிறேன் என்று சொன்ன பிறகும் இப்படி நடந்து கொள்வதற்கு வெட்கமாக இல்லையா?'' அசையவிடாமல்

தன்னை சிறைப்படுத்தி விட்டான் என்ற கோபத்தில் இரண் கைகளாலேயும் தள்ளிவிட முயன்றாள்.

''ஜெயந்தி!'' தெளிவற்ற குரலில் அழைத்தவன் வல கையால் ஜெயந்தியின் இருகரங்களையும் பிடித்துக் கொண்டான் இடதுகையால் அவள் இடையை சுற்றியவன் அணைப்பை மேலும் இறுக்கினான்.

இருவரின் பார்வையும் சந்தித்துக் கொண்டன. அவ கண்களில் ஏதோ ஈர்ப்பு சக்தி இருந்திருக்க வேண்டும் ஜெயந்தியின் பார்வை அப்படியே நிலைத்துவிட்டது. ராஜசேகரி வலதுகை ஜெயந்தியின் கைகளை விட்டுவிட்டு அவள் தோளை சுற்றி படித்தது. கைகளைவிட்டதும் ஜெயந்தி திமிறிதன்னை விடுவித்துக் கொள்ளப் போனாள். அதற்குள் என்ன நடந்தது என்று அவளுக்கே தெரியவில்லை. இந்த உலகமே ஏதோ வெளிச்சத்தால் நிரம்பிவிட்டது போல், இயற்கை ஸ்தம்பித்து விட்டது போல், உணர்ந்தாள். அவளையும் அறியாமல் அவ கைகளை ராஜசேகரின் கழுத்தைச் சுற்றிலும் மாலையா பிணைந்து கொண்டன. அவள்தான் அவனை நெருங்கினாளோ இல்லை அவன்தான் அவளை தன் அருகில் இழுத்து கொண்டானோ இருவருக்கும் தெரியவில்லை.

ஒருநிமிடம் கழித்து ராஜசேகர் மெதுவாக ஜெயந்தியை விடுவித்தான். மாலையாக பிணைந்திருந்த ஜெயந்தியின் கைக இன்னும் அப்படியே இருந்தன. தான் செய்த காரியம் என்ன வென்று புரிந்ததும் ஜெயந்தி திடுக்கிட்டு கைகளை இழுத்து கொண்டாள்.

ஜெயந்திக்கு திடீரென்று அழுகை பொங்கிக்கொண்டு வந்தது. ராஜசேகர் தன்னை தூண்டிவிட முயற்சி செய்கிறான் அதான் தனியாக தன்னை இங்கே நிறுத்தி விட்டான். இன்று இரவு வீட்டுக்கு போகப் போவதில்லை என்றும் திட்டவட்டமா தெரிவித்தான். எல்லாம் முடிந்துவிட்டது. அவன் நல்லவ இல்லை என்று தெரிந்த பிறகும் அவன்பால் ஈர்க்கப்பட் விட்டாள்.



அழுது கொண்டிருந்த ஜெயந்தியை மென்மையாக அணைத்துக் கொண்டு ''எதற்காக இந்த அழுகை?'' என்றான்.

பதில் சொல்லாமல் மேலும் அழுதாள்.

''ஷ்... அழாதே. மேனேஜரும், மற்றவர்களும் ஷெட்டில் இருப்பார்கள். அவர்கள் காதில் விழக்கூடும்.'' சமாதானப்படுத்த முயன்றான்.

கொஞ்ச கொஞ்சமாக ஜெயந்தியின் அழுகை குறைந்தது. ராஜசேகர் ஜெயந்தியின் தலையை வருடிவிட்டுக்கொண்டே ''பயப்படாதே ஜெயந்தி! இன்று என் சந்தேகம் தீர்ந்துவிட்டது. என்னைப் பற்றி உனக்கு இருக்கும் தவறான கருத்துகள் நீங்கி நீயாக என்னிடம் வரும் அந்த நாளுக்காக எத்தனை வருடங்கள் ஆனாலும் என்னால் காத்திருக்க முடியும். நாம் எத்தனை நாட்கள் சேர்ந்து இருந்தாலும் உன் உருப்பம் இல்லாமல் எதுவும் நடக்காது என்று சத்தியம் செய்து தருகிறேன். சரிதானே?'' என்றான்.

ஜெயந்தி பதில் சொல்லவில்லை. அவன் கைகளிலிருந்து விடுபடவேண்டும் என்று திமிறவும் இல்லை.

''இனி நான் பயப்படவோ, வேதனை அடையவோ எதுவும் இல்லை'' என்று சொல்லிக் கொண்டே அவளை விடுவித்து சரியாக உட்கார வைத்தான். ''நான் போய் காரை எடுத்து வருகிறேன். வீட்டுக்கு போவோம்.''

ராஜசேகர் காரை எடுக்கப்போனான். எங்கும் நிசப்தமாக இருந்தது. அந்த சூழ்நிலையில் செயல் மறந்தவளாய் ஜெயந்தி அமர்ந்திருந்தாள்.

என்னவாகி விட்டது தனக்கு?

''இன்று என் சந்தேகம் தீர்ந்துவிட்டது. இனி நான் பயப் படவோ, வேதனை அடையவோ எதுவும் இல்லை'' என்று ராஜசேகர் சொன்னது இன்னும் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

அப்படிச் சொன்னதில் அவன் எண்ணம் என்னவாக இருக்கும்?

வெள்ளை உடையில் யாரோ தன்னை நோக்கி வருவதை கவனித்தாள். வருவது ராஜசேகராக இருக்குமோ. ஜெயந்தி நினைத்தது போல் வந்தது ராஜசேகர் இல்லை. மேனேஜர்.

''அய்யா வரச் சொன்னாங்க.'' கருக்கமாக சொல்லிவிட்டு மேனேஜர் காடேஜ் பக்கம் போய்விட்டார்.

ஜெயந்தி எழுந்து காரை நோக்கி நடந்தாள். உடல் இலேசாகிவிட்டது போல் தள்ளாடியது. ஜெயந்தி போய்ச் சேரும் போதே ராஜசேகர் காரை ஸ்டார்ட் செய்து தயார் நிலையில் வைத்திருந்தான். அவள் உட்கார்ந்து கொண்டதும் கார் நகர்ந்தது.

வீடு நெருங்கும் போது ராஜசேகர் சொன்னான். ''உன்னிடம் சொல்ல நினைத்ததை சொல்லவே இல்லை. அடுத்த முறை சொல்லும் போதாவது கொஞ்சம் பொறுமையாக கேட்டுக்கொள் ஜெயந்தி.''

ஜெயந்தி பதில் சொல்லவில்லை. என்ன சொல்லப் போகிறான்? தனக்கும் ரேகாவுக்கும் எந்த உறவும் இல்லை என்றும், பரிமளாவைத் திருமணம் செய்துகொள்வதில் தனக்கு விருப்பம் இல்லை என்றும் சொல்வானாக இருக்கும்.

ஜெயந்தியை வீட்டில் இறக்கி விட்டபிறகு ராஜசேகர் மறுபடியும் காரை கிளப்பினான்.

''நீ சாப்பிட்டுவிட்டு உறங்கச் செல். நான் கிளப்புக்கு போகிறேன். பெரும்பாலும் இரவு வீடுதிரும்ப மாட்டேன்'' என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

ஜெயந்தி பார்த்துக் கொண்டிருந்த போதே கார் கிளம்பிப் போய்விட்டது. உறங்கச் சென்ற பிறகும் ஜெயந்திக்கு ராஜசேகர் சொன்ன வார்த்தைகள் மறுபடியும் மறுபடியும் நினைவுக்கு வந்தன. தனிமையில் இருக்கும்போது ராஜசேகரை எதிரியாக நினைக்கும் இந்த மனம் அவன் தொடுகையில் இப்படி கரைந்து போவானேன்? அவனிடம் ஏதாவது மந்திர சக்தி இருக்கிறதோ



இல்லை தனக்கு சுய கட்டுப்பாடு இல்லையோ. எதுவாக இருந்தாலும் இன்று ராஜசேகர் கிளப்புக்கு போனது நல்லதாகி விட்டது என்று தோன்றியது.

மறுநாளும், அதற்கு அடுத்த நாளும் ராஜசேகர் கண்ணில் படவே இல்லை. மூன்றாவது நாள் மதியம் சாப்பிடுவதற்கு ராஜசேகர் வீட்டுக்கு வந்தாலும் ஜெயந்திக்கு அவனுடன் சேர்ந்து சாப்பிடவில்லை. அவனும் வரச்சொல்லி அழைக்கவில்லை.

அன்று மாலை சுமதி ஜெயந்தி போட்ட வயர்பேக்கை எடுத்துச் செல்ல வந்திருந்தாள். வெளியிலிருந்து வந்த ராஜசேகர் சுமதியை பார்த்துவிட்டு வந்து உட்கார்ந்து குசலம் விசாரித்து விட்டுச் சென்றான். எதுவும் நடக்காததுபோல் அவன் சாதாரண மாக இருந்தது ஜெயந்திக்கு வியப்பாக இருந்தது. அத்தனை நேரம் இருந்தாலும் அவன் ஜெயந்தி பக்கம் ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. அன்று நடந்ததற்கு வருத்தப்படுகிறானோ என்று நினைக்கத் தோன்றியது.

★ ★ ★

அறையில் அமர்ந்து புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்தாள் ஜெயந்தி.

''அய்யாவின் பேண்ட் ஜேபியில் இந்தக் காகிதங்கள் இருந்ததாம். வண்ணான் கொடுத்துவிட்டு போனான்.'' வாசு கொடுத்துவிட்டு போனான்.

இரண்டு மூன்று ரசிதுகளும், ஒரு கடிதமும் இருந்தன. கடிதம் ஏற்கனவே படித்திருக்க வேண்டும். கவர் கிழிக்கப் பட்டிருந்தது. கவரை திருப்பிப் பார்த்தாள் ஃபிரம் அட்ரெஸில் லக்ஷ்மி என்று இருந்தது. இந்த லக்ஷ்மி யாராக இருக்கும்? ஏதோ நினைப்பில் கடிதத்தைப் எடுத்துப் பார்த்தாள்.

சேகர்,

உன் கடிதம் கிடைத்தது. உடனே பதில் எழுத நினைத்தாலும் வேலைகளில் பிசியாக இருந்ததால் செயல்படுத்த முடியவில்லை. தவறாக நினைக்காதே.

உன் மனதில் இருக்கும் வேதனையை என்னால் புரிந்து கொள்ள முடியும். எத்தனை கடினமான பிரச்னை வந்தாலும் நிமிஷமாக தீர்வு காணும் உன் புத்திசாதுரியம் என்னவாகிவிட்டது? இந்த விஷயத்தில் நான் உனக்கு அறிவுறை வழங்க வேண்டும் என்று எழுதியிருந்தாய். என்னைக் கேட்டால் ஒரே ஒரு வார்த்தை தான் சொல்வேன். மனசாட்சிக்கு விரோதமாக நடக்காதே.

விருப்பம் இல்லாமல் திருமணம் செய்துகொண்டால் மண வாழ்க்கையில் அமைதி இருக்காது. நீ இதில் பயப்பட வேண்டியது எதுவும் இல்லை. உடனே திருமணம் செய்து கொண்டுவிடு. பிறகு உன்காலை சுற்றிக் கொண்டிருக்கும் பந்தங்கள் தானாகவே விலகிவிடும். யார் மீதோ இரக்கப்பட்டு உன் வாழ்க்கையை நாசமாக்கிக் கொள்ளாதே.

திருமணம் முடிந்துவிட்டால் நிலைமை தானாகவே சரியாகி விடும்.

ஆசிகளுடன்
லக்ஷ்மி,

கடிதத்தை பலமுறை படித்த பிறகும் ஜெயந்திக்கு விஷயம் புரியவில்லை. ராஜசேகர் திருமணம் செய்துகொள்ள தயங்குவானேன்? காலைச் சுற்றிக் கொண்டிருக்கும் பந்தங்கள் என்று கடிதத்தில் குறிப்பிட்டது யாரைப் பற்றி?

யோசிக்க யோசிக்க பனிமூட்டம் விலகிய சூரியனைபோல் பொருள் விளங்கத் தொடங்கியது. அவன் காலைச் சுற்றியிருக்கும் பந்தம் யாரோ இல்லை, தானேதான். அப்போது அவன் இரக்கம் காட்டும் நபரும் தான்தானே. இந்த லக்ஷ்மி யாரோ ரொம்ப வேண்டியவளாக இருக்க வேண்டும். உடனே திருமணம் செய்துகொள் என்று அறிவுரை வழங்கியிருக்கிறாள். அவள் குறிப்பிட்டது பரிமளாவைத்தானே.

இதில் ராஜசேகர் இவ்வளவு வேதனைப்படவோ தயங்கவோ என்ன இருக்கிறது? தான் ஒன்றும் அவனை சொந்தம் கொண்டாட நினைக்கவில்லையே. அன்று திராட்சைத் தோட்டத்தில் அவன்



ஏன் அப்படி பேசினான்? தன் மனம் கட்டுப்பாட்டை இழந்து விட்டது நினைவுக்கு வந்தது.

இந்த விஷயத்தைத் தான் அவன் தன்னிடம் சொல்ல வந்தானோ? அதைக்கூட புரிந்துகொள்ளாத அளவுக்கு ஞானசூனியமாக இருந்து விட்டோமே.

ஜெயந்திக்கு எழுந்து கடிதத்தை பத்திரமாக மேஜை டிராயரில் வைத்தாள். மனம் முழுவதும் வெறுமை நிரம்பிவிட்டது போல் இருந்தது.

★ ★ ★

இரண்டு நாட்கள் கழிந்து விட்டன. ஜெயந்தியின் மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை. ராஜசேகரிடம் எப்படி சொல்வது என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

அன்று பௌர்ணமி. ராக்கிப்பண்டிகை. அக்கா, தங்கைகள் அண்ணன் தம்பிகளுக்கு ராக்கி கட்டுவார்கள். வடநாட்டில் ரொம்ப விசேஷமாக இந்த பண்டிகையை கொண்டாடுவார்கள்.

சுமதி ராக்கி கொண்டுவந்து ஜெயந்தியின் கையில் கட்டினாள்.

''உனக்குக் கொடுப்பதற்கு என்னிடம் என்ன இருக்கு?'' ஜெயந்தி கேட்டாள்.

''ஏற்கனவே என் குழந்தைகளுக்கு ஸ்வெட்டர் பின்னிக் கொடுத்து விட்டேயே. இப்போ கொடுக்கணும்னா வேறு ஒன்று இருக்கு'' என்றாள் சுமதி.

''என்ன இருக்கு? நீயே சொல்லு.''

''இதோ. இதுதான்.'' ஜெயந்தியின் கன்னத்தில் முத்தம் பதித்தாள் சுமதி.

''ச்சீ... ச்சீ... '' கன்னத்தைத் துடைத்துக் கொண்டாள் ஜெயந்தி.

"இதைவிட சிறந்த பரிசு உலகில் வேறு இருக்க முடியுமா சொல்லு." சுமதி சொன்னாள்.

"எனக்கெப்படி தெரியும்?"

"இன்னும் தெரியாதுன்னு நம்பச் சொல்கிறாயா என்ன?"

"ச்சீ..." ஏதோ சொல்லப்போன ஜெயந்தி சட்டென்று நிறுத்தி விட்டாள். சுமதி தன்னிடமிருந்து எதையோ தெரிந்துகொள்ள நினைக்கிறாள் என்று புரிந்ததும் சட்டென்று பேச்சை மாற்றி விட்டாள்.

சுமதி கிளம்பிப்போன பிறகு கையில் இருந்த ராக்கியை பார்த்துக் கொண்டிருந்த ஜெயந்திக்கு மின்னல்போல் ஒரு யோசனை வந்தது. கையில் கட்டியிருந்த ராக்கியின் முடிச்சை அவிழ்த்து எடுத்துக்கொண்டு ராஜசேகரை பார்க்கச் சென்றாள். அன்று விடுமுறை என்பதால் சுமதியின் கணவன் வரவில்லை. ராஜசேகர் ஆபீஸ் அறையில் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். காலடிச் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்து "என்ன?" என்றான்.

"ராக்கீ கொண்டு வந்திருக்கிறேன்."

"ஓஹோ. அப்படியா!"

"உங்களுக்கு கட்டுவதற்காக கொண்டு வந்தேன்."

அவன் ஜெயந்தியை கூர்ந்து பார்த்துவிட்டு எழுதிக் கொண்டிருந்த பேப்பர்களை மூடிவைத்தான். நாற்காலியின் பின்னால் சாய்ந்து கொண்டே "ராக்கீ யாருக்கு கட்டுவார்களோ தெரியுமா?" என்றான்.

"சகோதரனுக்கு, அந்த ஸ்தானத்தில் இருப்பவர்களுக்கு."

"தெரிந்துதான் வந்திருக்கிறாயா?"

ஆமாம் என்பது போல் தலையை அசைத்தாள்.

ராஜசேகர் கையை நீட்டினான்.



இவ்வளவு சுலபமாக ஒப்புக்கொள்வான் என்று ஜெயந்தி நினைத்திருக்கவில்லை. அவன் கையில் ராக்கியை கட்டப் போனாள்.

"முதலில் இதைச் சொல்லு. உன் மனதில் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறாய்? ஒரு தோழனாகவா இல்லை அண்ணன் என்றா?"

ஜெயந்தி பதில் சொல்லாமல் பார்வையை தரையில் பதித்தாள்.

"சொல்லு." இரட்டிப்பது போல் கேட்டான்.

ஏதோ சொல்வதற்காக ஜெயந்தி தலையை உயர்த்தினாள்.

ராஜசேகர் வேகமாக அவள் கையைப் பற்றி இழுத்தான். "எவ்வளவு தைரியம் உனக்கு?"

ஜெயந்தி திகைப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"உன்னை நீயே ஏமாற்றிக்கொள்ள நினைத்தால் நான் தடுக்க மாட்டேன். ஆனால் என்னை ஏமாற்ற முடியாது. நான்கு நாட்களுக்கு முன் திராட்சைத் தோட்டத்தில் நடந்த நிகழ்ச்சியில் உன் மனதில் இருப்பதை புரிந்துகொண்டுவிட்டேன். உனக்கு தாய், தந்தை, நண்பன் எல்லாமே நான்தான்." ஒரு நிமிடம் நிறுத்திவிட்டு தொடர்ந்தான். "வேண்டாத யோசனைகளுடன் மனதை பாழாக்கிக் கொள்ளாதே. உன்னிடம் எப்படி சொல்வது என்று குழம்பிக் கொண்டிருந்த எனக்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தாய். இந்த கண்ணா மூச்சு விளையாட்டை மேலும் என்னால் ஆட முடியாது. ஜெயந்தி! கூடிய சீக்கிரம் உன்னைத் திருமணம் செய்து கொள்வதாக இருக்கிறேன். தூக்கத்தில் கனவுகண்டு பயந்து நீ அலறினால் அடுத்த அறையிலிருந்து ஓடி வருவது சிரமமாக இருக்கிறது. என் பக்கத்திலேயே நீ இருந்தால் கையை நீட்டி உன்னை சமாதானப்படுத்த முடியும் இல்லையா."

ஜெயந்தியின் முகம் கன்றிவிட்டது. அதைக் கவனி ராஜசேகர் ஆள்காட்டி விரலால் அவள் மோவாயை உயர்த்தினா

''பயப்படாதே ஜெயந்தி! என்னை கணவனாக ஏற்று கொள்வது கஷ்டமாக இருக்கும் என்று தோன்றுகிறதா? முயற் செய்து பாரு. நீ நினைக்கும் அளவுக்கு கஷ்டமாக இருக்காதே என்னவோ. இன்னொரு உறுதிமொழியைத் தருகிறேன். இந் திருமணம் உன் பாதுகாப்புக்கு மட்டும்தான். நீயாக என்னை ஏற்றுக்கொள்ளும் வரையில் உன்னிடமிருந்து எதையும் எதி பார்க்க மாட்டேன். அதிகாரத்தையும் காண்பிக்க மாட்டேன்.''

''யாரோ வந்திருக்காங்க.'' உள்ளே வரப்போன வா பதட்டமடைந்து பின்னால் தலையை இழுத்துக் கொண்டாள் ராஜசேகரின் கை இன்னும் ஜெயந்தியின் மோவாயை பற் இருந்தது.

''சொல்லு ஜெயந்தி! என்மீது வெறுப்பு இல்லை என்று ஒரு தடவை சொல்லியிருக்கிறாய். கோபம் இருக்கு. அதுவும் எனக்கு தெரியும். அதற்கான காரணமும் தெரியும். ஆனால் நம் திருமண முடிந்துவிட்டால் நிலைமை சரியாகிவிடும் என்று எதிர்பார்க்கிறேன்.''

அவளுடைய பதிலுக்காக ஒரு வினாடி காத்திருந்தான்.

''சரி. போகிறேன். யாரோ வந்திருக்கிறார்கள்.'' ராஜசேக அறையைவிட்டு வெளியேறினான்.

அறையின் நடுவில் ஜெயந்தி சிலையாக நின்று கொண்டிருந்தாள்.

# 45

மின் அதிர்ச்சி ஏற்பட்டதுபோல் ஜெயந்தியின் உடலும், உள்ளமும் செயல் மறந்துவிட்டன. எத்தனை நேரம் கழிந்ததோ நினைவு இருக்கவில்லை.



''ஹலோ!'' பின்னாலிருந்து குரல் கேட்டதும் திரும்பிப் பார்த்தாள்.

''ராஜசேகர் இல்லையா?'' ரேகா உள்ளே வந்துகொண்டே கேட்டாள்.

''இல்லை.'' இயந்திரகதியில் பதில் சொன்னாள்.

''அப்படியா!''

ஜெயந்தி நினைத்தாற்போல் ரேகா திரும்பிப் போகவில்லை. அறையின் நடுவில் இருந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள்.

''ஏன்? என்னவோபோல் இருக்கிறாயே? உடல் நலம் சரியாக இல்லையா?'' ரொம்ப அக்கறையாக விசாரித்தாள்.

நன்றாக இருக்கிறேன் என்பதுபோல் தலையை அசைத்தாள் ஜெயந்தி.

''உட்கார்ந்துகொள்.''

ஜெயந்திக்கு அப்பொழுதுதான் சுயநினைவு வந்தது. ரொம்ப நேரமாக நின்றுகொண்டிருந்ததால் கால்கள் வலித்துக் கொண்டிருந்தது. மெதுவாக பக்கத்திலேயே இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

''உன்னைப் பார்த்தால் உடல்நலம் சரியில்லை என்று தோன்றுகிறது. ராஜசேகர் உன்னை டாக்டரிடம் அழைத்துப் போகவில்லையா?'' ரேகா கேட்டாள்.

என்ன பதில் சொல்வது என்று ஜெயந்திக்கு தெரியவில்லை.

''ஆமாம். இரக்கப்பட்டு ஆதரவு தந்தவர்கள் இதைவிட நன்றாக கவனித்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது தான்.'' ரேகா பெருமூச்சு விட்டாள்.

ரேகா என்ன சொல்ல வருகிறாள் என்று புரியாமல் ஜெயந்தி குழம்பிப் போய்விட்டாள்.

''ஜெயந்தி! நான் இன்னிக்கு வந்ததே உன்னிடம் தனிமையில் பேசத்தான்.

''சொல்லுங்க.''

''நான் சொல்லப்போவது உனக்கு கஷ்டமாக இருக்கலாம். நீ சிறியவள். உலக அனுபவம் இல்லாதவள். உன் வாழ்க்கையை சீர்படுத்த பெரியவர்கள் இல்லாதது பெரிய குறைதான். நீ இது போல் மாதக்கணக்காய் ராஜசேகர் வீட்டில் தங்கியிருப்பது நன்றாக இல்லை. உன் எதிர்காலம் இதனால் பாதிக்கப்படலாம். ராஜசேகர் தனக்கு தோன்றியதை செய்வானே தவிர உலகத்தைப் பற்றி கவலைப்படமாட்டான். பழிக்கிறவர்கள் நம் முன்னிலையில் பேசுவார்களா என்ன? வெளியில் அவனைப் பற்றி என்னென்ன பேசுகிறார்களோ உனக்குத் தெரியாது. ஓரிருமுறை அவனிடம் இந்த விஷயமாக பேச முயற்சித்தபோது காதுகொடுத்து கேட்க மறுத்துவிட்டான். ஆண்கள் இது போன்ற விஷயங்களில் அவ்வளவாக அக்கறை காட்டமாட்டார்கள். நீயாவது யோசித்து ஒரு முடிவுக்கு வருவது நல்லது.''

ஜெயந்தி மயக்கம் விடுபட்டவள் போல் நிமிர்ந்து நோக்கினாள்.

''நீங்க இருவரும் ஒருவரை ஒருவர் விரும்புவதாக இருந்தால் உடனே திருமணம் செய்துகொண்டு விடுங்கள். அந்த எண்ணம் இருந்தால் இத்தனை நாள் தாமதப் படுத்துவானேன்?''

ஜெயந்தியின் பார்வை தரையில் பதிந்தது. சூடாக பதில் சொல்ல வேண்டும் என்று மனம் தவித்தாலும் வார்த்தைகள் கிடைகாமல் தடுமாறினாள்.

''அது போன்ற எண்ணம் இருப்பதாக எப்போதாவது சொல்லியிருக்கிறானா?''

ஜெயந்தி பதில் சொல்லும் முன்பே ரேகா மேலும் தொடர்ந்தாள். ''எனக்குத் தெரியும் நீ வாய் திறந்து பதில் சொல்ல வேண்டியதே இல்லை. முன்பு ஒரு தடவை அவனிடம் இந்த பிரஸ்தாபனைகொண்டு வந்தபோது உன் மீது இரக்கம் தவிர



வேறு எண்ணம் இல்லை என்பது போல் பேசினான். அதுவும் உண்மைதான். இல்லையென்று மறுக்கவில்லை. உன்நிலைமை அப்படிப்பட்டது. ஆனால் இந்த உலகம் இருக்கே. ரொம்ப பொல்லாதது. உதவி செய்பவனும், பெற்றுக் கொள்கிறவளும் களங்கமில்லாமல் பழகினாலும் பழி சுமத்தாமல் இருக்காது. அதற்காக சமுதாயம் வேண்டாம் என்று நாம் தனியாக வாழமுடியுமா? நான் சொல்ல வந்தது என்னவென்றால் திருமணம் செய்துகொள்ளும் எண்ணம் இருந்தால் உடனே செயல் படுத்துங்கள். இல்லையா பரிமளாவை திருமணம் செய்து கொள்வதற்கு அவனை சம்மதிக்கவை.''

''நானா?''

''ஆமாம். நீயேதான். உன்மீது இரக்கப்பட்டு ஆதரவு தந்ததற்கு அவன் நிலைமை சங்கடமாகி விட்டது. உன்னிடம் எதையும் சொல்லமுடியாமல் தயங்குகிறான். அதனால்தான் திரும்பத் திரும்ப கேட்கிறேன். அவனுக்கு உன்மீது இருப்பது வெறும் இரக்கம் மட்டும்தானா இல்லை...''

''எனக்கெப்படி தெரியும்?'' ஜெயந்திக்கு ஏனோ அந்த அறையில் மூச்சு முட்டுவதுபோல் இருந்தது.

''தெரியாது என்று சொன்னால் என்னை நம்பச் சொல்கிறாயா? நீ ஒன்றும் சின்னக் குழந்தை இல்லையே?''

சற்றுமுன் நீ சின்னக்குழந்தை... உனக்கு எதுவும் தெரியாது என்றவள் இப்பொ ப்ளேட்டை திருப்பிப் போடுகிறாள்.

''மன்னித்துக் கொள்ளுங்கள். இதில் நான் என்ன செய்ய முடியும்? எனக்கு எதுவும் தெரியாது.'' ஜெயந்தி எழுந்துகொள்ளப் போனாள்.

''ராஜசேகரிடம் உனக்கு எந்த விதமான ஆர்வமும் இல்லை என்கிறாய். அப்படித்தானே.''

''அப்படி என்றால்?'' ஜெயந்தியின் இதயம் ஒருநிமிடம் வேகமாக துடித்தது. ராஜசேகரிடம் தனக்கு வெறுப்பு இருப்பது

உண்மைதான். ஆனால் அந்த வெறுப்பு அவன்மீது இருக்கும் மதிப்பை, அபிமானத்தை கொஞ்சம்கூட குறைக்கவில்லையே. சில சமயம் அவன் கண்களில் தெரியும் அன்பு மழையில் தான் கரைந்துபோவது உண்மைதானே. இந்த உலகில் தனக்கு நெருங்கியவர்கள் என்று சொன்னால் சுமதிக்கு அடுத்தபடி அவன்தானே. ஜெயந்தி மௌனமாக இருப்பதை பார்த்துவிட்டு ரேகா மேலும் சொன்னாள்.

'ஒரு விஷயம் மட்டும் நன்றாக நினைவில் வைத்துக்கொள். இரக்கத்தினால் செய்துகொள்ளும் திருமணங்களில் தாம்பத்திய வாழ்க்கை சரியாக இருக்காது. என் வாழ்க்கையையே எடுத்துக் கொள். பெற்றோரின் வற்புறுத்தலுக்கு இணங்கி எனக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் பணக்காரன் என்ற ஒரே காரணத்திற்காக கல்யாணம் செய்துகொண்டேன். இத்தனை வருட தாம்பத்திய வாழ்க்கையில் ஒரு நாளும் நான் நிம்மதியாக இருந்தது இல்லை.'' ரேகாவின் குரல் தழுதழுத்தது. ''நீ நன்றாக யோசித்துப் பாரு. அவன் நலனை விரும்புகிறவர்களில் நீயும் ஒருத்தி என்பது எனக்குத் தெரியும். அதான் உன்னிடம் சில விஷயங்களை நேரில் சொல்ல வந்திருக்கிறேன். அவன் மனதில் உன் பால் இருப்பது காதலோ இரக்கமோ எதுவாக இருந்தாலும் அவன் உன்னை திருமணம் செய்துகொண்டால் முதல் காரியமாக மிஸ்டர் கருணாகரன் வியாபாரத்திலிருந்து விலகிவிடுவார். அவர் விலகுவது மட்டுமே இல்லை. மற்ற பார்ட்னர்களையும் தன் பக்கம் இழுத்துக் கொண்டுவிடுவார். பரிமளாவை ராஜசேகருக்கு மணம் முடிப்பதாக முன்பே முடிவு செய்து இருந்தார்கள். அதற்கு அவன் சம்மதம் தெரிவித்தான். அதற்கு மாறாக அவன் நடந்துகொண்டால் அவன் எதிர்காலம் நிச்சயமாக பாதிக்கப்படும். அப்படி நடப்பதை நீ விரும்பமாட்டாய் என்று எனக்குத் தெரியும்.''

ஜெயந்தி கண் இமைக்காமல் ரேகா சொல்வதை கேட்டுக் கொண்டிருந்தாள், ரேகா அருகில் வந்து தோளில் தட்டிக் கொடுத்தாள். ''இந்த விஷயங்கள் உனக்கு வேதனையைத் தரும்



என்று எனக்குத் தெரியும். ஆனால் என்ன செய்யட்டும்? எனக்கு வேறுவழியில்லாமல் போய்விட்டது. உடன் பிறவாத தங்கையாய் உன்னை எண்ணுவதால் இதையெல்லாம் சொல்ல வேண்டியதாயிற்று.''

ரேகாவின் பேச்சில் எவ்வளவு இனிமை! அவற்றுக்கு பின்னால் எவ்வளவு விஷம்!

சற்று நேரம் கழித்து ரேகா கிளம்பிப் போய்விட்டாள்.

ஜெயந்திக்குக் குழப்பமாக இருந்தது. தன்னை திருமணம் செய்துகொள்ளும் முடிவுக்கு அவன் வரக்காரணம் இரக்கம் மட்டும்தானா? இல்லை என்பதற்கு சாட்சியம் என்ன? இந்தத் திருமணம் நடந்தால் அவனுக்குக் கிடைப்பதைவிட இழக்கப் போவது அதிகம் என்று சொல்வதுதான் ரேகாவின் நோக்கமா?

ஜெயந்தி எப்படியோ சமாளித்துக் கொண்டு தன்னுடைய அறைக்குச் சென்றாள். ராஜசேகர் எப்படிப் பட்டவனாக இருந்தாலும் தனக்கு உதவி செய்திருக்கிறான். பொருட்படுத்தாமல் தனக்கு ஆதரவு தந்தான். தனக்கு யாருமே இல்லை என்பதாலும், இந்த சமயத்தில் ஆதரவு தருவது கடமை என்று நினைத்து உதவி செய்தவனுக்கு தன் காரணமாக கெடுதல் நடக்கும் என்றால் அதைத் தன்னால் தாங்க முடியுமா? இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த வீட்டில் இருப்பது? கடவுளே! இந்தப் பிரச்னைக்கு நல்ல வழியைக்காட்டு. ஜெயந்தி தலையணையில் முகம் புதைத்து அழுதுகொண்டிருந்தாள்.

''ஜெயா!'' வாசலுக்கு அப்பால் ராஜசேகரின் குரல் கேட்டது. ''இருட்டில் என்ன செய்கிறாய்?''

ஜெயந்தி சட்டென்று கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவன் உள்ளே வந்ததும் தன் மனதில் இருப்பதை சொல்லிவிட வேண்டும் என்று காத்திருந்தவளுக்கு ஏமாற்றம்தான் கிடைத்தது.

அறை வாசலில் நின்றபடியே ''நாளை காலை ஊருக்கு போகிறேன். இரண்டுநாளில் திரும்பிவிடுவேன். சுமதியை

வரச்சொல்லி தகவல் அனுப்பினேன். அவங்க வீட்டுக்கு உறவினர்கள் வந்திருப்பதாக சுமதியின் கணவன் சொன்னான். முடிந்தால் நீ போய் சுமதியை பாரு.''

சரி என்பது போல் தலையை அசைத்தாள்.

''அங்கே போவதில் உனக்கு விருப்பம் இல்லை என்றால் கமலா மாமி வீட்டுக்கு போய் வா. இந்த ஒரு தடவை இப்படிச் செய்தால் போதும். அடுத்த முறை இந்த அவசியம் இருக்காது. இனிமேல் ஊருக்கு போவதாக இருந்தால் உன்னையும் உடன் அழைத்துப் போவேன்.'' முறுவலுடன் சொன்னான்.

ஜெயந்தி பதில் சொல்லவில்லை.

''விடியற்காலையிலேயே கிளம்பிவிடுவேன். நீ தூக்கத்தில் இருப்பாய். அதுதான் இப்போதே சொல்லிவிடுவோம் என்று வந்தேன். வரட்டுமா!'' ராஜசேகர் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.

## 46

மறுநாள் ஜெயந்தி விழித்துக் கொள்ளும் முன்பே ராஜசேகர் கிளம்பிப் போய் விட்டான். ஜெயந்தி மனதில் இனம் புரியாத கலக்கம் சூழ்ந்துகொண்டது. ராஜசேகர் திரும்பி வருவதற்கு இரண்டுநாள் அவகாசம் இருந்தது. அவன் திரும்பி வரும் போது தான் இந்த வீட்டில் இருக்கக்கூடாது. சுமதி வீட்டுக்குச் சென்றாலும் டாக்டர் வீட்டுக்கு போனாலும் பிரயோஜனம் இல்லை. என்னதான் வழி? ஜெயந்தி யோசித்துக் கொண்டிருந்தாள்.

மாலையாகி விட்டது.

''பாஸ் ஊரில் இல்லையா என்ன?'' அருகில் வந்து சிவராமன் கேட்கும் வரையில் அவன் வருகையை ஜெயந்தி உணரவில்லை.



சிவராமனை பார்த்ததும் ஜெயந்திக்கு போன உயிர் திரும்பி வந்தது போல் இருந்தது.

''தனியாக உட்கார்ந்து இருக்கீங்களே? டிஸ்ட்ரப் செய்து விட்டேனா?'' சிவராமன் கேட்டான்.

''இல்லை இல்லை. சரியான நேரத்திற்குதான் வந்தீங்க. என் பிரச்சினை தீர நல்ல வழி காட்டு என்று இப்பொழுதுதான் கடவுளிடம் வேண்டிக்கொண்டேன்.''

''வேடிக்கையாக இருக்கிறதே? அப்படி என்னதான் பிரச்சனை உங்களுக்கு?'' சிவராமன் நாற்காலியில் அமர்ந்து கொண்டே கேட்டான்.

தான் கேட்கப் போவதை நினைக்கும்போது ஜெயந்தியின் முகம் கன்றிவிட்டது.

''சொல்லுங்க. உங்களுக்கு வந்த பிரச்னைதான் என்ன?''

''உதவி தேவைப்படுகிறது.''

''கஷ்டத்தில் இருப்பவர்களுக்குத் தான் உதவி தேவை. உங்களுக்கு வந்த கஷ்டம் என்ன?''

''சிவராமன்!'' ஜெயந்தி தயங்கினாள்.

''சொல்லுங்க. தயங்குவானேன்?''

''நான் கேட்டபிறகு மாட்டேன் என்று சொன்னால்?''

''சொல்ல மாட்டேன்.''

''நீங்க என்னை...''

''நான் உங்களை?''

''திருமணம் செய்துகொள்ளவேண்டும்.''

சிவராமன் கல்லாகச் சமைந்துவிட்டான். இருவருக்குமிடையே மௌனம் நிலவியது.

''சிவராமன்! இப்படி கேட்டதற்கு என்னை வெட்கம் கெட்டவளாக நினைக்கமாட்டாயே?''

சிவராமன் இன்னும் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான்.

''நீ சரி என்று சொன்னால் நாம் பதிவுத் திருமணம் செய்து கொள்வோம்.''

சிவராமன் கொஞ்சம் தேறிக் கொண்டான்.

''உன்னை எதற்காகவும் தொந்தரவு செய்யமாட்டேன். எழுதி வேண்டுமானாலும் தருகிறேன். ப்ளீஸ்! இந்த வீட்டில் ஒரு நிமிடம்கூட என்னால் இருக்கமுடியாது. இந்த நிலைமையிலிருந்து நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்.''

சிவராமன் மௌனமாக இருப்பதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தாள். சிவராமனின் முகம் வெளிறிப் போயிருந்தது.

''சிவராமன்! என்னை உனக்கு பிடிக்க வில்லையா?''

''அப்படி இல்லை.''

''ராஜசேகர் ஏதாவது சொல்வாரோ என்று தயங்குகிறாயா?''

''அது இல்லை.''

''பின்னே?''

''உன்னை அந்த கண்ணோட்டத்தில் ஒருநாளும் பார்க்கவில்லை.''

''அதனால்தான் உன்னை எனக்கு பிடித்திருக்கிறது. இதில் உனக்கு ஆட்சேபணை இல்லையே?''

சிவராமன் சட்டென்று எழுந்துகொண்டான் ''சாரி ஜெயந்தி. நீ எந்த உதவி கேட்டாலும் செய்ய தயாராக இருக்கிறேன். ஆனால் இதை மட்டும்...'' ஒரு நிமிடம் தயங்கினான். ''ஜெயந்தி! இது நீ வேடிக்கை வேடிக்கைகாக சொன்ன விஷயம்தானே. உண்மை யில்லையே?'' என்றான்

ஜெயந்தி இமை அசைக்கவும் மறந்தவளாய் கண்களை மலர்த்தி பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அவருக்கு தெரிந்தால் என்ன நினைத்துக் கொள்வார்?'' என்றான்.



''அதுதான் உன் தயக்கமா? அவருக்கு பதில் சொல்ல வேண்டுமே என்று பயப்படுகிறாயா? நீ இவ்வளவு கோழையாக இருப்பாய் என்று நினைக்கவில்லை.''

''நான் மறுத்ததற்கு காரணம் அப்புறமாய் உனக்குப் புரியும். தயவு செய்து இது போன்ற யோசனையை மனதில் வரவிடாதே.''

''உன் அறிவுரைகள் எனக்கு தேவையில்லை.''

இருவரும் சற்று நேரம் மௌனமாக இருந்தார்கள். வெட்கத்தினாலும், அவமானத்தினாலும் ஜெயந்திக்கு உயிரே போய்விடும் போல் இருந்தது.

''நான் கிளம்புகிறேன். இந்த முறை அவரைச் சந்தித்தால் உன்னை இப்படி தனியாக விடவேண்டாம் என்று சொல்கிறேன். தனிமையில் இருக்கும் போது வேண்டாத யோசனைகள் வரத்தான் செய்யும். வருகிறேன்.'' சிவராமன் விடைபெற்றுக் கொண்டு வேகமாக போய்விட்டான்.

★ ★ ★

காரை எடுக்கப்போன டிரைவரை தடுத்துவிட்டு ஜெயந்தி சுமதியின் வீட்டுக்குக் கிளம்பினாள். யாரைக் கேட்டாலும் ஒரேபேச்சு. யாரையும் கேட்காமல் தானாக ஏதாவது செய்யவும் வழிதெரியவில்லை. யோசித்துக் கொண்டே சாலையில் நடந்துகொண்டிருந்த ஜெயந்தி பின்னால் வந்து கொண்டிருந்த காரை கவனிக்கவில்லை. பெரிதாக ஹாரன் சத்தப்படுத்திக் கொண்டே அவளைத் தாண்டிச் சென்ற கார் சடன் பிரேக்குடன் நின்றுவிட்டது. டிரைவர் இருக்கையில் அமர்ந்தவன் கோபமாய் ஜெயந்தி பக்கம் பார்த்தான். ஜெயந்தியும் அவன் பக்கம் பார்த்தாள்.

''அட நீங்களா! நல்ல வேளை. மயிரிழையில் என் கையால் சாகாமல் தப்பித்துக்கிட்டீங்க.'' காரைவிட்டு இறங்கிய பிரகாஷ் முறுவலுடன் அருகில் வந்தான்.

''சாரி,'' ஜெயந்தி சொன்னாள்.

''சாரி எல்லாம் அப்புறம். கிழக்கில் உதிக்க வேண்டிய சூரியன் மேற்கில் உதித்து விட்டாற்போல் இதென்ன? நீங்க நடந்து போவதாக?''

''சும்மாதான்.''

''என்னைப் போன்றவர்களை ஜெயிலுக்கு அனுப்ப வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டீங்களா என்ன?'' கிண்டல் செய்தான்.

ஜெயந்தி பதில் சொல்லவில்லை.

''சொல்லுங்க. எது வரையில் போறீங்க?''

''சுமதியின் வீட்டுக்கு.''

''வாங்க டிராப் செய்கிறேன்.''

ஜெயந்தி ஒரு நிமிடம் யோசித்துவிட்டு பிறகு காரில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். பிரகாஷ் காரை ஸ்டார்ட் செய்தான். ''உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் எங்க வீடு இங்கே பக்கத்தில்தான். ஒரு கப் காபி சாப்பிட்டு போகலாமே.''

ஏதோ நினைவில் இருந்த ஜெயந்தி பதில் சொல்லவில்லை. பிரகாஷ் மௌனத்தை சம்மதமாக எடுத்துக் கொண்டான்.

பங்களா போன்று தோற்றமளித்த வீட்டின்முன் கார் வந்து நின்றது.

''இதென்ன?'' ஜெயந்தி வியப்புடன் கேட்டாள்.

''இதுதான் எங்க வீடு. ஒரு கப் காபி சாப்பிட்டு போகலாம். வாங்க.'' ஜெயந்தி தயங்கினாள்.

''பரவாயில்லை. இறங்கிவாங்க. நான் அதிர்ஷ்டமாக நினைத்துக் கொண்டிருப்பதை நீங்க தேவையற்ற பயத்தினால் அலட்சியப்படுத்திவிட்டு போகாதீங்க.''

ஜெயந்தி இறங்கி உள்ளே வந்தாள். ஹாலை ஒட்டினாற் போல் படுக்கை அறை இருந்தது. நடுவில் டபிள்காட், ஒரு ஓரமாக மேஜை நாற்காலி போடப்பட்டிருந்தன.



பிரகாஷ் வேலைக்காரனிடம் பிளாஸ்கை கொடுத்து காபி வாங்கி வரச் சொல்லி அனுப்பினான்.

''அட! இதென்ன?'' மேஜைமீது இருந்த தன்னுடைய போட்டோவை பார்த்து திகைத்துப் போனாள்.

விருட்டென்று திரும்பிப் பார்த்த பிரகாஷ் உடனே சமாளித்துக் கொண்டான்.

''அதுவா. அன்னிக்கு பிக்னிக் போனபோது உங்களுக்குத் தெரியாமல் ஒரு ஸ்னாப் எடுத்துக் கொண்டேன்.''

''எவ்வளவு தைரியம் உங்களுக்கு?'' ஜெயந்தியின் கண்களில் கோபம் வெளிப்பட்டது.

''அழகாக இருப்பதை ஆராதிப்பதற்கு தைரியம் வேண்டுமா என்ன? உங்களுக்கு இதில் ஆட்சேபணை இருந்தால் அந்த போட்டோவை எடுத்துக்கிட்டு போகலாம்.''

''என் போட்டோ உங்க மேஜைமீது இருப்பதை யாராவது பார்த்தால் என்ன நினைப்பாங்க?''

''யாரும் பார்க்கமாட்டாங்க. அந்த போட்டோ எப்போதும் என்னுடைய பெட்டியில்தான் இருக்கும். காலையில் பெட்டியிலிருந்து ஏதோ எடுக்கும்போது கைதவறி போட்டோவை மேஜைமீது வைத்து விட்டேன்.''

வேலைக்காரன் காபி கொண்டு வந்ததால் உரையாடல் அத்துடன் நின்றுவிட்டது.

''சொல்லுங்க ஜெயந்தி. எப்படி இருக்கீங்க? சிவராமனை சமீபத்தில் பார்த்தீங்களா?'' காபி கோப்பையை நீட்டிக்கொண்டே கேட்டான்.

ஜெயந்தியின் நெற்றி சுருங்கியது. ''சற்று முன்தான் பார்த்தேன்.'' சுருக்கமாக சொன்னாள்.

''உங்க இருவருக்கும் நடுவில் ஏதாவது சண்டையா?'' பிரகாஷ் கேட்டான்.

''என் அப்படி கேட்கறீங்க?''

''சிவராமனின் பெயரைக் கேட்டதும் உங்கள் முகம் சுருங்கிவிட்டதை கவனித்தேன். எனக்குத் தெரிந்தவரையில் நீங்க இருவரும் நல்ல நண்பர்கள்.''

ஜெயந்தி பெருமூச்சு விட்டாள். ''நட்புக்கு இலக்கணம் என்ன வென்று உங்களால் சொல்ல முடியுமா பிரகாஷ்?''

''நம் மனதை முழுமையாக புரிந்துகொண்டு அவசர வேளையில் உதவிக்கரம் நீட்டுபவன்தான் நண்பன்.''

''அந்த வகையில் பார்த்தால் சிவராமன் எனக்கு நண்பன் இல்லை.''

''என் அப்படிச் சொல்றீங்க?''

''சற்றுமுன் நான் ஒரு உதவியைக் கேட்டால் மறுத்து விட்டான்.''

''உண்மையாகவா? மாட்டேன் என்று சொல்ல அவனுக்கு என்ன துணிச்சல்? இத்தனைக்கும் என்ன உதவி கேட்டீங்க?''

ஜெயந்தி பதில் சொல்லவில்லை.

''சொல்லுங்க. அவனால் செய்ய முடியாத உதவியை என்னால் செய்ய முடியுமோ என்னவோ.''

ஜெயந்தி அவனை கூர்ந்து பார்த்தாள்.

''கடவுள் மீது ஆணையிட்டு சொல்கிறேன். உங்களுக்கு உதவி செய்ய நினைப்பதில் எந்த சுயநலமும் இல்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் வராமல் பார்த்துக் கொள்கிறேன்.''

''இந்த ஊரைவிட்டு என்னை எங்கேயாவது அனுப்பிவைக்க முடியுமா? யார் கண்ணிலும் படாமல் பத்து நாட்கள் இருக்க முடிந்தால் கூட போதும்.''

பிரகாஷ் திகைத்துப் போனவனாய் பார்த்தான்.

''எதற்காக என்று மட்டும் கேட்காதீங்க. இப்போ உடனே என்னால் பதில் சொல்ல முடியாது. பிறகு சொல்கிறேன்.''



''...''

''சொல்லுங்க பிரகாஷ். உங்களால் முடியுமா?''

பிரகாஷ் தேறிக் கொண்டான்.

''இந்த ஊரை விட்டு போய்த்தான் ஆகனும் என்று நீங்க விரும்பினால் இன்று இரவே ரயிலில் உங்களை பெங்களூருக்கு அனுப்பிவைக்க என்னால் முடியும்.''

ஜெயந்தி ஒரு நிமிடம் யோசித்தாள். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவள் போல், ''ஓ.கே. உடனே அதற்கான ஏற்பாடுகளை செய்யுங்க. ரயில் எத்தனை மணிக்கு?''

''உண்மையாகத்தான் சொல்றீங்களா?'' பிரகாஷ் சந்தேகமாக பார்த்தான்.

''உண்மையாகத்தான் சொல்கிறேன். இனி வரப்போகும் சில நாட்களுக்கு நான் உயிரோடு இருக்கிறேனா இல்லையா என்று கூட யாருக்கும் தெரியக்கூடாது. முக்கியமாக ரேகாவுக்கு.''

பிரகாஷ்க்கு ஓரளவுக்கு விஷயம் புரிந்துவிட்டது. காரணம் எதுவாக இருந்தாலும் ஜெயந்தி ராஜசேகரிடமிருந்து தொலைவாக போக நினைக்கிறாள். அந்த விஷயமாக உதவி கேட்டபோது சிவராமன் மறுத்திருக்க வேண்டும்.

''சொல்லுங்க. உங்களால் உதவி செய்ய முடியுமா?''

''முடியும்.''

இருவருக்குமிடையே ஒரு நிமிடம் மௌனம் நிலவியது.

''ஆனால் என்னிடம் பணம் இல்லை.''

''நான்சென்ஸ்! நான் யோசித்தது பணத்தைப் பற்றி இல்லை.''

''இதனால் உங்களுக்கு ஏதாவது பிரச்னை வருமோ என்று பயப்படறீங்களா? இந்த திட்டத்தில் உங்களுக்கு எந்த பங்கும் இல்லை என்றும் இது என் சுயமுடிவு என்றும் எழுதி வேண்டு மானாலும் தருகிறேன்.

''தாங்க்ஸ். நீங்க வாயால் சொன்னதேபோதும்.'' பிரகாஷ் மேஜை அருகில் சென்று ரயில்வே கைடை எடுத்துப் பார்த்தான்.

''இரவு எட்டு மணிக்கு ரயில் இருக்கு.''

''அதில் என்னை அனுப்ப ஏற்பாடு செய்ய முடியுமா?''

''முடியும்.'' வாட்சைப் பார்த்துக் கொண்டான். ''இன்னும் நேரம் இருக்கிறது. அதற்குள் கடைத் தெருவுக்கு போய்விட்டு வந்துவிடுகிறேன்.''

''கடைத் தெருவுக்கா? எதற்கு?''

''உங்களுக்கு தேவையான உடைகளை வாங்கி வருகிறேன்.''

''சரி.''

'சீக்கிரமாக வந்து விடுகிறேன். நீங்களும் நன்றாக யோசித்துப் பாருங்கள். கடைசி நிமிடத்தில் நீங்க வேண்டாம் என்று சொன்னாலும் நான் தவறாக நினைக்க மாட்டேன்'' என்றான்.

''தாங்க்ஸ்.''

பிரகாஷ் வெளியே போகும்முன் ''நீங்க தவறாக நினைக்கலைன்னா ஒரு சின்ன விஷயம்'' என்றான்.

''சொல்லுங்க.''

'கதவை வெளிப்பக்கம் பூட்டிவிட்டுச் செல்கிறேன். மாலை வேளை என்பதால் என் நண்பர்கள் யாராவது வரக்கூடும். உங்களை இதுபோல் தனியாக என் அறையில் பார்த்தால்...''

சம்மதம் தெரிவிப்பதுபோல் ஜெயந்தி தலையை அசைத்தாள்.

பிரகாஷ் வெளியே பூட்டிவிட்டு போய்விட்டான்.

'என்ன செய்கிறேன் நான்? இது சரியானதுதானா? இதில் ஆபத்து எதுவும் இல்லையே?' ஜெயந்தியின் மனதில் பலவித மான எண்ணங்கள் தோன்றி மறைந்தன. ஆனால் இதைவிட வேறு வழியில்லை. பெங்களூருக்குச் சென்ற பிறகு அங்கேயே



ஏதாவது வேலையை தேடிக்கொண்டு பிறகு சுமதிக்குக் கடிதம் எழுத வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள் ஜெயந்தி.

ஒரு மணி நேரம் கழித்து பிரகாஷ் திரும்பி வந்தான். கை நிறைய பாக்கெட்டுகள் இருந்தன. பூட்டைத் திறந்துகொண்டு உள்ளே வந்ததும் ''சொல்லுங்க. உங்க எண்ணத்தை மாற்றிக் கொண்டு விட்டீங்களா?'' என்று கேட்டான்.

''இல்லை... இல்லை.'' ஜெயந்தி திடமாக தலையை அசைத்தாள்.

''ஆல் ரைட். நீங்க இன்னொரு கப் காபி சாப்பிடுங்க. இதற்குள் நான் இவற்றை சூட்கேஸில் எடுத்து வைக்கிறேன்.''

''இத்தனை இருக்கே? என்னதான் வாங்கினீங்க?''

''பெண்களின் தேவைகளை சின்ன பட்டியலில் அடக்கி விடமுடியுமா என்ன?'' பிரகாஷ் முறுவலுடன் சொன்னான்.

வரும்போதே பிரகாஷ் டாக்ஸியை கொண்டுவந்திருந்தான். இருவரும் டாக்ஸியில் ஏறிக்கொண்டார்கள்.

ரயில் கிளம்ப இன்னும் சில விநாடிகளே இருந்தன. ஜெயந்தி கம்பார்ட்மெண்டில் உட்கார்ந்து கொண்டாள். அவள் இதயம் வேகமாக துடித்துக்கொண்டிருந்தது. யாராவது தன்னைப் பார்த்து விடுவார்களோ என்று பயந்துகொண்டே இருந்தாள். ரயில் கிளம்புவதற்கு அடையாளமாக ஹாரன் ஒலித்தது.

''ரயில் கிளம்பிவிடும். நீங்க இறங்கிக் கொள்ளுங்கள்.'' எதிர் சீட்டில் அமர்ந்திருந்த பிரகாஷை அவசரப்படுத்தினாள்.

பிரகாஷ் பதட்டப்படவில்லை. சாவகாசமாக சிகரெட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டான்.

''நானும் உங்களுடன் வருகிறேன். முன்பின் தெரியாத ஊருக்குத் தனியாக அனுப்புவதில் எனக்கு விருப்பம் இல்லை'' என்றான்.

ஜெயந்தி கண்கள் அகல விரிய பார்த்தாள்.

''பயப்படாதீங்க. உங்களுக்கு வேண்டிய வசதிகளை செய்துவிட்டு திரும்பிவிடுவேன்.'' பிரகாஷ் சொன்னான.

ரயில் வேகமாக போய்க் கொண்டிருந்தது. ஜெயந்திக்கு எதிரே அமர்ந்திருந்த பிரகாஷ் படுக்கையை பிரித்துப் போட்டான். ஜெயந்தியின் பக்கத்து இருக்கையில் நடுத்தர வயது கடந்த மாதுவும், பத்து வயது சிறுமியும் இருந்தார்கள். பிரகாஷுக்கு பக்கத்து இருக்கையில் வயதான தாத்தா அமர்ந்திருந்தார்.

''ரொம்ப குளிர்கிறது.'' பிரகாஷ் நடுங்கிக்கொண்டே கம்பளியை எடுத்து போர்த்திக் கொண்டான்.

''தம்பி ரொம்ப நடுங்குதே? குளிர் ஜுரமா?'' வயதான மாது ஜெயந்தியிடம் கேட்டாள்.

ஜெயந்தி பதில் சொல்லவில்லை.

பிரகாஷ் உடல் முழுவதும் கம்பளியால் போர்த்திக்கொண்டு முடங்கி உட்கார்ந்திருந்தான்.

''அடடா! அப்படி முடங்கி உட்காருவானேன்? இங்கே வந்து படுத்துக்கொள். நான் அந்த சீட்டில் உட்கார்ந்து கொள்கிறேன்.'' அந்த மாது எழுந்து நின்று கொண்டாள். எல்லோரும் ஜெயந்தியை, பிரகாஷை மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''வந்து காலை நீட்டி படு தம்பி.'' அந்த மாது வற்புறுத்தினாள். பிரகாஷ் நன்றி சொல்லிவிட்டு எழுந்து கொண்டான். தள்ளாடி விழப்போனவனை பக்கத்தில் இருந்தவன் தாங்கிக் கொண்டான். பிரகாஷ் ஜெயந்தி அமர்ந்திருந்த பெர்தில் படுத்துக் கொண்டான். ஜெயந்தி எழுந்துகொள்ள நினைத்தாலும் எங்கேயும் இடமில்லாததால் ஒதுங்கி உட்கார்ந்து கொண்டாள்.

''ஜுரம் இருக்கா பாரு.'' பிரகாஷ் ஜெயந்தியின் கையைப் பற்றி நெற்றியின் மீது வைத்துக் கொண்டான்.

''அனலாக கொதிக்குதே.'' ஜெயந்தி கையை பின்னால் இழுத்துக் கொண்டாள்.



''பயப்படாதே. சமீபத்தில் அடிக்கடி இதுபோல் ஜுரம் வருகிறது'' பிரகாஷ் சொன்னான்.

''அப்படி இருக்கும்போது வராமல் இருந்திருக்கலாம் இல்லையா.''

''உன்னை தனியாக அனுப்பும் துணிச்சல் இருக்கவில்லை.'' முறுவலிக்க நினைத்தவனின் முயற்சி குளிர் நடுக்கத்தால் தோல்வியுற்றது.

பிரகாஷின் ஜுரம் இரண்டு மணிநேரம் கழிந்த பிறகும் குறையவில்லை. ஜுரத்தோடு அப்படியே தூங்கி விட்டான்.

ஜெயந்திக்கு மூளை கலங்கிவிட்டாற்போல் இருந்தது. என்ன செய்து கொண்டிருக்கிறாள்? இப்படி பிரகாஷ் பக்கத்தில் அமர்ந்துகொண்டு பயணம் செய்வது உண்மைதானா? இதன் பின்விளைவுகள் எப்படி இருக்கும்?

வீட்டுக்கு வந்ததும் ராஜசேகர் என்ன செய்வான்? சுமதியின் வீட்டுக்கு காரை அனுப்புவான். அங்கே இல்லை என்று தெரிந்தால் டாக்டர் வீட்டுக்கு போன் செய்வான். அங்கேயும் இல்லை என்று தெரிந்தால்...''

போனை கையில் பிடித்துக்கொண்டு புருவம் முடிச்சேற சீரியஸாக யோசித்துக் கொண்டிருக்கும் ராஜசேகரின் தோற்றம் ஜெயந்தியின் கண்முன்னால் நிழலாடியது.

ராஜசேகருடன் தன்னுடைய பந்தம் இன்றுடன் அறுந்து விட்டது. தன் வாழ்க்கையில் அவனுடைய அத்தியாயம் முடிந்து விட்டது. ஏதோ யோசித்துக் கொண்டிருந்த ஜெயந்தி பிரகாஷ் அசைந்ததை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள்.

''மணி என்ன? பார்த்துச் சொல்லு.'' வாட்ச் இருந்த கையை நீட்டினான்.

''நாலரை'' என்றாள்.

''இத்தனை நேரம் இப்படியே உட்கார்ந்து இருந்தாயா? முதுகு வலிக்கவில்லையா?''

இல்லை என்பது போல் தலையை அசைத்தாள்.

"வேண்டுமானால் நான் எழுந்துகொள்கிறேன். படுத்துக்கொள்." பிரகாஷின் குரல் சோர்வாக ஒலித்தது.

"வேண்டாம், வேண்டாம்." எழுந்துகொள்ளப் போனவனை தடுத்தாள். பிரகாஷ் பேச்சில் தென்பட்ட உரிமையை பார்த்து மிரண்டுவிட்ட மனதிற்கு தைரியம் சொல்ல முயன்றாள்.

பிரகாஷ் மறுபடியும் உறக்கத்தில் ஆழ்ந்துபோய் விட்டான்.

## 47

"பிரயோஜனம் இல்லை ஜெயந்தி. எங்கேயும் ஒரு ரூம் கூட காலியாக இல்லை. இங்கே ஏதோ மீட்டிங் நடக்கிறதாம்."

வெளியே டாக்ஸியில் அமர்ந்திருந்த ஜெயந்தியின் அருகில் வந்தான் பிரகாஷ். ரயிலைவிட்டு இறங்கியது முதல் ரூமுக்காக அலைந்து திரிந்து கொண்டிருந்தான். எங்கேயும் அறை காலியாக இல்லை.

"இப்போ என்ன செய்வது?" கவலையும், பதட்டமும் ஆட்கொள்ள ஜெயந்தி கேட்டாள்.

பிரகாஷ் ஒரு நிமிடம் யோசித்துவிட்டு மறுபடியும் டாக்ஸியில் அமர்ந்துகொண்டான். ஏதோ தெருவின் பெயரைச் சொல்லி அங்கே போகும்படி டாக்ஸிகாரனுக்கு ஆணையிட்டான்.

"எந்த இடம்?" ஜெயந்தி கேட்டாள்.

"பிரசாத் என்று எனக்கொரு நண்பன் இருக்கிறான். அவன் வீட்டுக்கு."

"அங்கே போவது சரியாக வருமா?" ஜெயந்தி கவலையுடன் கேட்டாள்.

"அவன் இருந்துவிட்டால் எந்த பிரச்சனையும் இல்லை. இன்னும் திருமணம் ஆகவில்லை. இந்த ஒரு நாளை எப்படி



யாவது கழித்துவிட்டால் நாளைக்கு எப்படியாவது வேறு அறையை பார்த்துக் கொண்டுவிடலாம்."

டாக்ஸி தெருமுனையில் திரும்பும்போது பிரகாஷ் சொன்னான். "அவன் டாக்டர். ரொம்ப பிசியாக இருப்பான். வீட்டில் இருப்பானோ இல்லையோ."

அவர்களுடைய அதிர்ஷ்டம் நன்றாக இருந்தது. பிரசாத் வீட்டில் இருந்தான். பிரகாஷ் முதலில் இறங்கி உள்ளேபோய் பிரசாதிடம் பேசிவிட்டு வந்தான். ஜெயந்தியை உள்ளே வரச்சொல்லி அழைத்தான்.

பிரசாத் கொஞ்சம் குள்ளமாக, ஒல்லியாக இருந்தான். மூக்குக் கண்ணாடியை கைக்குட்டையால் துடைத்துக் கொண்டே வெளி யில் வந்தவன் ஜெயந்திக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு "வாங்க" என்றான்.

டாக்ஸிக்காரனுக்கு பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு உள்ளே வந்தான் பிரகாஷ்.

"பிரசாத்! முதலில் ஒருவாய் காபிக்கு ஏற்பாடு செய். இல்லாவிட்டால் என் உயிர் போவது நிச்சயம்" என்றான்.

"டாக்டராக பக்கத்தில் நான் இருக்கும் வரையில் உன் உயிருக்கு எந்த ஆபத்தும் வராது. கவலைப்படாதே." பிரசாத் பிளாஸ்க்கை கொடுத்து வேலைக்காரனை ஹோட்டலுக்கு அனுப்பிவைத்தான்.

பிரசாத் வீடு சிறியதாக இருந்தாலும் வசதிகள் நிறைந்ததாக இருந்தது. பிரசாத் கூச்சசுபாவம் படைத்தவனாய் தென்பட்டான்.

ஹோட்டலில் அறை கிடைக்காமல் போனதை ஜெயந்தி அதிர்ஷ்டமாக நினைத்தாள். இல்லாவிட்டால் பிரகாஷுடன் தனியாக... நினைத்துப் பார்க்கும்போதே ஜெயந்தியின் உடல் நடுங்கியது.

பிரசாத் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுத்தான்.

''அவசரமாக பார்க்க வேண்டிய கேஸ் ஒன்று இருக்கு. பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்.'' பிரசாத் போய்விட்டான்.

பிரகாஷ் சோர்வாக கட்டில் மீது படுத்திருந்தான். மறுபடியும் குளிர் ஜுரம் வரும்போல் இருந்தது.

ஜெயந்தி நாற்காலியில் அமர்ந்து பத்திரிகையை புரட்டிக் கொண்டிருந்தாள்.

''ஜெயந்தி!'' பிரகாஷ் அழைத்தான்.

ஜெயந்தி தலையைத் திருப்பி என்ன என்பதுபோல் பார்த்தாள்.

''பிரசாத் நம்மை தவறாக நினைக்கக்கூடாது என்பதற்காக நான்...'' ஒருநிமிடம் தயங்கினான். ''நாமிருவரும் திருமணம் செய்துகொள்ளப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறேன். வீட்டில் பெரியவர்கள் சம்மதிக்காததால் வீட்டைவிட்டு ஓடிவந்து விட்டோம் என்றும் சொன்னேன்.'' ஜெயந்தியின் பக்கம் பார்க்காமல் விட்டத்தை பார்த்துக்கொண்டே சொன்னான்.

இருவருக்குமிடையே மறுபடியும் நிசப்தம் ஏற்பட்டது. ஜெயந்தியின் பார்வை புத்தகத்தில் படிந்திருந்தாலும் எழுத்துக்கள் கண்ணுக்குத் தெரியவில்லை.

''இதில்...உனக்குக் கோபம் இல்லையே?''

''கோபம் எதற்கு?'' என்ன பதில் சொல்வது என்று ஜெயந்திக்கு புரியவில்லை. சூழ்நிலையுடன் போராடவேண்டிய தருணம் வந்துவிட்டது. மனதில் கலவரம் இருந்தாலும் வெளியில் காட்டிக் கொள்ளக்கூடாது.

பிரகாஷ் மேலும் சொல்லிக் கொண்டிருந்தான். ''பிரசாத் முன்னிலையில் நீ இப்படி பட்டும் படாமல் இருக்காமல் உரிமையுடன் பழகவேண்டும். இல்லாவிட்டால் அவனுக்கு சந்தேகம் வரக்கூடும்.''

ஜெயந்தி பதில் சொல்லவில்லை?''



''என்ன சொல்கிறாய்?''

''சரி. ஆகட்டும்.''

''அந்த கம்பளியை எடுத்து போர்த்திவிடேன்.''

ஜெயந்தி எழுந்து போய் கம்பளியை போர்த்திவிட்டாள். பிரகாஷ் ஜெயந்தியின் கையைப் பற்றிக் கொண்டான்.

''ஜெயந்தி! உண்மையிலேயே நாம் இருவரும் திருமணம் செய்து கொண்டால் என்ன?''

இதுபோல் அவன் ஏதாவது கேட்கக்கூடும் என்று ஜெயந்தி முன்னாடியே ஊகித்திருந்தாள்.

''சொல்லு ஜெயந்தி. உனக்கு ஏதாவது வேலை கிடைத்தாலும் தனியாக எப்படி இருப்பாய்? உன்னைப்போன்ற அழகான பெண்கள் பாதுகாப்பு இல்லாமல் இருப்பது சரியில்லை. உலகம் ரொம்ப கெட்டுக்கிடக்கிறது.''

பிரகாஷ் ஜெயந்தியை அருகில் இழுத்துக் கொள்ளப் போனான். ஜெயந்தி விடுவித்துக் கொள்ளும்முன் கதவு திறக்கப் படும் சத்தம் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். பிரசாத் உள்ளே வந்தான். அவனைப் பார்த்த பிறகும் பிரகாஷ் ஜெயந்தியின் கையை விடவில்லை. ஜெயந்தி வலுக்கட்டாயமாக விடுவித்துக்கொண்டு நகர்ந்தாள்.

''சாரி பிரதர்.'' பிரசாத் சங்கடமாக உணர்ந்தான்.

''பரவாயில்லை.''

''ஏன் படுத்துக்கிட்டு இருக்கே?''

''குளிர் அதிகமாக இருக்கு.''

அருகில் வந்து பிரசாத் நண்பனை பரிசோதித்துவிட்டு மாத்திரையைக் கொடுத்தான்.

ஜெயந்திக்கு அன்று இரவு தூக்கம் வரவில்லை. ராஜசேகருக்கு கடிதம் எழுதவேண்டும் என்று தோன்றியது. ஆனால்

தனக்காக வருவானா? ஏதோ ஆவேசத்தில் கிளம்பி வந்து விட்டதாக சொன்னால் எப்படி எடுத்துக்கொள்வான்?

தன்னைக் காணவில்லை என்று தெரிந்தால் ரேகாவும், மிஸெஸ் கருணாகரனும் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். ஒரு முறை பந்தத்தை அறுத்துக்கொண்டு வந்த பிறகு திரும்பிப் போவது சரியில்லை. சில நாட்கள் போனால் ராஜசேகர் மனதை சமாதானம் செய்துகொண்டு பரிமளாவைத் திருமணம் செய்து கொண்டு விடுவான். தன்னால் அவன் எதிர்காலம் பாழாகக் கூடாது.

இரவு முழுவதும் ஜெயந்தி விழித்துக் கொண்டுதான் இருந்தாள்.

★ ★ ★

பிரசாத் கொடுத்த மருந்து வேலை செய்ததாலோ இல்லை இரவு முழுவதும் நன்றாக தூங்கியதாலோ பிரகாஷ் மறுநாள் காலையில் விழித்துக் கொள்ளும்போதே தெம்பாக இருந்தான். குளித்து உடைமாற்றிக்கொண்டு ஜெயந்தி அருகில் வந்தான்.

"இன்னிக்கு எந்த ஹோட்டலிலாவது அறையை ஏற்பாடு செய்யாமல் திரும்பப் போவதில்லை" என்றான்.

"அவசரப்படுவானேன்? இங்கே நன்றாகத்தானே இருக்கிறது." ஜெயந்தியின் மனதில் இனம் புரயாத பயம் பரவி யிருந்தது.

"எத்தனை நாட்கள் இருக்க முடியும்? அவனுக்கு இடைஞ்சலாக இருக்காதா?"

பிரகாஷ் கிளம்பிப் போனபிறகு பிரசாதும் ஆஸ்பத்திரிக்கு சென்றுவிட்டான்.

அறையில் தனியாக இருந்த ஜெயந்தி பயத்தால், கவலையால் திகிலடைந்து விட்டாள். மாலை வரையில் பிரகாஷ் திரும்ப வில்லை. எப்படியாவது ரூம் புக் செய்துவிட்டுத்தான் திரும்ப



வேண்டும் என்ற பிடிவாதமாக இருக்கிறானோ. கடவுளே! இது என்ன சோதனை? இன்று இரவு பிரகாஷுடன் தனியாக ஹோட்டல் அறையில் கழிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுமோ. ராஜசேகரைவிட்டு தொலைவாக போய்விடவேண்டும் என்று நினைத்தாளே தவிர இப்படி இக்கட்டான சூழ்நிலை ஏற்படும் என்று நினைக்கவில்லையே. என்ன செய்வது? பிரசாதிடம் உண்மையைச் சொல்லி இங்கேயே இருப்பதற்கு அனுமதி கேட்டால்? பிரகாஷுக்குக் கோபம் வருமோ. என்னதான் செய்வது? ஜெயந்திக்கு மூளை மரத்துவிட்டது போல் இருந்தது.

மாலையாகும் போது பிரசாத் முதலில் வந்தான். இந்த வாய்ப்பை நழுவவிடக்கூடாது என்றும் அவனிடம் உண்மையைச் சொல்லிவிட வேண்டும் என்றும் ஜெய்ந்திக்குத் தோன்றியது. ஆனால் எப்படிச் சொல்வது என்றுதான் தெரியவில்லை.

எப்படியோ துணிச்சலை வரவழைத்துக்கொண்டு "இதோ பாருங்க" என்றாள். அவள் குரல் அவளுக்கே கேட்கவில்லை. அவ்வளவு பலவீனமாக இருந்தது.

நிலைக் கண்ணாடியின் முன்நின்று தலையை வாரிக் கொண்டிருந்த பிரசாத் திரும்பிப் பார்த்தான் "அழைத்தீங்களா?" என்றான்.

ஜெயந்தி ஆமாம் என்பதுபோல் தலையை அசைத்தாள்.

"என்ன வேண்டும்?"

"நான்.. நான்..." மேற்கொண்டு எப்படிச் சொல்வது என்று புரியாமல் தயங்கினாள்.

"உங்களுக்கு?" கேள்விக் குறியுடன் பார்த்தான்.

"நான் வந்து..." ஜெயந்தி மேலும் ஏதோ சொல்லும் முன் வெறுமே சாத்தியிருந்த கதவைத் தள்ளிக்கொண்டு பிரகாஷ் உள்ளே வந்தான்.

ஜெயந்தி சோர்வுடன் நாற்காலியில் சரிந்துவிட்டாள். எதிர் பாராமல் கிடைத்த வாய்ப்பு கை நழுவிப் போய்விட்டது.

பொங்கி வந்த அழுகையை அடக்கிக்கொண்டு பக்கத்தில் இருந்த பத்திரிகையை எடுத்து புரட்டினாள்.

பிரகாஷின் உடல் நிலை சரியாக இல்லை என்று உணர்ந்த பிரசாத் அருகில் சென்றான்.

''என்ன நடந்தது? ஏன் இப்படி தள்ளாடுகிறாய்?'' பிரகாஷ் கீழே விழாமல் பிடித்துக்கொண்டான்.

ஜெயந்தி திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''பிரசாத்! வெளியில் டாக்ஸிக்காரனுக்கு பணம் கொடுத்து... அனுப்பு.'' எப்படியோ சொல்லி முடித்த பிரகாஷ் கட்டில் மீது சரிந்தான்.

டாக்ஸிக் காரனுக்கு பணத்தை கொடுத்துவிட்டு உள்ளே வந்த பிரசாத் பிரகாஷை பரிசோதித்தான்.

''மைகாட்! வெளியில் ஏதாவது சாப்பிட்டாயா? ஊரில் காலரா நோய் பரவியிருக்கு.'' அவசர அவசரமாக மருந்தை சிரெஞ்சில் ஏற்றிக்கொண்டே சொன்னான்.

''ஊரில் காலரா இருக்கா? என்னிடம் சொல்லவே இல்லையே?''

''நீ வெளியே போய் சாப்பிடுவாய் என்று கனவு கண்டேனா?'' பிரசாத் ஊசி மருந்தை பிரகாஷ் கையில் செலுத்தினான்.

''பரவாயில்லை. டாக்டர் பக்கத்தில் இருக்கும்போது என் உயிர் அவ்வளவு சுலபமாக போய்விடுமா என்ன?'' முறுவலிக்க முயன்றான். கண்கள் சொருகிக்கொண்டன.

''உனக்கு ஒன்றும் ஆகாது. கவலைப்படாதே.'' பிரசாத் சொன்னானே தவிர காலம் கடந்துவிட்டதென்று அவனுக்குப் புரிந்துவிட்டது.

★ ★ ★

கட்டிலுக்கு பக்கத்தில் நின்றிருந்த ஜெயந்தி கல்லாகச் சமைந்து விட்டாள். பிரகாஷ் உயிரோடு இல்லை என்று தெரிந்ததுமே அவளுக்கு மூச்சு அடைப்பதுபோல் இருந்தது.



''இப்போ என்ன செய்வது?'' பிரசாத் ஜெயந்தியிடம் கேட்டான். காதலித்துத் திருமணம் செய்துகொள்வதாக வெளியூருக்கு வந்த இடத்தில் காதலன் இறந்துவிட்டால் அந்த காதலியின் நிலை என்ன? ஜெயந்தியிடம் என்ன பேசுவது? எப்படி இரக்கம் காட்டுவது என்று பிரசாதுக்கு புரியவில்லை.

''நீங்க மனதை தைரியப்படுத்திக் கொள்ளுங்கள்'' என்றான்.

''பிரகாஷ் உண்மையிலேயே இறந்து விட்டானா?''

பிரசாத் மௌனமாக தலையை அசைத்தான். காபியை வரவழைத்து வலுக்கட்டாயமாக குடிக்கச் செய்தான்.

''இப்போ என்ன செய்வது?'' ஜெயந்தி கேட்டாள்.

''அதைத்தான் நானும் யோசிக்கிறேன். பிரகாஷ் வீட்டாருக்கு தகவல் கொடுத்து விடுகிறேன். ஆனால் நீங்க...'' பாதியிலேயே நிறுத்திவிட்டான்.

ஜெயந்தியின் பார்வை தரையில் பதிந்தது. இந்த ஆபத்திலிருந்து எப்படி வெளியேறுவது?

''உங்க வீட்டு அட்ரெஸ் கொடுங்க. டெலிகிராம் கொடுத்து விடலாம்.''

அவள் பதில் சொல்லவில்லை.

''பின்னே என்ன செய்யலாம்?'' பிரசாத் கேட்டான்.

''உங்களால் ஏதாவது வழியைக் காட்ட முடியாதா?

பிரசாதிற்கு ஜெயந்தியின் நிலைமை புரியாமல் இல்லை. அவளைப் பார்க்கும்போது முகத்தில் குழந்தைத்தனம் இன்னும் மறையாததுபோல் தோன்றியது. உலக அனுபவம் இல்லாததால் பிரகாஷை நம்பி வெளியூருக்கு வந்துவிட்டாள்.

''நான் ஒரு வழி சொல்கிறேன் கேட்கறீங்களா?'' என்றான்.

''சொல்லுங்க.''

''இரண்டு மூன்று நாட்கள் ஏதாவது ஹோட்டலில் தங்கிக் கொள்ளுங்கள். இதற்குள் பிரகாஷ் வீட்டார் வந்து மேற்கொண்டு

ஆகவேண்டியதை பார்த்துக் கொள்வார்கள். உங்களுக்கும் யோசித்துக்கொள்ள கொஞ்சம் அவகாசம் இடைக்கும்.''

''ஆனால்...''

''இந்த ஆனால் எல்லாம் விட்டுவிடுங்க. இப்பொ முதலில் உங்களுக்கு தேவை நல்ல ஓய்வு, தூக்கம். அதாவது கிடைக்கும் இல்லையா?''

''ஆனால் ஹோட்டலில் தனியாக...''

''தனியாக இருக்க பயப்படறீங்களா? இல்லை யாராவது பார்த்துவிடுவார்களோ என்று தயங்கறீங்களா?''

''எனக்குத் தெரிந்த ஸ்டார் ஹோட்டல் இருக்கு வெளி நாட்டினர் தவிர அங்கே யாரும் வரமாட்டார்கள். நீங்க அறையை விட்டு வெளியே வராத பட்சத்தில் மற்றவர்கள் பார்த்து விடுவார்களோ என்று பயப்பட தேவையில்லை.''

ஜெயந்தி அப்போதும் மௌனமாக இருந்தாள்.

''சீக்கிரமாக ஏதாவது ஒரு முடிவுக்கு வருவது நல்லது. தற்போது இதைவிட நல்லயோசனை எதுவும் தோன்றவில்லை.''

சரி என்பதுபோல் தலையை அசைத்தாள்.

''உங்களுக்கு சம்பந்தப்பட்ட பொருள் எதுவும் பிரகாஷ் பெட்டியில் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.'' எச்சரித்தான்.

ஜெயந்திக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் பிரகாஷ் பெட்டியில் இருந்த புடவைகளை, மற்ற ஆடைகளை எடுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

''எல்லாம் எடுத்துக்கொண்டு விட்டீர்களா?'' பிரகாஷின் பெட்டியை பரிசோதனை செய்த பிரசாத் பெட்டியின்மேல் அறையிலிருந்து ஜெயந்தியின் போட்டோவை எடுத்துக் கொடுத்தான் ''இதை மறந்துவிட்டீர்களே'' என்றான்.

ஜெயந்தி போட்டோவை ஒரு நிமிடம் உற்று பார்த்துவிட்டு நான்காக கிழித்து பக்கத்தில் இருந்த குப்பைக் கூடையில்



போட்டாள். பிரகாஷின் ஆயுள் இந்த ஊரில் வந்து முடிய வேண்டும் என்று விதியிருப்பதால்தான் தனக்கு இதுபோன்று யோசனை வந்ததோ.

அன்று பிக்னிக் போய்விட்டு பிரகாஷிடன் காரில் வரும் போது ஆக்ஸிடெண்ட் நடந்த நிகழ்ச்சி கண் முன்னால் நிழலாடியது. அன்று ராஜசேகர் இருந்ததால் காவல் நிலையத்தில் தன்பெயர் பதிவு ஆகாமல் தப்பியது. இன்று இந்த ஆபத்திலிருந்து தன்னை யார் காப்பாற்றப் போகிறார்கள்?

பிரகாஷ் இறந்துவிட்டான் என்று தெரிந்ததும் ஜெயந்தி நினைவு தப்பி கீழே விழுவதோ. மேலே விழுந்து அழுது ஆற்றுவதோ செய்யாதது பிரசாதுக்கு வியப்பை ஏற்படுத்தியது. எதிர்பாராமல் ஏற்பட்ட இந்த நிகழ்ச்சியினால் மனம் அதிர்ச்சி அடைந்துவிட்டதோ. அதுதான் உண்மையாக இருக்க வேண்டும். பாவம்! எத்தனை கனவுகளை கண்டு இருப்பாள்? பிரசாத் மனம் முழுவதும் அவள்பால் இரக்கத்தால் நிரம்பிவிட்டது.

# 48

அந்த ஹோட்டல் வெளியிலிருந்து பார்ப்பதற்கு சிறியதாக காட்சி அளித்தாலும் அழகாக சகல வசதிகளும் நிறைந்ததாக இருந்தது. ஜெயந்தி தங்கியிருந்த அறை இரண்டாவது மாடியில் இருந்தது.

''உங்களுக்கு எந்த விதமான உணவு வேண்டும் என்று சொன்னால் அறைக்கே சப்ளை செய்வார்கள்.'' பிரசாத் சொன்னான்.

''இப்பொ எதுவும் வேண்டாம். எனக்கு பசிக்கவே இல்லை.'' ஜன்னல் வழியாக வெளியில் பார்த்துக்கொண்டே சொன்னாள்.

''பசி இல்லை என்று சாப்பிடாமல் இருப்பது சரியில்லை. நான் போய்விட்டால் நீங்க உண்மையிலேயே சாப்பிட மாட்டீங்க

போயிருக்கு. நானே ஆர்டர் கொடுத்து விடுகிறேன்.'' பிரசா பெல்லை அழுத்தினான்.

ஜெயந்தியை வற்புறுத்தி சாப்பிட வைத்தான். மற்ற விஷயங்களை தான் பார்த்துக் கொள்வதாகவும், பயப்ப வேண்டாம் என்றும் சொன்னான். தைரியமாக இருக்கச் சொல் மற்றொரு முறை சொல்லிவிட்டு எழுந்து கொண்டான்.

ஜெயந்தி அப்படியே உட்கார்ந்து இருந்தாள். மறுபடியு எப்போ வருவீங்க என்றுகூட கேட்கவில்லை.

வாசலைத் தாண்டும்முன் பிரசாத் திரும்பிப் பார்தான் 'கூடிய சீக்கிரம் உங்களைப் பார்க்க வருவேன். ஒருக்கா ஏதாவது தடை ஏற்பட்டு நான் வருவதற்கு தாமதம் ஆனா பதட்டப்படாதீங்க'' என்றான்.

சரி என்பது போல் தலையை அசைத்தாள். அவன் வாயை திறந்து ஏதாவது பேசினால் இரக்கம் தெரிவிப்பது போல் இரண்டு வார்த்தைகள் சொல்லலாம் என்று நினைத்தான். ஆனால் இதுபோன்ற இரக்கம் எதுவும் தனக்கு தேவையே இல்லை என்பது போலவும், தன்னைச் சமாளித்துக் கொள்ள தனக்குத் தெரியும் என்பது போலவும் இருந்தது அவளுடைய தோரணை.

பிரசாத் கிளம்பிப்போய்விட்டான்.

ஜெயந்தி கட்டிலில் அமர்ந்து கொண்டாள். இது எப்படி நடந்தது? ஆசாரம் மிகுந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்த தான் இது போன்ற சூழ்நிலையில் சிக்கியிருப்பதாவது? கடவுளே! உலகில் எந்தப் பெண்ணுக்கும் இதுபோன்ற நிலைமை வரக்கூடாது ஜெயந்தியின் கண்முன்னால் பிரகாஷின் முகம் நிழலாடியது. அந்த நோய் ஏதோ தனக்கு ஏன் வரவில்லை?

ஜெயந்தி கண்களை மூடி யோசிக்கத் தொடங்கினாள். என்ன நினைத்து வந்தோம்? என்ன நடந்துகொண்டு இருக்கிறது. சுமதிக் குச் கடிதம் எழுதினால்? கடிதம் கிடைத்ததும் சுமதி செய்யப் போகும் முதல்காரியம் தனக்குத் தெரியும். நேராக ராஜசேகரிடம்



சென்று கடிதத்தை காட்டுவாள் அதைவிடதானே அவனுக்கு கடிதம் எழுதுவது நல்லது.

'உங்களிடம் சொல்லாமல் வந்தது தவறுதான் என்றாலும் சூழ்நிலையின் காரணமாக அப்படிச் செய்ய நேர்ந்துவிட்டது. யாரையும் சார்ந்து இருக்காமல் வாழ்க்கையை நடத்த எனக்கு ஒரு வழியை காட்டமுடியுமா? உங்களுக்கு என் மீது கோபம் இல்லை என்றால் ஒரு தடவை நேரில் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.'

இவ்விதமாக ராஜசேகருக்கு கடிதம் எழுதியவள் மறுநாள் தபாலில் போடவேண்டும் என்று முடிவுசெய்தாள். தொடர்ந்து இரண்டு இரவுகள் சரியாக தூங்காததால் இன்னையும் அறியாமல் ஜெயந்தி உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள்.

★ ★ ★

ஜெயந்திக்கு மறுபடியும் வழிப்பு வந்தபோது ஜன்னல் வழியாக சூரிய வெளிச்சம் உள்ளே விழுந்து கொண்டிருந்தது. காலை வெயில்போல் இல்லாமல் மங்கலாக மாலை நேரத்து வெயில் போல் இருந்தது. ஜெயந்தி திடுக்கிட்டு ஜன்னல் வழியாக வெளியில் பார்த்தாள். உண்மைதான். மாலையாகி விட்டது.

கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. எழுந்துபோய் கதவைத் திறக்கவும் தெம்பு இருக்கவில்லை. இந்தமுறை பலமாக தட்டும் ஓசை கேட்டது. எழுந்து போய் கதவைத் திறந்தாள். வாசலில் பிரசாத் நின்றிருந்தான். அவன் முகத்தில் கவலையும், பதட்டமும் வெளிப்படையாக தென்பட்டது. பக்கத்தில் ஹோட்டல் மேனேஜர் நின்றிருந்தார்.

''என்ன விஷயம்? என்ன நடந்தது?'' குழப்பமாக பார்த்துக் கொண்டே கேட்டாள். ஒரு நிமிடம் ஜெயந்தியை கூர்ந்து பார்த்த வன் நெற்றியில் படிந்த வியர்வையை ஒற்றிக் கொண்டான்.

"அப்பாடா! ரொம்ப நேரமாக தட்டியும் கதவைத் திறக்காமல் இருந்ததால் ஏதாவது விபரீதமாக முடிவு எடுத்து விட்டீர்களோ என்று பயந்து விட்டேன்" என்றான். பிறகு மேனேஜரைப் பார்த்து தலையை அசைத்ததும் அவர் போய்விட்டார்.

பிரசாத் உள்ளே வந்தான்.

"விபரீதமான முடிவா! அப்படி என்றால்?" திகைப்புடன் கேட்டாள்.

"எது வேண்டுமானாலும் இருக்கலாம். கல்யாணம் செய்து கொள்வதாக அழைத்து வந்தவன், திடீரென்று இறந்துவிட்டால் அந்தப் பெண் என்னதான் செய்வாள்? மதியம் போன் செய்த போது ரெஸ்பான்ஸ் இல்லாததால் ஹோட்டல் மேனேஜருக்கு என் நம்பரை கொடுத்து நீங்க எழுந்து கொண்டதும் எனக்கு தெரிவிக்கச் சொன்னேன். அறை மணிமுன் மேனேஜர் எனக்கு போன் செய்தார். காலையிருந்து நீங்க எழுந்து கொள்ளவே இல்லை என்றும் உடனே கிளம்பி வரச்சொல்லி அவசரப்படுத்தினார். பார்க்க வேண்டிய கேஸை அப்படியே விட்டுவிட்டு ஓடிவந்தேன். உங்களைப் பார்த்த பிறகுதான் நிம்மதி கிடைத்தது."

ஜெயந்தி தலையைக் குனிந்து கொண்டாள். தனக்கு அது போன்ற எண்ணம் எதுவும் இல்லை என்று சொன்னால் பிரசாந் என்ன நினைத்துக் கொள்வான்?

"அதுபோன்ற பைத்தியக்காரத்தனமான எண்ணம் ஏதாவது இருந்தால் தயவு செய்து விட்டுவிடுங்கள். இந்த வாழ்க்கை நமக்கு கடவுள் கொடுத்த வரம். அதை போக்கிக்கொள்ள நமக்கு எந்த உரிமையும் இல்லை."

"இல்லாத யோசனையை நீங்க தூண்டிவிடறீங்க."

"ஐ யாம் சாரி" திகைப்புடன் பார்த்துக் கொண்டே சொன்னான்.

இருவருக்கும் இடையே ஒரு நிமிடம் மௌனம் நிலவியது.

"பிரகாஷின் உறவினர் வந்தார்களா?" ஜெயந்தி கேட்டாள்.



"பிரகாஷின் தாயும், அண்ணனும் வந்தார்கள். அவன் எதற்காக பெங்களூருக்கு வந்தானோ அவர்களுக்குத் தெரியாதாம்."

"வேறு எதுவும் சொல்லவில்லை?"

"உங்களைப் பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. பிரகாஷ் வெறுமே ஊர் சுற்றி பார்க்க வந்ததாக சொன்னேன்."

"தாங்க்ஸ்."

"நீங்க எதுவும் சாப்பிட்டது போல் தெரியவில்லையே?"

"இப்பொழுதுதான் எழுந்து கொண்டேன்."

கேள்விக் குறியுடன் பார்த்தான்.

"உண்மைதான் இப்பொழுதுதான் விழிப்பு வந்தது. நீங்க ஒருநிமிடம் உட்கார்ந்து கொண்டால் குளித்து உடையை மாற்றிக் கொண்டு வருகிறேன்."

நன்றாக தூங்கிவிட்டதால் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி ஏற்பட்டதுபோல் உணர்ந்தாள்.

★ ★ ★

மறுநாள் மதியம் வந்தபோது "என்ன செய்வதாக முடிவு செய்திருக்கீங்க?" என்று கேட்டான்.

"எந்த வழியும் தெரியவில்லை."

"உங்க வீட்டாரிடம் போக வேண்டாம் என்பதில் தீர்மானமாக இருக்கீங்களா?"

"கடிதம் எழுதியிருக்கிறேன்." அன்று காலையில்தான் ராஜசேகருக்கு கடிதம் போட்டாள்.

"உடனே கிளம்பி வருவார்களாய் இருக்கும்."

"நம்பிக்கையில்லை. குறைந்த பட்சம் பதில் கடிதமாவது வரும் என்று எதிர்பார்க்கிறேன்."

''உங்களுக்கு எப்பொ எந்த உதவி வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன். மறந்துவிடாதீங்க.''

''தாங்க்ஸ்'' என்றாள்.

மேலும் பத்து நாட்கள் கழிந்து விட்டன. ஆனால் ராஜசேகரிடமிருந்து எந்த கடிதமும் வரவில்லை. அவனே நேரில் வருவான் என்று ஆயிரம் எதிர்பார்ப்புகளுடன் காத்திருந்த ஜெயந்திக்கு கடிதம் கூட வராதது ஏமாற்றமாக இருந்தது. பிரகாஷுடன் இப்படி வந்துவிட்டதில் கோபமாக இருக்கிறானோ. போகட்டும். அவன் உதவி இல்லாவிட்டால் தன்னால் வாழமுடியாதா? ராஜசேகருக்கும் தனக்கும் என்ன உறவு? தன்னுடைய நலனில் அக்கறை காட்டவேண்டிய அவசியம் அவனுக்கு என்ன?

''இன்று கூட கடிதம் வரவில்லையா?''

இல்லை என்பதுபோல் தலையை அசைத்தாள்.

''இப்பொ என்ன செய்வது?''பிரசாத் கேட்டான்.

''அதுதான் எனக்கும் புரியவில்லை. உங்களால் எனக்கு ஏதாவது வேலையை பார்த்து தாமுடியுமா? எனக்கு டைப்பிங் தெரியும்.''

''வேலையைப் பற்றியில்லை. ஆனால் நீங்க எங்கே இருப்பீங்க? தனியாக இருப்பது நல்லது இல்லையே?''

''அதை பிறகு பார்த்துக் கொள்ளலாம். முதலில் வேலை கிடைத்தால் போதும்.''

''சரி. முயற்சி செய்கிறேன்.''

''தாங்க்ஸ். என்னால் உங்களுக்கு சிரமம்.'' ஜெயந்தியின் குரல் நடுங்கியது.

''அப்படி நினைக்காதீங்க. என்னால் உங்களுக்கு ஏதாவது உபகாரம் செய்ய முடிந்தால் நல்லதுதானே.'' முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாமல் சொன்னான்.

''பெண்கள் முன்பின் யோசிக்காமல் வீட்டை விட்டு வரக்கூடாது என்பதற்கு என் வாழ்க்கையே ஒரு எடுத்துக்காட்டு.''



''இளமைப் பருவம் ரொம்ப பொல்லாதது. யாருடைய அறிவுரையும் ஏற்கத் தோன்றாது.'' பிரசாத் சொன்னான்.

பிரசாத் இரண்டு மூன்று இடங்களுக்கு ஜெயந்தியை அழைத்துச் சென்றான். இரண்டு நாட்களுக்கு முன்தான் அந்த வேலைக்கு ஆள்போட்டு விட்டதாக ஒரு இடத்தில் சொன்னார்கள்.

இன்னொரு இடத்தில் பெண்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதில்லை என்று கச்சிதமாக சொல்லிவிட்டார்கள்.

நாட்கள் கழிந்து கொண்டிருந்தன. ஜெயந்திக்கு வேலை கிடைத்தபாடு இல்லை. கிளினிக் இருப்பதால் பிரசாத்தால் அடிக்கடி வரமுடியவில்லை. நேரம் கிடைத்தபோது வந்து ஜெயந்தியிடம் பேசிவிட்டு போவான். அவனால் மட்டும் வேறு என்ன செய்ய முடியும்?

அன்று மாலை பிரசாத் வந்த போது ''நீங்க விரும்பினால் ஒரு வேலை ரெடியாக இருக்கு'' என்றான்.

''வேலை ரெடியாக இருந்தால் மட்டும் போதுமா? கிடைக்க வேண்டாமா?''

''கட்டாயம் கிடைக்கும். ஆனால் நீங்க சம்மதிப்பீங்களா என்பதுதான் கேள்வி. ஐ மீன் சந்தேகம்.''

''வேலை எங்கே?''

''உங்களைப் பற்றி எங்க அக்காவுக்குக் கடிதம் எழுதியிருந்தேன். உங்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்றும், நீங்க கவலையாக இருப்பது என் மனதிற்கு கஷ்டமாக இருக்கு என்றும் எழுதியிருந்தேன்.''

பிரசாத்தை முதலில் பார்த்தபோது அவ்வளவாக பேச மாட்டான் என்று ஜெயந்தி எடைபோட்டிருந்தாள். ஆனால் அது தவறு. கொஞ்சம் பழகிவிட்டால் நன்றாகவே பேசுவான். அந்தப் பேச்சில் எதிராளியிடம் அவனுக்கு இருக்கும் அக்கறையும், நெருக்கமும் வெளிப்படும்.

"நான் சொல்வதை கேட்டுக்கொண்டு இருக்கிங்களா?" சந்தேகமாக கேட்டான்.

"கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். சொல்லுங்க."

"நான் எழுதிய கடிதத்திற்கு அக்கா என்ன பதில் எழுதியிருக்கிறாள் தெரியுமா?"

'கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லி எழுதியிருப்பாளோ' என்று ஜெயந்தி பயந்து விட்டாள். அந்த பயத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் "என் வேலைக்கும் உங்க அக்காவுக்கும் எந்த சம்பந்தமும் இருப்பதாக தெரியவில்லையே?" என்றாள்.

"முழுவதுமாக கேளுங்க. எங்க அக்காவின் கணவர் கார் விபத்தில் இறந்துவிட்டார். இரண்டு குழந்தைகள். அப்பா அக்காவிடம்தான் இருப்பார். அப்பா பெராலிஸிஸ் வந்து ஒரு வருடமாக படுக்கையில் இருக்கிறார். அக்கா அழுதிய பதிலை படியுங்கள்."

"பிறருக்கு வந்த கடிதத்தை படிக்கும் பழக்கம் எனக்கு இல்லை. நீங்களே சொல்லுங்க."

"இதில் எழுதியிருப்பது இரண்டே வரிகள். அதுவும் உங்களை பற்றி."

ஜெயந்தி கடிதத்தை எடுத்துப் பார்த்தாள்.

பிரசாதிற்கு,

உன் கடிதம் கிடைத்தது. அந்தப் பெண்ணை என்னிடம் அனுப்பிவிடு. இந்த வீட்டில் எனக்கும் ஒரு ஆள் இருந்தால் உதவியாக இருக்கும். விலா வாரியாக எழுத நேரம் இல்லை.

ஆசிகளுடன்
அக்கா.

கடிதத்தை படித்த பிறகு ஜெயந்தியின் முகம் சிவந்து விட்டது.

"புரிந்து விட்டது. இரக்கப்பட்டு ஆதரவு தருவதாக எழுதியிருக்கிறாள். அப்படித்தானே."



பிரசாத் புரியாதவன் போல் பார்த்தான்.

"அந்த வீட்டில் எனக்கென்ன வேலை இருக்கும்? வேலை இல்லாத இடத்திற்கு நான் எப்படி போவது?"

"நீங்க தவறாக புரிஞ்சுகிட்டு இருக்கிங்க வேலையில்லாமல் இருப்பதாவது? மூச்சுகூட விட முடியாத அளவுக்கு வேலை இருக்கும். சொல்ல மறந்துவிட்டேன். எங்க அக்காவும் ஒரு டாக்டர். பிரைவேட் பிராக்டீஸ் என்பதால் கொஞ்சம்கூட ஓய்வு இருக்காது. லேடீஸ் கிளப்பில் மெம்பர். போறாதகுறைக்கு படுக்கையில் இருக்கும் அப்பாவை கவனித்துக் கொள்ளணும். ஒரே வார்த்தையில் சொல்லணும் என்றால் வீட்டு நிர்வாகத்தை நீங்க பார்த்துக் கொள்ளணும். அதற்கு தகுந்த சம்பளம் கிடைக்கும். இதுபோல் செகரெட்ரியாக யாரையாவது வைத்துக் கொள்ளணும் என்று அக்காவுக்கு ரொம்ப நாளாக விருப்பம்.

"செகரெட்ரியா?" ஜெயந்தி திடுக்கிட்டாள்.

"ஆமாம். வீட்டில் சமையலுக்கும், மற்ற வேலைகளுக்கும் ஆட்கள் இருக்கிறார்கள். அவர்களை மேற்பார்வையிட்டால் போதும்."

"வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?"

"அக்கா, இரண்டு குழந்தைகள், அப்பா, சமையல்காரன் மற்றும் இரண்டு வேலைக்காரர்கள்."

"உங்க அக்கா எங்கே இருக்கிறாள்?"

"சென்னையில்."

"சென்னையிலா?"

"ஆமாம். உங்களுக்கு தெரிந்தவர்கள் யாராவது அங்கே இருக்கிறார்களா?"

"இல்லை."

"சில நாட்கள் இருந்து பாருங்க. பிடிக்கவில்லை என்றால் நின்று விடலாம். அக்காவுக்கு இருக்கும் செல்வாக்கில் உங்களுக்கு வேறு வேலையும் சுலபமாக கிடைக்கும்."

ஜெயந்தி யோசனையில் ஆழ்ந்தாள். இருக்க இடமும் உணவும் கிடைத்துவிடும். படுக்கையில் இருக்கும் கிழவரை தவிர வீட்டில் வேறு ஆண்கள் இல்லை என்பதால் வேறு விதமான பிரச்சனைகள் வரப்போவதில்லை. இந்த முயற்சி சரியாக இருக்கும் போல் தோன்றியது.

"உங்க அறிவுரை என்ன?" ஜெயந்தி கேட்டாள்.

"உடனே கிளம்புங்க."

ஜெயந்தி சம்மதம் தெரிவிப்பது போல் தலையை அசைத்தாள்.

"இன்னிக்கே டெலிகிராம் கொடுத்துவிடுகிறேன்."

"தாங்க்ஸ்." இந்த சமயத்தில் பிரசாதின் துணை இல்லாவிட்டால் தன்னுடைய நிலைமை என்னவாகி இருக்கும்? பிரசாத்போன்று நல்லவர்கள் இருப்பதால்தான் நாட்டில் மழை பெய்கிறதோ.

மறுபடியும் புதிய இடம்... புதிய மனிதர்கள். மரத்திலிருந்து உதிர்ந்து விட்ட இலை காற்று வீசிய திசையில் போகத்தானே வேண்டும்.

மறுநாள் மாலை ஹோட்டல் அறையை காலி செய்து விட்டாள். பிரகாஷின் மரணத்தைத் தவிர பெங்களூர் பயணத்தில் நினைவு இருக்கக்கூடியது எதுவும் இல்லை.

பிரசாத் ஜெயந்தியுடன் ரயில் நிலையத்திற்கு வந்தான். "ஒன்றும் கவலைப்படாதீங்க. அக்கா நிச்சயமாக ஸ்டேஷனுக்கு வருவாள். அவளை அடையாளம் கண்டுபிடிப்பது ரொம்ப சுலபம். என் ஜாடையிலேயே இருப்பாள். ஒருக்கால் அக்காவால் வரமுடியவில்லை என்றாலும் நான் எழுதிக் கொடுத்த முகவரியை ஆட்டோக்காரனிடம் நீட்டினால் நேராக கொண்டுபோய் சேர்த்து விடுவான்" என்றான்.

"தாங்க்ஸ். உங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுத்து விட்டேன்."



"அப்படி எதுவும் இல்லை. அது போன்ற எண்ணத்தை உங்க மனதில் வரவிடாதீங்க." என்றவன் சற்றுப் பொறுத்து "எங்க அக்காவை உங்களுக்கு நிச்சயமாக பிடிக்கும்." என்றான் முறுவலுடன்.

ரயில் கிளம்பப் போவதற்கு அறிகுறியாக ஹாரன் ஒலித்தது.

"ரயில் கிளம்பப்போகிறது. ஹேப்பி ஜர்னி" என்றான் பிரசாத்.

"போய் வருகிறேன்." ஜெயந்தி கைகளைகூப்பி விடை பெற்றுக்கொண்டாள். ரயில் கிளம்பியது கையை அசைத்துக் கொண்டிருந்த பிரசாதின் உருவம் போகப்போக புள்ளியாய் மறைந்துவிட்டது.

## 49

சென்னையில் ரயில் நிலையத்தில் பிரசாதின் அக்கா விஜயலக்ஷ்மியை சுலபமாகவே அடையாளம் கண்டுகொண்டாள். பிரசாத் சொன்னதுபோல் அதே முகஜாடை உயரத்திற் கேற்ற பெருமனுடன் கம்பீரமாக இருந்தாள்.

"நீ தானா அந்தப் பெண்?" ஜெயந்தியை தலை முதல் கால் வரை பரிசீலித்துக்கொண்டே கேட்டாள்.

அந்த அம்மாளின் பார்வை ஜெயந்திக்கு கூச்சத்தை ஏற்படுத்தியது. ஜெயந்தியை பார்த்த பிறகு விஜயலக்ஷ்மியின் கண்களில் திருப்தி தென்பட்டது.

"உங்களை இவ்வளவு எளிதாக அடையாளம் கண்டபிடித்து விடுவேன். என்று நினைத்திருக்கவில்லை." வணக்கம் தெரிவிப்பது போல் கைகளை கூப்பினாள்.

"எனக்குத் தெரியும். என் தம்பியின் கணிப்பு எப்போதும் சரியாகத்தான் இருக்கும்."

''அப்படி என்றால்?'' அந்த அம்மாள் சொன்னதில் மறைந்திருக்கும் பொருள் என்னவாக இருக்கும் என என்று யோசித்துக் கொண்டே கேட்டாள்.

''ஒன்றுமில்லை. மனதில் தோன்றியதை அப்படியே வெளியில் சொல்வது என்னுடைய பழக்கம் அவ்வளவுதான். வா... வா... வேலைக்காரனை அனுப்பினால் சரியாக வராது என்று நானே சுயமாக வந்தேன். அர்ஜெண்ட் கேஸ் ஒன்று இருக்கு. சீக்கிரமாக போகணும்.'' ஜெயந்தியின் தோளைச் சுற்றி கையை போட்டு தோழ்மையுடன் சொன்னாள்.

அந்தப் பேச்சில் வெளிப்பட்ட அன்பு, நெருக்கம் ஜெயந்திக்கு தெம்மை அளித்தன.

இருவரும் வெளியே வந்தார்கள்.

''சென்னைக்கு வருவது இதுதான் முதல் தடவையா இல்லை முன்பு எப்போதாவது வந்திருக்கிறாயா?'' விஜயலக்ஷ்மி டிரைவ் செய்துகொண்டே கேட்டாள்.

''இதுதான் முதல்தடவை.'' ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டே சொன்னாள்.

''நம்வீடு ஸ்ரீநகர் காலனியில் இருக்கு. பச்சை பெயிண்ட் அடித்த இரண்டு அடுக்குமாடி தெரிகிறதே. அதுதான்.''

கார் வீட்டின் முன்னால் வந்து நின்றது. வீட்டின் முன்னால் சின்னதாக பூந்தோட்டம் இருந்தது. வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்ததுமே ''மம்மி... மம்மி'' என்று இரண்டு குழந்தைகள் ஓடிவந்தார்கள்.

''இவர்கள் என் குழந்தைகள். மகள் பெரியவள். பெயர் ரமா. சின்னவன் ரவி. எல்லோரும் பாபு என்று அழைப்போம். இவன் பன்ற லூட்டியில் சிலசமயம் எங்களுக்கு தூக்கமே வராது.''

ஜெயந்தி பாபுவை 'பார்த்து முறுவல் செய்தாள். பாபு வெட்கப்பட்டுக் கொண்டே தாயின் புடவைத் தலைப்பில் முகத்தை புதைத்துக் கொண்டான்.



''மம்மி! பிரசாத் மாமா எங்களுக்காக அனுப்பிவைப்பதாக சொன்ன ஆன்டீ இவங்கதானா?'' ரமா கேட்டாள்.

''ஆமாம். ஆன்டீயை பிடிச்சிருக்கா?''

''உன்னைப்போல் பெரியவங்களாக இருப்பான்னு நினைச்சேன். ரொம்ப சின்னவளாக இருக்கிறாள் சரளாவின் அக்காவைப் போல்.''

''இனிமேல் நீ சரளாவைப் பார்த்து பொறாமைப்பட வேண்டியதில்லை. உனக்கும் ஒரு அக்கா கிடைத்துவிட்டாள் என்று அவளிடம் சொல்லு.'' விஜயலக்ஷ்மி மகளுடைய தோளில் தட்டிக்கொடுத்தாள்.

''அப்பொ நான் இவங்களை அக்கா என்று அழைக்கட்டுமா?'' ரமா அருகில் வந்து ஜெயந்தியின் கையைப் பற்றிக்கொண்டாள்.

''ஊஹூம். நான் ஆன்டீன்னுதான் கூப்பிடுவேன். அதான் எனக்கு பிடிச்சிருக்கு.'' பாபு சொன்னான்.

''இல்லை. அக்காதான், ஆன்டீன்னா குண்டாக, குள்ளமாக சுந்தரி அத்தைபோல் இருக்கணும்.'' ரமா சண்டைக்கு வந்தாள்.

''சரி. விடுங்க. இப்பொ இரண்டு பேரும் சண்டை போடாதீங்க.'' தாய் சமாதானப்படுத்தினாள்.

''வா. எங்க அப்பாவை அறிமுகப்படுத்தி வைக்கிறேன். அவர் இப்பொ எனக்கு இன்னொரு குழந்தைக்கு சமம். பிரசாத் சொல்லியிருப்பானே. பெராலிஸிஸ்னால் பாதிக்கப்பட்டிருக்கிறார்.''

தெரியும் என்பது போல் தலையை அசைத்தாள்.

''அப்பா! இவள்தான் பிரசாத் அனுப்பி வைத்த பெண். இன்னிக்குத்தான் வந்தாள்.'' விஜயலக்ஷ்மி அறிமுகப் படுத்தினாள்.

தலைமுடி முழுவதும் நரைத்து, உடலில் சுருக்கம் ஏற்பட்டிருந்த கிழவர் கட்டில் மீது தலையணையில் சாய்ந்த வாக்கில் உட்கார்ந்திருந்தார்.

ஜெயந்தி அவருக்கு வணக்கம் தெரிவித்தாள். கண் பார்வை சரியில்லை போலும். பக்கத்தில் இருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து அணிந்துகொண்டு ஜெயந்தியை பரிசீலிப்பதுபோல் பார்த்தார்.

''நீங்க இருவரும் பேசிக்கிட்டு இருங்க. போன் மணி அடிக்கிறது. பார்த்துவிட்டு வருகிறேன்.'' விஜயலக்ஷ்மி அறையை விட்டு வெளியேறினாள்.

ஜெயந்தியை உட்காரச் சொல்லி நாற்காலியை காட்டிவிட்டு ''பயணம் நன்றாக நடந்ததா?'' என்று கேட்டார்.

ஜெயந்தி தலையை அசைத்தாள்.

''உன் பெயர் என்ன?''

''ஜெயந்தி.''

அவருக்கு காதும் சரியாக கேட்காது போலும். ''என்ன? ஜெயலக்ஷ்மியா!'' என்றார்.

அதற்குள் விஜயலக்ஷ்மி அரக்க பரக்க உள்ளே வந்தாள். ''அப்பா! ஆஸ்பத்திரியிலிருந்துதான் போன். நான் கிளம்பு கிறேன்.''

''இந்தப் பெண்ணுக்கும் உன்னுடைய பெயர்தான். ஜெய லக்ஷ்மியாம்.'' கிழவர் சொன்னார்.

''அப்படியா! பெயர் கேட்கணும் என்றே எனக்குத் தோன்ற வில்லை. லக்ஷ்மி என்று கூப்பிட்டால் சரியாக இருக்கும். உனக்கு ஆட்சேபணை இல்லையே?'' ஜெயந்தி பக்கம் திரும்பி கேட்டாள்.

அவள் சொன்னதை ஏற்றுக் கொள்வதுபோல் ஜெயந்தி புன்னகைத்தாள்.

''சரி. நான் கிளம்புகிறேன். புதிய இடம் என்று தயங்காதே. உள்ளேபோய் குளித்துவிட்டு சாப்பிட்டுவிடு. முதலில் என்னு டைய அறையை காட்டுகிறேன் வா.'' பேசிக்கொண்டே நடந்து போய்க்கொண்டிருந்த விஜயலக்ஷ்மியை பின்பற்றினாள் ஜெயந்தி.



மாடியில் குழந்தைகளின் அறையை அடுத்து இருந்த அறையில் ஜெயந்தியை தங்கிக்கொள்ளச் சொன்னாள்.

''இது கெஸ்ட் ரூம். யாராவது உறவினர் வந்தால் நீ குழந்தைகளின் அறையில் அட்ஜெஸ்ட் செய்துகொள்ள வேண்டி யிருக்கும். இதுதான் பால்கனி.''

பால்கனி கண்ணாடி கதவுகளால் மூடியிருந்தது. அங்கிருந்து பார்த்தால் மக்களின் நடமாட்டம் தெரியும். பால்கனியில் உட் கார்ந்து கொண்டால் பொழுது போகவில்லை என்ற பேச்சுக்கே இடமிருக்காது என்று ஜெயந்திக்கு தோன்றியது. மற்றொருமுறை போன் மணி ஒலித்தது.

''எனக்காகத்தான் இருக்கும். நான் கிளம்பிவிட்டேன் என்று சொல்லிவிடு.'' விஜயலக்ஷ்மி வேகமாக படிகளை இறங்கிபோய் விட்டாள்.

★ ★ ★

விஜயலக்ஷ்மிக்கு கணவர் விட்டுச்சென்ற சொத்துடன் கைராசியான டாக்டர் என்ற வகையில் நல்ல பெயரும் இருந்தது. பிரசாத் சொன்னதுபோல் பெண்கள் முன்னேற்ற இயக்கத்துடன் தொடர்பு இருந்தது. ஒரு நிமிடம் கூட ஓய்வு இருக்காது. குழந்தைகளை பார்த்துக் கொள்ள வேலைக்காரர்கள் இருந்தாலும் சரியான கவனிப்பு கிடைக்கவில்லை. போராத குறைக்கு படுக்கை யில் கிடக்கும் தந்தை. அவருக்காக ஏற்பாடு செய்திருந்த ஆயாக் கள் தொடக்கத்தில் சரியாக இருந்தாலும் மேற்பார்வை இல்லாத விடு என்பதை கண்டுகொண்டு பொருட்களை திருடுவது சமையல் காரனுடன் கூட்டுசேர்ந்துகொண்டு மளிகைச் சாமான்களை கடத்துவது என்று அட்டூழியங்களை செய்ததால் விஜயலக்ஷ்மிக்கு மனநிம்மதி இல்லாமல் போய்விட்டிருந்தது.

இந்த சமயத்தில்தான் ஜெயந்தி அந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தாள். விஜயலக்ஷ்மியை எல்லோரும் டாக்டரம்மா என்று அழைப்பார்கள். ஜெயந்தியின் பெயர் அந்த வீட்டில் லக்ஷ்மியாக ஸ்திரப்பட்டுவிட்டது.

காலையில் எழுந்ததும் எல்லோருக்கும் காபி டிபன் வந்ததா என்று மேற்பார்வையிடுவது ஜெய்தியின் வேலைகளில் ஒன்று. பிறகு குழந்தைகளை குளிக்கச் செய்து சீருடை அணிவித்து பள்ளிக்கு அனுப்பி வைப்பாள். பிறகு வேலைக்காரனின் உதவியுடன் கிழவரை குளிக்கச் செய்து உடைகளை மாற்றுவாள். நடுவில் டாக்டரம்மாவுக்காக வரும் போன்கால்களை அடெண்ட் செய்து தகுந்தவிதமாக பதிலளிப்பாள். மதியம் 12 மணிக்கு கிழவர் சாப்பிட்ட பிறகு தானும் சாப்பிட்டுவிட்டு குழந்தைகளுக்காக மதிய உணவை பள்ளிக்கு எடுத்துச் செல்வாள்.

மாலையில் குழந்தைகள் பள்ளியிலிருந்து திரும்பிவரும் நேரம் காபி டிபன் தயாராக இருக்கும் விதமாக பார்த்துக் கொள்வாள். வீட்டுக்கு யாராவது விருந்தாளிகள் வரப்போவதாக விஜயலக்ஷ்மி போன் செய்து சொன்னால் அவர்களுக்கு தேவையான உணவு ஏற்பாடுகளை கவனிக்க வேண்டும். குழந்தைகள் விளையாடிவிட்டு வந்தபிறகு உடைகளை மாற்றச் செய்து படிக்கவைப்பாள். பிறகு கிழவருக்கு இரவு சாப்பாடு கொடுத்துவிட்டு குழந்தைகளையும் சாப்பிடச் செய்வாள். பிறகு தானும் உணவை முடித்துக்கொண்டு உறங்கச் செல்வாள்.

இந்த வேலைகள் எதுவுமே ஜெயந்திக்கு எரிச்சலோ, சலிப்போ ஏற்படுத்தவில்லை. குழந்தைகள் இருவரும் அவளிடம் நன்றாக பழகிவிட்டார்கள். கிழவருக்கும் ஜெயந்தி வந்த பிறகு பேப்பர் படித்துக் காட்டுவது, பத்திரிக்கைகளில் வரும் கதைகளை படித்துச் சொல்வது என்று செய்ததால் நல்ல பொழுதாக போய்க் கொண்டிருந்தது.

விஜயலக்ஷ்மிக்கு வீட்டைப் பற்றிய கவலை முழுவதுமாக நீங்கிவிட்டது. குழந்தைகளின் பராமரிப்பு நல்லவிதமாக நடந்து கொண்டிருப்பது அவள் மனதிற்கு திருப்தியைத் தந்தது. வீட்டுக்கு வந்த சினேகிதிகளுக்கு ஜெயந்தியை தன்னுடைய செகரெட்ரியாக அறிமுகப்படுத்தி வைத்தாள்.

''இவ்வளவு அழகான செகரெட்ரி உனக்கு எங்கிருந்து கிடைத்தாள்?'' சினேகிதிகள் கேலி செய்தர்கள்.



''என்ன பிரயோஜனம்? நான்தான் ஆணாக பிறக்கவில்லையே? அந்த அதிர்ஷ்டம் எனக்கு இல்லை?.'' விஜயலக்ஷ்மி முகத்தை சோகமாக வைத்துக் கொண்டாள்.

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். கன்றி சிவந்துவிட்ட முகத்துடன் ஜெயந்தி அங்கிருந்து போய்விட்டாள்.

மெள்ள மெள்ளமாக வீட்டின் நிர்வாகம் முழுவதும் ஜெயந்தியின் கைக்கு வந்துவிட்டது. குழந்தைகளுக்கு வேண்டிய உடைகள், கிழவருக்கு தேவையான மருந்துகள், டாக்டரம்மாவுக்கு புடவை வாங்க வேண்டுமென்றாலும் ஜெயந்திதான் தேர்வு செய்யவேண்டும். கடமைகள் அதிகமானதில் ஜெயந்தி சுமையாக உணரவில்லை. அவர்கள் தன்னை வீட்டில் ஒரு நபராக நடத்தியதால் மகிழ்ச்சிதான் ஏற்பட்டது.

சிலசமயம் விஜயலக்ஷ்மி ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்ப தாமதமாகிவிடும். ஜெயந்தி அதுவரையில் விழித்துக் கொண்டிருப்பாள்.

''எல்லோரும் தூங்கி விட்டார்கள். நீ மட்டும் ஏன் விழித்துக் கொண்டு இருக்கிறாய்? இப்படிச் செய்தால் உன் உடம்பு கெட்டுவிடாதா? தாமதமாக தூங்குவது எனக்கு பழக்கம்தான். உனக்கு அப்படி இல்லையே?'' அன்புடன் கடிந்து கொள்வாள்.

''நானும் தூங்கிப் போய்விட்டால் உங்களுக்கு யார் சாப்பாடு பரிமாறுவார்கள்? யார் பாலை சுடவைத்துக் கொடுப்பாங்க?''

''ஏன்? நானும் ஒரு பெண்தானே. உணவை பரிமாறிக் கொள்ள எனக்குத் தெரியாதா?'' வெளியில் கோபமாக பேசினாலும் ஜெயந்தி காட்டும் அன்பில் கரைந்துபோய் விடுவாள்.

விஜயலக்ஷ்மி இப்படி மூச்சுவிடக்கூட நேரம் இல்லாத அளவுக்கு வேலைகளில் மூழ்கியிருப்பதன் காரணம் போகப்போக ஜெயந்திக்கு புரியத் தொடங்கியது. காதலித்து மணம் புரிந்த கணவன் திடீரென்று கார் விபத்தில் இறந்துபோய் விட்டான். அந்த வேதனை அவள் மனதில் ஆழமான காயத்தை ஏற்படுத்தி

விட்டது. அந்த தனிமையை போக்கிக்கொள்ளவும், கண
இறந்த பிறகும் தான் உயிரோடு இருக்கிறோம் என்ற உண்
நினைவு வராமல் இருப்பதற்கும் இப்படி இடைவிடா
ஏதாவது ஒரு வேலையில் தன்னை ஈடுபடுத்தி வருகிறாள். இ
உண்மை புரிந்த பிறகு ஜெயந்தியின் இதயம் அவன்பா
இரக்கத்தால் கரைந்துவிட்டது.

சிலபேரின் வாழ்க்கை அப்படித்தான் போலும். சுற்றிலு
எத்தனை பேர் இருந்தாலும் மனதளவில் தனிமையில் இரு
பார்கள். அந்த தனிமை அவர்கள் கண்களில் சிலசமய
பிரதிபலிக்கும். ராஜசேகரும் அப்படித்தான். ராஜசேகரின் நினை
வந்தபோது ஜெயந்திக்கு என்னவோபோல் இருக்கும். சி
பொருட்களை இழந்த பிறகுதான் அவற்றின் மதிப்பு தெரியு
சில மனிதர்களை பிரிந்த பிறகுதான் அவர்களின் பாதிப்பு நம்மி
எந்த அளவுக்கு இருக்கிறதோ புரியும்.

# 50

அன்று காலையிலிருந்தே மழை விடாமல் பெய்துகொண்
ருந்தது. குழந்தைகளுக்கு மதிய உணவை காரில் டிரைவரிட
அனுப்பிய பிறகு ரமாவின் நோட்டுப் புத்தகங்களை எடுத்
அட்டைபோட ஆரம்பித்தாள். குழந்தைகள் இருக்கும் இடத்தி
ஏதாவது ஒரு வேலை இருந்துகொண்டே இருக்கும். ஊரா
வீட்டுக் குழந்தைகளிடமே தனக்கு இவ்வளவு நெருக்கம் ஏற்பட்டு
விட்டதே. சொந்த குழந்தைகளாக இருந்தால்? அதுதான் குழந்
கள் பிறந்ததும் பெண்கள் கணவனை கவனித்துக் கொள்வதி
அவ்வளவாக அக்கறை காட்டமாட்டார்கள். அதைப் புரிந்
கொள்ளாத ஆண்கள் மனைவிக்கு இல்லற வாழ்க்கையில் ஆர்வ
குறைந்துவிட்டது என்று புகார் செய்வார்கள்.

வீடு முழுவதும் நிச 'ந்தமாக இருந்தது. கிழவரும். ''தூக்க
வருகிறது. கதையை அட் புதமாக படித்துக் காட்டலாம்'' என்


சொல்லிவிட்டார். வெளியில் மழை பெய்யும் சத்தம் தவிர வேறு எந்த சத்தமும் இருக்கவில்லை. ஏதோ யோசித்துக் கொண்டே புத்தகங்களுக்கு அட்டைபோட்டுக் கொண்டிருந்த ஜெயந்திக்கு வாசலில் கார் வந்து நின்ற சத்தம் கேட்டது.

''யாராக இருக்கும்?'' என்று நினைத்துக் கொண்டே பால்கனிக்கு வந்து பார்த்தாள். ரெயின்கோட் அணிந்த உயரமான ஆள் ஒருவன் டாக்ஸியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான். மரத்தின் கிளைகள் மறைத்து விட்டதால் முகம் சரியாக தெரியவில்லை. டாக்ஸிகாரனிடம் ஏதோ சொல்லிவிட்டு தலையை குனிந்தபடி வேகமாக உள்ளே வந்தான்.

''யாராவது டாக்டரம்மாவை சந்திக்க வந்திருப்பார்கள்'' என்று நினைத்துக் கொண்டே ஜெயந்தி மறுபடியும் அட்டைபோட உட்கார்ந்து கொண்டாள். அதற்குள் வேலைக்காரன் வந்து ''யாரோ வந்திருக்காங்க'' என்றான்

''டாக்டரம்மா இல்லை. இப்போதைக்கு வரமாட்டாங்கன்னு சொல்லு.''

'அவர் உங்களைத்தான் கேட்கிறார்.''

''என்னையா?'' திகைப்புடன் பார்த்தாள்.

''ஆமாம். லக்ஷ்மி இருக்காளா என்றுதான் கேட்டார்.''

''நீ சரியாக காதில் வாங்கிக் கொண்டயோ இல்லையோ. எனக்காக யார் வருவார்கள்?''

ஜெயந்தி அட்டைப் போட்டுக் கொண்டிருந்த புத்தகத்தை கையில் பிடித்துக் கொண்டே படிகளில் இறங்கி கீழேவரப் போனாள். ஐந்தாவது படியில் காலை வைக்கும்போதே ஹாலில் நின்று கொண்டிருந்தவனின் தோற்றம் தென்பட்டது. அந்த நபர் ரெயின் கோட்டை கதவுக்கு பக்கத்தில் இருந்த கொக்கியில் மாட்டிவிட்டு பேண்ட் ஜேபியில் இரு கைகளையும் நுழைத்துக் கொண்டு வெளியில் மழையை பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பக்கமாக திரும்பியிருந்ததால் பின்னால் வந்து கொண்டிருந்த ஜெயந்தியை அவன் பார்க்கவில்லை.

ஜெயந்திக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. அதே உயரம்! அதே தோற்றம்! ஜெயந்திக்கு மூளை கலங்கிவிட்டாற் போல் இருந்தது. தன்னைச் சுற்றி இருந்த பொருட்கள் எல்லாம் வேகமாக சுழலுவதுபோல் தோன்றியது. அவளையும் அறியாமல் கையில் இருந்த புத்தகம் நழுவி கீழே விழுந்து படிகளில் உருண்டது. திடீரென்று சத்தம் கேட்டது அவன் சட்டென்று திரும்பினான். அதற்குள் அவள் மாடிக்கு வேகமாக ஓடிவிட்டாள். திரும்பிப் பார்த்தவனின் கண்களுக்கு ஜெயந்தியின் புடவைத் தலைப்புதான் தென்பட்டது. அந்த நபர் யாரென்று தெரியவில்லை.

அறைக்குள் வந்து கதவைச் சாத்திக்கொண்ட ஜெயந்திக்கு அத்தனை மழையிலும் வியர்த்துக் கொட்டியது. ராஜசேகர் இங்கே எப்படி வந்தான்? தன்னுடைய பெயர் லக்ஷ்மி என்று அவனுக்கு எப்படி தெரிந்தது? இப்பொ தான் என்ன செய்வது? கடிதம் எழுதியபோது பதில்கூட எழுதாதவன் இப்பொ வருவானேன்? தனக்குக் கிடைத்திருக்கும் இந்த கொஞ்ச நஞ்ச நிம்மதியை குலைக்கவா?

ரொம்ப நேரம் கழித்து சமையல்காரன் வந்து கதவைத் தட்டினான்.

''என்ன வேண்டும்?'' கதவைத் திறக்காமலேயே கேட்டாள்.

''டாக்டரம்மாவுக்காக யாரோ வந்திருக்காங்க. காபி, டிபன் தயாரிக்கச் சொல்லி பெரிய அய்யா உத்தரவு. என்ன டிபன் செய்யட்டும்?''

மெதுவாக கதவைத் திறந்து ''ஏதோ ஒன்று செய், எனக்கு உடல்நிலை சரியாக இல்லை'' என்று சொல்லிவிட்டு கதவைச் சாத்தினாள். மறுபடியும் திறந்தாள். ''உன்னைத்தான்'' என்றாள்.

சமையல்காரன் திரும்பி வந்தான்.

''வந்த விருந்தாளி போனபிறகு என்னிடம் வந்துசொல்லு'' என்றாள்.



அவன் தலையை அசைத்துவிட்டு போய்விட்டான்.

கிழவரிடம் உட்கார்ந்துகொண்டு நடந்தவற்றை சொல்கிறான் போலும். சொல்லட்டுமே. தான் ஏன் பயப்படவேண்டும்? தனக்கு விருப்பம் இல்லாத போது யாராலும் தன்னை இங்கிருந்து அழைத்துப்போய் விடமுடியாது. தெரியாமல் தான் செய்துவிட்ட சின்ன தவறை அவனால் மன்னிக்க முடியவில்லையே?

இதென்ன? இத்தனை நாட்கள் அவனுக்காக ஏங்கிய மனம் இன்று அவன் தென்பட்டதும் எதிரியாக நினைப்பானேன்? தனக்கு சுயகௌரவம் இல்லையா? பிரகாஷ் இறந்தபோது கடிதம் எழுதியும் வராதவன் இப்பொ எதற்காக வந்தான்?

ரொம்ப நேரம் கழித்து சமையல்காரன் வந்து கதவைத் தட்டினான்.

கதவைத் திறந்த ஜெயந்தி ''அவர் போய்விட்டாரா?'' என்று கேட்டாள்.

''இல்லை. டாக்டரம்மா வரும் வரையில் இருப்பாங்களாம். ஒருக்கால் இரவு இங்கே சாப்பிடுவாராய் இருக்கும். பெரிய அய்யா உங்களை மாத்திரையை போட்டுக்கொண்டு காபி குடிக்கச் சொன்னார். நன்றாக ரெஸ்ட் எடுத்துக் கொள்ளச் சொன்னார்.'' மாத்திரையையும், காபி கோப்பையையும் நீட்டினான்.

ஜெயந்தி மாத்திரையை போட்டுக்கொண்டு காபியைக் குடித்தாள்.

''இரவு சாப்பாட்டுக்கு இருந்தால் என்ன சமைக்கட்டும்?''

''நானே வருகிறேன். நீ கீழே போ.'' ஜெயந்தி சமையல் அறைக்குச் சென்று என்ன சமையல் செய்ய வேண்டுமோ சொல்லி விட்டு மறுபடியும் அறைக்கு வந்து உட்கார்ந்து கொண்டாள். தான் ஏன் பயப்படவேண்டும்? தைரியமாக நேரில் போய் சந்திக்க வேண்டியதுதானே! இந்த கோழைத்தனம் ஏன்? இருக்கட்டும். இரவு உணவு வேளையில் எப்படியும் அவனைச் சந்திக்கத்தானே போகிறாள்.

மாலையில் ஆஸ்பத்திரியிலிருந்து வந்ததும் விஜயலக்ஷ்மி சற்று நேரம் கீழே பேசிக் கொண்டிருந்தாள். பிறகு மாடிக்கு வந்து ஜெயந்தியின் நெற்றியை தொட்டு பார்த்தாள்.

''உனக்கு தலைவலியாய் இருக்குன்னு அப்பா சொன்னார் வெறும் தலைவலிதானா இல்லை உடம்பும் வலிக்கிறதா?''

''தலை சுற்றுவதுபோல் இருக்கு.''

''இருக்கும் இருக்கும். ஏன் இருக்காது? ஒரு நிமிடம்கூட உட்கார்ந்து கொள்ளாமல் பம்பரமாக சுற்றிக்கொண்டே இருப்பாய். ஏற்கனவே ஊரில் வைரஸ் ஃபீவர் இருக்கு. பேசாமல் ரெஸ்ட் எடுத்துக்கொள்.'' போர்வையை சரியாக போர்த்திவிட்டு கீழே போய்விட்டாள்.

ஜெயந்தி படுத்துக் கொண்டே யோசித்தாள். அவனே சொல்லட்டும். அவன் சொன்னதெல்லாம் உண்மைதானா என்று விஜயலக்ஷ்மி தன்னிடம் வந்து கேட்டால் தான் சொல்ல வேண்டிய பதிலையும் ஜெயந்தி முடிவு செய்திருந்தாள்.

ஆனால் ஜெயந்தி எதிர்பார்த்ததுபோல் அப்படி எதுவும் நடக்கவில்லை. குழந்தைகள் பள்ளியிலிருந்து வந்த பிறகு ''சேகர் மாமா! சேகர் மாமா!'' என்று அழைக்கும் குரலைத் தவிர வேறு எந்த சத்தமும் கேட்கவில்லை.

இரவு சாப்பாடு முடிந்த பிறகு விஜயலக்ஷ்மி மாடிக்கு வந்தாள். ஜெயந்தியை பரிசோதித்துவிட்டு ''நல்லவேளை. ஜுரம் இல்லை. இருந்தாலும் சாப்பாடு வேண்டாம். வெறும் பாலும், பிரெட்டும் போதும்'' என்று பாலையும், பிரெட்டையும் சாப்பிடச் செய்தாள். பிறகு ''லக்ஷ்மி! இன்னிக்கு நீ குழந்தைகளின் அறையில் படுத்துக் கொள்கிறாயா? எங்க குடும்ப நண்பர் வந்திருக்கிறார். இரவு இங்கே தங்குவார்'' என்றாள்.

அப்படியென்றால் ராஜசேகர் தனக்காக வரவில்லையா? விஜயலக்ஷ்மியை அவனுக்கு முன்பே தெரியுமா? இந்த வீட்டில் அவனைப் பற்றிய பேச்சே வந்ததே இல்லையே? ஜெயந்தி வியப்படைந்து கொண்டே எழுந்துபோய் குழந்தைகளின் அறைக்குச் சென்று படுத்துக் கொண்டாள்.



சிறிது நேரம் கழித்து அவன் மாடிக்கு வந்தான். குழந்தைகள் வந்தது முதல் அவனுடனே இருந்தார்கள்.

''லக்ஷ்மி! உன் மகள் சொன்னதை கேட்டாயா?'' ராஜசேகர் கலகலவென்று நகைத்துக் கொண்டே சொன்னான்.

''என்ன சொன்னாள்?''

''என்னைத் திருமணம் செய்துகொள்வாளாம்.''

''நல்லதுதானே. உனக்கு மாமியார் ஆவது சாதாரணமான அதிர்ஷ்டமா என்ன?'' விஜயலக்ஷ்மியும் நகைத்தாள்.

ராஜசேகர் விஜயலக்ஷ்மியை 'லக்ஷ்மி' என்று அழைக்கிறானே. எல்லோரும் டாக்டரம்மாவை விஜயா என்றுதானே அழைப்பார்கள். அப்படியானால் வந்ததுமே ராஜசேகர் லக்ஷ்மி என்று சொன்னது தன்னை இல்லையா? தான் ஒருத்தி இங்கே இருப்பது அவனுக்கே தெரியவே தெரியாதோ! அவர்களுடைய உரையாடலை கேட்டால் அப்படித்தான் தோன்றுகிறது. இனம்புரியாத வேதனை மனதை சூழ்ந்துகொண்டது.

ராஜசேகர் அடுத்த அறையில் படுத்துக் கொண்டான். குழந்தைகள் ரொம்பநேரம் அவனுடன் வம்பு பேசிவிட்டு வந்து படுத்துக் கொண்டார்கள். விஜயலக்ஷ்மியும் எழுந்துகொண்டாள்.

''நீங்கள் எல்லோரும் வானளாவிற்குப் புகழும் அந்த புதிய செகரெட்ரியின் தரிசனம் எனக்குக் கிடைக்கவில்லையே?'' ராஜசேகர் சொன்னான்.

''அவளுக்கு உடல் நலம் சரியாக இல்லை. நாளை காலையில் பார்க்கத்தானே போகிறாய். லக்ஷ்மி எனக்கு செகரெட்ரியாக இருப்பதை பெரும் பாக்கியமாக நினைக்கிறேன். அழகும், பண்பும் நிறைந்தவள்.''

''அப்படி என்றால் நிச்சயம் பார்க்கவேண்டும். பை தி பை நாளை காலையில் நான் சீக்கிரமாக கிளம்பிவிடுவேன். நான் கிளம்பும்போது நீ இருப்பாயோ மாட்டாயோ.'' ராஜசேகர் சொன்னான்.

''ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் ஆன கேஸ் ஒன்று இருக்கு. ஏதாவது காம்ப்ளிகேஷன்ஸ் வந்து நள்ளிரவில் போன் வந்தா போக வேண்டியிருக்கும்.''

''ஆல்ரைட். அப்படி என்றால் இப்போதே குட்பை சொல் விடுகிறேன்.''

''ஓ.கே. மறுபடியும் எப்போ வருவாய்?''

''சொல்ல முடியாது. ஏதாவது வேலையிருந்தால் கட்டாய வருவேன். சரி எனக்கு தூக்கம் வருகிறது. குட்நைட்.'' ராஜசே கதவைத் தாளிடும் சத்தம் கேட்டது.

விஜயலக்ஷ்மி கீழே போகும் முன் குழந்தைகளின் அறைக்கு வந்தாள். சுவற்றுப் பக்கம் திரும்பி படுத்திருந்த ஜெயந்தியைப் பார்த்து உறங்கிவிட்டாள் என்று நினைத்து கதவை வெறுமே சாத்திவிட்டு போய்விட்டாள்.

ஜெயந்தி மனதில் ஆயிரம் எண்ணங்கள் அலை மோதிக் கொண்டிருந்தன. எதுவுமே நடக்காததுபோல் அவன் எவ்வளவு சாதாரணமாக இருக்கிறான்? இவனுக்காகவா தான் இத்தனை நாள் இரவு பகலாக யோசித்து வந்தாள்? தினமும் தான் உறங்கும் படுக்கையில் இன்று அவன் படுத்துக்கொண்டிருக்கிறான். எத்தனை இரவுகள் அந்த தலையணையில் முகம் புதைத்து கண்ணீர் வடித்திருக்கிறாள்?

மறுநாள் ஜெயந்தி விழித்துக் கொள்ளும்போது நன்றாக விடிந்து விட்டிருந்தது. குழந்தைகள் பள்ளிக்கு தயாராகிக் கொண்டு இருந்தார்கள். நள்ளிரவில் போன் வந்ததால் விஜய லக்ஷ்மி ஆஸ்பத்திரிக்கு போய்விட்டாள்.

ஜெயந்தி எழுந்து வெளியே வந்து பார்த்தபோது ராஜசேகர் கிளம்பிப்போய் விட்டிருந்தான். சோர்வு ஆட்கொள்ள ஜெயந்தி கட்டிலில் சரிந்தாள்.



# 51

மேலும் ஒருமாதம் கழிந்துவிட்டது. அன்று விஜயலக்ஷ்மி ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்புவதற்கு தாமதமாகிவிட்டது. ஜெயந்தி கொண்டு வந்த பால் டம்ளரை பெற்றுக்கொண்டே ''லக்ஷ்மி! எங்க கிளப்புக்கு சரியான செகரெட்ரி இல்லாமல் திண்டாடி கொண்டிருக்கிறார்கள். இன்று உன் பெயரை எழுதிக் கொடுத்துவிட்டு வந்தேன்'' என்றாள்.

''என் பெயரையா?'' ஜெயந்தி வியப்புடன் பார்த்தாள்.

''ஆமாம். ரொம்ப நாளாக இதைப்பற்றி யோசித்து வந்தேன். நீ வந்த பிறகு இந்த வீட்டில் எல்லோரும் நிம்மதியாக, எந்த குறையும் இல்லாமல் இருப்பது உண்மைதான் என்றாலும் உன் எதிர்காலத்தை வீணாக்கும் அன்புக்கு சுயநலக்காரியில்லை நான். லக்ஷ்மி! நீ அந்த கிளப்பிற்கு நீ செகரெட்ரியாக இருந்தால் பலதரப்பட்ட மனிதர்களின் அறிமுகம் ஏற்படும். அவர்களில்...'' விஜயலக்ஷ்மி வார்த்தையை இன்னும் முடிக்கக்கூட இல்லை.

''ஒரு விஷயம் சொல்லுங்க. நான் உங்களுக்கு பாரமாகி விட்டேனா?'' ஜெயந்தி கேட்டாள்.

''லக்ஷ்மி!'' திகைத்துப் போனவளாய் பார்த்தாள்.

''நான் இந்த வீட்டில் குழந்தைகளுடன் நிம்மதியாக இருக்கிறேன். நீங்களும் என்னை அன்பாக நடத்தறீங்க. இதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும்?''

''ஆனால் இப்படியே இருப்பது உன் எதிர்காலத்திற்கு சரியாக இருக்குமா?''

''ஏன் இருக்காது? எனக்கு வேறு எதுவும் வேண்டாம். சொந்த தங்கைக்கு மேலாக என்னிடம் அன்பாக இருக்கீங்க.'' ஜெயந்தியின் விழிகளின் நீர் கழன்றது.

''அடடா! என்ன இது? இதுக்குப் போய் அழுவாங்களா?'' சட்டென்று ஜெயந்தியின் கையைப் பற்றி அருகில் இழுத்துக் கொண்டான்.

''உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் என்னை போகச் சொல்லுங்கள். அவ்வளவுதானே தவிர...''

''இப்போ உன்னை யார் வெளியே போகச் சொன்னது? முடிந்தால் வாழ்நாள் முழுவதும் என்னுடனே வைத்துக் கொள்ளணும் என்று விரும்புகிறேன்.''

''அப்போ இந்த ஏற்பாடெல்லாம் எதற்கு?''

''உன் எதிர்காலம் வீணாக்க கூடாதே என்றுதான். நீ இங்கேயே இருக்கிறேன் என்று சொன்னாலும் ஊர் உலகம் என்ன சொல்லும்? அதைவிட, சுயநலக்காரியாகி விட்டேனோ என்ற வருத்தம் எனக்கு இருக்காதா?''

''வேண்டாம். வேண்டாம். நீங்க அப்படியெல்லாம் யோசிக்காதீங்க. இந்த வீட்டில் இருப்பதில் என்னுடைய சுயநலம்தான் அதிகம். என்னை எங்கேயும் அனுப்பாதீங்க.'' ஜெயந்தியின் குரல் கம்மிவிட்டது.

''சரி போகட்டும். இனி ஒருநாளும் அப்படி சொல்ல மாட்டேன். சொல்ல மறந்துவிட்டேன். பிரசாத் வருவதாக கடிதம் எழுதியிருக்கிறான். பார்த்தாயா?''

பார்த்தேன் என்பதுபோல் தலையை அசைத்தாள்.

விஜயலக்ஷ்மிக்கு திடீரென்று ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. இந்தப் பெண்ணை இங்கே அனுப்பி வைத்ததே பிரசாத் தான். ஒருக்கால் அவர்கள் இருவருக்கும் நடுவில் ஏதாவது ஈர்ப்பு இருக்குமோ. அப்படி ஏதாவது இருந்தால் தம்பியின் மனைவியாக ஜெயந்திக்கு இந்த வீட்டுடன் நிரந்தரமாக ஒரு பிணைப்பு ஏற்பட்டுவிடும். இந்த எண்ணம் வந்ததும் விஜயலக்ஷ்மியின் முகம் மலர்ந்தது.

★ ★ ★



பிரசாத் பத்து நாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு வந்தான். தாய் மாமன் வந்ததில் குழந்தைகளுக்கு ரொம்ப கொண்டாட்டம்.

''இதோ பாருங்க. நீங்க இருவரும் எங்கே வேண்டு மானாலும் போயிட்டுவாங்க. எனக்கு நேரம் இல்லை. என்னை கட்டி இழுக்காதீங்க.'' விஜயலக்ஷ்மி பிரசாதிடம் சொன்னாள். அவள் எண்ணம் வேறு விதமாக இருந்தது. பிரசாதையும், ஜெயந்தியையும் தனிமையில் விடவேண்டுமென்று நினைத்தாள்.

தாயின் எண்ணத்தை அறியாத குழந்தைகள் இருவரும் தாங்களும் போவதாக பிடிவாதம் பிடித்தார்கள்.

''ஒன்றும் வேண்டாம். படிப்பு கெட்டுவிடும். வீட்டில் உட்கார்ந்துகொண்டு பாடம் படியுங்கள்.'' விஜயலக்ஷ்மி கடிந்து கொண்டாள்.

குழந்தைகளின் முகம் வாடிவிட்டது. இருவரும் ஜெயந்தி யின் பக்கம் பார்த்தார்கள்.

''அவர்கள் படிப்பு கெடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்.'' ஜெயந்தி பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.

குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு பிரசாத் பார்க், பீச் மியூசியம் என்று ஊர் சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் மாலை கடற்கரையில் ரமாவும், ரவியும் தொலை வில் மணல் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஜெயந்தி பொங்கிவரும் அலைகளை பார்த்தவாறு அமர்ந் திருந்தாள்.

''நீங்க ரொம்ப இளைச்சுட்டீங்க.'' பிரசாத் சொன்னான்.

ஜெயந்தி முறுவலித்துவிட்டு பேசாமல் இருந்தாள்.

''மனதில் ஏதாவது கவலை இருந்தால் உடம்பு இளைக்கும் என்று சொல்வார்கள்.''

''எனக்கென்ன கவலை? நிம்மதியாக இருக்கிறேன்.''

''பின்னே, கண்ணைச் சுற்றி கருவளையம் ஏற்படுவானேன்?''

ஜெயந்தியின் பார்வை மணலில் பதிந்தது. அன்று ராஜசேக வந்துவிட்டு போனபிறகு அவள் மனம் ஒரு நிலையில் இருக்க வில்லை.

''சொல்லுங்க. உங்களை இந்த வீட்டுக்கு அனுப்பியதே நான்தான். இந்த வீட்டில் உங்களுக்கு எந்த குறையும் இல் லையே?''

''குறையா! எந்தக் கவலையும் இல்லாமல் நிம்மதியாக இருக்கிறேன்.''

ஜெயந்தி மனதில் என்ன இருக்கிறதென்று பிரசாதுக்கு புரியவில்லை. அக்காவுக்குக் கடிதம் எழுதும்போது கட்டாயம் ஜெயந்தியை விசாரித்து எழுதுவான். ஜெயந்தியைவிட்டு தனக்குக் கடிதம் போடச் சொல்லியும் குறிப்பிட்டிருந்தான். என்ன கார ணமோ ஜெயந்தி அவன் விருப்பத்தை பொருட்படுத்தவில்லை. வெட்கமா? இல்லை தயக்கமா?

''ஜெயந்தி!'' ரொம்ப நேரம் கழித்து அழைத்தான் அவன் குரலில் ஒரு விதமான உரிமை வெளிப்பட்டது.

ஜெயந்தி தலையைத் திருப்பிப் பார்த்தாள்.

''என்னைப் பார்த்தால் உனக்கு என்ன தோன்றுகிறது?''

''ரொம்ப நல்லவர்.''

''அவ்வளவுதானா?''

''உங்களுடைய அறிமுகம் கிடைத்தது என்னுடைய அதிர்ஷ்டம்.''

''வேறு எதுவும் தோன்றவில்லையா?''

ஜெயந்தி மௌனமாக இருந்தாள்.

''உன்னைப் பற்றி நான் என்ன நினைக்கிறேன் தெரியுமா?''

''சொல்லுங்க''



''கூழாங்கல்லை பொறுக்கப் போனவனுக்கு நல் முத்து கிடைத்தது என்று.''

''...''

''ஜெயந்தி! எதிர்பாராமல் கிடைத்த இந்த பொக்கிஷத்தை ஆயுள் முழுவதும் பத்திரமாக பாதுகாக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.''

ஜெயந்தி பதிலளிக்கும் முன் குழந்தைகள் ஓடி வந்தார்கள். உரையாடல் அத்துடன் நின்றுவிட்டது.

ஜெயந்தி பதிலளிக்கும் முன் குழந்தைகள் ஓடிவந்தார்கள். உரையாடல் அத்துடன் நின்றுவிட்டது.

''பசிக்கிறது. வீட்டுக்கு போகலாம் மாமா.'' ரவி சொன்னான்.

''எனக்கு ஹோம் வொர்க் இருக்கு'' என்றாள் ரமா.

வேறு வழியின்றி பிரசாத் எழுந்துகொண்டான்.

★ ★ ★

பிரசாத் பேசியதிலிருந்து அவன் எண்ணத்தை ஓரளவுக்கு புரிந்துகொண்ட ஜெயந்திக்கு கவலையாக இருந்தது. எந்த சுயநலமும் இல்லாமல் அவனால் தன்னை நேசிக்க முடியாதா? சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும் என்ற தவிப்பு ஏன்? மாட்டேன் என்று சொன்னால் வருத்தப்படுவானோ. அவனிடம் நன்றி உணர்வு இருப்பது உண்மைதான். ஆனால் அவனை கணவனாக ஏற்றுக்கொள்ள முடியும் என்று தோன்றவில்லை.

இந்த ஜென்மத்தில் ராஜசேகரை மறுபடியும் சந்திக்கும் வாய்ப்பு இல்லைதான். அவனிடம் எவ்வளவு கோபம் இருந் தாலும், வெறுத்தாலும் தன் மனதில் ஆழமாக புதைந்திருக்கும் பெண்மையின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பியவன் அவன்தான். அவன் ஒருவனுக்குத்தான் அந்த உரிமை இருக்கிறது. வேறு எந்த ஆணையும் தன்னால் கணவனாக ஏற்கமுடியாது. இதை பிரசாதிற்கு எப்படி புரியவைப்பது?

கார் வீட்டின் முன் வந்து நின்றது. குழந்தைகள் இருவரும் இறங்கி உள்ளே ஓடினார்கள்.

ஹாலில் விஜயலக்ஷ்மி யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள். குழந்தைகளைப் பார்த்ததும் "அதோ! குழந்தைகள் வந்து விட்டார்கள். ரமா! பிரசாத் மாமா எங்கே?" என்றாள்.

"பின்னாடி வருகிறார்." ரமா சொன்னாள்.

"பிரசாத் நம் வீட்டுக்கு யார் வந்திருக்காங்க என்று பாரு." விஜயலக்ஷ்மியின் குரலில் உற்சாகம் தென்பட்டது.

"யாரு?" கேட்டுக்கொண்டே உள்ளே பிரசாத் "சேகர்! நீயா! வாட் எ சர்பிரைஸ்" என்றான் மகிழ்ச்சி பொங்கும் குரலில்.

வாசற்படி வரையில் வந்த ஜெயந்தி சட்டென்று நின்று விட்டாள்.

"எப்போ வந்தாய்?" பிரசாத் குரல் கேட்டேன்.

"இப்பொழுதுதான் வந்தேன்."

சந்தேகமே இல்லை. ராஜசேகர்தான். உள்ளே போவதா வேண்டாமா என்று முடிவு செய்ய முடியாமல் ஜெயந்தி தடுமாறினாள்.

அதற்குள் விஜயலக்ஷ்மி "லக்ஷ்மி எங்கே?" என்று தம்பியிடம் கேட்டாள்.

"அதோ வருகிறாள்." வாசல் பக்கம் சுட்டிக் காட்டினான் பிரசாத்.

"சேகர்! போனமுறை நீ வந்தபோது என் செகரெட்ரியை பார்க்கவில்லை இல்லையா?"

"பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை." சொல்லிக் கொண்டே வாசல் பக்கம் திரும்பிய ராஜசேகரின் கண்கள் வியப்பால் விரிந்தன. புருவங்கள் முடிச்சிட்டுக் கொண்டன.



ஜெயந்தி இதழ்களை விரித்து முறுவலிக்க முயன்றாள். ஆனால் சாத்தியப்படவில்லை.

"ஜெயந்தி!" ராஜசேகரின் இதழ்கள் தெளிவற்று உச்சரித்ததை அக்கா, தம்பி இருவரும் கவனிக்க தவறிவிட்டார்கள்.

ஜெயந்தி ஏதோ சொல்ல முயற்சிசெய்தாள். அதுவும் தோல்வியில் முடிந்தது. ராஜசேகர் அவளை நோக்கி ஓரடி முன்னால் வைத்தான்.

ஜெயந்திக்கு நினைவு தப்பிவிடும் போல் இருந்தது.

"அடடா! என்ன ஆச்சு உனக்கு? தள்ளாடுகிறாயே? தலையைச் சுற்றுகிறதா?" பிரசாத் ஓடிவந்து இரண்டு கைகளாலேயும் ஜெயந்தியை தாங்கிக்கொண்டான்.

"என்ன ஆச்சு?" விஜயலக்ஷ்மியும் ஓடிவந்தாள். தரையில் சரியப்போன ஜெயந்தியை பிரசாத் பலமாக பிடித்துக்கொண்டான்.

"உனக்குக் கொஞ்சம்கூட மூளையில்லை பிரசாத், உடம்பு சரியில்லை என்று தெரிந்த பிறகும் வந்தது முதல் அந்தப் பெண்ணை பார்க், பீச் என்று அலைக்கழித்து விட்டாய். களைத்துப் போய்விட்டாளோ என்னவோ. மாடிக்கு அழைத்து போய் படுக்கவை." விஜயலக்ஷ்மி சொன்னாள்.

ராஜசேகர் பார்த்துக் கொண்டிருந்த போதே பிரசாத் ஜெயந்தியை இரு கைகளாலேயும் தூக்கிக்கொண்டு மாடிக்குச் சென்று விட்டான்.

"சேகர்! ஒரு நிமிடம் இரு. இதோ வந்துவிடுகிறேன்." விஜயலக்ஷ்மி மாடிக்கு விரைந்தாள்.

ராஜசேகர் ஹாலில் தனியாக நின்றுவிட்டான். எத்தனை நேரம் கழிந்ததோ அவனுக்கே தெரியவில்லை.

விஜயலக்ஷ்மி திரும்பி வந்தாள்.

"சாரி சேகர்" என்றாள்.

''பரவாயில்லை. இந்தப் பெண்தானா உன்னுடைய செகரெட்ரி?''

''ஆமாம். ஏன் கேட்கிறாய்?''

''சும்மாதான் கேட்டேன்.'' ராஜசேகரின் இதழ்கள் மேலும் ஏதோ சொல்ல முயற்சித்தன.

அதைக் கவனிக்காத விஜயலக்ஷ்மி டீபாய் மீது இருந்த பத்திரிகைகளை அடுக்கிக்கொண்டே ''அவள் என்னுடைய செகரெட்ரி மட்டுமே இல்லை. கூடியசீக்கிரம் இந்த வீட்டுக்கு மருமகளாக வரப்போகிறாள். பிரசாத் அவளைத் திருமணம் செய்துகொள்ளப் போகிறான்'' என்றாள்.

''ஐ.ஸீ.'' அவன் கண்களில் கோபம் வருத்தம் கலந்த உணர்வு ஒன்று மின்னலாய் தோன்றி மறைந்தது.

''சரி. நான் கிளம்புகிறேன்.'' என்றான்.

''அவசரமாக போகணுமா? சாப்பிட்டுவிட்டு போகலாமே?'' விஜயலக்ஷ்மி சொன்னாள்.

''இல்லை. ஒரு நண்பனை சந்திக்க அவசரமாக போக வேண்டும். தவறாக நினைக்காதே. ப்ளீஸ்.''

மறுபேச்சுக்கு வாய்ப்பு தராமல் அங்கிருந்து போய்விட்டான்.

அன்று மாடிப்படியில் புத்தகத்தை தவறவிட்டு மாடிக்கு விரைந்தவள் யாரென்று இப்பொ தெளிவாக புரிந்துவிட்டது. தான் என்ன தீங்கு செய்துவிட்டான்? தன்னைப் பார்த்து ஜெயந்தி ஏன் இப்படி ஓடவேண்டும்? வாழ்க்கையில் என்றுமே ஏற்படாத அளவுக்கு ஏமாற்றம், தனிமை அவனை ஆட்கொண்டன.

★ ★ ★

ஜெயந்திக்கு மறுபடியும் விழிப்பு வந்தபோது கட்டிலுக்கு பக்கத்திலேயே பிரசாத் பதட்டத்துடன் நின்றுகொண்டிருந்தான். ஒருநிமிடம் ஜெயந்தியின் கண்களுக்கு பிரசாதின் முகம் ராஜ



சேகரைப் போல் தோன்றியது. பிரசாத் கரங்களைப்பற்றி அதில் முகம் புதைத்துக்கொண்டாள் ''என்னை மன்னித்து விடுங்கள்'' என்றாள்.

''என்ன இது ஜெயந்தி? மன்னிப்பு எதற்கு?''

பிரசாதின் குரல் தெளிவாக கேட்டது. மயக்கம் தெளிந்தவள் போல் நிமிர்ந்து பார்த்தாள். பிரசாத்தான். ராஜசேகருக்காக அறை முழுவதும் பார்வையை சுழற்றினாள்.

''அவர்... அவர் எங்கே?'' தெளிவற்ற குரலில் கேட்டாள்.

''யாரைப்பற்றி கேட்கிறாய்? சேகரையா?'' பிரசாத் கேட்டான்.

''ஆமாம்.'' தெளிவற்ற குரலில் சொன்னாள்.

''அவன் அப்போதேபோய் விட்டானே.''

''போய்விட்டாரா?''

''ஆமாம். ஏன் கேட்கிறாய்? அவனை உனக்குத் தெரியுமா?'' சந்தேகமாக பார்த்தான்.

ஜெயந்தி பேசவும் திராணியற்றவள்போல் தலையை அசைத்தாள்.

பிரசாதுக்கு விஷயம் என்னவாக இருக்கும் என்று புரிந்து விட்டது. ராஜசேகரை முன்பே தெரியும் என்பதால் பிரகாஷ் விஷயம் மறுபடியும் வெளிச்சத்திற்கு வருமோ என்று பயந்து விட்டாள் போலும். பாவம்! பிரசாத் இதயம் ஜெயந்தியின்பால் இரக்கத்தால் நிரம்பிவிட்டது.

ஜெயந்தியின் கரத்தைப் பற்றிக்கொண்டு ''பயப்படாதே ஜெயந்தி! சேகர்போன்று ஆயிரம்பேர் வந்தாலும் உன்னை என்னிடமிருந்து பிரிக்கமுடியாது'' என்று சொன்னான்.

பிரசாத் சொன்னது ஜெயந்தியின் மூளைக்கு எட்டவே இல்லை. அவளுக்குத் தெரிந்ததெல்லாம் ஒன்றுதான் தன்னை நேரில் பார்த்த பிறகும் ராஜசேகர் எதுவும் தெரியாதவன்போல்

அலட்சியப்படுத்திவிட்டு போய்விட்டான். ஜெயந்தியின் இதயத்தில் துக்கம் கடல் அலைகளைபோல் கொந்தளித்துக் கொண்டிருந்ததை யாரும் அறியவில்லை. அதற்குள் விஜயலக்ஷ்மி கொடுத்த தூக்கமாத்திரை வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டதால் கண்கள் சொருக தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள்.

# 52

இரண்டு வருடங்களுக்கு முன் போரில் இறந்துபோன பிரசாத் அண்ணன் கோபாலும் ராஜசேகரும் ஒரே வகுப்பில் படித்தவர்கள். விஜயலஷ்மி சேகரிடம் உயிரையே வைத்திருந்தாளாம். "வயதில் உன்னைவிட பெரியவளாகி விட்டேன். இல்லாவிட்டால் உன்னையே திருமணம் செய்துகொண்டிருப்பேன்" என்று வேடிக்கையாக சொல்வாளாம். கோபால் இறந்தபிறகு போக்குவரத்து குறைந்துவிட்டது. எப்போதாவது கடிதம் எழுதுவது நேரில் வந்து பார்ப்பது என்று உறவு நீடித்துக் கொண்டிருந்தது. மூன்று குழந்தைகளில் பெரியமகன் கோபால் என்றால் தந்தைக்கு உயிர். அவன் இறந்தபிறகு அந்த கவலையிலேயே கிழவர் படுத்த படுக்கையாகிவிட்டார். மகனை நினைவுப்படுத்தும் எந்த பொருளை பார்த்தாலும் அவருக்க துக்கம் பொங்கிக் கொண்டுவரும். அதை உணர்ந்த விஜயலஷ்மி கோபாலை நினைவுபடுத்தும் எந்தபொருளும் வீட்டில் இல்லாதபடி செய்துவிட்டாள்.

இந்த விஷயமெல்லாம் பிரசாத் மூலமாய் ஜெயந்திக்கு தெரியவந்தது.

"சேகரை உனக்கெப்படி தெரியும்?" என்று பிரசாத் ஜெயந்தியிடம் கேட்கவில்லை. அவன்தான் வேறுவிதமாக ஊகித்துக் கொண்டுவிட்டானே.

ஜெயந்திக்கு நினைவுதப்பி போனதற்கு சேகர்தான் காரணம் என்ற விஷயம் விஜயலஷ்மிக்கு தெரிய வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.



பிரசாத் கிளம்பும் நாள் நெருங்கிவிட்டது.

"இருவரின் மனமும் ஒத்துப்போன பிறகு தாமதம் செய்வானேன்? ஆர்சுன்னு திருமணத்தை முடித்துக் கொள்ளக்கூடாதா?" தம்பியிடம் கேட்டாள்.

"எனக்கு ஆட்சேபனை இல்லை. அவளை அவசரப் படுத்துவதில் எனக்கு விருப்பம் இல்லை." பிரசாத் சொன்னான்.

திருமணம் பற்றி பேச்சு வந்த பிறகு மற்றவர்களின் முன்னிலையில் ஜெயந்திமிடம் பேசுவதற்கு பிரசாத்க்கு கூச்சமாக இருந்தது.

பிரசாத் கிளம்பிப் போய்விட்டான். நாளுக்கு நாள் ஜெயந்தி இளைத்து துரும்பாகிக் கொண்டிருந்தாள்.

"இதோ பார் பெண்ணே! நீ இப்படி நாளுக்குநாள் இளைத்துக் கொண்டே போனால் நாளைக்கு பிரசாத்க்கு யார் பதில் சொல்வது? இன்னிலிருந்து நீ ஒரு வேலையும் செய்யக் கூடாது. நன்றாக சாப்பிட்டு ரெஸ்ட் எடு. குழந்தைகளுடன் ஜாலியாக அங்கே இங்கே போய் வா. டானிக் சாப்பிட மறந்து விடாதே." விஜயலஷ்மி ஒருநாள் அன்புடன் கடிந்து கொண்டாள்.

பம்பாயிலிருந்து விஜயலஷ்மியின் சினேகிதி கணவனுடன் வந்திருந்தாள். அவர்களுடன் குழந்தைகளையும் ஜெயந்தியையும் மகாபலிபுரத்திற்கு அனுப்பி வைத்தாள்.

★ ★ ★

மகாபலிபுரத்தில் கெஸ்ட்ஹவுஸ் கடற்கரையில் இருந்தது. இரண்டு அடுக்குமாடிக் கட்டிடம். பால்கனியிலிருந்து பார்த்தால் உயரமாக வளர்ந்த சவுக்கு மரங்கள், அவற்றுக்கிடையே ஒத்தையடிப் பாதையும் தென்பட்டன.

மாலைநேரத்து மங்கலான வெளிச்சத்தில் கண் இமைக்காமல் அலைகளையே பார்த்துக் கொண்டு இருந்தாள் ஜெயந்தி. "உனக்கு இந்த உலகில் இன்னும் என்ன எஞ்சியிருக்கு? இருந்து எதை

அனுபவிக்கப் போகிறாய்! வா... வந்து என்னுடன் கலந்துவிடு' என்று கடல் தன்னை அழைப்பதுபோல் தோன்றியது.

உண்மைதான். இன்னும் சில நாட்களில் பிரசாத்க்கு ஏதாவது பதிலை சொல்லித்தான் ஆகவேண்டும். மறுப்பு தெரிவித்தால் அவன் மனம் காயப்படும் என்பது சத்தியம். மௌனமாக இருந்தால் அங்கீகாரமாக எடுத்துக் கொண்டு திருமணத்திற்கு அவசரப்படுவார்கள்.

கடந்த சில நாட்களில் ஜெயந்திக்கு ஒரு உண்மை புரிந்து விட்டது. ராஜசேகரை தவிர வேறு எந்த ஆணின் ஸ்பரிசத்தையும் தன்னால் சகித்துக் கொள்ள முடியாது. அவனோ தன்னை பார்த்தும் பார்க்காதது போல் போய்விட்டான். மனம் ரோஷத்தால், அவமானத்தால் எரிமலையாக கொதித்துக் கொண்டிருந்தது. உண்மைதான் வேடிக்கை என்னவென்றால் மறுபடியும் மறுபடியும் அவனைப் பற்றித்தான் யோசிக்கத் தோன்றுகிறது.

தான் தொலைவாக வந்துவிட்டால் அவனுக்கு நன்மை நடக்கும் என்று எதிர்பார்த்தாள். பரிமளாவுடன் அவன் திருமணம் முடிந்திருக்கும். மறுபடியும் வாழ்க்கையில் குறுக்கிடப் போகிறாளே என்று பயந்து விட்டானோ இல்லை பிரகாஷுடன் ஓடிப்போனவள் என்று முத்திரை குத்தி விட்டானோ. எப்படி வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும். அதிகாரத்தை காட்டுவது தவிர என்றாவது அன்புடன் பேசியிருக்கிறானா? அவசர சமயத்தில் ஆதரவு தந்தேன் என்ற ஆணவம்தானே. போகட்டும். அவனிடம் தனக்கு ஏற்பட்ட காதல் தன் ஆழ்மனதிலேயே புதைந்து இருக்கட்டுமே. யாருக்கும் தெரிய வேண்டிய அவசியம் இல்லை.

தனிமையில் இருந்தால் மனம் மேலும் அமைதியின்றி தவிக்கும். கீழே சென்று குழந்தைகளுடன் சேர்ந்து இருப்போம் என்று நினைத்து மெதுவாக படிகளில் இறங்கத் தொடங்கினாள். கீழே இருந்து யாரோ மேலே வந்து கொண்டிருந்தார்கள். ஜெயந்தி அவர்களை கவனிக்கவில்லை. வழிவிடுவதுபோல் ஒதுங்கி



இறங்கி கொண்டிருந்தவளின் கையை யாரோ பற்றி தடுத்தார்கள். வீலென்று கத்தப்போன ஜெயந்தி நிமிர்ந்து பார்த்துவிட்டு கற்சிலையாய் நின்றுவிட்டாள்.

எதிரே சிவராமன் நின்றிருந்தான்.

''சிவராமன்!'' வியப்பு மேலிட அழைத்தாள்.

''ஜெயந்தி! நீ.... இங்கே... எப்படி?''

''அட! ஜெயந்தியா!'' படியேறி வந்து கொண்டிருந்த பரிமளா இரண்டே எட்டில் அருகில் வந்தாள்.

வாயடைத்து விட்டதுபோல் சிவராமனால் மேற்கொண்டு பேசமுடியவில்லை.

''இத்தனை நாட்கள் எங்கே இருந்தாய்? உனக்காக தேடித் தேடி களைத்துப் போய் விட்டோம்.'' பரிமளா சொன்னாள்.

''நானா... நான்வந்து... அதுபோகட்டும். நீங்க இருவரும் இங்கே....'' ஜெயந்தி பாதியிலேயே நிறுத்திவிட்டாள்.

பரிமளாவும், சிவராமனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பரிமளா தன் கழுத்தில் இருந்த திருமாங் கலியத்தை எடுத்துக் காட்டினாள்.

''அப்படி என்றால்?''

''இன்னும் புரியவில்லையா? இருவரும் திருமணம் செய்து கொண்டோம். திருப்பதிக்கு போய் தரிசனத்தை முடித்துக்கொண்டு இங்கே வந்தோம்.'' பரிமளாவின் முகம் புது சோபையுடன் ஜொலித்துக் கொண்டிருந்தது.

''இது உண்மையா?'' ஜெயந்தி நம்பமுடியாதவள் போல் சிவராமனை பார்த்தாள்.

''பரிமளா! ஜெயந்தியை நம் அறைக்கு அழைத்துப்போ. நான் போய் காபிக்கு சொல்லிவிட்டு வருகிறேன். ''சிவராமன் ஜெயந் தியை பரிமளாவிடம் ஒப்படைத்துவிட்டு மறுபடியும் கீழே போய்விட்டான்.

''வா ஜெயந்தி! உன்னைப் பார்த்த அதிர்ச்சியிலிருந்து மீளனும் என்றால் நான் டபிள் ஸ்ட்ராங் காபி குடித்தாக வேண்டும்.'' பரிமளா ஜெயந்தியின் கையைப் பற்றி உரிமையுடன் அழைத்துச் சென்றாள்.

★ ★ ★

''தவறாக புரிந்துகொண்டு இருக்கிறாய் ஜெயந்தி. அன்று நீ என்னை திருமண விஷயமாக கேட்டபோது உனக்கு மூட் சரியாக இல்லை என்றுதான் நினைத்தேன். பரிமளாவுடன் என் நெருக்கத்தை நீ புரிந்து கொள்ளவில்லை என்று முதல்முறையாக உணர்ந்தபோது எப்படிச் சொல்வது என்று தெரியாமல் குழம்பி விட்டேன்.'' சிவராமன் வருத்தப்பட்டுக் கொண்டான். அன்றே ஜெயந்தியிடம் பரிமளாவை தான் விரும்பும் விஷயத்தை தெளிவுப்படுத்தியிருந்தால் இந்த விபரீதம் நடந்திருக்காதோ.

''ஆனால்... அன்று ரேகா வீட்டுக்கு வந்து...'' ஜெயந்தி பாதியிலேயே நிறுத்திவிட்டாள்.

பரிமளா, சிவராமன் இருவரின் பார்வையும் சந்தித்துக் கொண்டன.

''இப்படி ஏதாவது நடந்திருக்கும் என்று நான் முன்பே சொன்னேன். ரேகா லேசுபட்டவள் இல்லை.'' கோப்பைகளில் காபியை ஊற்றிக்கொண்டே சொன்னாள் பரிமளா.

''ரேகா அப்படி என்னதான் சொன்னாள்?'' சிவராமன் கேட்டான்,

ரேகா சொன்னதை அப்படியே சொன்னாள் ஜெயந்தி.

''ராஜசேகருக்கு ஒருநாளும் பரிமளாவைத் திருமணம் செய்துகொள்ளும் எண்ணம் இருந்தது இல்லை.'' சிவராமன் சொன்னான்.

''அவர் அப்படி நினைக்கவில்லை என்றாலும் மற்றவர்கள்...'' ஜெயந்தி தயங்கினாள்.



''அதுவும் உண்மைதான். எப்படியாவது பரிமளாவை ராஜசேகருக்கு மணம் முடிக்க வேண்டும் என்பதில் ரேகா பிடிவாதமாக இருந்தாள். அதில் அவளுடைய சுயநலமும் இருந்தது. பரிமளா ராஜசேகரின் மனைவியாக வந்தால் வழக்கம்போல் ராஜசேகர் மீது அதிகாரத்தை கொண்டாடலாம் இல்லையா. அதுதான் அவளுடைய திட்டம்.''

''அதைத்தவிர வேறு எதுவும் இல்லையா?'' ஜெயந்தியின் குரலில் சோர்வு வெளிப்பட்டது.

''கடவுள் மீது ஆணையாக எதுவும் இல்லை. நாங்க இருவரும் ஒருவரை ஒருவர் விரும்புகிறோம் என்று தெரிந்தபிறகு அவர் பரிமளாவை சொந்த தங்கையை போல் நடத்தினார். மேலும் நான் ஒரு நல்ல நிலைக்கு வரவேண்டும் என்று ஆபீசர் போஸ்டுக்கு என்னை உயர்த்தினார்.'' சிவராமன் சொல்லிக் கொண்டே போனான்.

அவர்களுடைய பேச்சை கேட்க கேட்க தான் எவ்வளவு முட்டாள்தனமாக இருந்திருக்கிறோம் என்று புரிந்தது. ஆனால் அதை ஒப்புக்கொள்ள சுயகௌரவம் குறுக்கே வந்தது.

''அதை எல்லாம் விடு. உனக்கு சுயமாக மூளை எங்கே போச்சு? அத்தனை நாட்கள் அவருடைய வீட்டில் இருந்திருக்கிறாயே. அவர் உன்னிடம் பழகியமுறை, எடுத்துக் கொள்ளும் உரிமை... இவற்றிலிருந்தே அவருக்கு உன் மீது இருக்கும் அபிப்பிராயத்தை புரிந்துகொள்ள முடியவில்லை என்றால் உன்னைவிட முட்டாள் உலகிலேயே இருக்க மாட்டார்கள்.'' பரிமளா கடிந்துகொண்டாள்.

ஜெயந்தி சிவந்துவிட்ட முகத்துடன் ஜன்னல் பக்கம் திரும்பினாள். ''அவர் ஒருநாளும் என்னிடம் குறிப்பாக கூட சொன்னதில்லை.''

''நீ புரிந்துகொண்டிருப்பாய் என்று நினைத்திருப்பார்.''

''பெங்களூரிலிருந்து கடிதம் எழுதினேன். அதற்கு பதில் கூட எழுதவில்லை.'' ஜெயந்தி குற்றம் சாட்டுவதுபோல் சொன்னாள்.

"எப்போ எழுதினாய்? அவருக்குக் கடிதம் சேர்ந்ததே இல்லையோ?" சிவராமன் சொன்னான்.

"நீ போனபிறகு அவருக்கு ஆக்ஸிடெண்ட் ஆகிவிட்டது. கிட்டத்தட்ட ஒருமாதம் ஆஸ்பத்திரியில் இருந்தார். இந்த விஷயம் உனக்குத் தெரியுமா?" பரிமளா கேட்டாள்.

"ஆக்ஸிடெண்டா? எப்போ நடந்தது?"

சிவராமன் சொன்னான். அதாவது தான் கிளம்பிய அன்றே விஜயவாடாவிலிருந்து திரும்பிவரும் போது விபத்து நடந்திருக்கிறது. இவர்கள் சொல்வதுபோல் தான் போட்ட கடிதம் அவன் வரையில் போய்ச் சேரவே இல்லையோ?

ஆனால் ராஜசேகர் தன்னைப் பார்த்த பிறகும் ஏன் பேசவில்லை? முன்பின் தெரியாதவன்போல் ஏன் நடந்து கொண்டான்? இந்தக் கேள்வி அவள் இதயத்தைத் துளைத்துக் கொண்டு இருந்தது.

"சொல்ல மறந்து விட்டேன். எங்களுடன் டாக்டர் சுப்பிரமணியமும், அவர் மனைவி கமலாவும் வந்திருக்கிறார்கள். கோவிலுக்கு போயிக்கிறார்கள். வரும் நேரம்தான்." சிவராமன் சொன்னான்.

சொல்லிமுடிக்கும் முன்பே அவ்விருவரும் வந்து விட்டார்கள். முதலில் சுப்ரமணியம் உள்ளே வந்தார்.

"ஜன்னலுக்கு பக்கத்தில் நின்று கொண்டிருப்பது யாரென்று சொல்லுங்க பார்ப்போம்?" பரிமளா புதிர் போட்டாள்.

"யாரு?" வெளிச்சத்திலிருந்து வந்ததால் அவரால் சரியாக பார்க்க முடியவில்லை.

"சரியா பாருங்க. உங்களுக்கு ரொம்ப வேண்டியவள்." சிவராமன் சொன்னான்.

ஜெயந்தி வெளிறிப் போன முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.



டாக்டரின் கண்கள் அறையின் வெளிச்சத்திற்கு பழகி விட்டன. ஜெயந்தியை அந்த இடத்தில் பார்த்ததும் அவரால் நம்பவே முடியவில்லை.

"நான் காண்பது கனவு இல்லையே?" என்றார்.

ஜெயந்தி ஓரடி முன்னால் வைத்தாள்.

"கமலா! இங்கே வந்து பாரேன்." அவர் குரல் உச்சஸ்தாயில் ஒலித்தது.

"என்ன விஷயம்?" பதட்டத்துடன் உள்ளே வேகமாக வந்த கமலா அதிர்ச்சி அடைந்தவள்போல் நின்றுவிட்டாள்.

"ஜெயந்தி!" இருகைகளையும் நீட்டிக்கொண்டே சொன்னாள். "என் கண்கள் என்னை ஏமாற்றவில்லையே?"

"நேரில் பார்த்த பிறகும் நம்பிக்கை வரவில்லையா?" கிண்டல் செய்தார் டாக்டர்.

ஜெயந்தி கமலாவின் அணைப்பில் கட்டுண்டவளாய் விசும்பிக் கொண்டிருந்தாள்.

★ ★ ★

"இதுவரையில் செய்ததுபோதும். இப்போதும் பிடிவாதமாக இருக்காதே. என் பேச்சை கேளு. எங்களுடன் வந்துவிடு. உனக்குத் தெரியாது. சேகர் கம்பீரமாக இருப்பதுபோல் வெளியில் தென்பட்டாலும் உள்ளுக்குள்...."

அந்த அம்மாளின் பேச்சை இடைமறிப்பதுபோல் ஜெயந்தி "என்னை மன்னித்துவிடுங்க. என்னால் வரமுடியாது. நான் செய்தது தவறாகவே இருக்கலாம். ஆனால் மன்னிப்பு கேட்பதற்கும் உரிமை இருக்கவேண்டும்" என்றாள்.

"உனக்கு பைத்தியம்தான் பிடித்துவிட்டது." கமலா கோபமாக சொன்னாள்.

''இந்த சூழ்நிலையில் பைத்தியம் பிடித்தால் அதைவிட நன்மை எனக்கு வேறு இருக்க முடியாது. ஆனால் நான் சாதாரணமாகத்தானே இருக்கிறேன்.''

''சரி. உன் இஷ்டம். அவனே சுயமாக வந்து உன்னை அழைத்துப் போவான். சரிதானே.''

எத்தனை சொன்னாலும் ஜெயந்தி பிடிவாதமாக இருந்தது, கமலாவுக்கு கோபத்தை ஏற்படுத்தியது.

திடீரென்று ஜெயந்தி காணாமல் போன பிறகு ராஜசேகரின் மனம் எந்த அளவுக்கு காயப்பட்டதோ அந்த அம்மாளுக்கு நன்றாகவே தெரியும். அதைப்பற்றி அவன் வாயைவிட்டு ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை என்றாலும் உள்ளூர அவன் அனுபவித்துக் கொண்டிருந்த வேதனையை கமலா உணர்ந்துதான் இருந்தாள்.

விஜயலக்ஷ்மியின் வீட்டுக்கு வருவதாக சிவராமனும், பரிமளாவும் சொன்னபோது ஜெயந்தி மறுத்துவிட்டாள். முகவரி கொடுக்கவும் சம்மதிக்கவில்லை.

அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு மௌனமாக தன் அறைக்கு திரும்பிவிட்டாள். இவர்கள் சொன்னதை வைத்துக் கொண்டு தன்னால் ராஜசேகரிடம் போய்விட முடியுமா? அவனைப்பற்றி தன்னைவிட யாருக்கு தெரியும்? அப்படியே துணிந்து தான் போனாலும் அலட்சியமாக பேசினால் என்ன செய்வது? மறுபடியும் எங்கே போவது?

ஊஹூம் இருவருக்கும் இடையே ஏற்பட்ட இந்த இடைவெளிக்குக் காரணம் முழுக்க முழுக்க தானேதான். ஆனால் அதை நீக்கும் சக்தி தனக்கு இல்லை. விலகி இருந்தால் சுயகௌரவமாவது மிஞ்சும். கமலா மாமியிடம் வரமாட்டேன் என்று பிடிவாதமாக மறுத்து விட்டதற்கு ஜெயந்தி கொஞ்சம் கூட வருத்தப்படவில்லை.

★ ★ ★



மேலும் பத்துநாட்கள் கழிந்துவிட்டன. நடக்க வாய்ப்பு இல்லை என்று தெரிந்தாலும் திடீரென்று எந்த நிமிடத்திலாவது ராஜசேகர் வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பு ஜெயந்தியின் மனதில் அணையா விளக்காக எரிந்து கொண்டிருந்தது.

விஜயலக்ஷ்மி சாஸ்திரிகளை அழைத்து முஹூர்த்தத்தை குறிக்கச் செய்தாள். ஜெயந்தியிடம் யாரும் எதையும் கேட்க வில்லை. அவளும் வாய்விட்டு தனக்கு இந்த திருமணத்தில் விருப்பம் இல்லை என்று சொல்லவும் இல்லை.

பத்திரிகைகள் அச்சடிக்கப்பட்டுவிட்டன. திருமண ஏற்பாடு கள் சுறுசுறுப்பாக நடந்துகொண்டு இருந்தன. பல வருடங்கள் கழித்து வீட்டில் நல்லகாரியம் நடக்கப் போவதால் விஜயலக்ஷ்மி பெரிய அளவில் ஏற்பாடுகளை செய்துகொண்டிருந்தாள்.

பிரசாத் திருமணத்திற்கு முதல்வாரமே வந்துவிடுவதாகவும், விடுமுறைக்கு எழுதிக் கொடுத்திருப்பதாகவும் கடிதம் எழுதியிருந் தான்.

திருமணத்திற்கு இன்னும் பத்துநாட்கள்தான் இருந்தன. பிரசாத் நாளை மறுநாள் வந்துவிடுவான். அன்று மதியம் விஜய லக்ஷ்மி ஜெயந்தியை அழைத்துக்கொண்டு புடவைக் கடைக்குச் சென்றாள்.

''உனக்கு பிடித்தவற்றை செலக்ட் செய்துகொள்'' என்றாள்.

''எனக்கு எதுவும் தெரியாது. நீங்க எது செலக்ட் செய்தாலும் சரி.'' தாழ்வான குரலில் சொன்னாள் ஜெயந்தி. சில நாட்களாகவே அவள் மனம் அமைதியின்றி தவித்துக் கொண்டிருந்தது.

சேல்ஸ்மேன் பலவிதமான புடவைகளை கொண்டுவந்து முன்னால் போட்டான்.

''இதெல்லாம் லேட்டெஸ்ட் டிஸைன்கள். இந்த கலர் சின்னம்மாவுக்கு ரொம்ப பொருத்தமாக இருக்கும்'' விடாமல் பேசிக்கொண்டே இருந்தான்.

''இந்த புடவையை பாருங்க. சாயம் போகாது. கிராயண்ட்'' வெளிர் நீலத்தில் அன்னப்பறவை பார்டர் இருந்த புடவையை பிரித்துக் காட்டினான்.

ஜெயந்தி திடுக்கிட்டாள். பரிமளாவின் பிறந்தநாள் அன்று ராஜசேகர் வாங்கி வந்த அதே புடவை. கட்டிக்கொண்டுதான் ஆகவேண்டும் என்று அதிகாரமாக சொன்னது நினைவுக்கு வந்தது.

''என் மீது கோபம் உன் கண்களை மறைத்துவிட்டது. இந்தப் புடவையில் எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா?'' மடிப்பு விழுந்த இடத்தை சரிசெய்துவிட்டு தோள்களைப் பற்றி தன்பக்கம் திருப்பிக் கொண்டானே. அந்த அதிகாரம், அந்த உரிமை எங்கே காணாமல் போய்விட்டன?

''இந்தப் புடவையின் பார்டர் நன்றாக இருக்கு. எடுத்துக் கொள்கிறாயா?'' விஜயலக்ஷ்மி புடவையை கையில் எடுக்க போனாள்.

''வேண்டாம். வேண்டாம். அந்த கலர் எனக்கு பிடிக்கவே இல்லை.'' ஜெயந்தி உடனே மறுத்தாள்.

சேல்ஸ்மேன் வியப்புடன் பார்த்தான். ''கொஞ்சம் கூட நாகரீகம் தெரியாத பட்டிக்காட்டு ஜென்மம்'' என்பதுபோல் இருந்தது அந்தப் பார்வை.

''சரி. நீங்களே பார்த்து செலக்ட் செய்து கொள்ளுங்கள்.'' அடுத்த கஸ்டமரை கவனிக்க போய் விட்டான்.

''தம்பி! அந்த நீலவண்ண புடவையை இப்படிக்காட்டு.'' அப்பொழுதுதான் கடைக்குள் நுழைந்த பெண்மணி ஒருத்தி குரல் கொடுத்தாள்.

விஜயலக்ஷ்மி, ஜெயந்தி இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். ஜெயந்திக்கு ஒரு நிமிடம் இதயத் துடிப்பு நின்றுவிட்டதுபோல் தோன்றிது. அந்தப் பெண்மணி யாரோ இல்லை. ராஜசேகர் வீட்டில் அவள் இருந்தபோது நன்கொடை வசூல் செய்ய வந்த சரஸ்வதிராமனேதான்.



ஜெயந்தி சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாலும் அந்த அம்மாள் ஜெயந்தியை அடையாளம் கண்டுபிடித்து விட்டாள்.

''மிஸெஸ் ராஜசேகர்! சென்னைக்கு எப்போ வந்தீங்க?'' மலர்ந்த முகத்துடன் அருகில் வந்தாள். ஐயாயிரம் நன்கொடை கொடுக்கக்கூடிய மனிதர்களுடன் எப்படி பேச வேண்டுமோ அந்த அம்மாளுக்கு நன்றாகவே தெரியும்.

ஜெயந்தியின் முகம் சிவந்துவிட்டது. என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை.

''யாருடன் பேசுறீங்க?'' விஜயலக்ஷ்மி புரியாமல், குழப்பத்துடன் கேட்டாள்.

''உங்க பக்கத்தில் நிற்கிறாளே. அவங்களிடம்தான். கொஞ்சம் வழிவிடறீங்களா?''

வியப்புடன் பார்த்து கொண்டிருந்த விஜயலக்ஷ்மியைத் தாண்டி ஜெயந்தி அருகில் சென்றாள்.

''எத்தனை நாளாச்சு உங்களைப் பார்த்து? உங்க கணவர் எங்கே காணும்?'' குசலம் விசாரித்தாள்.

ஜெயந்தி பதில் சொல்ல முடியாமல் தவித்தாள்.

''நான் இங்கே வந்து ஒரு மாதம் ஆகிறது. நீங்க எங்கே தங்கி இருக்கீங்களோ சொல்லுங்க. நானே நேரில் வந்து உங்க இருவரையும் எங்க வீட்டுக்கு அழைத்துப் போகிறேன்.'' உரிமையுடன் சொன்னாள் சரஸ்வதிராமன்.

''இந்த புடவை நன்றாக இருக்கா பாரு.'' தொலைவில் நின்றிருந்த அம்மாள் சரஸ்வதிராமனை அழைத்தாள்.

''இதோ வந்துவிட்டேன்.'' ஜெயந்தி பக்கம் திரும்பினாள். ''நீங்களும் புடவை செலக்ஷனை முடித்துக் கொள்ளுங்கள். அதற்குள் நானும் வேலையை முடித்துவிட்டு வருகிறேன். இருவரும் சேர்ந்து உங்க கணவரிடம் சென்று பர்மிஷன்

கேட்போம். அவரும் வருவதாக ஒப்புக்கொண்டால் எல்லோருமாக சேர்ந்து எங்க வீட்டுக்கு போவோம். சரிதானே.'' படபடவென்று மொழிந்து விட்டு போய்விட்டாள்.

''அந்த அம்மாள் யாரு?'' விஜயலஷ்மியின் குரல் கடினமாக ஒலித்தது.

''நாம் வீட்டுக்கு போவோமா?'' ஜெயந்தியின் முகம் வெளிறிப் போய்விட்டது.

''கிளம்பு.'' சுருக்கமாக சொன்னவள் கடைக்காரனிடம் இன்னொரு நாள் வருவதாக சொல்லிவிட்டு வெளியேறினாள்.

எப்போதும் முறுவலுடன் தென்படும் விஜயலஷ்மியின் முகம் கம்பீரமாக மாறிவிட்டதை பார்த்தபிறகு உண்மையைச் சொல்வதை தவிர வேறு வழியில்லை என்று ஜெயந்திக்கு தோன்றியது.

★ ★ ★

''இப்படிக்கூட யாராவது நடந்து கொள்வார்களா? சேகர் உன்னைப் பார்த்த பிறகும் உன்னைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசாமல் போவானேன்?''

வீட்டுக்கு வந்ததும் ஜெயந்தி சொன்னதை முழுவதுமாக கேட்ட பிறகு விஜயலஷ்மி சொன்னாள்.

''என் மேல் அவ்வளவு கோபம்... வெறுப்பு.''

''நீ மட்டும் புத்திசாலி என்ற நினைப்போ. எனக்கும் மூளை மழுங்கிப் போய்விட்டது. முன்பு ஒரு தடவை உன்னைப்பற்றி கடிதம் எழுதியபோது உடனே திருமணம் செய்துகொள் என்று பதில் எழுதினேன். பிரசாத் உன்னை ஜெயந்தி என்று அழைத்தப் போதும் எனக்கு அந்த நினைப்பே வரவில்லை.''

''அவர் இங்கே வந்தபோது என்னைப் பற்றி ஏதாவது பேச்சு வந்ததா?''



''ஏன் வராமல்? என்ன ஆச்சு என்று நான் கேட்டபோது அந்தப் பெண்ணுக்கு விருப்பம் இல்லை. அதான் திருமணம் செய்துகொள்ளவில்லை என்று சுருக்கமாக சொல்லிவிட்டு பேச்சை மாற்றிவிட்டான்.''

'இந்தப் பெண்ணா உன்னுடைய செகரெட்ரி?' என்று முகம் வெளிற சேகர் கேட்டது விஜயலஷ்மிக்கு நினைவு வந்தது.

''இப்போ நான் என்ன செய்யட்டும்?'' ''உடனே துணிமணி எடுத்து வைத்துக்கொள். ரயிலில் ஏற்றிவிடுகிறேன்.''

''இன்னிக்கேவா?''

''ஆமாம். நானும் கூட வந்து உன்னைக் கொண்டுவிட்டு அப்படியே சேகரை சூடாக நாலு கேள்வி கேட்கணும்னு நினைத்தேன். ஆனால் நேரம் இல்லை. இந்தத் திருமணத்தை நிறுத்த முடியாது. உடனே வேறு பெண்ணை தேடி பிடிக்க வேண்டும்.''

ஜெயந்தி பதில் சொல்லவில்லை.

''ஏன்? சேகரிடம் போவதற்கு உனக்கு விருப்பம் இல்லையா?''

''அதற்கான துணிச்சல் இல்லை.''

''பரவாயில்லை. ஒருக்கால் அவன் ஏதாவது சொன்னால் அவமானப்படுத்துவதுபோல் பேசினால் கிளம்பி என்னிடம் வந்துவிடு. இந்த வீட்டுக் கதவுகள் எப்போதும் உனக்காக திறந்தே இருக்கும். ஆனால் பிரசாத் மனைவியாக இல்லை. என்னுடைய செகரெட்ரியாக. அதை நினைவில் வைத்துக்கொள்.''

''போகாமல் இருக்க முடியாதா?''

''தவறு செய்தவள் நீ. மன்னிப்பு கேட்பதற்கு தயங்கலாமா? உன் சுயகௌரவத்தை கொஞ்சம் மூட்டை கட்டிவை.''

''மன்னிப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.''

''ஆனால் எனக்கு இருக்கு. நீ போய் முயற்சிசெய்.'' தீர்மானமான குரலில் சொன்னாள் விஜயலஷ்மி.

# 53

ரயிலைவிட்டு இறங்கியதும் கமலாமாமி வீட்டுக்கோ, சுமதியின் கூட்டுக்கோ போகலாமா என்று முதலில் யோசித்தாள். பிறகு எண்ணத்தை மாற்றிக் கொண்டாள்.

நேராக ராஜசேகர் வீட்டுக்கு போவது நல்லது. ஒருக்கால் அவன் அவமானப்படுத்துவதுபோல் பேசினால் யாருக்கும் தெரியாமல் மறுபடியும் ரயில்ஏறி விடலாம்.

வீட்டை நெருங்கும் போது அவள் மனம் தடுமாறியது. அன்று வீட்டை விட்டு போகும் போது மறுபடியும் இந்த வீட்டுக்கு வரவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று நினைக்கவில்லை. வீட்டின் முன்னால் ராஜசேகரின் கார் தென்படவில்லை. ஜெயந்தி நிம்மதியாக மூச்சு விட்டுக்கொண்டாள். உடனே நேருக்குநேர் சந்திக்காமல் இருப்பதும் நல்லதுதான்.

வாசற்கதவு சாத்தியிருந்தது. பெல்லை அழுத்தினாள். நாயர் வந்து கதவைத் திறந்தான்.

"நாயர்! என்னை நினைவு இருக்கா?" வலிய வரவழைத்துக் கொண்ட முறுவலுடன் கேட்டாள்.

பேயை பார்த்துவிட்டதுபோல் வாயடைத்துப் போய் நின்றிருந்தான் நாயர்.

"அவர் உள்ளே இருக்கிறாரா? நான் உள்ளே வரலாமா?"

நாயர் தேறிக்கொண்டு வழியை விட்டான்.

"வாசு இல்லையா?"

இருக்கிறான் என்பதுபோல் தலையை அசைத்தான்.

"இரவு முழுவதும் தூங்கவில்லை. குளித்துவிட்டு வருகிறேன். சாப்பிட ஏதாவது இருக்குமா?"

நாயர் மௌனமாக தலையை அசைத்துவிட்டு போய் விட்டான்.



ஜெயந்தி உள்ளே வந்தாள். அந்த வீட்டில் காலடி வைத்த பிறகு உடலில் புதிய சக்தி பிறந்தாற்போல் உணர்ந்தாள்.

பதில் சொல்வது போல் முறுவலுடன் தலையை அசைத்து ஓடிவிட்டான்.

சற்று நேரம் கழித்து குளித்து சாப்பிட்டுவிட்டு நேராக ராஜசேகரின் அறைக்கு வந்தாள். ஒரு மூலையில் சூட்கேஸும், ஹோல்டாலும் தயாராக அடுக்கியிருந்தன.

"மாலை ஊருக்குப் போகிறார்." நாயர் தெரிவித்தான்.

"நல்லவேளை, ஒரு நாள் தாமதமாக வந்திருந்தால்...." என்று நினைத்தாள்.

இந்த வீட்டில் இந்தக் கட்டிலில் படுத்துக் கொண்டால் எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது? சின்னக்குழந்தை திருவிழாவில் தொலைந்து போய் மறுபடியும் தன் பெற்றோரை சந்தித்தால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்குமோ ஜெயந்திக்கும் அப்படித்தான் இருந்தது.

பல நாட்களாக சரியாக உறங்காத ஜெயந்திக்கு இன்று மனமும், வயிறும் நிரம்பியதும் தூக்கம் கண்களை சொருகியது.

ரொம்ப நேரம் கழித்து திடீரென்று விழிப்பு வந்ததால் கண்களைத் திறந்து பார்த்தாள். அறையில் விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. ராஜசேகர் ஜன்னல் அருகில் நின்றுகொண்டு வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் நிற்கும் தோரணையை பார்த்தால் ரொம்ப நேரமாக நின்று கொண்டிருப்பது போல் தோன்றியது.

ஜெயந்தி கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். ராஜசேகர் திரும்பிப் பார்த்தான். இருவரின் பார்வையும் சந்தித்துக் கொண்டன. காலம் நின்றுவிட்டதுபோல் தோன்றியது. பார்த்துக் கொண்டிருந்தபோதே ஜெயந்தியின் விழிகளில் நீர் சுழன்றது. அருகில் சென்று அவன் மார்பில் முகத்தை புதைத்துக்கொண்டு "நான் வந்துவிட்டேன். சாசுவதமாக வந்து விட்டேன்" என்று சொல்ல நினைத்தாள்.

எப்போ வந்தாய் ஜெயந்தி?'' அருகில் வந்துகொண்டே கேட்டான். அவன் குரல் ரொம்ப சாதாரணமாக இருந்தது. எதிர்பாராமல் தன்னை இங்கே பார்த்ததில் அவனுக்கு எதுவுமே தோன்றவில்லையா? மகிழ்ச்சியால் உள்ளம் பரவசமடைய வில்லையா? எவ்வளவு சாதாரணமாக கேட்கிறான்?

''போகட்டும். நல்லகாரியம் செய்தாய். இந்த இடத்தைவிட்டு போகும் முன் உன்னை ஒருமுறை பார்க்க முடிந்தது.'' மேஜை மீது இருந்த பேப்பர்களை அடுக்கினான்.

''அப்படி என்றால்?'' புரியாததுபோல் பார்த்தாள்.

''கடிதத்தில் எழுதியிருந்தேனே. ஏன்? முழுவதுமாக படிக்க வில்லையா?''

''கடிதமா? எந்த கடிதம்?''

ராஜசேகர் விருட்டென்று திரும்பிப் பார்த்தான்.

''என் கடிதத்தை பார்க்கவில்லை என்றால் நீ இங்கே எதற்காக வந்தாய்?''

ஜெயந்தி கண்கள் அகல விரிய பார்த்தாள். அவன் பேசிய தோரணை, கண்களில் தென்பட்ட கோபம் அவள் மனதில் ஏற்பட்ட சந்தோஷத்தை மாயமாக்கி விட்டன.

''உண்மையிலேயே எனக்குத் தெரியாது. எல்லா விஷயத் தையும் விஜயலஷ்மியிடம் சொல்லிவிட்டேன். நான் செய்தது தவறுதான். இல்லையென்று சொல்லவில்லை.

''இப்போ உன்னிடம் யாரும் எந்தக் கேள்வியும் கேட்க வில்லை. நீயும் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.'' கடினமான குரலில் சொன்னான்.

''நீங்க கேட்காவிட்டாலும் சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. அன்று நீங்க என்னைப் பார்த்தும் பார்க்காதது போல் போய் விட்டீங்க. அப்படி போகாமல் இருந்தால்...''

''அதற்கு முன் வந் .போது என்னைப் பார்த்ததும் மாடிக்கு ஓடிவிட்ட காரணம்?''



''அன்னிக்கே நீங்க என்னைப் பார்த்துவிட்டீங்களா?''

''இல்லை. பிரசாதின் கைகளில் நினைவு தப்பி விழுந்ததை பார்த்த பிறகு ஊகித்துக் கொண்டேன். என்னைக் கண்டு மிரண்டு ஓடும் அளவுக்கு நான் என்ன செய்துவிட்டேன்?''

''என்னை முழுவதுமாக சொல்ல விடமாட்டீங்களா?''

''விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் உனக்கு இல்லை.''

''கேட்க வேண்டிய தேவை உங்களுக்கு இல்லை என்று சொல்லுங்கள். போய்விடுகிறேன்.''

ராஜசேகர் நேராக பார்த்தான். அவன் கண்களில் வேதனையும் கோபமும் பிரதிபலித்தன. அப்படியே நாற்காலியில் சரிந்தான். ''வேண்டாம் ஜெயந்தி! எத்தனையோ முயற்சி செய்து சுக்கு நூறாகிவிட்ட மனதை இப்பொழுதுதான் ஒருமாதிரி தேற்றி இருக்கிறேன். இந்த சமயத்தில் நீ மறுபடியும் அந்த அமைதியை குலைக்காதே. அதைத் தாங்கும் சக்தி எனக்கு இல்லை'' என்றான்.

ஜெயந்தி அருகில் வந்தாள். அவன் காதுகொடுத்து கேட்டாலும் கேட்காவிட்டாலும் சொல்ல வேண்டியது தன்னு டைய கடமை. செய்த தவறை தான் உணர்ந்து விட்டதை அவனுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

''தயவு செயது நான் சொல்வதை கேளுங்க. பிரசாதுடன் நான் பெங்களூருக்கு சென்றது உண்மைதான். ஆனால் அவனுக்கும் எனக்கும்....''

''எனக்கு எல்லாம் தெரியும். நீ எதுவும் சொல்ல வேண்டாம். முதலில் இதைச் சொல். நீ இங்கே வருவது பிரசாதுக்குத் தெரியுமா?''

''பிரசாதிடம் ஏன் சொல்ல வேண்டும்?''

''இன்னும் ஒரு வாரத்தில் கணவனாகப் போகிறவனிடம் சொல்ல வேண்டாமா? உன் வாழ்க்கையை நீயே பிரச்னை மயமாக்கிக் கொள்கிறாய். ஒன்றைமட்டும் நிச்சயமாக என்னால்

சொல்ல முடியும். பிரசாத் ரொம்ப நல்லவன். அவனை கணவனாக அடைவது எந்தப் பெண்ணுக்கும் அதிர்ஷ்டம்தான். உன் விளையாட்டு புத்தியினால் அவனுக்குக் கோபம் வருவது போல் நடந்து கொள்வது நல்லது இல்லை. ஒரு ஆணின் மனதை எப்பொழுதுதான் புரிந்து கொள்ளப்போகிறாய்?''

''தயவுசெய்து சுற்றி வளைக்காமல் நேராக சொல்லுங்கள்.''

''உனக்கு கணவனாக வரப்போகிறவன். அவன் மனதை நோகடிக்காதே.''

''பிரசாதுடன் என்னுடைய திருமணம் நடக்கப் போவதில்லை. அதை முதலில் புரிந்துகொள்ளுங்கள்.''

''காரணம்?''

''பிரசாதை திருமணம் செய்துகொள்வதில் எனக்கு விருப்பம் இல்லை.''

''உன் விருப்பத்தை தெரிந்து கொள்ளாமலேயே அவர்கள் இந்த திருமணத்திற்கு ஏற்பாடு செய்து விட்டார்கள் என்கிறாயா? நான் நம்ப மாட்டேன். அவர்கள் அப்படி பட்டவர்கள் இல்லை.'' ராஜசேகரின் கண்கள் நெருப்பை உமிழ்ந்தன.

''ஆமாம். எல்லோரும் நல்லவர்கள். நான் மட்டும்தான் பொல்லாதவள்.''

''ஜெயந்தி!''

''நீங்க எப்போதும் இப்படித்தான். என் மனதில் இருப்பதை எப்போ சொல்ல விட்டீங்க?''

''ஜெயந்தி!!''

''உரத்த குரலில் ஜெயந்தி'' என்று கத்தினால் நான் ஒன்றும் பயந்து விடமாட்டேன். அன்று நீங்க திருமணம் செய்து கொள்வதாய் சொல்லிவிட்டு போன பிறகு ரேகா வந்து சொற் பொழிவு ஆற்றாத குறையாய் பேசிவிட்டு போனாள். ஒரு பெண்ணாக பிறந்திருந்தால் உங்களுக்கு என் நிலைமை புரிந் திருக்கும்.''



''நீயும் ஒரு ஆணாக பிறந்து திமிரும் அகம்பாவமும் பிடித்த பெண் ஒருத்தியால் வாழ்க்கை நிலைகுலைந்து போனால் உனக்கும் புரிந்திருக்கும்.'' நிதானமான குரலில் சொன்னான்.

''ஆமாம். நான் திமிர்பிடித்தவள்தான். பின்னே என்ன செய்யச் சொல்றீங்க? பெங்களூர்லிருந்து உதவிகேட்டு எழுதினேன். பதிலுக்காக ஒவ்வொரு நாளும் எவ்வளவு எதிர்பார்ப்புடன் காத்திருந்தேன் தெரியுமா?''

''எனக்கு அப்போ ஆக்ஸிடெண்ட் ஆகியிருந்தது. அந்தக் கடிதம் என் கைக்குக் கிடைக்கும் போதே தாமதமாகிவிட்டது. அப்படியும் பெங்களூருக்குச் சென்று பார்த்தேன். நீ அங்கே இல்லை. உன்னைப் பற்றி சரியான தகவலும் கிடைக்கவில்லை.''

அவன் அருகில் சென்று 'எனக்கு எல்லாம் தெரியும். சிவராமன் சொன்னான். நான் செய்தது முட்டாள்தனம்தான்' என்று மன்னிப்புக் கேட்க நினைத்தாள். ஆனால் ராஜசேகரின் பார்வை அவளை தொலைவிலேயே நிறுத்தி வைத்தது.

''திடீரென்று வீட்டைவிட்டு போய்விட்டேன் என்ற கோபத்தில் என்னை புறக்கணித்து விட்டீர்கள் என்று நினைத்தேன்.''

''உன்மீது எனக்கு எப்போதும் கோபம் வராது ஜெயந்தி. என் வருத்தமெல்லாம் வாழ்க்கையில் ஒருமுறை அடிபட்ட பிறகும் பாடத்தை கற்றுக் கொள்ளாமல் மற்றொருமுறை முயற்சி செய்து தோற்றுவிட்டேனே என்றுதான்.''

இருவருக்கும் இடையே மௌனம் நிலவியது.

''அன்று பெங்களூருக்குப் போனதும் உங்களுக்காகதான். பிரகாஷ் துணையாக வந்தான். அவ்வளவுதான். சிலநாட்கள் நான் உங்கள் கண்ணில் படாமல் இருந்தால் பரிமளாவைத் திருமணம் செய்து கொள்வீங்க என்று நினைத்தேன்.''

''முட்டாள்தனமாக யோசிப்பதற்கு ஒரு அளவே இல் லையா?'' பற்களை கடித்தான்.

"என்னால் உங்களுக்கு எந்த கஷ்டமும் வரக் கூடாது என்று நினைத்தேன். நீங்க என்னைத் திருமணம் செய்துகொண்டால் மற்ற பார்ட்னர்ஸ் விலகிவிடுவார்கள் என்றும், உங்க எதிர்காலமே அழிந்துவிடும் என்றும் ரேகா எச்சரித்தாள்."

"ஏழையாகி விடுவேன் என்று ரேகா சொன்னால் நம்பி விட்டாய். இவனைப்போய் திருமணம் செய்துகொள்வதா என்று நினைத்தாய். அப்படித்தானே. பெண்களை நம்பக் கூடாது என்று பெரியவர்கள் சொன்னது சரியாகத்தான் இருக்கு."

"எல்லாப் பெண்களும் ஒரே விதமாக இருக்க மாட்டார்கள். தாலி கட்டியவன் ஏழையாக இருந்தாலும் கண்ணின் இமைபோல் தன்னை பாதுகாத்து அன்பாக நடத்தினால் போதும் என்று நினைப்பவர்களும் இருப்பார்கள். இன்னும் சிலரோ பணம் இருந்தால் போதும். வேறு எதுவும் தேவையில்லை என்று நினைப்பார்கள். அன்று ரேகா உங்கள் எதிர்காலம் என் காரணமாக நாசமாகிவிடும் என்று மிரட்டியதும்..."

"நீ அப்படியே நம்பிவிட்டாய். அப்படித்தானே." கோபமாக பார்த்தான்.

"நம்பாமல் என்ன செய்யட்டும்? நீங்க என்னிக்காவது என்னிடம் மனம்விட்டு பேசினீங்களா? என்னிடம் நீங்கள் காட்டுவது இரக்கமா இல்லை அன்பா என்று எப்படித் தெரியும்?"

"உனக்கு மூளையே இல்லை."

"மூளை இருப்பதால்தான் எனக்கு இந்த அளவுக்கு உதவி செய்த உங்க எதிர்காலம் அழிந்துவிடுமே என்ற பயந்து ஓடிவிட்டேன்."

"பொய்சொல்லாதே. என்னிடம் ஏன் கேட்கவில்லை." வேகமாக அருகில் வந்து ஜெயந்தியின் இரு தோள்களையும் பலமாக பிடித்துக் கொண்டான்.

"கேள்வி கேட்கும் உரிமையை எங்கே கொடுத்தீங்க?" விழிகள் ரோஷத்தால் பளபளக்க கேட்டாள்.



"கொடுக்கவில்லையா?" ராஜசேகர் கேட்டான்.

"ஊஹூம்."

ராஜசேகரின் கைகள் ஜெயந்தியின் தோளில் மேலும் பலமாக அழுந்தின. "கொடுக்கவில்லையா?" இரட்டிப்பதுபோல் கேட்டான்.

"ஊஹூம்." பலமாக மறுத்தாள்.

"ச்சீ." கோபம் தலைக்கேற பிடித்துத் தள்ளிவிட்டான்.

போய் கட்டில் மீது விழுந்தாள் ஜெயந்தி. கட்டிலின் விளிம்பு பட்டு நெற்றியில் காயம் ஏற்பட்டது. அதுவரையில் அடக்கிக் கொண்டிருந்த அழுகை மடை திறந்து கொண்டாற்போல் வெளியேறத் தொடங்கியது. தன்னையும் அறியாமல் செய்துவிட்ட காரியத்திற்கு ராஜசேகர் திகைத்துவிட்டான்.

ஜெயந்தி இருகரங்களிலும் முகத்தை புதைத்துக் கொண்டாள்.

"எனக்குத் தெரியும். நீங்க என்னை மன்னிக்க போவதில்லை. கடவுளே! நான் ஏன் இங்கே வந்தேன்?" மேலும் அழுகை பொங்கிக் கொண்டு வந்தது.

ராஜசேகர் ஒரு நிமிடம் ஜெயந்தியை கண் இமைக்காமல் பார்த்தான். பிறகு மெதுவாக அருகில் சென்று "அடிபட்டு விட்டதா?" என்று சொல்லிக்கொண்டே நெற்றியில் அடிபட்ட இடத்தை பார்க்க முயன்றான்.

ஜெயந்தி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"மருந்து போட்டு விடுகிறேன்."

"வேண்டாம். நீங்க ஒன்றும் செய்ய வேண்டாம்."

ராஜசேகர் கட்டில் மீது உட்கார்ந்து கொண்டான். வலுக்கட்டாயமாக அவள் முகத்தை தன்பக்கம் திருப்பிக் கொண்டு அடிபட்ட இடத்தை பரிசீலித்தான். லேசாக புடைத்திருந்தது.

"நான் போய் விடுகிறேன்."

''எங்கே?''

''நான் எங்கே போனால் உங்களுக்க என்னவாம்?''

''உன்னுடைய திமிர் கொஞ்சம்கூட குறையவில்லை.''

''உங்களை நான் வெறுக்கிறேன்.''

''இன்னும்?''

ஜெயந்தி வேகமாக அவன் கைகளை தள்ளிவிடப் போனாள்.

''உண்மையிலேயே என்னுடைய கடிதம் கிடைக்கவில்லையா?''

''இதோடு ஆயிரம் தடவை சொல்லிவிட்டேன். இப்பவும் சொல்கிறேன். உங்கள் கடிதத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நானாகத்தான் வந்தேன்.''

ராஜசேகரின் கண்களில் கோபம் மறைந்து அந்த இடத்தில் அன்பு மலர்ந்தது. முடிச்சேறியிருந்த புருவம் விடுபட்டது.

''எதற்காக வந்தாய்?'' குறும்பு கலந்த குரலில் கேட்டான்.

''புத்தி கெட்டுப் போனதால் வந்தேன்.''

''உன் வாயை எப்படி மூடணுமென எனக்குத் தெரியாதா?'' ராஜசேகர் ஜெயந்தியை அருகில் இழுத்துக்கொண்டு முரட்டுத் தனமாக அவள் இதழ்கள் மீது முத்தம் பதித்தான்.

எத்தனை நேரம் கடந்ததோ தெரியாது. ஜெயந்தி சுயஉயர்வு பெற்றபோது அவள் கைகள் ராஜசேகரின் தோள்களை பலமாக பற்றியிருந்தன. ராஜசேகரின் கண்களில் புதுவிதமான ஒளி தென்பட்டது.

திடீரென்று உரத்த குரலில் சிரித்தான். ஜெயந்தி வியப்புடன் பார்த்தாள்.

''உண்மையைச் சொல்லு. நீயாகத்தான் வந்தாயா?''

''கடவுள் மீது ஆணையாக.''



அவள் கண்களில் தென்பட்ட கொஞ்ச நஞ்ச சந்தேகம் முழுவதுமாக விலகிவிட்டது. ஜெயந்தியை இறுக அணைத்துக் கொண்டான்.

''அதுதான் உண்மை என்றால் இந்த நிமிடத்தை வாழ்க்கையில் என்னால் மறக்கவே முடியாது.'' ராஜசேகர் சொன்னான்.

''எனக்கும்.''

''நம் இருவருக்குமிடையே இருந்த கருத்து வேற்றுமைகள் முழுவதுமாக நீங்கிவிட்டாற்போல் தானே. இனிமேல் இப்படி நடக்காது இல்லையா?''

''ஒருநாளும் நடக்காது. பிராமிஸ்!''

''எனக்கு இவ்வளவு வேதனையைத் தந்தாயே. உன்னை எப்படி அழைப்பது? குட்டிப் பிசாசு என்று அழைக்கட்டுமா?''

''ஜெயா என்று.''

''அன்னிக்கு நினைவு தப்பிவிட்ட உன்னை பிரசாத் இருகரங்களில் தூக்கிச்சென்றபோது எவ்வளவு வேதனையை அனுபவித்தேன் தெரியுமா?''

''அதைவிட இருமடங்கு வேதனையை நான் அனுபவித்து விட்டேன்.'' ஜெயந்தி அவன் அணைப்பில் கட்டுண்டு போனவளாய் சொன்னாள்.

''இனி ஒருநாளும் என்னை தனிமையில் விடாதீங்க. பயங்கரமான யோசனைகள் அலைக்கழித்து என்னை பைத்தியமாக்கிவிடும்.''

''அந்த பயம் உனக்கு வேண்டவே வேண்டாம். இனி உன்னை தனியாக விடவே மாட்டேன். போதுமா.'' ஜெயந்தியின் கன்னத்தை வருடிவிட்டான்.

ரொம்ப நேரம் அப்படியே உட்கார்ந்து இருந்தார்கள்.

''ஒரு நிமிடம் இரு. நீ க்ஷேமமாக வந்து சேர்ந்துவிட்டாய் என்று லக்ஷ்மிக்கு டெலிகிராம் கொடுத்துவிடுகிறேன்.''

''நாயரை போகச் சொல்லுங்க'' அவனை எழுந்துகொள்ள விடாமல் மடியில் முகத்தை புதைத்துக் கொண்டாள்.

# 54

மறுநாள் மாலை நேரம். ஜெயந்தி நிலைக்கண்ணாடியின் முன் அமர்ந்து தலையை வாரிக்கொண்டிருந்தாள். ராஜசேகரின் பயணம் நான்கு நாட்களுக்கு ஒத்திப் போடப்பட்டது. ஜெயந்தியையும் உடன் அழைத்துப் போவதற்காக ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தான்.

அறையின் உள்ளே வந்த வாசு ''அம்மா! உங்களுக்கு கடிதம் வந்திருக்கு'' என்று கவர் ஒன்றை கொடுத்துவிட்டு போனான்.

பிரசாதாக இருக்குமோ. ஜெயந்தி உரையின் மீது இருந்த முகவரியைப் பார்த்தாள். ஜெயந்தி கேராஃப் விஜயலஷ்மி என்று இருந்தது. சென்னையிலிருந்து ரிடைரக்ட் ஆகி வந்திருந்தது. யாராக இருக்கும் என்று யோசித்தவாறே உரையிலிருந்து கடிதத்தை வெளியில் எடுத்தாள். ரொம்ப பெரிய கடிதம். சட்டென்று கடைசிப் பக்கத்தை புரட்டிப் பார்த்தாள். ராஜசேகர் என்று இருந்தது. கடிதம் கிடைக்கவில்லையா என்று ராஜசேகர் மறுபடியும் மறுபடியும் கேட்டானே. இந்தக் கடிதம்தானோ. அப்படி என்னதான் எழுதியிருப்பான்?

கட்டிலில் அமர்ந்து தலையணையில் சாய்ந்து கொண்டு கவனமாக படிக்கத் தொடங்கினாள்.

ஜெயந்தீ,



நேற்றுதான் உன் கல்யாணப்பத்திரிகை வந்தது. திருமணத்திற்கு என்னால் வரமுடியுமோ இல்லையோ தெரியாது. இரண்டு மூன்று நாட்களில் வெளியூருக்கு கிளம்புகிறேன். எப்போ திரும்பி வருவேனோ தெரியாது. மறுபடியும் இங்கே வருவேனோ இல்லையோ அதுவும் தெரியாது. ஏன் என்றால் நான் திரும்பி வந்தால் சந்தோஷப்படுபவர்களோ, வரவில்லை என்றால் வருத்தப்படுபவர்களோ இங்கே யாருமே இல்லை.

ஜெயந்தீ! உன்னிடமிருந்து சாசுவதமாக பிரிந்து போகும்முன் சில விஷயங்களை சொல்ல வேண்டும். அவற்றை தெரிந்து கொண்ட பிறகாவது எதிர்காலத்தில் என்னிக்காவது உனக்கு என் நினைவு வந்தால் வெறுப்புக்கு பதில் இரக்கம் ஏற்படக்கூடும் என்று நினைக்கிறேன்.

அதான் இவ்வளவு நீண்ட கடிதம் எழுதுகிறேன்.

சின்னவயது முதல் மனதளவில் தனிமையில் வாழ்ந்து வந்தேன். பன்னிரெண்டாவது வயதில் அம்மா இறந்து விட்டாள். டாக்டர் சுப்பரமணியம் குடும்பத்தினரை தவிர எங்களுக்கு நெருங்கியவர்களோ, நண்பர்களோ யாருமே இருந்ததில்லை. சீதாவைத் தவிர எனக்கு நண்பர்களே இருந்ததில்லை. அம்மா என்னை யாருடனும் பழக அனுமதித்ததும் இல்லை.

அம்மா இறந்த பிறகு என்னுடைய உலகம் மேலும் குறுகிவிட்டது. வெறுமை என்னை சூழ்ந்துகொண்டது. அம்மாவின் மறைவு அப்பாவை ரொம்ப பாதித்து விட்டது. வியாபாரத்தில் கவனம் செலுத்தாததால் தொடர்ந்து நஷ்டம் வந்தது.

கல்லூரிக்கு போன பிறகும் என்னால் பத்து பேருடன் கலகலப்பாக பழகமுடியவில்லை. என் படிப்பு உண்டு நான் உண்டு என்று இருந்து வந்தேன். அந்த சமயத்தில்தான் ரேகாவின் அறிமுகம் கிடைத்தது. ரேகா வலுக்கட்டாயமாக என்னை கல்லூரி விழாக்களில் போட்டிகளில் பங்கெடுத்துக் கொள்ளச் செய்தாள்.

''மேலுக்கு தென்படும் உன் கம்பீரம் எல்லாம் வேஷம்தான். அதையும் தாண்டி பார்த்தால் உன்னை விட கலகலப்பாக யாரும் இருக்கமாட்டார்கள்'' என்று ரேகா அடிக்கடி சொல்லுவாள்.

என்னுடைய படிப்பு முடிந்துவிட்டது. அப்பா பிசிநெஸ் முழுவதையும் என்னிடம் ஒப்படைத்தார். ரேகாவை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் டாக்டர் வீட்டிலும், அப்பாவும் கீதாவுக்கும் எனக்கும் முடிச்சு போட்டு அவளை என் வருங்கால மனைவியாக பேச ஆரம்பித்து விட்டார்கள். அவர்களை எதிர்த்து பேசும் துணிச்சல் எனக்கு இருக்கவில்லை.

அந்த சூழ்நிலையில் மாரடைப்பு வந்து அப்பா இறந்து விட்டார். எனக்கு இருந்த ஒரே ஒரு பந்தமும் அறுந்துவிட்டது. வியாபாரம் சரியாக நடக்காததால் நிறையக்கடன் இருந்தது. அவற்றை தீர்க்க வேண்டும். அப்பாவின் பெயரை நிலைநாட்ட வேண்டும் என்ற லட்சிய வெறியுடன் ராப்பகலாக உழைத்தேன். எப்படியோ நினைத்ததை சாதித்துவிட்டேன். கடன்களை தீர்த்து விட்டேன். வியாபாரத்தை முன்னுக்கு கொண்டுவர மேலும் மேலும் உழைத்தேன். அந்த சமயத்தில்தான் என் உடல்நலம் பாதிக்கப்பட்டது. அடிக்கடி ஜுரம் வந்து கொண்டிருந்தது. உடம்பும் இளைத்துக்கொண்டே வந்தது. நேரத்திற்கு சாப்பிடாமல் வேலை செய்ததால் ஏற்பட்ட களைப்பு என்று அலட்சியமாக இருந்துவிட்டேன்.

ரேகாவுடன் நான் நெருக்கமாக பழகியதை டாக்டர் வீட்டில் விரும்பவில்லை. எங்கள் வீட்டுக்கு வருவதை நிறுத்தி விட்டார்கள்.

என் உடல்நலம் நாளுக்கு நாள் மோசமடைந்தது. டாக்டரிடம் காட்டியபோதுதான் அந்த பயங்கரமான உண்மை வெளிப்பட்டது. காசநோய் தாக்கிதால் ஒரு நுரையீரல் பழுதடைந்து விட்டது. மற்றதும் பாதிக்கப்பட்டு இருக்கிறது



என்று டாக்டர் தெரிவித்தார். வேறுவழியில்லாததால் மதனபள்ளி சானிடோரியத்திற்கு சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டேன். ஏறத்தாழ ஒருவருட காலம் அங்கே தங்கியிருந்தேன். அந்த கால கட்டத்தில் ரேகாவின் அன்பும், நட்பும் கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கின. என்னை பார்க்க வரவேண்டும் என்று இருந்தாலும் பெற்றோர்கள் சம்மதிக்கவில்லை என்று கடிதம் எழுதினாள். ஆனால் எனக்குத் தெரியும். அவர்கள் வீட்டில் ரேகாவின் பேச்சுக்கு யாரும் மறுப்பு சொல்ல மாட்டார்கள்.

அந்த இருண்ட நாட்களில் கீதா எனக்கு துணையாக நின்றாள். டாக்டரும் பழசை மறந்துவிட்டு மறுபடியும் என்னுடன் நட்பாக இருக்கத் தொடங்கினார். அந்த நாட்களில் கீதா காட்டிய அன்பு, அனுசரணை, ஊக்கம் அளிக்கும் விதமாக அவள் பேசியது.... இப்பொழுது நினைத்துப் பார்த்தாம் என் விழிகளில் நீர் நிறைந்துவிடும்.

அதுவரையில் கீதாவிடம் எனக்கு நட்பு ரீதியான விருப்பம் தான் இருந்தது. அந்த விருப்பத்தை தன் அனுசரணையான நடத்தையால் அன்பாக மாற்றிவிட்டாள்.

உயிர்மேல் ஆசையை துறந்துவிட்ட நிலையில் சானிடோரி யத்திற்கு சென்ற நான் முழு ஆரோக்கியத்துடனும், இருமடங்கு உற்சாகத்துடனும் திரும்பி வந்தேன். வந்ததும் தெரிந்தது ரேகாவுக்கு பணக்காரன் ஒருவனுடன் திருமணம் முடிந்துவிட்டது என்று. எனக்கு கொஞ்சம்கூட வேதனை ஏற்படவில்லை. இளமை யில் ஏற்பட்ட வெறும் ஈர்ப்புத்தான் அது என்று உணர்ந்து விட்டேன்.

கீதாவிடம் எனக்கு ஈர்ப்பு இல்லாவிட்டாலும் அபிமானம் இருந்தது. அவளைத் திருமணம் செய்துகொள்ள சம்மதித்தேன். இன்னும் இரண்டு மாதங்களில் திருமணம் எனும்போது திடீரென்று கீதா இறந்துபோனாள். சில மனிதர்களை இழந்த பிறகுதான் அவர்களுடைய பாதிப்பு நம்மீது எந்த அளவுக்கு

இருந்தது என்று புரியும். என் விஷயத்தில் அது முற்றிலும் உண்மையாகி விட்டது. அந்த வெறுமையை என்னால் என்றுமே போக்கமுடியாதோ என்று நினைத்தேன்.

பிசினெஸ் தவிர எனக்கு வேறு உலகம் இல்லாமல் போய்விட்டது. என் கவனத்தை முழுவதுமாக வியாபாரத்தில் செலுத்தியதன் விளைவு! நான் தொட்டது பொன்னாக துலங்கத் தொடங்கியது. நாலா பக்கத்திலிருந்து மழையாய் பொழிந்து கொண்டிருந்த பணத்தை என்ன செய்வது? எப்படி செலவழிப்பது என்று புரியவில்லை. நன்கொடைகளை வாரி வழங்கினேன். அதன் விளைவு மக்களுக்கு இடையே விரைவில் புகழ்பெற்று விட்டேன்.எல்லோரும் என்னுடைய நட்பை பெற தவித்தார்கள். முக்கியமாக பெண்களை பெற்ற பெற்றோர் என்னுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள போட்டி போட்டார்கள்.

எத்தனை பிசியாக இருந்தாலும் தனிமை என்னைவிட்டு போகவே இல்லை. அதான் எல்லோருடனும் நட்பாக இருக்க விரும்பினேன். இந்த சூழ்நிலையில் ரேகா என்னிடம் வந்தாள். கடனில் மூழ்கியிருந்த குடும்பத்தை மீட்பதற்காகத்தான் திருமணம் செய்துகொண்டதாகவும், அந்த திருமணத்தில் தனக்கு விருப்பமே இல்லை என்றும் புலம்பினாள். வாழ்க்கையே வியர்த்தமாகி விட்டதாக அழுதாள்.

ரேகா என்னுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள பலவிதமாக முயற்சி செய்தாள். அந்த முயற்சியில் அவளால் என்றுமே வெற்றி பெறமுடியாது என்று எனக்குத் தெரியும். ஏற்கனவே எங்கள் அறிமுகத்தைப் பற்றி தெரிந்தவர்கள் இந்த விஷயத்தை அவ்வளவாக பொருட்படுத்தவில்லை. ஆனால் மற்றவர்கள் எனக்கும் ரேகாவுக்கும் இடையே உறவு இருப்பதாக நம்பத் தொடங்கினார்கள்.

அந்த சமயத்தில்தான் உன்னுடன் அறிமுகம் ஏற்பட்டது. அந்தநாள் என் நினைவில் இப்போதும் பசுமையாக இருக்கிறது.



அன்றுதான் பெங்களூரிலிருந்து திரும்பி வந்தேன். களைத்துப்போன மனதிற்கு மாறுதலாக இருக்கும் என்று நினைத்து வனிதாவிஹாருக்கு வந்தேன்.

நாட்டிய நிகழ்ச்சி தொடங்கிவிட்டிருந்தது. உள்ளேபோனால் மக்கள் கவனம் என் பக்கம் திரும்பும். அதை விரும்பாததால் முதல் வகுப்பின் நுழைவாயிலில் நின்றுகொண்டு நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பவும் உன்னை கவனிக்க வில்லை. நிகழ்ச்சி முடியும் நேரம். நீ திடீரென்று எழுந்து பின்னால் திரும்பி ''உள்ளே போய் உட்காருங்க'' என்றாய். இருட்டில் நின்றிருந்த எனக்கு வெளிச்சத்தில் உன்முகம் தெளிவாக தென்பட்டது. உன்னைப் பார்த்ததும் திடுக்கிட்டேன். கீதாவின் ஜாடை உன்னிடம் நிறைய இருந்தது.ஆனால் உன் கண்களில் தென்பட்ட உயிரோட்டம் கீதாவிடம் இருக்கவில்லை. செதுக்கிய சிற்பம்போல் இருந்த உன் தோற்றம் என் மனதில் அழியாத முத்திரையாக பதிந்துவிட்டது. கீதா அமைதியான நீரோடை என்றால் காட்டாறு போன்ற சுபாவம் உனக்கு.

''நான் உள்ளே போகப் போவதில்லை'' என்று சொன்னதும் நீ மறுபடியும் நாற்காலியில் அமர்ந்துகொண்டு நிகழ்ச்சியை பார்ப்பதில் ஆழ்ந்துவிட்டாய். ஆனால் என் பார்வை உன்மீதே இருந்தது. நீ யாரென்று தெரிந்துகொள்ள வேண்டும் என்று என் உடலில் ஒவ்வொரு அணுவும் துடித்ததை நீ அறிந்திருக்க நியாயம் இல்லை. நிகழ்ச்சி முடிந்ததும் உன்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள நினைக்கும் போதே சுமித்ரா வந்துவிட்டாள். வனிதா விஹாரின் புது செகரெட்ரி என்று உன்னை அறிமுகப்படுத்தி வைத்தாள். உன்னிடம் மேலும் பேச வேண்டும் என்று துடியாய் துடித்த மனதை கட்டுப்படுத்திக்கொண்டு சுமித்ராவுடன் போய் விட்டேன்.

நிகழ்ச்சி முடிந்தபிறகு சுமித்ரா உன்னை எஞ்சிய வேலைகளை முடித்தபிறகு வீட்டுக்குக் கிளம்பச் சொன்னபோது

உன் முகத்தில் தென்பட்ட களைப்பு என்னுள் இரக்கத்தை ஏற்படுத்தியது. யார் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்ற தயக்கத்தையும் விட்டுவிட்டு நான் துணையிருப்பதாக சொன்னேன்.

உன்னை ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு வேலையாட்களை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தேன். தொலைவில் நின்றவாறு உன்னையே கவனித்துக் கொண்டிருந்தேன். சீதாவின் சாயலில் இருப்பதாலோ என்னவோ புதியநபரை பார்ப்பதாக தோன்றவில்லை.

வேலையை முடித்துக்கொண்டு அருகில் வந்தபோது நீ நாற்காலியில் பின்னால் தலையை சாய்த்து தூங்கிக் கொண்டிருந்தாய். தட்டி எழுப்புவோம் என்று குனிந்தபோது என் கையை பலமாக பற்றிக்கொண்டாய். அந்தத்தொடுகை என் மனதில் எத்தனை இனிமையான உணர்வுகளை தட்டி எழுப்பியதோ உனக்கெப்படி தெரியும்.?

உன் வீட்டு அருகில் உன்னை இறக்கிவிட்டு காரை கிளப்பிக் கொண்டிருந்தேன். நான் யாரென்று தெரிந்துகொள்ளும் ஆர்வத்தில் நீ கேட்டபோது என் பெயரைச் சொன்னேன். பெயரைக் கேட்டதும் உன் கண்களில் தென்பட்ட பயம்கலந்த வியப்பை பார்த்தபோது எல்லை மீறி நடந்துகொண்டு விட்டேனோ என்று நினைத்தேன். என்னைப்பற்றி வெளியில் எந்தவிதமாக பேசிக் கொள்கிறார்களோ எனக்கு நன்றாகவே தெரியும். அவை ஏற்கனவே உன் காதுவரையில் எட்டியிருந்தால் அன்று நான் உன்னிடம் உரிமையாக நடந்து கொண்டதை எப்படி எடுத்துக் கொள்வாயோ என்ற பயந்தேன்.

அந்த பயத்தில்தான் மறுநாளே வனிதா விஹாருக்கு வந்து உன்னைச் சந்திக்க வேண்டும் என்று மனம் தவித்தாலும் கட்டுப்படுத்திக் கொண்டேன். உன்னிடம் ஆர்வம் காட்டுகிறேன் என்று தெரிந்தால் ரேகா போன்றவர்கள் சும்மா இருக்க



மாட்டார்கள். உன்னை வேலையைவிட்டு நீக்கினாலும் நீக்குவார்கள். அதான் யதேச்சையாக கேட்பதுபோல் சுமித்ரா மூலமாக உன்னைப்பற்றி தெரிந்துகொண்டுதான் இருந்தேன்.

வர்மா உன்னிடம் தவறாக நடந்துகொள்ள முயற்சி செய்ததை ரேகா மூலமாக கேள்விப்பட்டபோது கொதித்துப் போய்விட்டேன். அந்த வேலையில் இருந்தால் இதுபோன்ற சங்கடங்கள் ஏற்படத்தான் செய்யும். உடனே உனக்கு வேறு வேலையை பார்த்துதர வேண்டும் என்று முடிவு செய்தேன். அன்று உன்னைப் பார்த்து பேசவேண்டும் என்றதான் கிளம்பி வந்தேன். கேட் அருகிலேயே உன்னைச் சந்தித்தேன்.

காரில் வரும்போது நீ வேலையை ராஜிநாமா செய்து விட்டதாக தெரிந்தபோது எனக்கு செகரெட்ரியாக இருக்கச் சொன்னேன். எனக்குத் தெரியும். உன்னை செகரெட்ரியாக வைத்துக்கொண்டால் வனிதாவிஹார் நிறுவனத்தினர் போர் முழக்கம் தொடுக்காத குறையாய் என்னிடம் பகைமை கொண்டாடுவார்கள். முக்கியமாக ரேகா சும்மா இருக்கமாட்டாள். எனக்கு பிடித்த நபருக்கு நான் வேலை தருகிறேன். மறுப்பு சொல்வதற்கு இவர்கள் யார் என்ற ஆணவம் எனக்கு.

என்னுடைய பயம் எல்லாம் நீ சம்மதிக்க வேண்டுமே என்றுதான். மறுநாள் கார் அனுப்பியதும் நீ வந்தாய். உனக்கு வேலை ரொம்ப அவசியம் என்பதை புரிந்துகொண்டேன். இந்த வாய்ப்பை நழுவவிடக் கூடாது என்று முடிவு செய்தேன். எப்படியாவது உன்னிடம் நட்பு ஏற்படுத்திக் கொண்டு உன் மனதில் இடம் பிடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.

நீ என்னுடைய செகரெட்ரியாக வந்தபிறகு என் வாழ்க்கையில் புதிய ஒளி ஏற்பட்டதுபோல் இருந்தது. உன் அழகும், அப்பாவித்தனமான பேச்சும் என்னை ஈர்த்துவிட்டன. என்னை அறியாமலேயே என் மனதில் குடிகொண்டிருந்த தனிமை

மாயமாக மறைந்துவிட்டது. என்னிக்காவது உன்னை என்பக்கம் திருப்பிக்கொள்ள முடியும் என்ற தைரியம் ஏற்பட்டது.

உன் பிறந்த நாளன்று திடீரென்று சினிமா ஹாலில் நான் அனுப்பிய புடவையில் உன்னைப் பார்த்தபோது உண்மையிலேயே என்மனம் நிலை தடுமாறிவிட்டது. அழகுப் பதுமையாய்; சுடர்விளக்காய் ஜொலித்துக்கொண்டு இருந்தாய். எத்தனையோ பேருக்கு பலவிதமான பரிசுகளை கொடுத்திருக்கிறேன் ஆனால் அன்று ஏற்பட்ட மனநிறைவு என்றுமே ஏற்பட்டது இல்லை.

அன்று இரவு ரூஃப் கார்டெனில் கைப்பிடி சுவர் அருகில் நின்றவாறு நீ கீழே பார்த்துக்கொண்டு இருந்தாய். பின்னாலேயே வந்து நின்று கொண்டேன். அப்படியே உன்னைத் தூக்கிக் கொண்டு எங்கேயாவது போய்விட்டால் என்ன என்று தோன்றியது. இன்னும் கொஞ்ச நேரம் அங்கே இருந்தால் என் மனம் நிலைதடுமாறிவிடும் என்று தோன்றியதால் உடனே உன்னையும் அழைத்துக்கொண்டு அந்த இடத்தை விட்டு வெளியேறினேன்.

ரொம்ப நாட்களுக்கு இந்த கண்ணாமூச்சி ஆடமுடியாது என்று தோன்றியது. சோவியத் குழுவினருக்கு பார்ட்டி கொடுத்த அன்று உன்னை எல்லோருக்கும் அறிமுகப்படுத்திவிட்டு நீதான் என் வருங்கால மனைவி என்று தெரிவிக்க முடிவு செய்தேன். ஆனால் அன்று மாலையில் உன் புடவை விஷயமாக நான் கமெண்ட் செய்தபோது உன்முகம் வாடிவிட்டது. ஆனால் பார்ட்டி முடிந்த பிறகு என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் போகும் அளவுக்கு நீ அந்த விஷயத்தை சீரியஸாக எடுத்துக் கொள்வாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உண்மையிலேயே முதல் முறையாக உன்மீது கோபம் வந்தது.

உன்னை செகரெட்ரியாக எடுத்துக் கொண்டதற்கு ரேகா மற்றவர்கள் என்னை கேள்வி கேட்டு துளைத்தார்கள். தெரிந்தவர்



ஒருவர் சிபாரிசு செய்ததால் மறுப்பு சொல்ல முடியவில்லை என்ற பொய்யைச் சொன்னேன். அப்படியும் அவர்களுடைய சந்தேகம் முழுவதுமாக நீங்கவில்லை. அதுவும் எனக்குத் தெரியும்.

சோவியத் பார்ட்டி நடந்த இரண்டாவது நாள் ரேகா வீட்டுக்கு வந்தாள். செகரெட்ரியாக இருப்பவளிடம் இவ்வளவு கரிசனம் காட்டுவதற்கான காரணம் என்ன என்று கேட்டாள். இரக்கம் தவிர வேறு எதுவும் இல்லை என்று சொன்னேன். நான் உன்னை விரும்புவது உண்மைதான். ஆனால் உன் மனதில் என்ன இருக்கு என்ற தெரியாதே? ஏற்கனவே நீ வேறு யாரையாவது விரும்பியிருக்கலாம் இல்லையா.

ரேகா தான் மனதளவில் நரகத்தில் இருப்பதாகவும், கணவனால் எந்த சந்தோஷமும் கிடைக்கவில்லை என்றும் புலம்பினாள். நான் சம்மதித்தால் கணவனை விவாகரத்து செய்துவிட்டு வந்து விடுவதாகவும், இருவரும் திருமணம் செய்துகொள்வோம் என்றும் வாய்க்கு வந்தபடி பேசத் தொடங்கினாள். அவளை கடிந்து கொண்டதோடு அதுபோன்ற எண்ணத்தை மனதில் அருகில் கூட வரவிடாதே என்று எச்சரித்தேன்.

திடீரென்று ரேகா என் மார்பில் சாய்ந்து ஹிஸ்டீரியா வந்தவள்போல் அழத் தொடங்கினாள். எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. நிலைமையை புரிந்துகொண்டு வாழ்க்கையை சீர்படுத்திக்கொள் என்றேன். ஒரு நண்பனாக அவளுக்கு எப்போதும் துணையாக இருப்பேன் என்று சொல்லி சமாதானப் படுத்த முயன்றேன்.

சற்று நேரத்தில் ரேகாவின் அழுகை தானாக குறைந்தது. "உன்னை இழந்துவிடுவேனோ என்ற பயம் என்னை பைத்தியமாக்குகிறது. அதான் இப்படி நடந்து கொண்டேன்" என்றாள்.

நான் பதில் சொல்லவில்லை. அவன் என்னிடம் காட்டும் இந்த உரிமைக்கு எப்படி முற்றுப்புள்ளி வைப்பது என்று நான் யோசித்துக் கொண்டு இருக்கும் போதே நீ உள்ளே வந்தாய். நீ பார்த்த அந்த காட்சி உன் மனதில் எப்படிப்பட்ட முத்திரையை பதித்து இருக்குமோ என்று தெரியாத அளவுக்கு நான் முட்டாள் இல்லை.

ரேகா போனபிறகு நம் இருவருக்கும் இடையே நடந்த உரையாடல் உனக்கு நினைவில் இருக்கும் என்று நம்புகிறேன். அனாவசியமாக என்னை தூண்டிவிட்டாய்.

அன்று உன்னை வீட்டில் இறக்கிவிட்ட பிறகு நீ மறுபடியும் வேலைக்கு வர மாட்டாயோ என்று பயந்தேன். அதேபோல் மறுநாள் காரை அனுப்பியபோது உடல்நலம் சரியில்லை என்று காரை திருப்பி அனுப்பிவிட்டாய். உண்மையிலேயே உனக்கு உடல்நிலை சரியில்லை என்பதை நான் நம்பவில்லை. எப்படியோ துணிச்சலை வரவழைத்துக்கொண்டு உங்க வீட்டுக்குச் சென்றேன். நான் மட்டும் தாமதமாக வந்திருந்தால்! நினைக்கும் போதே என்மனம் நடுங்குகிறது.

உடனே உன்னை ஆஸ்பத்திரியில் சேர்த்தேன். ஆப்ரேஷன் நல்லபடியாக முடிந்துவிட்டது. மறுநாள் பாட்டியை வீட்டில் கொண்டு விடுவதற்காக போயிருந்தேன்.

''உட்காரு தம்பி.'' நாற்காலியை காட்டிவிட்டு பாட்டி உள்ளே போய்விட்டாள். ஹாலை பரிசீலித்துக் கொண்டிருந்த போது யதேச்சையாக சுவற்றில் மாட்டியிருந்த போட்டோவைப் பார்த்தேன். திகைத்துப் போனவனாய் அருகில் சென்று பார்த்தேன். சந்தேகமே இல்லை. அதில் இருப்பது அம்மாவே தான். என் அம்மாவின் போட்டோ உங்க வீட்டில் இருப்பானேன்? எனக்கு புரியவில்லை.

அதற்குள் பாட்டி காபி டம்பளருடன் வந்தாள்.



''இந்த போட்டோ ஏன் இங்கே இருக்கு?'' பதட்டம் கலந்த குரலில் கேட்டேன்.

நான் இப்படி கேட்டது பாட்டிக்கு வித்தியாசமாக தோன்றியிருக்க வேண்டும். ''எங்க ஃபேமிலி போட்டோ எங்கள் வீட்டில் இல்லாமல் வேறு எங்கே இருக்கும்?'' என்றாள். ''இது என் மகன், நடுவில் உட்கார்ந்திருப்பது நான்தான்.''

''இவர்... இவர்தான் ஜெயந்தியின் தந்தையா?''

''ஆமாம். வலதுபக்கம் இருப்பது என் அக்காவின் மகள். பெயர் ராஜலஷ்மி.''

மகிழ்ச்சியின் மிகுதியால் வீலென்று கத்தத் தோன்றியது. அந்த போட்டோவை எடுத்துக் கொண்டு பாட்டியின் அருகில் சென்றேன். ''ஆனால்... இந்த போட்டோவில் இருப்பது என்னுடைய அம்மா. இதே போட்டோ எங்க வீட்டிலும் இருக்கு'' என்றேன்.

பாட்டி திகைப்புடன் பார்த்தாள்.

''உண்மைதான் சொல்கிறேன். ராஜலஷ்மி என்னுடைய அம்மா. எங்க வீட்டுக்கு வந்தால் காட்டுகிறேன். மைகாட்! ஜெயந்தி எனக்கு....'' என்னால் வார்த்தையை முடிக்கக்கூட முடியவில்லை.

பிறகு பாட்டி மூலம் விஷயம் தெரிந்தது. பெற்றோர்கள் இறந்து போனதால் அம்மா சிறுவயது முதல் அத்தை வீட்டில் வளர்ந்து வந்தாள். அக்காமகளை தானே வளர்ப்பதாக பாட்டி கெஞ்சிய போதும் அந்த அத்தை ஒப்புக்கொள்ளவில்லையாம். ரொம்ப பொல்லாதவளாம். அம்மாவை ரொம்ப கொடுமைப் படுத்தியிருக்கிறாள். ஆனால் உங்க அப்பா என் அம்மாவிடம் ரொம்ப பாசமாக இருந்தாராம்.

அம்மாவுக்கு பதினெட்டு வயது நிரம்பியதும் பணத்திற்கு ஆசைப்பட்டு கிழவன் ஒருவனுக்கு இரண்டாம் தாரமாக மணமுடிக்க அத்தை முடிவு செய்தாளாம். அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அம்மா பக்கத்து வீட்டு இளைஞனுடன் ஓடிவிட்டாளாம். இருவரும் திருமணம் செய்துகொண்டு ஹைதராபாத்லேயே குடியேறிவிட்டார்கள். தங்கள் இருப்பிடம் யாருக்கும் தெரியாமல் இருப்பதற்கு மற்றவர்களிடம் அதிகம் பழகாமல் இருந்தார்கள்.

பாட்டி இந்த விஷயங்கள் எல்லாம் சொன்ன பிறகுதான் என் பெற்றோர் யாருடனும் அதிகம் பேசாமல், உறவினர்களின் போக்குவரத்தும் இல்லாமல் வாழ்ந்த காரணம் புரிந்தது.

நான் இந்த அளவுக்கு விரும்பும் நபர் யாரோ இல்லை. என்னுடைய மாமாவின் மகள்தான். என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லாமல் போய்விட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக அம்மாவுக்குப் பிறகு அதேபோன்று அன்பு காட்டக் கூடிய பாட்டி எனக்குக் கிடைத்தாள்.

உன்மீது எனக்கு உரிமையிருக்கிறது என்ற எண்ணத்துடன்தான் உன்னை என் வீட்டுக்கு அழைத்து வந்தேன். ஆனால் இந்த விஷயத்தை உன்னிடம் சொல்லவேண்டாம் என்று பாட்டியிடம் வேண்டிக்கொண்டேன். நீ எப்படியும் என்னுடையவள்தான். ஆனால் இந்த உறவுமுறை தெரிந்து பாட்டியின் விருப்பத்தின் பேரில் அல்லாமல் நீயாக என்னை விரும்ப வேண்டும். அதைத்தான் நான் விரும்பினேன். என்னுடைய தனித்தன்மையினால் ஈர்க்கப்பட்டு அன்பு செலுத்தக் கூடியவள் எனக்கு மனைவியாக வரவேண்டும் என்று ஆசைப்பட்டேன்.

அந்த எதிர்பார்ப்பில் பெரிய இடி விழுந்தது. திடீரென்று பாட்டி இறந்துவிட்டாள். நானாகவும் உன்னிடம் சொல்ல முடியாமல் தவித்தேன். எப்படியாவது சொல்லிவிட வேண்டும் என்று முடிவுசெய்து கொண்டு உன்னிடம் வந்தபோது சூழ்நிலையும் சந்தர்ப்பங்களும் தடுத்துவிட்டன. கடைசியில் நீ என் கையில் ராக்கி கட்ட வந்தபோது உன்னைத் திருமணம் செய்து கொள்வதாக சொல்லி விட்டேன்.



மறுநாள் காலையில் விஜயவாடா போகவேண்டிய வேலை இருந்தது. நான் போகவில்லை என்றால் அந்த வேலை நடக்காது. வேலைமுடியும்போது இரவாகி விட்டது. மழையும் பெய்து கொண்டிருந்தது. பயணத்தை கைவிட்டு விடலாமா என்று நினைத்தாலும் உன்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் உடனே கிளம்பிவிட்டேன். திருமணத்திற்கு முன்னே உன்னிடம் நம் உறவுமுறைபற்றி தெரிவிப்பது நல்லது என்று தோன்றியது.

இரவு வேளை என்பதால் சாலையில் போக்குவரத்து அதிகம் இல்லை. டிரைவரிடம் காரை வேகமாக ஓட்டச் சொன்னேன். பின் சீட்டில் அமர்ந்து உன்னைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். எதிரே வந்த லாரி மோதியதுதான் தெரியும்.

மறுபடியும் விழிப்பு வந்தபோது ஆஸ்பத்திரியில் இருந்தேன். காலிலும், கையிலும் பலமான அடி. ஏறத்தாழ ஒரு மாதம் ஆஸ்பத்திரியில் இருந்தேன்.

நீ வீட்டைவிட்டு போய்விட்டாய் என்ற செய்தி இடியாய் என்னைத் தாக்கியது. உன்னை கடைசியாக பார்த்தது நாயர். கார் வேண்டாம் என்றும் பஸ்ஸில் போவதாக சொல்லிவிட்டு கிளம்பியதாக நாயர் தெரிவித்தான். நீ எங்கே போவதற்காக கிளம்பினாய் என்று யாருக்கும் தெரியவில்லை. நடுவில் எப்படி மாயமாக மறைந்தாய்? அந்த புதிரும் விடுபடவில்லை.

திருமணம் செய்துகொள்ளச் சொல்லி நீ கேட்டதாக சிவராமன் தெரிவித்தான். அப்பொழுதுதான் எனக்கு சந்தேகம் வந்தது. நீ என்னை திருமணம் செய்துகொள்ள விரும்பவில்லையோ என்று.

அதைப்பற்றி இப்பொ வருத்தப்பட்டு என்ன பயன், உன்னை தேடுவதற்காக பலவிதமாக முயற்சி செய்தேன் பலன்தான் கிடைக்கவில்லை. நீ இறந்து விட்டாயோ என்ற சந்தேகம் என் மனதில் வேருன்ற தொடங்கிவிட்டது.

ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்தேன். நீ கிளம்பிப்போய் ஒரு மாதத்திற்கும் மேல் ஆகி விட்டிருந்தது. ஒருநாள் மேஜை டிராயரில் எதையோ தேடப் போனபோது உன்னுடைய கடிதம் கிடைத்தது. அவசரமாக பிரித்து படித்தேன். உயிரே போய் விட்டதுபோல் இருந்தது எனக்கு.

நாயரை அழைத்துக் கேட்டபோது கடிதம் வந்ததே தனக்குத் தெரியாது என்றான். கடிதத்தை பெற்றுகொண்டது தான்தான் என்றும் எனக்கு அடிபட்டு ஆஸ்பத்திரிக்கும் வீட்டும் அலைந்து கொண்டிருந்ததில் மறந்து போய்விட்டதாகவும் வாசு ஒப்புக் கொண்டான். விதியை நொந்து கொள்வதை தவிர எனக்கு வேறுவழி தெரியவில்லை.

அன்று இரவே பெங்களூருக்கு புறப்பட்டேன். நீ தங்கியிருந்த ஹோட்டலில் விசாரித்தபோது அவர்களால் எந்த விபரத்தையும் சொல்ல முடியவில்லை. பத்துநாட்கள் அங்கேயே தங்கி பெங்களூர் முழுவதும் உனக்காக தேடினேன். ஏமாற்றம் தான் கிடைத்தது. வேடிக்கை என்னவென்றால் இரண்டு நாட்கள் பிரசாத் வீட்டிலும் தங்கியிருந்தேன். அவனும் உன்னைப்பற்றி எதுவும் சொல்லவில்லை. இதில் அவனுடைய தவறு எதுவும் இல்லை. நான் எந்த வேலையாய் வந்தேனோ அவனுக்கு எப்படித் தெரியும்?

கனத்த இதயத்துடன் ஹைதராபாத்க்கு திரும்பி வந்தேன். ஆஸ்பத்திரியில் இருந்ததால் உன் கடிதத்தை தாமதமாக பார்க்க நேர்ந்ததுஎன்ற உண்மை உனக்கெப்படி தெரியும்? என்றுமே தெரிய வாய்ப்பு இல்லை என்று நினைக்கும் போது ஏமாற்றமும், வேதனையும் என்னை சூழ்ந்துகொண்டன.



டாக்டர் வீட்டிலும், பரிமளா, சிவராமன் மற்றும் சுமதி வீட்டாருக்கும் தவிர மற்றவர்களுக்கு நீ வீட்டை விட்டு போன விஷயம் தெரியாது. மற்றவர்கள் கேட்டபோது உறவினர் வீட்டுக்கு போயிருப்பதாக சொன்னேன்.

ரேகா அடிக்கடி தொல்லை கொடுக்கத் தொடங்கினாள். பரிமளாவை திருமணம் செய்துகொள்ளும் எண்ணம் இல்லை என்றும், திருமணமே செய்துகொள்ளப் போவதில்லை என்றும் சொல்லி விட்டேன். தன் கணவரும், கருணாகரனும் பிஸிநெஸ்லிருந்து விலகிக் கொள்வார்கள் என்று மிரட்டினாள்.

அவர்கள் இருந்தாலும் விலகிக்கொண்டாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றும், இன்னும் சில நாட்களில் கம்பெனியை பம்பாய் சேட் ஒருவருக்கு விற்றுவிடப் போவதாகவும் சொன்னேன்.

கருணாகரன் வீட்டிலும் ரகளை நடந்தது. சிவராமனை தவிர யாரையும் மணக்க முடியாது என்று பரிமளா பிடிவாதம் பிடித்தாள். சிவராமனும் இப்பொ நல்ல நிலைமையில் இருக்கிறான். நானும் அவளை மணக்கப் போவதில்லை என்று சொல்லி விட்டேன். கருணாகரன் தம்பதிகளுக்கு பரிமளாவின் விருப்பத்திற்கு கீழ்படிய வேண்டியதாகிவிட்டது.

பிசிநெஸ் வேலையாக சென்னைக்கு வந்த எனக்கு கோபால் சகோதரி லக்ஷ்மியை பார்க்கவேண்டும்போல் இருந்தது. நேராக அவள் வீட்டுக்கு போனேன். லக்ஷ்மி அவ்வளவு பெருமையாக தன்னுடைய செகரெட்ரி என்று பறைசாற்றிக் கொண்டது உன்னைப்பற்றித்தான் என்று எனக்கெப்படி தெரியும்? அன்று இரவு என் பக்கத்து அறையில் குழந்தைகளுடன் உடல்நலம் சரியில்லாமல் படுத்திருந்த பெண் நீயாக இருப்பாய் என்று கனவில் கூட நினைக்கவில்லை.

அடுத்தமுறை சென்னைக்கு வந்தபோது லக்ஷ்மிக்கு போன் செய்தேன். பிரசாத் வந்திருப்பதாகவும் இரண்டு மூன்று நாட்கள்

இருப்பான் என்றும் சொன்னாள். பார்த்துவிட்டு வருவோம் என்று போனேன். எல்லோரும் சேர்ந்து பீச்சுக்கு போயிருப்பதாகவும் வரும் நேரம்தான் என்றும் சொன்னாள். அன்று இரவு அவர்களுடன் சேர்ந்து சாப்பிடவேண்டும் என்று வற்புறுத்தினாள்.

அந்த சமயத்தில் நீங்க வந்து விட்டீர்கள். லக்ஷ்மி உன்னை அறிமுகப்படுத்தியபோது பின்னால் திரும்பிப் பார்த்தேன். அங்கே உன்னைப் பார்த்ததும் என் கண்களை என்னால் நம்பவே முடிய வில்லை. ஒரே எட்டில் அருகில் சென்று உன்னை அப்படியே அணைத்துக் கொள்ளவேண்டும் என்று தவித்த மனதை கட்டுப் படுத்திக்கொண்டு ஓரடி உன்னை நோக்கி வைத்தேன். அதற்குள் நீ நினைவு தப்பி கீழே விழப்போனதும் பிரசாத் உன்னைத் தூக்கிக்கொண்டு மாடிக்கு செல்வதும் எல்லாம் நான் பார்த்துக் கொண்டு இருக்கும் போதே நடந்து முடிந்துவிட்டது.

உன்னை மாடியில் படுக்கவைத்துவிட்டு கீழே வந்த விஜயலக்ஷ்மி நீயும், பிரசாதும் ஒருவரை ஒருவர் விரும்புவ தாகவும், விரைவில் திருமணம் நடக்கப் போவதாகவும் தெரிவித் தாள். அதைக் கேட்டபிறகு என்னால் அங்கே ஒரு நிமிடம் கூட இருக்க முடியவில்லை. என்மனம் எரிமலையாய் கொந்தளித்துக் கொண்டிருந்தது. மறுபேச்சுக்கு வாய்ப்பு தராமல் லக்ஷ்மியிடம் அவசர அவசரமாக விடைபெற்றுக்கொண்டு கிளம்பிவிட்டேன். இன்னும் ஒரு நிமிடம் அங்கே இருந்தாலும் என்னையும் அறியாமல் ஏதாவது செய்துவிடுவேனோ என்று பயந்தேன். அங்கிருந்து நேராக ஏர்போர்ட்டுக்குச் சென்று பிளையிட்டை பிடித்து இங்கே வந்து விட்டேன்.

கொஞ்சம் கொஞ்சமாக என் கொந்தளிப்பு அடங்கியது. உன் வாழ்க்கையை முடிவு செய்ய நான் யாரு?

உன்னை எப்படி தெரியுமென்று விவரமாக தெரிவிக்கச் சொல்லி பிரசாதுக்கு கடிதம் போட்டேன். அவனும் நீ பிரகாஷுடன் பெங்களூருக்கு வந்தது முதல் நடந்த விஷயங்களை



விவரமாக எழுதியிருந்தான். அந்த நிமிடம் வரையில் இங்கே யாருக்கும் நீ பிரகாஷுடன் பெங்களூருக்குச் சென்ற விஷயம் தெரியாது. பிரகாஷ் பெங்களூரில் ஏதோ ஜுரம் வந்து இறந்து விட்டான் என்று சிவராமன் சொன்னதாக நினைவு.

உன்னுடைய தவறோ இல்லை என்னுடைய தவறோ நம் இருவருக்குமிடையே பெரிய இடைவெளி ஏற்பட்டுவிட்டது. இந்தப் பக்கத்திலிருந்து கையை நீட்டி உன் கரத்தை பற்றிக் கொள்ள என்னால் முடியும். ஆனால் அதை நீ விரும்பமாட்டாய். ஒரு விதமாக நீ கொடுத்துவைத்தவள் என்றே சொல்லலாம். அந்த சூழ்நிலையில் பிரசாத் போன்ற நல்ல மனிதனின் அறிமுகம் கிடைத்தது உன்னுடைய அதிர்ஷ்டம்தான்.

ஜெயந்தி! என் மனதில் இப்பொழுது எந்த விதமான வருத்தமோ, வேதனையோ இல்லை. நான் எப்போதும் உன்னு டையவன்தான். உன் நண்பனாக நினைத்துக் கொண்டாலும் சரி கார்டியன் என்று எடுத்துக்கொண்டாலும் சரி. உன் நலனில் அக்கறை கொண்ட மனிதனாக காலம் முழுவதும் உனக்கு உதவி செய்ய தயாராக இருக்கிறேன். இந்த வீட்டு வாசல் உனக்காக எப்போதும் திறந்தே இருக்கும். உன் குழந்தைகள் என் சொத்துக்கு வாரிசாக இருப்பார்கள். இதனால் உனக்கு எந்தவிதமான பாதிப்பும் இருக்காது. உன்னுடன் சமாதானமாக போவதைவிட எனக்கு வேறுவழி தெரியவில்லை. நீ ஏற்படுத்திய இந்த வெறுமையை போக்க யாராலும் முடியாது. உனக்கு நான் தேவையில்லை. ஆனால் நீ எனக்கு வேண்டும்.

ஜெயந்தி! காலங்காலமாய் கவிகள் பாடி வந்த காதல் என்ற உணர்வு இருக்கிறதே. அது ரொம்ப வேடிக்கையானது. மனிதனை சுயநலக்காரனாக மாற்றுவதும் இதுதான். மனதை வானம் போன்று விசாலமாக மாற்றவும் அதால் முடியும். பிரசாத் அன்று உன்னை மாடிக்கு தூக்கிச் செல்லும்போது அவனை கொலை செய்து விடலாமா என்ற அளவுக்கு ஆவேசம் ஏற்பட்டது உண்மைதான்.

ஆனால் இப்பொ எனக்கு அவனிடம் எந்த வெறுப்பும் இல்லை. மேலும் உன் அன்பை பெற்றுவிட்ட நபர் என்ற முறையில் அவனை வாழ்த்துகிறேன்.

நீ நலமாக வாழவேண்டும் என்று மனப்பூர்வமாக விரும்புகிறேன். உன்னை இழக்க நேர்ந்ததற்கு காரணம் எதுவாக இருந்தாலும் அந்த வேதனை என்னை வாழ்நாள் முழுவதும் விடப்போவதில்லை.

உன் திருமணத்திற்கு வரவேண்டும் என்று இருந்தாலும் மனதில் எந்த மூலையிலேயோ கொந்தளிப்பு இன்னும் அடங்கவில்லை. அது முழுவதுமாக அடங்கிவிட்டால் வருவேன். இல்லாவிட்டால் வரமாட்டேன். ஆனால் போகும் முன் உன்னை ஒருமுறை சந்திக்க வேண்டும் என்று விரும்புகிறேன். என்னைக் கண்டு ஒதுங்கிப் போகாமல் நாலு வார்த்தை பேசினால் அதுபோதும் எனக்கு.

உன் நினைவுகளை துணையாக்கிக் கொண்டு எஞ்சிய வாழ்க்கையை கழித்துவிடுவேன்.

ஆசிகளுடன்
ராஜசேகர்

பி.கு. : இந்தக் கடிதத்தை பிரசாதிடம் காட்டுவது அவசியம் என்று நீ நினைத்தால் உன் இஷ்டம். எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. உன்னைப்பற்றி நான் அவனிடம் விசாரித்த காரணம் அவனுக்குப் புரியும்.

கடிதத்தை படித்து முடிக்கும்போது ஜெயந்தியின் கண்கள் குளமாகியிருந்தன.

ராஜசேகர்!

அந்தப் பெயரை இப்பொ புதிதாக உச்சரிப்பது போல் தோன்றியது. கடிதத்தை பார்க்கவில்லையா என்று பல முறை



கேட்டது இதற்காகத்தானா? இந்த விஷயத்தை அவன் அப்போதே சொல்லியிருந்தால் இத்தனை குழப்பங்கள், பிரச்சனைகள் வந்திருக்காதோ.

இல்லை இல்லை. அவன் சொல்லாமல் இருந்ததுதான் சரி. தன்னுடைய தனித்தன்மையினால் ஈர்க்கப்பட்டு அன்பு செலுத்தக் கூடியவள் மனைவியாக வரவேண்டும் என்று குறிப்பிட்டு இருந்தானே. அவனுடைய எண்ணம் அதுதான் என்றால் அவன் தான் ஜெயித்தான்.

இந்தக் கடிதத்தை பார்ப்பதற்கு முன்பே தான் கிளம்பி வந்துவிட்டாள். ஜெயந்திக்கு கட்டிலை விட்டு எழுந்துகொள்ள வேண்டுமென்றே தோன்றவில்லை. தான் வருவது ஒருநாள் தாமதமாகியிருந்தால் ராஜசேகரை சாசுவதமாக இழந்துவிட்டிருப்பாள்.

''வாசு! நாயரை கொஞ்சம் கூப்பிடு.'' ஹாலில் ராஜசேகரின் குரல் கேட்டது.

ஜெயந்தி சட்டென்று கடிதத்தை தலையணை அடியில் மறைத்துவிட்டாள். எழுந்து வந்து கண்ணாடியின் அமர்ந்து தலையை வாரிக்கொள்ளத் தொடங்கினாள். அவள் இதயம் வேகமாக துடித்துக் கொண்டிருந்தது. உடலும், உள்ளமும் தவிப்புடன் அவன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. இப்பொழுதுதான் பார்க்கப் போகும் ராஜசேகர் புதியவன். முற்றிலும் புதியவன்.

உள்ளே வந்த ராஜசேகர் கோட்டை கழட்டிவிட்டு நாற்காலியில் அமர்ந்தான். குனிந்து ஷூக்களை கழற்ற தொடங்கினான்.

''இன்னும் நீ ரெடியாகவில்லையா? இத்தனை நேரம் என்ன செய்து கொண்டிருந்தாய்? இன்னும் அரைமணியில் அவர்கள் எல்லோரும் வரப்போகிறார்கள்.

''யாரெல்லாம் வரப் போகிறார்கள்?'' தன் குரல் தனக்கே வித்தியாசமாக தோன்றியது ஜெயந்திக்கு.

''டாக்டர் சுப்ரமணியம், கமலாமாமி, சிவராமன், பரிமளா, சுமதியின் குடும்பத்தினர்... எல்லோரும் உனக்கு நெருங்கியவர்கள்தான்.''

அவன் அருகில் செல்ல வேண்டும் என்ற விருப்பத்தை கட்டுப்படுத்துவது ஜெயந்திக்கு அசாத்தியமாக இருந்தது.

''எல்லா ஏற்பாடுகளும் முடித்துவிட்டன. நாளை இரவு கிளம்பி நேராக திருப்பதிக்கு போகிறோம்.''

''திருப்பதிக்குப் போய்?'' நாற்காலி மீது கிடந்த அவனுடைய கோட்டை கையில் எடுத்துக்கொண்டே கேட்டாள்.

''திருப்பதிக்கு போய்!'' ஜெயந்தியின் குரலை பின்பற்றி கிண்டலாக சொல்லிவிட்டு முறுவலித்தான்.

ஜெயந்தி மௌனமாக கோட்டை ஹேங்கரில் மாட்டினாள்.

''திருமணத்தை முடித்துக்கொண்டு அங்கிருந்து ஊட்டி, கொடைக்கானல் என்று ஊர் ஊராக சுற்றுவோம். சுற்றியது போதும் இனி வீடு திரும்புவோம் என்று நீ என்னை கெஞ்சும் வரையில்...''

ராஜசேகர் இன்னும் முழுவதுமாக சொல்லிமுடிக்கவில்லை. ஜெயந்தி மெதுவாக பின்னாலிருந்து அவன் கழுத்தைச் சுற்றி கைகளை கோர்த்து, தோளில் தலையை சாய்த்துக் கொண்டாள்.

''இதன் பொருள் என்னவென்று மகாராணி அவர்கள் வாயை திறந்து சொன்னால் அடியேன் புரிந்து கொள்கிறேன்.''

தோளில் சாய்ந்து கொண்டதால் தன் மீது விழுந்த ஜெயந்தியின் நீளமான முடியை பிடித்து இழுத்தான்.

ஜெயந்தியிடமிருந்து பதில் வரவில்லை.



''என்ன விஷயம் சொல்லு. மறுபடியும் மூட் மாறிவிட்டதா? சென்னைக்கு போக வேண்டும் என்று நினைக்கிறாயா?'' கையை நீட்டி ஜெயந்தியின் தோளைப் பற்றி தன்பக்கம் திருப்பிக் கொண்டான்.

''மைகாட்! ஜெயந்தி!'' ராஜசேகர் பதட்டமடைந்தான்.

ஜெயந்தி சட்டென்று அவன் மார்பில் முகத்தை புதைத்துக் கொண்டாள்.

''ஏன்? என்ன நடந்தது?''

''நீங்க சென்னைக்கு எழுதியிருந்த கடிதம் ரீடைரக்ட் ஆகி இன்னிக்கு வந்தது.''

எதையோ தேடுவதுபோல் ஜெயந்தியின் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''நீங்கதான் ஜெயிச்சீங்க.'' கண்ணீருக்கு இடையே முறுவலுடன் சொன்னாள்.

ராஜசேகர் இன்னமும் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜெயந்தி தலையைக் குனிந்து கொண்டாள்.

''ஆனால்... நான் இப்படி போனதும் நல்லதாகிவிட்டது. இல்லாவிட்டால் என்றைக்குமே உங்கள் மதிப்பை புரிந்து கொண்டு இருக்கமாட்டேனோ என்னவோ.''

''அதிர்ஷ்டம் துணையாக இருந்ததால் எங்கே போனாலும் பத்திரமாக திரும்பிவந்தாய். ஒருக்கால் பிரகாஷ் உயிரோடு இருந்திருந்தால்!''

ஜெயந்தியின் உடல் பயத்தால் நடுங்கியது. ''உண்மைதான்'' என்றான்.

ஜெயந்தி மனதில் ஏற்பட்ட பயத்தை உணர்ந்துகொண்ட ராஜசேகர் அவளை தன் அருகில் இழுத்து அணைத்துக்கொண்டான். '' நானும்தான் அதிர்ஷ்டசாலி. இல்லாவிட்டால் எஞ்சிய வாழ்க்கையை பாலைவனத்தில் இருப்பதுபோல் கழித்திருப்பேன். பௌணர்மி நிலவின் குளிர்ச்சியை நினைவுப்படுத்தும் விதமாக நீ எனக்கு வாழ்க்கைத் துணைவி ஆவது அதிர்ஷ்டம் இல்லாமல் வேறு என்ன?''

ஜெயந்தி பதில் சொல்லவில்லை.

மௌனமாக அவன் தோளில் சாய்ந்து திருப்தியுடன் கண்களை மூடிக் கொண்டாள்.

---------

சென்னை மாவட்ட மைய நூலகம்
கொளத்தூர், சென்னை 99